தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
நடவடிக்கைகளின் அட்டவணை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான
ஏழாவது சட்டமன்றப் பேரவையின்
நான்காவது கூட்டத்தொடர்

1982 ஏப்ரல் 2, 3, 5 மற்றும் 7 ஆம் நாட்கள்
(தொகுதி XXXVII - எண்கள் 1 முதல் 4 வரை)

©
தமிழ்நாடு அரசு
1983

சட்டமன்றப் பேரவைத் துறை
னித ஜார்ஜ் கோட்டை, சென்னை-600 009.

Y211, 31 N82
N83.37
122248

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
நடவடிக்கைகளின் அட்டவணை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஏழாவது
சட்டமன்றப் பேரவையின் நான்காவது கூட்டத்தொடர்.

(1982 ஏப்ரல் 2, 3, 5 மற்றும் 7ஆம் நாட்கள்)

(தொகுதி 37, எண்கள் 1-4)

[Vol] XXXVII. No. 1—4]

உள்ளடக்கம்

	பக்கங்கள்
(i) தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சர் அவையும்.	i
(ii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்	vii
(iii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பெயர்ப்பட்டியல் (தொகுதிகள் உள்பட அகர வரிசையில்)	ix
அரசினர் சட்ட முன்வடிவுகள்—	
இந்தியக் கூட்டாண்மை (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1982.	316—317
உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலையையும் பணி நிபந்தனைகளையும் முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு, 1982.	110
ஊராட்சிகள் (உள்ளூர் செஸ் மேல்வரி விதிப்பைச் செல்திறனாக்குதல்) சட்ட முன்வடிவு, 1982.	313—316
எதிர்பாராச் செலவு நிதி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1982.	214, 300
குடியிருப்புச் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1982.	216—235
கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1982	301, 434—453
சம்பளம் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1982,	299—300, 41?—434
சென்னை மாநகர சிவில் வழக்கு நீதிமன்றம், மாநிலச் சிறுவழக்கு நீதி மன்றங்கள் (திருத்த) த்துச் சட்ட முன்வடிவு, 1982	105
தொழில் தகராறுகள் (தமிழ் நாடு திருத்தம்) சட்ட முன்வடிவு, 1982.	111

அரசினர் சட்டமுன் வடிவுகள்—தொடர்ச்சி.

	பக்கங்கள்
தொழிலாளர் நலநிதி (திருத்த) சட்ட முன்வடிவு, 1982.	215—216, 454—463
நீதி மன்றக் கட்டணங்கள்-வழக்குகள் மதிப்பீட்டு (திருத்த) சட்ட முன்வடிவு, 1982.	106—110
பசுக்கள் வெட்டப்படுவதைத் தடுத்தல்—கால்நடைப் பாதுகாப்புச் சட்ட முன்வடிவு, 1982.	463—464
பத்திரப்பதிவு (தமிழ்நாடு திருத்த) சட்ட முன் வடிவு, 1982	106
பத்திரிக்கைப் பணியாளர்கள் நிவாரண நிதிச் சட்ட முன்வடிவு, 1982.	215, 453—454, 463
பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக (திருத்தம் தனி விதித் துறைகள்) சட்ட முன்வடிவு, 1982.	52—60
பொதுச் சொத்து (அழித்தல், இழப்பு ஆகிய வற்றைத் தடுத்தல்) சட்ட முன்வடிவு, 1982.	60—102
பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன் வடிவு, 1982.	215, 301
மாகாண சிறு வழக்கு நீதி மன்றங்கள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1982	102—104
வக்ஃபு (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1981	111—112
அரசினர் தனித் தீர்மானங்கள்—	
எஸ்டேட்டுத் தீர்வைச் சட்டம் (மத்தியச் சட்டம் 34/1953) திருத்தப்படுவதற்கு ஒப்புதல்.	464—465
திருத்தணி பேரூராட்சியை நகரியமாக அறிவிப்பது	464
அரசினர் தீர்மானங்கள்	
பேரவை ஒத்திவைக்கப் பெறுதல்	468—470
விதி 30 (3)-ஐத் தளர்த்தல்	317
விதி 30(3)-ன் கீழ் அலுவல் வரிசையில் மாற்றம்.	51—52, 453
அறிக்கை அளித்தல்—	
சட்ட விதிகள் ஆய்வுக் குழு	51
துணை வினாவிற்கு அளித்த விடைக்கான திருத்தம்	403—404
அறிவிப்புகள்—	
அரசு உறுதிமொழிக் குழு—உறுப்பினர்கள் நியமனம்	195
அலுவல் ஆய்வுக் குழு—உறுப்பினர்கள் நியமனம்	192—193

அறிவிப்புகள்—தொடர்ச்சி.	பக்கங்கள்
எதிர்பாராச் செலவு நிதி (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவு, 1982.	214
குழுக்களுக்கு மேலவை உறுப்பினர்கள் தேர்தல்	195
கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1982.	301
சட்ட விதிகள் ஆய்வுக்குழு—உறுப்பினர்கள் நியமனம்	194
சம்பளம் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1982.	410
தொழிலாளர் நல நிதி (திருத்த) சட்ட முன்வடிவு, 1982	454
நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும், முறைப் படுத்துதலும்) திருத்த சட்ட முன்வடிவு, 1982	404
பத்திரிகைப் பணியாளர்கள் நிவாரண நிதிச் சட்ட முன்வடிவு, 1982.	453
பயிர்களுக்கு கேடு விளைவிக்கத்தக்க பூச்சிகளையும் நோய்களையும் பற்றிய (திருத்த) சட்ட முன் வடிவு, 1982.	404
பேரவை அலுவல்—	342—343
பேரவை நிறைவேற்றிய அலுவல்கள் பற்றிய விவரங்கள்	466—468
பேரவையில் நடைபெற்ற நிகழ்ச்சி தொடர்பாக	216
பேரவை விதிகள் குழு—உறுப்பினர்கள் நியமனம்	193—194
பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1982.	404
பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1982.	214
மேலவைத் தலைவரிடம் இருந்து வந்துள்ள செய்தி.	292
நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு, 1982	292
நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு, 1982.	292
இரங்கல் குறிப்பு—	
முன்னாள் உறுப்பினர் திரு. எஸ். ஆறுமுகம் மறைவு.	347
உரிமைப் பிரச்சனை—	
சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில், ஓர் உறுப்பினர் தாக்கப் பெற்றது.	273—274

பக்கங்கள்

ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—

கூட்டுறவு விவசாய கடன்கள் பாக்கி, மின் கட்டண பாக்கி வசூலுக்காக ஜப்தி நடவடிக்கை. 157—19.

சென்னைப் பல்கலைக் கழக 5-வது செமஸ்டர் மறு தேர்வு .. .. 392—40.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் சூறைக் காற்றினால் வாழைகளுக்கு ஏற்பட்ட சேதம் 43—46

ஒரு மணி நேர விவாதம்—

சேதுசமுத்திரத் திட்டம் 317—342

கவன ஈர்ப்புகள்—

இலவச மதிய உணவுத் திட்டம் பழனி ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் நிறுத்தப் பெற்றுள்ளது. 46—49

கைத்தறி நெசவாளர்களுக்குக் கொடுக்கப் படுகின்ற நூல் மற்றும் கூலி குறைக்கப் பெற்றிருப்பது. 292—294

சிவகாசியில் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் வரிச்சுமையினால் மூடப்படும் நிலை. 49—51

சென்னை நகரிலும் புறநகர்ப் பகுதிகளிலும் குடிதண்ணீர் தட்டுப்பாடு. 295—299

தொப்பையாற்றின் குறுக்கே பாலம் கட்டுவதில் தாமதம். 211—214

பி. பார்மஸி பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு பதவி உயர்வு. 408—410

மதுரை 'ஆல்பர்ட் விக்டர் பாலம்' 404—408

வடபழனி கோயில் நிலம் விற்பனை 196—210

தகவல் கோரல்

அமைச்சர் சுற்றுப் பயண விவர அறிவிப்பு 390

அரசு அலுவலர்களின் பதவிக்கால நீட்டிப்பு 43

உரிமைப் பிரச்சினையை எழுப்ப அனுமதி 156—157

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் 390—392

உறுப்பினர்கள் விடுதியில் பாதுகாப்பு 380—385

காங்கிரஸ் கட்சியின் உபதலைவர் 155—156

காவேரி நதி நீர் பிரச்சினை 153—155

குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய தணிக்கை அறிக்கை. 385

கூட்டுறவு கடன் வசூலில் ஜப்தி நடவடிக்கை 42

பக்கங்கள்

106-வது விதியின்கீழ் அளிக்கப்பெற்ற அறிக்கைகளின் மீது விவாதம் 274—292

பேரவை ஒத்திவைப்பது பற்றிய அறிவிப்பு 388—390

பேரவை நடவடிக்கைக் குறிப்புகளை சில பத்திரிகைகள் வெளியிடும் முறை 386—388

பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்— .. 113,235
343—345
470—472

வினாக்கள்—விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள் 1—41
115—153
237—273
347—380

உடுக்குறியிடாத வினாக்கள் 380

அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையைப் பயன்படுத்தும் முறை

இவ்வட்டவணை அகர வரிசைப்படி அமைக்கப் பெறுகிறது. முக்கியத் தலைப்புகள் ஓரங்களிலிருந்து அச்சடிக்கப் பெறு கின்றன, துணைத் தலைப்புகள் முக்கியத் தலைப்புகளிலிருந்து சற்று உள்ளடங்க அச்சிடப் பெறுகின்றன.

வினாக்கள் தவிர மற்ற நடவடிக்கைகளைக் குறித்த பல்வேறு குறிப்புகள் யாவும், பெயர்கள் உள்ளிட்ட வெவ்வேறு முக்கியத் தலைப்பின் கீழ் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கத்தினை அடுத்து அடைப்புகளுக்குள் அச்சிடப் பெறுகின்றன. எடுத்துக்காட்டாக (தீ) என்று போடுவது தீர்மானத்தையும், (க.ஈ.) என்று போடுவது கவன ஈர்ப்பையும், (ஒ.தீ.) என்று போடுவது ஒத்திவைப்புத் தீர்மானங்களையும், (அ) என்று போடுவது அறிக்கையையும் குறிக்கும்.

இத்தகைய குறிப்புகள் எதுவும் பெற்றிராத பொருள் விளக்கம் வினாக்களைச் சுட்டும் எனினும், சட்ட முன்வடிவுகள், நிதி அலுவல்களைப் பொறுத்தவரையில் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கமே அவற்றைத் தெளிவாக்கும்.

எல்லாச் சட்டமுன் வடிவுகளும் சட்ட 'முன்வடிவு' என்ற முக்கியத் தலைப்பின் கீழ் அகர வரிசைப்படி முறைப்படுத்தப் பெறுகின்றன.

குழுக்கள், மன்றங்கள், வாரியங்கள், மாநகராட்சிகள் போன்ற அமைப்புக்கள் அனைத்தும், (குழுக் கள்,) மன்றம் (கள்), மாநகராட்சி (கள்), ஆகிய முக்கியத் தலைப்புகளின் கீழ் தொகுக்கப் பெறுகின்றன.

பள்ளிகள், கல்லூரிகள், மாநாடுகள், துறைமுகங்கள், ஆலயங் கள் குறித்த பல்வேறு விரிந்த பொருள்களும், அத்தகைய முக்கியத் தலைப்புகளின் கீழேயே அகர வரிசைப்படி காட்டப் பெறுகின்றன.

பேரவை முன் வைக்கப்பெறுகின்ற ஏடுகளின் பக்கங்கள் இத் தலைப்பின் கீழ் கொடுக்கப் பெறுகின்றன.

தலைவர் மற்றும் துணைத் தலைவர், மாற்றுத் தலைவர் ஆகியோரின் தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும் 'தலைவர்', என்ற தலைப்பின் கீழ் வரிசைப்படுத்தப் பெறுகின்றன.

அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையில் பயன்படுத்தப் பெற்றுள்ள சில சுருக்கங்களின் விளக்கப்பட்டியல் ஒன்று கீழே கொடுக்கப் பெற்றுள்ளது.

அ.	:	அறிக்கை
அறிவி.	:	அறிவிப்பு

அ.வி.	..	அரை மணி நேர விவாதம்
கு.வி.	..	குறுகிய கால விவாதம்
பொ.வி.	..	பொது விவாதம்
ஆ.உ.	..	ஆளுநர் உரை
உ.பி.	..	உரிமைப்பிரச்சினை
ஒ.பி.	..	ஒழுங்குப் பிரச்சினை
க.ஈ.	..	கவன ஈர்ப்பு
க.ஈ.அ.	..	கவன ஈர்ப்பு அறிக்கை
அ.நி.	..	சட்ட முன் வடிவின் அறிமுக நிலை
ஆ.நி.	..	சட்ட முன்வடிவின் ஆய்வுநிலை——இந்நிலையில்

(1) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசீல னைக்கு அனுப்பப் பெறும் தீர்மானம்

(2) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசீல னைக்கு அனுப்ப வேண்டுமென்ற திருத்தம்

(3) சுற்றுக்கு அனுப்பப் பெறுவதற்கான திருத்தம்

(4) ஆய்வு/கூட்டாய்வுக் குழு அறிவித்தபடி ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கான தீர்மானம்.

(5) ஆய்வு/கூட்டாய்வுக்குழுவிற்கு மீண்டும் அனுப்புவதற்கான திருத்தம் முதலியன

ரி.ஆ.	..	சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்தல்
பே.	..	சட்டமன்றப் பேரவை
மே.	..	சட்டமன்ற மேலவை
.கோ,	..	தகவல் கோரல்
.வி.	..	தன்னிலை விளக்கம்
	..	தீர்மானம்
.தீ.	..	உரிமைத் தீர்மானம்
.தீ.	..	ஒத்திவைப்புத் தீர்மானம்
.தீ	..	தனித் தீர்மானம்
.மா.கோ.	..	துணை மானியக் கோரிக்கை
.மா.கோ	..	மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கை
ப.அ.	..	பேரவையின் அலுவல்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின் அட்டவணை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஏழாவது சட்ட மன்றப் பேரவையின் நான்காவது கூட்டத்தொடர்.

[1982 ஏப்ரல் 2,3,5 மற்றும் 7–ஆம் நாட்கள்)
(தொகுதி 37, எண்கள் 1—4)

அ

பக்கங்கள்

அப்பாதுரை திரு.மு.—
கூட்டுறவு விவசாய கடன்கள் பாக்கி, மின் கட்டண பாக்கி, வசூலுக்காக ஜப்தி நடவடிக்கை (ஒ.தீ.) 157
பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக (திருத்தம் தனி விதித் துறைகள் சட்டமுன் வடிவு 1982 57
அம்பிகாபதி திரு மு.—
அமைச்சர் சுற்றுப்பயண விவர அறிவிப்பு (த.கோ) 390
கூட்டுறவு விவசாய கடன்கள் பாக்கி, மின் கட்டண பாக்கி வசூலுக்காக ஜப்தி நடவடிக்கை (ஒ.தீ) 157
சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் குடி தண்ணீர் தட்டுப்பாடு (க.ஈ) 295
பொதுச்சொத்து (அழித்தல், இழப்பு ஆகிய வற்றைத் தடுத்தல்) சட்டமுன்வடிவு, 1982 76—79
அரங்கநாயகம் திரு செ.—
சென்னைப் பல்கலைக் கழக 5–வது செமஸ்டர் மறு தேர்வு (ஒ.தீ.அ.) 395, 400—403
பழனி, ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் இலவச மதிய உணவுத் திட்டம் நிறுத்தப்பெற்றுள்ளது. (க.ஈ.அ) 47—50
பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக (திருத்தம் தனி விதித்துறைகள்) சட்ட முன்வடிவு, 1982 52—53, 54, 58—60
அரசு விழாக்கள்—
சுதந்திர நாள் கொண்டாட்டம் அழைப்பு அனுப்புதல் 237—238
அலுவலகங்கள்—
மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் வேலூரிலிருந்து மாற்றுதல் 6—8

அழகா.

அலுவலர்கள்—
தீயணைப்புப் பணியாளர், வீட்டுவசதி, 347—348
பி.பார்மஸி பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு பதவி உயர்வு (க.ஈ) 408—410

'அ'—தொடர்ச்சி

பக்கங்கள்

அழகர்சாமி திரு. சோ—
கூட்டுறவுக் கடன் வசூலில் ஜப்தி நடவடிக்கை (த.கோ) 42
கூட்டுறவு விவசாய கடன்கள் பாக்கி, மின் கட்டண பாக்கி, வசூலுக்காக ஜப்தி நடவடிக்கை (ஒ.தீ) 157, 166—169, 190
சம்பளம் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட வு, 1982 429, 430
பொதுச்சொத்து (அழித்தல், இழப்பு ஆகிய வற்றைத் தடுத்தல்) சட்ட முன்வடிவு, 1982 99
106வது விதியின் கீழ் அளிக்கப்பெற்ற அறிக்கை களின் மீது விவாதம் (த.கோ) 285
அழகன் திரு க
106வது விதியின் கீழ் அளிக்கப்பெற்ற அறிக்கை களின் மீது விவாதம் (த.கோ) 274—276, 278, 279
வடபழனி கோயில் நிலம் விற்பனை (க.ஈ) 205—206, 209

ஆ

ஆசிரியர்கள்—
இந்தி ஆசிரியர்கள் தேர்வு நிலை வழங்குதல் 361—364
கல்லூரி முதல்வர்கள், சம்பள விகிதம் 365—366
ஆண்டித்தேவர் திரு.எஸ்.—
கூட்டுறவு விவசாய கடன்கள் பாக்கி மின் கட்டண பாக்கி வசூலுக்காக ஜப்தி நடவடிக்கை (ஒ.தீ) 161—163
சென்னைப் பல்கலைக் கழக 5–வது செமஸ்டர் மறு தேர்வு (ஒ தீ) 392, 398—299
106வது விதியின் கீழ் அளிக்கப் பெற்ற அறிக்கை களின் மீது விவாதம் (த.கோ) 287
ஆதிதிராவிடர் நலன்—
பழங்குடி மக்கள், அதிகப்படியாக அரசுப் பள்ளி கள் தொடங்குதல் 40—41

பக்கங்கள்

ஆறுமுகம் திரு. எம்.—

கூட்டுறவு விவசாய கடன்கள் பாக்கி மின் கட்டண பாக்கி வசூலுக்காக ஜப்தி நடவடிக்கை (ஒ.தீ.) 157

தொழிலாளர்கள் நல நிதி (திருத்த) சட்ட முன்வடிவு, 1972 459—480

இ

இயற்கைச் சீற்றங்கள்

ஜெயங்கொண்டம் தொகுதி வறட்சிப் பகுதியாக அறிவித்தல். 357

இரங்கல் குறிப்பு—

திரு. எஸ். ஆறுமுகம் .. 347

இரகவானந்தம் திரு. என்—

உடலுழைப்புத் தொழிலாளர்கள் வேலையையும் பணி நிபந்தனைகளையும் முறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு, 1982. .. 110

குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய தணிக்கை அறிக்கை (த.கோ.) .. 385

கைத்தறி நெசவாளர்களுக்கு நூல் மற்றும் கூலி குறைப்பு (க.ஈ.அ.) .. 293—294

சம்பளம் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1982 .. 414—415

சிவகாசி, தீப்பெட்டித் தொழிற்சாலைகள் வரிச்சுமையினால் மூடப்படும் நிலை (க.ஈ.அ.) 49—51

சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் தண்ணீர் தட்டுப்பாடு (க.ஈ.அ.) .. 295—299

தொழில் தகராறுகள் (தமிழ்நாடு திருத்தம்) சட்டமுன்வடிவு, 1982 .. 111

தொழிலாளர் நலநிதி (திருத்த) சடடமுன்வடிவு 1982 .. 115, 454—455, 460—463

இராசமாணிக்கம் திரு. இரெ—

குடியிருப்புச் சட்டங்கள் (திருத்த) சட்டமுன்வடிவு, 1982 .. 216—219

கூட்டுறவு விவசாய கடன்கள், பாக்கி, மின் கட்டண பாக்கி; வசூலுக்காக ஜப்தி நடவடிக்கை (ஒ.தீ.) .. 15

திருச்சி மாவட்டம், சூறைக்காற்றினால் வாழைகளுக்கு ஏற்பட்ட சேதம் (ஒ.தீ.) .. 43—54

இராசரத்தினம் திரு. து.—

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் (த.கோ) .. 390

இராசு, திரு. ஜே. எஸ்.—

கூட்டுறவு விவசாய கடன்கள், பாக்கி மின் கட்டண பாக்கி வசூலுக்காக ஜப்தி நடவடிக்கை (ஒ.தீ.) .. 157

பக்கங்கள்

இ—தொடர்ச்சி

இராமச்சந்திரன், திரு. எம். ஜி

106வது விதியின் கீழ் அளிக்கப்பெற்ற அறிக்கைகளின் மீது விவாதம் (த.கோ) .. 278, 279—280, 286, 287, 288, 290—291

இராமச்சந்திரன், திரு. ச

காவேரி நதி நீர்ப் பிரச்சினை (த.கோ) .. 154—155

வடபழனி கோயில் நிலம் விற்பனை (க.ஈ) .. 202

இராமசாமி திரு. எம். என்,

சென்னைப்பல்கலைக் கழக 5-வது செமஸ்டர் மறு தேர்வு (ஒ.தீ) .. 392

இராமலிங்கம் திரு நச

கூட்டுறவு விவசாயிகள், கடன் பாக்கி மின் கட்டண பாக்கி வசூலுக்காக ஜப்தி நடவடிக்கை (ஒ.தீ) .. 157

சென்னைப் பல்கலைக் கழக 5-வது செமஸ்டர் மறு தேர்வு (ஒ.தீ) .. 392,

தஞ்சை சரஸ்வதி மகால் நூல் நிலையம், பணியாளர்கள் .. 247

இராஜா முகமது திரு கே

வ பு (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு, 1981 111—112

இளையபெருமாள் திரு எல்.

உடல் ஊனமுற்றோர் பள்ளிகள் அமைத்தல் .. 150—152

குடியிருப்புச் சட்டங்கள் (திருத்த) சட்டமுன் வடிவு, 1982 .. 219—222

ஈ

ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் திரு.பி.

கூட்டுறவு விவசாய கடன்கள் பாக்கி மின் கட்டண பாக்கி வசூலுக்காக ஜப்தி நடவடிக்கை (ஒ.தீ.) .. 158

பக்கங்கள்

சென்னைப் பல்கலைக் கழக 5-வது செமஸ்டர் மறு தேர்வு (ஓ.தீ) .. 392—394, 395,

சேலம், இ.எஸ்.ஐ. திட்டத்தை விரிவுப்படுத்துதல் 368

தியாகிகள் பென்ஷன் வருமான வரம்பை ரத்து செய்தல் .. 238—244

திருச்சி மாவட்டம், சூறைக்காற்றினால் வாழைகளுக்கு ஏற்பட்ட சேதம் (ஓதீ) .. 45

உ

உகம்சந்த் திரு எஸ்.டி.
மதுராந்தகம் பெரிய ஏரியை ஆழப்படுத்துதல் 373

உச்சி திரு கே—
ஊட்டி விளையாட்டு அரங்கம் அமைத்தல் .. 141

உணவுப் பொருள்கள்—
கலப்படங்களை பரிசோதிக்கும் ஆய்வுக் கூடங்கள் .. 134—137

உத்திராபதி திரு பொ—
குடியிருப்புச் சட்டங்கள் (திருத்த) சட்டமுன் வடிவு, 1982 .. 229—231
கூட்டுறவு விவசாய கடன்கள் பாக்கி மின் கட்டண பாக்கி, வசூலுக்காக ஜப்தி நடவடிக்கை (ஓ.தீ) .. 157

உமாநாத் திரு.ரா
காங்கிரஸ் கட்சியின் உபதலைவர் (த.கோ) .. 155—156
கொடுமுடியாறுத் திட்டம், வேலை நாமதம்.. 25—27
டீசல் எண்ணெய் போக்குவரத்துக் கழகங்களுக்கு மத்திய அரசு உதவி .. 143—145
முதலீட்டுத்திட்டம், மைய அரசின் உதவி விவரம் .. 29—31

உரிமைப் பிரச்னைகள்—
பார்க்க—தலைவர்

உலோகங்கள்
உருக்கு இரும்பு, 1981-82க்கு ஒதுக்கீடு .. 115—116

'ஊ'

ஊனமுற்றோர்
அரசுப்பணிகளில் ஒதுக்கீடு செய்தல் 149—150

பள்ளிகள் அமைத்தல் 150—152

பக்கங்கள்

'எ'

எரிபொருள்—
டீசல் எண்ணெய், போக்குவரத்துக் கழகங்களுக்கு மத்திய அரசு உதவி 143—145

"ஏ"

ஏடுகள்
அவை முன் வைக்கப் பெற்றவை 113, 343—344, 470—472

ஒத்திவைப்புத் தீர்மானம்
பார்க்க—தலைவர்

'ஓ'

ஓய்வூதியம்—
தியாகிகள் பென்ஷன், வருமான வரம்பை ரத்து செய்தல் 238—244

"க"

கணேசன் திரு. இ.—
கோவாப்டெக்ஸ் துணிகள், ஏற்றுமதி 247—250
தமிழ்நாடு, இறால் உற்பத்தி, 1—3

கருணாநிதி, டாக்டர் மு—
காவேரி நதி நீர்ப் பிரச்சினை (த.கோ.) 155
106வது விதியின் கீழ் அளிக்கப் பெற்ற அறிக்கைகளின் மீது விவாதம் (த.கோ.) .. 277,278, .. 280—281, 284

கருப்பையா திரு. இரா.—
கூட்டுறவு விவசாய கடன்கள் பாக்கி, மின் கட்டண பாக்கி வசூலுக்காக ஜப்தி நடவடிக்கை (ஓ.தீ.) — 157
சம்பளம் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு, 1982. .. 421—424, 430,431
சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் குடி தண்ணீர் தட்டுப்பாடு (க.ப). .. 295,297
106வது விதியின் கீழ் அளிக்கப்பெற்ற அறிக்கைகளின் மீது விவாதம் (த.கோ) .. 282—

கவனஈர்ப்புகள்—தொடர்ச்சி
க—தொடர்ச்சி

	பக்கங்கள்
கல்லன் திரு, கே.	
கூட்டுறவு விவசாய கடன்கள், பாக்கி மின் கட்டண பாக்கி வசூலுக்காக ஜப்தி நடவடிக்கை (ஒ.தீ) ..	157
கல்வி—	
ஐ.ஏ.எஸ். பயிற்சி நிலையம், சென்னை. ..	39—40
கல்விக் கூடங்கள்—	
பழனி, ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் இலவச மதிய உணவுத் திட்டம் நிறுத்தப்பெற்றுள்ளது (க.ஈ) — ..	46—49
கலையரசன் திரு நன்னிலம் அ.—	
தஞ்சை மாவட்டம், கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைத்தல் ..	33—34
கவன ஈர்ப்புகள்—	
கைத்தறி நெசவாளர்களுக்கு நூல் மற்றும் கூலி குறைப்பு ..	292—294
சிவகாசி, தீப் பட்டித் தொழிற்சாலைகள் வரிச் சுமையினால் மூடப்படும் நிலை ..	49—51
சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் குடி தண்ணீர் தட்டுப்பாடு. ..	295—299
தொப்பையாற்றின் குறுக்கே பாலம் கட்டுவதில் தாமதம் ..	211—214
பழனி, ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் இலவச மதிய உணவுத் திட்டம் நிறுத்தப்பெற்றுள்ளது.	46—49
பி. பார்மஸி பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு, பதவி உயர்வு.	408—410
மதுரை "ஆல்பர்ட் விக்டர் பாலம்"	404—408
வடபழனி கோயில் நிலம் விற்பனை	196—210
கழகங்கள்—	
காற்றாலைக் கழகம் அமைத்தல்	27—29
தமிழ்நாடு எலெக்ட்ரானிக் கார்ப்பரேஷன், ஒலி பெருக்கிகள் உற்பத்தி	377—380
போக்குவரத்துக் கழகங்களோடு பொறியியல் கழகங்களை இணைத்தல்	141—143
கால்நடைகள்—	
செயற்கை முறை கருவூட்டும் பணி விரிவாக்கம்	152—153
காளிமுத்து, திரு. கா.—	
திருச்சி மாவட்டம், சூறைக்காற்றினால் வாழைகளுக்கு ஏற்பட்ட சேதம் (ஒ.தீ.) ..	45—46
கிருஷ்ணசாமி திரு. கே. ஏ.—	
பத்திரப் பதிவு (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு, 1981	106
கிருஷ்ணமூர்த்தி, திரு. வி.—	
கூட்டுறவு விவசாய கடன்கள், பாக்கி மின் கட்டண பாக்கி வசூலுக்காக ஜப்தி நடவடிக்கை (ஒ.தீ.) ..	157
சென்னைப் பல்கலைக் கழக 5-வது செமஸ்டர் மறு தேர்வு (ஒ.தீ.)	392
கிருஷ்ணன், திரு. ரா.—	
உப்பளத் தொழிலாளர்கள், விவரம்	253—257
கூட்டுறவு விவசாய கடன்கள் பாக்கி, மின் கட்டண பாக்கி, வசூலுக்காக ஜப்தி நடவடிக்கை (ஒ.தீ.)	157
நுகர் பொருள் கூட்டுறவு அங்காடிகள் ஆலோசனைக் குழுக்கள் அமைத்தல்	352—357
பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக (திருத்தம் தனி விதித் துறைகள்) சட்டமுன்வடிவு, 1982	55—57
பொது விற்பனைவரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1982.	303—305
குடிநீர்—	
ஆறுமுகனேரி, காயல்பட்டினம் பேரூராட்சிகள்	249
சென்னை, கிருஷ்ணா நதி நீரைக் கொண்டு வருதல்	22—25
சென்னை, பெரியார் நகர், (பெரவள்ளூர்)	370—371
சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் தட்டுப்பாடு (க,ஈ.)	295—299
நிலத்தடி, குழாய்க் கிணறுகள், பனைமரத் தொட்டி (சென்னை)	371—372
குமரி அனந்தன், திரு—	
சுவரொட்டிகள், நகரங்களில் குறிப்பிட்ட இடங்களை ஒதுக்குதல்.	128—130
சென்னைப் பல்கலைக் கழக 5-வது செமஸ்டர் மறுதேர்வு (ஒ.தீ.)	392 397—398

தீயணைப்பு இயந்திரங்கள், இறக்குமதி செய்தல் 348—351

106வது விதியின்கீழ் அளிக்கப் பெற்ற அறிக்கைகளின் மீது விவாதம் (த.கோ.) 285—286

குலசேகரபாண்டியன், திரு. ந.—

மருந்தியல் துறையைத் தனியாகப் பிரித்தல். 137—138

குழந்தைவேலு, திரு. ப.—

ஊராட்சிகள் (உள்ளூர் செஸ் மேல்வரி விதிப்பை செல்திறனாக்குதல்) சட்ட முன்வடிவு, 1982. 313, 315—316

திருத்தணி பேரூராட்சியை நகரியமாக அறிவிப்பது (அ.த.தீ.) 464

தொப்பையாற்றின் குறுக்கே பாலம் கட்டுவதல் தாமதம் (க.ஈ.அ) 211—212, 214

பேரவை நடவடிக்கைக் குறிப்புகளை சில பத்திரிகைகள் வெளியிடும் முறை (த.கோ.) 386—387

மதுரை ஆல்பர்ட் விக்டர் பாலம் குறித்து (க.ஈ.அ.) 405—408

குழுக்கள்—

சட்ட விதிகள் ஆய்வுக்குழு, மூன்றாவது அறிக்கை அளித்தல் 51

கூட்டுறவு—

சர்க்கரை ஆலை அமைத்தல், தஞ்சை மாவட்டம் 33—34

நுகர்வோர் பிராந்திய கூட்டுறவு மையம் நிறுவுதல் 367—368

மாவட்ட பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள் நிர்வாகக் குழுக்கள் அமைத்தல் 116—118

கைத்தறி—

கோவாப்டெக்ஸ் துணிகள், ஏற்றுமதி 247—250

நெசவாளர்களுக்கு நூல் மற்றும் கூலி குறைப்பு (க.ஈ.) 293—294

கோபால், திரு. சி.—

மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம், வேலூரி விருந்து மாற்றுதல் 6—8

கோமதி சீனிவாசன், திருமதி—

பசுக்கள் வெட்டப்படுவதை தடுத்தல்- கால்நடைப் பாதுகாப்புச் சட்ட முன் வடிவு, 1982 463—464

பக்கங்கள்.

நாவைத்தம்பி, திரு.—

குடியிருப்புச் சட்டங்கள் (திருத்த) சட்டமுன்வடிவு, 1982 222—223

சங்கரய்யா, திரு. என்.—

கூட்டுறவு விவசாய கடன்கள் பாக்கி மின் கட்டண பாக்கி வசூலுக்காக ஜப்தி நடவடிக்கை (ஓ.தீ.) 155, 164—166

பொதுச் சொத்து (அழித்தல், இழப்பு ஆகியவற்றைத் தடுத்தல்) சட்டமுன்வடிவு, 1982 98—99

106வது விதியின் கீழ் அளிக்கப் பெற்ற அறிக்கைகளின் மீது விவாதம் (த.கோ.) 281, 285

சட்டமுன்வடிவு(கள்)—

இந்திய கூட்டாண்மை தமிழ்நாடு திருத்த சட்ட முன்வடிவு, 1982

ஆ.நி.
பிரி.ஆ.
நிறைவேற்றுதல் 316—317

உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலையையும் பணி நிபந்தனைகளையும் முறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு, 1982

ஆ.நி.
பிரிவுவாரி ஆய்வு
நிறைவேற்றல் 110

ஊராட்சி (உள்ளூர் செஸ் மேல்வரி விதிப்பைச் செல்திறனாக்குதல்) சட்டமுன்வடிவு, 1982

ஆ நி. 313—316

பிரி. ஆநி. நிறைவேற்றுதல் 316

கிர்பாராச் செலவு நிதி (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவு, 1982

ஆ.இ.
அ.நி. 214

ஆ.நி.
பிரி.ஆ.
நிறைவேற்றுதல் 300

குடியிருப்புச் சட்டங்கள் (திருத்த) சட்டமுன்வடிவு, 1982

ஆ.நி. 216—234

பிரி.ஆ. 234—235

நிறைவேற்றுதல் 235

‘ச’— தொடர்ச்சி

சட்டமுன்வடிவுகள்—தொடர்ச்சி

	பக்கங்கள்.
கேளிக்கை வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1982	
ஆ. இ. / அ. நி.	301
ஆ.நி.	434—451
பிரி.ஆ.	451—452
நிறைவேற்றுதல்	453
சம்பளம் வழங்கல் இரண்டாம் (திருத்த) சட்டமுன்வடிவு, 1982	
அ.நி.	299—300
ஆ.இ.	410
ஆ.நி.	411—433
பிரி.ஆ.	433—434
நிறைவேற்றுதல்	434
சென்னை மாநகர சிவில் வழக்கு நீதிமன்றம், மாநிலச் சிறு வழக்கு நீதிமன்றங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு. 1982	
ஆ.நி. / பிரி.ஆ. / நிறைவேற்றுதல்	105
தொழில் தகராறுகள் (தமிழ்நாடு திருத்தம்) சட்டமுன்வடிவு 1982	
ஆ.நி / பிரி. ஆ. / நிறைவேற்றுதல்	111
தொழிலாளர் நலநிதி (திருத்த) சட்ட முன்வடிவு, 1982	
அ.நி.	215
ஆ.இ.	454
ஆ.நி.	454—463
பிரி.ஆ. / நிறைவேற்றுதல்	463.
நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும் முறைப்படுத்துதலும்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1982 (மே.செ.)	404
நிதி ஒதுக்க (என் 2) சட்டமுன்வடிவு, 1982 மே.செ.	292
நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு 1982 (மே.செ)	292

‘ச’ தொடர்ச்சி

சட்டமுன் வடிவுகள்—தொடர்ச்சி	பக்கங்கள்
நீதிமன்றக் கட்டணங்கள் வழக்குகள் மதிப்பீட்டு (திருத்த) சட்டமுன்வடிவு 1982,	
ஆ.நி.	106—109
பிரி.ஆ. / நிறைவேற்றல்	110
பசுக்கள் வெட்டப்படுவதைத் தடுத்தல்—கால் நடைப் பாதுகாப்புச் சட்டமுன்வடிவு, 1982. (ஆ. நி.) ..	463—464
பத்திரப் பதிவு (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு, 1982	
ஆ. நி.	16
பிரிவு ஆ,	106
நிறைவேற்றல்	
பத்திரிகைப் பணியாளர்கள் நிவாரண நிதிச் சட்டமுன்வடிவு, 1982	
அ. நி.	215
ஆ. இ.	453
ஆ. நி.	453—454, 460
பயிர்களுக்கு கேடு விளைவிக்கத்தக்க பூச்சிகளையும் நோய்களையும் பற்றிய (திருத்த) சட்டமுன்வடிவு, 1982. (மே. செ.)	404
பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக்கழக (திருத்தம் தனி விதித்துறைகள்) சட்ட முன்வடிவு, 1982	
ஆ. நி. ..	52—59
பிரி. ஆ. ..	59—60
நிறைவேற்றுதல் ..	60
பொதுச் சொத்து (அழித்தல், இழப்பு ஆகியவற்றைத் தடுத்தல்) சட்டமுன்வடிவு	
பிரி. ஆ, நி. ..	60—99
பிரி. ஆ. ..	99—101
நிறைவேற்றுதல் ..	102
பொது விற்பனைவரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1982. மே. செ. ..	404
பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1982	
ஆ. இ. ..	214

சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி

பக்கங்கள்

அ. நி. .. 215

ஆ. நி. .. 301—312

பிரி. ஆ. நிறைவேற்றுதல் .. 312—313

மாகாண சிறு வழக்கு நீதி மன்றங்கள் (தமிழ் நாடு திருத்த) சட்டமுன்வடிவு, 1982

ஆ. நி. .. 102—104

பிரி. ஆ. நிறைவேற்றுதல் .. 104

வக்ஃபு (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு, 1981.

ஆ. நி. பிரி. ஆ. நிறைவேற்றுதல் .. 111—11

சண்முகம் திரு. ஏ. சி.

பொதுச்சொத்து (அழித்தல், இழப்பு ஆகியவற்றைத் தடுத்தல்) சட்டமுன்வடிவு, 1982 .. 73–75, 87

சமூக நலன்—

திருமண மண்டபங்கள் கட்டுதல்-குமரி மாவட்டம் 123—124

சாதுல்ஹமீது திரு. ஏ.—

106 வது விதியின் கீழ் அளிக்கப்பெற்ற அறிக்கைகளின் மீது விவாதம் (த. கோ) .. 285

சாலைகள்—

நாகப்பட்டினம் — கூடலூர் — மசூர் நெடுஞ்சாலை, தேசிய நெடுஞ்சாலையாக்குதல் .. 131—134

சித்தன் திரு என். எஸ். வி.—

இந்தி ஆசிரியர்கள் தேர்வு நிலை வழங்குதல். .. 361—364

கட்டிடத் தொழிலாளர்கள், மத்திய அரசு வரைவுச் சட்டம் .. 257—258

காவேரி நதி நீர்ப் பிரச்னை (த.கோ.) .. 153—145

குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய தணிக்கை அறிக்கை (த. கோ.) .. 385

கூட்டுறவு விவசாயக் கடன்கள், பாக்கி மின் கட்டணபாக்கி வசூலுக்காக ஜப்தி நடவடிக்கை (ஒ. தீ) .. 157

கேளிக்கை வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1982 437—440, 447, 449

கொடுமுடியாறுத் திட்டம். வேலை தாமதம் .. 25—27

சென்னைப் பல்கலைக் கழக 5—வது செமஸ்டர் மறு தேர்வு (ஒ.தீ.) .. 392, 399—400

பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1982 .. 301—303

மதுரை ஆல்பர்ட் விக்டர் பாலம் (க.ஈ.) .. 404—406

106-வது விதியின் கீழ் அளிக்கப்பெற்ற அறிக்கைகளின் மீது விவாதம் (த.கோ.) .. 382

சிவசாமி, திரு. செ.—

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் (த.கோ.) .. 392

ஊராட்சிகள் (உள்ளூர் செஸ் மேல்வரி விதிப்பை செல்திறனாக்குதல்) சட்ட முன் வடிவு; 1982.. 314—315

கூட்டுறவு விவசாய கடன்கள் பாக்கி மின் கட்டண பாக்கி, வசூலுக்காக ஜப்தி நடவடிக்கை (ஒ. தீ.) 157

சேது சமுத்திரத்திட்டம் பற்றி ஒரு மணி நேர விவாதம் (த.தீ.) .. 317—322

சிவராமன், திரு. எஸ்.—

கடலூர் மருத்துவமனை மருத்துவ சித்த வைத்தியப் பிரிவு அமைத்தல். .. 138—139

சிறைச் சாலைகள்—

புகார் பெட்டிகள் வைத்தல். .. 366—367

சின்னசாமி, திரு. எம்—

சுவரொட்டிகள், நகரங்களில் குறிப்பிட்ட இடங்களை ஒதுக்குதல். 128—130

சேது சமுத்திரத்திட்டம் பற்றி ஒரு மணி நேர விவாதம் (த.தீ.) 326—329

தமிழ்நாடு எலெக்ட்ரானிக் கார்ப்பரேஷன், ஒலி பெருக்கிகள் உற்பத்தி. .. 377—380

திருச்சி தாலுக்கா, இரண்டாகப் பிரித்தல். .. 246

திரைப்படத் தணிக்கைக் குழு- உறுப்பினர்கள் நியமனம். .. 118—123

சின்னசாமி, திரு. எம்.— தொடர்ச்சி.

பாக்கம்பாடி அணை, சீரமைப்புத் திட்டம் .. 21—22

வடபழனி கோயில் நிலம் விற்பனை (க.ஈ.) .. 196

ச—தொடர்ச்சி

சின்னராசு, திரு. மா.—

காற்றாலைக் கழகம் அமைத்தல். .. 27—29

மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள் நிர்வாகக் குழுக்கள் அமைத்தல். 116—118

சுந்தரம், திரு. கே. ஆர்.—

கூட்டுறவு விவசாய கடன்கள் பாக்கி, மின் கட்டண பாக்கி வசூலுக்காக ஜப்தி நடவடிக்கை (ஒ. தீ.). 157

கேளிக்கை வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1982 441

சுந்தரம் திரு. ப.—

கூட்டுறவு விவசாய கடன்கள் பாக்கி, மின்கட்டண பாக்கி வசூலுக்காக ஜப்தி நடவடிக்கை (ஒ.தீ.) 157

சுப்பிரமணியன், திரு. உ.—

உறுப்பினர்கள் விடுதியில் பாதுகாப்பு (ந.கோ.) 380—381

ஊராட்சிகள் (உள்ளூர் செஸ் மேல்வரி விதிப்பை செல்திறனாக்குதல்) சட்ட முன்வடிவு, 1982 313—314

கூட்டுறவு விவசாய கடன்கள் பாக்கி, மின் கட்டண பாக்கி வசூலுக்காக ஜப்தி நடவடிக்கை (ஒ.தீ.) 157

சேது சமுத்திரத் திட்டம் பற்றி ஒரு மணி நேர விவாதம் (ஒ.தீ.) 333—334, 335

சுப்பிரமணியன், திரு. ம.—

கால்நடை அபிவிருத்தி, செயற்கை முறை கருவூட்டும் பணி விரிவாக்கம் 152—153

சுவாமிநாதன், திரு. வி. வி.—

சிதம்பரம் டிவிஷன், புராதன கால்வாய்களை நவீனப்படுத்துதல் 264—265

பி. பார்மஸி பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு பதவி உயர்வு (க.ஈ.) 408, 409—410

பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக (திருத்தம் தனி விதித் துறைகள்), சட்ட முன்வடிவு, 1982 57—58

பொதுச்சொத்து (அழித்தல், இழப்பு ஆகிய வற்றைத் தடுத்தல்) சட்ட முன்வடிவு, 1982 79—83

வெள்ளாற்றின் கரைகளில் தடுப்புச்சுவர் கட்டுதல் 373—374

ச—தொடர்ச்சி

சுற்றுலா—

படகு விடுதல், பிச்சாவரம் ஏரி 124—127

செம்மலை, திரு. செ.—

உணவுக் கலப்படங்களை பரிசோதிக்கும் ஆய்வுக் கூடங்கள் 134—137

காகித ஆலைகள் நிறுவுதல் 265—271

காற்றாலைக் கழகம் அமைத்தல் 27—29

கிராம வீட்டுவசதித்திட்டம், எல்.ஐ.சி. உதவி 18—19

தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியம், பட்டாக்கள் வழங்குதல் 360—361

தொப்பையாற்றின் குறுக்கே பாலம் கட்டுவதில் தாமதம் (க.ஈ.) 211, 213—214

செல்லமுத்து திரு. எம்—

கூட்டுறவு விவசாய கடன்கள் பாக்கி மின் கட்டண பாக்கி வசூலுக்காக ஜப்தி நடவடிக்கை (ஒ.தீ.) 157

சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. ப. செ.—

நொய்யல் ஆறு, தண்ணீர் இறைக்கும் அனுமதி 259—260

சேதுராமன், திரு. ஏ. எம்.—

காகித ஆலைகள் நிறுவுதல் 265—271

நுகர்பொருள் கூட்டுறவு அங்காடிகள், ஆலோசனைக் குழுக்கள் அமைத்தல் 352—357

சோமசுந்தரம், திரு. எஸ். டி.—

எஸ்டேட்டுத் தீர்வைச் சட்டம் (மத்தியச் சட்டம் 34/1953) திருத்தப்படுவதற்கு ஒப்புதல் (அ.த.தீ.) 465

குடியிருப்புச் சட்டங்கள் (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1982 231—233, 234,235

கேளிக்கை வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1982 301, 434, 445—451, 452

பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்ட முன்வடிவு, 1982 215, 301, 303—312

ச—தொடர்ச்சி

சோமு. திரு. என். வி. என்.—

சென்னைப் பல்கலைக் கழக 5-வது செமஸ்டர் மறு தேர்வு (ஒ.தீ.) 392

தொழிலாளர் நல நிதி (திருத்த) சட்ட முன் வடிவு, 1982 455—456

சௌந்திரராஜன், திரு. திருச்சி ஆர்.—

திருச்சி தாலுகா, இரண்டாகப் பிரித்தல் 246

சௌரிராஜன் டாக்டர் கே.—

பேரவை ஒத்திவைப்பது பற்றிய அறிவிப்பு (த.கோ.) 388—389

தங்கமணி திரு. கே. எம்.—

கூட்டுறவு விவசாயக் கடன்கள் பாக்கி மின். கட்டண வசூலுக்காக ஜப்தி நடவடிக்கை (ஒதீ.) 157

தங்கவேல்ராஜ் திரு. பி. எம்.—

குடியிருப்புச் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1982 226—227

கூட்டுறவு விவசாய கடன்கள் பாக்கி, மின் கட்டண பாக்கி வசூலுக்காக ஜப்தி நடவடிகை (ஒ.தீ) 157, 169—172

சம்பளம் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1982 424—427

திருச்சி மாவட்டம், சூறைக்காற்றினால் வாழைகளுக்கு ஏற்பட்ட சேதம் (ஒ.தீ) 44—45

மாகாண சிறு வழக்கு நீதி மன்றங்கள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1982 103

தங்கவேலு திரு. பி.—

ஜெயங் கொண்டம் தொகுதி; வறட்சிப்பகுதியாக அறிவித்தல் 357

தலைவர்—

அறிவிப்புகள்—

அரசினர் உறுதிமொழிக் குழு உறுப்பினர்கள் நியமனம் 195

இலுவல் ஆய்வுக் குழு உறுப்பினர்கள் நியமனம் 192—193

அவை அலுவல் 342—34

சட்ட விதிகள் ஆய்வுக்குழு உறுப்பினர்கள் நியமனம் 194

பேரவை நிறைவேற்றிய அலுவல்கள் பற்றிய விவரங்கள் 466—468

அறிவிப்புகள்—தொடர்ச்சி

பேரவையில் நடைபெற்ற நிகழ்ச்சி தொடர்பாக 210

பேரவை விதிகள் குழு உறுப்பினர்கள் நியமனம் 193—194

மேலவைத் தலைவரிடமிருந்து வந்த செய்திகள் 195—196, 404

தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்

அவையில் பயன்படுத்தப்பெறும் சொற்கள்

''மாமியாருக்கு அடங்கிய மருமகள்'' என்னும் சொற்றொடர், அவை முன் உள்ள பொருள் பற்றி மட்டும் பேசும்படியாகக் கேட்டுக் கொண்டதன் மூலம் கண்டிக்கப்பெற்றது. (அ. ச. மு.) 79

அறிக்கைகள்—

அலுவல் ஆய்வுக்குழுவில் கலந்துக் கொள்வதனால் பயன் ஏற்படுமா என்பதைக் கட்சித் தலைவர்கள் முடிவு செய்வதற்கு, 106வது விதியின் கீழ் பேரவையில் அளிக்கப்பெற்ற அறிக்கையின் மீது விவாதம் நடைபெறும் அல்லது நடைபெறாது என பேரவைத் தலைவர் முதலில் அறிவிக்கவேண்டும் என்று சில உறுப்பினர்கள் வற்புறுத்தியபோது தலைவர் அளித்த குறிப்புரையாவது :—

''106வது விதியின்கீழ் அளிக்கப்பெற்ற அறிக்கை ஒரு விசாரணைக்குழு அமைப்பதைப் பற்றியது. விசாரணைக்கு விடப்பட்டுள்ள பிரச்னையை எடுத்து நாம் பேச ஆரம்பித்தால், விசாரணைக்குழு என்ன காரியத்தை செய்ய முடியும் என்பதையும், அந்த விசாரணைக்குழுவினாலே எப்படி தீர்ப்பு வழங்க முடியும் என்பதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். விவாதம் என்று அமைகிறபோது உணர்ச்சி வசப்பட்டு வரம்பு மீறி பேசப்படுகிற சூழ்நிலைகள் பல நேரங்களில் முன்பே வந்திருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேரும் அறிவார்கள்.

இப்பிரச்னை குறித்து விதி (41—17), 65, 81 ஆகியவற்றை பேரவைத் தம் கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும். எனவேதான் இது பற்றிக் கட்சித் தலைவர்கள் அலுவல் ஆய்வுக்குழுவில் விவாதித்து எந்த முடிவுக்கு வந்தாலும், அந்த அலுவல் ஆய்வுக்குழுவின் முடிவுபடி நான் நடப்பதாகத் தெரிவித்தேன்.'' (த. கோ.) .. 274—285

தலைவர்—தொடர்ச்சி

பக்கங்கள்

தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்—தொடர்ச்சி

அறிக்கைகள்—தொடர்ச்சி

பேரவையில் 106வது விதியின் கீழ் வைக்கப் பெற்ற ஓர் அறிக்கையின் மீது விவாதம் நடத்து வதற்கு நாள் குறிப்பிடப் பெறவேண்டும் என சில உறுப்பினர்கள் வற்புறுத்தியபோது தலைவர் அளித்த

குறிப்புரையாவது :—

''அலுவல் ஆய்வு குழுவிலே அதுபற்றி விவாதித்து, கட்சித் தலைவர்கள் என்ன முடிவு எடுக்கிறார்களோ அதன்படி இந்த அவையை நடத்த நான் தயாராக இருக்கிறேன். .. 275

உரிமைப் பிரச்னை''

சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் ஒரு உறுப்பினர் தாக்கப் பெற்றது குறித்து.

சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் ஒரு உறுப் பினர் தாக்கப்பெற்றது குறித்து பேரவையில் 2.3.1982 ஆம் தேதி எழுப்பப்பெற்ற உரிமைப் பிரச்னை மீது தலைவர் அளித்த தீர்ப்புரையாவது:—

''இப்பிரச்னை குறித்து நன்கு ஆராயவேண்டிய அவசியம் இருப்பதாக நான் கருதுவதாலும், அவை உரிமைக்குழுதான் இதைச் செய்யமுடியும் என்று நான் கருதுவதாலும், பேரவையின் 255வது விதியின் கீழ் எனக்குள்ள விசேஷ அதிகாரத்தைப் பயன் படுத்தி, இப்பிரச்னையை ஆய்ந்து அறிக்கை அளிக்க அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கிறேன்.'' 273—274

ஒத்திவைப்புத் தீர்மானம்—

சென்னை பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் மூன்றாம் ஆண்டில் எழுதிய 5வது செமிஸ்டர் தேர்வினை மாணவர்கள் திரும்ப எழுத வேண்டும் என்று கோரப்படுவதால் மாணவர்கள் மத்தியில் எழுந்துள்ள நிலைகுறித்து விவாதிக்க

மாண்புமிகு கல்வியமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை யில்லை என்பதால் இசைவு மறுக்கப்பெற்றது .. 392—403

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்—தொடர்ச்சி

ஒத்திவைப்பு தீர்மானம்—தொடர்ச்சி

தமிழ்நாடு முழுவதும் பல இடங்களில் கூட்டுறவு விவசாயக் கடன்களுக்காகவும், மின் கட்டண பாக்கிக் காகவும் விவசாயிகளிடம் அரசு ஜப்தி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாலும், மின்சக்தி துண்டிக்கப் படுவதாலும் இதனால் போராடும் விவசாயிகள் கைது செய்யப்படுவதாலும் ஏற்பட்டுள்ள நிலை குறித்து—

மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு இசைவு மறுக்கப்பெற்றது .. 157—192

ஒழுங்கு—

அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கப்பெறும் பகுதி களை செய்தித்தாள்கள் வெளியிடுதல் கூடாது. அப்படி வெளியிடுவது என்கிற சூழ்நிலை ஏற்படுமே யானால் அவற்றின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். (த.கே.) .. 387,388

கவன ஈர்ப்பு—

அமைச்சரின் அறிக்கைக்குப் பின் கேள்வியாகக் கேட்டுத்தான் பதில் பெற வேண்டும். உரைபோல பேசக் கூடாது .. 48

குறுக்கீடு—

ஓர் உறுப்பினர் பேசும்போது யாரும் குறுக்கிடக் கூடாது. அவர் பேசி முடிந்த பிறகு எதுவாக இருந்தாலும் கேட்கலாம். (க.ஈ.) .. 202

ஓர் உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கும்போது இன்னொருவர் குறுக்கிட்டு வாதப் பிரதிவாதங்கள் ஏற்படுத்த வேண்டாம். (ஓ.ம.வி.) .. 335

நடைமுறை—

கட்சித் தலைவர்கள் பேரவையில் தம் கருத்துக் களைச் சொல்வதற்கு மாறாக, அலுவல் ஆய்வுக் குழுவில் விவாதித்து முடிவுக்கு வருவது அவையின் நேரத்தை மிச்சப்படுத்த பயன்படாதா என ஓர் உறுப்பினர் ஒரு பிரச்னையை எழுப்பியபோது

தலைவர் அளித்த குறிப்புரையாவது :—

''முன் வரிசையில் உள்ள தலைவர்கள் பேச விரும்புகிறபோது என்னதான் கருத்துக்களை அவர்கள் சொல்கிறார்கள் என்று கேட்பதை இந்த மன்றம் வாடிக்கையாகவும், மரபாகவும் வைத்துக் கொண்டிருக்கிறது. எனவேதான் முன் வரிசையில் இருக்கக்கூடிய தலைவர்கள் ஏதாவது கருத்துக்களை பேச விரும்பினால் அவர்களைப் பேச அனுமதிப்பது நல்லது என்று அலுவல் ஆய்வுக்குழுவே முடிவு எடுத்துள்ளது. (த.கோ.) .. 290

த—தொடர்ச்சி — பக்கங்கள்.

தலைவர்— தொடர்ச்சி

தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்—தொடர்ச்சி
நடைமுறைத்—தொடர்ச்சி

சட்டமன்ற அவைக்குறிப்பு ரகசியமான அரசாங்க தஸ்தாவேஜு அல்ல. யார் வேண்டுமானாலும் அதன் குறிப்பை வைத்துக்கொண்டு இங்கே பேசலாம். (க.ஈ) .. 204

பேரவைத் தலைவர் தீர்ப்பை காமெண்ட் செய்ய விளக்கம் அளிக்க உறுப்பினர்களுக்கு உரிமை கிடையாது. (த.கோ.) .. 286

பேசும் முறை—

அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு விரிவாகப் பேசக்கூடாது. (ஒ.தீ.) .. 189

வினாக்கள்—விடைகள்

அடிப்படை நோக்கத்திற்கு மாறுபாடாகக் கேட்கக்கூடாது. (து.வி.) .. 24

தாமரைக்கனி, திரு. இரா.—

சிவகாசி. தீப்பெட்டித் தொழிற்சாலைகள் வரிச் சுமையினால் மூடப்படும் நிலை (க.ஈ.) .. 49,50—51

நுகர்வோர் பிராந்திய கூட்டுறவு மையம் நிறுவுதல் .. 367—368

பழங்குடி மக்கள், அதிகப்படியாக அரசுப் பள்ளிகள் தொடங்குதல் .. 40—41

பாசன வாரியம் அமைத்தல் 260—264

புதுக்கோட்டை, வார்ப்பு இரும்புத் தொழிற் சாலை ஆரம்பித்தல் .. 375—376

போக்குவரத்துக் கழகங்களோடு பொறியியல் கழகங்களை இணைத்தல் .. 141—143

மதுரை ஆல்பர்ட் விக்டர் பாலம் (க.ஈ.) .. 404—405

மலிவுவிலைத் துணிகள் விலை உயர்வு .. 11—14

வடபழனி கோயில் நிலம் விற்பனை (க.ஈ.) 196

திட்டங்கள்—

முதலீடு, மைய அரசின் உதவி விவரம் .. 29—31

தியாகராஜன், திரு. ஆர்.—

கூட்டுறவு விவசாய கடன்கள் பாக்கி, மின்கட்டண பாக்கி வசூலுக்காக ஜப்தி நடவடிக்கை (ஒ.தீ.) 157

திருநாவுக்கரசு, திரு. எஸ்.—

அலுவல் வரிசையில் மாற்றம் (தீ.) .. 317

இந்தியக் கூட்டாண்மை (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு, 1982 .. 316—13

த தொடர்ச்சி — பக்கங்கள்.

திருவேங்கடம், திரு. பெ. சு.—

காகித ஆலைகள் நிறுவுதல், உலக வங்கி உதவி 266—271

கூட்டுறவு விவசாய கடன்கள் பாக்கி, மின் கட்டணபாக்கி, வசூலுக்காக ஜப்தி நடவடிக்கை (ஒ.தீ.). .. 158—161

சென்னை, கிருஷ்ணா நதி நீரைக் கொண்டு வருதல். .. 22—25

தென்னாற்காடு மாவட்டம், கூட்டுறவுத் துறையில் காகித தொழிற்சாலை அமைத்தல். .. 271—273

பாளையம் (வேடசெந்தூர் தொகுதி), சிமெண்ட் ஆலை அமைத்தல். .. 35—39

பிச்சாவரம் ஏரி படகு விடுதல். .. 124—127

புதுக்கோட்டை, வார்ப்பு இரும்புத் தொழிற் சாலை ஆரம்பித்தல். .. 375—376

ரைப்படங்கள்—

தணிக்கைக் குழு, உறுப்பினர்கள் நியமனம் 118—123

யணைப்புப் பணிகள்—

யந்திரங்கள் இறக்குமதி செய்தல் .. 348—351

ர்மானங்கள்—

அரசினர் தனித் தீர்மானங்கள்—

அலுவல் வரிசையில் மாற்றம் (விதி 30) .. 51—52
317, 45

எஸ்டேட்டுத் தீர்வைச் சட்டம் (மத்திய சட்டம் 34/1953) திருத்தப்படுவதற்கு ஒப்புதல் .. 464—465

திருத்தணி பேரூராட்சியை நகரியமாக அறிவிப்பது 464

னித் தீர்மானங்கள்—

சேது சமுத்திரத் திட்டம் பற்றி ஒரு மணி நேர விவாதம் .. 317—342

பேரவை நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்தி வைக்கப் பெறுதல .. 468—469

ணிகள்—

மலிவு விலைத் துணிகள், விலை உயர்வு .. 11—14

ரைமுருகன், திரு.—

உறுப்பினர்கள் விடுதியில் பாதுகாப்பு (த.கோ.) 380—382

த—தொடர்ச்சி.

துறைமுருகன், திரு—

கூட்டுறவு விவசாயக் கடன்கள் பாக்கி, மின் கட்டண பாக்கி வசூலுக்காக ஜப்தி நடவடிக்கை (ஒ.தீ.) .. 190—191

சம்பளம் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1982. .. 433

சென்னைப் பல்கலைக் கழக 5 வது செமஸ்டர் மறு தேர்வு (ஒ தீ). .. 394

பேரவை நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்தி வைக்கப்பெறுதல் (தீ.) .. 468—469

பொதுச் சொத்து (அழித்தல், இழப்பு ஆகியவற்றைத் தடுத்தல்) சட்ட முன்வடிவு, 1982 83—90 93 99—109

வடபழனி கோயில் நிலம் விற்பனை (க.ஈ.) .. 200—202

தொழிலாளர்கள்—

உப்பளம், விவரம் .. 253—257

கட்டிடம், மத்திய அரசு வரைவுச் சட்டம் 257—258

தொழிற்சாலைகள்—

காகித ஆலைகள் நிறுவுதல், உலக வங்கி உதவி 266—271

கூட்டுறவுத் துறையில் காகிதத் தொழிற்சாலை அமைத்தல், தென்னாற்காடு மாவட்டம் 271—273

சிமெண்ட் ஆலை, வேடசெந்தூர் தொகுதி பாளையத்தில் அமைத்தல் .. 35—39

சிவகாசி, தீப்பெட்டித் தொழிற்சாலைகள் வரிச் சுமையினால் மூடப்படும் நிலை (க.ஈ.) .. 49—51

டயர் உற்பத்தித் தொழிற்சாலை அமைத்தல் 31—33

தீப்பெட்டி, சிறுவர்கள் வேலை செய்வதைத் தடுத்தல் .. 19—20

வார்ப்பு இரும்புத் தொழிற்சாலை ஆரம்பித்தல் புதுக்கோட்டை .. 375—376

''ந''

நரசிம்மன், திரு. பூ. மு.—

கைத்தறி நெசவாளர்களுக்கு நூல் மற்றும் கூலி குறைப்பு (க.ஈ.) .. 293—294

நல்லப்பன், திரு. தி. கா.—

சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் குடி தண்ணீர் தட்டுப்பாடு (க.ஈ.) .. 295—298

'ந' தொடர்ச்சி

நல்லப்பன், திருதி. கா.—தொடர்ச்சி

பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்டமுன் வடிவு, 1982. .. 305—306

நவநீத கிருஷ்ண பாண்டியன், திரு. ஆர்.

கூட்டுறவு விவசாய கடன் பாக்கி, மின் கட்டண பாக்கி, வசூலுக்காகஜப்தி நடவடிக்கை (ஒ.தீ.) .. 157

.. 172—173

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் குடி தண்ணீர் தட்டுப்பாடு. (க.ஈ.) .. 295—299

பேரவை நடவடிக்கைக் குறிப்புகளை சில பத்திரிகைகள் வெளியிடும் முறை (த.கோ.) .. 389

பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்டமுன் வடிவு. 1982. .. 306—307

நிலங்கள்— .. 360—461

பட்டாக்கள் வழங்குதல். தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியம் .. 390—391

நீக்கம்—

42, 43, 93, 89, 99, 100, 120, 132, 134, 157, 172, 191, 192, 279, 336.

நீதிமன்றங்கள்—

முடிவுறா வழக்குகள் விவரம். .. 15—17

நுகர் பொருள்கள்—

அத்தியாவசிய பொருள்கள். அரசு பொறுப்பு ஏற்றல் .. 4—6

கூட்டுறவு அங்காடிகள் ஆலோசனைக் குழுக்கள் அமைத்தல். .. 352—357

நூலகங்கள்—

தஞ்சை சரஸ்வதி மகால் பணியாளர்கள், .. 247

நெடுஞ்செழியன், டாக்டர் இரா—

அலுவல் வரிசையில் மாற்றம் (தீ) .. 51—52

எதிர்பாரா செலவு நிதி (இரண்டாவது திருத்த) சட்டமுன் வடிவு, 1982 .. 214—304

உறுப்பினர்கள் விடுதியில் பாதுகாப்பு. (த.கோ.) .. 382—333

சம்பளம் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட சட்டமுன் வடிவு, 1982. .. 299—300

.. 411

.. 427—432

.. 433—434

'ந' தொடர்ச்சி

நெடுஞ்செழியன், டாக்டர் இரா. தொடர்ச்சி
சென்னை பல்கலைக் கழக 5 வது செமஸ்டர் மறுதேர்வு (ஓ.தீ.) .. 3—9

பேரவை நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்தி வைக்கப் பெறுதல்(தீ) .. 468—469

106—வது விதியின் கீழ் வைக்கப்பெற்ற அறிக்கைகளின் மீது விவாதம் .. 290

நெடுமாறன் திரு.ப.
கல்லூரி முதல்வர்கள் சம்பள விகிதம் .. 365—366

சுதந்திர நாள் கொண்டாட்டம் அழைப்பு அனுப்புதல் .. 237—238

சென்னை பல்கலை கழக 5—வது செமஸ்டர் மறுத்தேர்வு (ஓ.தீ.) .. 392—398

சேது சமுத்திர திட்டம் பற்றி ஒரு மணி நேர விவாதம். (த. தீ.) .. 322—326
.. 339

தளக்குலம் வள்ளியாற்றில் புதிய பாலம் கட்டுதல் .. 130—

தீப்பெட்டி தொழில் சிறுவர்கள் வேளை செய்வதை தடுத்தல் .. 19—20

மதுரை ஆல்பர்ட் விக்டர் பாலம் (க.ஈ.) .. 405

109—வது விதியின்கீழ் அளிக்கப்பெற்ற மீது அறிக்கைக்களின் விவாதம் .. 190
.. 40—405

'ப'

பட்டு உற்பத்தி—
கோரா பட்டு விபரம் .. 364—365

பலராமன்' திரு இல—
காகித ஆலைகள் நிறுவுதல் .. 265—271

பழனியப்பன் திரு. கு.பா.
உடல் ஊனமுற்றோர் அரசு பணிகளில் ஒதுக்கீடு செய்தல் .. 149—159

குடியிருப்புச் சட்டங்கள் (திருத்த) சட்ட முன் வடிவு1982. .. 234

சென்னை பல்கலைக் கழக 5—வது செமஸ்டர் மறுத் தேர்வு (ஓ. தீ.) .. 389

பழனிவேல் திரு.என்—
குடியிருப்பு சட்டங்கள் (திருத்த) சட்டமுன் வடிவு 1982 .. 223—224

கூட்டுறவு விவசாய கடன்கள் பாக்கி, மின் கட்டண பாக்கி வசூலுக்காக ஜப்தி நடவடிக்கை(ஒ.தீ.) 157

'ப'—தொடர்ச்சி

பழனிவேல், திரு. என்—தொடர்ச்சி பக்கங்கள்
சிறைகளில் புகார் பெட்டிகள் வைத்தல். .. 366—367

சென்னை, ஐ.ஏ.எஸ். பயிற்சி நிலையம். .. 39—40

சென்னை, கிருஷ்ணா நதி நீரைக் கொண்டு வருதல். .. 22—25

சென்னைப் பல்கலைக் கழக 5—வது செமஸ்டர் மறுத்தேர்வு (ஓ.தீ.) .. 392

தீயணைப்புப் பணியாளர், வீட்டு வசதி. .. 347—348

பழனி ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் இலவச மதிய உணவுத் திட்டம் நிறுத்தப் பெற்றுள்ளது. (க.ஈ.) .. 46—48

பாசனம்.—
கொடு முடியாறுத் திட்டம், வேலைத்தாமதம். .. 25—27

நொய்யல் ஆறு, தண்ணீர் இறைக்கும் அனுமதி 259—260

பாக்கம் பாடி அணை, சீரமைப்புத் திட்டம் 21—22

புராதன கால்வாய்களை நவீனப்படுத்துதல், சிதம்பரம் டிவிஷன் 264—26

மதுராந்தகம் பெரிய ஏரியை ஆழப்படுத்துதல் 373

வெள்ளாற்றின் கரைகளில் தடுப்புச்சுவர் கட்டுதல் 373—374

பாபு ஜனார்த்தனன், திரு.
கேளிக்கை வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1982 434,437,449

வடபழனி கோயில் நிலம் விற்பனை (க.ஈ) 196, 208

பாலகிருஷ்ணன், திரு. ச.
பெரும்பள்ளம் ஓடை குடிசை வாழ் மக்களுக்கு வீட்டுவசதி 251

பாலகிருஷ்ணன் திரு வி.
ஊராட்சி ஒன்றிய விளையாட்டு மையங்கள், விளையாட்டுச் சாமான்கள் வழங்கல் 8—11

பாலங்கள்
கண்ணனூர் (குமரி மாவட்டம்), புதிய பாலம் கட்டுதல் 127—128

மதுரை 'ஆல்பர்ட் விக்டர்' பாலம். (க.ஈ) 404—408

வள்ளியாற்றில் புதிய பாலம் கட்டுதல், தளக்குளம் 130—131

பாலசுப்பிரமணியன், திரு. வேடசந்தூர் வி.பி.
உரிமைப் பிரச்னையை எழுப்ப அனுமதி (த.கோ) 156—157

சட்டவிதிகள் ஆய்வுக்குழு, மூன்றாவது அறிக்கை அளித்தல் 51

பாளையம் (வேடசந்தூர் தொகுதி) சிமெண்ட் ஆலை அமைத்தல். 35—39

...ர் வாடகை நிர்ணயம் 148—14

பக்கங்கள்

'ப'—தொடர்ச்சி

புருஷோத்தமன் திரு. து.—
உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் (த.கோ.) 391
பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக (திருத்தம் தனி விதித் துறைகள்), சட்டமுன்வடிவு, 1982 53—55
வடபழனி கோயில் நிலம் விற்பனை (க.ஈ.) 196

பூங்காவனம், திரு. என். ஏ.—
கேளிக்கை வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1982. 441—442
வேலூர், பீடித் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி 251—253

பெருமாள், திரு. ரா.கு.—
ஆறுமுகனேரி, காயல்பட்டினம் பேரூராட்சிகள், குடிநீர் வசதி 246

பொன்னம்மாள் திருமதி எ.எஸ்.—
உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் (த.கோ) 391
காகித ஆலைகள் நிறுவுதல் 265—271
கூட்டுறவு விவசாயக்கடன்கள் பாக்கி, மின்கட்டண பாக்கி வசூலுக்காக ஜப்தி நடவடிக்கை (ஒ.தீ.) 158,173,175
பழனி, ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் இலவச மதிய உணவுத் திட்டம் நிறுத்தப்பெற்றுள்ளது. (க.ஈ.) 48

பொன்னுரங்கம், திரு ப.—
சென்னைப் பல்கலைக் கழக 5-வது செமஸ்டர் மறு தேர்வு (ஒ.தீ.) 392
பனைமரத்தொட்டி (சென்னை, நிலத்தடி குழாய்க் கிணறுகள் 371—372
வடபழனி கோயில் நிலம் விற்பனை (க.ஈ.) 196,198,203

பொன்னையன் திரு.சி.—
கூட்டுறவு விவசாய கடன்கள் பாக்கி, மின் கட்டண பாக்கி வசூலுக்காக ஜப்தி நடவடிக்கை (ஒ.தீ.) 175—191
சென்னை மாநகர சிவில் வழக்கு நீதி மன்றம், மாநிலச் சிறுவழக்கு நீதிமன்றங்கள் (திருத்த) ரத்துச் சட்டமுன்வடிவு, 1982 105
நீதிமன்றக் கட்டணங்கள்-வழக்குகள் மதிப்பீட்டு (திருத்த) சட்டமுன்வடிவு, 1982 106,109,110
பொது சொத்து அழித்தல், இழப்பு ஆகியவற்றைத் தடுத்தல்) சட்டமுன் வடிவு, 1982 60,64,65,82 84, 90-[illegible]

ப—தொடர்ச்சி

பக்கங்கள்

பொன்னையன் திரு. சி.—தொடர்ச்சி
மாகாண சிறு வழக்கு நீதி மன்றங்கள் (தமிழ் நாடு திருத்த சட்டமுன்வடிவு, 1982 102—104

போக்குவரத்து—
துணை வினாவிற்கு அளித்த விடைக்கான திருத்தம் (அறி) 403—404
மாணவர்களுக்கு சலுகைக் கட்டண பயணச் சீட்டுகள், சென்னை 145—148
லாரிகள் வாடகை நிர்ணயம் 148—149

'ம'

மக்கள் நல்வாழ்வு—
பாதாள சாக்கடைத்திட்டம், நாகர்கோவில் 20—21

மணி, திரு. டி.
ஊராட்சிகள் (உள்ளூர் செஸ் மேல்வரி விதிப்பை சட்டமுன்வடிவு, 1982 315

செல் திறனாக்குதல்—
கூட்டுறவு விவசாய கடன்கள் பார்க்க, மின் கட்டண பாக்கி வசூலுக்காக ஜப்தி நடவடிக்கை (ஒ. தீ.) 157
சென்னை பல்கலைக் கழக 5வது செமஸ்டர் மறுதேர்வு (ஒ.தீ.) 392
பழனி, ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் இலவச மதிய உணவுத் திட்டம் நிறுத்தப்பெற்றுள்ளது (க. ஈ.) 46
மதுரை ஆல்பர்ட் விக்டர் பாலம் (க.ஈ.) 404—407

மருத்துவம்—
மருந்தியல் துறையை தனியாகப் பிரிடுதல் 137—138

மருத்துவ மனைகள்—
இ. எஸ். ஐ. திட்டத்தை விரிவுபடுத்துதல், சேலம் 368
இ. எஸ். ஐ. மருத்துவ உதவியை நீட்டித்தல், ஆரல்வாய் மொழி 'கூட்டுறவு அல்ல 369

ம தொடர்ச்சி	பக்கங்கள்
மருத்துவ மனைகள்—தொடர்ச்சி	
கடலூரில் மருத்துவமனை, சித்த வைத்திய பிரிவு அமைத்தல்	139—139
கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை புற்றுநோய் சிகிச்சை பிரிவு ஏற்படுத்துதல்	139—141
மாணிக்கம், திரு. எம்.எஸ்.—	
குடியிருப்புச் சட்டங்கள் (திருத்த) சட்ட முன் வடிவு, 1982	227—229
நாகபட்டினம்—கூடலூர்—மைசூர் நெடுஞ்சாலை தேசிய நெடுஞ்சாலையாக்குதல்	13 —134
மாவட்ட நிர்வாகம்—	
திருச்சி தாலூக்கா, இரண்டாக பிரித்தல்	246
மீனளம்—	
இறால் உற்பத்தி தமிழ்நாடு	1—3
வெளிநாட்டவர் மீன் பிடிப்பபைத் தடுத்தல் கன்னியாகுமரி கடற்கரை	244—245
முத்துகிருஷ்ணன், திரு. சு.—	
கன்னியாகுமரி கடற்கரை, வெளிநாட்டவர் மீன் பிடிப்பதைத் தடுத்தல்	244—245
குமரி மாவட்டம், திருமண மண்டபங்கள் கட்டுதல்	123—124
முத்துசாமி திரு. சு.—	
சேது சமுத்திரத் திட்டம் பற்றி ஒருமணி நேர விவாதம் (த. தீ.)	337—342
துணை வினாவிற்கு அளித்த விடைக்கான திருத்தம் (க. இ.)	403—404
முத்துராமலிங்கம், திரு. இ.	
கூட்டுறவு விவசாய கடன்கள் பாக்கி, மின் கட்டண பாக்கி வசூலுக்காக ஜப்தி நடவடிக்கை (ஒ. தீ.)	157
சென்னை பல்கலைக் கழக 5—வது செமஸ்டர் மறு தேர்வு	392
மொக்கையன், திரு. பி.	
கூட்டுறவு விவசாய கடன்கள் பாக்கி, மின் கட்டண பாக்கி வசூலுக்காக ஜப்தி நடவடிக்கை (ஒ. தீ.)	157

ய	பக்கங்கள்
யசோதா, திரு. டி.	
கூட்டுறவு விவசாயக் கடன்கள் பாக்கி, மின் கட்டண பாக்கி வசூலுக்காக ஜப்தி நடவடிக்கை (ஒ. தீ.)	158
பொதுச் சொத்து (அழித்தல், இழப்பு ஆகியவற்றைத் தடுத்தல்) சட்டமுன்வடிவு 1982	67—68
ர	
ரகுமான்கான், திரு. அ.	
அரசு அலுவலர்களின் பதவிக்கால நீட்டிப்பு (த. கோ.)	43
கூட்டுறவு விவசாயக் கடன்கள் பாக்கி, மின் கட்டண பாக்கி வசூலுக்காக ஜப்தி நடவடிக்கை (ஒ. தீ.)	157
கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு 1982	442—445 450—451
சம்பளம் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1982	411—418
சென்னைப் பல்கலைக்கழக 5-வது செமஸ்டர் மறு தேர்வு (ஒ. தீ.)	392
'ர'	
பொதுச்சொத்து (அழித்தல் இழப்பு ஆகியவற்றைத் தடுத்தல்) சட்ட முன்வடிவு, 1982	60—66 75—76 82—92 95—96
ரமணி, திரு. கு.—	
அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம், அரசு பொறுப்பேற்றல்	4—6
காகித ஆலைகள் நிறுவுதல்	265—271
கூட்டுறவு விவசாயக் கடன்கள்பாக்கி மின் கட்டண பாக்கி வசூலுக்காக ஜப்தி நடவடிக்கை (ஒ. தீ.)	157
கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை புற்றுநோய் சிகிச்சை பிரிவு ஏற்படுத்துதல்	139—141
சம்பளம் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1982	418—421

பக்கங்கள்.

சென்னை, மாணவர்களுக்கு சலுகைக் கட்டண பயணச் சீட்டுகள் 145—148

சேதுசமுத்திரத் திட்டம் பற்றி ஒரு மணி நேர விவாதம் (த. தீ.) 329—333

தொழிலாளர்கள் நல நிதி (திருத்த) சட்ட முன்வடிவு, 1982 457—459

பொதுச்சொத்து (அழித்தல் இழப்பு ஆகியவற்றைத் தடுத்தல்) சட்டமுன்வடிவு, 1982 68—73

ராஜ்குமார் விஜய ரகுநாத தொண்டமான்— திரு.

கூட்டுறவு விவசாயக் கடன்கள் பாக்கி மின் கட்டண பாக்கி வசூலுக்காக ஜப்தி நடவடிக்கை (ஒ.தீ.) 157

'வ'

வரதராஜன் திரு. என்.—

கூட்டுறவு விவசாயக் கடன்கள் பாக்கி மின் கட்டண பாக்கி வசூலுக்காக ஜப்தி நடவடிக்கை (ஒ.தீ.) 157

சில பொருட்களுக்குவசூலிக்கப்படும்விற்பனைவரி 358—360

நீதிமன்றங்கள், முடிவுறாவழக்குகள் விவரம் 15—17

பழனி, ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் இலவச மதிய உணவுத் திட்டம் நிறுத்தப் பெற்றுள்ளது (க.ஈ.). 49

வரிகள்—

சில பொருட்களுக்கு வசூலிக்கப்படும் விற்பனை வரி 358—360

வாரியங்கள்—

பாசன வாரியம் அமைத்தல் .. 260—264

விளம்பரம்—

சுவரொட்டிகள், நகரங்களில் குறிப்பிட்ட இடங்களை ஒதுக்குதல் .. 128—130

விளையாட்டுகள்—

ஊராட்சி ஒன்றிய விளையாட்டு மையங்கள், விளையாட்டுச் சாமான்கள் வழங்கல் .. 8—11

விளையாட்டு அரங்கம் அமைத்தல், ஊட்டி .. 14

வின்சென்ட், திரு. மி.—

நாகர்கோவில், பாதாள சாக்கடைத் திட்டம் .. 20—21

பக்கங்கள்.

வீட்டுவசதி—

கிராம வீட்டுவசதித் திட்டம், எல். ஐ. சி. உதவி .. 18—19

குடிசைவாழ் மக்கள், பெரும்பள்ளம் ஓடை .. 251

பீடித் தொழிலாளர்கள், வேலூர் .. 251—253

வீரப்பன், திரு. ஆர். எம்.—

அலுவல் வரிசையில் மாற்றம் (தீ.) .. 453

பத்திரிகைப் பணியாளர்கள் நிவாரண நிதிச் சட்ட முன்வடிவு, 1982 .. 215

453—454, 463

வடபழனி கோயில் நிலம் விற்பனை (க. ஈ. அ.) 196—200, 202—205, 206, 207—210

வெங்கடசுப்பிரமணியம், திரு. ப.—

உருக்கு இரும்பு, 1981–82-க்கு ஒதுக்கீடு .. 115—116

காகித ஆலைகள் நிறுவுதல், உலக வங்கி உதவி .. 266—271

கோரா பட்டு உற்பத்தி, விவரம் .. 364—365

பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1982 .. 307—308

மாகாண சிறு வழக்கு நீதிமன்றங்கள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1982 .. 102

வெங்கட ரெட்டி, திரு. டி.—

நீதிமன்றக் கட்டணங்கள்—வழக்குகள் மதிப்பீட்டு (திருத்த) சட்ட முன்வடிவு, 1982 .. 107—108

வெளிநடப்புகள்—

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி
இந்திய கம்யூனிஸ்ட் கட்சி
திராவிட முன்னேற்றக் கழகம் } 190

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி
இந்திய கம்யூனிஸ்ட் கட்சி } 285

வேணுகோபால், திரு. த.—

காகித ஆலைகள் நிறுவுதல் .. 265—271

சென்னை பெரியார் நகர் (பெரவள்ளூர்) குடிநீர் மற்றும் பாதாள சாக்கடை வசதிகள் .. 370—371

ஜ — பக்கங்கள்

ஜான்வின்செண்ட், திரு. மு.
கொடுமுடியாறுத் திட்டம் வேலை தாமதம் .. 25—27

ஹ

ஹண்டே, டாக்டர் எச். வி.—
உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் (த.கோ.) .. 392
பி.பார்மஸி பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு, பதவி உயர்வு (க.ஈ.அ.) .. 408, 409,410

ஹாஜா செரீப், திரு. கே. எஸ். ஜி.—
சேதுசமுத்திரத் திட்டம் பற்றி ஒரு மணி நேர விவாதம் (த.தீ.) .. 335—336
106 வது விதியின் கீழ் அளிக்கப் பெற்ற அறிக்கைகளின் மீது விவாதம் (த.தோ) .. 289

ஹேமச்சந்திரன், திரு. ஜே—
ஆரல்வாய்மொழி கூட்டுறவு ஆலை, இ.எஸ்.ஐ. மருத்துவ உதவியை நீட்டித்தல் .. 369
கன்னனூர் (குமரி மாவட்டம்), புதிய பாலம் கட்டுதல் .. 127—128
காகித ஆலைகள் நிறுவுதல், உலக வங்கி உதவி.. 266—271
கூட்டுறவு விவசாயக் கடன்கள் பாக்கி, மின் கட்டண பாக்கி வசூலுக்காக ஜப்தி நடவடிக்கை (ஒ.தீ.) .. 157
சென்னைப் பல்கலைக் கழக 5-வது செமஸ்டர் மறு தேர்வு (ஒ.தீ.) .. 392
டயர் உற்பத்தி தொழிற்சாலை அமைத்தல் .. 31—33

தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

தமிழ்நாடு ஆளுநர்

திரு. சாதிக் அலி.

அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்)—பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்ட துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்புத் திட்டம், சர்க்கரை பாகு கழிவு, தொல்பொருள் இயல்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்)—நிதி, சட்டமன்றம், தேர்தல்கள், உணவு, மீன் வளம், பிற்பட்ட வகுப்பினர்' இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு, முன்னாள் ராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின் துறை அமைச்சர்)—மின்சாரம், இரும்பு எஃகுக் கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (ஊரகத் தொழில் துறை அமைச்சர்)—கிராம குடிசை சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள்; பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிப்புத்துறை, முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த் துறை அமைச்சர்)—வருவாய்கள், வணிக வரிகள், ஆயத்துறை, மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் (செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்)—செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், இந்து அறநிலையத்துறை, காடுகள், சின்கோனா, மது அனுமதிச் சீட்டு வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்)—தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சிமொழி, கைத்தறி

8. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து (வேளாண்மைத் துறை அமைச்சர்)—வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு மற்றும் அக்ரோ பொறியியல்.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (கூட்டுறவு—சட்ட அமைச்சர்)—சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள் மற்றும் அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், நிறுவனங்கள் பதிவு, கடன் வழங்கல் மீதான நிவாரணச் சட்டம், சீட்டு பற்றிய சட்டம், கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித் துறை அமைச்சர்)—நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் நிவாரணம், பூமிதானம், கிராமதானம், நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்)—தொழிலாளர் வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகர அமைப்பு, இடவசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்)—மக்கள் நல்வாழ்வுத்துறை.

13. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது (நீர்ப்பாசனத் துறை அமைச்சர்)—வேளாண்மைப் பணி, கூட்டுறவுச் சங்கங்கள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள், வஃப்.

14. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துத் துறை அமைச்சர்)—அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள்.

15. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு (தொழில்துறை அமைச்சர்)—பெருந் தொழில்கள், சுரங்கங்கள், கனிப் பொருள்கள், நெசவாலைகள்,

16. மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் (கதர் மற்றும் பொதுப்பணித் துறை அமைச்சர்)—கதர், மது மனுமதிச் ட்டு வழங்கல் நீங்கலாக மது விலக்கு, பயண இசைவுச் சீட்டு, பொதுப்பணித் துறை மற்றும் பொதுப்பணித் துறை அலுவல்கள் ம்பந்தமாக.

17. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்)—ஆதி திராவிடர் நலம், எழுதுபொருள் அச்சுத்துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர், வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

18. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நலத் துறை அமைச்சர்)—மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால்நடைப் பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம்.

PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

G vernor of Tamil Nadu.

Thiru S. SADIQ ALI.

MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. Hon. Thiru M. G. RAMACHANDRAN (Chief Minister) Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Deputy Collector, Police, Prevention of Corruption, Planning, Molasses and Archaeology.

2. Hon. Dr. V. R. NEDUNCHEZHIYAN (Minister for Finance)—Finance, Legislature, Elections, Food, Fisheries, Backword Classes, Youth Service Corps, Price Control and Ex—Servicemen.

3. Hon. Thiru. S· RAMACHANDRAN (Minister for Electricity)—Electricity, Iron and Steel Control.

4. Hon. Thiru K. A. KRISHNASAMY (Minister for Rural Industries)—Rural Industries including Village, Cottage and Smal Industries, Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. Hon. Thiru S. D. SOMASUNDARAM (Minister for Revenue)—Revenue, Commercial Taxes, Excise and Census.

6. Hon. Thiru R. M. VEERAPPAN (Minister for Information and Religious Endowments)—Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest and Cinchona and Grant of Liquor Permits.

7. Hon· Thiru C. ARANGANAYAKAM (Minister for Education)—Education including Technical Education, Official Language and Handlooms.

8. Hon. Thiru K. KALIMUTHU (Minister for Agriculture) – Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

9. Hon. Thiru C. PONNAIAN (Minis.er for Co-operation and Law)—Law, Couris' Prisons, Legislati.ns on Weigths and Measurest) Regisiation of Companies, Debt. Relief including Legislation on Money Lending and Lgislati.n on Chits and Co-Operation.

10. Hon. Thiru P. KULANDAIVELU (Minister fcr Loca Administration)—Municipal Administration, Panc.ayats and Panchayat Unicns, Ccmmu.i.y Developmen., Rural Indeb.edness, Bhoodan and Gramdhan and Hihgways.

11. Hon. Thiru S. RAGHAVANANDHAM (Minis.er for Labour)—Labour, Housing Slum Clearance Board, S a is ics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommcdation Contiol.

12. Hon. Dr. H. V. HANDE (Minister for Health)—Health.

13. Hon. Thiru K. RAJA MOHAMMED (Minister for Irrigation)—Agro Service Co-operative Societies, Irrigation ir cluding Minor Irrigation and Wakf.

14. Hon. Thiru. S. MUTHUSAMY (Minister for Transpor — Transpor. , Na.ionalised Transpor , Mo or Ve.icles Act and Poris.

15. Hon. Thiru. S. THIRUNAVUKKARASU (Minister for Ir dustries)—Large Scale Indus.ries, Mires and Minerals and Tex iles.

16. Hon. Thiru S. N. RAJENDRAN (Minis er for Public Works and Kadi)—Handlcc ms, Khadi, Prohibition excluding grant cf Liquor permi.s, Pass.or s, Public Works Deparimen. and Es abltsnment ma er rela ing io Public Works Depar men .

17. Ho.. T iru M. M. VIJAYASARATHI (Minis er for Adi Dravidar Welfare)— Adi Dravidar Welfare, Stationery, And Prin ing Gcvernmen. Press, News Prin Control, Hill Tribes and Bonded Labour anq Employmen. and Training

18. Hon. Tairumatai GOMATHI SRINIVASAN (Minis er for Social Welfare)—Social, Welfare ir cluding Women and Children Welfare, Animal Husbandry, Beggars Home, Orchanages, Indians Overseas, Refugees and Evacuees and correctional Administration.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

பேரவைத் தலைவர் :

* மாண்புமிகு திரு. க. இராசாராம்.

பேரவைத் துணைத் தலைவர் :

* மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியச .

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்.
2. திரு. ப. வேங்கடசுப்பிரமணியம்.
3. திரு. துரைமுருகன்.
4. திரு. இல. பலராமன்.

சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.

துணைச் செயலாளர்கள்

திரு. த. இராதாகிருஷ்ணன்.
திரு. இரா. பாலகுரு, பி,ஏ.
திரு. பி. எம். பத்மநாப நம்பியார், பி.ஏ.,பி.ஜி.எல்.
திரு. கா. சீனிவாசன், பி.எஸ்-சி. (குழு அலுவலர்).
திரு. வி. சீதாராமன், பி.காம். (சார்புச் செயலாளர்).
திரு. பெ. பள்ளிகொண்டபெருமாள், பி,ஏ., பி.எல். (சார்புச் செயலாளர்).
திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ பி.எல். (சார்புச் செயலாளர்.)
திரு. பெ. பாலகிருஷ்ணன், பி.காம். (சார்புச் செயலாளர்).
திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி.ஏ. (சார்புச் செயலாளர்).
திரு, டி. எஸ். துளசிராம் (எஸ்டேட் அலுவலர்)
திரு. பி. கோதண்டராமன் (பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்).
திரு. மா. சந்திரசேகரன் (தலைமை நிருபர்).

விவாதப் பதிப்பாளர்.

திரு. ஜி. எஸ் அனந்தநாராயணன். பி.லிட்.

---

* 21—6—1980 அன்று தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.
** 2—2—1982 அன்று நியமனம் செய்யப் பெற்றார்கள்

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் [தமிழ் அகர வரிசைப்படி] தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல்.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.		தொகுதியின் பெயர்.
	(1)	(2)
1	அங்குசாமி, திரு. ச. ..	திருவாடானை
2	அண்ணாதாசன், திரு. எம். ..	திருவரும்பூர்
3	அப்துல் ரசாக், திரு. கே. எம். ..	ஆலந்தூர்
4	அப்பாதுரை திரு. மு. ..	ஒட்டப்பிடாரம் (செ.வ.)
5	அம்பிகாபதி, திரு. மு. ..	மன்னார்குடி
6	அரங்கநாதன், திரு. எஸ். ..	தர்மபுரி
7	அரங்கநாதன், திரு. மு. ..	கூனூர் (செ.வ.)
8	அரங்கநாயகம், திரு. செ. ..	கோவை (மேற்கு)
9	அரங்கராசன், திரு. வெ. ..	உப்பிலியாபுரம்
10	அருணகிரி, திரு. இரா. ..	திருப்பத்தூர்
11	அருணாசலம், திரு. இரா. ..	நாமக்கல் (செ.வ.
12	அழகர்சாமி, திரு. சோ. ..	கோவில்பட்டி
13	அன்பழகன், திரு. க. ..	புரசைவாக்கம்
14	அன்பழகன் திரு. தி. ..	நாட்றாம்பள்ளி
15	அன்பில்தர்மலிங்கம், திரு. ..	லால்குடி
16	ஆண்டி அம்பலம், திரு. மெ. ..	நத்தம்
17	ஆண்டித்தேவர், திரு. எஸ். ..	உசிலம்பட்டி
18	ஆறுமுகம், திரு. எம். ..	அவினாசி (செ.வ.)
19	சேலம் ஆறுமுகம், திரு. மு. ..	சேலம்—2
20	ஆறுமுகம், திரு. த. ..	அரியலூர்
21	ஆனூர் ஜெகதீசன், திரு. ..	செங்கல்பட்டு
22	இரத்தினம், திரு. எம். வி. ..	பொள்ளாச்சி
23	இராசகுமார், திரு. மெ. அ. ..	மருங்காபுரி
24	இராசமாணிக்கம், திரு. இரெ. ..	குத்தாலம்
25	இராசரத்தினம், திரு. து. ..	பூந்தமல்லி
26	இராசாம்பாள், திருமதி தா. ..	தலைவாசல் (செ.வ.)
27	இராசாராம், திரு. க. ..	பனமரத்துப்பட்டி
28	இராசாராமன், திரு. எஸ். ..	பாபநாசம்

	தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதியின் பெயர். (2)
29	இராசு, திரு. ஜே. எஸ். ..	பெரம்பலுர் வ.
30	இராசேந்திரன், திரு. எஸ். என். ..	தூத்துக்குடி (செ.)
31	இராமச்சந்திரன், திரு. எம். ஜி. ...	மதுரை (மேற்கு)
32	இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். ..	சாத்தூர்
33	இராமச்சந்திரன், திரு. ச. ..	பண்ருட்டி
34	இராமச்சந்திரன், திரு. செஞ்சி ந. ..	செஞ்சி
35	இராமசாமி, திரு. எஸ்.என்...	சாத்தான்குளம்
36	இராமசாமி, திரு. த. ..	இராமநாதபுரம்
37	இராமசுப்பிரமணியன், திரு. இ. ..	ஸ்ரீ வைகுண்டம்
38	இராமலிங்கம், திரு. ஏ. ..	காட்டுமன்னார் [செ.வ.]
39	இராமலிங்கம், டாக்டர் கே. பி. ..	இராசிபுரம்
40	இராமலிங்கம், திரு. செ, ..	திருவிடைமருதூர்
41	இராஜசேகரன், திரு. வெ. ..	இராதகிருஷ்ணநகர்
42	இராஜாராம்நாயுடு, திரு. தெ. இரா. ..	தல்லி
43	இராஜேந்திரன், திரு. எஸ். எஸ். ..	ஆண்டிப்பட்டி
44	இளையபெருமாள், திரு. எல்...	எழும்பூர் (செ.வ.)
45	ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி. ..	அம்பாசமுத்திரம்
46	உகம்சந்த், திரு. எஸ். டி. ..	மதுராந்தகம்
47	உச்சி, திரு. கே. ..	கூடலூர்
48	உத்திராபதி, திரு. பொ. ..	திருத்துறைப்பூண்டி (செ.வ.)
49	உமாநாத், திரு. ரா. ..	நாகை
50	கண்ணன், திரு. ம. ..	கண்டமங்கலம் (செ.வ.)
51	கணபதி, திரு. கே. ஆர். ..	சிதம்பரம்
52	கணேசன், திரு. இ. ..	இடைப்பாடி
53	கணேசன், திரு. சி. ..	அச்சரப்பாக்கம் (செ.வ.)

	தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதியின் பெயர். (2)
54	கந்தசாமி, திரு. கா. வே. ..	கிணத்துக்கடவு
55	கந்தசாமி, திரு. பி. ..	பொங்கலூர்
56	கபாலி, திரு. டி. கே. ..	மைலாப்பூர்
57	கருணாநிதி, டாக்டர். மு. ..	அண்ணாநகர்
58	கருப்பசாமிப் பாண்டியன், திரு. வி. ..	பாளையங்கோட்டை
59	கருப்பையா, திரு. இரா. ..	குளித்தலை
60	கருப்பையா, திரு. ஏ. டி. ..	வால்பாறை
61	கல்லன், திரு. கே. ..	உதகமண்டலம்
62	கலிதீர்த்தான், திரு. சோ. ..	சங்கராபுரம்
63	கலியமூர்த்தி, திரு. பெ. ..	மங்களூர் (செ. வ.)
64	நன்னிலம் கலையரசன், திரு. அ. ..	நன்னிலம் (செ. வ.)
65	காளிமுத்து, திரு. கா. ..	திருப்பரங்குன்றம்
66	கிட்டப்பா, திரு. என். ..	மாயவரம்
67	கிருஷ்ணசாமி, திரு. கா. கோ...	காங்கேயம்
68	கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. ..	ஆயிரம்விளக்கு
69	கிருஷ்ணமூர்த்தி, திரு. சா. ..	ஆண்டிமடம்
70	கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. ..	நெல்லிக்குப்பம்
71	கிருஷ்ணராஜ், திரு. ஜி. ..	சேலம்-1
72	கிருஷ்ணன், திரு. ரா. ..	வாசுதேவநல்லூர்
73	குப்புசாமி, திரு. என். ..	மொரப்பூர்
74	குப்புசாமி, திரு. கே. ..	ஒட்டன்சத்திரம்
75	குப்புசாமி, திரு. செ. ..	வந்தவாசி (செ. வ.)
76	குமரி அனந்தன், திரு. ..	திருவொற்றியூர்
77	குருசாமி, திரு. ப. ..	அந்தியூர் (செ. வ.)
78	குலசேகர், திரு. ஏ. டி. ..	சிங்காநல்லூர்
79	குலசேகரப் பாண்டியன், திரு. ந. ..	வாணியம்பாடி
80	குழந்தைவேலு, திரு. ப. ..	உடுமலைப்பேட்டை
81	கேசவ ஆதித்தன், திரு. சி. ..	திருச்செந்தூர்
82	கோபால், திரு. சி. ..	சோளிங்கர்
83	கோபாலகிருஷ்ணன், திரு. கா. ..	பெரியகுளம்
84	கோபாலன், திரு. ஆர். டி. ..	கம்பம்
85	கோமதி சீனிவாசன், திருமதி ..	வலங்கை (செ. வ.)

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதியின் பெயர். (2)
86 கோவேந்தன், திரு. எம். ஆர்...	பேராவூரணி
87 கோவைத்தம்பி, திரு. ..	பேரூர்
88 சக்கரபாணி, திரு. ஆர். ..	பொன்னேரி
89 சங்கரய்யா, திரு. என். ..	மதுரை (கிழக்கு)
90 சட்டநாத கரையாளர், திரு. கி. ..	தென்காசி
91 சண்முகம், திரு. இரா. ..	திருத்தணி
92 சண்முகம், திரு. ஏ. சி. ..	ஆரணி.
93 சத்தியமூர்த்தி, திரு. வ. ..	கடலாடி.
94 சந்திரசேகரன், திரு. ஏ. ..	சோழவந்தான்.
95 சபாபதி, திரு. சி. ..	அரூர் (செ.வ.).
96 சமரசம், டாக்டர், கே. ..	காவேரிப்பட்டணம்.
97 சாகுல் ஹமீது, திரு. ஏ. ..	கடையநல்லூர்.
98 சாமிக்கண்ணு, திரு. தா. ..	செங்கம்.
99 சித்தன், திரு. என். எஸ். வி.	திருமங்கலம்.
100 சிதம்பரம், திரு. சி. த. ..	காரைக்குடி.
101 சிவசாமி, திரு. செ. ..	இளையான்குடி.
102 சிவஞானம், திரு. ந. ..	திருவோணம்.
103 சிவப்பிரகாசம், திரு. சி. ..	சேந்தமங்கலம் (செ.வ.)
104 சிவபெருமான், திரு. மு. ..	ஓமலூர்.
105 சிவராமன், திரு. எ. எஸ். ..	சின்னசேலம்.
106 சின்னசாமி, திரு. எம். ..	கரூர்.
107 சின்னதுரை, திரு. ஏ. ..	மேல்மலையனூர்.
108 சின்னராசு, திரு. க. இரா. ..	கிருஷ்ணகிரி.
109 சின்னராசு, திரு. மா. ..	தொண்டாமுத்தூர்.
110 சுந்தரம், திரு. கே. ஆர். ..	குடியாத்தம்.
111 சுந்தரம், திரு. ப. ..	திருப்பத்தூர்.
112 சுந்தரம், திரு. மு. ..	ரிஷிவந்தியம்.
113 சுந்தரமூர்த்தி, திரு. ஆர். ..	முகையூர்.
114 சுந்தரராஜ், திரு. நா. ..	திருமயம்.
115 சுந்தரராஜன், திரு. மு. ..	விருதுநகர்.
116 சுப்பிரமணியன், திரு. உ. ..	சிவகங்கை.
117 சுப்பிரமணியன், திரு. கே. எம். எஸ். ..	போடிநாயக்கனூர்.
118 சுப்பிரமணியன், திரு. மா. ..	திருவையாறு.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதியின் பெயர். (2)
119 சுப்பிரமணியன், திரு. வி. ..	திருநாவலூர்.
120 சுப்பிரமணியன், திரு. ஜி. கே.	பவானிசாகர்.
121 சுவாமிநாதன், திரு. வி. வி. ..	புவனகிரி.
122 செங்கோட்டையன், திரு. கு. அ.	கோபிச்செட்டிபாளையம்.
123 செம்மலை, திரு. செ. ..	தாரமங்கலம்.
124 செல்லமுத்து, திரு. எம். ..	திருவாரூர் (செ.வ.),
125 செல்வராசன், திரு. அ. ..	துறைமுகம்,
126 சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. ப. செ. ..	அரவக்குறிச்சி.
127 சேதுராமன், திரு. ஏ. எம். ..	ஆற்காடு.
128 சொக்கலிங்கம், திரு. கே. ..	திருப்போரூர்.
129 சோமசுந்தரம், திரு. எஸ். டி.	பட்டுக்கோட்டை.
130 சோமு, திரு. என். வி. என்.	பூங்கா நகர்.
131 சௌந்திரராசன், திரு. கே.	திருச்சி-2.
132 டாக்டர் சௌரிராஜன், திரு. கே.	தி. நகர்.
133 தங்கமணி கவுண்டர், திரு. கே. எம்.	திண்டிவனம்.
134 தங்கராசு, திரு. ஏ. ..	குறிஞ்சிப்பாடி.
135 தங்கவேல்ராஜ், திரு. பி. எம்.	கிருஷ்ணராயபுரம் (செ.வ.).
136 தங்கவேலு, திரு. பி. ..	ஜெயங்கொண்டான்.
137 தவசி, திரு. ஆர். ..	பரமக்குடி (செ. வ.).
138 தனபால், திரு. ப. ..	சங்கரி (செ. வ.).
139 தனுக்கோடித் தேவர், திரு. கே. ..	முதுகுளத்தூர்.
140 தாமரைக்கனி, திரு. இரா.	ஸ்ரீவில்லிபுத்தூர்.
141 தியாகராசன், திரு. ஆர். ..	விருத்தாசலம்.
142 திருச்சி சௌந்திரராசன் .. திரு. ஆர்.	ஸ்ரீரங்கம்.
143 திருநாவுக்கரசு, திரு. எஸ்...	அறந்தாங்கி.
144 திருமாறன், திரு. பெ. ..	ஆலங்குடி.
145 திருமான், திரு. இரா. ..	ஏற்காடு (செ.வ.).
146 திருவேங்கடம், திரு. பெ. சு...	கலசப்பாக்கம்.
147 தீர்த்தராமன், திரு. ப. ..	பொன்னகரம்.
148 துரைசாமி, திரு. பி. எஸ். ..	பர்கூர்.
149 துரைமுருகன், திரு. இரா ..	ராணிப்பேட்டை
150 துரை ராமசாமி, திரு. ..	வெள்ளக்கோவில்

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)		தொகுதியின் பெயர். (2)
151	துரைராஜ், திரு. பி. ..	சங்கரநாயினார் கோவில் (செ. வ.)
152	தேவராஜ், திரு. வி. எம். ..	வேலூர்
153	நடராஜன், திரு. எஸ். ..	தஞ்சாவூர்
154	நரசிம்மன், திரு. பூ. மு. ..	பள்ளிப்பட்டு
155	நல்லப்பன், திரு. தி. கா. ..	பெருந்துறை
156	நவநீத கிருஷ்ண பாண்டியன், திரு. ..	ஆலங்குளம்
157	நாச்சிமுத்து, திரு. கே. பி. ..	மேட்டூர்
158	நாராயணசாமி, திரு. கே. ..	திருவண்ணாமலை
159	நாராயணன், திரு. பி. ஜி. ..	பவானி
160	நெடுஞ்செழியன், டாக்டர் இரா. ..	திருநெல்வேலி
161	நெடுமாறன், திரு. ப. ..	மதுரை (மத்திய)
162	பக்கீர் முகம்மது, திரு. இ. எஸ். எம். ..	கும்பகோணம்
163	பட்டாபிராமன், திரு. செ. ..	திருவள்ளூர்
164	பம்மல் நல்லதம்பி, திரு. ..	தாம்பரம்
165	பரமசிவ கவுண்டர், திரு. பி. என். ..	பல்லடம்
166	பலராமன், திரு. இல. ..	போளூர்
167	பழனிசாமி, திரு. சு. ..	மேட்டுப்பாளையம்
168	பழனிமுத்து, திரு. சி. ..	ஆத்தூர்
169	பழனியப்பன், திரு. கு. ப. ..	விழுப்புரம்
170	பழனிவேல், திரு. என். ..	பழனி (செ.வ.)
171	பாண்டியன், திரு. பி. எச். ..	சேரன்மாதேவி
172	பாபு கோவிந்தராஜன், திரு. ..	கடலூர்
173	பாபு ஜனார்த்தனன், திரு. ..	செய்யாறு
174	பாரமலை, திரு. க. ..	மானாமதுரை (செ.வ.)
175	பாலகிருஷ்ணன், திரு. ச. ..	மொடக்குறிச்சி
176	பாலகிருஷ்ணன், திரு. வி. ..	சிவகாசி
177	பாலசுப்பிரமணியன், திரு. க. ..	சீர்காழி (செ.வ.)
178	வேடசந்தூர் பாலசுப்பிரமணியன், திரு. வி. பி. ..	வேடசந்தூர்
179	பாலன், திரு. சு. ..	பெரம்பூர் (செ.வ.)
180	பாலுச்சாமி, திரு. ஏ. ..	சமயநல்லூர் (செ.வ.)

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)		தொகுதியின் பெயர். (2)
181	பிச்சை, திரு. எம். ..	அருப்புக்கோட்டை
182	பிரபாகரன், திரு. ஜே. சி. டி. ..	வில்லிவாக்கம்
183	புருஷோத்தமன், திரு. நு. ..	சைதாப்பேட்டை
184	பூங்காவனம், திரு. என். ஏ. ..	காட்பாடி
185	பெரியசாமி, திரு. ஏ. ..	தாராபுரம் (செ.வ.)
186	பெரியசாமி, திரு. ரா. ..	தொட்டியம் (செ.வ.)
187	பெருமாள், திரு. என். ..	வரகூர் (செ.வ.)
183	பெருமாள், திரு. ரா. கு. ..	விளாத்திகுளம்
189	பொன்னம்மாள், திருமதி. ஏ. எஸ். ..	நிலக்கோட்டை (செ. வ.)
190	பொன்னுரங்கம், திரு. ப. ..	ராயபுரம்
191	பொன்னையன், திரு. சி. ..	திருச்செங்கோடு
192	மணி, திரு. டி. ..	விளவங்கோடு
193	மணிமாறன், திரு. ஆர். ..	திருப்பூர்
194	மாணிக்கம், திரு. எம். எஸ். ..	வேதாரண்யம்
195	மாரிமுத்து, திரு. த. ..	குளத்தூர் (செ.வ.)
196	முகமது இஸ்மாயில், திரு. பி. ..	பத்மநாபபுரம்
197	முசிறிப்புத்தன், திரு. பி. ..	திருச்சி-1
198	முத்துகிருஷ்ணன், திரு. சு. ..	கன்னியாகுமரி
199	முத்துசாமி, திரு. சு. ..	ஈரோடு
200	முத்துராமலிங்கம், திரு. இ. ..	ராமநாபுரம்
201	முத்துவேல், திரு. என். ..	வானூர் (செ.வ.)
202	முத்தையா, திரு. இரா. ..	சேடப்பட்டி
203	முனிரத்தினம், திரு. இரா. சா. ..	கும்மிடிபூண்டி
204	முனுசாமி, திரு. மு. ப. ..	பாலக்கோடு
205	மூர்த்தி, திரு. ஜி. ..	பேரணாம்பட்டு (செ.வ.)
206	மொக்கையன், திரு. பி. ..	ராஜபாளையம் (செ.வ.)
207	யசோதா, திருமதி. டி. ..	ஸ்ரீ பெரும்புதூர்
208	ரகுமான்கான், திரு. அ. ..	சேப்பாக்கம்
209	ரங்கசாமி, திரு. ஆர். ..	சத்தியமங்கலம்
210	ரங்கசாமி, திரு. க. ..	உளுந்தூர்பேட்டை (செ.வ.)
211	ரமணி, திரு. கு. ..	கோயம்புத்தூர் (கிழக்கு)

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதியின் பெயர். (2)
212 ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான், திரு. ..	புதுக்கோட்டை
213 ராஜமாணிக்கம், திரு. எம். கே. ..	முசிறி
214 ரெத்தினராஜ், திரு. எஸ். ..	குளச்சல்
215 வரதராஜன், திரு. என். ..	திண்டுக்கல்
216 விசயலட்சுமி, செல்வி வி. ..	வீரபாண்டி
217 வின்சென்ட், திரு. மி. ..	நாகர்கோவில்
218 விஜயசாரதி, திரு. எம். ..	அரக்கோணம் (செ. வ.)
219 விஜயபாலன், திரு. என். ..	பூம்புகார்
220 விஜயராகவன், திரு. பொ. ..	கிள்ளியூர்
221 விஸ்வநாதன், திரு. கோ. ..	அணைக்கட்டு
222 வீராசாமி, திரு. த. ..	ஒரத்தநாடு
223 வீரானம்பலம், திரு. க.வெ. ..	மேலூர்
224 வெங்கடசுப்பிரமணியம், திரு. ப. ..	காஞ்சி
225 வெங்கட ரெட்டி, திரு. டி. ..	ஒசூர்
226 வெங்கடேசன், திரு. பி.எம். ..	பெரணமல்லூர்
227 வெள்ளைச்சாமி, திரு. அ. ..	ஆத்தூர்
228 வேணுகோபால், திரு. த. ..	தண்டராம்பட்டு
229 வேலப்பன், திரு. சி. வி. ..	கபிலர்மலை
230 ஜகத்ரட்சகன், திரு. எஸ். ..	உத்திரமேரூர்
231 ஜான் வின்சென்ட், திரு. மு. ..	நாங்குனேரி
232 ஜெயராமன், திரு.வே.இரா. ..	தேனி
233 ஹாஜா செரீப், திரு. கே. எஸ். ஜி. ..	திருவல்லிக்கேணி
234 ஹேமச்சந்திரன், திரு. ஜே. ..	திருவட்டார்
235 மார்க்ரெட் எலிசபெத் பிலிக்ஸ், திருமதி. ..	நியமன உறுப்பினர்

பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்கள்.

1. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்—அமைச்சர்.
2. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்—அமைச்சர்.
3. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே—அமைச்சர்.
4. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது—அமைச்சர்.
5. திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி—தலைமை வழக்கறிஞர்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

வெள்ளிக் கிழமை 1982 ஏப்ரல் 2

பங்குனி 20 துன்மதி திருவள்ளுவர் ஆண்டு 2013

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''கற்றார்முன் கற்ற செலச்சொல்லித் தாம்கற்ற
மிக்காருள் மிக்க கொளல்''

கற்றவரின்முன், தாம் கற்றவைகளை அவருடைய மனத்தில் பதியுமாறு சொல்லி மிகுதியாகக் கற்றவரிடம் அம்மிகுதியான கல்வியை அறிந்து கொள்ள வேண்டும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

தமிழ்நாட்டில் இரால் உற்பத்தி.

* வினா எண் 718 —திரு. இ. கணேசன் மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் இரால் உற்பத்தி குறைந்து வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் மீனவர்களுக்கு இரால் உற்பத்தியில் பயிற்சி அளிக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) தமிழ்நாட்டில் இரால் உற்பத்தி குறையவில்லை. அதிகரித்து வருகிறது. கடந்த நான்கு ஆண்டுகளில் இரால் உற்பத்தியின் அளவு பின்வருமாறு ;

ஆண்டு.	இரால் உற்பத்தி (மெட்ரிக் டன்கள்)
1979–80	7,121
1980–81	12,984

(ஆ) இரால் உற்பத்தி குறையவில்லை என்றாலும், உற்பத்தியை மேலும் அதிகரிக்கும் நோக்கத்தோடு, கிராமப்புற இளைஞர்களுக்கு சுய வேலை வாய்ப்பு ஏற்படுத்திக்கொள்ளப் பயிற்சி (TRYSEM) என்னும் திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில்

6 பயிற்சி நிலையங்களில் 1,080 மாணவர்களுக்குஉவர் நீர் இரால் மீன் வளர்க்கும் முறைபற்றி பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இப்பயிற்சி ஒன்றரை மாதக்கால அளவிற்கு அளிக்கப்படுகிறது. இதுவரை 654 மாணவர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

திரு. இ. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மிகவும் நீளமான கடற்கரை உள்ளது. இரால் மீன்களும் ஏராளமாகக் கிடைக்கின்றது. இந்த இரால் மீன்களைத் தனியார் நிறுவனங்கள் வெளி நாட்டிற்கு ஏற்றுமதி செய்து வருகின்றது. இந்த ஏற்றுமதிப் பொறுப்பிற்காக கூட்டுறவு இணையம் அமைத்து அதன்மூலம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய அரசு முன்முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஏற்றுமதி செய்வதற்கு பல்வேறு நிறுவனங்கள் இருக்கின்றன. அதற்கு தனியாக இணையம் அமைக்க வேண்டும் என்றால் தனியாகத்தான் ஆலோசிக்கவேண்டும். மேலும் பிடிக்கப்படுகின்ற இரால் மீன்களின் அளவு கூட நாளுக்கு நாள் குறைகின்றது என்றும் அதை அதிகப்படுத்துகின்ற முயற்சியிலே பல மாநிலங்களும் ஈடுபடுகின்றன. ஆனால் தனி இணையம் வேண்டும் என்றால் தனியாகத்தான் ஆராய வேண்டும்,

திருமதி டி. யசோதா : தலைவர் அவர்களே, சென்னை போன்ற நகரங்களில் இரால் விற்பனைக்காகத் தனி பட்ட முதலாளிகள் முன்பணம் கொடுத்து குறைந்த விலையிலே அதை வாங்குகிறார்களே, அதைத் தடுக்க அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அது பற்றிய விவரக்குறிப்பு இல்லை. எனவே தனியாகத்தான் ஆராயவேண்டும்.

திரு ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இந்த இரால் மீன்களைப் பிடிப்பதற்கு விசைப்படகைப் பயன்படுத்துகிறார்கள். அப்படி விசைப் படகைப் பயன்படுத்துகின்றவர்கள் வலையை வேகமாக போடுவதன் காரணத்தால் முட்டைகள் எல்லாம் உடைந்து நாசமாகிவிடுவதால் அந்த இரால் மீன் உற்பத்தி கணிசமாகக் குறைந்துவிடுகின்றது என்பதை அரசு அறியுமா? இதைத் தவிர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோன்று தொழில் நுட்பத்தன்மையின் அடிப்படையிலே என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை வல்லுநர்கள்தான் தனியாக ஆராய

வேண்டும். ஆனால் இரால் மீனுக்கு அதிக கிராக்கி இருப்பதன் காரணத்தால் அதை அதிகரிப்பதற்கான முயற்சியிலே எல்லா மாநிலங்களும் முனைந்து ஈடுபட்டிருக்கின்றன. நாமும் முனைந்து ஈடுபட்டு இருக்கிறோம். உவர் நீரில் இரால் மீன் வளர்ப்பதற்காக 10 இடங்களில் மாதிரிப் பயிற்சிப் பண்ணைகள் வைத்து அதன் மூலமாக மற்றவர்களுக்கும் ஏற்பாடு செய்வதற்கான முயற்சியிலே ஈடுபட்டு வருகிறோம். நல்ல தண்ணீரிலேயே இரால் மீன் வளர்க்கலாம் என்ற அளவுக்கு இப்போது மீன்வளத் துறையினர் ஆராய்ந்து அதிலே வெற்றி கண்டிருக்கிறார்கள். செங்கற்பட்டிலே ஆராய்ச்சி நடத்தப்பட்டு ஒரு ஹெக்டேரிலே இரண்டு அறுவடை செய்யலாம் என்றும் ஆண்டு ஒன்றுக்கு 10,000 ரூபாய் கிடைக்கும் என்றும் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதைப் பரவலாக ஆக்க முயற்சி அரசு மேற்கொண்டிருக்கின்றது.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது கடற்கரையின் எல்லாப் பகுதிகளிலும் உள்ள இரால் மீன்களை ரஷ்யா, ஜப்பான் போன்ற நாடுகளின் கப்பல் வந்து பிடித்துக்கொண்டு போய்விடுகிறார்கள். அதனால்தான் அதிகமான அளவிலே இரால் மீன் குறைபாடு ஏற்படுகிறது. இதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நம் கடற்கரைப் பகுதியில் ஒரு குறிப்பிட்ட எல்லை நமக்கு இருக்கிறது, அந்த எல்லைக்குள் யாரும் நுழைய முடியாது. அங்கே நாம்தான் மீன் அரிக்கும் முயற்சியை மேற்கொள்கிறோம். அந்த எல்லைக்கு அப்பாற்பட்டு வங்காள விரிகுடாக் கடலிலோ, இந்து மகா சமுத்திரத்திலோ, அரபிக் கடலிலோ எந்த நாட்டுக் கப்பல்களும் வந்து மீன் அரிக்கலாம். ஆனால் சில சமயங்களில் நம் எல்லைக்குள் நுழையும்போது இந்தியக் கடற்படையினர் நடவடிக்கைகள் எடுக்கிறார்கள். முன்பு கூட இரண்டு மூன்று தடவை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே போதுமான பாதுகாப்பை இந்திய கப்பல் படைத் துறையினர் செய்து வருகிறார்கள்.

திரு. உ. சுப்பிரமணியன் : இராலைப் பதனிட ப்ரீஸிங் ப்ளான்ட் அரசுத் தரப்பில் ஏற்படுத்தப்பட்டு, மண்டபத்தில் ஏற்படுத்தப்பட்டு, அதை வெளி மாநிலத்தவருக்கு குத்தகைக்கு விட்டு இருப்பதால் அரசுக்கு இழப்பு ஏற்படுகிறது. ஆகவே அதை இலாபகரமாகச் செய்ய அரசுத் துறையிலேயே அதை ஏற்று நடத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோன்ற விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால் என்ன காரணத்தால் அப்படி விட வேண்டிய அவசியம் ஏற்பட்டது என்ற விளக்கத்தை அளிக்க முடியும்.

அத்தியாவசியப் பொருட்களை விநியோகிக்கும் முழுப் பொறுப்பையும் மாநில அரசே ஏற்கும் திட்டம்

*வினா எண். 719.—திரு. கு. ரமணி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சர்க்கரை, உணவு எண்ணை போன்ற பொருட்களை விநியோகிக்கும் முழுப் பொறுப்பையும் மாநில அரசுகளை ஏற்கும்படி மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் தமிழ்நாடு அரசு அதை ஏற்றுக் கொள்ளுமா?

(இ) எப்பொழுதிலிருந்து இது அமுலுக்கு வரும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) லெவி சர்க்கரை, லெவி கோதுமை, பாமோலின் ஆகியவை மத்திய அரசால் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்க தமிழ் நாட்டிற்கு மாதாமாதம் ஒதுக்கீடு செய்வதால், இப்பொருட் களை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தும் நியாய விலைக் கடைகள் மூலம் வழங்க இந்த அரசு ஏற்பாடு செய்துள்ளது.

(ஆ) மற்றும் (இ) ஏற்கனவே இந்தப் பொருட்களைப் பொறுத்த மட்டில் இந்தப் பொறுப்பை இந்த அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.

திரு. கு. ரமணி : இந்த சர்க்கரை, உணவு எண்ணெய், கோதுமை போன்ற இந்தப் பொருள்களை மொத்தமாக தமிழ்நாட்டுக்கு இவ்வளவு கொடுப்பது என்று மத்திய அரசு பொதுச் சேமிப்பிலிருந்து அவர்கள் பிரித்து விடுகிறார்கள், ஆனால் நம் தமிழ்நாட்டில் சர்க்கரை அதிகமான அளவிற்கு உற்பத்தியாகிறது. இங்கிருந்துதான் சர்க்கரை எடுத்துக் கொள்கிறார்கள். ஆகவே அந்தச் சர்க்கரையை எடுத்துக் கொள்வதில் பரிபூர்ண பொறுப்பை தமிழக அரசே ஏற்றுக் கொண்டு நடத்துவதில் என்ன சிரமம் இருக்கிறது? கோதுமையை வேறு இடத்தில் இருந்து பெற்று நமக்குத் தர வேண்டியிருக் கிறது. ஆனால் சர்க்கரை இங்கேயே உற்பத்தியாகிறது. ஆகவே நம் அரசே முழுப் பொறுப்பையும் ஏற்று அதை விநியோகிப்பதில் என்ன தவறு இருக்கிறது? அதை மத்திய அரசு ஏற்றுக்கொள்ள மாட்டார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சர்க்கரையைப் பொறுத்தவரையில் இந்தியா முழுவதும் கட்டுப்பாடு விதிக்கிற பொறுப்பினை மத்திய அரசுதான் வைத்திருக்கிறது. 65% லெவி சர்க்கரைக்கு ஏற்றுக்கொள்கிறார்கள். மீதியை அவர்கள் விருப்பப்படி விற்றுக்கொள்ளலாம் என்ற அளவிற்கு அந்தந்த ஆலைகளுக்கு விட்டுவிடுகிறார்கள். ஆகவே நாமே இங்கே உற்பத்தி செய்வதால் நாமே எடுத்துக் கொள்வதற்கில்லை. மொத்தமாக ஜெனரல் பூல் ஆக்கி எந்தெந்த இடங்களிலிருந்து

எந்தெந்த இடங்களுக்குப் போகவேண்டுமென்று ஒதுக்கீடு செய்து தருகிறார்கள். அந்த வகையில் தமிழ்நாட்டுக்கு 19,000 டன் லெவி சர்க்கரையாக தருகிறார்கள். நாம் அடிக்கடி அது போதாது என்று வலியுறுத்தி வருகிறோம். கூடுதல் தந்தால் குடும்ப அட்டைக்கு கொஞ்சம் கூடுதலாகத் தரலாம் என்று எண்ணுகிறோம். இப்போது ஒரு நபருக்கு 425 கிராம் என்று கிலோ ரூ. 3.65 என்றளவில் தந்து வருகிறோம்.

திரு. கு. ரமணி : இப்போது விநியோகிக்கப்படும் சர்க்கரை மிளகாய்த்தூள் போல் சிறிதாக விநியோகிக்கப்பட்டு வருகிறது. இதுபற்றி பல புகார்கள் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு. அந்த சர்க்கரை மிகவும்பொடி யாக இருக்கிறது. சர்க்கரை நல்ல க்ரிஸ்டல் சர்க்கரையாக இருந் தால் இதில் பாதி போட்டால் கூட போதும். எனவே பொடி சர்க்கரையாகக் கொடுப்பதால் பொது மக்களுக்கு மிகவும் கஷ்ட மாகயிருக்கிறது. அப்படிப்பட்ட பொடி சர்க்கரை தமிழ்நாட்டில் உற்பத்தியாவதில்லை. ஆகவே தமிழ்நாட்டில் உற்பத்தியாகக் கூடிய நல்ல பொருளை மக்களுக்கு நல்லமுறையில் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா? ஜெனரல் பூல் என்று வைத்திருந்தாலும் தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் நல்ல சர்க்கரையை நம் தமிழ்நாட்டிலே மக்களுக்குக் கிடைக்கும்படி மத்திய அரசை வலியுறுத்தி வாங்கிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்ற புகார் என் கவனத்திற்கு வரவில்லை. அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்குமானால் இந்த சர்க்கரை இந்த மாநிலத்திற்கு தேவையில்லை. இந்த மாநிலம் விரும்புகிற சர்க்கரையை இந்த மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று முறையீடு செய்யலாம். அதுபற்றி ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(முற்பகல் 9.10)

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுக்கு அத்தியாவசியமான பொருள்களான பருப்பு, மிளகாய் வத்தல், மல்லி, உளுந்து போன்ற பொருள்கள் உற்பத்தி செய்யக்கூடிய காலத்திலே மலிவாகவும் அவர்கள் உற்பத்தி செய்து வியாபாரிகளிடம் விற்ற பிறகு, ஒன்றுக்கு இரண்டு, அல்லது மூன்று பங்கு விலை உயர்ந்து விடுகிறது. ஆகவே, இந்த அத்தியாவசியப் பொருள்கள் அத்தனையையும் அரசாங்கமே மொத்த கொள்முதலை ஏற்று, சரியான முறையில் வருடம் பூராவும் அந்தப் பொருள்கள் மக்களுக்கு சரியான முறையிலே, மலிவான விலையிலே கிடைப்பதற்குரிய ஒரு ஏற்பாட்டை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர் களே, சாதாரணமாக கட்டுப்பாட்டுக்குள்ள, பற்றாக்குறையுள்ள முக்கியமான உணவுப் பண்டங்களை நுகர் பொருள் வாணிபக்

கழகம் மூலம் வாங்கி, நாம் நியாய விலைக் கடையின்மூலம் பகிர்ந்து கொடுக்கும் முயற்சியை மேற்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோன்ற உணவிற்குத் தேவையான வேறு சில பண்டங்களில் கட்டுப்பாடு இல்லை. இருந்தாலும், அவர்கள் கூறுவது போன்று, இருக்கின்ற தன்மையை ஆராய்ந்து கூட்டுறவுத் துறையின் மூலம் வாங்கி, அதன்மூலமாக விநியோகிக்கின்ற முறையை ஓரளவு செய்து கொண்டிருக்கிறோம். மலிவான விலையில் விற்கின்றபோது, அவைகளை வாங்கி, விலை ஏறுகின்றபோது மக்களுக்கு கட்டுப்படியாகக்கூடிய விலையில் கொடுக்கின்ற அடிப்படையில்தான் இப்போது கூட்டுறவுத் துறையிலே அவ்வாறு செய்யப்பட்டு வருகிறது. அதை இன்னும் கொஞ்சம் பரவலாக்க, அதிகமாக்க முயற்சி எடுத்துக்கொள்வது பற்றி அரசு ஆராயும்.

திரு. மு. ப. முனுசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நமக்கு 65% ஒதுக்கப்படுகின்றது என்று சொன்னார்கள். தமிழ்நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகளிலே உற்பத்தியாகக்கூடிய அத்தனை சர்க்கரை ஆலைகளிலும் 65% சர்க்கரை நமக்கு கிடைக்கும்போது, நம் மாநிலத்திற்கு எடுத்துக்கொள்வது போக, மீதமுள்ளதை வெளிநாட்டிற்கு அனுப்ப நம் அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 65% சர்க்கரை நமக்கு ஒதுக்குகிறார்கள் என்று நான் சொல்லவில்லை. ஒவ்வொரு ஆலையிலும் உற்பத்தியாகிற சர்க்கரையில் 65% அரசு கொள்முதலாக எடுத்துக் கொள்கிறது. மீதமுள்ள 35% சர்க்கரையை அவர்கள் விருப்பப்படி விற்றுக் கொள்ளலாம். 65% சர்க்கரையை இப்படி எடுத்துக்கொண்டு, ஒரு ஜெனரல் பூலில் இந்தியா முழுவதிற்கும் கணக்கிட்டு, ஒவ்வொரு மாநிலத்திற்கும் எவ்வளவு தேவை என்பதைப் பார்த்து ஆங்காங்கு கொடுக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் சர்க்கரை உற்பத்தி அதிகமாக இருந்தாலும், வேறு மாநிலங்களிலே சர்க்கரை அறவே இல்லாத நிலைமை இருக்கிறது. அந்த வகையிலே அவர்களுக்கு கொடுக்கின்றபோது, நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் அவர்கள் கணக்கிட்டு, 19,800 டன் என்று ஒதுக்கித் தருகிறார்கள். அதற்கு மேல் கேட்டாலும், ஒதுக்குவதற்கு வாய்ப்பில்லை என்று பதில் தெரிவித்திருக்கிறார்கள்.

வேலூரிலுள்ள மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தை வேறு இடத்திற்கு மாற்றும் திட்டம்.

*வினா எண் 720—திரு. சி. கோபால்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வடாற்காடு மாவட்டம், வேலூரில் தற்போது உள்ள மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் வேறு இடத்திற்கு மாற்றும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எந்த இடத்திற்கு மாற்றுவதாக உத்தேசம் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) மற்றும் (ஆ) வருவாய் நிர்வாக ஆணையாளரின் முடிவான அறிக்கை அரசுக்கு கிடைத்துள்ளது. அது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ஏ. சி. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் எவ்வளவு மதிப்பீட்டில் கட்டப்பட உள்ளது? அதற்கு எவ்வளவு ஏக்கர் தேவைப்படுகிறது? பல மாவட்ட அலுவலகங்கள் வாடகைக் கட்டிடத்தில் இருக்கின்றன. எனவே, அத்தனை அரசு அலுவலகங்களையும் ஒன்று சேர்த்து, ஒரே இடத்தில் கட்டப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட கலெக்டர் அலுவலகம் ஒரே இடத்தில் இல்லாமல், பல்வேறு இடங்களில் இருப்பது என்பது உண்மைதான். ஆனால், கோட்டையிலே அதைக் கட்ட முடியாது இந்திய தொல்பொருள் இலாகாவினர் வேலூர் கோட்டைக்குள். பல மாடிக் கட்டிடம் கட்டுவதற்கு அனுமதிக்கவில்லை. அப்படி அனுமதிக்காத காரணத்தினால், வேறு இடத்தில் கட்டுவதற்கான முயற்சியை அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, கோட்டைக்கு வெளியே கட்ட வேண்டுமென்று சென்ற ஆண்டு மானியக் கோரிக்கையின்போது அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அப்போது, இந்தப் பேரவையின் அனைத்துக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள், கோட்டைக்குள் கட்ட வேண்டுமென்று நாங்கள் ஒரு விண்ணப்பத்தை அரசுக்குத் தந்தோம். அதைப்பற்றி மாநில அரசு மத்திய அரசுக்கு எழுதியதா? கோட்டைக்குள் கட்டினால், வசதியாக இருக்கும். எனவே, கோட்டைக்குள் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, இந்தியத் தொல் பொருள் இலாகாவினர் கோட்டைக்குள்ளே அனுமதிக்க மாட்டார்கள். ஏனென்றால் கோட்டையில் இருக்கின்ற தன்மைகள் பல மாடிக் கட்டடம் கட்டுவதாலே மாறும் என்பதால் எங்கேயும் அவர்கள் அனுமதிப்பதில்லை. அதைப்போல தஞ்சாவூர் கோட்டையிலேயும் அனுமதிக்கவில்லை. பல இடங்களிலே அனுமதிக்க மாட்டார்கள். ஒரே இடத்திலே அலுவலகங்கள் இல்லாமல் கொஞ்சம் பிரிந்து இருப்பது நல்லது என்று கருதுவதால் 15 ஏக்கர் நிலப்பரப்பு நாம் எடுத்துக்கொண்டிருக்கிறோம். சத்துவாச்சேரி என்ற கிராமத்திலே டவுனுக்குள்ளே இல்லாமல் வெளியே இருந்தால் நல்லது என்று அரசு கருதிய காரணத்தால்—அது கட்டப்படும்.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சத்துவாச்சேரியிலே கட்டப்படும் என்று சொன்னது முடிவாக எடுத்த முடிவா? மாவட்ட ஆட்சித் தலைவர்

குடியிருக்கிற பங்களாவிலேயே 12 ஏக்கருக்கு மேல் இடம் இருக்கிறது. அங்கே ஏற்படுத்துவது அது மையமாகவும் பொது மக்களுக்கு வசதியாகவும் இருக்கும் என்று வேலூரிலே உள்ள வியாபாரிகள் மற்றும் மற்றவர்கள் எல்லாம் அரசுக்குத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே மாவட்ட ஆட்சித் தலைவர் பங்களாவிலேயே உள்ள இடத்திலே கட்டுவதற்கு இதை மறுபரிசீலனை செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் இருக்கிற இடத்தில் எவ்வளவு இடம் இருக்கிறது, தேவையான இடம் இருக்கிறதா என்பது தெரியவில்லை. உங்களுக்குத் தெரிவித்துக் கொள்வேன், வளர்ந்து வரும் நகரங்களில் அதிகமான இடங்களைக் கட்டாமல் டவுனுக்கு அருகிலேயே உள்ள இடங்களில் கட்டுவது மேலும் மேலும் அலுவலகங்கள் வருவதற்கும் கட்டடங்கள் வருவதற்கும் அந்த அலுவலகங்களில் பணியாற்றுகின்றவர்களுக்கு குடியிருப்புகள் கட்டுவதற்கும் ஏதுவாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள விளையாட்டு மையங்களுக்கு விளையாட்டுச் சாமான்கள் வழங்கும் திட்டம்

*வினா எண் 721—திரு வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியங்களிலும் உள்ள விளையாட்டு மையங்களுக்கு விளையாட்டுச் சாமான்கள் வழங்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒன்று என விளையாட்டு மையங்கள் ஏற்படுத்த அரசு அனுமதி வழங்கியுள்ளது. அவ்வாறு ஏற்படுத்தப்படும் விளையாட்டு மையங்களுக்கு விளையாட்டுச் சாமான்கள் வழங்க ஆண்டொன்றுக்கு ரூ. 600/- மானியமாக அரசு வழங்குகிறது. தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஊரக விளையாட்டு மையங்களுக்கு ரூ. 600/- விளையாட்டு சாமான்கள் வாங்குவதற்கென சென்ற ஆண்டும் இந்த ஆண்டும் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது.

திரு. க. பாலசுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் 600 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். 600 ரூபாயை எந்த வகையில் செலவு செய்வது என்றும் யார் மூலமாகச் செலவு செய்வது என்றும் அரசு விதிமுறைகள் வைத்து இருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, ஆங்காங்கே எந்த விளையாட்டுக்கு முக்கியத்துவம் தந்து விளையாடுகிறார்களோ அதற்குத் தேவையான சாமான்களை வாங்குவதற்காக இந்தப் பணத்தைப் பயன்படுத்த வேண்டும். அது ஒன்றிய ஆணையாளர் மூலமாகத் தரப்படுகிறது.

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது 600 ரூபாய் வழங்கப்படுவதாகச் சொன்னார்கள். தற்கால விலையேற்றத்தின் காரணமாக அது போதுமானதாக இருக்குமா? ஆகவே அதை உயர்த்த அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா? அதோடு விளையாட்டு அரங்கங்கள் இல்லாத ஒன்றியங்களிலே விளையாட்டு அரங்கங்கள் அமைப்பதற்கு தொகையை கொடுத்து அவைகளை உருவாக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, 600 ரூபாயை வாங்கி அவர்கள் ஒழுங்காக செலவு செய்தால் போதும் என்ற நிலையில் நாம் வைத்திருக்கிறோம். பணம் போதுமா போதாதா என்பது பிரச்சினையில்லை. எந்த அளவுக்கு அவர்கள் ஆர்வத்தோடு அதைப் பயன்படுத்துகிறார்கள். என்பதுதான் முக்கியம். இதை பொழுதுபோக்கு மன்றங்களாக இருக்கவேண்டுமென்று நாம் ஆரம்பிக்கவில்லை. கல்லூரிக்கு அல்லது பள்ளிக்கு வராத இளைஞர்கள் கிராமங்களிலே உள்ளவர்களுடைய பல்வேறு விளையாட்டு ஆற்றலை வளர்த்துக் கொள்வதற்காக அவர்களையெல்லாம் ஊக்குவிப்பதற்காக நாம் இந்த ஊரக விளையாட்டு மையங்களை ஏற்பாடு செய்திருக்கிறோம். அதற்கு விளையாட்டு சாமான்கள் வாங்குவதற்காக 600 ரூபாய் கொடுக்கிறோம், அதோடு பக்கத்திலே உள்ள உயர்நிலைப் பள்ளியிலிருந்து ஒரு ஆசிரியர் அங்கே சென்று பயிற்சி வழங்குவதற்காக அவருக்கு மாதம் 50 ரூபாய் வீதம் வருடத்திற்கு 600 ரூபாய் என்றும் கொடுக்கிறோம். ஆகவே 1,200 ரூபாய் நாம் இதற்காக செலவு செய்து வருகிறோம். இதனுடைய நோக்கம் கிராமங்களிலே உள்ள இளைஞர்கள் பள்ளிக்கூடம், கல்லூரிக்குச் சென்று படிக்காதவர்கள் அவர்களுடைய விளையாட்டு ஆற்றலை வளர்த்துக் கொள்வதற்கு அவர்களை ஊக்குவிப்பதற்கு வாய்ப்பளிக்கின்ற மன்றமாகும்.

திரு. கோவைத்தம்பி : தலைவர் அவர்களே, மத்திய அரசு நேரு யுவ கேந்திரா என்ற அடிப்படையில் மாவட்ட வாரியாக ஒரு அதிகாரியை நியமித்து இப்படிப்பட்ட கிராம விளையாட்டுக்களை ஊக்குவித்து வருவது அமைச்சர் அவர்களுடைய பார்வைக்கு வந்ததா? மத்திய அரசு அதற்காக ஏதாவது தனி நிதி ஒதுக்கியுள்ளதா? இன்று உள்ள விளையாட்டு மையங்களைத் தவிர மைய அரசு ஏற்பாடு செய்வதைப்போன்று மாவட்ட அளவில் அதற்கான தனி அதிகாரியை நியமிக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

(முற்பகல் 9.20)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, நேரு யுவ கேந்திரா என்பது இளைஞர்களிடையே இருக்கிற ஆர்வத்தை வளர்ப்பதற்கு இருக்கிற ஒரு இயக்கமாகும். அதிலேயும் எனக்கு தொடர்பு இருக்கிறது. அதிலே தனி கேள்வி போட்டால் அதுபற்றி சொல்லலாம். ஊரக விளையாட்டு

மையம் என்பது விளையாட்டு ஆற்றல் உள்ளவர்களுக்கு பயிற்சி தந்து, கோச்சிங் அன்ட் ட்ரெயினிங் அந்த ஆற்றலை வளர்க்கிற மையங்கள் என்பது மிக முக்கியமானது. ஆக விளையாடுவதற்கு வாய்ப்பு தருவது என்பது வேறு விளையாட்டு ஆற்றலுக்கான தக்க பயிற்சி தந்து அந்த ஆற்றலை வளர்ப்பதற்கு மாநில அளவிலே, தேசிய அளவிலே, சர்வதேச அளவிலே போட்டிகளிலே கலக்கச் செய்வது என்பது வேறு, அந்தப் பணியை இந்த ஊராட்சி ஒன்றியத்திலே அமைக்கப்படுகிற இந்த மையங்கள் செய்யவிருக்கிறது. இதற்கு மாவட்ட அளவிலே அலுவலகம் உண்டு. மாநில அளவிலே தான் விளையாட்டுத் துறை என்று புதிய இயக்குநரகத்தையே நாம் தோற்றுவித்து இருக்கிறோம்.

திரு. என். பழனிவேல். தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் விளையாட்டு சாமான்கள் வாங்குவதற்கு 600/- ரூபாய் வழங்கப்படுவதாகச் சொன்னார்கள். இன்றைக்கு எந்த ஊராட்சி ஒன்றியத்திலும் 600/- ரூபாய் விளையாட்டு சாமான்கள் வாங்கி கிராமங்களிலே இருக்கக்கூடிய இளைஞர்கள் பயிற்சி பெற்று வருவதாக தெரியவில்லை, அவைகளுடைய விவரங்கள், எங்கெங்கு கொடுக்கப்படுகிறது, சென்ற ஆண்டு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ஜெ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, அப்படியென்றால் இந்த கேள்வியை கேட்ட திரு பாலசிருஷ்ணன் அவர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்காவது மாண்புமிகு உறுப்பினர் பழனிவேல் அவர்களுக்கு தெரிந்துக் கொள்ளக்கூடிய வாய்ப்புக் கிடைத்திருக்கும். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு மையம் அமைக்க வேண்டுமென்று சொல்கிறபோது நான் சொன்ன நோக்கத்தோடு அவர்கள் அமைக்க வேண்டும். இதிலே ஒரு தவறு ஏற்பட்டுவிடக்கூடும்; சாதாரணமாக இருக்கிற பொழுது போக்கு மன்றங்களைப் போல இதையும் எண்ணிவிடக் கூடாது. இது பயிற்சித்தரக்கூடிய இடம். அதற்காகதான் பக்கத்திலே இருக்கிற ஒரு உயர்நிலைப் பள்ளியிலிருந்து உடல் பயிற்சி ஆசிரியரை இன்றைக்குப் பயிற்சியாளராகப் போட்டு அந்த ஏற்பாட்டை செய்திருக்கிறோம். ஆகவே. அங்கே இருக்கிற இளைஞர்கள் மையத்திலே சேர்ந்து, காலையிலும், மாலையிலும் ஒரு மணி நேரம் பயிற்சி பெற்றாலும் கூட வாலிபால் என்று எடுத்துக் கொண்டால், எப்படி ஆடுவது, அதிலே இருக்கிற டெக்னிக்ஸ் என்ன என்றெல்லாம் எடுத்துச் சொல்லித் தரக்கூடிய நிலை இருக்கிறது. எம்.எல்.ஏ.க்களுக்குத் தெரியாமல் இருக்கிறது என்றால் அதற்காக நான் மிகவும் வருத்தப்படுகிறேன். ஊராட்சி ஒன்றிய ஆணையர் உறுப்பினரைக் கலந்து இதுபற்றி சொல்லியிருக்க வேண்டும். அவருடைய ஒத்துழைப்பைப் பெற்றிருக்க வேண்டும். பெற்றால்தான் இதற்கு தகுந்த இடத்தை பெறமுடியும். பொதுமக்களுடைய ஆதரவைப் பெற முடியும், ஆகவே ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் இது தொடர்பாக எம்.எல்.ஏ.க்களை கலந்து நல்ல முறையிலே செயல்

பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுமாறு அதிகாரிகளுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு மையம் என்பது, இப்போது ஆரம்ப நிலையிலே தானே தவிர, நிறைய மையங்களை ஆரம்பிக்க வேண்டுமென்ற ஆசை இந்த அரசுக்கு இருக்கிறது.

ஜனதா மற்றும் மலிவு விலைத்துணிகளின் விலையை உயர்த்தும் திட்டம்,

*வினா எண். 722 —திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) ஜனதா மற்றும் மலிவு விலைத்துணிகள் விலைகளை உயர்த்தும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது?

மாண்புமிகு திரு. ஜெ. அரங்கநாயகம்: (அ) ஜனதா மற்றும் மலிவு விலை துணிகளின் விலை 1-7-1981 முதல் அதிகரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

(ஆ) ஜனதா (மலிவு) கைத்தறித்துணி ரகங்களுக்கான விற்பனை விலை, மத்திய அரசாங்கத்தினால் 1-7-1981 முதல் அதற்கு முன் நிலவியிருந்த விலையில் 15% அதிகரிக்கப்பட்டுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, தற்போது நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசு ஜனதா துணிக்கு கொடுக்கிற விலை கட்டுப்படியாக வில்லை. 2—க்கு 60 நூலிலே தயாரிக்கிற வேஷ்டிக்கு அரசு 1 ½ ரூபாய்தான் கொடுத்து வருகிறது, ஆனால் இதன் உற்பத்தி செலவு ரூபாய் 10·60 ஆகிறது இந்த அளவிலே 40—க்கு 40 வேஷ்டிக்கு அரசு 14/— ரூபாய் கொடுத்து வருகிறது. இதன் உற்பத்தி செலவு ரூபாய் 13.80 ஆகிறது இதனால் நெசவாளிகளுக்கு கூலி கொடுக்க முடியாமல் சங்கங்கள் திணறுகிறார்கள். ஆகவே விலையை உயர்த்திக் கொடுகக அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜெ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, கூலி உயரும்போது அல்லது மூலப்பொருள் விலை உயரும்போது உற்பத்தியாகிற பொருள்களுக்கு விலையை அதிகரிக்க வேண்டிய ஒரு நிலைமை எந்த ஸ்தாபனத்திற்கும் ஏற்படும். அந்த அடிப்படையிலே 1981 லே 15 சதவீதம் அதிகரித்து இருக்கிறார்கள். மேலும் தேவையானால் அந்த நிலைமைகளுக்கேற்ப அரசு பரிசிலிக்கும்.

திரு இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, ஜனதா ரக துணிகளுக்கு மத்திய அரசு தருகிற உதவித்தொகை காலா காலத்தில் மத்திய அரசு கொடுக்காததால் கோ-ஆப்டெக்ஸ், கூட்டுறவுச் சங்கங்களிடம் கொள்முதல் செய்யும் துணிகளுக்கு உடனுக்குடன் பணம் பட்டுவாடா செய்வதில்லை என்பது உண்மையா? இந்த கால தாமதத்தை தவிர்க்கும்படி மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1982 ஏப்ரல் 2

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, நாம் அவர்களோடு தொடர்பு கொண்டு வற்புறுத்தி அதை பெற்று கோ–ஆப்டெக்ஸ்க்கு தந்து வருகிறோம்.

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு தலைவர் அவர்களே, ணிமணி விலைகள் மற்ற சாதரண துணிகளின் விலைகள் அதிகமாகி கொண்டிருப்பதால்தான் ஜனங்களை அது பாதிக்காமல் இருக்க ஓரளவுக்காவது. கொஞ்சமாவது, மலிவாகக் கிடைக்கத்தான் ஜனதா ஸ்கீமே வந்திருக்கிறது. அப்படி இருக்கும்போது. ஜனதா துணியினுடைய விலையை ஏற்றுவது, அதுவும் 15% ஏற்றுவது என்பது அந்த ஸ்கீமுடைய நோக்கத்தையே டிஃபீட் பண்ணுவதாக இருக்கிறது. மத்திய அரசாங்கம் டெக்ஸ்டைல் மாக்னெட்ஸ் பிரஷருக்கு இயங்கித்தான் இப்படி ஸ்கீமுடைய பர்ப்பஸ் டிஃபீட் ஆகக்கூடிய முறையிலே விலையை ஏற்றுகிற பொழுது, மாநில அரசு சாதரண மக்களுடைய இந்த நிலையை அறிந்து விலையை ஏற்றுவது தப்பு என்று சொல்லி, தங்களுடைய குறிப்போ, ஆட்சேபனையோ மத்திய அரசுக்குத் தெரிவித்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவரவர்களே, மலிவு விலை என்பது மார்க்கெட்டிலே விற்கின்ற துணிகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இது மலிவாக இருக்க வேண்டுமென்பதுதான தவிர, குறிப்பிட்ட ஒரு விலையை நாம் நிர்ணயித்துவிட்டு. சதா காலமும் அந்த விலைதான் இருக்க வேண்டுமென்று நாம் வாதாட முடியாது. ஆகவே, அந்தந்தச் சமயத்திற்கு ஏற்ற வகையில் விலையை உயர்த்த வேண்டிய நிலை ஏற்படுமானால் விலையை உயர்த்தித்தான் ஆகவேண்டும். இல்லையென்றால், அது ஒரு தவறான நிலைமைக்கு போகும். சாதாரணமாக தொழிலை வியாபார ரீதியாக அமைக்கக்கூடிய நன்மையிலே அது அமையாது.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்கப் பேரவைத் தலைவர் அவர்களே, மலிவு விலையிலே ஏழை நடுத்தர மக்களுக்குத் துணி வழங்குகின்ற இந்தத் திட்டம் மத்திய அரசாலே கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டம் மிக அருமையான திட்டம். ஆனால் கூட்டுறவுச் சங்கங்களிலே இந்த மலிவு விலை துணிகளை மக்களுக்கு வழங்கும் நேரத்திலே அதிலே பணியாற்றுகிறவர்களுககும் பொறுப்பிலே இருப்பவர்களுக்கும் துஷ்பிரயோகம் செய்கின்ற காரணத்தாலே அது யாருக்கும் போய் சேரவேண்டுமோ அங்கு போய்ச் சேர முடியாத நிலைமையிருக்கிறது. ஆகவே, இனி வருகின்ற காலங்களிலே தகுதியுள்ளவர்களுக்கு, எந்தவிதமான புகார்களுக்கு இடம் அளிக்காத வகையில் விநியோகிக்க அரசு தனி சிறப்பு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட புகார்கள் ஏதும் இதுவரையில் வரவில்லை.

1982 ஏப்ரல் 2]

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஜனதா இரகங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட விலை பல நேரங்களில் உற்பத்திச் செலவைவிடக் குறைவாக இருக்கிற சூழ்நிலை இருப்பது அரசுக்குத் தெரியுமா? அதுபோன்ற காரணங்களால் அந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நஷ்டம் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. ஏனவே ஜனதா இரகங்கள் விலையை உயர்த்த அரசு மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே. இப்படி நாம் விலையை ஏற்ற வேண்டிய சமயத்தில் ஏற்றாமல் இருப்போமானால் உற்பத்தி செய்ய வேண்டியவர்கள் உற்பத்தி செய்யாமல் போகக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிடும். ஆகவேதான் 1981-லே அவர்கள் பரிசீலனை செய்து 15% விலையை உயர்த்தியிருக்கிறார்கள். ஆனால், அதைப்பற்றி இப்பொழுது என்னிடத்தில் எந்தவிதமான கோரிக்கையும் வரவில்லை, வந்தால் அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இது மத்திய அரசு அறிவித்த அருமையான திட்டம் என்று சொன்னார்கள். இந்த அருமையான திட்டத்திற்கு—குறைந்த விலையிலே துணிகளை விற்பதற்கு—மத்திய அரசு ஏதாவது மானிய உதவித் தொகைகளை அளித்து வந்ததா? அது மட்டுமல்லாமல், 1-7–1981 முதல் 15% உயர்த்தியதன் காரணமாக, சாதாரணமாக, கிராமப்புறங்களிலிருக்கும் ஏழைகள் ரூ.12—க்கு வாங்கிய சேலையை ரூ.14—க்கு வாங்க வேண்டியிருக்கிறது. ஏழைகள் எல்லாம் ஜனதா சேலையும், ஜனதா வேட்டியும்தான் வாங்கினார்கள். ஆகவே, இந்த விலை உயர்வைக் கைவிட்டு, மலிவான விலையிலே ஏழைகளுக்குத் துணிகள் தொடர்ந்து கிடைக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பதோடு, இதற்குரிய உதவித் தொகைகளை மத்திய அரசிடம் வற்புறுத்தி பெறுவதற்கு வேண்டிய முயற்சியை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மத்திய அரசு தனியே மானியம் தந்து வருகிறது. அந்த மானியத் தொகை வீதம் தற்போது உயர்த்தப்பட்டு அமுலாக்கப்பட்டு வருகிறது. 40–ஆம் நெம்பர் நூல்வரைத் தயாரிக்கும் ஜனதா இரக துணிக்கு உற்பத்தியில் 1 சதுர மீட்டருக்கு 1.25 பைசாவாக இருந்தது. ரூ.1.50 பைசாவாக உயர்த்தப்பட்டுள்ளது. 40-ஆம் நம்பர் நூலுக்கு மேற்பட்டுள்ளவைகளுக்கு ஒரு சதுர மீட்டருக்கு 50 பைசா வழகங்ப்படுகிறது. தவிர, கைத்தறி ஜனதா இரகங்களின் விற்பனை விலையையும் இந்த அடிப்படையிலேதான் 15% அவர்கள் உயர்த்தியிருக்கிறார்கள். மற்றபடி ஏழைகளுககுத் துணி கிடைக்கச் செய்ய வேண்டுமென்ற நோக்கத்திலேதான் இந்த

மலிவு விலையிலே அல்லது ஜனதா இரகங்களைத் தயார் செய்கின்ற இந்தத் திட்டத்தைப் புகுத்தியிருக்கிறோம். விலையை நாம் உயர்த்தவே கூடாது என்கிற அளவுக்கு வருமேயானால் உற்பத்தி செய்யக்கூடிய நிலைமை தடைபடக்கூடிய சூழ்நிலை தான் ஏற்படும்.

உதகமண்டலத்தில் விளையாட்டு அரங்கம் அமைத்தல்

* வினா எண். 723—திரு. கே. உச்சி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட கேள்விகளுக்கு விடையளிப்பாரா:—

(அ) நீலகிரி மாவட்டம் உதகமண்டலத்தில் ஒரு ஸ்டேடியம் அமைக்கும் உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(ஆ) நீலகிரி மாவட்டத்திலுள்ள 'பீரிக்ஸ்' பள்ளி (BREEKS SCHOOL) மைதானத்தில் ரூ. 6,00,000 பொருட்செலவில் விளையாட்டரங்கமொன்று கட்டுவதற்கான கருத்துரு அரசின் பரிசிலனையில் உள்ளது முதற்கட்டமாக இதற்கான திட்டம் மற்றும் மதிப்பீடு Pa s a d Estimatel கேட்கப்பட்டுள்ளது. வந்த பின்னர் ஸ்டேடியம் அமைக்க தகுந்த மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

(முற்பகல் 9.30)

திரு. கே. உச்சி: தலைவரவர்களே: அந்தத் திட்டத்தைப் பற்றிக் கடந்த ஓராண்டுக் காலமாக நீலகிரி மாவட்ட அபி விருத்தி மன்றக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு அந்த இடங் களைப் பெறுவதில் மிகவும் சிரமம் ஏற்பட்டுப் பெற்றிருக் கிறார்கள். எனவே, இதை உடனடியாகச் செயல்படுத்த இந்த ஆண்டிலேயே துவக்குவதற்கு உத்தேசிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவரவர் களே, இப்பொழுது பிளான்ஸ் அண்ட் எஸ்டிமேட்ஸ் அதாவது திட்டம் மற்றும் மதிப்பீடு வரவில்லை என்ற குறிப்புதான் இருக் கிறது. வந்தவுடன் அதைப்பற்றிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. கல்லன்: மாண்புமிகு தலைவரவர்களே, கட்டப் பட இருக்கும் இந்த ஸ்டேடியம் எந்தெந்த விளையாட்டு களுக்குப் பயன்படுத்தப்படும் என்பதை அமைச்சரவர்கள் அறி விப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர வர்களே, விளையாட்டரங்கத்தைக் கட்டுகிறோம். அதில் என் னென்ன விளையாட முடியுமோ அதற்கு அந்த அனுமதியைத் தருவார்கள். அதைப்பற்றி இப்பொழுது ஒன்றும் விவரம் இல்லை.

நீதிமன்றங்களில் முடிவுறாமல் உள்ள வழக்குகள்.

* வினா எண். 724 திரு. என். வரதராஜன்: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா?

(அ) தமிழ்நாட்டில் உயர்நீதி மன்றத்திலும் மாவட்ட நீதி மன்றங்களிலும் பைசலாகாமல் இருக்கும் வழக்குகள் எத்தனை?

(ஆ) வழக்குகள் விரைவில் பைசலாகாததற்கான காரணம் என்ன?

(இ) வழக்கு விசாரணையை விரைவு படுத்த அரசு எடுத் துள்ள நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) 31-12,81 ந்தேதி நிலவரப்படி உயர்நீதிமன்றத்தில் நிலுவையாக உள்ள குற்றவியல் மற்றும் உரிமையியல் வழக்குகளின் எண்ணிக்கை முறையே 6173ம் 64,691ம் ஆகும். மாவட்ட நீதிமன்றங்களில் நிலுவையாக உள்ள உரிமையியல் மற்றுல் குற்றவியல் வழக்குகளின் எண்ணிக்கை முறையே 7,026, 3,725 ஆகும்.

(ஆ) வழக்குகளில் தீர்ப்பு அளிக்கும் முன் எல்லா சம்பந்தப் பட்ட எல்லா தரப்பினருக்கும் போதிய சந்தர்ப்பமும், சட்டப் பூர்வமான எல்லா உரிமைகளும் வழங்க வேண்டியுள்ளதாலும், எல்லா நடைமுறைத் தேவைகளும் கடைபிடிக்க சில காலம் வேண்டியிருப்பதாலும், வழக்குகளில் சம்பந்தப்பட்ட வழக்கறி ஞர்கள் சில சமயங்களில் வாதாடத் தயாராக இல்லாமையா லும், சில இடங்களில் வழக்குகளின் எண்ணிக்கை அங்குள்ள நீதிபதிகளின் பொறுப்புக்கு அதிகமாகி விடுவதாலும் நிலுவை ஏற்படுகிறது.

(இ) நிலை நிலைக்கேற்ப கூடுதலாக நீதிமன்றங்கள் அவ்வப் போது அமைக்கப்பட்டு நிலுவையாக உள்ள வழக்குகளுக்குத் தீர்வுக்காண அரசு வழிவகை செய்கிறது. மேலும் உயர்நீதி மன்றமும் எல்லா நீதிபதிகளுக்கு வழக்கு நிலுவையைக் குறைக்க தீவிர நடவடிக்கைகள் எடுக்குமாறு சுற்றறிக்கை அனுப்பியுள்ளது.

திரு. தி. க. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, நீதிமன்றங்களில் தேங்கிக் கிடக்கும் வழக்குகளுக்கு, காவல்துறையினரால் போடப்படுகின்ற முதல் சார்ஜ் ஷீட் கால தாமதமாக இருப்பதால் மாண்புமிகு அமைச்சரவர்கள் அதையும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் போடுவதற்கு ஆவன செய்வார் களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எஃப் ஐ. ஆர். தாக்கல் செய்த பிறகு இன் வெஸ்டிகேஷன் தொடர்ந்து சார்ஜ் ஷீட் அதையொட்டித் தாக்கல்

செய்யப் பல இடங்களில் தாமதம் ஏற்படுவதாக அரசின் கவனத்திற்கு வந்து, அதைத் தடுக்க வேண்டுமென்று காவல்துறையினருக்குத் தக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நில ஆர்ஜிதம் சம்பந்தப்பட்ட வழக்குகள் அதாவது ஏழை எளிய மக்களுக்கும், அரிசனங்களுக்கும் வீடு கட்டித் தருவதற்காக அரசு நில ஆர்ஜிதம் செய்த வழக்குகள், இன்னும் மற்றச் சமுதாய நலப் பணிகள் என்று சாலைகள் அமைக்க ஆர்ஜிதம் செய்கின்ற அப்படிப்பட்ட வழக்குகள் பல்வேறு இடங்களில் தேங்கியிருக்கின்றன. ஆகவே, அந்த வழக்குகளுக்கு முன்னுரிமை அளித்து குறிப்பிட்டக் காலத்திற்குள் தீர்க்கப்பட வேண்டுமென்று அரசு அறிவுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வழக்குகள் வரிசைக்கிரமமாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன, தாக்கல் செய்யப்பட்ட தேதியிலிருந்து. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதைப் போல சமுதாயப் பிரச்சினைகள் உள்ளடங்கிய வழக்குகளைப் பொறுத்தவரையில் முன்னுரிமை கொடுத்து எடுக்க வேண்டுமென்றால், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளைத் தடுப்பதற்காகத் தனியாக 4 நீதிமன்றங்களை நிறுவுவதற்கு அரசு முடிவு செய்திருக்கின்றது. எனவே, அந்த அடிப்படையில் அந்தப் பிரச்னையை அரசு அணுகி வருகிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன ஆலோசனையை அரசு பரிசீலிக்கும்.

திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நீதிமன்றங்களைப் பொறுத்தவரையில் கிரிமினல் கேசஸ்களுக்குப் பப்ளிக் ப்ராசிக்யூட்டர்கள் போதுமான அளவிற்குப் போடப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. அதைப்போன்று உயர்நீதிமன்றத்தில் போதுமான அளவிற்கு ஹைகோர்ட்ஜட்ஜ்கள் நியமிக்கப்பட்டுள்ளார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புகு பேரவைத் தலைவரவர்களே, பப்ளிக் ப்ராஸிகியூட்டர்களைப் பொறுத்தவரைக்கும் கடந்த கால வரலாற்றிலே இல்லாத அளவிற்குத் தற்போது தான் 108 அதிகப்படியான கூடுதல் அசிஸ்டென்ட் பப்ளிக் ப்ராஸிகியூட்டர்களை நியமிக்க அரசு உத்தரவிட்டிருக்கிறது என்பதனை என்னுடைய மானியக் கோரிக்கையிலே நான் சொன்னேன் அது மட்டுமல்லாமல் மதுவிலக்குக் குற்றங்களை விரைவிலே விசாரித்து தீர்ப்பதற்காக 21 நீதிமன்றங்களையும் அமைத்து அதற்காகத் தனியே 21 ஏ.பி.பி.க்களும் போடப்பட்டிருக்கின்றன.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இழைக்கப்படுகின்ற அநீதிகள் சம்பந்தமாக 4 நீதிமன்றங்கள் தனியாக அமைக்கப்பட்டு அதற்காகவும், ஏ.பி. போட்டு அந்த வழக்குகள் விரைவில் முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதைப் பொறுத்த வரையிலும் மற்ற எந்தக் காலத்திலும் இல்லாத அளவுக்கு துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, சென்னை உயர்நீதி மன்றத்திலே பல்வேறு பொருள்களின் கீழ் 'ரிட் மனு' தாக்கல் பண்ணக்கூடிய நிலையில் தினமும் காலை போதாது என்று மாலை வரையிலும் இந்த 'ரிட் மனுக்கள்' அட்மிஷன் ஆகின்றன. ஆகவே பொது முக்கியத்துவம் வாய்ந்த வழக்குகள் சம்பந்தமாக தற்காலிகமாக ஸ்டே கொடுக்கக்கூடிய அந்த ரிட் மனுக்கள் கூட, ஒரு ஆண்டு, $1\frac{1}{2}$ ஆண்டு காலமாக பைசலாகமல் இருக்கின்றன. அதைத் துரிதப்படுத்த வேறொரு 'ரிட் ஜட்ஜ்' சென்னை உயர்நீதி மன்றத்திற்கு நியமிக்க அரசு யோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன். One more additional Judge for the disposal of Writ Petitions.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரிட் பெட்டிஷன்களை பொறுத்தவரையிலும் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால், ஒரு குறிப்பிட்ட பிரச்னையைப் பொறுத்த அளவில் அதிகமான ரிட் மனுக்கள் வருகிறபோது, அவ்வப்போது மற்ற நீதிபதிகளுக்கும் அது பிரித்து தரப்படுகிறது. உயர்நீதி மன்றத்திலே இன்னும் சில நீதிபதிகளின் பதவிகள் பூர்த்தி செய்யவேண்டிய நிலை இருக்கின்றது. அது விரைவில் பூர்த்தி செய்யப்பட இருக்கின்றது. அப்போது இந்தப் பிரச்னை முழுமையாக தீர்ந்துவிடும்.

திரு. மு. அப்பாதுரை: தலைவர் அவர்களே, வழக்குமன்றங்களில் ஏழை எளிய மக்களிடம் பணம் பெற்றுக் கொண்டு, தொடர்ந்து வழக்குகளில் ஆஜராகாமல் உள்ள வழக்கறிஞர்கள் மீது அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, நீதிமன்றங்களில் வழக்குகள் ஒரு குறிப்பிட்ட தேதிக்குப் போடப்படுகிறது. வழக்கறிஞர்கள் வராமல் இருந்தால் ஒரு வாய்தா கொடுக்கப்படுகிறது இரண்டு வாய்தாக்கள் கொடுக்கப்படுகிறது. அதிகமாகப் போனால் 3 வாய்தாக்கள் கொடுக்கப்படுகிறது அதற்குப் பிறகு Judges themselves will pull up those Advocates. இத்தகைய வழக்கறிஞர்களை விட்டுவிட்டு, நல்ல வழக்கறிஞர்களைத் தேர்ந்தெடுத்து கிளையன்ட்ஸ்கள் ஒரு முடிவுக்கு வர வேண்டும் என்பது என்னுடைய விருப்பம்.

[1982 ஏப்ரல் 2

கிராம வீட்டுவசதி திட்டத்திற்கு ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து கடன் பெறும் திட்டம்.

*வினா எண் —725. திரு. செ. செம்மலை: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்தின் மூலம் கிராம வீட்டுவசதி திட்டத்திற்கு கடன் வழங்க ஆயுள் இன்சூரன்ஸ் காப்பகம் மறுப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அரசு அதன்மேல் எடுத்துவரும் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(ஆ) கிராம வீட்டுவசதி திட்டத்திற்கு நேரிடையாக நிதியுதவி அளிக்க 1980-81-ம் ஆண்டில் ஆயுள் காப்பீட்டுக் கழகம் மறுத்துவிட்டது. ஆகவே, இத்திட்டத்திற்குத் தேவையான நிதிவசதி தற்போது வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்தின் உதவியுடனும் மாநில அரசு நிதி ஒதுக்கீட்டின் மூலமும் பெறப்படுகிறது. மேலும் குறிப்பிட்ட அளவிற்கு பொது காப்புறுதிக் கழகம் மற்றும் ஆயுள் காப்பீட்டுக் கழகக் கடன் மூலமாக கிராம வீட்டுவசதித் திட்டத்திற்கு, மத்திய அரசாங்கம் நிதி ஒதுக்கப்படுகிறது.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆயுள் காப்பீட்டுக் கழகம் இந்தத் திட்டத்திற்கு கடன் கொடுக்க மறுத்தாலும், மற்ற நிறுவனங்களிடம் இருந்து கடன் பெற்று இந்தத் திட்டம் செயல்பட்டு வருகின்றது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்தத் திட்டத்தின் கீழ் 1981-82 ஆம் ஆண்டில் எவ்வளவு வீடுகள் கட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதற்குஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, 1981-22 ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்படவேண்டிய வீடுகள் 40 ஆயிரம். அதற்குத் தேவைப்படும் நிதி ரூபாய் 12 கோடி. இதனை அரசு மற்றும் இதர நிதி நிறுவனங்களிடம் இருந்து பெற்று மேற்படி திட்டம் செயல்படுத்தப்படும். ஆயுள் காப்பீட்டுக் கழகம் தனியாக நிதி உதவிஅளிக்க மறுப்புத் தெரிவித்த போதிலும், கிராமப் பகுதிகளில் 2 லட்சம் வீடுகள் கட்டும் திட்டத்தை அரசு தங்குதடையின்றி நிறைவேற்றிவிடும்.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தக் காப்பீட்டுக் கழகம் கடன் வழங்குவதற்கும், மற்ற நிறுவனங்கள் கடன் வழங்குவதற்கும் உள்ள வட்டி விகிதத்தில் ஏதாவது வித்தியாசம் இருக்கின்றதா? அப்படிக் காப்பீட்டுக் கழகம் கொடுக்கும் வட்டிவிகிதம் குறைவாக இருந்தால், மீண்டும் அதைப் பரிசீலித்து அங்கே இருந்து கடன் பெற அரசு முயற்சிக்குமா?

982 ஏப்ரல் 2]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, ஆயுள் காப்பீட்டுக் கழகம் தருவது 10½%. மற்றவைகளைப் பற்றிய குறிப்பு என்னிடத்திலே இல்லை. நாம் போதுமான நிதியை மற்ற நிறுவனங்களிலே இருந்து பெறமுடியும், என்ற காரணத்தால் மீண்டும் காப்பீட்டுக் கழகத்திடம்போய் கோரிக்கை வைத்து அதற்காக நேரத்தை செலவு செய்யவேண்டிய தேவை இல்லை என்று இப்போது கருதுகிறேன்.

தீப்பெட்டித் தொழிலில் சிறுவர்களை பயன்படுத்துவதைத் தடை செய்யும் திட்டம்.

*வினா எண் 726— திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தீப்பெட்டித் தொழிலில் சிறுவர்களை பயன்படுத்துவதை தடுக்க (Child Labour) அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: சிறார்களை வேலைக்கு அமர்த்துவதை தடுக்குமுகமாக கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அ. இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரின் தலைமையில் கூட்டப்பட்ட தொழில் உரிமையாளர்கள் கூட்டத்தில் 10 வயதுக்கு குறைவான சிறார்களை 2.10.76 முதல் வேலைக்கு அமர்த்துவதில்லையென்றும், பணிக்கமர்த்தப்படும் சிறாரைப் பற்றிய பட்டியலை தீப்பெட்டித் தொழிற்சாலை சமர்ப்பிக்கும் என்றும், 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம், 1938 ஆம் ஆண்டு சிறார்களை வேலைக்கு அமர்த்தும் சட்டம் ஆகியவற்றின் கீழ் விரிவான சோதனைகளை தொழிற்சாலை ஆய்வாளர் நடத்துவர் என்றும், முரண்பாடுகள் இருப்பின் கண்டிப்பான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் முடிவு செய்யப்பட்டது.

ஆ. சிவகாசி நகராட்சி எல்லைக்கு வெளியே 5 கிலோமீட்டர் தொலைவிற்குள் புதிதாக தீப்பெட்டி, பட்டாசுத் தொழிற்சாலைகள் அமைக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இ. சிறார் வேலை பிரச்னைகள் பற்றி பரிந்துரைகள் செய்ய இராமநாதபுர மாவட்ட ஆட்சியர் தலைமையில் ஒரு ஆலோசனைக் குழுவும் தொழிலாளர் நல அமைச்சர் தலைமையில் மாநில மட்டத்தில் ஒரு ஆலோசனைக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளன.

ஈ. நிர்ணயிக்கப்பட்ட குறுமக்கூலியில் பாதியளவு மட்டுமே சிறார்களுக்கு அளிக்கப்படவேண்டும் எனும் விதியை நீக்கலாமென அரசு கருதுகிறது. தொழிலாளர் நல ஆணையர் இ[illegible] பரி சீலித்து வருகிறார்.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இங்கே பதிலளிக்கும்போது மாவட்டக் கலெக்டர் தலைமையிலே எடுக்கப்பட்ட முடிவுகளைச் பற்றிச் சொன்னார்கள். ஆனால் இந்த முடிவுகளையெல்லாம் மீறி, சிவகாசியிலுள்ள தொழிற்சாலைகளில் சிறுவர்களும், சிறுமியர்களும், இன்னமும் அவர்களை வேலை வாங்கக்கூடிய ஒரு நிலைமை இருப்பதைத் தடுப்பதற்கு, கடுமையான நடவடிக்கைகள் எடுக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9.40)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இப்போதும் கடுமையான நடவடிக்கைகள், பிராசிக்குசன் எல்லாம் செய்து கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினருடைய உணர்வுகளை மனதில் வைத்து, தீவிரமான நடவடிக்கை எடுக்க அரசு முயலும்.

நாகர்கோவிலில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம்.

*வினா எண் 727—திரு. மி. வின்சென்ட்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) நாகர்கோவிலில் பாதாள சாக்கடை திட்டம் என்ன நிலையில் உள்ளது?

(ஆ) எப்பொழுது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) மற்றும் (ஆ): ரூ. 930.00 இலட்சங்கள் அமைப்புச் செலவிலும் ரூ. 32.50 இலட்சங்கள் வருடாந்திர பராமரிப்புச் செலவிலும் நாகர்கோவிலுக்கு ஒரு பாதாளச் சாக்கடைத் திட்டத்தை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தயாரித்தது. ஆனால் அந்நகராட்சியின் நிதி நிலைமை பற்றாக்குறை காரணமாக தற்போது இத்திட்டம் கைவிடப்பட்டது.

திரு. மி. வின்சென்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, பேஸ்டு பிராகிராம் என்ற அடிப்படையிலே இதை செய்வோம் என்று மாவட்ட வளர்ச்சிக் கூட்டத்தில், டி. டி. சி. கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அந்த கடி தீர்மானம் அரசுக்கு வந்துள்ளதா? அப்படி வரவில்லையென்றால் அந்த அதிகாரிகளிடம் அரசு அதற்கான காரணத்தைக் கேட்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, தீர்மானம் நிறைவேற்றப்பட்ட உடனேயே அவைகள் அரசுக்கு உடனே வந்துவிடாது.

It will be circulated through various Departments. அப்படி வரும்போது, அரசு பரிசீலனை செய்து சாதகமான முடிவு எடுப்பதற்கு முயற்சி எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மி. வின்சென்ட்: பேரவைத் தலைவர் அவர்களே தீர்மானம் அரசுக்கு வந்து எவ்வளவு காலத்தில் இந்தத் திட்டம் செயலுக்கு வரும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கு வருவது என்பது, டிபார்ட்மென்டுக்கு வந்து. செயலாளரிடம் இருந்து என்னிடம் வந்து உடனே கூட முடிவு எடுத்துவிடுவோம். அதைத்தான் எப்போதும் செய்துவருகிறேன் அதேபோல் நாகர்கோவில் விஷயத்திலும் முடிவு எடுப்போம்.

திரு. ஆர். நடந்திருஷ்ணபாண்டியன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பாதாள சாக்கடைத் திட்டம் நகராட்சிகள் மட்ட அளவில் அமுல்படுத்தப்படுகின்றன. பேரூராட்சிகளிலும் அமுல்படுத்துவதற்கு ஏதாவது திட்டம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நகராட்சிக்கே முடியவில்லை. அப்புறம் பேரூராட்சிக்கு எங்கே வருவது.

பாக்கம்பாடி அணை சீரமைப்புத் திட்டம்,

* வினா எண். 728—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்ட வெள்ளாற்றில் பாக்கம்பாடி அணை சீரமைப்புத் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) அதன் மதிப்பீடு எவ்வளவு?

(இ) அதனால் எத்தனை ஏக்கர் நிலங்கள் பயன்பெறும்?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: (அ) இது தலைமைப் பொறியாளரின் முதல் நிலை ஆய்வில் உள்ளது.

(ஆ) மதிப்பீடு விபரங்கள் ஆய்வு முடிந்த பின்னர் தான் கிடைக்கும்.

(இ) இத்திட்டத்தின் மூலம் 2,304 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என எதிர் பார்க்கப்படுகிறது.

திரு. ஏ. தங்கராசு: தலைவரவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தில் இந்த பாக்கம்பாடி அணைத் திட்டத்தினால் 2,300 ஏக்கர் பாசனம் பெற இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இது ஒரு நல்ல திட்டம். அந்தப் பகுதி வறட்சியான பகுதி. இந்தத் திட்டத்திற்கு என்ன மதிப்பீடு என்று அறிய விரும்புகிறேன்.

1982 ஏப்ரல் 2

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவரவர்களே, அந்தத் திட்டம் மேலும் ஆய்வு செய்யப்பட்டு இப்போது 25 இலட்சம் ரூபாய்க்கும் அதிகமாக செலவாகும் என்று கருதப்படுவதால் அதை ஒரு நடுத்தரப் பாசனத் திட்டமாக திரும்பவும் ஆய்வு செய்வதற்கு வேறு ஒரு பிரிவுக்கு மாற்றப்பட்டு, மறு ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

திரு. எல். இளையபெருமாள்: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் நடுத்தரத் திட்டமாக ஆய்வு செய்யப்படுவதாகச் சொன்னார்கள். கடந்த 10 ஆண்டுக் காலமாக வெள்ளக் காலத்தில் அந்தத் தண்ணீர் எல்லாம் கடலுக்கு வீணாகப் போகிறது. இது நீண்ட காலமாக இருப்பதால் உடனடியாகச் செய்ய அரசு முன்வருமா? நடுநிலைத் திட்டமாகச் செய்தால் வெள்ளக் காலத்தில் அதிகமாக வரும் தண்ணீரை பக்கத்தில் இருக்கிற கண்மாய்களுக்கு திருப்பிவிட வசதி இருப்பதால் அரசு இதற்கு முக்கியத்துவம் கொடுத்து செயல்படுத்த முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவரவர்களே, அந்த அடிப்படையில்தான் முதலிலே ஆய்வு செய்து அணையைக் கட்டலாம் என்ற முடிவுக்கு வந்தபோது இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டால் தொழுதூர் ரெகுலேட்டர் மற்றும் வெல்லிங்டன் பாசன ஏரிக்கு நீரின் வரத்து சுமார் 250 கன அடி குறைந்துவிடும் என்றும் அதனால் விவசாயம் பாதிக்கும் என்றும் அந்தப் பகுதி விவசாயிகள் ஆட்சேபம் தெரிவித்தார்கள். இருந்தாலும் அது பற்றி ஆய்வு செய்து, இப்போது ஏப்ரல் மாதத்திற்குள் முடிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அதாவது இன்னும் சுமார் 30 நாட்களுக்குள் முடிந்துவிடும். அறிக்கை வந்தவுடன் அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

சென்னைக்கு கிருஷ்ணா நதியிலிருந்து தண்ணீர் கொண்டுவரும் திட்டம்.

* வினா எண். 729— திரு. பெ. சு. திருவேங்கடம்: திரு. நா. பழனிவேல்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு சார்பில் ஆந்திரப்பிரதேச முதல்வர் அவர்களை சந்தித்து சென்னைக்கு கிருஷ்ணா ஆற்று தண்ணீரைக் கேட்டு பேச்சு வார்த்தை நடந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவரவர்களே, (அ) மற்றும் (ஆ): 1978 ஆம் ஆண்டு ஜுன் திங்களில் ஆந்திர மற்றுங் தமிழக முதல்வர்களிடையே இத்திட்டத்தின் ஆய்வு வேலைகள், திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் ஆய்வுப் பணிக்காக இரு மாநிலங்களும் நிதி ஒதுக்குவது பற்றி பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. இக்கூட்டத்தில் தீர்மானித்தபடி இரு மாநிலங்களிலும் ஆய்வு வேலைகள் தொடங்கப்பட்டன. தமிழக எல்லைக்குள் ஆய்வு வேலை முடிந்துவிட்டது. ஆந்திரா

1982 ஏப்ரல் 2]

எல்லைக்குள்ளும் அநேகமாக ஆய்வு வேலைகள் முடிந்துவிட்டன. தோராயமாக திட்ட அறிக்கை ஒன்றை தமிழக அரசு ஆந்திர அரசுக்கு அனுப்பியுள்ளது. இறுதி திட்ட அறிக்கை ஆந்திர அரசிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவரவர்களே, தமிழக எல்லைக்குள் ஆய்வு வேலைகள் எல்லாம் முடிந்துவிட்டதாக அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். அதைப்போன்று ஆந்திர அரசுக்கு ஆய்வு அறிக்கையை அனுப்பியிருப்பதாகவும் அறிவித்திருக்கிறார்கள். இதற்கு எவ்வளவு தொகை செலவாகும்? சென்னைக்கு இந்தத் தண்ணீர் வந்து சேர எத்தனை ஆண்டுகள் ஆகும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவரவர்களே, ஆய்வு வேலைகள் முடிந்துவிட்டன. ஆய்வுப்பணிக்குத் தேவையான பங்குத் தொகையில் ஏறத்தாழ 90 சதவீதத்தை வழங்கி விட்டோம். ஏறத்தாழ இதற்கு 188 கோடி ரூபாய் ஆகும் என்று இப்போது மதிப்பீடு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எவ்வளவு விரைவிலே முடியுமோ அவ்வளவு விரைவிலே செய்து முடிக்கலாம்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவரவர்களே, எவ்வளவு விரைவாக முடிக்க முடியுமோ அவ்வளவு விரைவாக முடிக்கலாம் என்று அறிவித்தார்கள். அதில் ஏதாவது காலம் குறிக்கப் பட்டுள்ளதா? அப்படி அந்தத் தண்ணீர் சென்னைக்கு வரும்போது, சென்னைக்குத் தேவையான தண்ணீர் அதன் மூலம் கிடைக்கின்ற சூழ்நிலை இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவரவர்களே, பொதுவாக இத்திட்டத்தை முடிக்க 5 முதல் 7 ஆண்டுகள் ஆகும் என்று எதிர்பார்க்கிறோம். விரைவாக தண்ணீரைக் கொண்டுவந்து சென்னையின் குடிதண்ணீர் பிரச்சனையைத் தீர்க்க வேண்டுமென்று அரசு முயற்சி செய்கிறது. அந்த முயற்சியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பாராட்ட வேண்டும். இன்னும் விரைவாக முடிக்க வாய்ப்பு இருந்தால் அதையும் கவனத்தில் கொண்டு செயல்படுத்துவோம்.

திரு. என். பழனிவேல்: தலைவரவர்களே, சென்னைக்கு கிருஷ்ணா ஆற்றுத் தண்ணீரைக் கொண்டுவருவது சம்பந்தமாக 1978-ல் பேச்சு வார்த்தை நடந்ததாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். இன்றைக்கு 4 ஆண்டுகள் ஆகிவிட்டன. அங்கே இருக்கிற அரசாங்கத்தில் பல முதலமைச்சர்கள் இந்த இடைப்பட்டக் காலத்தில் வந்து சென்றுவிட்டார்கள். அதனால் ஏதாவது சிக்கல் இருக்கிறதா? அப்படி சிக்கல் இருக்குமானால் மத்திய அரசோடு பேசி, நேரடியாக இதுபற்றி பேசி, இதை விரைவாக செய்து முடிப்பதற்கு அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1982 ஏப்ரல் 2

[முற்பகல் 9-50]

மாண்புமிகு திரு கே. இராஜாமுகமது: தலைவர் அவர்களே, முதலமைச்சர்கள் மாறுவதாலோ அல்லது சென்று விடுவதாலோ அரசு செயல்படாமல் நின்றுவிடுவது இல்லை. அரசு இயந்திரம் இயங்கிக் கொண்டுதான் இருக்கிறது. ஆகவே, விரைவாக அந்தத் திட்டத்தை நிறைவேற்றவேண்டும் என்பதிலே, ஆந்திர அரசு மிக்க ஒத்துழைப்பைத் தருகின்ற காரணத்தால்தான், அந்த ஆய்வு வேலைகள் முடிந்து, அதற்காக தமிழ்நாடு 54.58 இலட்சம் ரூபாய் தரவேண்டும் என்று அவர்கள் கேட்டு, நாமும் 41.54 இலட்சம் ரூபாய் அந்த மதிப்பீட்டு வேலைகளுக்காகக் கொடுத்து இருக்கிறோம். அடுத்து, நாம் அந்தப் பணிகளைத் தொடர வேண்டும் என்பதற்காகப் பேச்சுவார்த்தைகள் நல்ல முறையில் நடந்து வருகின்றன. அதிகாரிகள் மட்டத்தில் நல்ல முறையில் ஒத்துழைத்து இருப்பதால், இவ்வளவு விரைவாக அந்த ஆய்வு வேலைகள் முடிந்தது சான்றாக இருக்கிறது. ஆகவே, இத்திட்டம் நிச்சயமாக நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. நெடுமாறன்: தலைவர் அவர்களே, கிருஷ்ணா ஆற்று நீர் சென்னைக்குக் கொண்டு வருவதற்காக 188 கோடி ரூபாய் செலவாகும் என்றும், கிட்டத்தட்ட அதற்காக 55 கோடி ரூபாய் தமிழகம் கொடுத்து இருக்கிறது என்றும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: 54.58 இலட்சம் என்பது ஆய்வு வேலைகளுக்காகச் செலவிடப்பட்டது. இந்த திட்ட மதிப்பீடு தண்ணீர் கொண்டு வருவதற்காகத்தான். டிஸ்டிரிபியூஷன் இதிலே வராது.

திரு. ப. நெடுமாறன்: இதிலே தமிழகத்தின் பங்காக எவ்வளவு தொகை அளிக்கப்படுகிறது? இதிலே ஆந்திர மாநில எல்லையில் இருந்து, தமிழ் நாடு எல்லை வரை அது பாசனக் கால்வாயாக வருகிறது. ஆனால் தமிழகத்திலே வரும்போது, அது சென்னைக்கு குடிநீர் கால்வாயாகத்தான் வருகிறது. இதன் மூலம், மேலும் 15 டி.எம்.சி. கூடப்பெற்றால் செங்கல்பட்டு மாவட்டத்தில் கிட்டத்தட்ட 5 இலட்சம் ஏக்கர் நிலங்கள் புதிய பாசன வசதி பெறும். ஆகவே, அதைப் பாசனக்கால்வாயாகக் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குடிநீர் திட்டத்தை நிறைவேற்றுவது என்பதே பெரிய கஷ்டமான காரியம். அப்படி இருக்கும்போது, பாசன வசதிக்காகவும் அதைச் செய்யவேண்டும் என்று சொல்லி வருவதையும் நிறுத்தி வைக்கும் முறையில் பேச வேண்டாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

1982 ஏப்ரல் 2]

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவர் அவர்களே தங்களுடைய கருத்தைத்தான் நானும் சொல்லலாம் என்று இருந்தேன். 15 டி.எம்.சி. தண்ணீர் நமக்குக் கொடுத்தால் போதும் என்ற முறையில் இந்தத் திட்டத்தை நாம் நிறைவேற்ற இருக்கிறோம். நம்முடைய மாநில அரசைப் பொறுத்தவரையில், 188 கோடி ரூபாய் இதற்காகச் செலவாகும் என்று மதிப்பிடப் பட்டு இருக்கிறது. ஆந்திராவைப் பொறுத்தவரையில் அவர்களுக்குத் தனியாகச் செலவாகலாம். நம்முடைய மாநிலந் தப் பொறுத்தவரையில் நாம் இந்த மதிப்பீட்டைச் செய்து இருக்கிறோம். அந்த அடிப்படையில் இந்த வேலைகள் விரைவில் முடிப்பதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கொடுமுடியாறு அணைத் திட்டம்.

* வினா எண். 730—திரு. என். எஸ். வி. சித்தன்: திரு. ரா. உமாநாத்: திரு. மு. ஜான் வின்சென்ட்: மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம் வள்ளியூர் கொடுமுடியாறு அணைத்திட்டவேலைகள் தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே இராஜாமுகமது: (அ) (ஆ): இந்த நீர்த் தேக்கத்திட்டத்திற்காக கிடைக்கக்கூடிய நீரின் அளவை சரியாக கணித்து, திட்டத்தில் சாத்தியக்கூறுகளையும், சரியான வடிவமைப்பையும் நிர்ணயிக்க அறிக்கை அனுப்பும்படி தலைமைப் பொறியாளர் (ஆய்வு) கேட்டுக்கொள்ளப்பட்டார். மேற்படி அறிக்கை 1982 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்குப் பின் அரசிற்கு அனுப்பி வைக்கப்படும் என தலைமைப் பொறியாளர் (ஆய்வு) கூறியுள்ளார்.

திரு. மு. ஜான் வின்சென்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கொடுமுடியாறு திட்டத்திற்காக இதுவரையில் 30 இலட்ச ரூபாய் செலவு செய்யப்பட்டு இருக்கிறது. மூன்று ஆண்டு கால நீர் கணக்கை எடுத்துப் பார்த்து, கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. அறிக்கை மிக விரைவில் வரும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 1977 ஆம் ஆண்டு அங்கேயுள்ள இயந்திரங்கள் அகற்றப்பெற்றபோது, அங்கே ஒரு

லாரி எம்.டி.ஒய். 8621 அகற்றப்பெறவில்லை. அந்த லாரி இன்றும் நின்று கொண்டு இருக்கிறது. அது அகற்றப்பெறவில்லை. 3 கோடியே 60 இலட்சம் ரூபாய்க்கு எஸ்டிமேட் போட்டதாக நான் அறிகிறேன். ஆகவே, இந்த ஆண்டு நடுநிலை நீர்ப்பாசனத் திட்டத்தின்கீழ் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவர் அவர்களே, ஏப்ரல் மாதத்திற்குள் அந்த அறிக்கை வந்து விடும் என்று தகவல் தரப்பட்டுள்ளது. அறிக்கை வந்தபிறகு, அரசு தக்க முடிவை எடுக்கும்.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கு அடிக்கல் போட்டு ரொம்ப வருஷம் ஆகி விட்டது என்று கேள்விப்பட்டேன். எந்த வருஷத்தில் அடிக்கல் போட்டார்கள், அடிக்கல் போடுகிறபோது, எஸ்டிமேட், ஸ்கீம் பைனலைஸ் செய்து, எகனாமிக்கலாக இருக்கும் என்று முடிவு செய்த பிறகு தானே அடிக்கல் போட்டு இருக்கிறார்கள். அப்போது எகனாமிக்கலாக இருந்தது என்று அசெஸ் செய்த பிறகு, இப்போது மறுபடியும் 'ரீ-அசெஸ்மென்ட்' செய்வதற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவர் அவர்களே, கொடுமுடியாறு நீர்த்தேக்கத் திட்டத்தை அரசு முதலில் கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டது. அன்று அங்கே ஒரு அணைக்கட்டைக் கட்டலாம் என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. அந்த அடிப்படையில் ஆய்வு வேலைகள் செய்யப்பட்டு, 160 இலட்சம் செலவில் அத்திட்டத்தை நிறைவேற்றலாம் என்று சொல்லப்பட்டன. 1975 ஆம் ஆண்டில் ஒரு அரசாணையில் அதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. பிறகு அந்த ஒப்புதலின் அடிப்படையில் விரிவான ஆய்வுகள் 'பிரைஸ் எஸ்கலேஷன்' எல்லாம் கணக்கிட்டு 223 இலட்சத்திற்கு அந்த மதிப்பீட்டை 1976 ஆம் ஆண்டில் அனுப்பினார்கள்.

1976 ஆம் ஆண்டு என்பது தமிழக அரசிலே ஒரு பெரிய மாறுதலை ஏற்படுத்திய ஆண்டு. அப்படி வந்தவுடனே பொதுப் பணித்துறையின் முதல்நிலை அதிகாரிகளான சீஃப் இன்ஜினியர் முதற்கொண்டு எல்லோருமே இந்தத் திட்டத்தை எடுக்கலாம் என்று சொன்னார்கள். ஆனால் வருவாய்த்துறை மற்றும் துறைகளிலே உள்ளவர்கள் இந்தத் திட்டம் பொருளாதார ரீதியிலே கட்டுப்படியாகக்கூடியதல்ல, இந்தத் திட்டத்தால் பயன் இல்லை எனவே இவ்வளவு பணம் செலவழிக்கவேண்டியதில்லை என்று இடையிலே ஒரு கருத்தை வைத்திருக்கிறார்கள். அதற்கிடையிலே வறட்சி நிவாரண நிதியிலிருந்து 25 இலட்சம் ரூபாய் ஒதுக்கி அடிப்படையான வேலைகளை நிறைவேற்றி விட்டார்கள்.

ஆனால் இதற்கிடையிலே நிலநீர் ஆணையாளர் அந்தத் திட்டம் இங்கே வரக்கூடாது என்று வலியுறுத்திய காரணத்தால் அந்தத் திட்டம் அப்போது செயல்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

நாம் திரும்பவும், இவ்வளவு செலவழித்ததற்குப் பிறகு ஏதாவது செய்ய வேண்டும் என்று கருதி இந்தத் திட்டம் ஏன் நிறுத்தப்பட்டது என்பது பற்றிப் பார்த்தோம். பிறகு கடைசியாக நீர்வளம், அதாவது ஹைட்ராலஜி எப்படி இருக்கின்றது என்று ஒரு மூன்று ஆண்டுகளுக்கு சர்வே செய்து 1982 ஏப்ரலுக்குள்ளாக அறிக்கை கொடுக்கவேண்டும் என்று கேட்டிருக்கிறோம். அதன் அடிப்படையிலே மேற்கொண்டு என்ன செய்யலாம் என்று முடிவு எடுக்கலாம் என்பது பற்றி அரசு யோசிக்கும்.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கொடுமுடியாறு திட்டம் சம்பந்தமான பிரச்சினை நான்கைந்து ஆண்டுகளாக கிளப்பப்பட்டு வருகின்றது. ஒரு பெரிய மனிதரின் நிலம் இந்தத் திட்டத்தின் காரணத்தால் கொஞ்சம் தண்ணீரில் மூழ்குகிறது என்ற காரணத்தால் அவர் தடுத்ததாகவும், அதனால்தான் இந்தத் திட்டம் நிற்கின்றது என்றும் அந்தப் பகுதியிலே உள்ள பெருவாரியான மக்கள் பேசுகிறார்கள். மூன்றாண்டு காலத்திற்கு தண்ணீர் வரத்து எவ்வளவு என்று கணக்கிட்டு அங்கே ஒரு அணை கட்டலாம் என்றுதான் பரிந்துரை செய்திருப்பதாகக் கேள்விப்படுகிறேன்.

அந்தப் பெரிய மனிதருடைய முட்டுக்கட்டையை உடனடியாக தடுத்து நிறுத்தி அந்தப் பகுதியிலுள்ள பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் பயன்பெறக்கூடிய அந்தத் திட்டத்தை சீக்கிரமாக நிறைவேற்ற அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்துக்களை அரசு கவனத்தில் கொள்ளும். ஏப்ரல் மாதத்திற்குள்ளாக அதாவது இந்த மாதத்திற்குள்ளாக அறிக்கை வரவேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். இன்னும் 26 நாட்கள்தான் இருக்கின்றன. ஆகவே, அது வந்தவுடன் அதைப் பார்த்து பரிசீலனை செய்து எவ்வளவு விரைவிலே அந்தத் திட்டத்தைப் பற்றி யோசிக்க முடியுமோ அந்த அளவுக்கு யோசிக்கலாம்.

தமிழ்நாட்டில் காற்றாலை கழகம் அமைத்தல்.

* வினா எண் 731— திரு மா. சின்னராஜு: திரு. செ. செம்மலை மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

தமிழ்நாட்டில் Wind Mill Corporation ஏற்படுத்தும் செயற் குறிப்புஅரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: இல்லை.

திரு. எம். சின்னராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வின்ட் மில் என்பது மின்சார சக்திக்கு ஒரு மாற்று சக்தியாக அமைகின்ற ஒரு திட்டம். விவசாயிகள் எளிதில் அமைத்துக்கொள்கின்ற வாய்ப்பு இருக்கின்றது. அதற்கான சீதோஷ்ண நிலைமையும் நமது நாட்டிலே ஏதுவாக இருக்கின்றது. ஜெர்மன் நாடுகளில் கூட இந்தத் திட்டம் ஊக்குவிக்கப்படுகின்றது. இந்தத் திட்டத்தினை நாம் நிறைவேற்றினால் விவசாயத்திற்குத் தேவையான மின்சாரத்தை மிச்சப்படுத்த முடியும். அப்படி ஒரு நல்ல திட்டமாக இருப்பதால் மீண்டும் அரசு இதனைப் பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவர் அவர்களே, காற்றினுடைய சக்தியைப் பயன்படுத்த ஏதுவாக உள்ள இடங்களில் காற்றாலைகள் அமைப்பது என்ற அந்தத் திட்டத்தை அரசு ஏற்றுக்கொண்டிருக்கின்றது. அதற்காக பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம்.

பூண்டியிலுள்ள ஆய்வுக்கூடத்திலே கூட ஏழை விவசாயிகளுக்குக் குறைந்த விலையிலே வின்ட் மில் கிடைக்க என்ன செய்யலாம் என்று ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே அரசு இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த விரும்புகிறது. ஆனால் இதற்காகத் தனியாக ஒரு நிறுவனம், கார்ப்பரேஷன் அமைக்க வேண்டுமா என்பதுதான் மூலக்கேள்வி. இதுவரையில் அந்தக் கருத்து பரிசீலனைக்கு வரவில்லை. அரசினுடைய செயற்குறிப்பிலேயும் அது இல்லை என்பதைத்தான் நான் தெரிவித்தேன்.

திரு. மா. சின்னராஜ்: தலைவர் அவர்களே, இதுபோன்ற நல்ல திட்டங்களை விரைவாகச் செயல்படுத்துவதற்கும், அரசின் நிதிநிலையைக் கருத்தில் கொண்டு அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள், நிதி நிறுவனங்கள் ஆகியவற்றிடமிருந்து கடன் பெற்று தீவிரமாகச் செயல்படுத்துவதற்கும் கார்ப்பரேஷன் அமைப்பு நல்ல முறையிலே பயன்படும். ஆகவே அதை நிறைவேற்றுவது பற்றி அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவர் அவர்களே, இதற்கு ஒரு தனிக்கவனம் கொடுத்துச் செய்தால் இன்றைக்கு இருக்கக்கூடிய மின்சாரப் பற்றாக்குறை மற்றும் டீசல் விலை உயர்வு ஆகியவற்றைத் தவிர்க்கலாம் என்ற எண்ணத்தில்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள் என்று கருதுகிறேன். இது மத்திய அரசின் கவனத்திலேயும் இருக்கக்கூடிய ஒரு முக்கியமான திட்டமாக இருக்கின்றது. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்தினை அடிப்படையாக வைத்து வேண்டுமானால் இது குறித்து மீண்டும் பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10.00)

திரு. செ. செம்மலை: இதுபோன்ற காற்றாலைகளைப் பயன்படுத்தி யு.பி. போன்ற மாநிலங்களில் வெற்றிகரமாக நடைபெறுவதாகச் சொல்கிறார்கள். யு.பி. அரசு இதுபோன்ற காற்றாலை தயாரிக்கிற தொழிற்கூடங்களுக்கு நிதி உதவி அளிப்பதாகச் சொல்கிறார்கள். திரு. சின்னராசு அவர்கள் சொன்னது போல் தமிழ்நாட்டிலும் இதுபோன்ற கழகத்தை அமைக்க வாய்ப்பு இருக்குமானால் அரசு அப்படிப்பட்ட திட்டத்தை நிறைவேற்ற உதவி செய்யுமா? இதற்கான உதவியைச் செய்ய மத்திய அரசிடம் மாநில அரசு உதவி கேட்டுப்பெறுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: மத்திய அரசின் உதவியோடு இத்திட்டத்தை நிறைவேற்றவேண்டும் என்றுதான் மாநில அரசு சில நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. மத்திய அரசும் இப்படிப்பட்ட திட்டத்தை ஊக்குவிக்கவேண்டும் என்றுதான் அவர்களும் நம் ஆய்வறிக்கைகளை கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல் கடற்கரைப்பகுதிகளில் இந்தமாதிரியான திட்டத்தை நிறைவேற்ற நிரம்ப வாய்ப்பிருக்கிறது. தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட 900 கிலோ மீட்டர் தூரத்திற்கு கடல் பரப்பு பகுதி உள்ளதாக கணக்கு எடுத்து வைத்திருக்கிறோம். அதையெல்லாம் மனதில் கொண்டு இதைச் செய்யமுடியும். யு.பி.யில் தனியார் நிறுவனங்கள் ஆண்டுக்கு 100 முதல் 200 வரை காற்றாலை உற்பத்தி செய்யும் திறன் பெற்றிருக்கிறது. அந்த அரசு உதவி செய்வதாக குறிப்புகள் தரப்பட்டிருக்கின்றன. அவைகளையும் இப்போது ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம்.

Amount Received Under the Investment Subsidy Scheme.

Q. No. 732 THIRU R. UMANATH will the Hon. the Minister for Industries be pleased to state —

(a) the total amount this Government has received from the Central Government during 1978-1979, 1979-1980 and 1980-1981 under Investment Subsidy Scheme and

(b) the total number of Industries benefited by the scheme

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:

ஆண்டு.		(ரூ. இலட்சத்தில்.)
1. 1978—79	..	220.63
2. 1979—80	..	165.57
3. 1980—81	..	425.35
		820.55

ஆண்டு		நிறுவனங்களின் எண்ணிக்கை.
31.3.1978 வரை	..	903
1978–79	..	227
1979–80	..	458
1980–81	..	706
		2,294

திரு. ரா. உமாநாத்: கிடைத்த தொகை பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள், நான் கேட்க விரும்புவது, ஒவ்வொரு ஆண்டும் நம் அரசு கேட்ட தொகை என்ன? அவர்கள் ஒதுக்கிய தொகை என்ன? கடைசியில் கிடைத்த தொகை என்ன? மொத்தமாகக் கேட்டீர்களா? அல்லது குறிப்பிட்ட ப்ளான் ஸ்கீம்களுக்கு கேட்டீர்களா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதில் சொன்னேன். இருந்தாலும் இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிற கேள்விக்குச் சொல்கிறேன். பொதுவாக காப்பிடல் சப்சிடி என்பது பின்தங்கிய பகுதிகளில் தொழில் துவங்கும்போது அந்தத் தொழில் முதலீட்டில் 15% என்ற அளவிற்கு மத்திய அரசு மானியமாகக் கொடுக்கிறது. அதனுடைய உச்சளவு பணம், 15 இலட்சம் வரை இருக்கும். கன்ஸ்ட்ரக்ஷன் துவங்கிய அளவில் அந்த 15 இலட்சம் ரூபாயில் 85% அந்த மானியத்தை முதலில் கொடுக்கிறார்கள். பிற்பாடு ப்ரொடக்ஷன் ஆரம்பித்த பிறகு மிச்சம் 5% தொகையை மானியமாகக் கொடுக்கிறார்கள். லைசென்ஸ் பெற்று பின்தங்கிய பகுதிகளில் துவங்கப்படுகிற அனைத்துத் தொழில்களுக்கும் நாம் அப்படி பரிந்துரை செய்கிறோம். நாம் பரிந்துரை செய்கிற அனைத்துத் தொழில்களுக்கும் கொடுக்கிறார்கள். அவர்கள், பணம் ஸிப்காட் மூலம் கொடுக்கிறார்கள். கொடுத்துவிட்டு மைய அரசுக்கு அனுப்பி ரீஇம்பர்ஸ்மென்ட் கேட்கிறார்கள். 31–12–1981 வரை மைய அரசிடமிருந்து இத்திட்டத்தின் கீழ் திருப்பியளிக்கப்படவேண்டிய நிலுவை தொகை ரூ. 123.37 இலட்சமாகும். தொடர்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

திரு. ரா. உமாநாத்: 12 கோடி ரூபாய் பாக்கியிருக்கிறது என்று சொல்கிறார்கள். அது ஒரு கணிசமான தொகையாகும். அந்த 12 கோடி ரூபாயைப் பெறுவதற்கு முயற்சிகள், வெறும் கடிதப்போக்குவரத்தோடு நிறுத்துகிறீர்களா? அல்லது நேரடியாக டெல்லி சென்றபோது ஏதாவது பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறீர்களா? அந்தப் பேச்சுவார்த்தையில் மத்திய அரசு சொன்ன பதில் என்ன? நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடிதங்கள் மூலமாக வலியுறுத்துகிறோம். அதிலே நேரடியாக ஈடுபட்டிருக்கின்ற சிப்காட் நிறுவனம், கொடுக்கின்ற மானியத்தை மைய அரசிடமிருந்து பெற்றுக் கொடுக்கிறது. அந்த நிறுவனத்தைச் சார்ந்த உயர்மட்ட அதிகாரிகள், டெல்லிக்குப்போய் அங்கே சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு பேசுகிறார்கள். நானும், டெல்லிக்குச் செல்லுகிற

போது, மைய அமைச்சரிடம் சொல்லியிருக்கிறேன். மீண்டும் சட்டமன்றக் கூட்டம் முடிந்தபிறகு, டெல்லிக்குப் போகிற போது, இதுபற்றி வலியுறுத்துகிறேன். அதிலே வேண்டுமென்றே அவர்கள் காலதாமதம் செய்வதாக நான் நினைக்கவில்லை. அவர்களுக்குள்ள நிதி ஆதாரத்தை வைத்துக்கொண்டு, அவர்கள் பரவலாகப் பார்க்கிறபோது, மொத்த ஒதுக்கீட்டில் ஓரளவுக்கு ஒரு ரேஷியோவை வைத்துக் கொடுக்கிறார்கள். இருந்தாலும்கூட நம்முடைய பங்கைப் பெற வேண்டியது, நம்முடைய கடமையாகும். அதைத் தொடர்ந்து வலியுறுத்துவோம்; அதைப் பெற முயற்சிப்போம்.

டயர் உற்பத்திசெய்யும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம்.

(*வினா எண். 733. திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தமிழக அரசின் வனஇலாகாவின் பொறுப்பில் இயங்கி வரும் ரப்பர் தோட்டங்களிலிருந்து கிடைக்கும் ரப்பரை உபயோகப்படுத்தி, டயர் உற்பத்தி செய்யும் பெருந்தொழிற்சாலை அமைப்பது சம்பந்தமாக அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

(ஆ) ஆம் எனில் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) ஆம்.

(ஆ) திரு. என். ஏ. ஆர். நாகராஜன் அவர்களை தொழில் முனைவராகக் கொண்டு கூட்டுத் துறையில் டயர் உற்பத்தி செய்யும் திட்டம் ஒன்று டிட்கோவிடம் இருந்தது. இந்தத் திட்டம் "தமிழ் நாடு இரப்பர் லிமிடெட்" என்ற பெயரில் இயங்குவதாக இருந்தது. தனியார் தொழில் முனைவர் அவருடைய பங்கு மூலதனத்தைக் கொண்டு வர முடியாததால் இத்திட்டம் மேற்கொண்டு அமுல்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது. இந்த நிறுவனத்தை கலைத்து விடுவதற்காக உயர்நீதி மன்றத்தில் கலைப்பதற்கான மனு (winding up petition) தாக்கல் செய்யப்பட்டுள்ளது. உயர்நீதி மன்றத்தின் முடிவான தீர்ப்பு இன்னும் சில மாதத்திற்குள் அளிக்கப்படும் என்று எதிர்பார்ப்பதாக டிட்கோ நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, டிட்கோ இதுசம்பந்தமாக ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்கு முயற்சித்த நேரத்திலே, போக்குவரத்துக் கழகங்கள் அவர்களுக்குத் தேவையான டயர்களை தற்போது அவர்களிடத்தில் வாங்காவிட்டாலும், டிட்கோவிடம் வாங்கலாம் என்ற உறுதி கொடுக்கப்பட வேண்டுமென்று அவர்கள் கேட்டதாகவும், போக்குவரத்துக் கழகங்கள் அப்படி உறுதிகொடுக்க இயலாது என்று கூறியதன் காரணமாக, அந்த ஸ்கீமை அவர்கள் கைவிட வேண்டி வந்ததாகவும் கேள்விப்படுகிறேன். அது உண்மையா? அப்படியென்றால், போக்குவரத்துக் கழகங்கள் அதற்கான உறுதி கொடுக்கக்கூடிய முறையிலே நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னதை போல முதலில் இந்தத் தமிழ்நாடு இரப்பர் லிமிடெட் என்ற நிறுவனத்தை நிறுவுவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட இடம், ரப்பருக்கும் அதற்கும் சம்பந்தமில்லாத ஒரு வறட்சியான பகுதி, தருப்பத்தூர் பகுதி. அது அந்தக் காலத்திலே தேர்வு செய்யப்பட்டது. அதற்குப் பின்னர்; இது போன்ற பல்வேறு காரணங்களால், அதோடு தொழில் முனைவர், பிரமோடர்ஸ் அவர்கள் பங்கு பெறாத காரணத்தினால், அந்த நிறுவனம் துவங்க முடியாத நிலை ஏற்பட்டது. ஆனால், புதிதாக இதுபோன்ற டயர் தொழிற்சாலையை துவங்குவது இப்போது லாபகரமாக இல்லை என்கிற நிலைமை இந்திய நாடு முழுவதும் இருக்கிறது. ஏறக்குறைய 4, 5 பெரிய நிறுவனங்கள்கூட, மைய அரசிடம் பல்வேறு சலுகைகளைப் பெறுவதற்கு வலியுறுத்திக்கொண்டுவருகிறார்கள். அப்போதுதான் லாபகரமாக நடத்த முடியும் என்ற காரணத்திற்காக. எனவே, இந்த சூழ்நிலையிலே தமிழ்நாடு போக்குவரத்துக் கழகங்கள் உறுதி அளித்தாலும் கூட இந்த தொழிற்சாலையை நடத்த முடியுமா என்பது சந்தேகத்துற்குரியது. இனிமேல் புதிதாக ஆரம்பிக்கப்பட வேண்டுமானால், அது ஆய்வு செய்யப்பட வேண்டும். ஏற்கனவே, அமைக்கப்பட இருந்த நிறுவனம் கலைப்பதற்காக கோர்ட்டிலே மனுக்கள் போடப்பட்டு இருக்கின்றன.

திரு ஜே. ஹேமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்திலே இயங்குவதாக இருந்த தொழிற்சாலை, அதன் முதலாளி மலேயாவிலிருந்து கொண்டு வரக் கூடிய ரப்பரை வைத்து, ஏற்படுத்தப் போவதாகக் கேள்விப்படுகிறோம். ஆனால், தற்போது போக்குவரத்துக் கழகங்கள்தான் தமிழகத்திலே அதிகமான டயரை வாங்கி உபயோகிக்கின்ற நிறுவனமாக இருக்கிறது. அதற்கடுத்து, அரசுதான் டயர்கள் வாங்கக்கூடிய பெரிய பிக்கெஸ்ட் கன்சியூமர். இங்கு போக்குவரத்து மானியக் கோரிக்கையிலே பேசியபோதுகூட, இப்போது டயர்களின் விலை அதிகமாக ஏறியிருக்கிறது, அதன் காரணமாக போக்குவரத்துக் கழகங்கள் நட்டத்தில் ஓடுவதாகச் சொல்லப்பட்டது. இந்த ஏகபோக முதலாளியை டிபென்ட் பண்ணிக் கொண்டிருக்காமல், டயர்களின் விலை உயர்ந்திருப்பதைக் கணக்கில் எடுத்துக் கொண்டு, தமிழக அரசுக்குத் தேவையாக இருக்கக்கூடிய டயர்களை உற்பத்தி செய்வதற்கு பொதுத் துறையில் போக்குவரத்துக் கழகம் அல்லது இண்டஸ்ட்ரீஸ் டிபார்ட்மென்ட், மற்றும் பல்வேறு ஸ்தாபனங்கள் வழியாகவும் ஒரு தொழிற்சாலை ஏற்படுத்துவதற்கு மத்திய அரசிடமிருந்து அனுமதி பெற்று, அதற்கான நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னேன். போக்குவரத்துக் துறையில் செயல்படுகிற நிறுவனங்களில் டயர் விலையேற்றத்தின் காரணமாக நட்டம் ஏற்படுவதால் நட்டம் இல்லாமல் இயங்கச் செய்ய

[முற்பகல் 10-10.]

வேண்டுமென்ற காரணத்திற்காக அதற்காக பொதுத்துறையிலே ஒரு நிறுவனத்தை அமைந்து அதைத் தயாரித்து அதை நட்டத்திலே நடத்துவது சரியல்ல. பொதுவாக டயர் தயாரிக்கின்ற தொழிற்சாலைகள், இந்தியாவிலே இருக்கின்ற 4 பெரிய டயர் தயாரிக்கும் நிறுவனங்களே நட்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஏற்கெனவே தொடங்கப்பட்ட திட்டம் கைவிடப்பட்டு விட்டது. இனிமேல் தொடங்கவேண்டுமென்றால் பொருளாதார ரீதியில், லாபமாக நடத்தமுடியுமா என்பதை எல்லாம் ஆராய்ந்து பார்த்துத்தான் நடவடிக்கை எடுக்க முடியும்.

திரு. என்: எஸ். வி. சித்தன்: கன்னியாகுமரி மாவட்டத்திலே நம்முடைய வனத் துறை மூலமாக விற்கப்படுகின்ற ரப்பர் தரத்திலே உயர்ந்த ரப்பராக இருக்கிறது. இந்தியாவிலே உள்ள பல்வேறு பெரிய கம்பெனிகள் அதை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அமைச்சர் சொன்னார்கள், டயர் தயாரிக்கும் தொழில் லாபகரமாக இருக்க முடியாது என்று. ரப்பரிலிருந்து டயரைத் தயாரிக்கின்ற தொழில் இல்லாவிட்டாலும் ரப்பரிலிருந்து ஏனைய வேறு பொருட்களைத் தயாரிக்க கூடிய முறையிலே ஒரு தொழிற்சாலையை ஆரம்பிக்க அரசு முன் வருமா? அப்படி அமைத்தால் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு அது வரப்பிரசாதமாக இருக்குமே, ஆகவே அதைப்பற்றி அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, பெரிய தொழிற்சாலை என்ற அளவுக்கு இல்லாவிட்டாலும் கன்னியாகுமரியில் கிடைக்கிற ரப்பரைப் பயன்படுத்தி சிறிய அளவில் ஏதாவது தொடங்க முடியுமா என்பதைப் பற்றி ஊரக தொழில் அமைச்சர் அண்ணன் கே. ஏ. கே. அவர்கள் நடவடிக்கைகளை எடுத்து வருவதாக இந்த மன்றத்திலேயும் சொல்லியிருக்கிறார்கள். மேலவையிலும் கூறியிருக்கிறார்கள் என்பதை நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைக்கும் திட்டம்

வினா எண். 734 திரு நன்னிலம் அ. கலையரசன் மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா

தஞ்சை மாவட்ட கரும்பு உற்பத்தியாளர்கள் கோரிக்கையை நிறைவேற்றும் வண்ணம் அரசு கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைக்க முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாயூரம் பகுதியில் ஒரு சர்க்கரை ஆலை கூட்டுறவு அமைப்பில் தொடங்கும் செயற்குறிப்பு ஆய்வில் உள்ளது. மைய அரசுக்கு மனு செய்யப்பட்டு உள்ளது.

திரு நன்னிலம் அ, கலையரசன் தலைவர் அவர்களே, நடப்பு ஆண்டிலே மாயூரம் தாலுக்காவிலும் நன்னிலம் தாலுகாவிலும் திருவிடை மருதூர் தாலுகாவிலும் கரும்பு சாகுபடியாளர்கள்

விளைவிக்கின்ற கரும்பை நக்க தருணத்திலே ஆலைக்கு அனுப்புவதில் சங்கடப்படுகிறார்கள். ஆகவே அது சம்பந்தமாக துரித நடவடிக்கை எடுத்து மாயூரம் தாலுகாவின் கடைசிப் பகுதியிலேயும், நன்னிலம் தாலுகாவின் கடைசிப்பகுதியிலேயும் திருவிடைமருதூர் தாலுகாவின் கடைசிப் பகுதியிலேயும் அந்த ஆலையை அமைப்பதற்கு அரசு துரித நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே. சுமார் 1½ ஆண்டுக்காலம் ஆகிவிட்டது. தொடர்ந்து எடுத்த முயற்சியின் காரணமாக திருத்தணியிலே 8 கோடி ரூபாய் அளவுக்கு சர்க்கரை ஆலையை அமைக்க மைய அரசு சில நாட்களுக்கு முன்னதாக அனுமதி அளித்து இருக்கிறார்கள். தஞ்சையிலே விவசாயிகளுக்கு நன்மை பயக்கும் வகையிலே ஒரு தொழிற்சாலை அமைக்க வாய்ப்பு இருக்கும் என்ற காரணத்தினாலே வெகு விரைவிலே சர்க்கரை ஆலையை கூட்டுறவு துறையில் அமைக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. மத்திய அரசோடு தொடர்ந்து தொடர்புகொண்டு விரைவிலே அதை அமைக்க அரசு முயற்சிகளை எடுக்கும்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இந்த சர்க்கரை தொழிற்சாலைகள் இன்னும் எத்தனை இடங்களில் அமைக்கலாம் என்கின்ற சாத்தியக்கூறுகளை அரசாங்கம் ஏதாவது பரிசிலனை செய்ததா? பரிசீலனை நடத்தியிருந்தால் எத்தனை இடங்களில்— இப்போது முடிவு செய்த ஆலைகளைத் தவிர,— ஆலைகளை அமைக்கலாம் என்ற ஆய்வு மேற்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு எஸ். திருநாவுக்கரசு தலைவர் அவர்களே, மூலக்கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லையென்றாலும்கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதற்கு இணங்க பல்வேறு இடங்களிலே பல்வேறு மாவட்டங்களிலே சர்க்கரைத் துறையின் சார்பிலே ஆய்வுகள் நடத்தப்பட்டன. சுமார் 10 தொழிற்சாலைகள் அளவுக்குக்கூட சர்க்கரை ஆலைகளைத் துவங்கமுடியும். ஆனால் சென்ட்ரல் பிளானிங் கமிஷனிடமிருந்து நமக்கு இரண்டு பெரிய சர்க்கரை ஆலைகளையும், 3 சிறிய சர்க்கரை ஆலைகளையும் அமைக்க அனுமதி வழங்கினார்கள்- திருத்தணியிலே ஒன்றும் தஞ்சையிலே ஒன்றும் இதைத்தவிர சிறிய சர்க்கரை ஆலைகளையும் கொண்டுவருவதற்கு அரசு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டுவருகிறது. மற்ற இடங்களில் பொதுத் துறையிலேயும் கூட்டுறவுத் துறையிலேயும் சர்க்கரை ஆலையை துவங்க முடியாத இடங்களில் இருக்கின்ற வாய்ப்பைப் பயன்படுத்தி வேலைவாய்ப்பினை ஏற்படுத்தவும், விவசாயிகளுக்கு உதவி செய்யும் தனியார்கள் தொடங்க முன்வருவார்களால் அவர்கள் மனுக்களை பரிசீலனை செய்யலாம் என்று மத்திய அரசின் இன்ஸ்ட்ரக்ஷன்ஸ்படி அவ்வாறு எற்படுத்த இதுவரையில் 6 மனுக்கள் அவர்களிடமிருந்து வந்திருக்கின்றன. கோவை, பெரியார் சேலம் போன்ற மாவட்டங்களில் எல்லாம். எனவே இவற்றையும் கருத்திற்கொண்டு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்திருக்கிறோம். வெகுவிரைவிலே தனியார் துறையிலும் உரிமங்கள் கிட்டும் என்று நம்புகிறோம்,

வேடசந்தூர் தொகுதி பாளையத்தில் சிமெண்ட் ஆலை நிறுவும் திட்டம்

வினா எண். 735 திரு. வி. பி. பாலசுப்பிரணியன் திரு பெ. சு திருவேங்கடம் மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) வேடசந்தூர் தொகுதி பாளையத்தில் சிமெண்ட் தொழிற்சாலை தொடங்க மத்திய அரசு அனுமதி வழங்கி விட்டதா?

(ஆ) ஆம் எனில் அத்தொழிற்சாலை தொடங்க மாநில அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு எஸ். திருநாவுக்கரசு: பேரவைத் தலைவர் அவர்களே, வேடசந்தூர் தொகுதிபாளையத்தில் சிமெண்ட்ஆலை தொடங்க மத்திய அரசு இதுவரை அனுமதி வழங்கவில்லை. சுமார் 32 கோடி திட்ட மதிப்பீட்டில் புதிய சிமெண்ட் ஆலை ஒன்று நிறுவ விண்ணப்பம் மத்திய அரசால் நிராகரிக்கப்பட்டிருக்கிறது. மைய அரசைத் தொடர்ந்து இசைவுக் கடிதம் தரக்கோரி கடிதம் மூலம் தொடர்பு கொண்டிருக்கிறோம். நேரிலேயும் வற்புறுத்தி கொண்டிருக்கிறோம் வற்புறுத்தவும் இருக்கிறோம்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, தமிழக அரசு 32 கோடி ரூபாய் செலவில் நிர்மாணிக்க இருந்த அந்த சிமென்ட் உற்பத்தி ஆலைக்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிற காரணம், நிலக்கரி இல்லையென்று ஒரு காரணத்தால் என்று பத்திரிக்கையிலே செய்தி வந்திருக்கிறது. நிலக்கரி இல்லாததால் இந்த அலைக்கு அனுமதி மறுக்கிறோம் என்று சொல்கிற மத்திய அரசு வெளிநாடுகளுக்கு நிலக்கரியை ஏற்றுமதி செய்கிறதா? ஆம் என்றால் அந்த காரணம் காட்டி தமிழக அரசு அதற்கு அனுமதி உடனே வழங்கவேண்டுமென்று வற்புறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, கரூர் திண்டுக்கல் அகல ரெயில் பாதை திட்டத்தை முதலிலே காரணமாக சொல்லி உரிமம் தர மறுக்கப்பட்டது. அது மத்திய அரசோடு தொடர்பு கொண்டு வற்புறுத்தப்பட்டு, ஏற்றுக் கொள்ளலபட்டதற்கு பின்னாலே, ரெயில் இலாக்கா அனுமதி கொடுத்த பின்னாலே, இப்போது புதியதாக நிலக்கரி பற்றாக் குறை என்ற காரணம் சொல்லி நிராகரிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல பற்றாக் குறை என்று சொல்லி வெளி நாடுகளுக்கு சுமார் 40 ஆயிரம் டன் ஏற்றுமதி செய்யக்கூடிய நிலைமைகள் இருப்பதாக செய்திகள் பத்திரிகையிலே வந்து தான் இருக்கின்றன. 1981 ஆம் ஆண்டு ஏப்ரலில் அண்டை நாடுகள் பங்களாதேஷ், நேபாளம், பூட்டான் போன்ற நாடுகளுக்கு 37 ஆயிரம் டன் இதர வகையான நிலக்கரி ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். எனவே இந்த நிலையிலே தொடர்ந்து இப்போது சொல்லியிருக்கிற காரண

அவ்வளவு திருப்திகரமானதாக இல்லை என்று அரசு உணர்கிறது. இதையெல்லாம் சுட்டிக்காட்டி மைய அரசிடத்திலே கேட்டு உரிமம் பெற முயற்சிப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, பல்வேறு காலகட்டங்களில் பாராளுமன்றத்தில் சிமெண்ட் உற்பத்தி செய்வதற்கு மூலப்பொருள்கள் கிடைக்கவில்லை. கிடைத்தால் போர்க்கால நடவடிக்கையில் உற்பத்தியை தொடங்குவோம் என்று மைய அரசிலே சொல்லியிருக்கிறார்கள். இப்போது நிலக்கரி இல்லை என்று சொல்கிறார்கள். தமிழக அரசு இந்த சிமெண்ட் உற்பத்தி ஆலையை வேடசந்தூர் பாளையத்தில் ஆரம்பிக்க அனுமதி கேட்டு அதற்கு பிறகு அனுமதி கேட்ட பல்வேறு சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கு மத்தியஅரசு அனுமதி வழங்கியிருக்கிறது என்பது உண்மையா? ஆம் என்றால் அதற்கான காரணங்கள் என்ன என்பதை தமிழக அரசு கேட்டு மத்திய அரசை வலியுறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில் நமக்கும் தரவில்லை, தனியார்களுக்கும் தரவில்லை. வேறு சில மாநிலங்களில் ஒன்றிரண்டு ஆலைகளுக்கு அனுமதி கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. நாம் இன்னும் விளக்கமாக இதிலே குறை கூறி புறக்கணிக்க இருப்பதை விட நம்பிக்கையோடு மத்திய அரசு வருகிற கமிட்டி கூட்டத்திலே வைத்து நமக்கு நிச்சயமாக உரிமம் வழங்கும் என்று நம்புகிறோம். தொடர்ந்து மைய அமைச்சர் அவர்களிடத்திலே வலியுறுத்தியிருக்கிறோம். சென்ற முறை மாண்புமிகு முதல்வர் அவர்கள் டெல்லி சென்றபோது கூட மையத் தொழிற்துறை அமைச்சரிடத்திலே சொன்னார்கள். அவர்களும் உடனடியாக அனுமதி வழங்குவது குறித்து உறுதி அளித்தார்கள். அந்த உறுதி காப்பாற்றப்படும், உரிமம் கிட்டும் என்று நம்புகிறோம்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, தொழிற்துறை அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கிறபோது நமக்கு அந்த சிமெண்ட் ஆலைக்கு அனுமதி மறுக்கிறபோது நிலக்கரிப் பற்றாக்குறை என்றும், ஆனால் வெளி நாடுகளுக்கு நிலக்கரி அனுப்புகிறதை பத்திரிகையிலே பார்த்ததாகவும் தான் சொன்னார்கள். இந்த நிலையில் நம்முடைய தொழிற்துறை அமைச்சர் மத்திய தொழிற்துறை அமைச்சர் அவர்களை சந்தித்து எங்களுக்கு நிலக்கரி இல்லையென்று சொல்கிறீர்களே, நீங்கள் வெளிநாடுகளுக்கு அனுப்புகிறீர்களே, தமிழகத்தினுடைய பொதுநலன் கருதி இந்த ஆலைக்கு அனுமதி வழங்கவேண்டும் என்று கேட்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, பத்திரிகை செய்தி மட்டுமல்ல. 1981-லே அனுப்பப்பட்டிருக்கிறது என்ற அந்த தகவலையும் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னிடத்திலே மத்திய அமைச்சரிடத்திலே சுட்டிக்காட்ட வேண்டுமென்று கேட்டார். ஏற்கனவே சொல்லியிருக்

கிறோம். இப்போதும் சொல்கிறோம். நீங்களும் கூட நாடாளுமன்றத்திலே இருக்கிற திராவிட முன்னேற்றக்கழக உறுப்பினர்களை வைத்து மத்திய அரசிடத்திலும், அமைச்சரிடத்திலும் இதுகுறித்து வலியுறுத்தினால் அது தமிழகத்தினுடைய தொழில் வளர்ச்சிக்கு வலியூட்டுவதாக இருக்கும்.

(முற்பகல் 10-20)

திரு. வி. வி. சுவாமிநாதன் : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, நிலக்கரியை இந்த சிமெண்ட் ஆலைக்குக் கொண்டு வருவதில் எந்தக் கஷ்டமும் இல்லை என்று தென்னிந்திய ரெயில்வே தெரிவித்தது உண்மையா? ஒரு சிமெண்ட் ஆலை துவக்கினால், 4,5 ஆண்டுக்காலம் உற்பத்தியாவதற்குத் தேவைப்படும். இந்தியாவில் அப்படி சில மாநிலங்களுக்கு சிமெண்ட் ஆலை துவக்க அனுமதி அளித்தும் இந்தியாவிலேயே தமிழ் நாட்டில்தான் அரியலூர் சிமெண்ட் ஆலை குறிப்பிட்ட காலத்திற்கு முன்பே சிமெண்ட் உற்பத்தியைத் துவக்கியிருக்கிறது. ஆகவே ஒரு சிமெண்ட் ஆலை துவக்கப்பட்டு 4, 5 வருஷம் என்ற ஜெஸ்டேஷன் பீரியட் கொடுக்கவேண்டும். சென்ற ஆண்டு நிலக்கரி இல்லையென்ற காரணத்தை மத்திய சர்க்கார் சொல்கிறது. ஆனால், தென்னிந்திய ரெயில்வே அப்படி கஷ்டம் இல்லை என்று சொல்லியிருக்கிறதா? அதை வைத்து நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்திய அரசிடம் உடனடியாக அனுமதி பெற வற்புறுத்துவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வதிலே இரண்டு பிரச்னைகள் இருக்கின்றன. நான் சொன்னது வெய்லபிலிட்டி. அங்கேயிருக்கிற இருப்பு, அவர்கள் கொடுக்கிற அலாட்மெண்ட் பொறுத்தது. அலாட்மெண்ட் கிடைத்தற்குப் பின்னாலே, டிரான்ஸ்போர்ட் செய்து கொண்டு வருவது என்பது ரெயில்வே துறையைப் பொறுத்தது. இங்கே, முதலிலே அலாட்மெண்ட் கிடைப்பதிலேயே பிரச்னை இருக்கிறது. அதைத்தான் நான் முதலிலேயே சொன்னேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிலைமைகளை, நாடாளுமன்றத்தில், திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் எடுத்துச் சொல்ல வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். தமிழகத்திலேயிருந்து தொழில் துறையிலே என்ன, என்ன கோரிக்கைகள் மத்திய அரசுக்கு அனுப்பினோம் அல்லது, மத்திய அரசு எந்த, எந்தக் கோரிக்கைகளை ஏற்கவில்லை என்பதைத் தமிழகத்திலேயிருந்து சென்றிருக்கிற அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கூட்டி, நம்முடைய மாநில அமைச்சர் அவர்கள் நிலைமைகளை விளக்கி, அவர்களுடைய விளக்கத்தைக் கேட்டார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் அவர்களுக்கு இருக்கிற கடமை உணர்வின் மூலமாக பத்திரிகையிலே வருகின்ற செய்திகளை வைத்துக்கொண்டு கூட அவர்கள் தகவல் பெறலாம். அரசுத் துறை அதிகாரிகளைச் சந்தித்துக் கூட அவர்கள் என்ன, என்ன மனுக்கள் அங்கே தேங்கியிருக்கின்றன என்ற விவரங்களைப் பெறலாம். டெல்லியிலே கூட அவர்கள் அங்கேயிருக்கிற நிலைமைகளைப் புரிந்து கொள்ளலாம். சிமெண்ட் ஆலையைப் பொறுத்தவரைக்கும் மனு நிராகரிக்கப்பட்டிருக்கிறது என்கிற விவரம் பல்வேறு நேரங்களிலே சட்டமன்றத்திலேயும் நாடாளுமன்றத்திலேயும் பேசப்பட்டிருக்கிறது. வெளியிலும் சொல்லப்பட்டிருக்கிறது. எல்லா பத்திரிகைகளிலும் வெளி வந்திருக்கிறது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் விவரம் தெரிந்தவர்கள்தான், பத்திரிகைகளை படிப்பவர்கள்தான். அவர்களுக்கு தெரிந்து இருக்கவேண்டும். நாம் வேண்டுகோள் விட்டுத்தான் அவர்கள் செய்ய வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. அவர்களாகவே, அவர்களுடைய கடமைகளைச் செய்வார்கள் என்று நம்புகிறேன்.

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அண்மையிலே நாடாளுமன்றத்தில் ஒரு உறுப்பினர் தொழில் துறை சம்பந்தமாக தமிழ்நாடு அரசு அனுப்பிய விண்ணப்பங்கள் இன்னும் தாமதப்படுவதாகத் தெரிகிறதே, அவர்கள் எவ்வளவு விண்ணப்பித்தார்கள்? நீங்கள் எத்தனை அனுமதித்தீர்கள்? எவ்வளவு இங்கே தேங்கி இருக்கின்றன என்று கேட்டபொழுது, அங்கே அது சம்பந்தப்பட்ட மைய அமைச்சர், தமிழ்நாடு அரசு அனுப்பிய எதுவும் தேங்கியிருக்கவில்லை, அண்மைக்காலத்திலே அனுப்பப்பட்ட ஒரே ஒரு விண்ணப்பம் மட்டும் இன்னும் பதில் அனுப்பப்படாமல் இருக்கிறது என்று அங்கே பதில் சொல்லி, அது பத்திரிகையிலே வந்திருக்கிறது. எனவே, பத்திரிகைகளிலே வருவதைக் கொண்டு ஒரு உறுப்பினர் கேட்கிறபொழுது அந்த அமைச்சர் அப்படிப் பதில் சொல்கிற நிலைமைகள் இருந்தால் அதை மறுப்பதற்கு அந்த உறுப்பினருக்கு அங்கே வாய்ப்பில்லை. எனவே, மத்திய அமைச்சர் சொன்ன பதில் பற்றி இந்த அரசு என்ன பதில் தெரிவிக்கிறது.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு பரிந்துரை செய்திருக்கிற மனுக்கள் அனைத்துக்குமே உரிமங்கள் வழங்கப்பட்டு விட்டன என்றோ, ஒன்றே ஒன்று மட்டுமே தேங்கியிருக்கிறது என்றோ எந்தப் பத்திரிகையிலும் செய்தி வந்திருப்பதை நான் பார்க்கவில்லை. மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் எந்தப் பத்திரிகையிலே பார்த்தார்களோ எனக்குத் தெரியாது. அவர்கள் சொன்ன பதிலிலே என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், சுணக்கங்கள் இல்லை, தேக்கங்கள் இல்லை, கூடிய விரைவிலே நாங்கள் அனுப்பிக் கொண்டிருக்கிறோம், அதிகமான மனுக்கள் அங்கே தேங்கியிருக்கவில்லையென்று சொல்லியிருக்கிறார். எதுவுமே இல்லையென்று சொல்லவில்லை. அதிகமாகத் தேங்கவில்லை

யென்று நாங்களும் ஏற்றுக் கொள்கிறோம். மத்திய அரசு பரிவோடு இருக்கிறது, கனிவோடுதான் இருக்கிறது, உதவி செய்கிறது, மனுக்களை வேகமாகப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. திருத்தணிக்குக் கூட வந்திருக்கிறது. அதைப் போலவே இன்னும் தேங்கியிருக்கிற பாளையம் சிமென்ட் ஆலைக்கும், மற்ற ஆலைகளுக்கும் விரைந்து மனுக்களைப் பரிந்துரை செய்து எங்களுக்கு உரிமம் தர வேண்டுமென்றுதான் கேட்டுக் கொண்டிருக்கிறோம், வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம்.

சென்னையிலுள்ள தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கான ஐ. ஏ. எஸ். பயிற்சி நிலையம்.

*வினா எண் 736 திரு. என். பழனிவேல் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னையில் உள்ள தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு ஐ. ஏ. எஸ். பயிற்சி கொடுக்கும் நிலைய (P.E.T.C.) வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகிறதா?

(ஆ) ஆம் எனில், மாத வாடகை எவ்வளவு கொடுக்கப்படுகிறது?

(இ) அதற்கு சொந்த கட்டிடம் கட்டித்தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) ஆம்.

(ஆ) ரூ. 2000/- (ரூபாய் இரண்டாயிரம்) கொடுக்கப்படுகிறது.

(இ) சென்னையிலுள்ள முன்னோடிப் பயிற்சி நிலையத்திற்கு சொந்தக் கட்டிடம் கட்டிக் கொடுப்பது சம்பந்தமான பொருள் குறித்து ஒரு செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சென்னையிலுள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு ஐ. ஏ. எஸ். பயிற்சி கொடுக்கும் நிலையம் வாடகைக் கட்டிடத்தில் தான் இயங்குவதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். மாத வாடகை இரண்டாயிரம் ரூபாய் கொடுத்துக் கொண்டிருப்பதைவிட புதிதாக ஒரு கட்டிடத்தைக் கொடுப்பதற்கு ஏன் உடனடியாக நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதோடு, மத்திய அரசாங்கம் இந்த ஐ. ஏ. எஸ். பயிற்சி நிலயத்திற்குக் கட்டிடம் கட்டுவதற்கு அல்லது இப்பொழுது கொடுக்கப்படும் வாடகையில் ஏதாவது கொடுத்துக்கொண்டு வருகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி ; மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த முன்னோடிப் பயிற்சி நிலையத்தை நானே நேரடியாகச் சென்று பார்த்திருக்கிறேன். தற்போது இருக்கும் இந்தக் கட்டிடம் மிகவும் பழுதடைந்திருக்கிறது. அதை உணர்ந்து தான் அதை மேற்கொண்டு பழுது பார்க்க தற்போது உடனடியாக இருக்கக்கூடிய குறைகளைக் களைய நடவடிக்கை

களை அரசு எடுத்து வருகிறது. மேலும் புதுக் கட்டிடம் கட்டுவது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவரிடம் நாங்கள் டிசம்பர் மாதம் தெரிவித்திருக்கிறோம். அந்த அடிப்படையில் தகுந்த நிலங்கள் கிடைக்குமானால் அதன்மீது நடவடிக்கை எடுத்துப் புதிய கட்டிடம் கட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த முன்னோடிப் பயிற்சி நிலையத்தைப் பொறுத்தவரையில் 50:50 என்ற வகையில் பாதியை மைய அரசு அந்தச் செலவினங்களில் ஏற்றுக் கொள்கிறது.

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்குப் பயிற்சி கொடுக்கும் இந்த நிலையத்தில் ஐ.ஏ.எஸ். பயிற்சி கொடுக்கப்படுகிறது. இதுவரையில் இந்தப் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்றவர்கள் தேர்ச்சி பெற்று ஐ. ஏ. எஸ். அதிகாரிகளாகப் பொறுப்பேற்றிருக்கிறார்கள் என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதுவரை 41 பேர் ஐ.ஏ.எஸ்,, ஐ.பி.எஸ்.க்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர். மேலும் இரண்டு பேர் தேர்வு பெற்ற இறுதி நேர்முகத் தேர்வுக்குச் செல்ல உள்ளனர்.

பழங்குடி மக்களுக்காக அதிக அளவில் அரசு பள்ளிகள் துவக்கும் திட்டம்.

*வினா எண் 737 திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பழங்குடி சமுதாயத்திற்கு என புதிதாக அதிக அளவில் அரசு பள்ளிகள் துவக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: பழங்குடி மக்களுக்காக 1977–78 ஆம் ஆண்டிலிருந்தே கணிசமான அளவில் பழங்குடியினர் உறைவிடப் பள்ளிகள் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. ஆண்டும், பள்ளிகள் எண்ணிக்கையும் கீழே தரப் பட்டுள்ளன:

ஆண்டு	பள்ளிகள் எண்ணிக்கை.	
1977—78	7	
1978—79	9	
1979—80	10	
1980—81	10	
1981—82	12	புதிதாகத் துவக்கப்
ஆக மொத்தம் ..	48	பட்டுள்ளன.

திரு. இரா. தாமரைக்கனி:—பேரவைத் தலைவரவர்களே, பழங்குடி மக்களின் முன்னேற்றத்திற்காகப் பள்ளிக்கூடங்களை அதிக அளவில் கட்டினாலும்கூட அவர்கள் வாழ்கின்ற பகுதி மலைப் பகுதியாக இருப்பதால் சாலை வசதிகள் இல்லாத பகுதிகளாக இருப்பதால் குழந்தைகள் விரும்பிப் பள்ளிகளுக்கு வருவதில்லை. எனவே குழந்தைகள் அதிக அளவில் பள்ளிக்கு வருகின்ற அளவில் குதிரைகளையும், கழுதைகளையும் வழங்கி அதன்மூலம் மாணவர்களை அழைத்து வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி:—மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பழங்குடி மக்கள் வசிக்கும் பகுதிகளில் சாலைகள் சரியாக இல்லை என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவிக்கிறார்கள். ஆனால் தற்போது தமிழகத்தைப் பொறுத்த வரையில் பழங்குடிகள் துணைத் திட்டத்தின் கீழ் பழங்குடி மக்கள் வசிக்கும் பகுதிகளில் மிகச்சிறப்பாக அவர்கள் சென்று வருவதற்கான சாலை வசதிகளை அரசு மேற்கொண்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவித்திருக்கும் குறைகள் இல்லை. மாணவர்கள் பள்ளிகளுக்குச் செல்வதற்குக் குதிரைகள் வழங்க வேண்டுமென்று கருத்து தெரிவிக்கிறார்கள். அத்தகைய எண்ணம் இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவரவர்களே, பழங்குடி மாணவர்களைப் பல்வேறு முறைகளிலே கவரும் நிலைமை இருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் என்னுடைய தொகுதியில் உள்ள செண்பகத்தோப்பு பகுதியில் மதிய உணவு அளிக்கப்படும். பிள்ளைகளுக்கு மூக்குப்பொடி வழங்கப்படுகிறது. மூக்குப்பொடி வழங்குவதை நிறுத்தினால் மாணவர்கள் பள்ளிக்கு வருவதில்லை. எனவே, இத்தகைய தீய பழக்கங்களிலிருந்து அந்த மாணவர்களை விடுவித்துக் கல்விக்கண் கொடுப்பதற்கு ஏதாவது திட்டம்உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உறுப்பினரவர்கள் தெரிவித்திருக்கும் குறைகள் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. உறுப்பினரவர்கள் தெரிவிப்பார்களேயானால் அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பழங்குடி சமுதாயத்திற்கு எனத் தனியாகப் பெண்களுக்கென அரசினர் உயர்நிலைப் பள்ளி ஒன்று நிறுவுவதற்கு அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வருங்காலத்தில் அதுபற்றி முயற்சிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:— ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரைச் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்].

[முற்பகல் 10.30]

2, தகவல்கோரல்

கூட்டுறவுக் கடன் வசூலில் ஜப்தி நடவடிக்கை.

திரு. சோ. அழகர்சாமி; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அமைச்சர் மாண்புமிகு ஆர். வி. சுவாமிநாதன் அவர்கள், கூட்டுறவுக் கடன் ஜப்தி செய்வது சம்பந்தமாக மதுரையில் பத்திரிகைக்கு நேற்று ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். அதிலே மத்திய அரசு ஜப்தி செய்யச் சொல்லவில்லை, ஜப்தி செய்யாமலேயே வசூலிக்கலாம் என்பது மட்டுமல்லாமல், நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் மத்திய அரசு நிர்ப்பந்திக்காவிட்டால் ஜப்தி செய்யாமல் நிறுத்தி இருக்கலாம், ஜப்தி நடவடிக்கையை நிறுத்தலாம் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னதாக மாண்புமிகு கூட்டுறவு துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்றைக்கு ஆர். வி. சுவாமிநாதன் அவர்கள் வேறுவிதமாக சொல்லி இருக்கிறார்கள். எனவே நான் கேட்கவிரும்புவது, மத்திய அரசு என்னதான் சொல்லியிருக்கிறது என்பதையும், என்ன அறிக்கையை அனுப்பி இருக்கின்றது என்பதையும் இந்த அவையிலே எங்களுக்கு எல்லாம் தெரியக் கூடிய முறையிலே வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதோடு, இந்தக் கூட்டுறவு சம்பந்தமாக ஜப்தி போன்ற நடவடிக்கைகளை இன்று அவர்கள் சொல்லிச் செய்கிறீர்களா அல்லது நீங்களே செய்கின்றீர்களா என்று ஒரே குழப்பமாக இருக்கின்ற காரணத்தினால், இது சம்பந்தமாக தெளிவான நிலைமையை உண்மையை இந்த அவைக்கு தெரிவிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பற்றி இன்று காலையிலே ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதை எடுத்துக் கொள்ள இருக்கிறேன்: (குறுக்கீடு) கொடுத்த உறுப்பினர்களை கேட்டுவிடுகிறேன். அவர்கள் ஏற்றுக்கொண்டால் நீங்கள் பதில் சொல்லலாம். நான் அதை நாளைக்கு எடுத்துக் கொள்வதாக இருக்கிறேன். (குறுக்கீடு) அது வேறு, இது வேறு. ** ** ** இன்று காலையிலே கொடுத்தார்கள். அதை எடுத்துக் கொள்ள வேண்டுமா வேண்டாமா என்று சொல்லுங்கள். அதற்கு இன்றைக்கே அமைச்சர் பதில் சொல்லிவிட்டால் பிரச்சினை தீர்ந்து விடும்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் இதுகுறித்து நேற்றே கொடுத்திருக்கிறோம். இது குறித்து விரிவாகப் பேசி அமைச்சர் பதில் சொன்னால்தான் சரியாக இருக்கும். தயவு செய்து இதை நாளைக்கே எடுத்துக் கொண்டால் நலமாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளைக்கு எடுத்து கொள்ளப் படும்.

திரு. என். எஸ். வீ. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, ** ** என்று சொல்லி இருக்கிறீர்கள், தயவு செய்து அதை நீக்கிவிடும்படி கேட்டுக் கொள்கிறேன்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** ** என்ற வார்த்தைகள் நீக்கப்படுகின்றன.

(ஆ) அரசு அலுவலர்களின் பதவிக்கால நீட்டிப்பு

திரு. அ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைத் தெளிவாகக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அரசாங்க அதிகாரிகளுடைய பதவிக் காலம் நீட்டிப்பு கிடையாது. அந்த உரிய காலம் முடிந்த உடன் அவர்கள் வீட்டுக்கு அனுப்பப்படுவர்கள் என்ற நிலைதான் என்னுடைய ஆட்சியிலே நிலைநிறுத்தப்படும் என்று சொன்னார்கள். ஆனால் எக்சைஸ் கமிஷனர் சுப்பிரமணியம் அவர்களுடைய பதவிக்காலம் முடிந்தும் அவர் மீண்டும் ரி-எம்ப்ளாய்மெண்ட் கொடுக்கப்பட்டிருக்கிறார்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது கொள்கைப் பிரச்சினை. பாயின்ட் ஆப் ஆர்டரில் வராது.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

திருச்சி மாவட்டத்தில் சூறைக் காற்றினால் வாழைகளுக்கு ஏற்பட்ட சேதம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் இரெ. இராசமாணிக்கம், பி. எம். தங்கவேல்ராஜ், பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம் ஆகியோர், "திருச்சி மாவட்டம், தொட்டியம் பகுதியிலும், நத்தம், காடுவெட்டி, சீனிவாசநல்லூர், ஏரிக்குளம் மற்றும் பல்வேறு பகுதிகளில் 27— 3— 82 அன்று வீசிய சூறைக் காற்றினால் சுமார் 200 ஏக்கருக்குமேல் வாழைகள் அழிந்து ரூபாய் 10 இலட்சத்திற்கு மேல் சேதம் ஏற்பட்டுள்ளதால் அப்பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு உடன் நிவாரணம் அளிக்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கவேண்டும்" என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி திரு. இரெ. இராசமாணிக்கம் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 27— 3— 1982 அன்று திருச்சி மாவட்டத்திலே, தொட்டியம் பகுதியிலும், இன்னும் அதனுடைய சுற்றுப் பகுதியிலும் அடித்த சூறைக்காற்றினால், அந்தப் பகுதியிலுள்ள 200 ஏக்கருக்கு மேல் பயிரிட்டுள்ள வாழைகள் அழிந்து, சுமார் 10 லட்சம் ரூபாய் அளவிற்கு சேதம் ஏற்பட்டு இருப்பதாக தகவல் வந்திருக்கிறது. தொட்டியம், நத்தம், காடுவெட்டி, சீனிவாசநல்லூர், ஏரிகுளம், மேடுமகாதானபுரம், குளித்தலை மற்றும் அதனுடைய சுற்றுவட்டாரங்களில் இப்படிப்பட்ட ஒரு கொடிய சூறைக்காற்றினால் பெரிய சேதம் வாழைப்பயிர்களுக்கு விவசாயிகளுக்கு ஏற்பட்டு இருப்பதாக தகவல் தந்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

இந்த வாழைகள் எல்லாம் இன்றையதினம் காய்த்து வெட்டுவதற்காக தயாராக இருந்தபோது, சூறாவளிக் காற்றினால் சேதம் அடைந்திருக்கிறது. அந்தப் பகுதியிலே வாழையை நம்பி வாழ்ந்துகொண்டிருக்கிற அந்த பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் அத்தனையும், இதிலே பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அப்படி வாழையை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கும் குடும்பங்களுக்கு ஏற்பட்டு இருக்கிற நஷ்டத்திற்கு அரசின் சார்பாக நஷ்டஈடு வழங்கவேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அதேநேரத்தில் முழுவதும் அழிந்து இருக்கிற வாழைகளை புதுப்பிப்பதற்கு வாழைகளை மீண்டும் பயிர் செய்வதற்கு பல்வேறு கடன் வசதிகளை அரசு செய்து கொடுக்கவேண்டும். அதோடு வாழைகள் காய்த்து பூவும் பிஞ்சுமாக வெட்டுவதற்கு வராத நிலையில் உள்ள வாழைகளை மீண்டும் பயிர் செய்ய உரம் வைத்து அந்த வாழைகளை உற்பத்தி செய்ய உரக்கடன் வழங்கவேண்டும். அப்படிப்பட்ட நிலையிலே இருக்கிற வாழைகளை மீண்டும் பயிரிட உரம் அரசின் சார்பாக மானிய விலையில் வழங்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இப்படி அடிக்கடி அந்தப் பகுதியில் வாழைகளுக்கு நோய்களும், இப்படிப்பட்ட சூறைக்காற்றினாலே, பாதிக்கப்படுவதாகவும் தகவல் தந்து கொண்டிருக்கிறார்கள், வாழைகள் இன்றையதினம், அந்நியச் செலாவணியை ஈட்டித்தருகின்ற ஒரு பொருளாக இருக்கிறது, அப்படிப்பட்ட ஒரு பொருளுக்கு அடிக்கடி சேதம் ஏற்படுகிறபோது, பல்வேறு நிவாரணங்களை அளிப்பது இந்த அரசினுடைய கடமை. இப்படிப்பட்ட சம்பவங்களையெல்லாம் தீவிரமாக பரிசீலனை செய்து, இந்த அவையிலே விவாதித்து அவர்களுக்கு ஒரு நிவாரணம் அளிப்பது குறித்து பல்வேறு உறுப்பினர்கள் கருத்துக்களைக் கேட்பதற்கு அவையின் இன்றைய அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க தாங்கள் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்திலே, குளித்தலை, முசிறி ஆகிய இரண்டு பகுதிகளிலேயும், குறிப்பாக என்னுடைய தொகுதியாக உள்ள கிருஷ்ணராயபுரம் பகுதியைச் சேர்ந்த மேடு மகாதானபுரம் லாலாப்பேட்டை, பிள்ளைப்பாளையம், முசிரி தாலுகாவைச் சேர்ந்த, தொட்டியம், காட்டுப்புதூர், நத்தம், காடுவெட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த ஊர்களில், சென்ற 27–3-1982 அன்று அடித்த பேய்க்காற்றினாலும், சூறைக்காற்றினாலும், பெரிதாக அந்தப் பகுதியிலுள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் பாதிக்கப்பட்டு, அதனால் ஏராளமான விவாசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். வாழைகள் ஒடிந்திருக்கின்றன. மேலும் அந்தப் பகுதி கொடிக்கால் விவசாயம் நிறைந்த பகுதி. கொடிக்காலும் மிகவும் அழிந்துபோயிருக்கிறது. வாழையும் மிக அதிகமாக அழிந்துபோய் இருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதி மக்கள் மிகவும் கஷ்டப்படுவதாக எனக்குத் தந்திகள், தபால்கள் வந்துகொண்டிருக்கின்றன. மேலும் அந்த பகுதியிலுள்ள மக்கள் அநேகமாக குத்தகை விவசாயிகள், அவர்கள்

அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். குத்தகை விவசாயிகளுக்கு ஆக்ட் 16 ஆப் 1981 படி சலுகை கொடுத்து இரண்டாவது தவணை கட்டணம் கட்டுவதற்கு 31-3-1982 முடிவு வந்திருக்கிறது. ஆகவே, அந்தப் பேய்க்காற்றினால் பாதிக்கப்பட்ட அந்த குத்தகை விவசாயிகளும் இதர பகுதியிலுள்ள விவசாயிகளும் தங்களுடைய அந்தப் பணத்தைக் கட்ட முடியாமல் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, 31–3–1982-ந் தேதியோடு முடிவடைகிற அந்தத் தேதியை மேலும் ஒரு 6 மாதத்திற்கு அதிகப்படுத்தவேண்டுமென்று இந்தச் சமயத்தில் கேட்டுக் கொள்கிறேன். சென்ற 1977 ஆம் ஆண்டு பெரும் புயலாலும் வெள்ளத்தாலும், அந்தப் பகுதி மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டார்கள். அந்தச் சமயத்திலே பாதிக்கப்பட்ட அந்த விவசாயிகளுக்கு ஒரு வாழை ஒடிந்திருந்தால், வாழை ஒன்றுக்கு 2 ரூபாய் வீதம் நஷ்டஈடு கொடுத்தார்கள். உர மானிபம், மேற்கொண்டு விவசாயம் செய்வதற்கு கடன் மானியம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சலுகைகளை மீண்டும் அந்தப் பகுதி மக்களுக்கு கொடுக்கவேண்டும் என்று சொல்வதற்காகவும், மேலும் பல விஷயங்களை பேச வேண்டி இருப்பதால், இந்தச் சபையினுடைய இதர அலுவல்களை ஒத்தி வைத்து இதை எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஈஸ்வர மூர்த்தி என்கிற பி. சொரணம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மார்ச்சு மாதம் கடைசி வாரத்தில் திருச்சி மாவட்டத்திலே தொட்டியம், முசிறி குளித்தலை மற்றும் பல கிராமங்களிலே அடித்த ஒரு கோரமான புயலின் காரணமாக, அந்தப் பகுதியிலே பயிரிடப்பட்ட வாழைகள் எல்லாம் மிகவும் சேதம் அடைந்து கீழே தள்ளப்பட்டிருக்கின்றன. விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் அந்தப் புயலின் காரணமாக.

[முற்பகல் 10.40]

தமிழ்நாட்டில் ஒரு பழமொழி உண்டு. வாழை போட்ட விவசாயியை "வாழை வாழவும் வைக்கும், தாழவும் வைக்கும்" என்ற பழமொழி இங்கே உண்டு. இந்த புயலின் காரணமாக அந்த விவசாயிகளை வாழ வைப்பதற்குப் பதிலாக வாழை அவர்களை தாழ வைத்துவிட்டது. வாழ வேண்டிய விவசாயிகள் தாழ்ந்துவிட்டதன் காரணமாக மீண்டும் அவர்களை வாழ வைக்க என்ன வழி காணவேண்டும் என்ற முறையிலே அந்தப் புயல் இங்கேயும் அடித்து பதட்ட நிலை உருவாகியிருக்கிறது. அந்த விவசாயிகளின் பதட்ட நிலையைப் போக்கவும் அவர்களுக்கு என்னென்ன உதவிகள் செய்ய வேண்டும் என்பது பற்றியும், அவர்களுக்கு அளிக்க வேண்டிய பல்வேறு நிவாரணங்கள் பற்றியும் விரிவாகப் பேசி முடிவு காணவேண்டியிருப்பதால் அவையின் இன்றைய இதர அலுவல்களை ஒத்திவைத்து, இது பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: மாண்புமிகு தலைவரவர்களே, சென்ற மாதம் 26–ந்தேதி இரவு 9 மணிக்கு திடீரென்று வீசிய சூறாவளிக் காற்றினால் திருச்சி மாவட்டம் தொட்டியம் நத்தம், சீனிவாசநல்லூர், காடு வெட்டி முதலிய பலவேறு

பகுதிகளில் சுமார் 2 இலட்சம் வாழைகள் பாதிக்கப்பட்டுள்ளன. சேதம் ஏறத்தாழ 20 இலட்சம் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. குளித்தலை மற்றும் முசிறிப் பகுதிகளிலுள்ள சேதம் பற்றிய கணக்கு இன்னும் சரியாக வரவில்லை. வேளாண்மை மற்றும் வருவாய்த் துறை அலுவலர்களின் ஒத்துழைப்புடன் விரிவான ஆய்வு செய்து பாதிக்கப்பட்ட விவசாயிகள் குறித்து முழு அறிக்கை ஒன்று இரு வாரத்திற்குள் அனுப்பி வைக்கப்படும் என்று தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் தெரிவித்துள்ளார். திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் பாதிக்கப்பட்டவர்கள் கூட்டுறவு வங்கிகள் மூலமாக பெற்றிருக்கும் விவசாயக் கடன்களை வசூலிப்பதை ஓராண்டு காலத்திற்கு தள்ளிபோட அரசுக்கு பரிந்துரை செய்வார். கடந்த ஆண்டுகளில் அரசு வழங்கியிருப்பது போல ஒரு ஏக்கருக்கு ரூ. 500 வீதம் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பரிந்துரை செய்வார்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

மாண்புமிகு உறுப்பினர் சொரணம் அவர்கள் வாழை வாழவும் வைக்கும், தாழவும் வைக்கும் என்று சொன்னார்கள். வாழை வாழ வைக்கிறதோ இல்லையோ, இந்த அரசு அவர்களை வாழ வைக்கும் என்ற உறுதியைத் தந்து, இதுபற்றி அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது

4. கவன ஈர்ப்புகள்.

(அ) இலவச மதிய உணவுத் திட்டம் பழனி ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் நிறுத்தப் பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருவாளர்கள் என். பழனிவேல், டி. மணி, என். வரதராஜன், திருமதி ஏ. எஸ் பொன்னம்மாள் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு துணைத் தலைவரர்களே. ''பழனி ஊராட்சி ஒன்றிய பள்ளிகளில் பயிலும் ஏழை மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த இலவச மதிய உணவு கடந்த 1-3-1982 முதல் நிறுத்தப்பட்டுள்ளதால் குழந்தைகள் மத்தியிலும் பெற்றோர்கள் மத்தியிலும் எழுந்துள்ளநிலை குறித்த'' அவசரப்பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்விஅமைச்சர் அவர்களின் கவனத்திற்குக்கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: துணைத் தலைவரவர்களே, மைய சமையற்கூடங்கள் செயல்படாத பகுதிகளில் உள்ள தொடக்கப் பள்ளி நண்பகல் உணவு மையங்களில் தனியார் பள்ளி மையங்களுக்கும் அந்தந்த உள்ளாட்சி மன்றம் 5 காசு பங்குத்தொகையை (அதாவது ஒரு குழந்தைக்கு நாளைக்கு 5 காசு வீதம் 200 நாட்களுக்கு) தரவேண்டும் என்பதை 1—10—79 முதல் அமுலாக்கி 28-9—79 அன்று அரசு ஆணை வெளியிட்டது. அவ்வாறு கொடுப்பதனால் அந்த உள்ளாட்சி மன்றங்களுக்கு ஏற்படும் செலவை 'ஏற்பளிக்கப்பட்ட' செலவினமாகக் கருதித தொடக்கக் கல்விக்கான அரசுமானியம் பெறும் பொழுது கணக்கில் எடுத்துக் கொள்ளலாம் என்றும் ஆணையிடப் பட்டது.

மேற்கண்ட ஆணையின்படி பழனி ஊராட்சி ஒன்றிய எல்லைக்குட்பட்ட தனியார் பள்ளிகளின் நகரப் பஞ்சாயத்துக்களின் (அதாவது பேரூராட்சிகளின்) எல்லைக்குள் அமைந்த தனியார் பள்ளிகளின் மதிய உணவு மையங்களுக்கு 1981 டிசம்பர் முடியவுள்ள காலாணடிற்கான 5 காசு பங்குத்தொகை உரிய காலத்தில் கொடுக்கப்படவில்லை, இதுபற்றி பழனி ஊராட்சி ஒன்றியத்திடம் விளக்கம் கோரப்பட்டது. இப்பொழுது அவ்வகையில் அப்பள்ளிகளுக்குச் சேரவேண்டிய நிலுவைத் தொகை ரூ 11,977 முழுவதையும் உடனடியாக பழனி ஊராட்சி ஒன்றியம் 17—3—82 அன்று வழங்கி விட்டதாக அறிக்கை வந்துள்ளது. மற்றும் பழனி உதவிக் கல்வி அலுவலர் தொடர்ந்து மதிய உணவு வழங்க தக்க நடவடிக்கைகள் எடுத்துள்ளார் என்றும் அறியலாகிறது.

திரு. என். பழனிவேல்: துணைத் தலைவரவர்களே, இந்த ஊராட்சி ஒன்றியத்தில் பயிலக்கூடிய ஆரம்பப்பள்ளி மாணவர்களுக்கு, குறிப்பாக ஏழை எளிய மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த இந்த மதிய உணவு கடந்த மார்ச் மாதம் 1-ந்தேதி முதல் நிறுத்தப்பட்டுவிட்டது. அதற்குக் காரணம் இன்றையதினம் ஊராட்சி ஒன்றிய பள்ளிகளை எல்லாம் அரசு எடுத்துக்கொண்டதால் அங்கே இருக்கிற ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் பணம் கொடுப்பதற்கு மறுத்து, அதை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். அதனால் 3, 4 மாதங்களாக மதிய உணவு கொடுக்கப்படாமல் நிறுத்தப்பட்டு விட்டது. சுமார் 12,000 ரூபாய் பங்குத் தொகையை கொடுக்காத காரணத்தால் அந்த தலைமை ஆசிரியர்கள் தாக்குப் பிடிக்க முடியாமல் வாங்கிய கடனையும் கட்ட முடியாமல் மதிய உணவு வழங்குவதை நிறுத்திவிட்டார்கள். அதனால் சுமார் 20 நாட்களுக்கு அங்கே ஏழை எளிய குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்கப்படாமல் அந்த ஏழை குழந்தைகளைப் பட்டினி போட்டதற்காக பொறுப்பை அரசு ஏற்க வேண்டிய பரிதாபகரமான நிலை ஏற்பட்டிருக்கிறது.

இன்றைக்கு, 5 பைசா ஊராட்சி ஒன்றியங்களில் இருந்தும், 10 பைசா அரசாங்கத்திலிருந்தும் கொடுக்கப்படுகிறது. இந்த 15 பைசாவை வைத்துக்கொண்டு, இன்றைக்கு ஏழைக் குழந்தைகளுக்கு உணவு போட முடியுமா என்பதை அரசு சிந்தித்துப் பார்த்து, அந்தத் தொகையை அதிகரிக்க வேண்டும். ஒரு மாணவனுக்கு 25 பைசா என்கிற அளவிலாவது கொடுப்பதற்கு

அரசு ஆணை பிறப்பிக்க வேண்டும். அதேபோல், நகராட்சி ஆரம்பப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு இன்றைக்கு மதிய உணவுத் திட்டம் இல்லை. அங்கேயும் அமல்படுத்த வேண்டும். (மணியடிக்கப்பட்டது) இன்றைக்கு மதிய உணவு சமைக்கும் பொறுப்பை தலைமையாசிரியர்களிடத்தில் கொடுத்து இருக்கிறார்கள். ஆகவே, வகுப்புகள் நடத்துவது பாதிக்கப் படுகிறது. இதையும் தடுத்து நிறுத்த வேண்டும் என்று கேட்டு, இதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்குமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மீது கேள்வியாகக் கேட்டுத்தான் பதில் பெற வேண்டுமே தவிர, மானியக் கோரிக்கை மீது பேசுவது போல் பேசக்கூடாது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இப்போது நாம் ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களைத்தான் அரசு ஊழியர்களாக ஆக்கியிருக்கிறோமே தவிர பள்ளிக்கூடங்களை நாம் எடுத்துக் கொண்டதாகச் சொல்வது சரியல்ல. ஆகவே, பஞ்சாயத்து யூனியன்கள் மற்ற பொறுப்பு களை நிறைவேற்ற வேண்டும். அதிலே சில இடங்களில் ஏற்பட்டு விட்ட தவறால் இத்தகைய நிலைமைகள் இருக்கின்றன. இன்று அதைத் தெளிவு படுத்தியிருக்கிறோம். இனிமேல் அத்தகைய தவறு நடக்காது என்று நினைக்கிறேன். மற்றபடி, ஆசிரியர்கள் அந்தத் திட்டத்தை ஏற்று நடத்துவது கல்விப் பணிக்கு குந்தக மாக இருக்கிறது என்பதை அரசு ஏற்றுக் கொள்கிறது. இந்த முறையில் மாறுதல் செய்வது என்பதை நாம் பல்வேறு சூழ் நிலைகளை வைத்து ஆராய வேண்டியிருக்கிறது. புதிய திட்டம் ஒன்றை இப்போது அரசு அறிவித்து இருக்கிறது. அந்தச் சூழ் நிலையில் ஏதாவது மாறுதல் ஏற்படுமானால் அதை இந்தத் திட்டத்திற்குத் தகுந்த மாதிரி இந்த அரசு பயன்படுத்திக் கொள்ளும்.

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் பள்ளியை எடுக்க வில்லை, ஆசிரியர்களைத் தான் அரசு ஊழியர்களாக எடுத்து இருக்கிறோம் என்று சொன்னார்கள், அது எப்படி இருந்தாலும் இன்றைக்கு ஒரு குழந்தைக்கு 10 பைசா அரசாலும் 5 பைசா ஒன்றியத்தாலும் கொடுக்கப்படுவதை, ஒன்றாக இணைத்து—மாண்புமிகு உறுப்பினர் பழனிவேல் சொன்னது போல்—அதிகரித்துக் கொடுக்க வேண்டும். இப்போதுள்ள சூழ்நிலையில் எந்தச் சாமானும் அந்த 15 பைசாவில் வாங்கும் நிலைமை இல்லை. ஆகவே, அதை மாற்றி, அதிகமான அளவிற்கு இதற்கு 20 பைசா, 25 பைசா என்று கொடுத்து, அந்தச் சமையலைக் கான்ட்ராக்ட் முறையில் செய்து, உணவு வழங்குவதற்கான ஏற்பாடுகளை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : துணைத் தலைவர் அவர்களே, இப்போது பல்வேறு சிரமங்கள் பலபேருக்கு இருக்கலாம். ஆனால் இந்தத் திட்டத்தை நல்ல முறையில் நிறைவேற்ற வேண்டும் என்பதில் இந்த அரசு அக்கறை கொண்டு

இருக்கிறது. அந்தச் சிரமங்களைக் குறைக்க வேண்டும் என்ப தற்கும் நாம் அவ்வப்போது பரிசீலனை செய்து கொண்டு இருக்கிறோம். அரசு இப்போது புதிதாக ஒரு திட்டத்தை அறிவித்து இருக்கிறது. இந்தத் திட்டத்தைப் பரிசீலித்து அமல் படுத்துகிற நேரத்தில், அதோடு தொடர்புடைய இந்தத் திட்டமும் மாண்புமிகு உறுப்பினர் எதிர்பார்ப்பது போல் சில நல்ல மாறுதல்களை அடையும் என்று நான் நினைக்கிறேன்.

திரு. என். வரதராஜன்: துணைத் தலைவர் அவர்களே, இந்த மதிய உணவுத் திட்டத்திற்காக நாம் நிர்ணயித்த தொகை 10–15 ஆண்டு காலத்திற்கு முன்பு செய்யப்பட்டது. இப்போது தாறுமாறாக விலையேறி இருக்கின்ற நேரத்தில், அப்போது நாம் ஒதுக்கிய பணத்தையே கொடுத்துக் கொண்டு வருவதால், மதிய உணவுத் திட்டத்தை சரியாக நடத்த முடியவில்லை. அதன் காரணமாகவே பல பள்ளிகளில் இந்த மதிய உணவுத் திட்டம் இன்று தோல்வியடையும் சூழ்நிலையில் இருக்கிறது. இந்த ஆண்டு நம்முடைய பட்ஜெட்டில் அதிகப் பணம் ஒதுக்கி புதிய திட்டம் ஒன்று அறிவித்துள்ளதால், இந்த மதிய உணவுத் திட்டத்தையும் பரிசீலித்து, இந்தத் திட்டத்திற்கும் கூடுதலான உதவி செய்து, எல்லாப் பள்ளிகளிலும், இந்த மதிய உணவுத் திட்டத்தை நல்ல முறையில் நிறைவேற்ற அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: துணைத் தலைவர் அவர்களே, புதிய திட்டம் 2 வயது முதல் 10 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு உணவு வழங்குவதற்காக அறிவிக்கப் பட்டுள்ளது. அந்தத் திட்டத்தை இப்போது அமல் செய்ய இருப்பதால், அதனுடைய நடைமுறைகளைப் பரிசீலித்து, அதை அமல்படுத்துகிற நேரத்தில், சில மாறுதல்கள் ஏற்படும் என்று கருதுவதால், அந்த மாறுதல்களை இந்த மதிய உணவுத் திட்டத் திற்கு நாம் பயன்படுத்திக் கொள்ள இருக்கிறோம்.

(ஆ) சிவகாசியில் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் வரிச்சுமையினால் மூடப்படும் நிலை.

திரு. இரா. தாமரைக்கனி: துணைத் தலைவர் அவர்களே, ''முகவை மாவட்டம் சிவகாசி பகுதியில் உள்ள சிறு தொழில் அளவில் செய்யப்பட்டு வந்த தீப்பெட்டி தொழிலுக்கு தற்பொழுது உள்ள வரிச் சுமையின் காரணமாகப் பல தொழிற் சாலைகள் மூடப்படும் நிலை உள்ளதால் 10,000 தொழி லாளர்கள் வேலை வாய்ப்பு இழக்கும் நிலை குறித்து'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழி லாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(முற்பகல் 10–50)

*** மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** துணைத் தலைவர் அவர்களே,

வரிச்சுமை காரணமாக சிவகாசியில் எந்த தீப்பெட்டி நிறுவனமும் இதுவரை மூடப்படவில்லை என்றும் (எனவே தொழிலாளர்கள் யாரும் வேலையிழக்கவில்லை), ஆனால் இக்காரணத்தை முன்னிட்டு சில தொழிற்சாலைகள் மூடப்படுவதற்கு வாய்ப்புகள் உள்ளன என்றும், அவ்வாறு தொழிற்சாலைகள் மூடப்பட்டால் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்படலாம் என்றும் அறியப்படுகிறது. மேலும் தொழிற்சாலைகள் மூடுதல் பற்றி, இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியாளர், சாத்தூர் வட்டாச்சியர் மற்றும் மத்திய ஆயத்தீர்வை அலுவலர் (Central Excise Inspecto) ஆகியோர்களுக்கு தகவல் ஏதும் இல்லை என்றும் அறியப்படுகிறது.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வந்தபின் காப்பதை விட வரும் முன் காக்க வேண்டும் என்ற அடிப்படையிலே தான் இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளது. கொக்கோ கோலா கம்பெனியை அரசு தடை செய்ததன் மூலம் பல்வேறு நகரங்களில் குளிர் பான நிறுவனங்கள் லாபகரமாகச் செயல்படுகின்றது. வேலை வாய்ப்பு மற்றும் பல்வேறு வளர்ச்சிகள் அடைந்துள்ளது. ஆகவே அதே போன்று இயந்திரத்தால் தீப்பெட்டி செய்யப்படும் விம்கோ நிறுவனத்தைத் தடை செய்தால் குடிசைத் தொழிலான தீப்பெட்டித் தொழில் வளர்வதற்கும் வேலைவாய்ப்பு பெருகுவதற்கும் பேருதவியாக இருக்கும். எனவே விம்கோ நிறுவனத்தைத் தடை செய்ய அரசு முன்வருமா? அல்லது ஒரு கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வருகின்ற வகையிலே அவற்றின் உற்பத்தியைக் கட்டுப்படுத்தி குடிசைத் தொழிலைக் காப்பாற்ற அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றி எல்லாம் இண்டஸ்ட்ரீஸ் டிப்பார்ட்மெண்டிடம் கேள்வி போட வேண்டும் என்று நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிராமக் கைத்தொழில் அமைச்சர் அவர்களுக்குத்தான் இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்தேன். ஆனால் இலாக்காவை மாற்றி இருப்பதற்கு நான் என்ன செய்ய முடியும். ஆகவே கேள்வி கேட்கிறேன். பின்னால் அரசு பரிசீலனை செய்ய வேண்டும் என்பதற்காக இன்னொரு கேள்வி கேட்கிறேன்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அப்படிக் கேட்டால் அமைச்சர் அவர்களால் பதில் சொல்ல முடியாது.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கையினால் செய்யப்படும் தீப்பெட்டிக்கு தமிழக அரசு விற்பனை வரி விலக்களிக்க உத்தேசம் உண்டா? சிற்றூர்களிலும் மற்றும் காதி கிராமத் தொழில் நிறுவனத்தின் மூலமும் கையினால் செய்யப்படும் தீப்பெட்டிகளுக்கு 1-10-1981க்கு முன்பு

இருந்த எக்ஸைஸ் ட்யூட்டியையே தற்போதும் நிர்ணயம் செய்ய நமது அரசு மத்திய அரசினை வலியுறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் துணைதலைவர் அவர்களே, இது மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரிடமும் சிறு தொழில் துறை அமைச்சரிடமும் கேட்கவேண்டிய கேள்வி என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு எஃபெக்ட் இல்லாமல் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. அதனால் மீண்டும் ஒருமுறை இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தை கிராமத் தொழில் துறை அமைச்சரின் மூலமாகக் கொண்டுவர ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எஃபெக்ட் எல்லாம் நிறைய இருக்கின்றது.

5. அறிக்கை அளித்தல்.

சட்ட விதிகள் ஆய்வுக் குழு.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் சட்ட விதிகள் ஆய்வுக்குழுவின் மூன்றாவது (ஏழாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையை குழுவின் சார்பிலே பேரவைக்கு அளிக்கிறேன். போதிய அவகாசம் இல்லையால் அறிக்கையின் அச்சிட்ட பிரதிக்குப் பதிலாக படி எடுத்த அறிக்கை அளிக்கப்படுகின்றது. அறிக்கையின் இரு நகல்கள் சட்ட மன்ற நூலகத்தில் உறுப்பினர்களின் பார்வைக்காக வைக்கப்படுகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

6. அரசினர் தீர்மானம்.

விதி 30 (3)-ன் கீழ் அலுவல் வரிசையில் மாற்றம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் மேலவை விவாதத்திலே கலந்து கொள்ள வேண்டி இருப்பதன் காரணத்தால் அத்துறை சம்பந்தப்பட்ட சட்ட முன் வடிவுகளைத் தள்ளி வைத்து மற்றைய அதற்கடுத்திருக்கின்ற சட்ட முன் வடிவுகளை வரிசையாக எடுத்துக் கொள்ளலாம் என்பதற்காக இத்தீர்மானத்தைக் கொண்டு வருகிறேன்.

பேரவையின் விதி 30 உள்விதி 3-ன் கீழ் பின்வரும் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இன்றைய நிகழ்ச்சி நிரலில் இனம் 4 அரசினர் சட்ட முன் வடிவுகள் ஆய்வு செய்தல் என்ற தலைப்பின் கீழ் வரிசை எண் (1) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு குடியிருப்புச் சட்டங்கள் திருதம்

சட்ட முன் வடிவைத் தள்ளி வைத்து மற்ற சட்ட முன்வடிவு களைத் தொடர்ந்து வரிசை முறையில் எடுத்துக் கொள்ள வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப் பெற்றது.

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக்கழக (திருத்தம் தனி விதித்துறைகள்) சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1982 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக்கழக (திருத்தம் தனி விதித்துறைகள்) சட்ட முன்வடிவு*(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 10/1982) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறவேண்டும''.

சென்னையில் ஏற்படுத்தப்பட்டுள்ள தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்திற்கு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது யாவருக்கும் தெரியும். அவ்வாறே 1978 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகச் சட்டத்திலும் காணப் படுகின்றது.

ஆனால் சிற்சில சமயங்களில் அலுவலகக் கடிதங்களிலும் குறிப்புகளிலும் பத்திரிகைகளிலும் இந்தப் பல்கலைக் கழகத்தைப்பற்றிக் குறிக்கும்போது சுருக்கமாக PAUT என்று ஆங்கிலத்தில் குறிப்பிடப்படுகின்றது. பல்கலைக் கழகம் அதனுடைய முழுப் பெயரால் சில தருணங்களில் அழைக்கப் படுவதில்லை. மேலும் சில அரசு நிறுவனங்களுக்கு எடுத்துக் காட்டாக, Anna institute of Management, Anna Transport Corporation என்றும் சில இடங்களுக்கு அண்ணா நகர், அண்ணா சதுக்கம் என்றும் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன. எனவே பாரதியார் பல்கலைக் கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம் ஆகியவை போன்று எளிய சுருக்கமான பெயர் அமையும் பொருட்டும் பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக்கழகத்தின் புகழை உலக அளவிலும் தேசிய அளவிலும் நன்றாகப் பரப்புவதற் காகவும்'' பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம்'' என்னும் பெயரை ''அண்ணா பல்கலைக் கழகம் என்று மாற்றவும், பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலை கழகச் சட்டத்தை, அண்ணா பல்கலைக் கழக சட்டம் என்று மாற்றவும் அரசு முடிவு செய்துள்ளது. அம்முடிவிற்கு ஏற்ப 1978 ஆம் ஆண்டு மூலச் சட்டத்தை உரிய முறையில்

* 1982 பிப்ரவரி 11-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

திருத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய தீர்மானங்களுக்கு செயல்வடிவம் கொடுக்க இச்சட்ட முன்வடிவு தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சட்ட முன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளு மாறும் பின்பு நிறைவேற்றித் தருமாறும் பேரவைக்குப் பரிந் துரைக்கிறேன்.

திரு. து. புருஷோத்தமன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம் என் தொகுதியாகிய சைதாப்பேட்டையில் இருப்பதால் அதன் மீது அதிக அக்கறை எடுத்துக்கொண்டு இந்தப் பெயரை மாற்றக் கூடாது என்று என் கருத்தை எடுத்து வைத்து சில கருத்துக்களை நான் இங்கே வைக்க விரும்பு கிறேன். இந்த அரசாங்கம்தான் 1978-ல் இதே பல்கலைக் கழகத்திற்கு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம், டெக்னாலஜிக்கல் யூனிவர்ஸிட்டி, என்று பெயர் வைத்தார்கள். ஏன் இந்த திடீர் மாற்றம்? இப்போது இந்தப் பெயரை ஏன் சுருக்கவேண்டுமென்று விரும்புகிறார்கள் என்று தெரியவில்லை. அண்ணா அவர்களைப்பற்றி அதிகமாகச் சொல்லவேண்டியதில்லை. அண்ணா அவர்கள் அறிவாற்றல் மிக்கவர், தத்துவமேதை, தீர்க்கதரிசி, சிறந்த நிர்வாகி, ஆகவே தான் அவர்களை பேரறிஞர் அண்ணா என்றும் அறிஞர் என்றும் அழைக்கிறோம். பெருந்தலைவர் என்றால் எப்படி காமராஜ் அவர்களைக் குறிக்கிறதோ, மூதறிஞர் என்றால் எப்படி ராஜாஜி அவர்களைக் குறிக்கிறதோ, பெரியார் என்றால் எப்படி தந்தை ஈ வெ.ரா அவர்களைக் குறிக்கிறதோ கலைஞர் என்றால் எப்படி நம் எதிர்க்கட்சித் தலைவர் அவர் களைக் குறிக்கிறதோ அதேபோல்.... மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை பெயரிட்டு அழைக்காமல் புரட்சித் தலைவர் எம் ஜி.ஆர். என்று எப்படி சொல்கிறார்களோ, இப்போது எம்.ஜி.ஆர். என்று பெயர்கூட சொல்லவில்லை. புரட்சித் தலைவர் என்று சொல்கிறார்கள், அதேபோல்தான் பேறிஞர் அண்ணா என்று அழைக்கிறோம். இப்போது அந்தப் பெயரை ஏன் மாற்றவேண்டும் என்று சொல்கிறீர்கள்? பெயர் எடுப்பது என்பதில் இந்த ஆட்சி பலசந்தர்ப்பங்களில் எடுத் திருக்கிறார்கள். நல்லவற்றைச் செய்து பெயர் எடுக்க வேண்டும். ஆனால் இப்போது நீங்கள் எடுத்த பெயர்கள் எல்லாம் எவை என்பதற்கு ஒரு உதாரணத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

நம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் பெயர் எங்கெங்கே இருக்கிறதோ அவற்றை எல்லாம் எடுக்கவேண்டும் என்ற முறையில் இந்த அரசு செயல்பட்டு வருகிறது. பூங்காவில் இருக்கிற அவர்களது பெயரை எடுத்திருக்கிறது, அதேபோல் விளையாட்டு மைதானம், சமூகக்கூடம், சாலைகளில் உள்ள வளைவுகளில் உள்ள பெயர்கள் இவைகளையெல்லாம் எடுக்க வேண்டும் என்ற முறையில் இந்த அரசு செயல்படுகிறது. அண்ணா சாலையில் வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான ஒரு பெரிய பிரம்மாண்டமான கட்டிடத்திற்கு, 10 மாடிக் கட்டிடத்திற்கு—வீட்டு வசதி வாரியத்தின் மூலமாகக்

கட்டப்பட்டது—அந்த வாரியமே முன் நின்று ஒரு தீர்மானம் போட்டு கலைஞர் கருணாநிதி மாளிகை என்று இருக்கவேண்டும் என்று வாரியமே தீர்மானம் போட்டு—அந்த வாரியம் வருவதற்கு உறுதுணையாக இருந்த கலைஞர் அவர்களின் பெயரை வைத்திருந்தார்கள்—செய்ததை அதை நீக்கவேண்டும் என்று வாரியம் தீர்மானம், போடவில்லை அரசே தீர்மானம் போட்டு ஒரு உத்தரவு போடுகிறது. இரவு 12 மணிக்கு அதிகாரிகள் வந்து அந்தக் கட்டடத்தின் பெயரை நீக்க முயற்சி செய்தார்கள். அந்தப் பகுதியிலே உள்ள பொதுமக்கள் யாரோ சமூக விரோதிகள் என்று நினைத்து ஒரு பெரிய சர்ச்சை ஏற்பட்டு, எனக்கு அது தெரிந்தவுடன் நான் சென்று அதிகாரிகளைக் கேட்டபோது எங்களுக்கு உத்தரவு இருக்கிறது. ஆனால் இரவிலே வந்தது தவறு என்று சொன்னதற்குப் பிறகு அந்தப் பொதுமக்களை விலகச்செய்தேன் அதன் காரணமாக என்மீது கட்டடத்தை இடித்ததாக வழக்கு, பல்வேறு சேதங்கள் விளைவித்ததாக வழக்கு, என் மீதும் 15 கழகத்தோழர்கள் மீதும் 3 ஆண்டுக்காலம்....

[முற்பகல் 11.00]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: துணைத் தலைவர் அவர்களே, இப்போது விவாதத்திற்கு எடுத்துக்கொண்டிருக்கின்ற பொருள் பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்தை அண்ணா பல்கலைக் கழகம் என்று மாற்றுவது என்பதாகும். இதற்கும் மாண்புமிகு உறுப்பினர் பேசுவதற்கும் சம்பந்தம் இல்லை. இதை விவாதித்து நிறைவேற்றித் தந்து விடலாம். அதை வேறு சந்தர்ப்பத்திலே வைத்துக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. து. புருஷோத்தமன்: நான் உதாரணத்திற்காகச் சொன்னேன் அமைச்சர் அவர்கள் வேண்டாமென்றால் நான் கூறாமல் விட்டுவிடுகிறேன். அந்தப்பல்கலைக் கழகத்தின் நிர்வாகத்திலே பல்வேறு சீர்த்திருத்தங்களைச் செய்யவேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களிடத்திலே சொல்லியிருக்கிறேன். அங்கே உள்ள பணியாளர்கள், ஊழியர்கள் ஆகியோருடைய வேண்டுகோள் நீண்ட காலமாக தீர்க்கப்படாமல் இருந்து வருகிறது. அதையெல்லாம் செய்யாமல் இப்போது பெயரை மாற்ற நடவடிக்கை எடுக்கப்படுகிறது, அங்கேயுள்ள தொழில் சங்கத்தில் உள்ள பலர்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது, பலரை வேலை நீக்கம் செய்திருக்கிறார்கள், அதிலே ஒட்டு மொத்தமான ஆதரவு எனக்கு இருக்கிறது என்று நான் சொல்லவரவில்லை. தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டதால் அவர்களுடைய மனைவிகள் எல்லாம் அந்தத் தாய்க்குலம் நீண்ட ஊர்வலத்தை நடத்தி இருக்கிறாகள். அதையெல்லாம் கவனித்து நடவடிக்கை எடுக்கவில்லை. ஆனால் இந்தப் பெயரை மாற்றவேண்டுமென்று யாருமே சொல்லவில்லை. ஏன் செய்கிறார்கள் என்றும் தெரியவில்லை. ஆனால் காரண காரியங்களைச் சொல்கிறார்கள், பாரதியார் பல்கலைக் கழகம் என்றும் பாரதிதாசன் பல்கலைக் கழகம் என்றும் சுருக்கமாக இருப்பதைப் போல் இருக்கவேண்டுமென்பதற்காகச் செய்கிறோம்

என்று சொல்கிறார்கள். நான் கேட்கிறேன், மதுரையிலே ஒரு பல்கலைக் கழகம் இருக்கிறதே, மதுரை காமராஜ் பல்கலைக் கழகம் என்று இருக்கிறதே அது நீண்ட பெயராக இல்லையா? உங்களுடைய கட்சியின் பெயர் என்ன? அண்ணா தி.மு.க. என்று இருந்தது. பல்வேறு சூழ்நிலைகளுக்குத் தகுந்தாற்போல் அகில இந்திய அண்ணா தி.மு.க என்று மாற்றி இருக்கிறீர்களே, அது நீண்டதாக இல்லையா, அதிலே ஏன் சுருக்கவில்லை? இதிலே மட்டும் யாரும் கோரிக்கை எழுப்பாத நிலையில் நீங்களாகவே முன்வந்து பேரறிஞர் அண்ணா அவர்களின் புகழைக் குறைக்கவேண்டுமென்பதற்காக வேறு யாருடைய பெயரோ விளங்கவேண்டும் என்பதற்காகச் செய்கிறீர்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே அப்படியே அந்தப் பெயர் இருக்கவேண்டும். டெக்னிக்கல் யுனிவர்சிடி என்ற முறையிலே தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம் இருப்பது தமிழ்நாட்டிலே இது ஒன்று தான். பேரறிஞர் அண்ணா என்ற பெயரை எடுக்கிறீர்கள். தொழில் நுட்ப என்ற பெயரையும் எடுக்கிறீர்கள் எல்லாப் பல்கலைக் கழகங்களைப் போல் இது பல்கலைக்கழகம் மட்டுமல்ல, தொழில் நுட்பப் பல்கலைக் கழகமாக இருக்கிறது. ஆகவே அந்தப் பெயர் அப்படியே இருக்கவேண்டும். பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பெயர் அப்படியே இருக்கவேண்டும். தொழில் நுட்பவியல் என்பதும் அப்படியே இருக்கவேண்டும், பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக்கழகம் என்று அப்படியே இருக்க வேண்டுமென்று நான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே எடுத்து வைத்து அமைகிறேன்.

திரு. கோவைத்தம்பி: உறுப்பினர் பேசும்போது பில்லைப் பற்றி பேசாமல் கட்சியைப்பற்றிப் பேசுகிறாரே அது சரியா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டு பக்கமும் பாணி அப்படித்தான் இருக்கிறது.

திரு. ரா. கிருஷ்ணன்: பேரறிஞர் அண்ணா யுனிவர்சிடி ஆட டெக்னாலஜி என்று இருப்பதை மாற்றி பெயர் சுருக்கத்தைக் கொண்டுவருவது சம்பந்தமாக கொண்டுவந்திருக்கின்ற இந்த மசோதாவை நான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார் பாக வரவேற்கிறேன். பெயர் பழக்க வழக்கத்திற்காக சுருக்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. நல்ல அம்சப் தான். பொதுவாக நான் கூறுவது, ஏதாவது ஒரு நிறுவனத் திற்குப் பெயர் வைக்கிறபோது பல சந்தர்ப்பங்களிலே சில பிரச்சினைகள் உருவாகி இருக்கின்றன. குறிப்பாக டிரான்ஸ் போர்ட் கார்ப்பரேஷன் சம்பந்தமாக சில பெயர்களை வைத்து ஒரு கான்ட்ரோவெர்ஷியலாக ஆகி அதற்குப் பிறகு அதை மாற்றவேண்டிய நிலை ஏற்படுகிறது. இப்போது பல்வேறு சந்தர்ப்பங்களில் சில தலைவர்களுடைய பெயர்களை வைக்கிற நேரத்திலே அதை நிதானமாக சிந்தித்து வைத்தால் அதற்குப் பிறகு மாற்றக் கூடாது என்ற உணர்வோடு பெயர் வைப்பது பொருத்தமாக இருக்கும். சில காரணங்களினால் மாற்ற வேண்டிய நிலை ஏற்படுகிறபோது அது சில நேரங்களிலே ஒரு கவுரவப் பிரச்சினையாக வந்துவிடக்கூடிய நிலை

ஏற்படுகிறது. இனி வரக்கூடிய காலங்களிலாவது தலைவர்களுடைய பெயர்களை வைக்கிறபோது பின்னாலே எந்தப் பிரச்சினை வந்தாலும் மாற்றவேண்டிய நிலை வராது என்ற அளவில் கான்ட்ரோவெர்ஷியல் இல்லாத நிலையில் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இங்கே பெயர் மாற்றப்படுகிறது. ஆனால் இந்த நிறுவனத்தில் ஊழியர்கள் சம்பந்தமாக நீண்ட காலமாக பிரச்னைகள் இருந்து கொண்டிருக்கின்றன. சமீபத்திலேகூட அதனுடைய ஊழியர்கள் சிறைச்சாலையிலே அடைக்கப்பட்டார்கள். சில போராட்டத்தின் காரணமாக சிறையிலே அடைக்கப்பட்டார்கள். அந்த நிறுவனத்தினுடைய பெண்கள் கூட சில இயக்கங்களை நடத்திக்கொண்டிருக்கிறார்கள் ஊழியர்கள் சம்பந்தமாக பேச்சு வார்த்தை நடத்தி அவர்களுடைய பிரச்னைகளை தீர ஆராய்ந்து, கூடுமானவரையில் பிரச்னை இல்லாத அளவிற்கு அந்த கோரிக்கைகளை நிறைவேற்றித் தருவதற்கு அரசு முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு இன்றைக்கு தமிழகத்தில் இருக்கிற பல்வேறு பொறியியல் கல்லூரிகளில் பல பிரச்னைகள் நீண்ட காலமாக இருக்கின்றன. மதுரை தியாகராசர் பொறியியல் கல்லூரியில் இரண்டு மாணவர்கள் கொலை செய்யப்பட்டதன் தொடர்ச்சியாக அங்கே இருக்கக் கூடிய சில மாணவர்கள் இன்றைக்கும் கல்லூரியில் சேர்க்கப்படாமல் வெளியிலே நிற்கிற துர்பாக்கியம் இருக்கிறது. அங்கே இருக்கிற மாணவர்களுக்கு விடுதியில் உணவு வழங்கப்படாமல் இருக்கிறது. ஸ்காலர்ஷிப் வாங்குகிறவர்கள் வெளியிலே தான் உண்ண வேண்டும் என்று இருக்கும்போது கடுமையான பாதிப்பு இருக்கிறது. சஸ்பென்ஷனில் இருக்கக்கூடியமாணவர்கள் நான்கு பேரையும் உடனடியாக சேர்த்துக்கொள்வதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல கோவையில் 'கவர்ன்மென்ட் காலேஜ் ஆப் டெக்னாலஜி'யில் சில மாணவர்கள் சில காரியங்களில் காரணமாக வெளியிலே அனுப்பப்பட்டிருக்கிறார்கள். சில நேரங்களில் கல்லூரி நிறுவனம் ஒரவஞ்சனையாக நடக்கிறதோ என்று நினைக்கக் கூடிய சந்தேகங்கள் இருக்கின்றன இதற்கு சில வழக்குகள் காரணமென்று சொல்லப்படுகிறது. ஒரு சாராருக்கு ஒரு நீதியும் இன்னொரு சாராருக்கு இன்னொரு நீதியும் இருப்பதாகத் தெரிகிறது. அதை போக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருநெல்வேலியில் பொறியியல் கல்லூரியை பொறுத்த வரையில் துரிதமாக மாணவர்களை சேர்த்துக்கொள்ள ஏற்பாட்டை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) விரைவில் முடித்து விடுகிறேன். இந்த நிறுவனங்கள் பொறுத்தவரையில் அட்டானமஸ் என்று சொல்லப்படுகிறது. அட்டானமஸ் என்று சொன்னாலே நிர்வாகச் சீர்கேடுகள் வந்து விடுகின்றன. அவற்றை கண்காணிக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. சென்னை பல்கலைக்கழகம் அட்டானமஸ் என்று சொல்லப்படுகிறது.

எக்சாமினேஷன் ரிசல்ட்ஸ் நீண்டநாட்களாக வெளியிடப்படாமல், மீண்டும் தேர்வு எழுத வேண்டுமென்று சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அங்கே இருக்கிற ரெஜிஸ்ட்ரார் மீது பல ஊழல் புகார்கள் இருக்கின்றன. இப்படிப்பட்ட நிலைமைகள் இல்லாமல் இருப்பதற்கு சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகத்தை அண்ணா பல்கலைக்கழகமாக மாற்றியிருக்கிற இந்த மசோதாவை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் வரவேற்கிறேன். தமிழகத்தில் இந்த பெயர் மாற்றங்களால் மட்டும் நாம் எந்த நோக்கங்களுக்காக பல்கலைக் கழகங்களை செயல்படுத்துகிறோமோ அவைகள் எல்லாம் ஈடேறிவிடும் என்ற எண்ணம் எங்களுக்கு இல்லை. குறிப்பாக சென்னையில் இருக்கிற இந்த தொழில் நுட்ப பல்கலைக் கழகம் மிகவும் பிரசித்தி பெற்ற பல்கலைக் கழகம். இன்றைக்கு ஒரு சிக்கலான சூழ்நிலையில் அங்கே பணிபுரிகிற ஊழியர்களின் போராட்டத்தை அடக்குகிற விதத்திலே, அவர்களின் நியாயமான கோரிக்கைகளை புறக்கணிக்கிற விதத்தில், ஊழியர்களின் சங்கத்தை அங்கீகரிக்காமல், ஊழியர்கள் பழிவாங்கப்படுகிற போக்கு அங்கே இருக்கிற இயக்குநரிடத்திலே இருக்கிறது என்பதைச் சொல்லி இந்த அவையினுடைய கவனத்திற்கு கொண்டுவர கடமைப்பட்டிருக்கிறேன்.

பெயர் மாற்றம் செய்கிற அதே நேரத்தில், இந்த தொழில் நுட்பவியல் பல்கலைக்கழகம் வளர்ந்து வருகிற விஞ்ஞான யுகத்திற்கு ஏற்றவாறு புதிய புதிய வழிகளை உருவாக்க வேண்டுமென்றுச் சொன்னால், சமுதாய வளர்ச்சிக்கு அது செய்யவேண்டிய கடமையை ஒழுங்காகச் செய்யவேண்டுமென்று சொன்னால் நடைமுறையிலே இருக்கிற நிர்வாகச் சீர்கேடுகளை களைந்து அந்த பல்கலைக்கழகம் செம்மையாக செயல்படுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழி வகை செய்யவேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

(முற்பகல் 11-10)

திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் ஆட்சியில், கல்வித் துறையில் புதிய அத்தியாயத்தை ஏற்படுத்தி மறுமலர்ச்சியை உண்டாக்கிய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட இந்தத் தீர்மானத்தை நான் வரவேற்கிறேன். கரரணம், தென்னாற்காடு மாவட்டத்தில் இருக்கிற தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் என்பதை ஆங்கிலத்தில் சுருக்கமாகச் சொல்கிறபொழுது, டி.பி.டி.சி., டி.பி.டி.சி, என்றே சொல்லி வந்தார்கள். அதில் தந்தையும் இல்லை, பெரியாரும் இல்லை. இரண்டுமே அந்தப் போக்குவரத்து வாகனங்களிலே இல்லாமல் இருந்தது. அது அவ்வளவு

நீளமாக இல்லாமல், சுருக்கமாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கிணங்க பெரியார் என்று மாற்றினார்கள். அதைப்போல பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பெயராலே அமைக்கப்பட்ட பல்கலைக் கழகத்தைச் சுருக்கமாக நாம் மாத்திரமல்லாமல், வட நாட்டிலே உள்ளவர்களும் அயல் நாட்டிலே உள்ளவர்களும் 'பாட்' என்று சுருக்கமாகச் சொல் கிறார்கள் என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அருமையாகச் சொன்னார்கள். தமிழ்நாட்டின் தலைநகரத்தில், 'ஹாமில்ட்டன் பிரிட்ஜ்' என்ற பெயர் கொஞ்சகாலத்திற்குப் பிறகு, அம்பட்டன் பிரிட்ஜ் ஆகி பிறகு, பார்பர்ஸ் பிரிட்ஜ், ஆக தவறாக எப்படி உச்சரிக்கப்பட்டதோ, அதைப் போல் நமக்குப் பிறகு, ''பவுட்'' என்பதை பாட்'' என்று செய்தாலும் செய்து விடுவார்கள். ஆகவே, அந்தப் பெயரைச் சுருக்கமாக, பெரியார் போக்குவரத்துக் கழகம் என்று வைத்தது போல, லெனின் யூனிவர்சிட்டி என்பதுபோல, கென்னடி ஏவுமுனை என்பதைப் போல, சுருக்கமாக அண்ணா பல்கலைக்கழகம் என்று அழைத்தால், தமிழகத்தில் மட்டுமல்ல, வேறு மாநிலங் களும், வேறு பல நாடுகளும் சுருக்கமாக அழைக்க உதவியாக இருக்கும். அதே நேரத்தில், அண்ணாவினுடைய நாமமும் விளங்கும்படியாக இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்த தற்காக, கல்வி அமைச்சருக்கு நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தப் பெயர் மாற்றம் செய்துவிட்டால்மட்டும் பெருமை உண்டாகுமா என்று எதிர்க்கட்சி உறுப்பினர் கேட்டார். நான் இந்த அண்ணா தொழில் நுட்ப பல்கலைக்கழக நிர்வாகிகளைச் சந்தித்த பொழுது. அது மிகச் சிறப்பாகச் செயல்படுவதாகக் கூறியதோடு, வேறு எந்தப் பொறியியல் கல்லூரியில் சேர்ந் தாலும் சேரலாம். ஆனால் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்தில் சேரமுடியாது. காரணம் மிக அதிக மதிப்பெண்கள் வாங்கியவர்கள்தான் இங்கே சேரலாம் என்று சொன்னார்கள். 85 சதவீதம் மதிப்பெண்களுக்கு மேல் வாங்கியவர்கள்தான் சேரலாம் என்று சொன்னார்கள். ஆகவே, அதிக மதிப்பெண்கள் வாங்கிய மாணவர்களைச் சேர்க்கின்ற நடைமுறையை வைத்துக்கொண்டு அதே நேரத்தில் கல்வித் துறையோ அரசாங்கமோ, அல்லது வேறு எந்த அமைச்சரோ கூட அதிலே தலையிடாமல் இருக்கிறார்கள் என்று அந்தக் கல்லூரி நிர்வாகிகள் சொன்னபொழுது நான் மிகவும் மகிழ்ந்தேன். பெயர் மாற்றம் என்பது பெயர் மாற்றம் என்று இல்லாமல் சுருக்கமாக அதன் புகழ் மேலும் அதிகரிக்க வேண்டும், பெருக வேண்டுமென்பதற்காகக் கொண்டு வந்த இந்தத் திருத்தச் சட்டத்தை நான் வரவேற்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்தினுடைய பெயரை அண்ணா பல்கலைக் கழகம் என்று மாற்ற வேண்டுமென்கிற இந்தத் திருத்தச்

சட்ட முன்வடிவின்மீது கருத்துக்கள் தெரிவித்த மாண்புமிகு உறுப்பினர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் என்கின்ற பெயரை நாம் பயன்படுத்தி வந்தபொழுது அனுபவரீதியாக நாம் கண்டது, பி.ஏ.யு.டி.- பௌட்—என்று இந்த வார்த்தையாலேதான் அந்தப் பல்கலைக் கழகத்தைப் பலரும் சொல்கின்ற முறையைப் பார்த்து வந்தோம். நம்முடைய நோக்கம்—அண்ணா அவர்கள் பெயராலே அந்தப் பல்கலைக் கழகம் அழைக்கப்பட வேண்டு மென்ற ஆசையிலேதான் நாம் அந்தப் பெயரைச் சூட்டி யிருந்தோம். ஆனால், அதற்கு மாறாக, அது மறைக்கப்பட்டு வேறு ஒரு பெயராலே அது சொல்லப்பட்டு வருகின்ற நிலைமையைப் பார்த்த பிறகுதான் இந்தத் திருத்தம் கொண்டு வருவதற்கான முடிவை அரசு செய்து, இப்பொழுது கொண்டு வந்திருக்கிறது. ஆதரித்த அருமை உறுப்பினர் களுக்கு நான் மறுபடியும் என்னுடைய பாராட்டுக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே, அந்தப் பல்கலைக் கழக ஊழியர் சம்பந்தமாக ஒரு கருத்தைச் சொன்னார்கள். அந்த ஊழியர்கள் கோரிக்கைகளைப் பற்றி பரிசிலனை செய்ய, பல்கலைக் கழக ஆட்சிக் குழு இன்றைக்கு ஒரு குழுவைப்போட்டு, அது ஆராய்ந்து கொண்டிருக் கிறது. ஆகவே ஜெயிலிலே இருந்தவர்கள் விடுவிக்கப்பட்டு, வேலை நீக்கம் ரத்து செய்யப்பட்டு 4 பேரைத் தவிர மற்றவர்கள் வேலை யிலே சேர்ந்திருக்கிறார்கள். பல்கலைக் கழகம் எடுத்திருக்கிற நடவடிக்கைகளுக்கு ஆதரவு தந்து இன்றைக்கு பரிசீலனைக்கு அவர்கள் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர் களுடைய கோரிக்கைகள் நல்ல முறையில் பரிசீலிக்கப்பட பல்கலைக் கழகம் தன்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்திடும் என்ற நம்பிக்கையை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொண்டு இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:— பேரவை முன்னுள்ள கேள்வி:

''1982 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக (திருத்தம் தனி விதித் துறைகள்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 10/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 6 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன,

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, ''1982-ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக (திருத்தம் தனி விதித்துறைகள்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/1982) நிறைவேற்றப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஆ) பொதுச் சொத்து (அழித்தல், இழப்பு ஆகியவற்றைத் தடுத்தல்) சட்டமுன்வடிவு.

மாண்புமிகு திரு.சி. பொன்னையன்:—துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு பொதுச் சொத்து (அழித்தல், இழப்பு ஆகியற்றைத் தடுத்தல்) சட்ட முன் வடிவு* (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 13/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

திரு. அ. ரகுமான்கான்: மன்றத்தினுடைய துணைத் தலைவரவர்களே, இங்கே மாண்புமிகு அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்தச் சட்டம் போலீஸ் இராஜ்யத்தை உருவாக்குவதற்கான ஒரு சட்டம் என்ற முறையில் இதை வன்மையாகக் கண்டித்து இதற்கு என்னுடைய கண்டனத்தை நான் தெரிவித்துக் கொள்கிறேன். போலீஸ்காரர்களின் கரங்களிலே அதிகப்படியான அதிகாரங்களைக் கொடுத்து அரசியல்வாதிகளையும், எதிர்க்கட்சிகாரர்களையும், நியாயமான கோரிக்கைகளுக்காக போராடுகின்ற மாணவர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள், ஆசிரியர்கள், என்.ஜி.ஓ.க்கள் ஆகிய இவர்களையெல்லாம் கடுமையாகத் தண்டித்துச் சிறையிலே வைத்து அந்த நிரபராதிகளைப் பழி வாங்குவதற்கும், மிரட்டுவதற்கும் கொண்டு வரப்பட்டிருக்கும் ஒரு பயங்கரமான—இன்னும் கடுமையான வார்த்தைகளால் சொல்ல வேண்டுமென்றால் ஒரு அராஜகமான சட்டம் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதிலே மிகவும் முக்கியமான ஒரு கருத்தை நான் முதலிலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தச் சட்டத்தினுடைய அடிப்படையில் நிரபராதிகள் தண்டிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் இதிலே அதிகமாக இருக்கின்றன. அதோடு மட்டுமல்லாமல், பஸ்களில் பயணம் செய்பவர்கள் மீது கல் வீசுபவர்கள் தண்டிக்

*1982 பிப்ரவரி 19 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றது.

கப்பட வேண்டியவர்கள்தான்; பொதுச் சொத்துக்களுக்குத் தீ வைப்பவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள்தான்; இந்தச் சமூக விரோத காரியங்களை யார் செய்தாலும் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள்தான். அதிலே கருத்து வேறுபாடு கிடையாது. ஆனால் இதிலே நிரபராதிகள் கூடத் தண்டிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. இந்தச் சட்டத்தின் பெயராலே அநியாயமாகப் பழி சுமத்தப்பட்டு நிரபராதிகள் தண்டிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. ஆளுங்கட்சிக்காரர்கள் சொல்கிறார்கள் என்பதற்காகப் போலீஸ்காரர்கள் பலரைச் சிறைப்பிடித்து வைப்பதற்கான வாய்ப்புகள் இதிலே அடங்கியிருக்கின்றன.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல நான் விரும்புகிறேன். பஸ்களிலே பயணம் செய்பவர்களின் மீது கற்களையும், சோடா பாட்டில்களையும் வீசும்படியாக இன்னார்தான் அதற்குத் தூண்டினார்கள் என்று சொன்னாலே போதும்; அதைப் போலவே பஸ்களை கொளுத்துவதற்கு இன்னாருடைய தூண்டுதலின்பேரில்தான் இது நடைபெற்றது, இன்னார்தான் இதற்கு உடந்தையாக இருந்தார்கள் என்று சொன்னாலே போதும். அரசாங்கம் தனக்குப் பிடிக்காதவர்களை, எதிர்க்கட்சிக்காரர்களை, அரசாங்கத்திடம் நியாயமான கோரிக்கைகளுக்காகப் போராடிக் கொண்டிருக்கும் சமுதாயத்தினுடைய பல்வேறு வர்க்கத்தினரை, விவசாயிகளை, தொழிலாளர்களை, மாணவர்களை இப்படி யாரானாலும் அவர்கள் அத்தனை பேர்களும், பஸ்களைக் கொளுத்துவதற்குத் தூண்டினார்கள், பஸ்களில் பயணம் செய்பவர்கள் மீது சோடா பாட்டில்களையும் கற்களையும் வீசினார்கள் என்ற காரணத்தைக் காட்டினால், அல்லது இதற்கெல்லாம் தூண்டினார்கள் என்றாலே ஐந்தாண்டுகள்-ஓராண்டு இரண்டாண்டு அல்ல—5 ஆண்டுகள் சிறையிலே வைக்கக்கூடிய ஒரு அபாயம் இந்தச் சட்டத்திலே உள்ளடங்கி இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நேரத்தில் நான் ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். மகாத்மா காந்தி அவர்கள் அகிம்சையிலே நம்பிக்கை உடையவர்கள். அவர்கள் வன்முறையை நம்பவில்லை. சௌரி சௌரா போராட்டம் நடத்தப்பட்டது. அப்பொழுது காந்தியடிகள் உண்ணாவிரதம் இருந்தார்கள். சௌரிசௌரா மகாத்மா காந்தியடிகளால்தான் தூண்டிவிடப்பட்டது; அவர்தான் அதற்கு உடைந்தையாக இருந்து அவரால் தூண்டிவிடப்பட்டது என்று சொல்ல மாட்டார்கள்;

இந்தி எதிர்ப்புப் பேராட்டம் நியாயமான கோரிக்கைக்காக நடந்தது. அப்பொழுது வன்முறைச் சம்பவங்கள் நடந்தன. துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டு மாணவர்கள் பலியானார்கள்.

இதிலே நான் சொல்ல விரும்புவது இந்த ஒரு அடிப் படையை யாரும் தூண்டிவிடுவதில்லை. போலீஸ்காரர்களை எரிக்கவேண்டும் என்றோ, பஸ்கள் கொளுத்தப்படவேண்டும் வன்றோ, பயணிகள் மீது கற்களை வீச வேண்டும் என்றோ அன்றைக்கு இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை நடத்தியவர்கள் அண்ணாவைப் போன்றவர்கள் அன்றைக்குத் திராவிடப் பேரியக்கத்தை தூண்டிவிட்டவர்கள் பேராலே இது நடை பெற்றது என்று யாரும் சொல்லமுடியாது. அதைப்போலவே தெலிங்கானாவிலே வேலைவாய்ப்பு வேண்டும் என்று போராட்டம் நடைபெற்றது, அதிலே கூட சில வன்முறைச் சம்பவங்கள் அந்தத் தலைவர்களுடைய சம்மதம் இல்லாமலேயே நடந்திருக்கின்றன. அது மட்டுமல்ல பொட்டி சீராமுலு அவர்கள் இங்கே உண்ணாவிரதம் இருந்தபோது, ஆந்திரா தனி மாநிலமாக ஆக்கப்பட வேண்டும் என்று சொல்லியபோது, பொட்டி சீராமுலுவின் சம்மதம் இல்லாமலேயே அந்தப் போராட்டத்திலே சமூக விரோதிகள் கலந்து பஸ் எரிப்புகள் போன்ற காரியங்கள் செய்தார்கள் என்ற வரலாறு நமக்குத் தெரியும்.

(முற்பகல 11-20)

ஆகவே நியாயமான கோரிக்கைகளை வலியுறுத்தி நடத்து கின்ற போராட்டம் தலைவர்களைக் கூட இதிலே சிக்க வைத்து 5 ஆண்டுகாலம் சிறை தண்டனை வழங்கி உள்ளே அனுப்பிவிடக் கூடிய அபாயம் இதிலே இருக்கிறது. அந்த அபாயத்தின் பெயரிலேதான் இன்றைக்கு அகில இந்திய அண்ணா தி.மு.க அரசு இன்றைக்குக் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்தச் சட்டம் எதிர்க்கட்சிகளைப் பழிவாங்குவதற்காக கொண்டு வரப்பட் டிருக்கின்றது. இன்னும் சொல்லப்போனால், போலீஸ் கையிலே அதிகமான அதிகாரங்களைக் குவித்திருக்கின்றது என்ற கடுமை யான குற்றச்சாட்டை இங்கே நான் சொல்ல விரும்புகிறேன்.

அதோடுமட்டுமல்ல, ஏற்கனவே சட்டங்கள் இருக்கின்றன. இந்தியன் பீனல் கோடு செக்ஷன் 426, 425, 336, 431—இவைகள் எல்லாம் நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள் படித்து இருப்பார் என்று நான் கருதுகிறேன்- பஸ்களில் பயணம் செய்யும்போது, பொதுச் சொத்துக்களுக்குத் தீ வைத்தால் தண்டனை வழங்குவதற்குச் சட்டம் இருக்கிறது. கல் எரிந்தால் தண்டனை வழங்குவதற்குச் சட்டம் இருக்கிறது. உயிருக்குச் சேதம் விளைவித்தால் தண்டனை வழங்குவதற்குச் சட்டம்—எக்சிஸ்சிடிங் லா—ஏற்கனவே ஐ. பி. சி.யில் இருக்கிறது. இதிலே புத்திசாலித்தனமாக தொழிலாளர்களையும் விவசாயிகளையும், எதிர்கட்சிகளையும் நசுக்குவதற்காகத்தான் இதைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். நீங்கள் இதிலே என்ன செய்திருக்கிறீர்கள் என்றால், இந்த சட்டங்களிலே தண்டனை வழங்கலாம் அல்லது அபராதம் வழங்கலாம் என்று போட்டிருக்கின்றது. (Imprisonment or fine) ஆனால் நீங்கள் என்ன சொல்லியிருக்கிறீர்கள் தெரியுமா, "தண்டனை வழங்கலாம் அல்லது அபராதம் வழங்கலாம்" என்பதில் 'அல்லது' என்பதை எடுத்துவிட்டு

தண்டனையும் விதிக்க வேண்டும், அபராதமும் விதிக்க வேண்டும் (imprisonment and fine) என்று யாரோ மேஜிஸ்டிரேட்டோ அல்லது நீதிபதியோ ஒரு வேளை வெறும் தண்டனை மட்டும் அளித்து அனுப்பிவிடக் கூடாது என்று அபராதமும் தண்டனையும் வழங்க வேண்டும் என்று சட்டத்தைக் கடுமையாக ஆக்கி இருக்கிறார்கள். கேட்டால் சமூக விரோதிகளை அடக்குகிறோமே நியாயம் இல்லையா என்று கேட்டால் இந்த சமூக விரோதிகளைத் தண்டிப்பதற்கு, அடக்குவதற்கு ஏற்கனவே சட்டத்திலே இடம் இருக்கிறது. இந்த சட்டம் கூட சமூக விரோதிகளை அடக்குவ வதற்குப் பயன்படுமானால் வரவேற்கலாம். ஆனால் சமூக விரோதிகளை அடக்குகிறோம் என்று சொல்லிவிட்டு, போராட்டம் கூடாதா? கணவனிடம்தான் மனைவி குறைகளைக் கேட்க வேண்டுமே தவிர, பக்கத்து வீட்டுக்காரனிடம் அல்ல. தாயிடம்தான் குழந்தை தன்னுடைய தேவையைக் கேட்க முடியுமே தவிர மற்றவர்களிடம் அல்ல; அதைபோல அரசாங்கத்திடம் தான் பல்வேறு வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் நியாயமான கோரிக்கையை சர்க்கார் பரிசீலிக்க வேண்டும் என்று சொல்லுகிறபோது, போராடுவது ஜனநாயக உரிமை. எதிர் கட்சியாக இருந்தபோது அகில இந்திய அண்ணா தி.மு.க. போராடவில்லையா, பஸ்களைக் கொளுத்தவில்லையா நான் கேட்கிறேன் வன்முறையில் ஈடுபட்டதே கிடையாதா? நான் கேட்கவிரும்புகிறேன் அன்றைக்கு நீங்கள் செய்திருக்கக்கூடிய கதைக்கு ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட் கொடுத்தால் அதுவே மிகப்பெரிய குற்றமாகும். ஆனால் போராட்டத்தின் பேரிலே அவைகள் எல்லாம் அன்றைக்கு நியாயப்படுத்தப்பட்டன. இங்கே நான் சொல்வது, இந்தச் சட்டம் கூட ஆளும்கட்சிக்குச் சாதகமாகத்தான் இருக்குமே தவிர, எதிர்கட்சிகளைப் பழி வாங்குவதற்காகப் பயன்படும் என்ற சந்தேகத்தை உண்டாக்கு கிறது.

பூந்தமல்லியிலே அண்ணன் டி. ஆர். ஆர். அவர்கள் மீது புட்லூர் தண்டபாணி கொலை சம்பந்தமாக கலைஞர் அவர்கள் இங்கே பேசியபோது, தகவல் கொடுத்தார் என்பதற்காக, புட்லூர் தண்டபாணியைக் கொன்ற பாவிகள் இன்னார்தான் என்று மனுக் கொடுத்த பிறகும், நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக, அண்ணன் டி. ஆர். ஆர். வீட்டில் கல் எறிந்தார்கள், அவரை அடித்தார்கள், இதுபற்றி கம்ப்ளைன்ட் கொடுக்கப் பட்டது, போலீஸ் நடவடிக்கை எடுத்ததா? கிடையாது. சட்டம் பயன்படுத்தப்பட்டிருக்கிறதா? கிடையாது. எங்கள் மாவட்டச் செயலாளர் சீதாபதி வீட்டில் கல் எரிந்தார்கள், கலவரம் செய்தார்களே சட்டம் நடவடிக்கை எடுத்திருக்கிறதா? கிடையாது. எதிர்கட்சித் தலைவர் கலைஞர் வீட்டிலே இதே மாதிரி தாக்குதல் நடத்தப்பட்டது. நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கிறதா? கிடையாது. ஆனால் ** ** அவர்கள் வீட்டிலே கல் எரிந்தார்கள்—தப்புதான்—ஆனால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது. நான் சொல்ல

* * மாண்புமிகு பேரவை துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.

விரும்புகிறேன், சட்டத்தை நீங்கள் கொண்டு வருகிறீர்கள், கேட்டால் சமூக விரோதிகளை அடக்குவதற்கு என்று சொல்லுகிறீர்கள். உங்கள் பார்வையிலே அண்ணன் டி. ஆர். ஆர். அவர்கள் சமூக விரோதியா? என் மீதுகூட இந்திரா அம்மையாரைக் கொலை செய்ய நான் முயற்சித்ததாக வழக்கு போட்டிருக்கிறீர்கள்........

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: துணைத் தலைவர் அவர்களே, பாதிக்கப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் கம்ப்ளைன்ட் கொடுக்கின்றபோது, நடவடிக்கை எடுக்கப்படும், நடவடிக்கை எடுக்கப்படுகிறது, நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தவறான தகவலைத் தருகிறார். உரிமைப் பிரச்னை கூட கொண்டுவரலாம். அண்ணன் டி. ஆர். ஆர். அவர்கள், நம்முடைய சட்டமன்ற உறுப்பினர், பாதிக்கப்பட்டவர்கள் கம்ப்ளைன்ட் கொடுத்து இருக்கிறார்கள். என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்று அமைச்சர் அவர்கள் அறிவிக்க முடியுமா எனக் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கம்ப்ளைன்ட்லே கண்டிப்பாக எப். ஐ. ஆர். போடப்பட்டிருக்கிறது. குற்றவாளி யார் என்பது, உண்மையிலே தெரிந்த பிறகுதான், குற்றவாளி மீது நடவடிக்கை எடுக்க முடியுமே தவிர, இவர்தான் துண்டிவிட்டவர்கள் என்று இவர்களையெல்லாம் சொல்லி, அவர்களை எல்லாம் ஒரு வழக்கிலே உட்படுத்த வேண்டுமென்று ஒரு குற்றச்சாட்டு வருமேயானால் எப்படி அவர் மீது நடவடிக்கை எடுக்க முடியும் என்பதனை உறுப்பினர் எண்ணிப் பார்க்க வேண்டும்.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, எப். ஐ. ஆர். என்பது ஒரு சடங்கு. எப். ஐ. ஆர். பர்ஸ்ட் இன்பர்மேஷன் ரிப்போர்ட். உடனே நடவடிக்கை எடுக்க முடியாது என்று சொல்கிறார்கள். ஆனால் புட்லூர் தண்டபாணி விவகாரத்திற்கு அமைச்சர் அவர்கள் என்ன கூறுகிறார்கள். ஆக நான் சொல்ல விரும்புவது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழக ஆட்சி கலைக்கப்பட்டபோது, வன்முறையில் ஈடுபட்டார்கள். அவர்களையெல்லாம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் என்று போலீஸ் மானியத்திலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். பல வழக்குகள் போடப்பட்டன. காவல் நிலையத்தைத் தாக்கினார்கள். தீ வைத்துக் கொளுத்தினார்கள். மேஜைகள் உடைக்கப்பட்டன. இதனால் இவர்கள் மீது போடப்பட்ட வழக்குகளையெல்லாம், அதாவது சர்க்கார் வாபஸ் வாங்கியிருக்கிறது. ஏன் வாபஸ் வாங்கியது. இவர்கள் உங்களுடைய கட்சிக் கட்சிக்காரர்கள். அனைத்திந்தியா அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த கட்சிக்காரர்கள். இப்போது உதாரணத்திற்காக, இதே மீனம்பாக்கம் விமான நிலையத்தில் சிவாஜி கணேசன் அவர்கள் வந்திறங்கியபோது

அங்கே பல வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றன. பஸ்கள் கூடக் கொளுத்தப்பட்டது. நான் கேட்கிறேன் இந்திரா காங்கிரஸ் கட்சியிலே இருக்கக்கூடிய அத்தனை பேரும் உடந்தையாக இருந்து, அல்லது தூண்டிவிட்டுத்தான் பஸ்களை கொளுத்தினார்கள் என்று சொல்லி, உங்களுக்குப் பிடிக்காத இந்திரா காங்கிரஸ்காரர்களையெல்லாம், அதிலே உங்களோடு நட்புறவோடு இருப்பவர்களை விட்டுவிட்டு, உங்களுக்கு விரோதமாக உங்களின் தலைமை தேவையில்லை, இது தமிழகத்திற்கு ஆபத்தானது, இது தேவையற்றது என்று சொல்கிறவர்களையெல்லாம் அந்த வழக்கிலே சிக்க வைக்கலாம்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஆதாரம் இல்லாமல் குற்றச்சாட்டை அவையிலே சொல்ல வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏர் போர்ட்டிலே நடந்த நிகழ்ச்சியைப் பொறுத்தவரைக்கும், உண்மையிலே தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் மீது காவல் துறையினர் சட்டத்திற்கு உட்பட்டு நடவடிக்கை எடுப்பார்கள். நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

திரு. அ. ரகுமான்கான் : அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் பஸ்சைக் கொளுத்திவிட்டார்கள், உடந்தையாக இருந்து தூண்டிவிட்டார்கள் என்று ஒரு பிரிவு இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது. அந்தப் பிரிவை உங்களுடைய விருப்பத்திற்கு தகுந்தபடி, போலீசாருடைய விருப்பத்திற்குத் தகுந்தபடி, தாராளமாக மிஸ்-யூஸ் பயன்படுத்தக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்பதை சுட்டிக்காட்டுவதற்காகத்தான் நான் இவைகளை இங்கே குறிப்பிட்டேன். இன்னொன்று, தயவு செய்து இந்த அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன். திரும்பத்திரும்ப போலீசாரின் கையிலே அதிகாரத்தைக் கொடுப்பது நல்லதல்ல. சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரி அவர்கள் ஒரு முறை சொன்னார், சட்டம் என்பது பொதியைச் சுமக்கின்ற கழுதையாக மாறிவிடக்கூடாது என்று அவர்கள் சொன்னார்கள். ஏற்கனவே குண்டாஸ் சட்டம் கொண்டுவந்திருக்கிறீர்கள். அதிலே பில்லாவிற்கும் ரங்காவிற்கும் கூட, செஷன்ஸ்க்குப் போய் ஹைகோர்ட்டுக்குப் போய், சுப்ரீம் கோர்ட்டுக்குப் போய், பிறகு கருணை மனு போட்ட பிறகு, கோர்ட் குற்றவாளி என்று சொல்லிய பிறகுதான் அவன் எவ்வளவு பெரிய அயோக்கியனாக இருந்தாலும், கோர்ட் தீர்ப்புக்குப் பிறகுதான் தண்டனை வழங்கப்படும், தூக்கிலிடப்படுவார்கள். ஆனால் நிரபராதிகள், நியாயவான்கள், நியாயமான கோரிக்கைகளுக்காகப் போராடுகின்ற அத்தனை பேரையும், நீங்கள் குண்டர்கள் என்று சொல்லி, வாழ்நாள் முழுவதும், உள்ளே, சிறையிலே வைக்கலாம். அட்வைசரி போர்டு என்பது உங்களுடைய நபர்கள், அரசாங்கத்தின் நியமனம். ஆகையினாலே ஏற்கனவே, போலீசுக்கு ஒரு அபாயகரமான அதிகாரத்தைக் கொடுத்து இருக்கிறீர்கள் கோர்ட்டு கிடையாது, பெயில்

கிடையாது, இன்னும் சொல்லப் போனால், வக்கீல் வைத்து வாதாட முடியாது. நக்சலைட்காரர்கள் என்ற பெயராலே, போலீஸ்காரர்கள் சுட்டுப்பொசுக்கிக் கொண்டிருக்கிறார்கள். மச்சக்காளை என்ன ஆனான்? பலதடவைகள் சொல்லியிருக்கிறேன். சர்க்கார் பதில் சொல்லவில்லை.

அதுமட்டுமல்ல, நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த கிருஷ்ணன் சொன்னார். ஜார்துநாதன் விவகாரத்திலே என்ன நடைப்பெற்றது, பாளையங்கோட்டையிலே கோர்ட்டுக்கு முன்னாலே ஒரு துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றால், ஒரு தடியடிப் பிரயோகம் தவறாகச் செய்துவிட்டால், வேண்டுமென்றே, போலீஸ் ஜீப்பைக் கொளுத்தி இவர்கள் கொளுத்தினார்கள், சுட்டோம், ஆகையினாலே, தடியடிப் பிரயோகம் செய்தோம் என்று செய்யக்கூடிய காரியங்கள் எல்லாம் நடைபெற்றுவிடும். அதை நியாயப்படுத்திக்கூட அனுப்பிவிடுவோம். இப்படிப்பட்ட அபாயம் இந்தச் சட்டத்திலே இருக்கிறது.

அதுமட்டுமல்ல, கடைசியாக ஒரு நிமிஷத்திலே நான் முடித்துக் கொள்கிறேன். ரெகார்டிங் பெயில்ஸ், ஜாமீனிலே வருவதுபற்றி. நீங்கள் எவ்வளவு கடுமையான பிரிவை இதிலே மறைத்திருக்கிறீர்கள். பிராசிக்குசன் செயலுக்கு, அதாவது அரசு தரப்பிற்கு சந்தர்ப்பங்கள் வழங்கி அரசு தரப்பு வந்து அதனுடைய விவாதத்தைக் கேட்டதற்குப் பிறகு ஜாமீனிலே விடமுடியும் என்று போட்டிருக்கிறீர்கள். நான் கேட்கிறேன். இப்போது இருக்கக் கூடிய நடைமுறை என்ன? ஒரு அக்யூஸ்டு கைது செய்த 24 மணி நேரத்திற்குள்ளே மேஜிஸ்ட்ரேட் முன்னே கொண்டு போகிறார்கள். போன உடனே, நேச்சர் ஆப் அபன்ஸ் பார்க்கிறார். பெயிலபிள் அபன்ஸ் ஆக இருந்தால் போய்விடலாம். நான்-பெயிலபிளாக இருந்தால், அது டிஸ்கிரிசன் ஆப் கோர்ட்டு. ஆனால் இதேநேரத்தில் நோட்டிஸ் அரசாங்கத்திற்குப் போடுகிறார்கள். ஆனால் நான் கேட்கிறேன். இதிலே போலீஸ் காலம் தாழ்த்தாதா? அவர்களுடைய விருப்பத்திற்கு அவர்கள் என்றைக்கு வருகிறார்களோ, போலீஸ் ஒரு வழக்கை உடனே பெயிலிலே விடுவதற்கான வாய்ப்பு ஏற்படுத்தாமல் வேண்டுமென்றே சிலரைச் சிறையிலே நீண்டகாலம் வைக்க வேண்டுமென்று விரும்பினால் போலீஸ் தரப்பு, அரசாங்கத் தரப்பு, பிராசிக்குசன் தரப்பு காலந்தாழ்த்தலாம். 2 மாதம் ஆகலாம். 3 மாதம் ஆகலாம். ஆனால் உங்களைக் கேட்காமல் ஜாமீனில் விடமுடியாது என்று சொன்னால், எவ்வளவு காலத்திற்கு நீங்கள் நீடிக்கமுடியுமோ அந்த வழிலேயும், கூட உள்ளே பல்லாரத் தள்ள வைப்பதற்கான வாய்ப்பு ஏற்படுகிறது. ஆக, இந்தச் சட்டம், இன்னும் சொல்லப் போனால் இது ஜனநாயக உரிமைகளைப் பறிக்கக்கூடிய சட்டம். எதிர்கட்சிகளை, தொழிலாளர்களை, விவசாய வர்க்கத்தை, நியாயமான காரியங்களுக்காக போராடுபவர்களை உள்ளே வைப்பதற்காக ஒரு சட்டம் ஒரு போலீஸ் ராஜ்யத்தை உருவாக்குகிறீர்களே என்பதைத்தான் இது காட்டுகிறது. இதை வன்மையாகக் கண்டித்து நான் அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் பேசும்போது, அதாவது தனிப்பட்டவர்களுக்கு பாதுகாப்பு கொடுப்பதாகச் சொன்னார்கள். ஒரு நடிகை பற்றிச் சொன்னார்கள். அதை இந்த அவைக் குறிப்பில் இருந்து நீக்க ஆணையிடுகிறேன்.

[முற்பகல் 11.30]

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது சொத்துக்களை அழித்தல், இழப்பு செய்கின்றவர்களை தடுக்கவும், தண்டிக்கவும், இந்தச் சட்டங்கள் இன்றைக்கு மன்றத்திலே வந்திருக்கின்றன. இதனை நான் சார்ந்திருக்கின்ற இந்திய தேசிய காங்கிரஸ் சார்பிலே வரவேற்கிறேன்.

இதில் அரசியல் உள்நோக்கம் இல்லையென்றால் இது உண்மையிலேயே வரவேற்கப்பட வேண்டியதுதான். ஆனால் எதிர்கட்சிக்காரர்களை ஒடுக்குவதற்கு இருக்குமேயானால் இது மிகவும் வருந்தத்தக்கது என்பதை நான் குறிப்பிட ஆசைப் படுகிறேன். கண்மாய்க்கு நீர் வருகின்ற பாதையையோ அல்லது அதிகமான நீர் வருவதையோ தடுக்கின்ற சூழ்நிலையை ஏற்படுத்தினால் அவர்களுக்கு தண்டனை கொடுக்கப்படும் என்று இச்சட்டத்தில் கூறப்பட்டிருக்கிறது. மழைக்காலங்களில் ஏரிகள் நிரம்பி விடுகின்றது என்றால் அந்த ஏரி எந்த இடத்தில் உடைகிறது என்று யாருக்கும் தெரியாமல் இருக்கும்போது அதனால் பொதுமக்களுக்கு ஆபத்து வரும்போது அந்த, ஆபத்தைத் தடுக்க அந்த ஊரிலே இருக்கிற யாராவது சிலர் பொதுமக்களை பாதுகாப்பதற்காக வேறு கரையிலே அதை உடைத்து, அந்தத் தண்ணீரால் ஆபத்து ஏற்படா வண்ணம் செய்யும் போது அப்படிப்பட்டவர்கள் முயற்சியையும் கண்டிக்கிற வகையில் அவர்களையும் இந்தச் சட்டத்தின் கீழ் தண்டிக்கக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டுவிடக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல் இங்கே குறிப்பிட வேண்டுமென்றால் விவசாயச் சங்கங்கள் பல போராட்டங்களை நடத்தின. அந்தப் போராட்டத்தினால் கூட பல சம்பவங்கள் ஏற்பட்டன. அதன் அடிப்படையிலே போடப்பட்ட வழக்குகள் இன்றைக்கும் நீதி மன்றத்தில் இருக்கின்றன. அதைப்போல இந்த ஆட்சி அகற்றப் பட்ட நேரத்தில் ஆளும் கட்சிப் பொறுப்பிலே இருக்கிறவர்கள் அன்றைக்கு எல். ஐ. சி.-க்கு முன்னால் மிகப்பெரிய கலவரத்தை நடத்தினார்கள். அதன் காரணமாக அவர்கள் மீது வழக்குகள் போடப்பட்டன. ஆனால் அந்த வழக்குகள் இன்றைக்கு நீக்கப்பட்டுவிட்டன. அந்த வழக்குகள் எல்லாம் திரும்பப்பெற்றுக் கொள்ளப்பட்டன. அதைப்போல இந்தச் சட்டமும் அவர்களுக்கு விரும்பத்தகாதவர்கள் மீது வேகத்தைக்காட்டியும் அவர்களுக்கு வேண்டியவர்கள் மீது வேகத்தைக்காட்டாமல் வெற்றுவேட்டாக இருந்து விடுவதுமாக இருக்குமானால் அது வருந்தத்தக்க ஒரு சட்டமாக இருக்கும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

தொழிலாளர்கள் நடத்துகின்ற போராட்டங்கள், விவசாயிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், என். ஜி.ஓ. க்கள் போன்றவர்கள் நடத்தும் போராட்டங்கள் உண்மையிலே சாத்வீகமாகத்தான் நடத்தப்படுகின்றன. சாத்வீகமாகத்தான் நடத்த வேண்டுமென்று அவர்கள் விரும்புகிறார்கள். ஆனால் அப்படி நடத்துகின்ற போராட்டங்களிலே கலகக்காரர்களும் சமூக விரோதிகளும் புகுந்து, விரும்பத்தகாத நிகழ்ச்சிகளை ஏற்படுத்தி விடுகிறார்கள். போராட்டங்களை நடத்துகின்றவர்கள் இனிமேல் அவர்கள் புகுந்து விடாமல் நிச்சயமாக அதிலே கண்காணிப்பாக இருப்பார்கள் என்று நான் கருதுகிறேன்.

அதேநேரத்தில் கலகக்காரர்கள், சமுதாய விரோதிகள் எல்லாம் ஒழுங்காக, அமைதியாக இந்த நாட்டிலே ஒரு சூழ்நிலையைத் தோற்றுவிப்பதிலே அக்கறையோடு இருக்கிற அரசியல் கட்சிகளும் மற்றுமுள்ள பொறுப்பு உள்ள தலைவர்களும் தங்கள் இயக்கங்களில் தலையிடாதவாறு தடுத்துக் கொள்வதற்கு இந்தச் சட்டம் உறுதுணையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தச் சட்டத்தினுடைய நோக்கம், வேலை நிறுத்தங்களின்போதும் பிற போராட்டங்களின்போதும் கலகக்காரர்கள் அல்லது பொதுப் போக்குவரத்து வண்டிகளுக்கும், பிற பொதுச் சொத்துக்களுக்கும் தீ வைத்தும் மற்றப்படி சேதம் விளைவித்தும், அவ்வண்டிகளில் பயணம் செய்யும்போது மக்கள் மீது கற்களை வீசியும் நாசவேலைகளில் ஈடுபடுகின்றனர் என்றால் இச்செய்கைகளைத் தடுக்கவும் இதைப்போன்ற கொடுமைகளைக் கட்டுப்படுத்துவதற்கும் இந்தச் சட்டத்தைக் கொண்டுவரும்போது, பொதுமக்களைக் காப்பாற்ற இந்தச் சட்டம் உண்மையிலேயே பயன்படுமானால் இந்தச் சட்டத்தை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன்.

அதேநேரத்திலே இந்தச் சட்டம் தனிப்பட்டவர்களை பாதிக்கும் வகையில் பயன்படுத்தப்படக் கூடாது என்று வலியுறுத்தி, அமர்கிறேன்.

*திரு. கு. ரமணி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமானது தொழிலாளர் போராட்டங்கள், அதே போன்று விவசாய மக்கள், மாணவர்கள் ஆகியோர் நடத்தும் போராட்டங்கள் மீது குறி வைத்துத் தாக்கும்படியான ஒரு எண்ணத்தின் அடிப்படையில் இருக்கிறது என்பதை நான் தெளிவாக எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கடுமையாக எதிர்க்கிறது. அரசாங்கம் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து இருக்கக்கூடாது. இந்த நேரத்திலாவது இந்த அரசாங்கம் இதை மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று கோருகிறேன. இப்படி ஒரு சட்டம் கொண்டு வருவதற்கு என்ன அவசியம் ஏற்பட்டது என்பதைக் குறிப்பிட்டு அவர்கள் இந்தக் காரணநோக்க விளக்கக்குறிப்பில் சொல்லியிருக்கிறார்கள். அதைப் படித்துப் பார்த்தாலே, அரசாங்கமே எந்த அளவிற்குத் திணறுகிறது என்று தெரிகிறது. எடுத்த எடுப்பிலேயே என்ன சொல்கிறார்கள் என்றால்— ''வேலை நிறுத்தங்களின்போதும், பிற போராட்டங்களின்போதும் கலகக்காரர்கள் அல்லது பொதுப் போக்குவரத்து வண்டிகளுக்கும், பிறபொதுச் சொத்துக்களுக்கும் தீ வைத்தும் மற்றப்படி சேதம் விளைவித்தும், அவ்வண்டிகளில் பயணம் செய்யும்போது மக்கள் மீது கற்களை வீசியும் நாசவேலைகளில் ஈடுபடுகின்றனர் என்பதைக் காண்கிறோம்'' என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

'சாக்கிலே இருந்து பூனைக்குட்டி வெளியே வந்தது' என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி சொல்வார்கள். The cat is out of the bag. அதைப்போலவே, உங்களுக்குத் தேவை என்ன என்பதை நீங்களே அப்பட்டமாக எடுத்துக் கூறியிருக்கிறீர்கள். அதைத் தான் நாங்களும் எடுத்துச்சொல்ல விரும்புகிறோம். அளவுக்கு மிஞ்சிய பலாத்காரத்தை மக்கள் மத்தியில் அதுவும் உழைப்பாளி மக்கள் மீது பிரயோகிக்க இன்றைக்கு இருக்கும் பீனல் கோடில் சொல்லப்பட்டு இருக்கிற பிரிவுகளுக்கும் மேலாக, இன்னும் சில விதிகளைச் சேர்த்துக்கொண்டு, இன்றைக்கு அந்த அதிகாரங்களைச் ஸ்வீகரித்துக் கொண்டு இருப்பது ஆளும் கட்சிக்கே ஒரு காலத்தில் மண்டையிடியாக வரும் என்பதை நாங்கள் எச்சரிக்கையாகச் சொல்ல விரும்புகிறோம்.

இந்த காரணநோக்க விளக்கத்தில் இது மக்களின் போராட்டங்களுக்கு எதிராகப்பயன்படுத்துவதற்காகத்தான் என்பதை சொல்லாவிட்டாலும், அதை நாங்கள் தெளிவாகப் புரிந்து கொள்ளமுடியும். சொல்லமுடியும். இதிலே என்ன செய்திருக்கிறார்கள் என்றால் கலகக்காரர்கள் என்ற வார்த்தையைச் சேர்த்திருக்கிறார்கள் இது பொதுவாக உழைப்பாளி மக்களை மாணவர்களை விவசாயிகளை பொதுமக்களை தான் குறிக்கிறது. அவர்கள் தங்களுடைய நியாயமான உரிமைகளுக்காக போராடுகிற நேரத்திலே அவர்கள் இன்ன விதத்தில் தான் போராட வேண்டுமென்று எந்த அரசும் அந்த மக்களைப் பார்த்துச் சொல்லமுடியாது. What kind of struggle method should be adopted by different section of people, cannot be decided by any Government.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர்—தலைமை)

அதுதான் உண்மை. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்த நாட்டிலே இருந்த நேரத்தில் காங்கிரஸ் கட்சி அதை எதிர்த்துப் போராடிய காலத்தில் நீங்கள் இந்த ரூபத்தில் இன்ன வழியிலேதான் போராட வேண்டும் போராட்டத்தை நடத்த வேண்டுமென்று அவர்கள் சொல்லவில்லை. மகாத்மா காந்தி அவர்கள் அஹிம்சை வழியில் போராடினார்கள். அதை அவர்கள் காங்கிரஸ் கட்சியின் கொள்கையாக வைத்தார்கள். ஆனால் மக்களின் போராட்டம் நடந்து கொண்டிருந்த நேரத்தில் அவர்களை போலீஸ் என்ற பலாத்கார இயந்திரம் தாக்க முற்பட்டபோது ஆத்திரம் கொண்ட மக்கள் வேண்டுமென்றே அல்ல, முன்கூட்டித் திட்டமிட்டு அல்ல, அவர்களை எதிர்த்துத் தாக்கினார்கள், அந்த முறையிலேதான் சௌரிசௌரா சம்பவம் நடந்தது. இதை நம்முடைய அமைச்சர் அவர்களும் ஆளுங்கட்சியும் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

[திரு. கு. ரமணி] [1982 ஏப்ரல் 2

ஆகவே இப்படிப்பட்ட ஒரு சட்டத்தை கொண்டு வந்தது மிகவும் வேதனைக்குரிய நிலை என்பதை இன்றைக்கு நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இதற்கு அவசியமே இல்லை. உங்களுக்கு வேண்டிய அளவுக்கு மேலேயே ஐ.பி.சி. யில் அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது. மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் கூட குறிப்பிட்டார்கள். செக்ஷன் 427 ஐ.பி.சி. என்ன சொல்கிறது

(முற்பகல் 11.40)

"Who over commits mischief and thereby causes loss or damage to the amount of fifty rupees or upwards shall be punished with imprisonment of either discription for a term which may extend to two years or with fine or with both" அதாவது தவறுகளும் கலகமும் செய்து தகராறு செய்பவர்கள் 50 ரூபாய் பெறுமானமுள்ள சொத்துக் களுக்கு நாசம் விளைவித்தாலே தண்டனை கொடுப்பதற்கு இடம் இருக்கின்றது.

செக்ஷன் 431-ன்படி "Mischief by injury to public roads, bridge' river or channel". என்று இருக்கிறது.

இப்படி 432, 433, 434, 435 என்று பல ஷரத்துக்கள் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சரவர்கள் பெரிய புஸ்தகத்தைத் தூக்கிக் கொண்டு வந்து வைத்திருக்கிறார்கள். இதற்கு மேலும் அந்த செக்ஷன்கள் முழுவதும் சொல்லப்படுவது பொதுச் சொத்துக் களோ, பப்ளிக் ரோடோ, ஏரி குளங்களோ, பாதைகளோ அல்லது பாலங்களோ அல்லது தனிப்பட்ட சொந்துக்களோ கடலிலே கிடக்கின்ற கப்பலோ இவற்றிலே எதற்கு கெடுதல் செய்தாலும் அதற்கெல்லாம் தண்டனை கொடுக்கவேண்டிய அளவுக்கு ஏற்கெனவே சட்டங்கள் இருக்கின்றன. இதற்கெல்லாம் இன்டியன் பீனல் கோடிலே வழிவகை செய்யப்பட்டிருக்கின்றது. ஆனால் இந்த இன்டியன் பீனல் கோடை உருவாக்கிய கர்த்தா யார்? பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம். இந்திய நாட்டு மக்களுக்கு ஒரு துளிக்கூட இடம் கொடுக்காமல் போதிய அளவுக்குத் தயாரித்து வைத்திருக்கிறார்கள். நீங்களும் அவர்களோடு சேர்ந்து கொண்டு இன்னொன்றையும் அத்தோடு சேர்த்துக்கொள்கிறீர்கள். எனவே இப்படிப்பட்ட சட்டத்தை இந்த அரசு கொண்டுவரக் கூடாது என்பது எங்கள் கட்சியின் துணிந்த கருத்தாகும்.

இந்தச் சட்டத்தின் சரத்து 3-லே நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்பதற்கு அதைப் பார்த்தாலே உங்களுக்குத் தெரியும். மோட்டார் வண்டிகளில் பயணம் செய்பவர்கள் மீது கற்கள் செங்கற்கள் முதலியவற்றை எறிந்தால் அதற்கான தண்டனை இருக்கின்றது. ஆனால் ஏற்கெனவே நான் சொல்லி இருக்கக்கூடிய இன்டியன் பீனல் கோடிலே உள்ள சரத்துக்களிலே பல்வேறு வகையான குற்றங்களுக்கும் தண்டனை கொடுக்க வழிவகை செய்யப்பட்டிருக்கின்றது. அதிலே தேடித் துருவிப் பார்த்தால் பஸ்ஸுக்குள்ளே மக்கள் பிரயாணம் பண்ணும்போது அதிலே செங்கல்லைப் போட்டால் என்ன செய்வது என்பதற்காகத் தேடித் துருவிப் பார்த்து அது கிடைக்கவில்லை. அப்படிப்பட்ட வார்த்தை

1982 ஏப்ரல் 2] [திரு. கு. ரமணி]

கிடைத்திருந்தால் நீங்கள் இதைக் கொண்டு வந்திருக்க முடியாது. ஆகவே அதையும் சேர்த்து அடக்கு முறையின் முழுத் தாண்டவத்தையும் ஆடுவதை நிலைநிறுத்த வேண்டும் என்பதுதான் உங்களுடைய நோக்கமே தவிர வேறு நோக்கங்கள் இல்லை என்பது தெளிவாகின்றது. உங்களுடைய சட்டம் ஷரத்து 2-லே பல விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே இன்டியன் பீனல் கோடிலே சொல்லப்பட்டவைகளை எல்லாம் எடுத்துக் காட்டி அதற்குப் பிறகு இன்னொன்றையும் சேர்த்துக்கொள்வது என்ற முறையிலே இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருப்பது மிகவும் வருந்தத்தக்கது. மக்களுடைய ஜனநாயக உரிமையைப் பறிப்பதாக குறிப்பாக ஏழை, பிற்படுத்தப்பட்ட, நலிந்த மக்களின் உரிமைகளைப் பறிப்பதாக இருக்கின்றது. அப்படிப் பட்ட அடக்கு முறைகளை போக்கி மக்களுக்காக நாம் நின்று போராடுவோம் என்று உறுதிமொழி நீங்களும், நாங்களும் சேர்ந்து கொடுத்துத்தானே தமிழக மக்களிடத்திலே ஓட்டுப் பெற்றோம். ஆனால் இன்றைக்கு இப்படிப்பட்ட காரியங்களைச் செய்தால் இது என்ன நிலைமையை உண்டாக்கும் என்பதை நீங்களே உணர்ந்து கொள்ளவேண்டும். உங்களுக்கு நீங்களே ஆபத்து தேடிக்கொள்ளக் கூடிய நிலைமைக்குக் கொண்டு போகிறீர்கள். திருமதி இந்திரா காந்தி அம்மையார் கைது செய்யப்பட்டபோது இந்த நாட்டிலே என்ன நடந்தது. ஜனங்களே அப்போது வேண்டுமென்று செய்த காரியங்களா? அவர்களைப் போலீஸ் தாக்கும்போது அந்த ஜனங் களுக்கு ஏற்படுகின்ற ஆத்திரத்தில் ஏற்படுகின்ற திடீர் நிகழ்ச்சிகள் இவற்றுக்கெல்லாம் அந்த மக்களைப் பொறுப்பாளிகளாக ஆக்க முடியுமா? அதே மாதிரிதான் மறியல் செய்கிறார்கள், போலீஸ் வருகின்றது, போலீஸ் தொழிலாளர்களின் பக்கம் நிற்பதில்லை. அதற்கு எதிர்ப்பக்கத்திலே நிற்கின்றது. போலீஸிடத்திலே இருந்து பலாத்காரம் வரும்போது அவர்கள் ஆத்திரப்படுவதால் சில சமயங்களில் தகராறுகள் ஏற்படுகின்றன. இதன்மூலம் பல சம்ப சம்பவங்கள் நடக்கின்றன. அதற்காக கலகக்காரர்கள் என்ற வார்த்தையைப் புகுத்தி ஒட்டி அதன் மூலம் போராட்டம் என்று ஈடுபடுகின்ற மாணவர்கள், தொழிலாளர்கள் போன்ற எந்தப் பகுதி மக்களாக இருந்தாலும் அவர்களையும் இதிலே சேர்க்கின்ற வகையிலே இடம் கொடுக்கக் கூடாது என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து சரத்து நான்கிலே என்ன எதிர்பார்க்கிறீர்கள்? ஜாமீன் கொடுப்பதை எவ்வளவு தூரத்திற்கு தாமதப்படுத்த முடியுமோ அந்த அளவுக்குச் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. தண்டனையை 2 வருஷம், 5 வருஷம், 7 வருஷம், 10 வருஷம் வரை போகவாம் என்று ஐ.பி.சி. செக்ஷனிலே பார்க்கிறோம். அப்படிப்பட்ட தண்டனை கொடுக்கக்கூடிய குற்றங்கள் என்று அதைப் பெரிய பூதம் மாதிரி சிருஷ்டித்து அதற்கு ஜாமீன் கொடுப்ப தற்கு மறுப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

கடைசியாக நான் ஒரு விஷயத்தை ஞாபகப்படுத்த விரும்பு கிறேன். இது ஒன்றும் இன்றைக்குத் திடீரென்று வந்த காரியம் என்று நான் கருதவில்லை.

இந்த அரசாங்கம் முற்போக்கான திசையில் செல்லும் என்று எதிர்பார்த்தோம், இன்றும் அந்த ஆசையை நாங்கள் விட்டுவிடவில்லை. அந்த திசையில், முற்போக்கான திசையில் செல்ல மாட்டார்கள் என்ற முடிவுக்கு நாங்கள் வந்துவிடவில்லை. இன்னும் டைம் இருக்கிறது. ஆகவே இதைப்பற்றிச் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நீங்கள் 1977 ம் ஆண்டில் பதவிக்கு வந்தீர்கள். 15 மாதக் காலத்திற்குள்ளே நம் மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் ஒரு பிரசங்கத்தில், பேச்சில் சொன்னார்கள். மட்றாஸ், 14-10-78ல் இந்தியன் எக்ஸ்ப்ரஸில் ரிப்போர்ட்டாகியிருக்கிறது. The Tamil Nadu Government has decided to enact a legislation to make hurling of stones on buses, an offence like an attempt to murder passengers. You can attack me or my Ministers or my party workers, but not the travelling public. பொதுமக்களை, பிரயாணம் செய்கிறவர்களை தாக்க நான் அனுமதிக்கமாட்டேன், வேண்டுமானால் எங்களைத் தாக்குங்கள், எங்களுடைய அமைச்சர்களைத் தாக்குங்கள். எங்கள் கட்சித் தொண்டர்களைத் தாக்குங்கள், நீங்கள் யாரை வேண்டுமானாலும் தாக்குங்கள், ஆனால் மக்களைத் தாக்காதீர்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தளவிற்கு மக்கள்மீது கனிந்து உருகக் கூடிய எண்ணம் உள்ள அவர்களைக் கேட்கிறேன், தொழிலாளர்கள் மக்கள் அல்லவா, விவசாயிகள் மக்கள் அல்லவா, மாணவர்கள் மக்கள் அல்லவா, அந்த மக்கள் மீது தாக்குதல் நடத்தும்படியான ஒரு சட்டத்தைக் கொண்டு வருவது என்று சொன்னால் உங்கள் எண்ணங்கள், சிந்தனைகள் மாறிக் கொண்டு வருகின்றனவா என்று கேட்க வேண்டியிருக்கிறது. உங்கள் எண்ணங்கள் மாறிக் கொண்டு வருவதாகத் தோன்றுகிறது. அது கூடாது என்று சொல்கிறோம். அதற்கு அமைச்சர் அவர்கள் என்ன "சொல்கிறார்கள். M.G.R. made a scathing attack on Trade Union leaders for kindling violence and warned that the Government which had remained passive for nearly 15 months would not tolerate violence any longer" 15 மாதக் காலமாக இந்த அரசு வந்ததில் இருந்து தொழிற்சங்கத் தலைவர்களின் மீது பலாத்காரத்தைத் தூண்டிவிடும்படியான காரியங்களைச் செய்து கொண்டுவருவதை எல்லாம் பார்த்துப் பார்த்து சலித்து ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்காமல் நாங்கள் ஒதுங்கியிருந்திருக்கிறோம். இப்படிப்பட்ட நிலை இனி சாத்தியமில்லை என்று கடுமையான தாக்குதலை தொழிற்சங்கத் தலைவர்களுக்கு எதிராக திருப்பி தாக்குதல் நடத்தியிருக்கிறார்கள். இதை நாங்களும் கேட்டுக்கொண்டுதானிருக்கிறோம். நாங்கள் எவ்வளவோ அடக்குமுறைகளை அனுபவித்திருக்கிறோம். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து இந்த நாட்டு சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறோம். 1946 ம் ஆண்டு பிற்பகுதி ஆறு மாதக்காலத்தில் எவ்வளவோ இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் போராடினார்கள். என்னென்னவோ போராட்டங்கள் நடைபெற்றன. அந்தப் போராட்டத்தில் ஸ்டேன்ஸ் மில்லில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது. 1946ம் ஆண்டு நவம்பர் 11 ம் தேதி 11 மணிக்கு முதல் உலக யுத்தம் முடிந்து சமாதானமாகிய அந்த நிமிடத்தில் அந்த நேரத்தில் துப்பாக்கிப் பிரயோகம்

நடந்தது. அன்றிலிருந்தது காங்கிரஸ் ஆட்சி. அந்தத் துப்பாக்கி பிரயோகத்தில் 11 பேர்கள் இறந்து போனார்கள். அன்று தலைமறைவாக இருந்து தொழிற் சங்க இயக்கத்தை நடத்தியவன் நான். என் பேரில் ஸ்லை க்ாககே போட்டார்கள். நிரூபிக்க முடிந்ததா? அத்தனையும் தூள் தூளாகி ஒரு எவிடென்ஸ் கூட கோர்ட்டுக்கு கொடுக்க முடியவில்லை. 302, தூக்குத் தண்டனை கிடைக்கும் பிரிவின்கீழ் கேஸ் போட்டார்கள் என்மீது. இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால் உண்மையை கண் திறந்து பார்க்கவேண்டும். தொழிற்சங்கத் தலைவர்களைத் தாக்கிப் பிரயோஜனம் இல்லை. இன்று மக்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம், விலைவாசி உயர்வு கரன்ட் கட்டணக் கூடுதல், கரன்ட் கிடைக்காமை இப்படி பல கஷ்ட நிலைமைகள் இருக்கின்றன. குற்றச்சாட்டுகளுக்கு பதில் சொல்ல திராணி இருந்தால் பதில் சொல்லட்டும். ஆனால் நியாயமான போராட்டங்களுக்கு தடை போட்டு அவர்கள் மீது பலாத்காரத்தை பிரயோகிக்கக் கூடாது. போலீஸ்-க்கு முழு அதிகாரங்கள் கொடுத்து தூண்டி விடக்கூடிய காரியங்களைச் செய்யக்கூடாது. அந்தத் தவறை இந்த அரசு செய்கிறது என்று எங்களுக்குத் தோன்றுகிறது.

(முற்பகல் 11.50)

ஒரு நேசக்கட்சி என்ற முறையிலே நாங்கள் அதை எடுத்துக் காட்ட வேண்டிய கடமை எங்களுக்கு இருக்கிறது. அந்த முறையிலே எடுத்துக் காட்டுகிறோம். இது கூடாது. முதலமைச்சர் அவர்கள் உள்ளத்திலே இப்படிப்பட்ட சிந்தனைப் போக்கு முளைத்து வருகிறதோ என்னவோ அதனால் தான் அடக்குமுறைச்சட்டங்கள் வரிசையாக வந்துகொண்டிருக்கின்றன. அந்த முறையிலேதான் பசுவதைச் தடைச்சட்டம் வர இருக்கிறது. தொழிலாளர்கள் மீது 10-பி என்ற முறையிலே ஒரு சட்டம் வர இருக்கிறது, அதைப் பற்றி அப்போது நான் விளக்கமாகப் பேசிக் கொள்கிறேன், குடிசைவாழ் மக்கள் மீது ரவுடிகளை அடக்குவதற்கு என்ற முறையிலே ஒரு சட்டம் வந்து இருக்கிறது. அயோக்கியர்களை ரௌடிகளை தண்டிக்க கூடாது என்பது எங்கள் நோக்கமல்ல. அவர்களைத் தண்டிப்பதற்கு நாம் அத்தனை பேர்களும் சேர்ந்து அத்தனை சமூதாய விரோதிகளையும் அப்புறப்படுத்த வேண்டும், அது வேறு. ஆனால்அந்தப் பெயரிலே எல்லோரையும் வழித்து ஒரு கூடைக்குள்ளே போடுவது என்பது ஒரு கூடைச் செங்கல்லும் பிடாரி என்ற முறையிலே செய்வது சரியல்ல. ஐ. பி. சி. யில் இதற்கு வேண்டிய அதிகாரங்கள் உங்களுக்கு இருக்கிறது. அதை வைத்துக் கொண்டு இந்தச் சட்டத்தை வாபஸ் வாங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. சி சண்முகம்; மாற்றுத் தலைவர் அவர்களே மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கொண்டுவந்திருக்கின்ற இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்று ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சட்டத்தின் மூலமாக சமூக விரோதிகளிடமிருந்து மக்களை மீட்கக் கூடிய இந்தச்

சட்டத்தை முதன்முதலாக நான் ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால் ஒரு சில பிரச்சினைகளை ஒரு சில போராட்டங்களைப் பயன்படுத்தி நடுவிலே சமூக விரோதிகள் அந்தக் கூட்டங்கள். போராட்டங்கள் நடக்கக் கூடிய இடங்களில் தங்களை உட்புகுத்திக்கொண்டு மக்கள்மீது கல்எறிவது பேருந்துகளைக் கொளுத்துவதுபோன்ற கடுமையான செயல்களைச்செய்கிறார்,கள் அதனால் ஆங்காங்கே நாட்டு மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் அதைத் தடுப்பதற்காக கொண்டுவரப்படக் கூடிய சட்டமாக இது இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் ஒன்றைச் சொல்வேன். எங்களுடைய மாவட்டத்திலே மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் தொகுதியிலே விஷாரத்திலே ஒரு பெருந்து கொளுத்தப்பட்டது. 10,15 பேருந்துகள் அடித்து நொறுக்கப்பட்டன. அங்கே என்ன நடந்தது என்றால் தந்தை பெரியார் கழக போக்குவரத்துக் கழக பேருந்து மேல் விஷாரத்திலே வந்துகொண்டிருந்த போது திடீரென்று தற்செயலாக சைக்கிளிலே வந்த ஆள் குறுக்கே வந்து விழுந்தான், தற்செயலாக இறக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. டிரைவர் வேண்டுமென்று அவர் சாக வேண்டுமென்று செய்யக்கூடிய நிலைமை இல்லை. ஆனால் அந்த விபத்தைப் பயன்படுத்திக் கொண்டு ஒருவன் இறந்தான் என்பதை வைத்துக்கொண்டு அங்கே ஒருசில சமூக விரோதிகள் ஒன்று சேர்ந்துகொண்டு பை பாஸிலே திருப்பிவிடப்பட்ட அனைத்து பேருந்துகளையும் கொளுத்துகிற நிலைமை ஏற்பட்டது. அரசுக்குச் சொந்தமான சூப்பர் டீலக்ஸ் 4, 5 இலட்சம் பெறுமானமுள்ள பேருந்துகளை சமூக விரோதிகள் கொளுத்தக்கூடிய நிலைமை ஏற்பட்டது. அதைச் செய்தது பொதுமக்களோ அல்லது பாதிக்கப்பட்டவரின் உறவினர்களோ அல்ல. ஒரு டிரைவர் ஓட்டினார் என்பதற்காக சமூக விரோதிகளைப் பயன்படுத்தி மக்களை பேருந்துகளிலிருந்து இறக்கிவிட்டு கல்லெறிந்து, கொளுத்துவது, ஒருசில பொருட்களை களவாடுவது இப்படிப்பட்ட நிலைமைகளையெல்லாம் தடுக்கக்கூடிய சட்டம் தான் இது.

ஐ. பி. சி. யை வைத்துக்கொண்டு தடுக்கக் கூடாதா என்று திரு ரகுமான்கான் அவர்களும் திரு ரமணி அவர்களும் சொன்னார்கள். ஐ. பி. சி. யைப் பயன்படுத்திக்கொண்டு பலவிதமான வழிகளில் வெளியே வரக்கூடிய நிலைமை இருக்கிறது. சாதாரணமாக அபராதம் மட்டும் போடக்கூடிய நிலைமை இருக்கிறது. இங்கேயேசட்டத்தைக் கடுமையாக்க வேண்டுமென்று பல உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். ஒருவருக்கொருவர் தகராறு என்று சொன்னால், பக்கத்து வீட்டுக்காரரோடு தகராறு என்று சொன்னால் நடுவிலே அரசுப் பேருந்துகளைக் கொளுத்தக் கூடிய நிலைமை இருக்கிறது. அதையெல்லாம் கட்டுப்படுத்துவதற்காகக் கொண்டு வரப்பட்டிருக்கின்ற சட்டம் இது. திரு ரகுமான்கான் அவர்கள் சொன்னார்கள், இந்தச் சட்டம் அரசியல்வாதிகளைப்

பழிவாங்கக் கூடியது, வேண்டாதவர்கள் மீது பயன்படுத்தக் கூடிய சட்டம் என்று. நான் திரு ரகுமான்கான் அவர்களுக்கு இந்த மாமன்றத்தின் வாயிலாக ஒன்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இங்கே மதுவிலக்கு பிரச்சினைப் பற்றி கடுமையான சட்டம் வந்தபோது இதே உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள் எதிர்க்கட்சிக்காரர்களை பழி வாங்குவதற்காக கொண்டு வருகிறார்கள், நாடு கடத்துவதற்காக கொண்டு வருகிறார்கள், ஜனநாயக உரிமையை பறிக்கக் கூடிய சட்டம் என்று எல்லாம் விமரிசித்தார்கள்- ஆனால் அந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி எந்த அரசியல் வாதியாவது பழிவாங்கப்பட்டார்களா அல்லது எதிக்கட்சியினர் மீது யார் மீதாவது அது பயன்படுத்தப்பட்டதா என்பதைக் கேட்க விரும்புகிறேன். சமூக விரோதிகளுக்காக போடப்பட்ட சட்டம் ஏதோ அரசியல்வாதிகளுக்காக அல்லது ஆளும் கட்சிக்கு பிடிக்காதவர்கள்மீது அதைப் பயன்படுத்துவதற்காக என்று தயவு செய்து கற்பனை உலகத்தில் இறங்காமல் இருக்க கேட்டுக் கொள்கிறேன். மக்களைக் காப்பாற்றுவதற்காக, சமூக விரோதிகளினுடைய சக்தியைக் குறைப்பதற்காக அவர்களை பயமுறுத்துவதற்காகக் கொண்டுவரப்பட்ட சட்டம். மொழிப்பிரச்னையோடு ஒப்பிட்டு மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் சொன்னார்கள். மகாத்மா காந்தி அவர்கள் நடத்திய போராட்டம் எங்கே, மொழிப் பிரச்னைக்காக போராடிய மாவீரர்கள் நடத்திய போராட்டம் எங்கே மொழி காப்பாற்றப்பட வேண்டுமென்று தமிழகமே கொந்தளித்து என்ன தண்டனை வேண்டுமென்றாலும் ஏற்றுக் கொள்வோம். தமிழ் படித்துதான் சாக வேண்டும், தங்களுடைய சாம்பலிலே தமிழ் மணந்து வேக வேண்டும் என்று தமிழ் மண்ணுக்காக அந்தப் போராட்டத்தில் தங்களை அர்ப்பணித்துக் கொண்டார்கள். அந்தப் போராட்டத்திற்கும், சமூக விரோதிகளுக்கு எதிராகப் போடப்படக்கூடிய சட்டத்திற்கும் ஒப்பிட்டு ரகுமான்கான் அவர்கள் கூறினார்கள். அவர் அவ்வாறு பேசக்கூடாது.

தயவு செய்து வாபஸ் வாங்கிக் கொள்ளுங்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் சொன்னார்கள். இந்த சட்டம் மிக முக்கியமான சட்டம். பொதுமக்களால் வரவேற்கப்படக்கூடிய சட்டம் என்று கூறி இதை வரவேற்று முடிக்கிறேன்.

திரு.அ. ரகுமான்கான் மாற்றுத்தலைவர் அவர்களே, நண்பர் ஆரணி சண்முகம் அவர்கள் குறிப்பிட்டு ஒரு பிரச்னையை சொல்லியிருப்பதாலே விளக்கத்திற்காக சொல்கிறேன். ஒரு போராட்டம் நடைபெறுகிறது என்றால் அது ஜனநாயக உரிமை போராட்டம் புனிதமானது என்பது அதிலே பங்கு பெறுபவர்களுடைய கொள்கை பிரச்னை, மகாத்மா காந்தியாக இருந்தாலும் மொழிப் போராட்டமாக இருந்தாலும், ஆனால் சமூக விரோதிகள் அந்தக் காரியங்களிலே ஈடுபட அந்த சமூக விரோத காரியங்களுக்கு தூண்டுதல், அந்த தூய்மையானநோக்கத்தோடு போராட்டம் நடத்தியவர்கள்தான் என்று சொல்வதும்

உடந்தையாக இருந்தார்கள் என்று சொல்லியும், தூண்டி விட்டார்கள் என்று சொல்லியும் அப்படி பலரை கைது செய்வதற்கான வாய்ப்பு இருக்கிறது. அந்த அபாயம் இந்த சட்டத்திற்குள்ளே ஒளிந்து இருக்கிறது.

திரு மு. அம்பிகாபதி மாற்றுத்தலைவர் அவர்களே, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே இந்த சட்டத்தை கடுமையாக நாங்கள் எதிர்க்கிறோம். சட்டங்கள் மூலம் அதாவது இந்த சட்டத்ினுடைய தோற்றமென்பது மக்களை ஒழுங்குபடுத்துவதற்கு என்று தோற்றம் இருந்தாலும் இதனுடைய உள்ளடக்கத்திலே பல்வேறு போராட்டங்களை நடத்துகிறவர்கள் ஒடுக்கப்படுவதற்கான சாரம் இதிலே இருக்கிறது. ஜனவரி மாதம் 19-ஆம் வேலை நிறுத்தத்தின்போது காவல் துறையைச் சார்ந்தவர்கள் துப்பாக்கி பிரயோகம் செய்தார்கள் துப்பாக்கி பிரயோகம் செய்து அதிலே சுடப்பட்ட 13 பேர் மீது கொலை செய்ய முயற்சித்தார்கள் என்று குண்டடிப் பட்டவர்கள் மீதே வழக்கைப் போட்டிருக்கின்ற காவல் துறையினர் கையிலே இந்த அதிகாரத்தை ஒப்படைக்கிறீர்கள் காவல்துறையின் கையிலே பல்வேறு அதிகாரங்கள் இருக்கின்றன நீங்கள் போட்டிருக்கிற சட்டங்கள் இருக்கின்றன, வெள்ளைக்காரன் போட்ட சட்டங்கள் இருக்கின்றன. இப்படிப்பட்ட நிலைமையில் பிடிக்காதவர்களை போராட்டம் நடத்துகிறபோது அவர்கள் ஜீப்பை கொளுத்திவிட்டு, கொளுத்த வந்தார்கள் துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது என்று காவல்துறையினர் செய்த நிகழ்ச்சிகள் தமிழகத்திலே பல இருக்கின்றன.

ஜெர்மனியிலே கம்யூனிஸ்டுகளை ஒழிப்பதற்காக இட்லர் ஒரு உபாயத்தை கையாண்டான். என்ன உபாயம் என்றால் பாராளுமன்றத்தை தானே ஆள் வைத்து அவனே கொளுத்தினான். கொளுத்தி விட்டு கம்யூனிஸ்டுகள் கொளுத்தினார்கள். என்று சொல்லி மறுநாள் காலையிலிருந்து கம்யூனிஸ்டுகளை வேட்டையாட இட்லர் தொடங்கினான், அதேபோல காரண காரிய விளக்கங்களைத் தெளிவாக சொல்லியிருக்கிறீர்கள். விளக்கமாக சொல்ல முடியவில்லை. ஜனவரி மாதம் 19ம் தேதி நடந்த வேலை நிறுத்தத்தின்போது எத்தனை பஸ்கள் கொளுத்தப்பட்டன? அமைச்சர் அவர்கள் சொல்ல முடியுமா? சொல்ல முடியாது. ஏனென்றால் கொளுத்தப்படவில்லை அந்த பஸ்ஸை உருவாக்குறவன் அந்த தொழிலாளி உருவாக்குகிற தொழிலாளிக்கு எரிக்கவேண்டுமென்ற எண்ணம் இருக்காது. இதற்கு முன்னால் எத்தனை சம்பவங்களில் பேருந்துகள் எரிக்கப்பட்டிருக்கின்றன என்று எங்களுக்குத் தெரியும் மதிப்பிற்குரிய எம். ஜி. ஆர் அவர்கள் திராவிட முன்னேற்ற கழகத்திலிருந்து விலக்கப்பட்டபோது பேருந்துகள் எரிக்கப்பட்டன. அதைபோல கலைஞர் கருணாநிதி. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கைது செய்யப்பட்டபோது பேருந்துகள் எரிந்திருக்கின்றன. இந்திரா காந்தி அவர்கள் கைது செய்யப்பட்டபோது பேருந்துகள் எரிக்கப்பட்டது மட்டுமல்ல ரெயில்கள் கவிழ்க்கப்பட்டது மட்டுமல்ல, விமானமே கடத்தப்

(நண்பகல் 12.00)

பட்டிருக்கிறது. விமானம் கடத்தியவர்கள் உத்திரப் பிரதேசத்திலே எம்.பி. க்களாக இருக்கிறார்கள். எனவே போராட்டங்கள் நடக்கிறபோது சில சம்பவங்கள் நேரும். அந்தக்கட்சித் தொண்டர்கள் உணர்ச்சிவசப்படுகின்ற நேரத்திலே சில நடவடிக்கைகளிலே ஈடுபடலாம். நீங்கள்அதை வைத்துக் கொண்டு வழக்குகள் போடுவது என்பது நியாயம் இல்லாதது. இத்தகைய சட்டங்கள் தேவையில்லாதது. நீங்கள் இந்தச் சட்டத்தை நிறைவேற்றி காவல்துறையின் கையிலே தான் கொடுக்கப் போகிறீர்கள். விபச்சாரம் செய்தால் சட்டம் போட்டிருக்கிறீர்கள். குடிசை போட்டால்கூட ஜெயிலுக்குப் போகணுமென்று ஒரு சட்டம் போட்டிருக்கிறீர்கள். பசுவை வதை பண்ணக்கூடாது என்று ஒரு சட்டம் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. மனிதனுடைய வதையை பற்றி கவலைப் படாதவர்கள் எல்லாம் பசுவினுடைய வதையைப் பற்றி கவலைப்படுகிறார்கள். கவலைப் படுகிறவர்கள் கொஞ்சம் புல்லைக் கொடுத்தாலாவது நன்றாக இருக்கும். மேடையிலே இருந்துகொண்டு பசு பாதுகாப்பு என்கிறார்கள். அது பின்னால் வரட்டும் பேசுவோம். இப்படிச் சட்டங்களின் மூலமாக தங்களை ஓட்டுகின்ற நிலையை இன்றைக்கு இந்தச் சர்க்கார் மேற்கொண்டிருப்பது சரியில்லை. பொதுச்சொத்துக்கள் அழிக்கவேண்டுமென்பதல்ல எங்களுடைய நோக்கம். நேற்றைய தினம்கூட ஒரு சட்டம் தாக்கல் ஆயிற்று. சுதந்திர தினம், குடியரசு தினம் காந்தி பிறந்தநாள், ஜனவரி 26, ஆகஸ்ட் 15, அக்டோபர் 2 ஆகிய தினங்களில் கறுப்புச் சின்னம் அணியக்கூடாது என்று ஒரு சட்டம் கொண்டு வந்தார்கள். நீங்கள் எதிர்க்கட்சியாக இருக்கும்போது ஒன்று பேசுகிறீர்கள். அந்தப் பக்கம் போய் உட்கார்ந்தால் ஒன்று பேசுகிறீர்கள். சுதந்திர நாளன்று கறுப்புச் சின்னம் அணிந்தவர் அல்லவா அந்தப் பக்கம் இருக்கிறீர்கள். சுதந்திர நாளா இல்லையா என்பதை இந்த நாட்டிலே இருக்கிறவன் முடிவு செய்ய வேண்டும். இந்த நாட்டிலே இருக்கிற அவ்வளவு மக்களையும் வாழ வைக்காத சுதந்திரத்தை: அவன் மதிக்க வேண்டுமென்று ஏன் கட்டாயப்படுத்த வேண்டும். படித்தால் வேலை இல்லை. வேலைக்குப் போனால் விலைவாசி ஏற்றம், வாழ முடியவில்லை. அவன் வாழ முடியாத நிலையில் இருக்கும்போது இந்த நாட்டிலே இருக்கிற சட்டங்கள் ....

திரு ஏ. சி. சண்முகம்: இந்த பில்லிலே பேசச் சொல்லுங்கள்

திரு. கோவைத்தம்பி மாண்புமிகு உறுப்பினர் போலந்து அரசு தொழிலாளர் மீதுதாக்கியது பால் இந்தச் சட்டம் தாக்கும் என்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்தச் சட்டம் தாக்காது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: போலந்திலே இருக்கிற நிலை வேறு. செக்கன்ட் ஓர்ல்ட் வாரிலே ரொம்ப பேர் குளோஸ். அங்கே ஆள் குறைச்சல், நிலம் ஜாஸ்தி, அங்கே ஒவ்வொரு

[திரு. மு. அம்பிகாபதி] [1982 ஏப்ரல் 2

தொழிலாளிக்கும் 100 ஹெக்டேர் கொடுத்திருக்கிறார்கள். போலந்தும் இந்தியாவும் ஒன்று அல்ல. எல். ஐ.சி. யிலே இருக்கிறவருடைய டிமாண்டும், நகரசுத்தினுடைய தொழிலாளிக்கு இருக்கிற டிமாண்டும் ஒன்றாகிவிட முடியாது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: போலந்திலே இருக்கிற டிமான்ட் கட்சிக்கு உட்படாத தனி இன்டிபென்டன்டாகத் தொழிற்சங்கம் நடத்தப்பட வேண்டுமென்பதுதான். அதுதான் முடியவில்லை, அங்கே.

திரு மு. அம்பிகாபதி: கம்யூனிஸ்ட் நாடுகளில் அமெரிக்கா தலையிட்டு சி. ஐ. ஏக்கள் மூலமாக தொழிற்சங்க நடவடிக்கைகளை முடக்கலாம் என்று நினைத்தால் .... ..

மாண்புமிகு மாற்றுத்தலைவர் (திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்): நேரம் இல்லாத காரணத்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மசோதாவில் மட்டும் பேச வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கு ரமணி: அமைச்சர் அவர்களே எழுந்திருந்து ஒரு முதல்தரமான அரசியல் புதிர் போடும்போது உறுப்பினர் பதில் சொல்லக் கூடாதா? போலந்து பற்றி அவர் சொல்கிறார் போலந்து பற்றி அவர் இன்றைக்கு ஒரு விவாதத்திற்கு தயாரா என்று நான் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: ஒரு நாள் கூட விவாதிக்கத் தயார்.

மாண்புமிகு. பேரவை மாற்றுத்தலைவர் (திரு. ப. வெங்கட சுப்பிரமணியம்) போலந்து பற்றிய விவாதத்தை மாலை 6 மணிக்குப் பிறகு வைத்துக் கொண்டு, இப்பொழுது மசோதாவின் மீது பேசுங்கள்.

திரு மு. அம்பிகாபதி: மாலை 6 மணிக்கு சபை உண்டு. போலந்தைப் பற்றி வாதிக்கிறோம்.

மாண்புமிகு பேரவை மாற்றுத்தலைவர் (திரு வெங்கடசுப்பிரமணியம்) இங்கல்ல, வெளியிலே வைத்துக் கொள்ளுங்கள்.

திரு மு. அம்பிகாபதி: போலந்திலே இருக்கிற நிலை வேறு கம்யூனிஸ்ட் நாடுகளிலே சி. ஐ. ஏ. புகுந்து விளையாடுவார்கள் என்றால் கருவறுத்து விடுவார்கள் என்பதற்கு எச்சரிக்கை தான் போலந்து. அதுதான் நடக்கும் அங்கே. அங்கே விளையாட முடியாது. எனவே, இன்றையதினம் இத்தகையச் சட்டங்களைக் கொண்டுவருவது மிகவும் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. வாபஸ் வாங்கி விடுங்கள். மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் எழுந்திருந்து இந்த பில்லை வாபஸ் வாங்கிவிடவேண்டும். இல்லையென்றால், இதைக் கடுமையாக எதிர்ப்போம்.

திரு. ஏ. சி. சண்முகம்: பில்லின்மீது கருத்து சொல்லலாம். உடனடியாக, எழுந்து வாபஸ் வாங்குங்கள் என்று சொல்லலாமா?

1982 ஏப்ரல் 2]

திரு. மு. அம்பிகாபதி: வாபஸ் வாங்க வேண்டுமென்று சொல்கிற உரிமை உண்டு என்ற காரணத்தாலேதான் அதைக் கேட்கிறேன். மாண்புமிகு மாற்றுத்தலைவர் மூலமாக கேட்கிறேன், அதைக் கேட்க உரிமை உண்டா இல்லையா? எனவே, இத்தகைய கடுமையானச் சட்டங்களை நீங்கள் இந்திரா காந்தியாரைப் பின்பற்றிக் கொண்டுவருவது சரியல்ல.

நீங்கள் மாமியாருக்கு அடங்கிய மருமகளாக நடக்க முற்படுகிறீர்கள். ஆனால் டெல்லியிலே நடப்பதே வேறு.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ப. வெங்கட சுப்பிரமணியம்): மாண்புமிகு உறுப்பினரவர்கள் தயவு செய்து மசோதாவில் பேசும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிடுவதைப்போல மாமியாருக்கு அடங்கி நடக்கும் மருமகளாக அல்ல; யோக்கியமுள்ள மருமகளாக நடக்க ஆசைப்படுகிறோம்.

திரு. மு. அம்பிகாபதி: மத்திய அரசை மாமியாராகவும், மாநில அரசை மருமகளாகவும் கருதி நடக்க வேண்டாம். அவர்களுடைய தயவினால் நீங்கள் ஆட்சிக்கு வரவில்லை.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு தற்காலிகத் தலைவரவர்களே, அரசியல் சட்டத்திலே இருக்கின்ற ஃபைனான்ஷியல் பவர் புரவிஷனைப் பொறுத்தவரைக்கும் மாமியாரிடம் தான் சாவியிருக்கிறது; மருமகள் கேட்டுத்தான் வாங்கியாக வேண்டிய நிலைமை இருக்கிறது.

திரு. மு. அம்பிகாபதி: மகனுக்குத் திருமணம் ஆகிவிட்டது என்றால் நல்ல மாமியார் என்றால் மருமகளிடம் சாவியைக் கொடுத்து விட வேண்டும். இல்லையென்றால் மருமகள் வீட்டை விட்டு வெளியேற வேண்டும்.

இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வன்மையாக எதிர்க்கிறோம். இந்தச் சட்டத்தை அரசாங்கம் வாபஸ் வாங்க வேண்டுமென்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வலியுறுத்திச் சொல்கிறேன், வணக்கம்.

திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு சட்டப்பேரவையின் மாற்றுத் தலைவரவர்களே, சட்ட அமைச்சரவர்கள் கொண்டு வந்த பொதுச் சொத்துக்களைப் பாழ்படுத்தக் கூடாது; அதற்கு ஏதாவது சேதம் விளைவித்தால் தண்டிக்க வேண்டுமென்ற முறையில் கொண்டு வந்த சட்டத்தை மிகவும் ஆவேசமாகவும், ஆத்திரமாகவும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் எதிர்த்தார்கள். மாண்புமிகு பொதுவுடைமைக் கட்சி தோழர்கள் திரு. அம்பிகாபதி அவர்களும் ஆவேசமாக அதை எதிர்த்தார்கள்,

அழுத்தந்திருத்தமாக எதிர்க்கிறேன் என்று சொன்னார்கள். மாண்புமிகு திரு. ரகுமான்கான் அவர்கள் பேசும்பொழுது இன்டியன் பீனல் கோடில் சில செக்ஷன்கள், 426, 425 போன்ற விதிகள் இருக்கும்பொழுது ஏன் இந்தச் சட்டம் என்று கேட்டார்கள். அந்தச் சட்டங்களெல்லாம் நான்-காக்னிசபல் அஃபென்ஸ்கள் ஆகும். அந்தச் சட்டங்கள் போதிய பலம் உள்ளவைகளாக இல்லை.

ஒரு காலத்திலே இந்த நாட்டை வெள்ளைக்காரன் ஆண்டான். அந்த வெள்ளைக்காரர்களை எதிர்த்து எல்லாக் கட்சிகளும், எல்லாத் தரப்பு மக்களும் போராடினார்கள்; பலாத்காரத்தில் ஈடுபட வேண்டிய அவசியம் எல்லாம் ஏற்பட்டது. ஆனால் துரதிருஷ்டவசமாக, இன்று நம்மை நாமே ஆளும் இந்த சுதந்திர நாட்டிலும், ஆள்பவர்கள் மத்தியிலே இருந்தாலும், மாநிலத்திலே இருந்தாலும் எதிர் வரிசையில் இருப்பவர்கள் எதிர்த்தே ஆகவேண்டும், போராட்டம் நடத்தியே ஆக வேண்டும் என்ற கொள்கையைக் கடைப் பிடிக்கிறார்கள். அவ்வாறு அந்தக் கொள்கையைக் கடைப் பிடிக்கின்றபொழுது பலாத்காரம் ஏற்பட்டுச் சொத்துக்களுக்குச் சேதம் ஏற்பட்டால், போக்குவரத்திலே போகும் பயணிகள் மீது, அப்பாவிகள் மீது கல் வீசப்பட்டால், பஸ் எரிக்கப்பட்டால், பல்கலைக் கழகங்கள், கல் லூரிகள் ஆகியவற்றின் கட்டிடங்கள் அடித்து நொறுக்கப்பட்டால் எல்லாக் கட்சிகளையும் சேர்ந்தவர் களும் நாங்கள் வன்மையாக சமூக விரோத சக்திகளைக் கண்டிக் கிறோம்; ரௌடிகளைக் கண்டிக்கிறோம் குண்டர்களைக் கண்டிக் கிறோம் என்று சொல்கிறார்களே தவிர யார் அந்த ரௌடிகள் யார் அந்தக் குண்டர்கள், யார் அந்த சமூக விரோத சக்திகள் என்று யாரும் அடையாளம் காட்டுவதில்லை. எந்தக் கட்சியைப் பொறுத்தவரையிலும் அந்தக் கட்சியின் தலைவர்கள் மாநில அளவில் இருக்கிறார்கள்; மாவட்ட அளவில் இருக்கிறார்கள், தாலுக்கா அளவிலே இருக்கிறார்கள்; உட்கிளை அளவிலே இருக்கிறார்கள். சர்க்கார் சார்பில் அல்லது போலீசார் சமூக விரோத சக்தி என்று சிலரைக் கைது செய்தால் அல்லது பொதுச் சொத்துக்களைப் பாழ்படுத்தியவர்கள் இவர்கள் என்று வழக்குத் தொடுக்குமேயானால் சம்பந்தப்பட்டவர்கள் எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் அல்ல என்று சொல்லி விடலாம். இது பேரறிஞர் அண்ணா அவர்களின் காலத்திலிருந்து நடக்கும் காரியமாகும்.

நாம் ஒரு போராட்டத்தைத் துவங்கும்பொழுது எதிர்பாராத விதமாகக் கலகம் ஏற்பட்டால் அல்லது பொதுச் சொத்துக்கள் பாழாக்கப்பட்டால் ஒன்று அந்த ஊர்வலத்தை நடத்திச் சென்றவர்கள் தைரியமாக முன்வந்து நாங்கள்தான் செய்தோம் என்றோ அல்லது எங்கள் கட்சியைச் சார்ந்த சிலர்தான் செய்தார்கள் என்றோ ஏற்றுக்கொள்ள முன்வர வேண்டும். அப்படியில்லாமல் போலீசாரே சம்பந்தப்பட்ட சமூக விரோதி களைக் கண்டுபிடித்து தண்டிப்பதற்கு முன்வருவார் களேயானால் அதையும் தண்டிக்கக்கூடாது என்று சொல்லி, அரசாங்கம் சட்டம் கொண்டு வரும்பொழுது இல்லாத ஒரு உள்நோக்கம் இருப்பதாகக் கற்பனை செய்வது சரியல்ல என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்டியன் இரயில்வேஸ் ஆக்டில் இரயில் செல்லும்பொழுது கல் எடுத்துப் போட்டால் கடுமையாகத் தண்டிக்க விதியிருக்கிறது. அதனால்தான் கூடுமானவரையில், பல கிராமங்கள் வழியாகப் பலமைல் தூரம் இரயில்கள் சென்றாலும் கல் வீசாமல் இருக்கிறார்கள்.

(பிற்பகல் 12.10)

ஆனால் சட்டத்தைப் பொறுத்தவரையில், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் சொன்னார்கள். ஐ.பி.சி-லே பஸ்ஸிலே போகிறபோது, ஊர்வலம் போகிறபோது அதிலே உள்ள பிரயாணிகள் உள்ளே உட்கார்ந்து இருந்து கல்லை எறிந்தால் அவர்களைத் தண்டிப்பதற்கு பீனல் கோடிலே வழியில்லை என்று சொன்னார்கள். அப்படி வழியில்லாத காரணத்தினால்தான் இதைப்போன்ற சட்டங்கள் கொண்டு வரப்படுகின்றன. போக்குவரத்துச் சாதனங்கள் மட்டுமல்ல. சாதாரண பொது ரோடாக இருந்தாலும் கூட, ரோட்டுக்குப் பக்கத்திலே உள்ள மிராஸ்தாரர்கள் வழியிலே உள்ள ரோட்டை ஆண்டுக்கொண்டு வெட்டி வெட்டி குறைத்து மிகக் குறுகலாக அங்கே பஸ்ஸே விடமுடியாதபடி செய்கிறார்கள். கிராமப் பகுதியிலே உள்ள பொதுமக்கள் இந்த ரஸ்தா வழியாக பஸ் விடவேண்டும் என்று சொல்கிறார்கள். அளந்து பார்த்தால் பல மிராஸ்தாரர்கள் அந்த ஆக்கிரமித்திருக்கிறார்கள். சாதாரண வாய்க்கால் வழியாக வருகிற அந்தநீர்ப்பாசன வாய்க்கால்களை பல் பேர்கள் உள்ளூரிலே உள்ள செல்வாக்கில் தூர்த்து விடுகிறார்கள் சில பேர்கள் மாற்றி அமைக்கிறார்கள். 'ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி' என்பதைப்போல, சர்வேயர் அளந்து கல்லை நடுகிறபோது, அந்த சர்வேயர் இருக்கிறபோதே கல்லை எடுத்தால் தண்டிப்பதற்கு ஐ.பி.சி.-லே இடமில்லை. கேட்டால் நான்-காக்னிசிபிள் அஃபன்ஸ் என்று சொல்லுகிறார்கள். அந்த முறையிலே ரயிலிலே மாத்திரம் அல்ல. மாண்புமிகு உறுப்பினர் அம்பிகாபதி அவர்களுக்குச் சொல்லிக்கொள்வேன். மாஸ்கோவிலே இது போன்ற குற்றம் செய்தால் தண்டிப்பதற்கு சட்டத்தில் நிச்சயமாக இடம் இருக்கின்றது. போக்குவரத்து வசதிகளை மாத்திரம் அல்ல, பொது ஸ்தாபனங்களில் உள்ள சொத்துக்களை, அரசாங்கத்திற்குச் சொந்தமானாலும், உள்ளாட்சித் துறைக்குச் சொந்தமானாலும் பஸ் நிறுவனங்கள் போன்றவைக்குச் சொந்தமானாலும், கூட்டுறவு ஸ்தாபனங்களுக்குச் சொந்தமானாலும், அந்தச் சொத்துகளுக்குச் சேதம் அளிக்கப்பட்டால் நிச்சயமாக தண்டிக்கப்படும் என்ற சட்டம்--தனியாக இதுபோன்ற சட்டமாக இல்லாவிட்டாலும்--ஐ.பி.சியைப் போல, சோவியத் பீனல் கோட் என்ற சட்டம் இருக்கிறது. பொதுத் தண்டனை சட்டத்திலே அங்கு இந்தச் சட்டம் இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிலர் எதிர்கட்சிக்காரர்களைப் பழிவாங்குவதற்காக இந்தச் சட்டம் வருகிறது என்று சொன்னார்கள். ஆனால் அதிஷ்ட வசமாக இந்தியாவிலே பாரதப் பிரதமராக இருந்தால் கூட, அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட விதம் செல்லாது என்ற தீர்ப்பும்,

பல்வேறு மாநிலத்திலே முதலமைச்சராக இருந்தாலும், வேறு அமைச்சர் பொறுப்பிலே இருந்தாலும் அவர்கள் செய்தது தவறு தவறுதான் என்று சுட்டிக்காட்டக்கூடிய தைரியம் உள்ள நீதிபதிகள் இந்தியாவிலே இருக்கின்றபோது ரகுமான்கான் போன்ற வழக்கறிஞர்கள் ஏன் பயப்படுகிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. தமிழ்நாட்டில் அடிப்படை உரிமையாளர் சங்கத்தின் தலைவர் என்று சொல்லக்கூடிய அருமை நண்பர் திரு. சோ அவர்கள் நேற்றைய்தினம் வெளியிட்ட பத்திரிகை அறிக்கையைப் பார்க்கிறபோது . . .

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இருக்கக் கூடிய சட்டத்திலே நடைமுறையில் இலை என்ற தவறான தகவலை கூறியிருக்கிறார்கள்.

Section 431 I.P.C. Whoever commits mischief by doing any act which renders or which he knows to be likely to render any public road bridge, navigable river or navigable channal, natural or artifical impassable or less safe for travelling, conveying perperty,shall be punished. with . . . .

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய உரையிலே இதற்கெல்லாம் பதில் சொல்ல இருக்கிறேன். தற்போது நேரமில்லை என்ற காரணத்தால் விரைவிலே முடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வி. வி. சுவாமிநாதன்: மாற்றுத் தலைவர் அவர்களே, நான் விரைவிலே முடித்து விடுகிறேன். நான் சொன்னதைப் போல இந்த சட்டத்திலே 'ஹூ எவர்' என்று இருக்கிறதே தவிர அது எதிர்க்கட்சிகள் நடத்துகின்ற ஊர்வலங்கள் அல்லது முக்கியமாக பல்வேறு பகுதிகளில் இதுவரையில் மாணவர்கள் ஆசிரியர்கள் விவசாயிகள் தொழிலாளர்கள் இவர்கள் தான் ஊர்வலங்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அப்படி நடத்துகிறபோது ஊர்வலத்தை எதிர்த்து வருகிற ஒரு பஸ் அந்த ஊர்வலம் போகக்கூடாது என்று தடுக்கிற முறையிலேயும் அல்லது பஸ்ஸிலே வருகிற ஒரு பயணி தடுத்தாலும் அந்த பஸ்ஸை நிறுத்துவதற்கோ அடிப்பதற்கோ பயணிகள் மீது கல்லெறிவதற்கோ நியாயம் இருக்கலாம். ஆனால் இதுவரையில் நடந்த எல்லாவிதமான போராட்டங்களிலும் சமாதானமாக தான் போகிற போக்கிலே போய்க்கொண்டிருக்கும் பஸ்ஸை நிறுத்துவதும் உள்ளே இருக்கும் பயணிகளை இறக்கிவிடுவதும் அவர்களை வன்முறைக்கு ஆளாக்குவதும் நியாயமா என்று கேட்க விரும்புகிறேன். தாயிடம் கூட மகன் முறையிட வேண்டிய காலம் இது என்று மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் சொன்னார்கள். வாஸ்தவந்தான. முறையிடலாம். ஆனால் தாயிடம் முறையிட வேண்டிய மகன் தாயின் சேலையைக் கொளுத்துவது எவ்வளவு அநியாயமோ அதேபோலத்தான் போராட்டம் நடத்துகிறவர்கள் அது கோட்டையாக இருந்தாலும் தாலுகா நிலையமாக இருந்தாலும் மாவட்ட

ஆட்சித் தலைவர் அலுவலகமாக இருந்தாலும் அங்கே முற்றுகையிட்டு பலமாக அழுத்தந்திருத்தமாக முழக்கமிடலாம். ஆனால் ஊர்வலம் என்ற பெயரால், அதேநேரத்தில் ஊர்வலத்தில் அசம்பாவிதங்கள் நிகழாது வன்முறை வராது, அப்படி யாராவது ஏற்பாடு செய்தால் அதற்கு நாங்கள் பொறுப்பல்ல, சர்க்கார் தண்டிக்கலாம் என்று சொல்லிக்கொண்டு இது போன்ற சட்டங்களைக் கொண்டு வரும்போது எதிர்ப்பது நியாயமல்ல. ஜாமீன் எடுப்பதில் காலதாமதம் ஆகும் என்று சிலர் சொல்கிறார்கள். இதில் எந்தவிதக் காலதாமதமும் ஆவதற்கு எவ்விதக் காரணமும் இல்லை. அதுவும் முக்கியமான வழக்குகளில் ஜாமீன் மனுக்கள் தாக்கல் செய்தால் குற்றம் சாட்டப்பட்டபோதோ, அல்லது தண்டிக்கப்பட்டபோதோ, அரசு வழக்குறைஞர்கள் கலக்கவேண்டுமென்பதற்கு, காரணம் பல்வேறு வழக்குகளில அனுபவப்பூர்வமாக கலக்காமலே குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் ஜாமினில் விடப்படுகின்றனர். அதனால்தான் இதை சேர்த்திருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். இன்னொன்றும் சொன்னார்கள். செக்ஷன் மூன்றைப் பற்றி. சம்பந்தப்பட்ட குற்றம் புரிந்தவர்கள் மாத்திரம் அல்ல, யாராவது தூண்டுபவர்கள், துணை போகிறவர்களும் சேர்க்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். ஐ.பி.சியிலே, உலகத்திலே எந்த நாடுகளிலும், அது ரஷ்யாவாக இருந்தாலும் அல்லது சைனாவாக இருந்தாலும்கூட, இதுமாதிரியான தண்டனை செக்ஷனில் குற்றம் செய்பவர்கள் மாத்திரம் அல்ல, தூண்டுபவர்கள், துணை போகின்றவர்கள் அந்தக் குற்றத்திற்காக ஆளாக வேண்டுமென்ற விதிகள் இருப்பதை நாம் அறிவோம். அந்த முறையிலே தான் இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறதே தவிர, உண்மையிலே அதைத் தூண்டிவிடாதவர்கள், துணை போகாதவர்கள், அதற்கு உடந்தையாக இல்லாதவர்கள், கொஞ்சம்கூட பயப்படத்தேவையில்லை. சமூகவிரோத சக்திகளை கண்டிப்பது நியாயமானது என்றும் அவசியம் என்றும் உணருவார்களானால், நிச்சயமாக இந்தச் சட்டத்தை எதிர்க்க மாட்டார்கள் என்று சொல்லி, இந்தச் சட்டத்தை நான் வரவேற்கிறேன். வணக்கம்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான மசோதா மீது நான் பேசுகின்ற வாய்ப்பினைப் பெற்றதற்காக மகிழ்கிறேன். இந்த மசோதா மீது ஆளும்கட்சியின் தரப்பில் 2 உறுப்பினர்கள் பேசினார்கள். அதிலும் கூட எனக்கு சண்முகம் பேசியதில் வியப்பில்லை. ஆனால், விவரம் புரிந்த வி. வி. சுப்பிரமணியம் அவர்கள், தான் இருக்கவேண்டிய இடத்திற்கு ஆதரவாக மிகச் ஜாக்கிரதையாக, ஒரு சிறந்த வழக்கறிஞர் அவர். ஆனால் அவர் ஓடோடி, அங்கொன்றும், இங்கொன்றும் தேடிப் பேசியதிலிருந்து இது எவ்வளவு மோசமான மசோதா என்பது எல்லோருக்கும் தெரியும். இந்தச் சட்டத்தை திடீரென்று கொண்டுவரவில்லை. இதனுடைய பூர்வோத்திரம் என்னவென்றால், நம்முடைய அமைச்சர் அவர்கள் ஐயோ பஸ் மீது கல் போடுகிறார்களே, கண்ணாடி உடைகிறதே, என் மனம் துடிக்கிறதே, அதற்கு ஒரு சட்டம் தேவையானது என்று அவராக சிந்தித்துக் கொண்டு

வந்தது இல்லை. நாங்கள் எல்லாம் இலங்கைத் தமிழர்களுக்கு என்று இன்னல்பட்டு சிறையிலே இருந்தபோது, ஐ. ஜி. ராதா கிருஷ்ணன் அவர்கள் ஒரு அறிக்கையை விட்டார்கள். பஸ் மீது கல் எறிந்தால், 7 ஆண்டு தண்டனை வருகிறது சட்டம், அப்போதே சொன்னார். அதாவது சட்டமன்றத்தில், சட்ட அமைச்சர் அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பில்லைக் கொண்டுவரலாம், நாம் கொண்டு வரலாம், எப்படி வேண்டுமானாலும் பண்ணலாம். ஆனால் இந்த மன்றத்திற்கு சம்பந்தம் இல்லாத ஐ. ஜி. அறிக்கை விட்டார்கள். பஸ் மீது கல் எறிந்தால் 7 ஆண்டு தண்டனை. அவருக்கு இவர் எஜமானரா, அல்லது இவருக்கு அவர் எஜமானரா தெரியவில்லை. அவர் சொன்ன உடனே பார்த்தார், ஐ.ஜி. ராதாகிருஷ்ணன் சொன்னதற்குப் பிறகு நான் சட்ட அமைச்சராக இருந்து, ஒரு பில்லைக் கொண்டு வரவில்லை என்றால், என்பிறவி பயன் யாதுண்டு கொல் என்று சொல்லி, இப்போது ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். கொண்டு வந்து என்ன பண்ணார்? கண்ணை மூடிக்கொண்டு அடித்தார், உடனே 5 வருஷம் தண்டனை. ஆனால் தண்டனைக் கொடுப்பதில் உங்களைப் போல்.......

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் ரமணி அவர்கள் பேசியபோது மாண்புமிகு உறுப்பினர் துரை முருகன் அவர்கள் கவனிக்கவில்லை என்று கருதுகிறேன். இதனுடைய நோக்கம், முதல் அமைச்சர் அவர்கள் முன்னாலே பேசியபோதுகூட அதை எடுத்து படித்துக் காண்பித்தார்கள். ஐ. ஜி. ராதா கிருஷ்ணன் அவர்கள் சொல்வதற்கு முன்னாலே, முதல் அமைச்சர் அவர்கள் பேசியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரைமுருகன்: எப்படியோ, அவர் பேசி, இவர் பேசி, ஐ. ஜி. பேசி, இன்றைக்கு வந்திருக்கிறது, பரவாயில்லை, கொண்டு வந்திருக்கிறீர்கள். இன்றைக்கு சட்டம் என்ன என்றால், 5 வருஷம் தண்டனை என்று சொல்கிறார்கள். அது எப்படி என்றால், ஒரு கல்லை விட்டால் அந்த பஸ்ஸுக்கோ, அல்லது மாநில சர்க்காருக்கோ, அல்லது போக்குவரத்துக் கழகத்திற்கோ, ஏதோ ஒரு 5, 6 டெபினிஷன் கொடுத்து இருக்கிறீர்கள். இதிலே 100 ரூபாய் பொருளுக்கு சேதாரம் விளைவித்தால் 5 வருஷம் நான் கேட்கிறேன். கல்லை எறிவது நியாயம் என்று யாரும் வாதாடவில்லை. அது தப்புதான். சமூகவிரோதிகள் செய்கின்ற செயல். நம்முடைய வி. வி. எஸ். சொன்னார்கள். சமூக விரோதி என்றால் யார் என்று இன்னும் டெபைன் ஆகவில்லை. யார் என்பதைக் கண்டுபிடிப்பதற்கு ஒரு சட்டம், ஒரு 100 ரூபாய் அபராதம். ஒரு கல்லை விடுகிறான். உணர்ச்சி வசப்பட்டு, உடனே அபராதம், தண்டனை. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் நம்முடைய கட்சியிலேயிருந்து வெளியே அனுப்பியபோது காளிமுத்து சொன்னார், எங்கள் முதல் அமைச்சர் படத்தை ஒட்டினால்தான் காட்பாடியிலிருந்து கன்னியாகுமரி வரையிலும் லாரி ஓடும் என்று சொன்னார். விட்டீர்கள் கல்லை, டமார் டமார் என்று, 100 லாரிகளுக்கு மேல் சேதம் அடைந்திருக்கும்.

நீங்கள் ஆட்சியிலிருந்து இறங்கினீர்கள். உடனே மவுண்ட் ரோட்டிலே எல்லாக் கண்ணாடிகளையும் உடைத்தீர்கள். போராட்டம் நடத்தினீர்கள். மீண்டும் நீங்கள் ஆட்சிக்கு வந்தவுடனே அதெல்லாம் சமூக விரோதிகளால் செய்யப்பட்டது என்று தெரிவித்து விட்டீர்கள். வழக்குகளை வாபஸ் வாங்கி விட்டீர்கள். ''மாமியார் உடைத்தால் பொன் குடம், மருமகள் உடைத்தால் மண் குடம்'' என்ற நிலைதானா இங்கேயும்? நீங்கள் கல் எறிந்து கண்ணாடிகள் எல்லாம் உடைந்தால் அது நியாயத்தின பிரதிபலிப்புக்கு உட்பட்டது. வேறு யாராவது கல் எறிந்து கண்ணாடி உடைந்துவிட்டால் அது சமூக விரோதச் செயல். என்ன நியாயம் இது? டிரைவருக்குப் பக்கத்திலே, ஒரு கண்ணாடி வைத்திருக்கிறார்கள். அது பின்னால் வண்டி ஏதாவது வருகிறதா என்று பார்ப்பதற்காக வைக்கப்பட்டிருக்கிற ஒரு 'மிரர்' அதன் விலைகூட 250 ரூபாய் அல்லது 300 ரூபாய் ஆகிறது. வண்டியில் இருக்கக்கூடிய 'ஹெட்லைட்' 300 ரூபாய்க்கு மேல் விலை ஆகிறது. யாராவது ஒருவர் கல் எறிந்து, கண்ணாடியோ, ஹெட்லைட்டோ உடைந்துவிட்டால் அவருக்குக் கூட 5 வருஷம் தண்டனை, அபராதம் என்று போட்டால் இது என்னச் சட்டம்? குற்றவாளியைத் தண்டிப்பது நியாயம். இல்லை என்று சொல்லவில்லை. அதற்கு கூட ஒரு வரன்முறை இருக்க வேண்டும். கல் எறிந்ததால ஒரு கண்ணாடி உடைந்து விட்டது என்றால் அதற்குக் கூட 5 வருஷம் தண்டனை என்பது சரிதானா என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

(பிற்பகல் 12.20)

அமெரிக்காவில் இருக்கிற அரசியல் சட்டத்திற்கு ஆறாவதோ, எட்டாவதோ, ஒரு திருத்தம் கொண்டு வந்தார்கள். அது என்ன திருத்தம் என்றால் ஒரு குற்றத்திற்கு அதிகமான தண்டனைக் கொடுப்பதை தடுப்பது. அமெரிக்க அரசியல் சட்டத்தில் இப்படிப்பட்ட ஒரு திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது. ஒருவர் திருடுகிறார் என்றால் அந்த திருட்டுக்குத் தகுந்த தண்டனை தான் வழங்க வேண்டுமே தவிர அதிகமான தண்டனை வழங்கக் கூடாது. அப்படிப்பட்ட சட்டத்தைப் போடுவதால் குற்றம் குறைந்துவிடாது. அதேநேரத்தில் சட்டம் சீப்பாகப் போய்விடும். அந்த நிலையை உருவாக்குவது சரியல்ல.

நானும் சட்டக் கல்லூரியில் படித்தேன். நம்முடைய சட்ட அமைச்சர் அவர்களும் அதே சட்டக் கல்லூரியில்தான் படித்தார்கள். எனக்கு கிரிமினல் லா நடத்தியவர் திரு. சீனிவாசன் அவர்கள். அமைச்சர் அவர்களுக்கு சீனிவாசன் நடத்தினாரா அல்லது பாலசுப்பிரமணியம் நடத்தினாரா என்று தெரியவில்லை. கிரிமினல் லாவில் மொத்தம் 511 செக்ஷன்கள்தான் இருக்கின்றன. எவ்வளவோ குற்றங்கள் நடைபெற்றாலும் 511 செக்ஷன்கள் தான் இருக்கின்றன; அதற்கு என்ன காரணம் என்பதை சீனிவாசன் அவர்கள் விளக்கினார்கள். இந்த உலகத்தில் 2,000 அல்ல 5000 குற்றங்கள் நடைபெறுவதாக இருந்தாலும் அத்தனை

குற்றங்களையும் இந்த 511 செக்ஷனகளுக்குள் அடக்கிவிடுவேன் என்று கிரிமினல் லாவை எழுதிய மெக்காலே சொன்னாராம். அந்த வகையிலே கிரிமினல் லா உருவாக்கப்பட்டிருப்பதால் 511 செக்ஷன்கள் இருக்கின்றன என்று சொன்னார்கள்.

ஆனால் இங்கே அமைச்சர் கொண்டுவந்திருக்கிற சட்டத்தைப் பார்த்தால் ஒரு சிறிய குற்றம் செய்தாலும், ஒவ்வொரு குற்றத்திற்கும் ஒவ்வொரு சட்டம் என்ற முறையிலே இருக்கிறது. ஒரு கல் எறிந்தால் கூட 5 வருஷம், 10 வருஷம் தண்டனை என்றால் இது நியாயம்தானா என்று சட்ட அமைச்சர் சிந்திக்க வேண்டும். அதேநேரத்தில் ஒவ்வொரு அரசுக்கும் ஒரு பெருமை இருக்கிறது. இராணி மங்கம்மாள் ஆட்சியில் ரோடு போட்டார், சாலை அமைத்தார் என்ற பெருமை இருக்கிறது. அக்பர் ஆட்சியில் ஜெஸ்ஸியா வரி சீர்திருத்தம் செய்தார் என்ற பெருமை இருக்கிறது. அப்படி இருக்கும்போது சட்ட அமைச்சர் ஆட்சியில் இருக்கும்போது என்ன பெருமை தேடிக்கொண்டார் என்று கேட்கமாட்டார்களா? ஆகவே, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் ஆட்சியில் இருக்கும்போது 2,000 சட்டங்களைப் போட்டார்கள் என்ற பெருமையைத் தேடிக்கொள்ள முயற்சிக்கிறார்கள். ஒரு நாள் விடாமல், தினந்தோறும் ஒரு சட்டத்தைக் கொண்டுவருகிறார்கள். சட்ட அமைச்சர் காலத்திலே டெயிலி ஒரு சட்டம் போட்டார் என்ற பெருமை இருக்கிறது. அது இல்லை என்றால் அவருக்குப் பெருமை இல்லை.

லா டிபார்ட்மென்ட் செக்ரட்டரி என்ன செய்வார், பாவம். அவர் சட்டங்களாக தினந்தோறும் எழுதிக்கொண்டே இருக்கிறார். இதைத் தவிர அவருக்கு வேறு என்ன வேலை இருக்கிறது? எழுதிக்கொண்டே இருக்கிறார். கல் எறிந்தால் என்ன தண்டனை கொடுக்கலாம்? 5 வருஷம் தண்டனை கொடுக்கலாமா? கொடுக்கலாம். சரி, போடுங்கள். கல் எறிந்தால் 5 வருஷம் தண்டனை, சட்டம் வந்தாகிவிட்டது. கல் எறிந்து, 100 ரூபாய் மதிப்புள்ள பொருள் சேதம் என்றால் 5 வருஷம் போடுங்கள். அவர்கள் நினைத்தால் நினைத்தமாதிரி ஒரு சட்டம். அதற்கு ஒரு திட்டம் கிடையாது. இப்படி சட்டத்தாலே ஒரு அரண் அமைத்து சர்வாதிகாரம் நடத்த நினைக்கிற உங்களுக்கு சடசடவென்று சரிந்த ஜாரின் ஆட்சியை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இன்னொன்று. இப்படிப்பட்ட சட்டத்தால் அரசியல் சட்டத்தில் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற அரசியல் உரிமை மறுக்கப்படுகிறது என்பதல்ல. நியாயம் என்ன என்பதைப் பார்க்க வேண்டும். போராட்டம் என்று வந்தால் யார் கல்லெறிவார்? தனிப்பட்டவர் என்றுதான் வரும். நம்முடைய சட்ட அமைச்சரும் காலேஜில் படித்தார், நானும் காலேஜில் படித்தேன். இரண்டு பேருக்கும் தெரியும். நாம் காலேஜில் படிக்கும்போது மாணவர்கள் போராட்டம் வந்திருக்கிறது. நாம் போராட்டம் நடத்தும்போது இரண்டுபேர் கல் விடுவார்கள்.

கண்ணாடி உடையும். உடனே அந்த மாணவர்களைப் பிடித்து உள்ளே போட்டுவிடுவதா? யார் கல் போட்டது, ஏன் போட்டார்கள் என்று பார்க்க வேண்டாமா? பல்கலைக் கழகத்தையும் இந்தச் சட்டத்திலே சேர்ந்திருக்கிறீர்கள். நீங்கள் சொல்லியிருக்கிறமாதிரி இந்தச் சட்டத்தைச் செயல்படுத்த முடியுமா? இந்தச் சட்டத்தை வைத்து ஒருவரை 5 வருஷம் உள்ளே தள்ளிவிடுங்கள் பார்க்கலாம். அப்படி தள்ளிவிட்டால் ஒரு பக்கத்து காதை அறுத்துவிடுகிறேன்.

இங்கே சண்முகம் அவர்கள் சொன்னார்கள். நாங்கள் இத்தனை சட்டம் போட்டோமே, யாரையாவது தண்டித்தோமா என்று சொன்னார்கள். ''அறுக்கமாட்டாதவனுக்கு 58 அரிவாள் எதற்கு?'' சட்டம் போட்டும் ஒன்றும் செய்யவில்லை என்று சொல்கிறீர்கள். அப்படியானால் சட்டம் எதற்கு? 'ஷோ கேசில்' வைத்துக்கொள்ளவா? இப்படி நீங்கள் சட்டத்தைப்போட்டு வைத்தால் யாராவது ஒருவர் எதிர்காலத்தில் உங்களுக்கு எதிராகக்கூட இதைப் பயன்படுத்தலாம்.

திரு. ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, நாங்கள் இதுவரை போட்ட சட்டங்களைப் பயன்படுத்தி எதிர்க்கட்சிகளை நசுக்கவில்லை. யாரையாவது பழிவாங்கி இருக்கிறோமா என்று கேட்டேன். ஆனால் அந்தச் சட்டங்களை நாங்கள் பயன்படுத்தவில்லை என்று சொல்லவில்லை. அது மட்டுமல்ல. என்னைக் குறிப்பிட்டு, இங்கே ஆளும் கட்சியில் இருக்கிற உறுப்பினர் ஏ. சி. சண்முகம் பேசினார்கள், பரவாயில்லை. ஆனால் விவரம் தெரிந்த வி. வி. சுவாமிநாதனும் பேசினார் என்று சொன்னார்கள். அப்படியானால் நான் விவரம் தெரியாதவனா? அவர் எம். ஏ., பி. எல். எப்படி வாங்கினார் என்று தெரியவில்லை. சட்டத்திலே எத்தனையோ ஓட்டை உடைசல்கள் இருக்கின்றன. அந்த ஓட்டை உடைசல்களைப் பயன்படுத்தி குற்றவாளிகள் தப்பித்துவிடுகிறார்கள். ஆகவே, அந்த ஓட்டை உடைசல்களை அடைப்பதற்காகக் கொண்டுவரப்பட்ட சட்டம் இது. இதைக்கூட தெரிந்து கொள்ளாமல் சொல்கிறார் என்றால் என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

திரு. துரைமுருகன் : மாற்றுத் தலைவர் அவர்களே, திரு. சண்முகத்திற்குக் கோபம் வரக்கூடாது. நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், திரு. வி. வி. எஸ் அவர்கள் சீனியர், வழக்கறிஞர் தொழிலிலும் சரி, அரசியலிலும் சரி. அந்த வகையில் தான் நான் சொன்னேன். திரு. சண்முகம் அவர்கள் மனதைப் புண்படுத்த வேண்டுமென்று சொல்லவில்லை. திரு. சண்முகம் அவர்கள் விவரம் தெரிந்தவர். நான் தான் ஏதோ எம். ஏ. பி. எல். வாங்கிவிட்டேன். நீங்கள் எப்படி வாங்கியிருக்கிறீர்கள், என்ன வாங்கியிருக்கிறீர்கள், என்பது எனக்குத் தெரியாது. தெரிந்தால் எப்படி வாங்கியிருக்கிறீர்கள் என்று கேட்பேன். அது எனக்குத் தெரியவில்லை. ஆகவே, நாங்கள் இதை ஸ்போர்ட்ஸ்மேன் ஸ்பிரிட்டில், ஈசியாக எடுத்துக்கொள்ளவேண்டும் (டேக் இட் ஈசி).

இன்னொரு பிரிவு அதிலே என்ன என்று கேட்டால், பொதுச் சாலை, பாலம் (இயற்கை அல்லது செயற்கை) நீர்வழியில் போக்குவரத்துக் கால்வாய் உட்பட பொதுச்சொத்து அல்லது யந்திரங்களைச் சூழலுக்கு ஏற்ப புதிதாக வாங்குவதற்குரிய அல்லது முன்பிருந்த நிலைக்குக் கொண்டு வருவதற்குரிய தொகைக்காக வழங்குமாறு ஆணையிடலாம் என்று இருக்கிறது. இது முடியுமா, சார். பாலத்தை இடித்து விட்டார், அது போய்விட்டது. பாலத்தை யார் இடிக்கிறான். ஒரு சமூக விரோதி. அந்த சமூக விரோதி என்பவன் யார். இருக்க இடம் இல்லாமல், பாதி நாள் வெளியிலும், பாதி நாள் ஜெயிலிலும் இருப்பவன். 15 நாள் பிளாட்பாரத்தில் வசிப்பான், 15 நாள் சாராயக்கடையில் இருப்பான். இப்படிப்பட்டவன் இடித்து விட்டு போய்விட்டான் என்று சொன்னால், அவன் அந்தப் பாலத்தைக் கட்டிக் கொடுக்க முடியுமா? கட்டிக் கொடுக்க வேண்டும் என்று ஆணையிடலாம். அப்படி ஆணையிட்டால் அவன என்ன செய்வான். பூதகணங்களோடு வந்து நின்று, நந்தனார் போல், அந்தப் பாலத்தைக் கட்டிக்கொடுக்க முடியுமா? அவன் என்ன செய்வான்? நீங்கள் பாலத்தைக் கட்டிக் கொடுங்கள் என்று ஆணையிட்டு விட்டீர்கள், என்னைப் பரோலில் ஒரு மாதம் விடுங்கள், நான் வெளியே ஒரு மாதம் இருந்து திருமங்கையாழ்வார் கொள்ளை அடித்துக்கொண்டு வந்து கோவில் கட்டியதைப் போல நான் இந்தப் பாலத்தைக் கட்டிவிடுகிறேன். இப்படித்தான் அவனால் சொல்லமுடியும், வேறு என்ன செய்ய முடியும்.

ஒரு சட்டத்தைப் போடுகிறீர்கள் என்று சொன்னால், ஒரு நிதானத்தோடு போடவேண்டும். நினைத்ததற்கெல்லாம் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து, அந்தச் சட்டத்தை நிறைவேற்றி வைத்துக் கொண்டு, இந்தச் சட்டத்தை—இந்த அஸ்திரத்தை யார் மீது பாய்ச்சலாம். ஓ. கம்யூனிஸ்ட் கட்சி அதிகமாகப் போராட்டம் நடத்துவார்களா, அவர்கள் மீது இந்த அஸ்திரத்தைப் பிரயோகி. தி. மு. க.வா —போடு அவர்கள் மீது இச் சட்டத்தை. காங்கிரஸ் கட்சியா அவர்கள் மெதுவாகத்தான் வருவார்கள்—ஆகவே, அவர்கள் மீது ஒரு மைல்டாக ஒரு சட்டம் போடு. இப்படி ஏதாவது ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தால் அது சரியல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்-தலைமை)

டிபுடி ஸ்பீக்கரே வந்து விட்டார். நீங்கள் பி. ஏ. பி. எல். படித்து விட்டு, இப்போது எம். எல். கிரிமினல் லா படிக்கிறீர்கள் ஒரு சட்டத்தில் இப்படிப்பட்ட ஒரு பனிஷ்மெண்ட் கொடுக்கலாமா சார். ரிபார்மேடரி வேயில்தான் இப்போது குற்றவாளிகள் திருத்தப்பட வேண்டும். இப்போது தூக்கு தண்டனை வேண்டாம் என்று சொல்கிறார்கள். தூக்கு தண்டனை போடுவதாலே திருத்துவது இல்லை. ஆகவே, சட்டத்தின் நோக்கம் குற்றவாளிகள் திருத்தப்படவேண்டும். அதன் மூலமே சமுதாயத்திலே மேலும் மக்கள் குற்றங்கள் செய்வதைத் தடுக்க முடியும். அந்த வகையில்தான் சட்டம் அமைய வேண்டும் என்பது இப்போது புதிய கருத்தாக இருக்கிறது.

அவர்கள் என்ன சொல்கிறார்கள், ஒரு குற்றத்திற்கு என்ன தண்டனையோ அதை விட மிகையான அளவிற்குத் தண்டனை கொடுப்பதன் மூலம் தண்டிக்கவேண்டும் என்று சொல்கிறார்கள். சட்டத்தைத் தயாரித்த லா டிப்பார்ட்மென்டுக்கு அதனுடைய பூர்வோத்திரம் தெரியும். இதை அறிமுகப்படுத்திய சட்ட அமைச்சருக்கும் அதனுடைய தாத்பர்யம் புரியாமல் இல்லை. இதைக்கொண்டு இந்த அவையில் வைத்து இருப்பதே ஒரு டெமாக்கிரசிக்கு இழுக்கு, ஒரு ஜனநாயகத்திற்கு இழுக்கு. அதுவும் போலீஸ்காரன் கையில் கொடுக்கிறீர்கள். நான் அன்றைக்கே சொன்னேன், நீங்கள் ஒரு பாலிடீசியிஷன். why not you use the political method. போலீஸ் மெதடே யூஸ் பண்ணுகிறீர்கள். பிரஸ்காரன் எழுதினால் போலீஸ்காரன் பிடிக்கிறான், சும்மா போகிறவனை போலீஸ்காரன் பிடிக்கிறான். குண்டா போகிறவனைப் பார்த்து உள்ளே போடுகிறான். ஏண்டா என்று கேட்டால் அவன் குண்டாக இருக்கிறான் என்று சொல்கிறார்கள். சும்மா இருக்கிற பெண்ணைப் பிடித்து உள்ளே போடுகிறீர்கள். இதற்கு எதற்குச் சட்டம். இப்படியே சட்டம் போட்டுக் கொண்டு போனால்

** ** ** **

So I request Hon. Law Minister in the name of political decency and in the name of democraey, kindly withdraw this Bill.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற சட்டங்கள் வரும் போது * * * அதைப் அவைக் குறிப்பில் இருந்து நீக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அந்த வாக்கியங்கள் அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்பெற வேண்டும் என்று ஆணையிடுகிறேன்.

திரு. துரைமுருகன்: நான் ஒரு திருத்தத்தைக் கொடுத்து இருக்கிறேன். 5 வருஷம் என்பது அதிகமாக இருக்கிறது. அதைக் குறைத்து விடுங்கள் என்று. இதை எதற்குக் கொடுத்தேன் என்றால், சட்டத்தை ஒப்புக்கொண்டு அல்ல. அப்படி அமென்ட்மென்ட் கொடுப்பதன் மூலமாக நான் பேசுவதற்கு வாய்ப்புப் பெறமுடியும் என்பதால் கொடுத்தேன். ஆகவே, நான் கேட்டுக் கொள்கிறேன். இந்தச் சட்டத்தை ஒட்டுமொத்தமாக நீங்கள் வாபஸ் வாங்குங்கள். இதிலே நிறைய குறைகள் இருக்கின்றன. பேசுவதற்கு நேரம் இல்லை. நீங்கள் கேட்பதாக இருந்தால் சொல்கிறேன். இல்லையென்றால், அட்லீஸ்ட், பொறுக்குக் குழுவிற்கு விடுங்கள். அங்கேயாவது இதை ஸ்ட்ரக் டவுன் செய்யலாம. எடுத்தேன், முடித்தேன் என்று இந்தச் சட்டத்தை

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. துரைமுருகன்] [1982 ஏப்ரல் 2

இப்போது நிறைவேற்றவேண்டாம் என்று ஜனநாயகத்தின் பேரால் கேட்கிறேன், நாகரீகத்தின் பெயரால் கேட்கிறேன். Kindly withdraw this Bill.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரைக்கும், மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் ஆதரித்தும், சிலர் எதிர்த்தும் தங்களுடைய கருத்துக்களை சொல்லியிருக்கிறார்கள். இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதன் நோக்கம் என்ன என்பதை மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா அவர்கள் பேசுகிற போது பொதுமக்களின் நலன் கருதி இந்தச் சட்டம் தேவையானது என்ற கருத்தை வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள்.

[பிற்பகல் 12.30]

மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா அவர்கள் பேசுகின்றபோது அரசியல் உணர்வோடு இந்தச் சட்டம் பயன்படுத்தப்படக்கூடாது என்ற கருத்தினையும் எடுத்துச் சொன்னார்கள். ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. சண்முகம் அவர்கள் சொன்னதைப்போல் கடந்த காலத்திலே அல்லது நிகழ்காலத்திலே இந்த அரசு ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு சட்டங்களை அரசியல் உள்நோக்கத்தோடு பயன்படுத்தவேண்டும் என்ற அணுகுமுறையினை இந்த அரசு கடைப்பிடிக்கவில்லை என்பதை அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் பேசுகின்றபோது தொழிலாளர்களையும், மாணவர்களையும், மக்களையும் குறிவைத்து அவர்களுக்கு எதிராக கொண்டுவரப்பட்ட சட்டம் என்று இதைப்பற்றிச் சொன்னார்கள். இந்த அரசைப் பொறுத்தவரை மக்களின் அரசாக மாணவர்கள், தொழிலாளர்களின் நலன்களைப் பேணுகின்ற அரசாக நடைமுறையில் இருந்து வருகின்றது என்பதை இந்த மன்றம் மறக்காது என்று நம்புகிறேன். இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் மாணவர்களின் மீதோ, தொழிலாளர்களின் மீதோ, மக்களின் மீதோ பயன்படுத்துகின்ற சட்டம் இல்லை என்பதற்கு அந்தச் சட்டத்தின் நோக்கத்தைப் படிக்கின்றபோதே நீங்கள் அறிந்து கொள்வீர்கள்.

During strike and other agitations, it is noticed that miscreant, commit act of vandalism.

என்றுதான் இருக்கின்றது. மாணவர்களோ, தொழிலாளர்களோ, மக்களோ இதுபோன்ற தவறான நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள் என்றால் அவர்களை நசுக்கவேண்டும், அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதற்காக இந்தச் சட்டம் கொண்டுவரப்படவில்லை. மாணவர்கள், தொழிலாளர்கள் தார்மீகமான முறையில் போராட்டத்தில் ஈடுபட அவர்களுக்கு உரிமை கண்டிப்பாக

1982 ஏப்ரல் 2] [திரு. சி. பொன்னையன்]

உண்டு. அப்படித் தார்மீகமான முறையில் போராட்டத்தை நடத்துகின்றபோது கலகக்காரர்கள் அந்தப் போராட்டத்தைப் பயன்படுத்திக்கொண்டு ஆதாயம் தேடவேண்டும் என்று எண்ணுகின்ற சுயநலமிகள் அந்தப் போராட்டத்தில் நிர்வாகத்தினருக்கு இன்னல் ஏற்படுத்தவேண்டும் என்ற நோக்கத்தோடு நாட்டு நலனுக்குப் புறம்பாக செயல்படுகின்ற சிலர் இதுபோன்ற கெட்ட செயல்களில் ஈடுபடுகின்றபோது அதனால் மாணவர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் இழுக்கு ஏற்படுகின்றது, அவர்கள் நிரபராதிகளாக இருக்கும்போது. எனவே இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையிலே தொழிலாளர்கள், மாணவர்கள் போன்றவர்கள் நடத்துகின்ற தார்மீக போராட்டத்தின்போது கலகக்காரர்கள் ஆதாயத்தின் அடிப்படையிலே சில வன்முறைகளிலே ஈடுபடக்கூடாது என்றும் அப்படி ஈடுபடுகிறவர்கள் கண்டிப்பாக நடவடிக்கைக்கு உட்படுத்தப்படவேண்டும் என்ற நோக்கத்தோடு கொண்டுவரப்பட்டிருக்கின்றது. அப்படிப்பட்ட மிஸ்கிரியன்ட்ஸ் மீது நடவடிக்கை எடுக்கக்கூடிய அளவுக்கு ஒரு சட்டம் வருகின்றபோது தொழிலாளர்கள் நடத்துகின்ற போராட்டம் உண்மையிலேயே அமைதி மிக்க ஒரு போராட்டமாக கண்டிப்பாக அமையக்கூட இது உதவியாக இருக்கும். மிஸ்கிரியன்ட்ஸ் மீது இச்சட்டம் பாயும், அவர்கள் வன்முறையில் ஈடுபடுகின்றபோது, அதுவும் தொழிலாளர் போராட்டத்தின்போது என்று இருக்குமேயானால் தொழிலாளர்களுக்கு இது பாதுகாப்பாக அமையும் என்று கூட நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் பேசுகின்றபோது இந்த ஆட்சி முற்போக்குத் திசையில் போகும் என்ற நம்பிக்கை இருந்தபோதிலும் போகுமா என்ற அச்சமும் ஏற்படுகின்றது என்று சொன்னார்கள். நடைமுறையில் இந்த ஆட்சி கடைப்பிடிக்கின்ற அணுகுமுறைகளை நீங்கள் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். இந்த ஆட்சியைப் பொறுத்தவரையில் கண்டிப்பாக ஏழை மக்களின் ஆட்சியாக, தொழிலாளர் ஆட்சியாக, சமுதாயத்திலே நலிந்த நிலையிலே இருக்கின்ற மக்களின் குறைபோக்கும் ஆட்சியாக முற்போக்குப் பாதையில் கண்டிப்பாக நடக்கும் என்பதை இதன் நடைமுறையில் இருந்து நீங்கள் அறிந்திருப்பீர்கள். ஆகவே கண்டிப்பாக இந்த ஆட்சி முற்போக்கு ஆட்சியாகத்தான் நடக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் திரு. ரமணி அவர்கள் பேசுகின்றபோது 'என்னை வேண்டுமானாலும், தாக்குங்கள், அமைச்சர்களை வேண்டுமானாலும் தாக்குங்கள், ஆனால் பேருந்திலே பயணம் செய்கின்ற பயணிகளைத் தாக்கி விடக்கூடாது' என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதைக் கோடிட்டுக் காட்டினார்கள்.

அதிலிருந்து தொழிலாளர்கள், மாணவர்கள், மற்றும் மக்கள் நலன்கள் மீது மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு அக்கறை இருப்பதால்தான், அந்த அக்கறையோடு அந்த அறிக்கையை விட்டிருக்கிறார்கள் அல்லது பேசியிருக்கிறார்கள் என்பதைத்தான் அது எடுத்துக்காட்டுகிறதே [illegible] [illegible]ல்ல. பேருந்துகளில்

பயணம் செய்கிற பயணிகளைத் தாக்கக்கூடாது, வன்முறை யாளர்கள் அத்தகைய நிகழ்ச்சிகளில் ஈடுபடக்கூடாது என்று வன்முறையாளர்களைக் கண்டித்திருக்கிறார்களே தவிர தார்மீகப் போராட்டங்களில் ஈடுபடுகிற தொழிலாளர்களைக் கண்டிப்பாக கண்டிக்கவில்லை என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

பூட்லெக்கர்ஸ் ஆர்டினன்ஸை கோடிட்டுக்காட்டி குடிசை வாழ் மக்களுக்கு எதிராக இது பயன்படுத்தப்படுகிறது என்ற பொருள்பட மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் பேசினார்கள். அந்த ஆர்டினன்ஸைப் பொறுத்தவரையில் நான் ஏற்கனவே அவையில் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். குடிசைவாழ் மக்களுக்கு, அவர்கள் பாதுகாப்பிற்காக கொண்டு வரப்பட்டிருக்கிற ஆர்டினன்ஸ் இது. பலயிடங்களில் சமுதாய விரோதிகள் தனியார் சொத்துக்களை, அரசாங்கத்திற்குச் சொந்தமான சொத்தை, கார்ப்பரேஷனுக்குச் சொந்தமான சொத்தை ஐந்து ஏக்கர், ஏழு ஏக்கர், பத்து ஏக்கர் என்று தங்களுடைய ரௌடித்தனத்தைப் பயன்படுத்திக்கொண்டு ஆக்கிரமித்துக்கொண்டு அவர்களே அவர்களுடைய செலவில் குடிசைகள் அமைத்து குடிசைவாழ் மக்களை அங்கே குடியேறச் செய்து அந்த மக்களிடம் அதிகப்படியான வாடகை வசூலித்து அந்த மக்களுக்கு அரசாங்கம் ஸ்லம் க்ளியரன்ஸ் போர்ட் மூலமாக வீடு கட்டித் தருகிறபோது அந்த வீடுகளில் குடியேற விரும்பினால் கூட அந்த வீடுகளுக்குச் செல்லக்கூடாது என்றும் இங்கேயே இருக்கவேண்டுமென்றும் அந்த குடிசைவாழ் மக்கள் அரசு வீடுகளுக்குச் செல்லமுடியாத அளவிற்கு வன்முறையால் தடுக்கிற சில ரௌடி எலிமெண்ட்ஸ் இருப்பதால் அத்தகைய வசதி படைத்த, பணம் படைத்த, ஏழைகளைப் பயன்படுத்தி அவர்களைச் சுரண்டுகிற ரௌடிகளுக்கு எதிராகத்தான் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டதே தவிர கண்டிப்பாக குடிசைவாழ் மக்களுக்கு ஒருவருக்கு எதிராகக் கூட இந்தச் சட்டம், சட்டத்தினுடைய விதிகள் அடிப்படையில் பயன்படுத்த முடியாது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஸ்லம் க்ராபேர்ஸ் பற்றி விளக்கம் கொடுத்தார்கள். நான் அவர்களிடமிருந்து தெரிந்து கொள்ள விரும்புவது, உதாரணமாக, குடிசைவாழ் மக்கள் குடிசைகளில் இருப்பதற்குப் பதிலாக ப்ளாட்பாரத்தையொட்டியோ அல்லது அரசாங்கத்திற்குச் சொந்தமான இடத்திலோ அல்லது கார்ப்பரேஷனுக்குச் சொந்தமான இடத்திலோ இது போன்ற யிடங்களில் — உதாரணமாக சென்னையில் அப்படி குடியிருக்கிறார்கள். நான் கேட்க விரும்புவது, அவர்கள் ஸ்லம் க்ராபேர்ஸ் என்பதில் வரமாட்டார்கள் என்று அமைச்சர் அவர்கள் உறுதியளிக்கிறார்களா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : நான் ஏற்கனவே இதைப் பற்றி சொல்லியிருக்கிறேன். இப்போதும் விளக்க விரும்புகிறேன். கண்டிப்பாக ப்ளாட்பாரம் போன்றயிடங்களில் அல்லது இத்தகைய

வசதி படைத்த ரௌடிகள் சில நிலங்களை ஆக்கிரமித்து அந்த நிலத்தில் குடிசைகள் போட்டிருந்தாலும், எந்த இடத்தில் ஏழைகள் குடிசைகள் போட்டிருந்தாலும் அந்த குடிசைவாழ் மக்களுக்கு எதிராக இந்தச் சட்டத்தைப் பயன்படுத்த முடியாது, பயன்படுத்தப்படவும் மாட்டாது.

திரு. துரைமுருகன் : இந்தமாதிரி ஒரு பொது இடத்தை ஆக்கிரமிப்பது தப்பு என்பதை ஒத்துக்கொள்கிறேன். நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவது என்னவெனில், குண்டர்கள் மட்டுமல்ல. சில பேர்கள் மன்றத்தின் பெயரால் நடுத்தெருவில் மன்றம் அமைத்து ஊருக்குள் போக முடிவதில்லை, காட்பாடி டவுன்ஷிப்பில். நடுத்தெருவில் எம்.ஜி.ஆர். மன்றம் என்று போர்ட் வைத்து விடுகிறார்கள். நான் ஹைவேஸ் அதிகாரிகளிடம் சொல்லிப் பார்த்து விட்டேன். நாங்கள் என்ன சார் செய்கிறது என்று சொல்கிறார்கள். காட்பாடியில், அப்படி எம்.ஜி.ஆர். மன்றம் என்று போர்ட் வைத்துக் கொண்டு அந்தப் பக்கத்திலுள்ள வீட்டிற்குச் செல்ல வேண்டியவர்கள் இந்தப் பக்கம் சுற்றித்தான் போகவேண்டியிருக்கிறதே தவிர இந்த வழியாகப் போக முடியாத நிலை இருக்கிறது. ஹைவேஸ் என்ஜினியரிடம் சொன்னால், நான் என்ன செய்வது சார் என்று சொல்கிறார்கள். அதற்கெல்லாம் நடவடிக்கை எடுப்பீர்களா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் மன்றங்களை நீக்கவேண்டும் என்ற முறையில் மறைமுகமாக இந்த ஸ்லம் க்ரேபேர்ஸ் ஆர்டினன்ஸை ஆதரிக்கிறார் என்று கருதுகிறேன். (குறுக்கீடுகள்) இந்த ஸ்லம் க்ராபேர்ஸ் ஆர்டினன்ஸ் பொறுத்தவரையில் திரு. துரைமுருகன் அவர்களுக்கும், திரு. ரகுமான்கான் அவர்களுக்கும் தெரியும், அவர்கள் வழக்கறிஞர்கள். அது ஒரு ப்ரெவின்டீவ் டிட்டென்ஷன் ஆக்ட். இந்த ப்ரெவின்டீவ் டிட்டென்ஷன் ஆக்ட்டைப் பொறுத்தவரையில் உங்களுக்கு தெளிவாகத் தெரியும். There should be disturbance to public tranquility. அப்படி குடிசை போட்டிருக்கிறவர்கள், அவர்களுடைய நடவடிக்கைகள், if it results in danger to the public peace. அப்போதுதான் அந்தச் சட்டம் பயன்படுத்தபடுமேயொழிய இதில் பயன்படுத்திச் செய்யமுடியாது. அப்போது தான் அந்த ஆர்டினன்ஸ், சட்டத்தைப் பயன்படுத்த முடியுமே ஒழிய, மற்றபடி பயன்படுத்த முடியாது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11.40)

மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் பேசுகின்ற போது மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் சொல்லியதைப் போல், இந்தச் சட்டம் பொது மக்களை பாதிக்கும் என்று சொன்னார்கள். அத்தோடு தூண்டி விடுபவரை இந்தச் சட்டம் மூலம் தண்டிக்கலாமே என்றும் சொன்னார்கள். இந்தி

எதிர்ப்புப் போராட்டம், மொழி எதிர்ப்புப் போராட்டம். காந்தியார் அவர்கள் ஈடுபட்ட போராட்டங்களைப் பற்றி ஒப்பிட்டுப் பேசினார்கள். மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்களுக்கு நன்கு தெரியும் — 'அபெட்மென்ட் ஆர் இன்சைட்மென்ட்' அது எதுவாக இருந்தாலும், ஏதோ கற்பனையாக, காவல் துறையினர் ஒரு வழக்கைத் தொடர்ந்து, அதிலே வெற்றி பெற்று விட முடியாது. அதை நிரூபிக்க வேண்டும். There should be an offence, there should be corroboration. Evidence and corroboration இல்லாமல், தூண்டிவிடுபவர்களை தண்டனைக்கு உட்படுத்திவிட முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இருக்கின்ற சட்டத்திலே, ஐ.பி.சி. போன்ற சட்டங்களிலே, தற்போது கொண்டு வரப்பட்டிருக்கின்ற சட்டத்திலே மாறுபாடு அதிகம் இல்லை என்ற ஒரு நோக்கோடு, ஏற்கனவே இருக்கின்ற சட்டமே போதும் என்ற முறையில் உறுப்பினர்கள் சொன்னார்கள். ஏற்கனவே இருக்கின்ற சட்டத்தை பொறுத்தவரைக்கும், மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான், எல்லா செக்ஷன்களையும் படிக்கலாம் என்று விரும்பினார்கள். 427—ஐ எடுத்துக் கொண்டாலும்கூட, அதிலே Whoever commits mischief and thereby causes loss or damage to the amount of fifty rupees or upwards, shall be punished with imprisonment of either description for a term which may extend to two years or with fine or with bo h. என்று சொல்லப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் சுட்டிக்காட்டி பேசுகின்றபோது சொன்னார்கள் — கல்லை வீசி எறிந்தால், அதற்கு 5 ஆண்டு காலம் தண்டனையா என்று கேட்டார்கள். கல்லை விட்டு எறிந்தால், அதற்கு 5 ஆண்டு காலம் தண்டனை என்று எந்த அளவிலே சொல்லப்பட்டிருக்கிறது. கல்லைவிட்டு எறிகின்ற காரணத்தினால். ஏற்படுகின்ற நிகழ்வுகளின் அடிப்படையில்தான் தண்டனை விதிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோல், சட்டக் கல்லூரியிலே இருக்கின்ற பேருந்து ஒன்றில் கல்லை விட்டு எறிவதால், ரூ. 200 பெறுமான முள்ள கண்ணாடி உடைந்துவிட்டால், அதற்கு 5 ஆண்டுகள் தண்டனையா என்று கேட்டார்கள். இதற்கு செக்ஷன் 3-லே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

Whocver commits or instigates, incites or otherwise abets the act of throwing stones, bricks, soda bottles or any other materials, whatsoever upon the persons travelling in any motor vehicle shall be punishable with imprisonment for a term which shall not be less than six months but which may extend to five years and with fine, என்றுதான் இருக்கிறது.

but which may extend to five years and with fine' என்றிருக்கிறது. பேருந்துகளில் பிரயாணம் செய்கின்ற பயணிகளின்மீது இதுபோன்ற பொருளால் தாக்கி அவர்களுக்கு ஆபத்து வருகின்றபோது, இதுபோன்ற தண்டனைக்கு, அதிகபட்சமாக 5 ஆண்டுகள் என்ற ஒரு லிமிட்டை சட்டத்திலே வைத்திருக்கிறோம். அதேபோல், அவர்களுக்கு ஏற்படுகின்ற நிகழ்வுகளுக்கு தகுந்தாற்போல் குறைந்தபட்ச தண்டனை 6 மாதங்கள், அதோடு அபராதம் என்றிருக்கிறது. அபராதம் போடக்கூடாது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதுகிறார்களா என்பது புரியவில்லை. கண்டிப்பாக, சொத்துக்கு மட்டும் சேதம் என்றால், அதற்காக 5 ஆண்டு காலம் தண்டனை இந்தச் சட்ட விதியின் அடிப்படையில் விதிக்க முடியாது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு திருத்தம்கூட தந்திருக்கிறார்கள். அந்தத் திருத்தத்திலேகூட, சொத்தினுடைய மதிப்பு ரூ. 100 என்றிருப்பதை, ரூ. 1,000 ஆக உயர்த்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். செக்ஷன் 2 (4)-லே ரூ. 100 என்றிருப்பதை ரூ. 1000 ஆக உயர்த்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் செக்ஷன் 427-லே தெளிவாக இருக்கிறது. Whoever commits mischief and thereby causes loss or damage to the amount of fifty rupees or upwards, shall be punished with imprisonment of either description for a term which may extend to two years or with fine with or both. என்று ஐ.பி.சி.யில் இருக்கின்ற காரணத்தினால், அதை மாற்றுவதற்குத் தேவையில்லை என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: மன்றத்தினுடைய துணை தலைவர் அவர்களே, ஏற்கனவே சட்டத்தில் சமூக விரோதக் காரியங்கள் பொதுச் சொத்துகளுக்குத் தீவைத்தல், பஸ்களில் பயணம் செய்கிறவர்கள் மீது கல்லெறிதல், போன்றவைகளைத் தடுப்பதற்கு ஏற்கனவே சட்டத்தில் பிரிவுகள் இருக்கின்றன, அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது இல்லையென்று சொன்னார்கள்.....

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இல்லையென்று சொல்லவில்லை. இருக்கிறது. போதிய அளவிக்கு இல்லையென்றுதான் சொன்னேன்.

What is now proposed is cognisable, non-bailable first class offence. What is now existing is totally different. The punishment being inadequate the new provisions are sought to be introduced

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, 431 இல் தெளிவாகவே இருக்கிறது.

“........less safe for travelling or conveying property, shall be punished with imprisonment of either description for a term witch may extend to five years, or with fine, or with both” பயணம் செய்கிறபோது பயணம் செய்கின்ற பயணிகளுக்குப் பாதுகாப்பு இல்லாமல் இருக்குமானால்

“........shall be punished with imprisonment of either description for a termwitch may extend to five years, or with fine, or with both.’ 5 வருடம் தண்டனை கொடுக்கலாம் என்று ஏற்கனவே இருக்கிறது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: அதிகப்படியான தண்டனை இருக்கிறது.

The minimum punishment is now being proposed in th Bill.

திரு. அ. ரகுமான்கான்: மன்றத்தினுடையத் துணைத் தலைவர் அவர்களே, இதிலே என்ன போட்டிருக்கிறது என்று சொன்னால் பஸ்ஸிலே பயணம் செய்கிறவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்று சொன்னால் “shall be punished with imprisonment of either description for a term which may be extend to five years.... .”

5 வருடம் கொடுக்கலாம் ‘அன்ட்’ அல்ல, ‘ஆர்’ என்று போடப்பட்டிருக்கிறது. இதற்கு என்ன அர்த்தம் என்றால் ஏற்கனவே உள்ள சட்டத்தின் அடிப்படையில் பஸ்களிலே பயணம் செய்கிறவர்கள் மீது கல்லெறிந்து அல்லது வேறு ஏதாவது பயணம் செய்கிறவர்களுக்கு சரியாக பாதுகாப்பு இல்லாத நிலைமையை ஏற்படுத்தினால் அவர்களுக்கு 5 வருடம் தண்டனை கொடுக்கலாம் அல்லது அபராதம் விதிக்கலாம என்பதை நீதிமன்றமே முடிவுசெய்யவேண்டுமென்ற முறையிலே இருக்கிறது. நீங்கள் கொண்டுவருகிற சட்டத்திலே 5 வருடம் மட்டுமல்ல, அபராதமும் போடலாம் என்ற முறையிலே ‘ஆர்’க்குப் பதில் ‘அன்ட்’ என்று போடப்பட்டிருக்கிறது. நீதிமன்றம் முடிவு செய்யவேண்டியதை நீங்களே இப்போது சட்டமாக்குகிறீர்களே அது சரியா?

மாண்புமிகு திரு. சி பொன்னையன்: ‘ஆர்’ என்பதை மாற்றி ‘அன்ட்’ என்று வந்துவிட்ட காரணத்தாலே 5 ஆண்டுகள் கண்டிப்பாக சிறு குற்றத்திற்குக் கூட தரவேண்டும் என்பதில்லை. Five years is the maximum punishment contemplated. Simultaneously the minimum punishment proposed is also 6 months.

எனவே 6 மாத காலம் குறைந்த பட்ச தண்டனை என்று இருக்கிறதே தவிர நீதிபதி குறைந்த பட்சம் 5 ரூபாய், 10 ரூபாய் என்று பைனை போடலாம். ‘ஆர்’ என்பதை ‘அன்ட்’ என்றுமாற்றிவிட்ட காரணத்தினால் எந்தத் தவறாக இருந்தாலும் 5 ஆண்டுக் காலம் கொடுக்கவேண்டும் என்பதல்ல, திரு. ரகுமானகான் அவர்கள் பேசுகின்றபோது கடந்த காலத்தில் நடந்த சில நிகழ்ச்சிகளைக் கூட ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட் கொடுத்து நடவடிக்கை எடுத்துவிடுவார்கள் என்ற பொருள்படச் சொன்னார்கள். அவர்களுக்குத் தெரியும். A criminal act already done cannot be retrospectively proceeded against.

அதோடு பில்லா, ரங்கா ஆகியோர்களுக்குத் தூக்குத்தண்டனை விதித்ததை எடுத்துக்காட்டி பில்லா, ரங்கா போன்றவர்களுடைய குற்றத்திற்கு நீதிமன்றம் வரை சென்று வழக்குரைஞர் வைத்து வாதிட்டு வழக்கு நடைபெற வாய்ப்பு இருக்கிறபோது குண்டா சட்டத்திலே வாய்ப்பு இல்லையே என்று சொன்னார்கள். பில்லா ரங்கா குற்றத்தைப் பொறுத்தவரைக்கும் An offence directly falling under I.P.C. and Criminal procedure Code. ஆனால் இந்தா குண்டா சட்டத்தைப் பொறுத்வரைகும் There should be disturbance to Public peace.

என்பது தெளிவாக இருக்கிறது. அது மட்டுமல்ல, பிரிவென்டிவ் டிடென்ஷன் ஆக்டைப் பொறுத்த வரைக்கும் அரசியலமைப்புச் சட்டத்தின் 22வது பிரிவு உள்பிரிவு (3)இல் தெளிவாக இருக்கிறது. வழக்குரைஞர் வைத்து பி.டி. ஆக்டிலே கைதானவர்கள் யாரும் வாதாட முடியாது என்று கூறப்பட்டிருப்பதை நான் மாண்புமிகு உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அது மட்டுமல்லாமல், இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிற நோக்கம் கண்டிப்பாகத் தொழிலாளர்களுக்கோ மக்களுக்கோ, மாணவர்களுக்கோ எதிராகக் கொண்டு வரப்படுகிற சட்டமல்ல என்பதை நான் ஆணித்தரமாக இந்த அவையிலே உறுப்பினர்களுக்கு அழுத்தந் திருத்தமாக சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கேரள மாநிலத்திலே 12, மே, 1978 இல் இது போன்று ஒரு ஆர்டினன்ஸ் புராமுல்கேட் செய்யப்பட்டு அங்கே நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அப்படி கேரள மாநிலத்திலே இது போன்ற சட்டம் கொண்டு வரப்பட்ட போது இது மக்களுக்கு எதிராக, தொழிலாள வர்க்கத்திற்கு எதிராக கொண்டு வரப்பட்ட சட்டமென்று நாங்கள் யாரும் கருதமாட்டோம். கண்டிப்பாக நேர்மையாக நடக்கிற போராட்டங்களிலே மட்டும் தொழிலாளர் ஈடுபடுகிறபோது இந்தத் தொழிலாளர்களுக்கு எதிராக வன்முறை சக்திகள் ஈடுபட்டு தொழிலாளர்களுக்கு களங்கம் ஏற்படுத்துகிற காரணத்தாலும், கேரளத்திலே கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தச் சட்டம் இருக்கிறபோது தொழிலாளர்கள் போராட்டத்தை நேர்மையாகவும், தார்மீகமாகவும் நடத்தவும்

மக்கள் சக்திகளுக்கு, தொழிலாளர்கள் சக்திக்கு எதிராக இருக்கிற சில வன்முறையாளர்கள் அவர்களுக்கு களங்கம் ஏற்படுத்துகிற முறையிலே இதுபோன்ற வன்முறை செயலிலே ஈடுபடாமல் தடுக்கவும் கூட உதவும் என்ற முறையிலே தான் என்னுடைய கருத்தாக சொல்ல விரும்புகிறேன். இந் சட்டம் மக்கள் நலன் கருதி கொண்டு வரப்பட்ட சட்டம். தொழிலாளர்களுக்கு எதிராக கண்டிப்பாக என்றுமே பயன்படுத்தப்பட மாட்டாது என்ற உறுதியினை சொல்லி இந்த அவை இந்த சட்டத்தை ஏற்குமாறு மாண்புமிகு தலைவர் அவர்கள் மூலமாக கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12.50)

திரு. என். சங்கரய்யா: துணைத் தலைவர் அவர்களே, இந்த சட்டம் கடுமையான சரத்துகளை கொண்டிருப்பதால் இதுபற்றி நிதானமாக பரிசீலனை செய்து அதற்கு பிறகு ஏற்றுக்கொள்ளலாம் என்று இந்த நேரத்திலாவது ஒரு பொறுப்புக் குழுவிற்கு அனுப்புவதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறதா என்று நான் கேட்க விரும்புகிறேன். அவர் பதில் சொல்லவில்லை என்றால் அரசாங்கத்தின் சார்பாக பதில் சொல்வதற்கு அவருக்கு எதுவும் இல்லை என்று கருதி, உழைப்பாளி மக்களுக்கு எதிராக, மிகக கடுமையான தண்டனைகளை கொடுக்கக்கூடிய....

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே கேரளா மாநிலத்தில் இந்த சட்டத்தை அவசர சட்டமாக கொண்டு வந்தார்கள் என்றால் உழைப்பாளிகளுக்கு எதிராக, சில வன்சக்திகள், அவர்கள் தார்மீகப் போராட்டத்திற்கே களங்கம் ஏற்படுத்திவிடுகிறது என்ற நோக்கோடு தான் அங்கேயே கொண்டு வந்திருக்கிறார்கள். நடைமுறையிலே தொழிலாளர்களுக்கு, உழைக்கும் வர்க்கத்தினருக்காக இருக்கும் மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் ஆட்சியிலே இந்தச் சட்டத்தை உழைக்கும் வர்க்கத்திற்கு எதிராக என்றுமே பயன்படுத்தாது என்று சொல்லி இதை ஏற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா: துணைத் தலைவர் அவர்களே, கேரளா சட்டத்தைப் பற்றி இப்போது கடைசியாக குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த பிரதி எங்கள் வசம் இல்லாத காரணத்தால் உடனடியாக அதுபற்றி சொல்ல முடியாது. ஆகவே பார்த்துவிட்டு இன்னொரு சந்தர்ப்பத்தில் விளக்குகிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொறுக்குக் குழுவிற்கு விடுவது பற்றி எதுவுமே சொல்லாத காரணத்தினால், நடைமுறையிலே உழைப்பாளி மக்களுக்கு விரோதமாக கடுமையாக பயன்படுத்தக்கூடிய ஒரு சட்டம் என்ற காரணத்தாலே, மக்களுடைய உரிமைகளை பறிக்கக்கூடிய சட்டம் என்ற காரணத்தாலே, ஒன்றன்பின் ஒன்றாக இப்படிப்பட்ட சட்டங்களை கொண்டு வருவதை

எதிர்த்து, மேலும் நிறைவேற்றுவதற்கு நாங்கள் உடந்தையாக இருக்கமுடியாது என்ற ஆட்சேபனையை தெரிவித்து மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் வெளி நடப்பு செய்கிறோம்.

(கம்யூனிஸ்ட் மார்க்கிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.)

திரு. சோ. அழகர்சாமி: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொறுக்குக் குழுவிற்குக் கூட விடுவதற்கு சம்மதிக்காத நிலையிலே, இது உழைக்கும் மக்களை பாதிக்கக்கூடிய பல சரத்துகளை கொண்டிருக்கிற காரணத்தால் இதை ஆட்சேபித்து எங்களுடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே வெளிநடப்பு செய்கிறோம்.

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்)

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: "1982 ஆம் ஆண்டு பொதுச் சொத்து (அழித்தல், இழப்பு ஆகியவற்றைத் தடுத்தல் (சட்டமுன்வடிவு) சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண். 13/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பட்டு, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: "பிரிவு 2 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்". திரு. துரைமுருகன திருத்தத்தை வலியுறுத்துகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. துரைமுருகன்: துணைத் தலைவர் அவர்களே, இப்போதும் ஒன்றும் காலம் கடந்து போகவில்லை. இப்போது கூட அமைச்சர் அவர்கள், கம்யூனிஸ்ட் கட்சியினர் வெளிநடப்பு செய்து காட்டியிருக்கிறார்கள் என்பதால், இந்த அவையிலே அனைத்து எதிர்க்கட்சிகளும் ஆட்சேபித்துக் கொண்டிருக்கின்றன என்பதை புரிந்துக் கொண்டு அமைச்சர் அவர்கள் வாபஸ் வாங்குவதற்கு அவகாசம் இருக்கிறது. அவருக்கு நான் ஒன்று சொல்லிக் கொள்வேன். திரு. சங்கரய்யா அவர்கள் இப்படி எடுத்துச் சொன்ன பிறகு இந்த அரசாங்கம் தொடர்ந்து இப்படிப்பட்ட அராஜகமான சட்டங்களைக் கொண்டு வருகிற காரணத்தால், நான் முன்னாலே சொன்னதுபோல், என்னுடைய கல்லூரி தோழர்களுக்குத் தெரியும், டைகர் வரதாச்சாரியார், ராவ் பகதூர் என்று பெயர்கள் இருப்பதைப் போல், வருங்காலத்திலே, * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

என்ற கெட்ட பெயருக்கு அவர்கள் ஆட்படக் கூடாது என்ற காரணத்தினாலே, இந்த சட்டத்தை வாபஸ் வாங்குங்கள் என்று தெரிவித்து கீழ்க்கண்ட என் திருத்தத்தை மொழிகிறேன்,

பிரிவு 2—ல்உட்பிரிவு (iv)—ல்உள்ள 'நூறு ரூபாய்' என்பதற்குப் பதிலாக 'ஆயிரம் ரூபாய்' என்று மாற்றியமைக்க வேண்டும்;

திருத்தம் முறைப்படி வழிமொழியப் பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் திருத்தம் கொண்டு வருகிற பொழுது, ரூ.100 சொத்து மதிப்பினுடைய அளவை ரூ. 1,000 என்று போட வேண்டுமென்று சொல்கிறார். இந்தச் சட்டத்தைக் கடுமையான சட்டம் என்று சொல்கிறார். அதே நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களை ஐ.பி.சி. 457 செக்ஷனைப் படித்து பார்க்குமாறு வேண்டுகிறேன். அதிலே ரூ. 50 சொத்து என்று இருந்தாலே, கண்டிப்பாக அதற்கு தண்டனை என்று இருக்கிறது, ஐ.பி.சி.யைப் பார்த்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொல்லாச் சட்டம் என்று சொல்வார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

திரு. இ. கணேசன்: திரு. துரைமுருகன் அமைச்சரைப் பற்றிச் சொன்ன வாசகங்களை அவைக்குறிப்பிலிருந்து நீக்கவேண்டும்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: * * என்று வார்த்தைகளை நீக்க என்னுடைய அன்பு நண்பர் துரைமுருகன் அவர்கள் ஏற்றுக்கொள்வார் என்றுநம்புகிறேன்.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்: அந்த வார்த்தைகளை நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

திரு. அன்பில் தர்மலிங்கம்: பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் ஜனநாயக விரோதக் கறுப்புச் சட்டமாகும். பொதுச்சொத்துகளுக்கும் பஸ்களுக்கும் தீ வைத்தல், பஸ்ஸில் பயணம் செய்யும் பிரயாணிகளுக்குத் தொல்லைக் கொடுத்தல் ஆகியவற்றை நிச்சயமாக திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்காது. இதிலே கருத்து வேறுபாடு இல்லை. இதற்காகவே ஏற்கனவே பல சட்டங்கள் இருக்கின்றன. அப்படி இருந்தும் இன்று கொண்டு வரப்படுகிற இந்தச் சட்டம் எதிர்க் கட்சிகளையும், மாணவர்களையும், விவசாயிகளையும், தொழிலாளிகளையும் பழி வாங்கும் நோக்கத்தோடு கொண்டுவரப்படுகிற ஒன்றாகும். எனவே, இந்தச் சட்டத்தை எதிர்த்து, திராவிட முன்னேற்றக் கழகம் வெளி நடப்புச் செய்கிறது.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளி நடப்பு செய்தனர்.)

பிரிவு 3

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

''பிரிவு 3 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்.''

இப்பிரிவுக்கு திருத்தம் கொடுத்த திரு. துரைமுருகன் இருக்கையில் இல்லாததால் திருத்தம் மொழியப் பெறவில்லை.

பிரிவு 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

திரு. ஏ. சாகுல்ஹமீது: பேரவைத் தலைவர் அவர்களே......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வெளி நடப்பு செய்யும்போது ஒன்றாற் போல் போக வேண்டும். அவ்வப்போது எழுந்து போகக் கூடாது. அதற்கு ஒரு வரைமுறை வைத்துக் கொள்வோம். நான் வாக்கெடுப்பு நடத்திக் கொண்டிருக்கும் போது, ஒவ்வொரு முறையும் எழுந்து ஒவ்வொருவர் போகக் கூடாது. அப்படி போனால் என்னை எதிர்த்துப் போகிற மாதிரி ஆகும். அது வேண்டாம். நீங்கள் போவதாக இருந்தால், இறுதியில் போங்கள்.

பிரிவுகள் 4 முதல் 7 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

திரு. ஏ. சாகுல்ஹமீது: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் எதிர்க்கட்சிகளைக் கொடுமைப் படுத்துகின்ற சட்டமாக இருக்கின்ற காரணத்தால், இதை எதிர்த்து நாங்கள் முஸ்லீம் லீக் கட்சியின் சார்பாக வெளிநடப்பு செய்கிறோம்.

(முஸ்லீம் லீக் கட்சி உறுப்பினர் வெளிநடப்பு செய்தார்)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு பொதுச் சொத்து (அழித்தல், இழப்பு ஆகியவற்றைத் தடுத்தல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண். 13/1982) நிறைவேற்றப்பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(பிற்பகல் 1-00)

இ. மாகாண சிறுவழக்கு நீதி மன்றங்கள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் —

"1982 ஆம் ஆண்டு மாகாண சிறுவழக்கு நீதிமன்றங்கள் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு *சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண். 14/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள பெற வேண்டும்."

திரு. ப. வெங்கடசுப்ரமணியம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாகாண சிறுவழக்கு நீதி மன்றங்கள் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவை நான் வரவேற்கிறேன். இந்தச் சிறு வழக்கு நீதி மன்றங்களிலே எல்லா உத்தரவுகளும், தீர்ப்பாணைகளும் சில நேரங்களிலே மேல் முறையீடு செய்ய முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதனால் பாதிக்கப்பட்டவர்கள் நேரடியாக உயர்நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டிய ஒரு கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது. அதுபோன்ற சங்கடங்களை நீக்குவதற்காக நம்முடைய மாண்புமிகு சட்ட அமைச்சரவர்கள் இந்தச் சட்டத் திருத்தத்தினைக் கொண்டு வந்திருக்கின்றார்கள். இந்தச்சட்டத் திருத்தத்தினால், பொதுமக்களுக்கு ஏற்படுகின்ற கால விரயம் பணச் செலவு ஆகியவற்றைக் குறைப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. அதன் மூலம் சிவில் நீதி மன்றங்களில் தேங்கியுள்ள கேஸ்களை உடனடியாக முடிப்பதற்கான வாய்ப்பிருக்கிறது.

ஒரேயொரு பாதுகாப்பை மட்டும் நம்முடைய சட்ட அமைச்சரவர்கள் செய்து தர வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். இதனால் சாதாரண ஏழை பொதுமக்கள் பாதிக்கப்படக் கூடிய சூழ்நிலை சில நேரங்களில் ஏற்படுவதற்கான வாய்ப்பிருக்கிறது. அதற்கான சங்கடங்களை நீக்குவதற்கு நம்முடைய அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறி இந்தச் சட்டத்திருத்தத்தினை வரவேற்று முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

*1982 மார்ச் 4 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சரவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்தச் சட்டத்தை இந்திரா காங்கிரஸ் கட்சியின் சார்பாக மனமார வரவேற்கிறோம். ஏழை எளியவர்களுக்கும், வறுமைக் கோர்ட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கும் உதவுகின்ற இந்தச் சட்டம் வர வேண்டுமென்பது நீண்ட நாள் கோரிக்கையாக இருந்தது. சாதாரணமாக 500 ரூபாய்க்குக் கீழ் வாங்குபவர்கள் அங்கே ஜில்லா கோர்ட்டிலே அப்பீல் செய்ய முடியாமல், ஹைகோர்ட்டிலே ரிவிஷன் போடக் கூடிய ஒரு நிலை இருந்தது. மாண்புமிகு சட்ட அமைச்சரவர்கள் அந்த அளவிற்கு உதவி செய்ததற்காக மீண்டும் என்னுடைய நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இந்தச் சட்டத்திலே இரண்டொரு குறைபாடுகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்து அதையும் எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். ஸ்மால் காஸ் கோர்ட்டிலே எக்ஸ்பார்ட்டியாக டிகிரி ஆகிவிட்டால் மேலும் செட் அசைட் பெட்டிஷன், மேலும் அப்பீல் செய்ய வேண்டுமென்றால் அந்தத் தொகையை முழுவதும் செல்வு முதற்கொண்டு நாம் டெப்பாசிட் செய்து கொண்டுதான் செட் அசைட் பெட்டிஷன் போடும் நிலைமையிருக்கிறது. அதற்கு வழிவகை செய்யக்கூடிய அளவிற்கு சட்டத்திலே திருத்தம் கொண்டு வர வேண்டும்.

மேலும், புதிதாகக் கொண்டு வந்த சட்டத்தைப் பொறுத்த வரையில், ஜில்லா முன்சீப் கோர்ட்டிற்கு 5,000 ரூபாய் முதல் 15,000 ரூபாய் வரையில் அந்த லிமிட்டேஷனைக் கொடுத்திருக்கிறோம். அந்த அளவிற்கு ஸ்மால் காஸ் கோர்ட்டிலும் உயர்த்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இது போன்ற சட்டங்களை மற்றச் சட்டங்களுக்கும் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

டெனன்ட்ஸ் ப்ரொடக்ஷன் ஆக்ட் 25/55 அஸ் அமென்டெட் என்ற சட்டத்திலே குறிப்பாகக் குத்தகைப் பாக்கி ஏற்பட்டால் அந்தத் தீர்ப்பை எதிர்த்து நாம் ஹைகோர்ட்டிலே ரிவிஷன் போடக்கூடிய நிலையில் இருக்கிறோம். ஆகவே, அதற்கும் இம்மாதிரி சட்டம் கொண்டு வரவேண்டும் என்று மாண்புமிகு சட்ட அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், பேரன்ட்ஸ் ஆக்டிலே தீர்ப்புக்கு எதிராக அப்பீல் செய்ய வேண்டுமென்றால் ஆரம்பத்தில் டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட்டில் அப்பீல் செய்யலாம். ஆனால் அண்மையில் செய்த மாறுதலினால் பேரன்ட்ஸ் கோர்ட்டிலே சொல்லப்படும் தீர்ப்புக்கு அப்பீல் சப்-கோர்ட்டிலே போடும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஏழை எளிய குத்தகைதாரர்கள் நியாய வார கோர்ட்டிற்குப் போய்க் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் வழிவகை செய்கின்ற அளவிற்கு இதுபோன்ற சட்டத் திருத்தங்களைச் செய்து தருமாறு கேட்டுக்கொண்டு, இந்தச் சட்டத்தை எங்கள் கட்சியின் சார்பாக வரவேற்று அமர்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் வழக்கறிஞர் திரு. வெங்கடசுப்ரமணியம் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கவேல்ராஜ் அவர்களும் சுட்டிக்காட்டியதை போல இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்தவரைக்கும் நீதி தேடி ஸ்மால் காசஸ் கோர்ட் என்ற அளவிலே இருக்கின்ற, கீழ் மட்டத்தில் இருக்கின்ற நீதி மன்றங்களுக்கு மாவட்டத்தின் உட்பகுதிகளிலிருந்து அந்த மக்கள் செல்லும்பொழுது அவர்களுக்கு அப்பீல் புரொவிஷன் இல்லாமல், செக்ஷன் 24 ஆஃப் தி பர்ட்டிகுலர் சட்டத்திலே உள்ள அப்பீல் புரொவிஷன் போக மீதி எல்லா வழக்குகளிலேயும் அவர்களுக்கு உயர்நீதிமன்றத்திற்கு ரிவிஷனல் பவர் மட்டுமே இருந்த காரணத்தால் மக்களுக்குச் சொல்லொணாத் துயரும், பணச் செலவும் ஏற்பட்டு வந்த நிலை மாற வேண்டுமென வழக்கு ரைஞர்களின் சார்பிலும், பொது மக்களின் சார்பிலும் வந்த அவர்களது வேண்டுகோளை அரசு ஆய்ந்துதான் இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறது.

இனிமேல் இதுகாறும் உயர்நீதிமன்றம் அதனுடைய அதிகாரத்தை உட்பட்டு ஸ்மால் காசஸ் கோர்ட்டிலே இருந்து ரிவிஷனிரி பவரைப் பயன்படுத்தி அதனுடைய அதிகாரத்திற்கு எடுத்த தீர்ப்பினை வழங்கிய வழக்குகளை எல்லாம் மாவட்ட நீதிபதி அவர்களே Either suo motu by himself or by an application made by an aggrieved party அதை விசாரித்து மாவட்ட அளவிலே வழக்குகளுக்குத் தீர்ப்பு அளிக்கின்ற வகையிலே வகை செய்யப்பட்டிருக்கின்ற இந்த சட்டம், மக்கள் உயர்நீதி மன்றம் நோக்கி வரவேண்டிய நிலை இல்லாமல் அவர்களுக்கு வசதியாக அமையும் என்ற காரணத்தால், இந்த நல்லதொரு சட்டத்தை அவை ஏற்க வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—''1982 ஆம் ஆண்டு மாகாண சிறுவழக்கு நீதி மன்றங்கள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 14/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2, 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, 1982 ஆம் ஆண்டு மாகாண சிறுவழக்கு நீதி மன்றங்கள் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 14/82) நிறைவேற்றப்பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

ஈ) சென்னை மாநகர சிவில் வழக்கு நீதி மன்றம், மாநிலச் சிறு வழக்கு நீதிமன்றங்கள் (திருத்த) ரத்துச் சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்; தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''1982 ஆம் ஆண்டு சென்னை மாநகர சிவில் வழக்கு நீதி மன்றம், மாநிலச் சிறு வழக்கு நீதிமன்றங்கள் (திருத்த) ரத்துச் சட்டமுன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 15/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும்.

மாண்புமிகு சட்ட பேரவை துணைத் தலைவர் அவர்களே, இந்த சட்டமுன்வடிவைப் பொறுத்தவரைக்கும் மெட்ராஸ் சிட்டி சிவில் கோர்ட்டிலே சில வழக்குகள், ஸ்மால் காசஸ் கோர்ட்டினுடைய வழக்குகள், சிட்டி சிவில் கோர்ட்டிலே உயர் நீதி மன்றத்தால் மாற்ற செய்யப்பட்டு வரக்கூடிய நிலையும். இதனால் சிட்டி சிவில் கோர்ட்டு வழக்குகளுடைய எண்ணிக்கை அதிகமாக ஆகி அங்கே வழக்குகள் எல்லாம் தாமதமாக முடக்கப் படுவதற்கு என்ற முறையில் இருந்த காரணத்தால் அதை மாற்றி ஸ்மால் காசஸ் கோர்ட்டு, மெட்ராஸ் சிட்டியிலேயே அந்த வழக்குகளை அங்கே அவர்களே எடுத்து நடத்த வழி செய்கிற இந்த சட்டத்தை அவை ஏற்குமாறு வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி ''1982 ஆம் ஆண்டு சென்னை மாநகர சிவில் வழக்கு நீதி மன்றம் மாநிலச் சிறு வழக்கு நீதி மன்றங்கள் (திருத்த) ரத்துச் சட்டமுன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, 1982 ஆம் ஆண்டு சென்னை மாநகர சிவில் வழக்கு நீதிமன்றம் மாநிலச் சிறு வழக்கு நீதிமன்றங்கள் (திருத்த) ரத்துச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 15/1982) நிறைவேற்றப்பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

---

*1982 மார்ச் 4 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

உ) பத்திரப்பதிவு தமிழ்நாடு (திருத்த) சட்ட முன்வடிவு 1982.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

"1982 ஆம் ஆண்டு பத்திரப்பதிவு (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 16/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும்.

பேரவை துணைத் தலைவர் அவர்களே, ஏகமனதாக இந்த சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—"1982 ஆம் ஆண்டு பத்திரப்பதிவு (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு *(சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 16/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2, 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று; நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"1982 ஆம் ஆண்டு பத்திரப் பதிவு (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 16/1982) நிறைவேற்றப்பெறவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(முற்பகல் 1.10)

(ஊ) நீதிமன்றக் கட்டணங்கள்-வழக்குகள் மதிப்பீட்டு (திருத்த) சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு நீதிமன்றக் கட்டணங்கள்—வழக்குகள் மதிப்பீட்டு (திருத்த) சட்டமுன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 17/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.

*1982 மார்ச் 18 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

THIRU T. VENKATA REDDY: Hon'ble Deputy Speaker Sir; on behalf of the Congress Party, I oppose this bill on the following lines. Now this Government has brought forward this bill to enhance the fees to be collected on writ Appeals from Rs. 100 to 200. The reasons for the enhancement are "As the cost of administration of civil Justice has increased considerably, the Government have now decided to enhance the court-fee payable in respect of a writ appeal to the High court from one hundred Rupees to two hundred. rupees". Due to the incr ased cost of litigation the enhancement is contemplated. The Hon'ble Minister for Law is aware that the Courts are the utilitarian service institutions like Hostels, Schools and Colleges. They are not ment to spin money for the Goverment. They are ment only to cater to the needs of the poor ligant public.

We have received many Writ Petition in High cours and also many applications from the poor section in various courts only due to various concessions granted to the litigant public, More of the aggrieved people come from the poorer sections. Mostly the writs are filled in High Court only by the common people who belong to the poor section. They are only affected by the Legislations or Acts of Government.

So, to help the Poor people the Government must come forward to reduce the Court-fees. It is a well-known fact that even the Central Government ts contemplating that the Caurt fees Act in India is more stringent and costly. In order to aednce the Court-fees the Central Government is now contemplating an Act to reduce this Court-fees, for Memorandam of Appeals and money-suits.

Even a survey has been made. In that Survey it is pointed out that the Court fees is more in India than in any other Natione. Therefore when the view is that we must cate the needs of the poor and the poor people must get justice at a cheaper cost the enhancement of Court fees is unnecessary and meaningless.

The Government has promulgated the constitution of many Tribunals and Courts. They have even empowered the Tahsildars to enquire in to the matters peraning to the Tenancy Acts and Dept Relif Acts. The Advocates cannot appear in such Cours. The reason behand this, as was pointed out by the Government, is that the cost of litigation and the cost of maintaining an Advoca e by the poor section is greater. Therefore they one debarred srom appear in such courts. just to cater to the needs of the poorer section, such Tribunals or Tahsildars Courts have been

Thiru T. Venkata Reddy

constituted. When such the laudable idea behind such courts, I canno understand why the Hon'ble Law Minister has come forward to enhance the fees of wri Appeals.

In this connection I also want to point ou hat there are many other app cation n which court-fees are collected a more han 75 paise. I all the applica ions filed before the courts or before such Tribunals or bef re he collec crs or before he Tahsildars irrespective of the na ure of the application the Court- fee has to be collected at he ra e or 75 paise per application.

Another aspect which I want to mention is in the Rent Control Ac, the cour fees on the eviction petition is levied at the rate of Rs,5/-- on each application. For every adjournment we hsve to file an application affixing court fees stamps for Rs.5/-. This is also costly thing so far as the li igant public are concerned.

Even if a poor man wants to apply for an adjournment he has to affix Rs.5/- court-fee stamp for such an applica ion. This is meaning-less. requ st he Hon. Law Minister o consider this aspec and reduce he burden of Court-fees for these poor li igan public. In the olden days only the richer section used to go o he Courts.

Now even a common man has been given an opportunity to get redressal of his grievances by approaching a Cour of law even the highes Court law. If the cost of court-fees is increased the common man will not get the benefit of judiciary. It will deter the common man from approaching the highest Court of law. Therefore I request the Hon'ble Minis er for law, through the Deputy Speaker, to withdraw this Bill, so far as Sec .3 and the Amendment to schedule II of the Tamil Nadu Act of 1955, so that the original fee of Rs. 100/- for each writ Appeal can remain in the Court of law. This will enable the common man to approach the Court easily.

Wi h these suggestions on the Bill, I request the Hon. Law Minister o with draw this Bill in o so tha this law need not be called as a punishment Act, and i should also not ge a bad name o he Govenment, which has been championing the cause of he poorer sec ion. If you withdraw this bill it will enhance teh prestige of the Government I oppose the Bill.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு கோர்ட் பீஸ் அன்ட் சூட் வேலுவேஷன் ஆக்ட்-அதனுடைய மூன்று சப் செக்ஷன்கள்பிரகாரம் நீதிமன்ற கட்டணங்களை ட்ரான்ஸ்ஃபர்டு டெரிட்டரி' என்ற பகுதிகளுக்கு நீட்டிப்பதற்காக 1965 ஆம் ஆண்டு சட்டம் கொண்டுவரப்பட்டது. அது கொண்டுவரப்பட்ட காலத்தில் ரயத்துவாரி செட்டில்மெண்ட் பொறுத்தவரை ட்ரான்ஸ்ஃபர்டு டெரிட்டரி பகுதிகளுககு முடியாத காரணத்தால், தற்போது ரயத்துவாரி செட்டில்மெண்ட் முடிந்தபிறகு கட்டணம் சீராக இருகக வேண்டுமென்ற நோக்கோடு இந்த ப்ரொவிஷன் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதை அவை ஏற்கும் என்று கருதுகிறேன்.

உயர்நீதிமன்ற ரிட் மனுக்களைப் பொறுத்தவரையில் 100 ரூபாயாக இருப்பதை 200 ரூபாய் என்று உயர்த்தியதை ரெட்டியார் அவர்கள் வேண்டாம் என்று சொல்கிறார்கள். தற்போது பணத்தினுடைய மதிப்பு என்ன ஆகிறது என்று பார்த்தால், Erosion in to the money value to what extent it has gone now என்பது உறுப்பினர்களுக்குத் தெரியும். 100 ரூபாயை, 200 ரூபாயாக உயர்த்துவதற்குக் காரணம் உண்டு. Unnecessary vexatious writ Petitions should be discouraged என்ற அடிப்படையிலேயும் That would eventually help mitigation of pendency of arrears என்ற அடிப்படையிலேயும்தான் இந்த முடிவு எடுக்கப் படுகிறது.

அதை அடுத்து, மற்றும் ஒரு பிரிவு. இரண்டாவது ஷெட்யூலைப் பொறுத்தவரை அதிலே பஞ்சாயத்தினுடைய உறுப்பினர், பஞ்சாயத்தினுடைய தலைவர்களுக்கு எலெக்ஷன் பெட்டிஷனைப் பொறுத்தவரையில் கோர்ட் பீஸ் வசூலிக்கக் கூடிய நிலைமை இருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் வைஸ் பிரிசிடென்ட் ஆர் பஞ்சாயத்து சேர்மன் ஆர் வைஸ் சேர்மன் ஆப் தி பஞ்சாயத்து யூனியன் பொறுத்தவரைக்கும் அதைப்போலவே முனிசிபாலிட்டியைப் பொறுத்தவரையில் அவர்கள் எலக்ஷன் பெட்டிஷனுக்கு கோர்ட் பீஸ் வசூலிக்கும் முறையில்லை. அது மட்டுமல்லாமல் கார்ப்பரேஷனின் உறுப்பினர்கள், அதாவது, மதுரை, கோயம்புத்தூர் கார்ப்பரேஷன் உறுப்பினர்கள், மேயர்கள் போன்றவர்களின் வழக்குகளிலும் கட்டணம் வசூலிக்கும் முறையில்லை. அதற்கும் இப்போது வழிவகை செய்யப்பட்டிருக் கிறது. இந்த சட்ட முன்வடிவினை அவை ஏற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1:20)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : ''தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு நீதிமன்றக் கட்டணங்கள்—வழக்குகள் மதிப்பீட்டு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1982) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்று சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2,3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : துணைத் தலைவர் அவர்களே, 'தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு நீதிமன்றக் கட்டணங்கள்—வழக்குகள் மதிப்பீட்டு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 17/1982) நிறைவேற்றப் பெறவேண்டும்.'

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(எ) உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலையையும் பணி நிபந்தனைகளையும் முறைப்படுத்துதல்) சட்டமுன் வடிவு 1982

*மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் : ''தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு உடலுழைப்பு தொழிலாளர்கள் (வேலையையும் பணி நிபந்தனைகளையும் முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (*சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 23/1982) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 முதல் 32 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு, ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : துணைத் தலைவர் அவர்களே, 'தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலையையும் பணி நிபந்தனைகளையும் முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1982) நிறைவேற்றப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

---

*1982 மார்ச் 27 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

(ஏ) தொழில் தகராறுகள் (தமிழ்நாடு திருத்தம்) சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் : ''1982-ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் (தமிழ்நாடு திருத்தம்) சட்டமுன் வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 24/1982) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2,3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: துணைத் தலைவர் அவர்களே, '1982 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் (தமிழ்நாடு திருத்தம்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 24/1982) நிறைவேற்றப் பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன் வடிவு நிறைவேற்றப் பெற்றது.

(ஐ) வஃபு தமிழ்நாடு (திருத்த சட்டமுன்வடிவு), 1981

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1981 ஆம் ஆண்டு வஃபு (தமிழ்நாடு திருத்தம்) சட்டமுன் வடிவு (*சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 70/1981) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்று சட்டமுன் வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 முதல் 4 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

---

*1982 மார்ச் 27 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

*1981 ஆகஸ்ட் 25 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[1982 ஏப்ரல் 2

பிரிவு 1

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : "பிரிவு 1 சட்ட முன்வடிவில் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

In Clau e i, in sub-clau e (i), for the figures "1981" substitute the figures '1982 திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1 திருத்தப் பெற்றபடி. பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றது.

முகப்புரை

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : "முகப்புரை சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்;"

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் : In the enacting formula for the words "Thirty-second year", substitute the words "Thirty-third year".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

முகப்புரை திருத்தப்பெற்றப்படி பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

நெடுந்தலைப்பு பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு வஃபு (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 70/1981) திருத்தப் பெற்றபடி நிறைவேற்றப்பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன் வடிவு திருத்தப் பெற்றபடி நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளை 3-4-1982 காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.26 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

1982 ஏப்ரல் 2]

8. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

161. திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், வடக்கு அச்சம்பட்டி கிராமம் கருப்பனூத்து குக்கிராமத்தை கிராமதமான கிராமமாக அ விப்பது குறித்து 12-1-1982 ஆம் தேதியிடப்பெற்ற ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறையின் 46 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1952 ஆம் அண்டு பூதான சட்டத்தின்) தமிழ்நாடு சட்டம் 25/1958) 25 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது)

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

183. சட்டவிதிகள் குழுவின் மூன்றாவது அறிக்கை (ஏழாவது சட்டமன்றப் பேரவை) (ஆங்கிலம்)

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சனிக்கிழமை, 1982 ஏப்ரல் 3.

பங்குனி 21, துன்மதி-திருவள்ளுவர் 2013.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவை தலைவர் :

பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையுள்
நன்கு செலச்சொல்லா தார்.''

நல்ல அறிஞரின் அவையில் நல்ல பொருளைக் கேட்பவர் மனத்தில் பதியுமாறு சொல்ல முடியாதவர் பல நூல்களைக் கற்றாலும் பயன் இல்லாதவரே.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

Steel Allotted for the first Quarter of 1981 - 1982

*Q.No. 738: THIRU P. VENKATASUBRAMANIAM: will the Hon. the Minister for Rural Industries be pleased to state:

a) the quantity of steel allotted for the first quarter of 1981-1982;

b) the quantity earmarked for small scale industries in the state; and

c) whether any representation to the Central Government has been made for increasing the allotment?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) 4,647 டன்கள்.

(ஆ) மூலப்பொருட்கள் தேவைக்காக சிட்கோவிடம் பதிவு செய்யப்பட்ட சிறுதொழில் நிறுவனங்களுக்கு மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மூலப்பொருட்களை, உற்பத்தியாளர்களிடமிருந்து பெற்று சிட்கோ நிறுவனம் சிறுதொழில் நிறுவனங்களுக்கு மட்டும் விநியோகித்து வருகிறது.

(இ) ஆம்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : தமிழ்நாட்டில் எவ்வளவு யூனிட்கள் இருக்கின்றன? அந்த யூனிட்களுக்கு எவ்வளவு தேவைப்படுகிறது? மத்திய அரசு எவ்வளவு அலாட்மென்ட் செய்திருக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி ; தமிழ்நாட்டுக்கு இரும்பு, எஃகு பொருள்களை மூலப்பொருள்களாகக் கொண்டு இயங்கும் 220 க்கு மேற்பட்ட சிறுதொழில் நிறுவனங்கள் அவற்றின் இரும்பு, எஃகு பொருள்களின் தேவைக்கு சிட்கோ விடம் பதிவு செய்து கொள்கிறார்கள். 1981–82 ம் ஆண்டின் இரும்பு, எஃகு பொருள்களின் மொத்தத் தேவை 1,07,000 மெட்ரிக் டன்னாகும். நடப்பாண்டுக்கு டெல்லியிலிருந்து ஒதுக்கப்பட்டுள்ள அளவு 32,000 டன்,

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : இந்த ஒதுக்கீடுகள் எந்த அடிப்படையில் செய்யப்படுகிறது? நம்முடைய தேவைக்கு கிட்டத்தட்ட 50 சதவீதம் குறைவாகத்தான் மத்திய அரசு ஒதுக்கியிருக்கிறது. எனவே நம் முழுத் தேவையையும் பூர்த்தி செய்ய நம் மாநில அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : முழுத் தேவையையும் இன்று மத்திய அரசின் ஒதுக்கீடு நிறைவேற்றவில்லை என்றாலும் தொடர்ந்து நம் தேவைக்கேற்ப வற்புறுத்தி வருகிறோம், முயன்று வருகிறோம்.

மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களுக்கு நிர்வாகக் குழுக்கள் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 739—திரு. மா. சின்னராசு : மாண்புமிகு ஊரகத்தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களின் நிர்வாகக் குழுக்கள் எப்போது போடப்படும்?

(ஆ) நிர்வாகக்குழு நியமனம் செய்வதற்கு தடை எதுவும் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) பால் பெருக்குத் திட்டம் செயல்படும் ஒன்பது மாவட்டங்களில், ஏழு மாவட்டங்களின் நிர்வாகக் குழுக்கள் தற்போது இயங்கி வருகின்றன. மற்ற இரு மாவட்டங்களில் நிர்வாகக் குழுக்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ஆ) தடை ஏதுமில்லை.

திரு. மா. சின்னராசு : அந்த இரண்டு மாவட்டங்களில் ஒன்றான கோவை மாவட்டத்தில் தற்போது அதன் தனி அதிகாரியாக மாவட்ட ஆட்சித் தலைவர் இருக்கிற காரணத்தால் அவர்களுக்கு இருக்கிற மற்றப் பணிகளோடு இதையும் சேர்த்துச் செய்வது என்பது இந்த ஒன்றியத்தின் வளர்ச்சிக்குஇடர்ப்பாடாக இருப்பதால் பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் பொறுத்த வரையில், 1977-ல் இருந்து 1980 வரை இருந்ததுபோல் நியமன உறுப்பினர்களை நியமித்து அந்த நிர்வாகக் குழுக்களை வெகு விரைவில் ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துக்காட்டியதுபோல் விரைவில் நான்—அபிஷியல்ஸ்-யை தலைவர்களாகக் கொண்டு இந்த நிறுவனங்கள் இயங்கும்.

திரு. மா. சின்னராசு : ஒன்றியங்களின் மையமாக இருக்கிற ஸ்டேட் பெடரேஷன், பால் உற்பத்தியாளர்கள் மாநில ஒன்றியம் அமைக்கப்பட்டு விட்டதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : அமைக்கப்பட்டு விட்டது. அதனுடைய தலைவராக தலைமைச் செயலாளர் இருக்கிறார். விரைவில் அதற்கு நான்—அபிஷியல்ஸ் நியமிக்கப்படுவார்கள்.

திரு. பாபு ஜனார்த்தனன் : வட ஆற்காடு மாவட்டத்தில் ஒன்றியம் அமைக்கப்பட்டுவிட்டது. ஆனால் நிர்வாகக் குழு இன்னும் அமைக்கப்படவில்லை. கூட்டுறவுச் சங்கங்களை ஒன்றியமாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா? அந்த நிர்வாகக் குழு விரைவில் ஏற்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : வட ஆற்காடு மாவட்ட பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தின் தலைவராக மாவட்ட ஆட்சித் தலைவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். விரைவில் நான்—அபிஷியல்ஸ் நியமிக்கப்படுவார்கள்.

திரு. க. ரங்கசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களில் நிர்வாகக் குழு இல்லாத காரணத்தினால், அது சிறப்பாக இயங்குவதில் பல சிரமங்கள் இருக்கின்றன. அந்த அளவில் பெரியார் மாவட்டத்தில் இருக்கின்ற மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தி ஒன்றியத்திற்கு நிர்வாகக் குழுவை அரசு நியமிக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் எடுத்துச் சொன்னதைப்போல; அனைத்து பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்களுக்கும் நான்-அபிஷியல்ஸ் குழு நியமிக்கப்படுவார்கள்.

திரு. பி. துரைராஜ் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் இதுபோன்ற மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியம் அமைக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இல்லை.

[1982 ஏப்ரல் 3

திரு. சேலம் மு. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்த மாவட்டங்களில் இத்தகைய கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன: அப்படியில்லாத மாவட்டங்களில், இத்தகைய மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களை அமைக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, 7 மாவட்டங்களில் இத்தகைய ஒன்றியங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. சென்னை-செங்கற்பட்டு மாவட்டம் சேலம் மாவட்டம், பெரியார் மாவட்டம், கோயம்புத்தூர் மாவட்டம், நீலகிரி மாவட்டம், மதுரை மாவட்டம், வடஆற்காடு மாவட்டம் ஆக 7 மாவட்டங்களில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன. மற்ற மாவட்டங்களில் தொடர்ந்து தொடங்கப்படும்.

திரைப்படத் தணிக்கைக் குழு உறுப்பினர்கள்.

*வினா எண் 740—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திரைப்படத் தணிக்கைக்குழு உறுப்பினர் நியமனத்தில் மாநில அரசைக் கலந்து மத்திய அரசு நியமனம் செய்கிறதா?

(ஆ) நமது மாநிலத்திலிருந்து எத்தனை உறுப்பினர்கள் அத் தணிக்கைக் குழுவில் இடம் பெற்றுள்ளார்கள்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) இல்லை.

(ஆ) தமிழ் திரைப்படங்களை தணிக்கை செய்ய சென்னையிலுள்ள மாநில ஆலோசனைக்குழுவில் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் பதின்மூன்று பேர்கள் இடம் பெற்றுள்ளார்கள்.

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரைப்படங்களுக்கு சென்சார் போர்டு அமைக்கும் போது, அதிலே சிறுபான்மை சமூகத்தினுடைய கருத்துக்களை ஏற்கின்ற வகையில், சிறுபான்மையான வகுப்பைச் சார்ந்த உறுப்பினர் யாராவது அதிலே நியமனம் செய்யப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தக் குழுவை நியமிப்பது மத்திய அரசு. ஆகவே, அவர்கள் எந்த அடிப்படையிலே நியமனம் செய்கிறார்கள் என்கிற தகவல் மாநில அரசினிடத்தில் இல்லை.

1982 ஏப்ரல் 3]

திரு. எம். சின்னசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அதிலே கலை நுணுக்கம், கலை ஆர்வம் கொண்டிருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தக் குழுவிலே இடம் பெறுவார்களா? அதற்கு மாநில அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, 27-9-78 அன்று தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அன்றைக்கு இருந்த மத்திய செய்தித் துறை அமைச்சருக்கு இதுபோன்ற தணிக்கைக் குழுவிலே ஆலோசனை உறுப்பினர்களாக நியமிக்கின்றபோது, மாநில அரசைக் கலந்து நியமனம் செய்யவேண்டுமென்று எழுதினார்கள். அன்றைக்கு இருந்த மத்திய அமைச்சர், இப்போது நியமிக்கப்பட்டிருக்கின்ற குழுவின் காலம் முடிவடைய இருப்பதால், இனிமேல் வருகின்ற காலங்களில் அமைக்கப்படுகின்றபோது, மாநில அரசைக் கலந்து ஆலோசிப்போம் என்று சொன்னார்கள். ஆனால், பின்னாலே இப்போது அமைந்திருக்கும் மத்திய அரசின் அந்த அமைச்சரகம் மாநில அரசைக் கலந்துகொள்ளவில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது வருகின்ற திரைப்படங்களிலே இரு பொருள்பட உரையாடல்கள் இடம் பெறுவது விரசமாக இருக்கின்றது என்று மக்களாலே பேசப்படுகின்றது, பத்திரிகைகளிலே எழுதப்படுகின்றது. எனவே, தணிக்கைக் குழுவின் அதிகாரத்தை இன்னும் கடுமையாக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மத்திய அரசினாலே அமைக்கப்படுகின்ற அந்தக் குழுவில் மத்திய அரசின் அதிகாரிகள் இருக்கிறார்கள்: அந்த பிராந்திய அதிகாரிகள் அந்தப் படங்களையெல்லாம் பார்த்து அனுமதித்திருக்கிறார்கள். அப்படி அனுமதிக்கும்போது, மக்களுக்கு தேவையான கருத்துக்கள் என்று கருதுவார்களானால், அவர்கள் அதை அனுமதிக்கிறார்கள். அவர்களால் தணிக்கை செய்து அனுமதிக்கப்படும் படங்கள் மக்கள் மன்றத்திற்கு பயனளிக்கும் என்று அவர்கள் கருதுகிறார்கள். மக்களுக்கு பயனளிக்காது என்று கருதுவார்களானால், மக்கள் அதைப் பார்க்காமல் இருந்துவிட்டால், அப்படிப்பட்ட படங்களைத் தயாரிப்பது நின்றுவிடும்.

[முற்பகல் 9-10]

திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவர் அவர்களே, அகில இந்திய அளவில் மாநிலத்திற்கு மாநிலம் கலாச்சாரங்கள் மாறுபடுகின்றன. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் ஒரு பிரதிநிதித்துவம் இருந்தால் நம்முடைய கலாச்சாரம் பாதிக்கப்படாத அளவுக்கு சென்சார் போர்டிலே உள்ளவர்கள் ஒரு ஊக்கமும் உணர்ச்சியும் அடைவார்கள். நிச்சயமாக மாநில அரசைக் கலந்து நியமனம் செய்யவேண்டுமென்று அரசு சட்டமன்றத்திலே தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்புமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, சென்னையிலே இருக்கின்ற அந்த பிராந்திய தணிக்கைக் குழு 5 மொழிப்படங்களை வழக்கமாகப் பார்த்துக்கொண்டிருக்கிறது. ஆகவே அந்த அந்த மொழிப்படங்களைப் பார்ப்பதற்கு என்று தனித்தனி உறுப்பினர்களை அதிலே நியமித்து இருப்பதாக அந்த அதிகாரி நம்முடைய அரசுக்குத் தகவல் தந்திருக்கிறார். அதிலே தமிழ்ப்படங்களைப் பார்ப்பதற்காக 13 உறுப்பினர்களும், தெலுங்குப்படங்களைப் பார்ப்பதற்கு 17 உறுப்பினர்களும் கன்னடப் படங்களைப் பார்ப்பதற்காக 8 உறுப்பினர்களும் மலையாளப் படங்களைப் பார்ப்பதற்கு 13 உறுப்பினர்களும் இந்திப்படங்களைப் பார்ப்பதற்கு 9 உறுப்பினர்களும் உள்ளதாக தகவல் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே தமிழ்ப்படங்களை நம்முடைய தமிழ்நாட்டைச் சேர்ந்த இந்த 13 உறுப்பினர்களும் பார்த்து அந்த அதிகாரியும் பார்த்துதான் இப்போது அனுமதித்துக்கொண்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. ஆனாலும் ஒரு மாநில அரசை கேட்டு அரசினுடைய விருப்பத்திற்கு ஏற்ப அல்லது அரசிடமிருந்து ஒரு பேனல் ஆப் மெம்பர்ஸ் என்ற முறையிலே ஒரு பட்டியலைப் பெற்று நியமிப்பது இது போன்ற மிகப்பெரிய பரப்பளவுள்ள ஒரு நாட்டில் நியாயமான ஜனநாயகத்திற்கொத்த நடைமுறையாகும். ஆனால் மத்திய அரசு இந்தச் சாதாரண விஷயத்தில்கூட தன்னுடைய உரிமையை விட்டுக் கொடுக்காமல் மாநில அரசு எத்தனை முறை கேட்டாலும் அதைப்பற்றிக் கவலைப்படாமல் செவிடன் காதில் ஊதிய சங்கைப் போலவே நம்முடைய குரலும் வேண்டுகோளும் பயனளிக்காமல் போய்க் கொண்டிருக்கின்றன என்பதை மாத்திரம் நான் மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தணிக்கைக் குழு பற்றிய கேள்வி இது. நானும் தணிக்கை செய்யவேண்டியிருக்கிறது. உறுப்பினர் கேள்விஅவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெறுகிறது.

திரு. ப. நெடுமாறன்: தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் திரையிடப்படுகின்ற தமிழ்ப்படங்கள் தமிழ்நாட்டின் பண்பாடு, நாகரிகம், சமுதாயச் சிறப்பு போன்ற நலன்கள் கெடாமல் இருக்கவேண்டும் அல்லது இருக்கச் செய்யவேண்டிய பொறுப்பு தமிழக அரசுக்கு உண்டு. ஆகவே தமிழக அரசைக் கலந்து ஆலோசிக்காமல் மத்திய அரசு நியமனம் செய்கிறது. அதுசெவிடன் காதில் ஊதிய சங்காக இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியானால் அந்தத் தணிக்கைக் குழுவிலே உள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த உறுப்பினர்களை ராஜிநாமாச் செய்யும்படி தமிழக அரசு வற்புறுத்துமா? இதுபற்றி ஸ்ட்ராங்க் புரட்டஸ்ட்டை மத்திய அரசுக்குத் தெரிவிக்க மாநில அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

** மாண்புமிகு பேரவை தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, மத்திய அரசாலே நம்முடைய மாநிலத்திலிருந்து இந்த 13 உறுப்பினர்களை அவர்களாகவே தேர்ந்தெடுத்து நியமித்து இருக்கிறார்கள். ஆனால் அப்படித் தேர்ந்தெடுத்தவர்கள் யார்மூலம் தேர்ந்தெடுத்தார்கள். தமிழ் மாநிலத்திலே அவர்களுக்கு எல்லாம் திரைப்படத் துறையிலே இந்தக் கலையிலே தமிழ் மக்களுடைய நல்வாழ்விலே பண்பாட்டைக் காப்பதிலே எவ்வளவு அக்கறை அவர்களுக்கு இருக்கிறது, அவர்களுடைய முன் அனுபவம் என்ன, அவர்களைப்பற்றிய வரலாறுகளையெல்லாம் யார் மத்திய அரசுக்குத் தெரிவித்தார்கள் என்பது மாநில அரசுக்குத் தெரியாது. இருந்தாலும் அவர்கள் நியமித்திருக்கிறார்கள். மத்திய அரசால் நியமிக்கப்பட்டிருக்கிற அந்த உறுப்பினர்கள் மாநில அரசின் வேண்டுகோளை ஏற்று ராஜிநாமா செய்வார்கள் என்று நாம் எதிர்பார்க்கமுடியாது. ஆனால் மத்திய அரசிலே முன்னாலே இருந்த ஒளிபரப்புத் துறை அமைச்சர் அறிவித்து கொடுத்த உறுதிமொழியை ஏற்று 1980 ஆம் ஆண்டு தமிழக அரசு நம்முடைய இன்றைக்கு இருக்கின்ற அரசு இல்லாத நேரத்திலே ஒரு முடிவு எடுக்கப்பட்டு இந்த அரசு வந்ததற்குப் பிறகு மத்திய அரசுக்கு சில பெயர்களைப் பரிந்துரை செய்தோம். திருமதி உமையாள் ராமநாதன் திரு சுகிசுப்பிரமணியன். டாக்டர் விக்கிரமன், திருமதி சரோஜினி வரதப்பன், திரு அகிலன், திரு வி. பாலகிருஷ்ணன், திரு கே. சீனிவாசன், இந்த 7 பெயர்களை மாநில அரசு மத்திய அரசுக்கு ஒரு பட்டியலாகத் தந்தது, இதிலிருந்து யாரையாவது உறுப்பினர்களாக நியமிக்க வேண்டுமென்று- நீங்கள் இந்தப் பட்டியலைப் பார்ப்பீர்களானால் எவ்வளவு முன் அனுபவம் மிகுந்தவர்கள், உணர்வு மிகுந்தவர்கள் இருக்கிறார்கள் என்று. ஆனால் மிகுந்த ஜாக்கிரதையாக அந்தப் பட்டியலிருந்து எந்தப் பெயரும் இடம்பெறாமல் பார்த்துக் கொண்டிருக்கிறது. கடுமையான புரட்டஸ்ட் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்களே அந்த வார்த்தைகள் இந்த மன்றத்திலே நாம் பேசிக்கொண்டிருக்கிற இந்த விவாதங்களை மத்திய அரசு கவனிக்கும் என்று நான் கருதுகிறேன்.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது இப்போது சட்டமன்றத்திலே விவாதிக்கிற அந்த வார்த்தைகளே செவிடன் காதிலே ஊதிய சங்கு என்பதற்கு பதிலாக கேட்குமா என்ற அளவிற்கு ஒரு பதிலை சொன்னார்கள், தமிழகத்தில் இருக்கிற திரையரங்குகளில் நமது நாகரீகத்திற்குப் புறம்பாக வெளி மாநிலங்களிலிருந்து படங்களை மொழி பெயர்த்துமிக ஆபாசமாக இருக்கிற படங்களை எல்லாம் புகுத்திக் கொண்டிருக்கிறார்களே, அப்படிப்பட்ட படங்களை திரையரங்குகளில் ஓட்டினால் லைசென்சை கொடுக்க மறுக்கப்படும் என்ற ஒரு

நடவடிக்கை எடுத்து, ஸ்ட்ராங் புரொடஸ்ட் என்பதற்கு இந்த அவையில் இருக்கிற அத்தனை உறுப்பினர்களும் தயாராக இருக்கிறபோது, இந்த அவையின் மூலமாக தீர்மானம் போட்டு அனுப்புவதற்கு, அமைச்சர் அவர்கள் அந்தத் தீர்மானத்தை கொண்டு வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, எந்தப்படம் மக்கள் பார்ப்பதற்குரிய நல்ல படம்; எந்தக் காட்சிகள் மக்களைக் கெடுக்கிற காட்சிகள் அல்லது கெடுக்காத காட்சிகள் என்பதற்கெல்லாம் வரையறை நிர்ணயிப்பது என்பது மிகுந்த சிக்கலான காரியம். இந்தியா போன்ற பல்வேறு மொழிகள், கலாச்சாரம், பண்பாடுகள் நிறைந்த ஒரு துணைக்கண்டத்திலே, மத்திய அரசு அதற்காக இன்று ஒரு பொது சட்டத்தை வைத்திருக்கிறார்கள். ஆகவே இங்கே அந்த பொறுப்பை ஏற்றிருக்கிறவர்கள் தான் அந்த பணியை நிறைவேற்ற வேண்டும். தமிழ்மொழி படத்தை நாம் தடுத்து நிறுத்தினால் இன்னொரு மொழிப்படம் இங்கே தமிழகத்திலே வந்து ஒட்டுவதற்கு முடியாது என்று தடுப்பதற்குரிய அதிகாரம் எந்த மாநிலத்திற்கும் கிடையாது. அரசியல் சட்டத்தின்படி தடை செய்யவும் முடியாது. தணிக்கைக்கு உட்பட்டு, தணிக்கை செய்யப்பட்ட படம் திரையிடுவதை நிறுத்துவதற்கு மத்திய அரசினாலேயே முடியவில்லை. சமீபத்திலே ஒரு இந்தி படம் அப்படி வெளியிட்டதற்கு பிறகு மத்திய அரசு நிறுத்துவதற்கு முயற்சிசெய்த போது, சுப்ரீம் கோர்ட்டிலே போய் ஒரு ஸ்டே வாங்கிவிட்டார்கள். ஆகவே இந்திய அரசியலமைப்புச் சட்டம் தந்திருக்கிற சில உரிமைகளின் அடிப்படையில் நமக்கு கிடைக்கிற நன்மையும் அரசியலமைப்பு சட்டத்தினால் தான், அந்த நன்மைக்கு இடையில், பயிர்களுக்கு இடையே இருக்கிற களைகளைப் போல, தீமைகளையும் அனுமதிக்கிறது அந்த அரசியல் அமைப்புச் சட்ட உரிமைகளால்தான். ஆகவே, அந்த அரசியல் சட்டம் அளிக்கிற உரிமைகளை பயன்படுத்துவது மக்களை பொறுத்தது, இப்படிப்பட்ட படங்களை மக்கள் பார்க்காமல் அவற்றை வெறுக்கிறார்கள் என்று வந்தால் தான் அந்த படங்களை திரையிடுவதற்கு ஊக்கம் குறையும்.

திரு. கோவைத்தம்பி: தலைவர் அவர்களே, மாநிலத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளில் ஒருவரை இந்த தணிக்கைக் குழுவிலே அங்கம் வகிக்க அரசு புதியதாக ஏதாவது ஒரு முயற்சி செய்யுமா? அப்படியில்லை என்றால் கல்வித்துறையிலே உயர்ந்த அதிகாரிகளை வைத்து இந்த தணிக்கை குழுவிலே அங்கம் வகிப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்து, வளர்ந்து வருகிற நாகரீகச் சீர்க்கேடுகளை உருவாக்குகிற திரைப்படங்களை தணிக்கை செய்ய கல்வித்துறையிலே ஒருவரை நியமிக்க அரசு முன் வருமா? அந்த மாமன்றத்திலே **கமிமகக்கைப் பொறுக்கவரையில்......**

மாண்புமிகு பேரவைத் தலைவர். சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. கோவைத் தம்பி: தமிழகத்தினுடைய தணிக்கை குழுவை பற்றி அதாவது நம்முடைய பண்பாடு, கலாச்சாரம் ஆகியவைகளை கெடுக்ககூடிய படங்களை அனுமதிப்பதை குறித்து கலந்து ஆலோசிப்பதற்கு ஒரு மணி நேரம் விவாதத்திற்கு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை அனுமதிப்பது என்னுடைய பொறுப்பு. அதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல முடியாது.

தோவாளை, மருங்கூர் ஆகிய இடங்களில் திருமண மண்டபம் கட்டும் திட்டம்.

*வினா எண். 741—திரு. சு. முத்துக்கிருஷ்ணன்: மாண்புமிகு செய்தி—அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் முருகக்கடவுள் அமைந்துள்ள தோவாளை. மருங்கூர் ஆகிய இடங்களில் திருமண மண்டபம் கட்டும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) இதற்கு ஆகும் திட்ட மதிப்பீடு எவ்வளவு?

(இ) எப்பொழுது வேலைகள் ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் மருங்கூர், மற்றும் தோவாளை ஆகிய இடங்களில் திருமண மண்டபம் கட்டுவதற்கான மதிப்பீடு தயாரித்தல், அங்கீகாரம் பெறுதல் ஒப்பந்த அனுமதி பெறுதல் ஆகிய வேலைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ஆ) அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி ஆலயம் மருங்கூரில் ரூ. 1,00,000 (ஒரு இலட்சம்) மதிப்பீட்டிலும் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி ஆலயம் தோவாளையில் ரூ. 30,000 (ரூபாய் முப்பதாயிரம்) மதிப்பீட்டிலும் திருமண மண்டபங்கள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளன.

(இ) மேற்காணும் பணிகள் 1391 பசலி முடிவில் ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

[1982 ஏப்ரல் 3

(முற்பகல் 9.20)

திரு. டி. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குமரி மாவட்டத்தில் முருகக் கடவுள் அமைந்துள்ள தோவாளை, மருங்கூர் ஆகிய இடங்களில் திருமண மண்டபம் கட்டுவது சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சில விவரங்களை இங்கே கூறி உள்ளார்கள். அது இந்த நிதி ஆண்டில் நிறுவப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, 1391 பசலி என்பது இப்பொழுது, 1982 ஜூன் மாதம் முடிய இருக்கிற நிதி ஆண்டாகும். ஆகவே, இந்த ஆண்டிலே வேலை தொடங்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்,

பிச்சாவரம் ஏரியில் படகு விடும் திட்டம்.

*வினா. எண். 742—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு செய்தி—அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் சிதம்பரம் அருகில் உள்ள பிச்சாவரம் பகுதியில் படகு விடும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் செலவழிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு?

(இ) அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். விரப்பன்: (அ) ஆம்.

(ஆ) பிச்சாவரத்தை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள மொத்த ரூபாய் 12.50 இலட்சத்தில், பிச்சாவரம் ஏரியில் படகு விடும் திட்டத்திற்கு ரூபாய் 4.07 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

		ரூபாய்
(இ)	படகுத் துறை கட்டுவதற்கு ..	60,000
	படகு இல்லம் கட்டுவதற்கும், உல்லாசப் படகு வாங்குவதற்கும்..	3,47,498
	ஆக மொத்தம் ..	4,07,498

ஒதுக்கப்பட்டிருக்கிறது.

1982 ஏப்ரல் 3]

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் படகு விடும் திட்டத்திற்குப் பணம் ஒதுக்குவதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்த வேலை எப்பொழுது துவக்கப் பட்டு எப்பொழுது முடிவடையும்? மக்கள் சென்று பார்க்கின்ற நிலைமைக்கு அது எந்தக் கால கட்டத்திலே செயல்படும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, கடந்த 3 நிதி ஆண்டுகளில் சுமார் ரூ. 12½ இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து தங்குவதற்கான அந்தக் குடில்கள், துயிலகக் கூடம், உணவுக் கூடம், மற்றும் சிற்றுண்டி சாலை, இப்பொழுது இந்தப் படகுத் துறை ஆகியவை அமைக்கும் வேலைகள் தொடங்கப்பெற்றுள்ளன. அந்தப் பகுதியிலே இந்தக் கட்டுமானம் பணிகளைச் செய்வதற்கு பல்வேறு சிக்கல்கள் இருக்கிற காரணத்தாலும், பாக்வாட்டர் கடலினுடைய நீரைக் கடந்து உள்ளே போய் வேலைகள் நடைபெற வேண்டிய காரணத்தாலும் மின்சாரம், நல்ல தண்ணீர் கொண்டு போக வேண்டிய காரணங்களினாலும் அந்தக் கட்டுமானப் பணிகள் கொஞ்சம் தாமதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மிக விரைவிலே அந்தப் பணிகள் எல்லாம் நிறைவேறி, பேரறிஞர் அண்ணா அவர்கள் கனவு கண்டார்களே பிச்சாவரம் என்ற என்ற ஒரு அருமையான பகுதி, இந்தியாவினுடைய மிகச் சிறந்த சுற்றுலா பகுதியாக மாற வேண்டுமென்று, அப்படிப்பட்ட ஒரு மிகச்சிறந்த இயற்கை வளம் நிறைந்த பிச்சாவரமாக்க, அநேகமாக, ஒன்றிரண்டு ஆண்டுகளிலே திட்டங்கள் நிறைவேற்ற முடியும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே. அந்தப் பகுதியில் இந்தப் படகு விடுகின்ற திட்டம் தவிர மக்கள் கண்டு களிக்கின்ற வகையில் வேறு என்ன என்ன பணிகள் சுற்றுலாத் துறையாலே செய்யப்பட இருக்கின்றன என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அந்தப் பிச்சாவரம் பகுதி என்பது கண்டு களிப்பதற்கு உள்ள பகுதி என்பதை விட போய் தங்கி மகிழ்வதற்கு ஒரு அற்புதமான இடமாகும். இந்தியாவிலேயே ஒரு கடற்கரை பகுதி ஆண்டு முதுவதும் மக்கள் தங்குகின்ற வகையிலே அமைந்திருப்பது இந்த ஒரு பகுதியில்தான். அங்கே இருக்கிற இயற்கைக் காடுகள் இந்தியாவில் இரண்டு மாநிலங்களில் மாத்திரமே இருக்கிற அற்புதமான காடுகளாகும். ஒன்று மேற்குவங்கத்திலே இருக்கிறது; இரண்டாவது அந்தப் பகுதியிலே இருக்கிறது. அது எந்த நேரத்திலும் படகிலே சவாரி செய்யவும், அந்த நதியிலே சவாரி செய்து கடற்கரைக்குப்

போகவும், அங்கே ஓய்வாகப் போய், ஒரு நாள், இரண்டு நாள் தங்கி மகிழ்ந்து, குறிப்பாக, வெளிநாட்டுக்காரர்கள் விரும்புகிற கடற்கரையிலே குளிப்பது போன்ற அந்தக் காரியங்களுக்கெல்லாம் அந்தப் பகுதி மிகச் சிறப்பாக அமையும். இன்னும் அதிக அளவிலே நாம் அபிவிருத்தி செய்வோமானால் இப்பொழுது காஷ்மீரிலே படகு வீடுகளிலே தங்குகிறார்களே அப்படிப்பட்ட ஒரு நிலைமையைக் கூட அந்த ஏரியிலே நாம் ஏற்படுத்த முடியும். ஆகவே, பார்த்து மகிழ்வதைவிட, போய் அங்கே இருந்து, தங்கி ஓய்வு பெறுவதற்கு அற்புதமான இடம்.

திரு. வி. வி. சுவாமிநாதன்: சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, உலகச் சுற்றுலா பயணிகள் கவனத்தை ஈர்க்கும் இந்த உல்லாச வாஸஸ்தலமான பிச்சாவரம் பகுதியை உலகத்திற்கு அறிமுகப்படுத்த வேண்டுமென்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கனவு கண்டார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தக்கனவை நனவாக்குகின்ற முறையில் 'இதயக்கனி' என்ற திரைப்படத்தின் மூலம் அறிமுகப்படுத்திய அமைச்சர் அவர்கள் அந்தப் பிச்சாவரத்தினுடைய ஒரு பகுதியாக இன்றைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் பெயரில் அங்கே ஒரு திட்டு இருப்பது உண்மையா என்பதை அறிவிப்பார்களா? சென்னைக் கடற்கரை உலகத்திலேயே எழில்மிக்கது என்று சொல்கிறார்கள். அதற்கு இணையாக அந்தக் கடற்கரை இருக்கிறது. படகில் சுற்றுப் பயணம் செய்வதுடன், அந்தக் கடற்கரையில் உலவுவதும், அங்கே குளிப்பதும்........

மண்புமிகு பேரவைத் தலைவர்: பிச்சாவரம் புராணம் வேண்டாம். அமைச்சர் அவர்களுக்கு அதெல்லாம் தெரியும். என்ன கேள்வி என்பதைக் கேளுங்கள்,

திரு. வி. வி. சுவாமிநாதன்: அந்தக் கடற்கரைப் பகுதியை அபிவிருத்தி செய்ய திட்டம் இருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அபிவிருத்தி செய்ய திட்டம் இருக்கிறதா என்று ஒரே வரியில் கேட்டிருக்கலாம்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவரவர்களே, இந்தப் பிச்சாவரம் பகுதியை ஒட்டிய கடற்கரைப் பகுதி மிகச் சிறந்த கடற்கரைப் பகுதியாகும். ஆனால் மக்களாலே இப்பொழுது கவனிப்பாரற்ற சூழ்நிலையில்தான் இருந்து கொண்டிருக்கிறது. அங்கேயிருக்கின்ற எம். ஜி. ஆர். திட்டு என்கின்ற புகழ் பெற்ற குடியிருப்புப் பகுதி அங்கேதான் இருக்கிறது. கடற்கரைப் பகுதியைப் பொறுத்த வரையில், பிச்சாவரத்தை அபிவிருத்தி செய்யும் வேலை முடிந்த பிறகு அடுத்தக் கட்டப் பணியாக அதைப்பற்றி எடுத்துக்கொள்வதற்கு அரசு ஆலோசிக்க இயலும்.

திரு. எஸ். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லும்பொழுது சற்றுக் காலதாமதம் வேலையில் ஏற்படுவதற்கு இயற்கை காரணம் என்று சொல்கிறார்கள். அந்த வேலை அரசாங்கத்தால் நடைபெறுகிறதா அல்லது பிரைவேட் காண்ட்ராக்ட் மூலம் நடைபெறுகிறதா? பிரைவேட் கான்ட்ராக்ட்காரர்கள், வேண்டுமென்றே டிலே செய்து ரிவைஸ்ட் எஸ்டிமேட் போட்டுக் கூடுதலாகப் பணம் பெறலாம் என்பதற்காகக் காலதாமதம் செய்வதாகச் சொல்கிறார்கள். அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவரவர்களே, அரசு நிதி ஒதுக்கீடு செய்து அந்த நிதியைச் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்குத் தந்து, அந்தக் கட்டுமானப் பணிகளைச் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திடம் ஒப்படைத்திருக்கிறது. சுற்றுலா வளர்ச்சிக் கழகம் முறையாக ஒப்பந்தக்காரர்களிடம் விட்டிருக்கிறது. ஆனால் இருக்கின்ற கஷ்டம், அங்கே உள்ளது உப்புத் தண்ணீர். நல்ல தண்ணீரைக் கொண்டு போக வேண்டும். 3, 4 மைல் தூரத்திலிருந்து நல்ல தண்ணீரைக் கொண்டு வர வேண்டியிருக்கிறது. மின்சாரம் கொண்டு வர வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட முயற்சிகளில் பல துறைகளும் இணைந்திருப்பதால் அவர்களுடைய உதவியைப் பெறுவதில் இடையூறும், காலதாமதமும் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, ஒப்பந்தக்காரர்கள் வேண்டுமென்றே எந்தக் காரணத்தாலும் தாமதம் செய்யவில்லை.

குமரி மாவட்டத்திலுள்ள கண்ணன்னூர் பாலம்.

* வினா எண். 685—திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் வியல்லூர் கிராமத்தில் சாமியார் மடம்—தடிக்காரகோணம் சாலையில் 3 கி. மீட்டருக்கு பின்னால் இருக்கும் கண்ணன்னூர் பாலம் மிகவும் ஆபத்தான நிலையில் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அவ்விடத்தில் புதுப்பாலம் கட்டுவதற்கு ஏதேனும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) மற்றும் (ஆ) சாமியார் மடம்—தடிக்காரன்கோணம் சாலையின் சரியான பெயர் மேக்கோடு—இலந்தையம்பலம் சாலை. இச்சாலையில் கி.மீ 1/4—இல் உள்ள பாலத்தை ரூ. 5.00 இலட்சம் செலவில் திரும்பக் கட்ட ஆணை பிறப்பிக்கப்பட்டு இப்பொழுது வேலை தொடங்கப்பட்டிருக்கின்றது.

[1982 ஏப்ரல் 3

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு தலைவரவர்களே, இலந்தையம்பலம் பக்கத்திலே உள்ள கண்ணன்னூர் என்ற இடத்திலிருக்கும் பாலத்தைக் கட்ட அனுமதி வழங்கப்பட்டதற்காக அமைச்சரவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிதி ஆண்டிலேயே அது செய்து முடிக்கப்படுமா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, ஒப்பந்தமெல்லாம் 10-2-82-லே முடிந்து வேலைகள் தொடங்கப் பட்டிருக்கின்றன.

திரு. டி. மணி: பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பாலம் கட்டுவது சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சரவர்கள் அதற்குத் தேவையான பணம் ஒதுக்கப்பட்டிருக்கின்றது என்று தெரிவித்தார்கள். அதற்காக மிக்க நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அதே நேரத்தில் 5 இலட்சம் ரூபாய் போதுமா என்ற கேள்விக் குறி எழுகிறது. காரணம், குறுகலான பாலமாக இருந்தாலும் போக்குவரத்து வண்டிகள் போகும்பொழுது இருமருங்கிலும் உராய்ந்து கொண்டு போகும் காட்சியைப் பார்க்கிறோம். 5 இலட்சம் ரூபாய் மதிப்பீடு என்றால் அது 22 அடி அல்லது 30 அடி அகலமாக இந்தப் பாலம் இருக்குமா? இதை அந்தத் தொகையில் செய்ய முடியுமா? அதேபோன்று நீண்ட நெடுங்காலத்திற்கு முன், ஏற்கனவே மாண்புமிகு அமைச்சரவர்கள் சென்று பார்த்து வந்த பன்னிப்பாலம், இன்னொரு பாலம் ஆகியவை இருக்கின்றன. ஆகவே, இதை அகலப்படுத்தி முறையாகச் செய்து முடிக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, குறுகிய பாலமாக இருந்த காரணத்தால்தான் ஏற்கனவே இருந்த பாலம் மூன்று மீட்டர் அகலமுள்ளது. பெரிய பாலமாக அமைக்க வேண்டுமென்று 5 இலட்சம் ரூபாயில் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. அதுபோதும் என்று தான் பொறியாளர்கள் கூறியிருக்கிறார்கள். அந்தத் தகவலின் அடிப்படையில் வேலை தொடங்கப் பட்டு நடந்து கொண்டிருக்கிறது. இன்னொரு பாலம் நான் நேரிலே பார்த்த பாலம், அதை அடுத்த ஆண்டிலே எடுத்துக் கொள்ளலாம்.

நகரங்களில் சுவரொட்டிகள் ஒட்ட குறிப்பிட்ட இடங்களை ஒதுக்கும் திட்டம்.

* வினா எண். 686—திரு. குமரி அனந்தன்; திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நகரங்களைத் தூய்மையாக வைத்திருக்க சுவரொட்டிகள் ஒட்டுவதற்கென குறிப்பிட்ட இடங்கள் தேர்வு செய்யப்படுமா?

1982 ஏப்ரல் 3]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் விளம்பரங்கள் செய்ய குறிப்பிட்ட இடங்கள் ஒதுக்கப் பட்டு அங்கு நிலையாக அமைக்கப்படும். சிமெண்ட் பலகைகள் போன்றவைகள் மீது சுவரொட்டிகள் ஒட்டுவது சம்பந்தமான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிங்கப்பூர் போன்ற வெளிநாடுகளில் குறிப்பிட்ட இடங்களை ஒதுக்கித் தனியாகக் கட்டணம் வசூலிக்கிறார்கள். எந்த நிகழ்ச்சிக்காக அந்தப் போஸ்டர்கள் ஒட்டப்படுகின்றனவோ அந்த நிகழ்ச்சி முடிந்தவுடன் அந்தப் போஸ்டரை ஒட்டியவர்களே அந்தப் போஸ்டரை எடுத்துவிட வேண்டுமென்றெல்லாம் விதியிருக்கின்றது. அப்படி இங்கேயும் செய்தால் அதிகமாக வருமானமும் வரும்; நகரத்தின் அழகும் கெடாது. எனவே, அப்படிப்பட்ட முறையில் தீவிரமாக ஒரு சட்டத்தைக் கொண்டு வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-30)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, மாநகராட்சியினுடைய சட்ட விதிமுறைகளிலே இடம் இருக்கின்றது. அதன் அடிப்படையிலே சுவரொட்டிகளைக் குறிப்பிட்ட இடங்களில் மட்டும்தான் ஒட்டவேண்டும். ஆனால் அதே நேரத்தில் மாநகராட்சியின் அனுமதியைப் பெற்றுத்தான் சுவரொட்டிகளை ஒட்டவேண்டும். இல்லை என்றால் அதற்குக் கருப்பு சாயம் பூசப்பட்டு, அந்த சுவரொட்டிகளை யார் யார் ஒட்டுகிறார்களோ அந்த இடத்தில், அது படமாக இருந்தாலும், விழாவாக இருந்தாலும் அது நிறுத்தப்பட்டுவிடுகிறது. அதன் மூலம் இப்போது வருமானம் அதிகரித்து இருக்கிறது. முக்கியமாக இதுபோன்ற நிலையை உருவாக்குவதன் மூலம் இன்னும் வருமானம் அதிகமாக ஆகின்ற நிலையில் நடைமுறையில் சில தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. எம். சின்னசாமி: தலைவர் அவர்களே, குறிப்பாகத் தேர்தல் நேரங்களிலே சுவர்களைப் பிடிப்பதற்காக கண்ட கண்ட இடங்களில் போஸ்டர்களை ஒட்டி சுவர்களை அசிங்கப்படுத்தி விடுகிறார்கள். சில அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் சுவர்களைப் பிடிப்பதற்கு முந்திக் கொள்ளுகிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட போஸ்டர் சண்டைகளை ஒழிப்பதற்காக விதிமுறைகளை அரசு உடனடியாக கொண்டு வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, இங்கே இந்த மன்றத்தில் எல்லா கட்சிகளையும் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். நாம் இங்கே அப்படிப்பட்ட விதிமுறைகளை அனுஷ்டித்தாலும் கூட அப்படிப்பட்ட போஸ்டர்களை யார் யார்

ஒட்டுகிறார்கள் என்பது அந்தந்த அரசியல் கட்சிகளுக்குத்தான் தெரியும். ஆகவே, நான் மாமன்றத்தின் உறுப்பினர்களை உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்வது ஒதுக்குப்புறமாக அதுவும் குறிப்பாக பொது ஸ்தாபனங்களில் அங்கே இருக்கக்கூடிய சுவர்களைக் கெடுக்காமல், நல்லமுறையில் போஸ்டர்கள் ஒரே இடத்தில்தான் ஒட்டவேண்டும் என்று விதிமுறைகளை நாம் அனுஷ்டிக்க வேண்டும். அப்போதுதான் இவைகள் எல்லாம் சரியான முறையிலே நடைபெறுமே தவிர' இல்லை என்றால் கண்டிப்பாக நடைபெறாது.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கின்ற பகுதிகளிலேகூட இப்படிப்பட்ட ஆபாசமான சுவரொட்டிகள் ஒட்டுகிறார்கள். அதுபோக யார் யாருக்கோ சொந்தமான வீடுகளில் சுவரொட்டிகளை ஒட்டினால், மாநகராட்சி இதற்கும் கட்டணம் வசூலிக்கிறார்கள். இப்படிப் பட்ட நிலையை மாற்றி, பொது இடங்களில் அரசியல், சமூக இயல் போன்ற போஸ்டர்களை போக்குவரத்து இடைஞ்சல் இல்லாத பகுதிகளிலே மட்டும் திரைப்படம் போன்ற ஆபாசம் இல்லாத சுவரொட்டிகளை ஒட்டுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, ஆபாசம் என்பது அவரவர்களுடைய கண்களைப் பொருத்தது. ஏனென்றால் நாம் பார்க்கின்ற நேரத்தில் ஒரு சிலருக்கு அது ஆபாசமாக இருக்கலாம். ஆனால் அதே ஆபாசம் வேறு சிலருக்கு அது கலை உணர்வு அளிக்கக்கூடிய அளவுக்கும் இருக்கலாம். ஆனால் ஒட்டுகின்றவிளம்பரச் சுவரொட்டிகள் ஆங்காங்கே ஒட்டுகின்றபோது இதுபோன்ற நிலை உருவாகக்கூடாது என்று ஏற்கனவே விதிமுறைகள் இருக்கின்றன, சட்டங்கள் இருக்கின்றன. அவைகள் தடுக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல எந்தெந்த இடங்களில் இதுபோல ஆபாசமான சுவரொட்டிகள் இருக்கின்றன என்று சொன்னால் உடனடியாக அதற்கு ஏற்ற முறையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

வள்ளியாற்றின் குறுக்கே புதிய பாலம் கட்டும் திட்டம்.

* வினா எண். 687—திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் தாலுகா தளக்குளம் என்ற ஊரில் ஏற்கனவே இருந்த வள்ளியாற்றுப் பழைய பாலம் புதிதாக கட்டுவதற்காக இடிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகளாகியும் இன்னமும் புதிய பாலம் கட்டுவதற்கான பணிகள் துவக்கப்படாமல் இருப்பது அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) மற்றும் (ஆ) 1979 ஆம் ஆண்டின் வெள்ள நிவாரணப் பணி திட்டத்தின்படி கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் தாலுகா தளக்குளத்தில் வள்ளியாற்றின் குறுக்கே ஒரு மூழ்கு பாலம் கட்டும் பணி துவக்கப்பட்டு பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. ப. நெடுமாறன்: தலைவர் அவர்களே, இந்தப் பாலம் கட்டும் வேலை எவ்வளவு காலத்தில் முடிவடையும்? எப்போது திறப்பு விழா நடத்தப்படும் என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, 70 ஆயிரம் மதிப்பீடு 1979 ஆம் ஆண்டு செய்யப்பட்டு, அதற்குப் பின்னால் திருத்த மதிப்பீடாக 1981—ல், 1 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய்க்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு வேலை தொடங்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு முடிவதற்குள்ளாக பாலம் முடிவடைந்து விடும்.

திரு. எஸ். ரெத்தினராஜ்: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்தப் பால வேலையை எடுத்த ஒப்பந்தக்காரர், சிமெண்ட் முதலிய பொருள்களைப் பெற்று ஏற்கனவே இருந்த 'ரேம்ப்' உடைந்து, குறுக்கே கடந்து செல்ல முடியாத அளவுக்கு ஆழமாக இருக்கின்ற நிலையில், செய்த அந்த வேலையை அந்த ஒப்பந்தக்காரர் சிமெண்டை எடுத்துவிட்டு சென்றுவிட்ட நிலையில் வேலை நடைபெறாமல் இருக்கின்றது என்ற தகவல் அமைச்சருக்குத் தெரியுமா? அதன் மீது நடவடிக்கை எடுத்து துரிதமாக வேலையை முடிப்பதற்கு வழிவகை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட தகவல் அரசுக்கு வரவில்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தக் குற்றச்சாட்டை உடனடியாக கவனித்து அதன் மீது அரசு நடவடிக்கை எடுக்கும்.

நாகப்பட்டினம் — கூடலூர்—மைசூர் மாநில நெடுஞ்சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மேம்பாடு செய்யும் திட்டம்.

* வினா எண். 688—திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் — கூடலூர் — மைசூர் மாநில நெடுஞ்சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்ற மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) இல்லையெனில், இதை நிறைவேற்ற அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம்—கூடலூர்—மைசூர் மாநில நெடுஞ்சாலை, ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் தேசிய நெடுஞ்சாலையாக மேம்பாடு செய்ய மத்திய அரசுக்கு சிபாரிசு செய்யப்பட்ட சாலைகளில் ஒன்றாகும். ஆனால், மத்திய அரசு நிதி நெருக்கடி காரணமாக இச்சாலையினை எடுத்துச் செயலாற்ற முடியாது எனக் கூறிவிட்டது. எனினும், இது குறித்து மத்திய அரசு தொடர்ந்து வற்புறுத்தப்படுகின்றது.

திரு. மு. அம்பிகாபதி; பேரவைத் தலைவர் அவர்களே, அந்த சாலை தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒரு பிரதானமான சாலை. அது நாகப்பட்டினத்திலிருந்து கூடலூர் வரை செல்கிற சாலை. இதை மத்திய அரசு தேசிய நெடுஞ்சாலையாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டிருந்தும், இந்த ஐந்தாண்டு திட்டத்திலும் விடப்பட்டிருப்பது கண்டிக்கத்தக்கது. மீண்டும் இதை வலியுறுத்தி, சிவி மாத்துறையானாலும், வேறு எந்தத் துறையாக இருந்தாலும், மத்திய அரசினுடைய மாமியார் தனம் போகாமல் இருக்கிறது. அதைப் போக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு; பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சாலை 5-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் இடம் பெறும் என்றும் எதிர்பார்த்திருந்தோம். ஆனால் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் இதை மத்திய அரசு சேர்க்கவில்லை. * * * என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: * * * என்றெல்லாம் வேண்டாம்.

* * * * * *

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நெடுஞ்சாலையைப் பொறுத்தவரை, எப்படியாவது ஒரு 50 கிலோ தூரத்திற்காவது இதை தேசிய நெடுஞ்சாலையாக எடுத்து மேம்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று 4 நாட்களுக்கு முன்னால் நான் டெல்லிக்குச் சென்ற நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் வீரேந்திர பட்டீல் அவர்களைக் கேட்டேன். இந்த ஆண்டிலே சேர்க்க முடியாது என்று சொன்னார்கள். நீங்கள் அஸ்ஸாமுக்கு மட்டும் கொடுத்திருக்கிறீர்கள், வேறு மாநிலத்திற்குக் கொடுக்கவில்லை. அஸ்ஸாமுக்கு அரசியல் காரணம்காட்டி கொடுத்திருக்கிறீர்கள். ஏன் தமிழகத்திற்கு மட்டும் கொடுக்கவில்லை என்று கேட்டதற்கு அடுத்த ஆண்டிலே கொடுப்பதாகச் சொல்கிறார்கள். ஆகவே அடுத்த ஆண்டில் மத்திய அரசு ஏதாவது கொடுக்கும் என்று நாம் எதிர்பார்க்கிறோம்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. ரா. உமாநாத்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நாகப்பட்டினத்திலிருந்து கூடலூர் செல்லும் இந்த சாலையைப் பொறுத்தவரையில், மற்ற ரோடுகளை விட இதற்கு பிரியாரிடி கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. இதிலே பொலிடிகல், டிஸ்கிரிமினேஷன் கூட இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். ஆகவே பொலிட்டிகல் டிஸ்கிரிமினேஷன் என்றபோது, நம்முடைய தேவை பாதிக்கிறது என்று சொன்னால் அதற்கு நீங்கள் புரொட்டஸ்ட் ஏதாவது செய்தீர்களா, அடுத்த ஆண்டு என்று அவர்கள் சொல்லும்போது பொலிட்டிகல் டிஸ்கிரிமினேஷன் மீண்டும் வந்தால் அதற்கு நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் சொன்னதுபோல், அஸ்ஸாமுக்கு கொடுத்திருப்பது Because of the political situations என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அவர்கள் வேறு மாநிலத்திற்கும் கொடுக்கவில்லை என்பதையும் அவர்கள் கோடிட்டுக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதன் காரணமாக நாம் மத்திய அரசிடம் எப்படியாவது பேசி நயந்து பயந்து இவைகளைப் பெறவேண்டுமென்ற சூழ்நிலையில் இருக்கிறோம். ஆகவே கண்டிப்பாக அடுத்த ஆண்டு கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நாகப்பட்டினம்-கூடலூர் சாலை என்பது 2 மாநிலங்களை இணைக்கும் மிகமுக்கியமான சாலைகளில் ஒன்றாகும். அது நாகப்பட்டினத்தில் ஆரம்பிக்கிற இடத்தில் சாலை மிகவும் குறுகலாக, எந்த நேரத்திலும் விபத்துகள் ஏற்படக்கூடிய ஒரு சாலையாக இருக்கிறது. பல நேரங்களில் பேருந்து விபத்துகள் நடந்திருக்கின்றன. அடுத்த ஐந்தாண்டு திட்டத்தில் மத்திய சர்க்கார் எடுத்துக்கொள்ள இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதை வலியுறுத்தி மாநில சர்க்கார் அதற்கு கணிசமான தொகையை உடனடியாக ஒதுக்கீடு செய்வதற்கு அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9.40)

திரு. எஸ். ஆண்டித்தேவர்: தலைவரவர்களே, மத்தியஅரசுக்கு பயந்து, நயந்து செயல்படுகிறோம் என்ற முறையிலே சொன்னார்கள். சட்டமன்றக் குறிப்பில் அது இருக்க வேண்டுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, நயந்து பயந்து என்பதற்கு நாம் அவர்களுக்கு பயப்படுகிறோம் என்று பொருள் அல்ல. சில காரணங்களைக்கூட நாம் சொல்கிறபோது எப்படியாவது நம்முடைய மாநிலத் தேவையை நிறைவேற்றிக் கொள்வதற்சாக என்ற பொருளில்தான் சொன்னேன்?

*   *   *   *   *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: (. . . .) 'என்ற பொருளில்தான் சொன்னேன்' என்பதற்குப் பின்னால் மாண்புமிகு அமைச்சர் குறுப்பிட்ட வார்த்னதகளை அவைக்குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, நான் குறிப்பிட்டதை தெளிவாக்க விரும்புகிறேன். பயந்து, நயந்து என்பது, நாம் டில்லிக்குப் பயந்து என்று பொருள் அல்ல. நியாயத்திற்குப் பயந்து, நீதிக்குப் பயந்து என்ற பொருளில் குறிப்பிட்டேன். இந்தச் சாலையின் முக்கியத்துவம் பற்றி ஏற்கெனவே எடுத்துச்சொல்லியிருக்கிறோம். 16 சாலைகளுக்கு ஏற்ககனவே 5-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் எடுத்துச் சொல்லப்பட்டு அதில் ஒரு சாலை கூட இதுவரை எடுத்துக் கொள்ளப்படவில்லை. அடுத்த ஆண்டு இதை வலியுறுத்தி எப்படியாவது கிடைக்குமாறு செய்ய நடவடிகை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள்: தலைவரவர்களே, இது சம்பந்தமாக கேள்வி நேரம் முடிந்தவுடன் எனக்கு ஒரு ஒழுங்குப் பிரச்சனை எழுப்ப அனுமதி வழங்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

உணவுக் கலப்படங்களை பரிசோதுக்கும் ஆய்வுக்கூடங்கள்.

* வினா எண் 743.—திரு. செ. செம்மலை: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) உணவுக் கலப்படங்களை பரிசோதிக்கும் ஆய்வுக் கூடங்கள் தற்போது எங்கெங்கு உள்ளன?

(ஆ) அப்படிப்பட்ட ஆய்வுக் கூடங்களை மாவட்டத்திற்கு ஒன்று என்ற அளவில் அதிகரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் எச். வி.ஹண்டே: (அ) தற்போது கீழ்க்கண்ட ஏழு இடங்களில் உணவுக் கலப்படங்களைப் பரிசோதிக்கும் ஆய்வுக் கூடங்கள் உள்ளன.

1. கிங் நிலையம், கிண்டி, சென்னை
2. சென்னை மாநகராட்சி உணவு ஆய்வுக்கூடம்
3. கோயம்புத்தூர்
4. மதுரை
5. தஞ்சாவூர்
6. பாளையம்கோட்டை
7. சேலம்.

(ஆ) மாவட்டத்திற்கு ஒரு ஆய்வுக்கூடம் அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. செ. செம்மலை: தலைவரவர்களே, கடந்த 3 ஆண்டுகளில் பரிசோதனைக்காக எவ்வளவு 'சாம்பிள்ஸ்' அனுப்பப்பட்டன? அதில் எத்தனை பேர்கள் தண்டிக்கப்பட்டார்கள்? அவர்களிடமிருந்து எவ்வளவு தொகை அபராதமாக வசூலிக்கப்பட்டது என்ற விவரங்களை மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, சென்ற மூன்று ஆண்டுகளாக என்றால், 1979-80-ல் 16,994 சாம்பிள்ஸ் அனலைஸ் செய்யப்பட்டன. 1980–81-ல் 19,530 சாம்பிள்ஸ் பரிசோதனை செய்யப்பட்டன. 1981–82–ல் டிசம்பர் மாதம் வரையில் 15,179 சாம்பிள்ஸ் பரிசோதனை செய்யப்பட்டன.

No. of samples found adulterated:

1979-80 .. 2404;

1980-81 .. 2349;

1981-82

(As on 31.12.1981) ..1254.

No. of people fined:

1979-80 .. 725;

1980-81 .. 677;

1981-82 .. 490

(As on 31.12.1981)

No. of persons imprisoned: 1979-80: 304,

1980-81 : 197; As on 31.12.1981; 169.

[1982 ஏப்ரல் 3

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கலப்பட வழக்குகள் பலவற்றைப் பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கலப்படம் செய்வதிலே, மிளகாய்ப் பொடியில் செங்கல் பொடியும், அரிசியில் கல்லும், மிளகு போன்றவற்றில் களிமண் உருண்டைகளும் கலக்கப்படுவதாக பொதுப்படையாக மக்கள் பேசிக்கொள்கிறார்கள். அப்படிப்பட்ட கேஸ்கள் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளதா? அப்படியானால் அவர்கள் மீது ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; மக்கள் பேசிக்கொள்கிறார்கள் என்று சொல்வது உறுப்பினருக்குத் தெரியாது என்பதைக் குறிக்கிறது.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் மக்கள் பொதுப்படையாகப் பேசிக்கொள்கிறார்கள் என்று சொன்னார்கள். அப்படி பேசப்படுவது மட்டுமல்ல, உண்மையாகவும் ஆங்காங்கு நடந்து இருக்கின்றன என்கிற தகவல்கள் அரசுக்கு வந்து ஆங்காங்கு அதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. அப்படிப்பட்ட குற்றங்களைச் செய்பவர்களையும் அந்த இலாகாவினர் கண்டு பிடித்து, அவர்களுக்கு அபராதம் விதிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அந்த அடிப்படையில் 1979—80—ல் ரூ. 4,54,932 அபராதமாக அரசுக்கு செலுத்தப்பட்டு இருக்கிறது. 1980-81—ல் ரூ. 3,98,045 அபராதம் மூலம் அரசுக்கு வந்து இருக்கிறது. அதைப்போலவே, அந்த மாதிரியான குற்றங்களுக்காக டிசம்பர் மாதம் 1981 வரை அபராதத்தின் மூலம் அரசுக்கு கிடைத்துள்ள தொகை ரூ. 2,87,540 ஆகும்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கலப்படம் எல்லாவிதமான உணவுப் பொருள்களிலும் செய்யப்படுகிறது. ஆனால், அவைகள் பூராவும் சரியான முறையில் கண்டுபிடிக்கப்பட்டு, தண்டனை பெறுவது இல்லை. பாலில் எல்லோரும் தண்ணீர் கலந்து விற்கிறார்கள். ஆனால், நியாயமான முறையில் விவசாயிகள் பால் கறக்கும்போது பாலில் சிறிதளவு தண்ணீர் கலந்து விட்டால் கூட அவர்கள் மீது மட்டும் கலப்படத் தடைச் சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு தண்டனை வழங்கப்படுகிறது? பாலில் தண்ணீர் கலப்பதில் உடல் நலத்துக்கு கெடுதல் இல்லையே; எதற்காக அவர்களுக்கு தண்டனை அதிகமாக விதிக்க வேண்டும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே; தலைவர் அவர்களே, மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்கள் பாலில் தண்ணீர் கலப்படம் செய்வதில் தவறு இல்லை என்ற வகையில் சொல்கிறார்கள். கலப்படத்தைப் பொறுத்தவரையில், எந்த மாதிரியான கலப்படம் செய்தாலும் எப்படிச் செய்தாலும் கலப்படம், கலப்படம்தான். அந்த நோக்கத்தில்தான் அரசாங்கம்— அந்த இலாகா—நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1982 ஏப்ரல் 13]

திரு. கு. ப. பழனியப்பன்: தலைவர் அவர்களே, உயர்தரப் பசுக்கள் கொடுக்கும் பால் கொழுப்புச் சத்து குறைவாகவும், இதரச் சத்துக்களும் மற்ற பசுக்கள் கொடுப்பதைவிடக் குறைவாகவும் இருப்பதால் நல்ல பாலாகக் கொடுத்தாலும், அதில் கலப்படம் இருப்பதாகச் சொல்லி, தண்டனை வழங்கப்படுகிறது என்பது அரசுக்குத் தெரியுமா? மேலும், அந்தப் பசு இருக்கும் சீதோஷ்ண நிலைமை, அதற்குக் கொடுக்கப்படும் 'பீட்ஸ்' ஆகியவையும் இப்படிப்பட்ட முறையில் பால் கொடுப்பதற்கு ஒரு காரணம் என்று சொல்லப்படுகிறது. ஆகவே, இவை யெல்லாம் கலப்படம் ஆகாது என்பதைத் தெளிவுபடுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே கலப்படம் செய்பவர்களுக்கு கன்செஷன் கொடுக்கின்ற வகையில் பேசுவது நன்றாக இருக்காது. இருந்தாலும் கூட இந்தக் கலப்படத்தைப் பொறுத்தவரையில் நான் சொல்ல விரும்புகிறேன். பேட் கன்டென்ட் கொழுப்புச் சத்துக் குறைவாக இருப்பதால் கலப்படம் என்று சொல்லிவிட மாட்டார்கள். பாலில் அந்த லாக்டோமீட்டர் போட்டுப் பார்த்தவுடன், உடனே அதில் தண்ணீர் எவ்வளவு கலந்து இருக்கிறது என்பது தெரியும். அதை வைத்துத்தான் கலப்படத்திற்கான குற்றம் சாட்டப்பட்டு, தண்டனை வழங்கப்படுகிறது. ஆகவே, இதிலே எந்தவிதமான தாட்சண்யத்திற்கும் இடம் அளிக்கத் தேவையில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என நினைக்கிறேன்.

மருத்துவத் துறையிலிருந்து மருந்தியல் துறையைத் தனியாகப் பிரிக்கும் திட்டம்.

*வினா எண்- 744 திரு. ந. குலசேகரபாண்டியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருத்துவத் துறையில் இருந்து மருந்தியல் துறை எப்பொழுது தனியாகப் பிரிக்கப்படும்?

(ஆ) அவ்வாறு பிரிக்கப்படும் பொழுது அந்தத் துறையை சேர்ந்தவரே துறைத் தலைவராக நியமனம் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எச், வி. ஹண்டே: (அ) மற்றும் (ஆ) 13–1.–81 தேதியிட்ட சுகாதாரத்துறை அரசு ஆணை (நிலை) எண் 2084–ன் படி மருந்தியல் துறை தனியாகப் பிரிக்கப்பட்டு விட்டது. அத்துறையைச் சேர்ந்தவரே அதன் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருந்தியல் பட்டதாரிகளும், மருந்து உற்பத்தியாளர்களும் கேட்டுக்கொண்டதற்கிணங்க இங்கே ஓராண்டு காலத்திற்குள் மருத்துவத் துறையில் இருந்து மருந்தியியல் துறையைப் பிரித்து, தனியாக மருந்தியற் துறை இயக்குனரகம் ஏற்படுத்தி, மருந்தியல் துறையைச் சேர்ந்தவரையே அதற்குத் தலைவராக நியமித்திருப்பதற்காக நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன், ஆனால், மருந்திலே கலப்படம் செய்வதைப் பரிசோதனை செய்வதற்கான பரிசோதனைக் கூடம் மட்டும் இன்றும் மருத்துவத்துறையில் இருக்கிறது. இது எப்படி இருக்கிறது என்று சொன்னால், இந்திரர்கள் மாறினாலும், இந்திராணி மாற மாட்டார் என்பதுபோல் இருக்கிறது. இப்போது புதிதாக மருந்தியல் துறை ஆரப்பிக்கப்பட்டு இருப்பதால், இந்த மருந்துகள் பரிசோதனைக் கூடத்தையும் அந்தத் துறையிடத்தில் ஒப்படைக்க அரசு ஆவன செய்யுமா.

(முற்பகல் 9-50)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. வி, வி. சுவாமிநாதன் அவர்கள் சொல்லக் கூடிய அந்த பிரச்சினை தீர்க்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மருத்துவத் துறை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு தனித்தனியாக டைரக்டர்கள் நியமிக்கப்பட்டு அது இயங்கி வருகிறது. எனவே இப்போது இந்த மூன்றுக்கும் சேர்த்து ஒரு தனி டைரக்டர் ஜெனரல் போடுகின்ற உத்தேசம் இருப்பதாகச் சொல்லப்படுகின்றது. அது உண்மையா? ஆமெனில் அமைச்சரவர்கள் அது பற்றிப் பதிலளிப்பாரா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட உத்தேசம் எதுவும் தற்போது இல்லை.

கடலூர் மருத்துவமனையில் மருத்துவ சித்தப் பிரிவு அமைக்கும் திட்டம்.

*வினா எண் 745:— திரு.எஸ். சிவராமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) கடலூர் அரசினர் மருத்துவ மனையில் சித்த மருத்துவப் பகுதி தனியாக திறக்கப்பட்டு நோயாளிகள் தங்கி சிகிச்சைப்பெற வசதி செய்ய அரசிடம் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அரசு இதன்மீது என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) கடலூர் அரசினர் மருத்துவமனையில் சித்த மருத்துவப் பிரிவு பத்து படுக்கைகளுடன் இயங்கி வருகிறது. அதற்குத் தனியாகக் கட்டிடம் கட்ட செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்தும் திட்டம்.

*வினா எண் 746— திரு. கு. ரமணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புற்றுநோய் பிரிவு ஒன்று ஏற்படுத்த திட்டமுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அது குறித்து விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) மற்றும் (ஆ) இது தொடர்பான செயற்குறிப்பொன்று துறைத் தலைவரின் ஆய்வில் இருக்கிறது.

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே கோவை மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சாதாரண மருத்துவமனை மட்டுமல்ல. அது மருத்துவக்கல்லூரி என்ற வகையிலே மாணவர்களுக்குப் பயிற்சி கொடுக்கக்கூடிய ஒரு இடம். அப்படி அந்த மருத்துவமனை மருத்துவக்கல்லூரி மருத்துவமனையாக ஆனதிலிருந்து புற்றுநோய்ப் பிரிவே இல்லாமல் இருப்பது அந்த மாணவர்களுடைய பயிற்சிக்குக் கூட இடையூறாக இருக்கின்றது என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? இதுவரை அப்படி புற்றுநோய்ப்பிரிவு ஏற்படுத்தப்படாமல் இருப்பதற்கு என்ன காரணம்? மற்ற இடங்களுக்குப் ப்ரையாரிட்டி கொடுத்து இந்த இடத்திற்கு அதனால் கொடுக்காமல் இருப்பது தான் காரணமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, இது மட்டுமல்லாமல் இன்னும் இரண்டு மூன்று கல்லூரிகளில் அப்படி இல்லாத நிலைமை இருக்கின்றது. மேலும் இது இல்லை என்றால் மாணவர்களின் படிப்பிற்கு எந்த விதமான

பாதிப்பும் ஏற்படாது. இது போஸ்ட் கிரேஜுவேட் ட்ரெய்னிங்-க்கு தான் தேவைப்படுகின்றது. ஆகவே எம்.பி.பி.எஸ் மாணவர்களின் படிப்பு இதனால் பாதிக்கப்படாது. இருந்தாலும் கூட ஒரு உத்தரவு போட்டிருக்கிறோம். எந்தெந்தக் கல்லூரிகளில் ஸ்பெஷல் கருவிகள் இருக்கின்றனவோ அந்தக் கல்லூரிகளுக்கு, எந்தக் கல்லூரிகளில் அக்கருவிகள் இல்லையோ அக்கல்லூரியின் மாணவர்கள் வந்து அங்கே பார்ப்பதற்கும் அதன்படி 15 நாட்கள் அங்கே பயிற்சி கொடுக்கவும் ஏற்பாடு செய்யவேண்டும் என்று உத்தரவு போட்டிருக்கிறோம். ஆனால் எல்லாக் கல்லூரிகளிலும் அப்படி கருவிகளை எல்லாம் கொண்டு வர வேண்டும் என்றால் கோடிக்கணக்கான ரூபாய் செலவாகும். அந்த அளவுக்கு நம்மால் செலவழிக்க முடியுமா என்பதை பார்க்க வேண்டும். அண்மையில் மத்திய அரசு கூட ஒரு கைட்லைன்ஸ் கொடுத்திருக்கின்றது. பிரைம் மினிஸ்டர் அவர்கள் ஒருகைட்லைன்ஸ் கொடுத்திருக்கிறார்கள். எல்லா மருத்துவக் கல்லூரிகளிலும் எல்லாப் பிரிவுகளும் இருக்கவேண்டும் என்ற தேவையில்லை. அவற்றை ஸ்டேகர் செய்து ஒரு இடத்தில் சில பிரிவுகளுக்கான கருவிகள், இன்னொரு இடத்திலே இன்னொரு பிரிவுகளுக்கான கருவிகள் என்று வைத்து எக்ஸேஞ்ச் ஆஃப் நாலெட்ஜ் என்ற வகையிலே செய்துகொள்ளலாம் என்று கூட யோசனை சொல்லி இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்து கொள்கிறேன்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் எல்லாவற்றிலும் இந்த மாதிரியான கருவிகள் இருக்கவேண்டிய தேவையில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். இது கொஞ்சம் ஆச்சரியப்பட வேண்டிய விஷயம். கோவை மருத்துவக்கல்லூரி மருத்துவமனை என்பதற்கு அதற்குப் பக்கத்திலே உள்ள மாவட்டத்தில் உள்ள மாணவர்கள் கூட வந்து படிக்கக்கூடிய ஒரு பெரிய சென்டர். சென்னை, மதுரை, தஞ்சாவூர் ஆகியவற்றைப் போல் கோவையும் ஒரு பெரிய பிரிவாகும். அப்படிப்பட்ட ஒரு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலே புற்றுநோய்ப்பிரிவு ஏற்படுத்தவில்லை. என்றால் அந்த மாணவர்கள் சென்னைக்கோ அல்லது மதுரைக்கோ, தஞ்சைக்கோ தான் செல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். தனியார் மருத்துவமனைகளில அவர்களைக் கொண்டுபோய் நிறுத்தி அவர்களைப் பயிலச்செய்யக்கூடாது. அது அரசின் நிலைக்கே கெடுதலாகும். இந்த நிலலயிலே அங்கே புற்றுநோய்ப் பிரிவு ஏற்படுத்தப்படாமல் இருப்பதை உடனடியாகக் கவனித்து இந்த வருஷமே நடவடிக்கை எடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் கருணை கூர்ந்து முன்வந்து நடவடிக்கை எடுப்பாரா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே' மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சரியாகப் புரிந்துகொள்ள வில்லை என்று கருதுகிறேன். தேவையில்லை என்று நான் சொல்லவில்லை. ஆனால் அது இப்போது இயலாத காரியம். நம்முடைய நிதிநிலைமையைப் பார்த்தால் இயலாது. எனவே நான் உடனடியாகச் செய்ய இயலாது என்று சொன்னேன்

	1980.	1981.	Up to March 1982
Total number of patients treated for cancer.	1650	1750	582

டீப் எக்ஸ்ரே யூனிட்ஸ், ரேடியம் நீடில்ஸ் எல்லாம் இருக்கின்றன. இருந்தாலும் கான்ஸர் இலாகா என்று சொல்லக் கூடிய அளவிற்கு அந்தஸ்து இல்லை என்றுதான் அர்த்தம். திரு. ரமணி அவர்கள் ஒரு முக்கியமான கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். உடனடியாக அதைக் கொண்டு வர ஏதாவது உத்தேசமுண்டா என்று.

அந்தக் குறிப்பை மட்டும் நான் படித்துவிடுகிறேன்:

The Director of Medical Education has also stated that according to the specifications of the radium protection division of the Bombay Atomic Research Station, Bombay, plans and estimates were called for from the Public Works Department. Model plans were received from the Chief Architect, Public Works Department for construction of new ward and buildings to start a Cobalt unit as well as cancer ward in Coimbatore Medical College Hospital.

The Director of Medical Education has stated that steps have been taken to get the permission from the Baba Atomic Research Centre to approve the site and plan and further action will be taken on receipt of approval.

இது ஓரளவு திரு. ரமணி அவர்களுக்கு ஆறுதல் தரக்கூடிய செய்தியாகும். இதை ஆரம்பிக்கவேண்டுமென்றால் பாபா அட்டமிக் ரிசர்ச் சென்டர் வந்து பார்த்து க்ளியரன்ஸ் கொடுத்தால்தான் செய்யமுடியும். அதற்காக நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

போக்குவரத்துக் கழகங்களுடன் பொறியியல் கழங்ககளை இணைக்கும் திட்டம்.

*வினா எண்.747—**திரு.இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு போக்குவரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழக அரசு அனைத்து போக்குவரத்துக் கழகங்களுடன் தமிழக அரசு பொறியியல் கழகங்களை இணைக்கும் செயற் குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பரிசிலனையில் உள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி: பொறியல் கழகங்களை போக்குவரத்துக் கழகங்களுடன் இணைப்பதால் என்னென்ன நன்மைகள் கிடைக்கும்? இதனால் அங்கே பணி புரியும் ஊழியர்களுக்கு பலன் உண்டா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: இப்போதே அதில் பணியாற்றி வருகிற ஊழியர்களுக்கு நன்மை இருந்துகொண்டுதானிருக்கிறது. போக்குவரத்துக் கழகங்களோடு இணைப்பதால் தனியான நன்மை கிடைக்குமா? கிடைக்காதா என்று சொல்லமுடியாது. அவற்றை போக்குவரத்துக் கழகங்கள் ஆய்ந்து கொண்டிருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி: தனியாக இயங்கும் கழகங்களை இப்படி இணைப்பதால் வங்கிகளிலிருந்து அந்தக் கழகங்கள் பெறும் கடன் வசதி பாதிக்கப்படுமா? ஆம் எனில், இந்தக் குறையைப் போக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: இப்போது தனியாக ஒரு கழகமாக வைத்து தேவையான கடன்களைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஒன்றாக வைப்பதால் போக்குவாத்துக் கழகத்தோடு இணைத்து அதோடு சேர்த்து கடன் பெற வேண்டியிருக்கிறது. தேவையானதைப் பெறுவதில் தடை இருக்காது என்றுதான் கருதுகிறேன்.

திரு. தி. அன்பழகன்: தற்போது எந்தெந்த போக்குவரத்துக் கழகங்களுடன் இந்தப் பொறியியல் கழகங்கள் இணைக்கப் பட்டுள்ளன? பொறியல் கழகங்கள் இல்லாத போக்குவரத்துக் கழகங்கள்தனியார் நிறுவனங்களிடம் பஸ்பாடிகட்டும் நிலையைத் தவிர்க்க போக்குவரத்துக் கழகங்களுக்கு அரசு ஆணையிடுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தற்போது ஐந்து போக்குவரத்துக் கழகங்களில், பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் பொறியியல் கழகம் இயங்கி வருகிறது, மதுரை பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தில் இயங்கி வருகிறது, அண்ணா போக்குவரத்துக் கழகத்தில் இயங்கி வருகிறது, சோழன் போக்குவரத்துக் கழகத்தில் இயங்கி வருகிறது, சேரன் போக்குவரத்துக் கழகத்தில், இப்படி ஐந்து கழகங்களில் பொறியியல் கழகங்கள் இயங்கி வருகின்றன. தனியார்களிடம் பேருந்துகளுக்கான பாடிகள் கட்டவேண்டிய சூழ்நிலை இப்போது அதிகமாகயில்லை. காரணம், வேறு போக்குவரத்துக் கழகங்களுக்கும் இந்த ஐந்து பொறியியல் கழகங்கள் பாடி கட்டிக் கொடுக்கத் தயாராயிருக்கிறார்கள். திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் மட்டும் வெளியே கூண்டு கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதைக் கூட விரைவில் மாற்ற அரசு தீவிர நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

திரு. கோவைத்தம்பி: இப்போது போக்குவரத்துக் கழகங்களோடு இணைக்கப்பட்ட பொறியியல் கழகங்களிடமிருந்து டாக்ஸியானாலும் சரி, ஆட்டோவானாலும் சரி, லாரிகளானாலும் சரி, சான்றிதழ் பெறக்கூடிய ஒரு நிலையை அமைச்சர் அவர்கள் ஆலோசனை செய்து உருவாக்குவார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: போக்குவரத்துக் கழகங்களும் பொறியியல் கழகங்களும் ஒழுங்காகயிருந்து கொண்டிருக்கிறது. அதிலே குறைபாடுகள் ஏற்படும் வகையில் இவைகளுக்கெல்லாம் சான்றிதழ்கள் கொடுக்க நடவடிக்கைகள் எடுக்க நாங்கள் தயாராகயில்லை.

Central Subsidy for the H.S.D. Oil consumed by the Public Transport

*Q.No.748 : THIRU R. UMANATH: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether the Government have any proposal to seek a subsidy from the Centre on the H.S.D. Oil consumed by the public transport; and

(b) if so, the details there of?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) ஆம்.

(ஆ) இம்மாநில அரசு போக்குவரத்துக் கழகங்களுக்குத் தேவைப்படும் டீசலை சற்று விலைகுறைத்தோ அல்லது சற்று குறைந்த சுங்க வரியுடனோ அளிக்கும்படி கேட்ட இம்மாநில அரசின் கோரிக்கையை மத்திய அரசு நிராகரித்து விட்டது.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரத்தை நீட்டிக்கின்றேன்.

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நாம் வெளிநாட்டிலே இருந்து இறக்குமதி செய்கின்ற டீசல், பெட்ரோல் ஆகியவைகள் நமக்கு வருகின்றபோது, மத்திய அரசாங்கம் டீசலை லிட்டர் ஒன்று ரூ. 3 சில்லறைக்கும், பெட்ரோல் லிட்டர் ஒன்று ரூ. 6 சில்லறைக்கும் விற்கிறார்கள். ஆனால் உண்மையிலேயே, இறக்குமதி செய்கிறபோது, வெளிநாடுகளிலே விலையேற்றம் செய்த பிறகும்கூட, டீசலின் விலை லிட்டர் ரூ. 1.65 என்றும், பெட்ரோல் லிட்டர் ரூ. 1.61 என்றும் ஆகிறது. ஆகவே, நான் கேட்க விரும்புவதெல்லாம், இந்த லெவலிலே அங்கே விலையிருக்கும்போது, இங்கே மத்திய அரசாங்கம் நமக்கு விலையைக்கூட்டிக் கொடுக்கிறார்கள். அதனால், நாம் பாதிக்கப்படுகிறோம், கட்டண உயர்வின் காரணமாக, மாநில அரசையும், நம்முடைய கஜானாவையும், மக்களையும் சுரண்டுவதற்காக சென்ட்ரல் கவர்ன்மென்ட் இப்படி விலையை உயர்த்தி வருகின்றபோது, அந்தச் சுமை மக்கள் தலையிலே விழுகிறது. அதனால், மக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை ஒரு புரட்டஸ்டாக மத்திய அரசுக்கு மாநில அரசு தெரிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி; தலைவர் அவர்களே, இதையெல்லாம் உணர்ந்துதான், இதற்கு முன்பே 2, 3 முறைகள் இதைப் பற்றி கடிதம் எழுதியிருக்கிறோம். அதற்குமேல், அவர்களுக்கு இருக்கும் சங்கடமான சூழ்நிலைகளை அவர்கள் நமக்கு எழுதியிருக்கிறார்கள். இதற்குமேல் நாம் எப்படிச் சொல்வது என்று தெரியவில்லை. இந்த வகையில் நாம் அவர்களுக்குக் கடிதம் மூலமும், சந்திக்கின்றபோதும் சொல்கிறோம். அதற்கு மேல் ஒன்றும் செய்வதற்கில்லை.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, எவ்வளவோ எழுதியும் பலனளிக்கவில்லை, இனிமேல் நாம் என்ன செய்வது என்று அமைச்சர் அவர்கள் பதில் கூறியிருக்கிறார்கள். தற்போது பஸ் கட்டணத்தைப் பொறுத்தவரைக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மானியத்திலே பதில் கூறுகின்றபோது, தற்போது கட்டண உயர்வு இல்லை என்று சொன்னார்கள். இருந்தாலும், ஐ.எம்.எப். சில கன்டிஷன்களைப் போட்டு, அதை அச்சடிட் செய்திருக்கிறார்கள். அதிலே அவர்கள் குறிப்பிட்டிருக்கிறபடி, உள்நாட்டு கச்சா எண்ணெய் டன் ஒன்று ரூ. 391 என்றிருந்ததை, ரூ. 1187 என்று உயர்த்தியிருப்பதாகவும், அது இன்னும் உயரப்போகிறது, அந்த அளவுக்கு ஐ.எம்.எப்—க்கு கமிட்மென்ட் செய்திருக்கிறார்கள். இதை இன்னும் அதிகமாக்க வேண்டுமென்று சொல்லும்போது, அந்தச் சூழ்நிலையிலே நீங்கள் பஸ் கட்டணத்தை உயர்த்தப் போகிறீர்களா? அல்லது வேறு என்ன செய்யப் போகிறீர்கள்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, நாம் தற்போதுக் பேருந்து கட்டணங்களை உயர்த்தப் போவதில்லை என்று மானிய கோரிக்கைக்கு பதில் சொல்லும்போது சொல்லியிருக்கிறேன். ஆனால், மத்திய அரசாங்கம், பேருந்து கட்டணத்தை உயர்த்தாததால்தான் நஷ்டம் ஏற்படுகின்றது என்பதை நமக்கு அறிவுரையாகக் கூறியிருக்கிறார்கள். இருந்தாலும், மக்கள்மீது சுமையை மேலும் சுமத்தக்கூடாது என்ற அடிப்படையிலேதான், கொஞ்சம் இதைத் தள்ளிப் போட்டுக் கொண்டு வருகிறோம். (குறுக்கீடு) சட்டமன்றம் மேலும், மீண்டும் கூடாமல் இருக்கப் போவதில்லை. அப்போது மீண்டும் இதைப்பற்றி விவாதிக்கலாம். அல்லது இப்போதே இதைப் பற்றி விவாதிக்க வேண்டுமென்றாலும், அதைப்பற்றி பேசி முடிவு செய்யத் தயாராக இருக்கிறோம். அதையெல்லாம் எதிர்பார்த்து நாங்கள் இதைச் செய்யவில்லை. ஆனால், எங்களுக்கு இருக்கின்ற எண்ணமெல்லாம், மக்கள் மீது இதை மேலும சுமத்தக் கூடாது என்பது தான். அதனால், அரசாங்கமே இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்வதாக இருந்தாலும், மத்திய அரசாங்கத்தை டீசல். பெட்ரோல் ஆகியவைகளின் விலையைக் குறைக்க வேண்டுமென்று வற்புறுத்தியும், அவர்களுக்கு இருக்கின்ற சங்கடமான சூழ்நிலையை அவர்கள் சொல்லு

கிறார்கள். ஆகவே, அந்த அளவுக்கு மாநில அரசு இதற்கான முயற்சிகளைச் செய்து கொண்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதை ஒப்புக்கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இந்த டீசல், பெட்ரோல் விலையைக் குறைப்பது பற்றி மத்திய அரசிடம் எவ்வளவோ வற்புறுத்தியும் அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இந்தியாவில் பெட்ரோலிய கச்சாப் பொருள்கள் 60 % தான் இறக்குமதி செய்யப்படுகின்றது. மீதி 40% பெட்ரோலிய கச்சாப் பொருள்கள் உள்நாட்டிலேயே கிடைக்கிறது. எனவே உள்நாட்டிலே கிடைக்கக்கூடிய அந்த 40 சதவீதம் பெட்ரோலிய கச்சாப் பொருள்களை இம்மாதிரியான அரசு போக்குவரத்துக்கு வேண்டிய டீசல், பெட்ரோல் போன்ற பொருள்களை சகாய விலையில் கொடுக்க வேண்டும் என்று மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொல்லியபடி இதிலே நீங்கள் குறைந்த விலையிலே கொடுக்கவேண்டுமென்றும் அல்லது வரியைக் குறைத்துக்கொடுக்க வேண்டுமென்றும் நாம் எழுதியிருக்கிறோம். மத்திய அரசாங்கத்திற்கு, கொடுக்கவேண்டுமென்ற எண்ணம் இருந்திருந்தால் 10 சதவீதம் அளவிலே கொடுத்திருக்க முடியும். மீண்டும் எழுதுவதிலே நமக்கு ஒன்றும் சங்கடம் கிடையாது, அதே பதில் தான் மீண்டும் வரும். இதைக் குறிப்பிட்டுக் கோடிட்டுக் காட்டி எழுதத் தயாராக இருக்கிறோம்.

சென்னையில் மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சலுகைக் கட்டண பயணச் சீட்டுகள்.

*வினா என் 749—திரு. ரமணி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் மாணவர்களுக்குச் சலுகை கட்டண பஸ் பாஸ் வழங்கப்பட்டுள்ளதைத் தவறாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்ற புகார் அரசுக்கு கிடைத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்த விவரங்கள் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) ஆம்

(ஆ) மாணவர்களுக்கான சலுகைக்கட்டண பயணச் சீட்டுகள் பின்வரும் முறைகளில் தவறாகப் பயன்படுத்தப்படுகின்றன

(1) மாணவர் அல்லாத ஏனையோர் சிலர் மோசடியாகவோ பொய்யாகவோ மாணவர்கள் என்கிற அத்தாட்சி (பற்ற மாணவர் சலுகைக் கட்டண பயணச் சீட்டைப் பயன்படுத்தி வருகின்றனர்,

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: ஏறத்தாழ நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் பேருந்துகள் சலுகைக் கட்டணத்திலே ஓடிக் கொண்டிருக்கின்றன. மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கிறபோது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே அவர்களுக்குத் தனியாக சலுகை அளிக்க வேண்டிய தேவையில்லை என்று கருதுகிறேன்.

லாரிகளுக்கு வாடகை நிர்ணயிக்கும் திட்டம்.

*வினா எண் 750—திரு வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலுள்ள லாரிகளுக்கு வாடகையை நிர்ணயம் செய்யும் செயற்குறிப்பு அரசிடம உண்டா?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி: இல்லை. எனினும் தற்போது நடைமுறையில் உள்ள லாரி வாடகையைப் பற்றி ஆராய ஒரு குழு அமைக்கவேண்டும் என மதுரை மாவட்டம் தேனியிலுள்ள வாணிபக் கழகம் கோரிக்கை விடுத்துள்ளது. இக்கோரிக்கை பரிசீலனையில் உள்ளது.

(முற்பகல் 10.10)

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, லாரி உரிமையாளர்களிடமிருந்து கோரிக்கை வந்திருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். உண்மையில் நடைமுறையில் லாரி உரிமையாளர்கள் முறையான கட்டணங்களை வாங்குவதில்லை. அவர்களுடைய நோக்கத்திற்கு வாங்குவதாகத் தான் இருந்து வருகிறது. ஆகவே குறிப்பிட்ட கட்டணத்தை மாநிலம் முழுமைக்கும் நிர்ணயம் செய்ய அரசு பரிசிலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, லாரி உரிமையாளர்களிடமிருந்து கோரிக்கை வரவில்லை. வாணிப கழகத்திலே இருந்து கோரிக்கை வந்ததாகத்தான் சொன்னேன். எந்த பகுதியிலே தவறு நடக்கிறது என்பதை ஆராயாமல் இதற்கு தனியாக வாடகை எவ்வளவு என்றுநிர்ணயிக்க முடியுமா என்பதை யோசிப்போம். நடைமுறையிலே பார்க்கிறபோது அது சாத்தியப்படாது என்ற கருத்து இருக்கிறது. ஆகவே பரிசிலித்து முடியுமானால் அதைச் செய்வதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறது.

திரு. வே. இரா. ஜெயராமன்: தலைவர் அவர்களே, ஊருக்கு ஊர் லாரி கட்டணங்களில் மாறுபாடுகள் இருக்கிறதால், லாரி சொந்தக்காரர்களைக் கொண்டு, அங்கே இருக்கிற கமிஷன் கடைக்காரர்களைக் கொண்டு, விவசாயிகளைக் கொண்டு ஒரு கமிட்டியை ஏற்படுத்தி வாடகையை நிர்ணயிப்பதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, அரசாங்கம் முதலில் ஆய்ந்து இதைச் செய்ய முடியுமா, எப்படிச் செய்வது என்று வழிவகைகளை செய்த பிறகு அங்கே இருக்கிற பிரதிநிதிகளை எல்லாம் அழைப்பது பொருத்தமாக இருக்கும். ஆரம்பத்திலேயே போட்டு விட்டால் இதிலே முடிவு ஏற்படாது என்று கருதுகிறேன்.

உடல் ஊனமுற்றோருக்கு அரசுப் பணிகளில் ஒதுக்கீடு செய்யும் திட்டம்.

*வினா எண் 751—திரு, கு. பா. பழனியப்பன்: மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உடல் ஊனமுற்றோருக்கு அரசுப்பணிகளில் ஒரு குறிப்பிட்ட சதவீதம் ஒதுக்கிட இந்த உடல் ஊனமுற்றோர் ஆண்டில் அரசு ஆணைப் பிறப்பிக்குமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: அரசுப் பொதுப் பணிகளிலும் கல்வி நிலையங்களிலும் எல்லாவிதமான நிர்வாகங்களிலும் (அரசு உள்ளாட்சி மற்றும் நிதியுதவி பெறும் நிர்வாகங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களையும் சேர்த்து தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், பிற்பட்டோர்க்கு எங்கெங்கு ஒதுக்கீடு விதிமுறை கடைபிடிக்கப்படுகிறதோ அங்கெல்லாம்) எழும் காலியிடங்கள்/இடங்களில் 3 விழுக்காடுகளை உடல் ஊனமுற்றோர்க்கு ஒதுக்கீடு செய்யும்படி சமூகநல அரசாணை பல்வகை எண். 602, நாள் 14–8–1981 மூலம் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. கு. பா. பழனியப்பன்: தலைவர் அவர்களே, அந்த அரசாணையுடைய அடிப்படையிலே கண்ணற்றோர், காது கேளாதவர்களுக்குச் சென்ற ஒரு ஆண்டில் கொடுக்கப்பட்ட வேலைகள் எத்தனை என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவர் அவர்களே, சென்ற ஆண்டுதான் மூன்று விழுக்காடு என்று ஒதுக்கீடு செய்துள்ளது. படிப்படியாக இதைச் செய்து கொண்டு வருகிறார்கள்.

திரு. கு. பா. பழனியப்பன்: தலைவர் அவர்களே, இந்த உடல் ஊனமுற்றவர்களில் முழுமையாக கண் தெரியாதவர்கள், காது முழுமையாக கேளாதவர்கள் அல்லது கை முடமானவர்கள், கால் நொண்டியாக உள்ளவர்கள் என்று இப்படி பல்வேறு உடல் ஊனமுற்றவர்கள் இருக்கிற காரணத்தால் இதிலே முழுமையாக தெரியாதவர்களுக்கு அதிகப்படியான ஒதுக்கீடு தருவதற்கு முன் வருமா? அதேபோல கண் தெரியாதவர்களுக்கு ... ஒரு தொழிற்பேட்டை அமைத்து அவர்கள் வாழ வழி ... செய்ய அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவர் அவர்களே, ஒவ்வொருவருக்கும் ஒரு விழுக்காடு என்ற விதத்திலே அவர்களுக்கு ஒதுக்கீடு செய்து அதன் மூலம்வேலை வாய்ப்பு அளித்து வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்து நல்ல கருத்தாக இருக்கிறது. அதுபற்றி அரசு பரிசீலித்து எப்படிச் செய்ய முடியும் என்பதை ஆராயும்.

திரு. ப. தீர்த்தராமன்: தலைவர் அவர்களே, இந்த ஒதுக்கீடு தனியார் துறையிலும் அளிக்க அரசு முன வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவர் அவர்களே, தனியார் துறையிலே அவர்களுக்கு இந்த ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

திரு. எஸ் ஆண்டித் தேவர்: தலைவர் அவர்களே, உடல் ஊன முற்றவர்களுக்கு மூன்று விழுக்காடு வேலை வாய்ப்பு சென்ற ஆண்டு முதல் கொடுக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். சென்ற ஆண்டு மதுரை மாவட்டத்திலே அப்படி கொடுக்கப்பட்ட 14 ஊனமுற்றவர்களை வேலையிலிருந்து நீக்கியிருக்கிறார்களே, அவர்களுக்கு வேலை கொடுக்க அரசு முன் வருமா? அந்த மாவட்ட கழகத்திற்கு உத்தரவிட முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவர் அவர்களே, அது பற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்க இயலும்.

ஊனமுற்றோர்களுக்காக தொழிற்பள்ளிகள் மற்றும்
பள்ளிகளை மாவட்ட ரீதியாக அமைக்கும் திட்டம்.

*வினா எண். 752— திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உடல் ஊனமுற்றோர்கள் தொழிற் பள்ளிகள்—பள்ளிகள் மாவட்ட ரீதியாக அமைக்கும் யோசனை உண்டா?

(ஆ) ஆம் எனில், இப்பணிக்காக மாவட்ட ரீதியாக எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) தமிழகத்தில் ஊன முற்றோர்களுக்காக தொழில் பள்ளிகளை மாவட்ட ரீதியாக அமைக்கும் யோசனை தற்போது ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும் காது கேளாதவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக மதுரையிலும் கிண்டியிலும் தொழிற் பயிற்சி நிறுவனத்தில் பொருத்துபவர் மற்றும் மின் கம்பியாள் தொழில்களில் தனிப்பிரிவு ஒன்றை அரசு ஏற்படுத்தியுள்ளது. மேலும் தமிழ் நாட்டில் பெரியார் மற்றும் செங்கல்பட்டு ஆகிய இரு மாவட்டங்களைத் தவிர மற்ற எல்லா மாவட்டங்களிலும் பார்வையற்றோர் பள்ளிகள் இயங்குகின்றன. இதைத் தவிர எல்லா மாவட்டங்களிலும் காது கேளாதோர் பள்ளிகளும் உள்ளன. மேலும் சென்னை, மதுரை ஆகிய இரு மாவட்டங்களிலும், முடவர்களுக்காக ஒவ்வொரு பள்ளியும் சித்த சுவாதீனமுற்றோர்க்கென ஒவ்வொரு பள்ளியும், தஞ்சை மாவட்டத்தில் மட்டும் தொழுநோய் பிடித்தோருக்கான பள்ளி ஒன்றும், மற்றும் சென்னையில் இரு ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளும், உடல் ஊன முற்றோருக்காக இயங்குகின்றன.

(ஆ) 1981-82 ஆம் ஆண்டில் இப்பள்ளிகளுக்காக ரூ.33.35 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டது.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கின்றபொழுது பள்ளிகள் இருக்கின்றன, பயிற்சிகள் கொடுக்கப்படுகின்றன என்று சொன்னார்கள். ஆனால், கொடுக்கப்பட்ட பிறகும் மறுவாழ்வு அளிக்கும் வகையில் உத்தியோகம் கொடுக்கப்படவில்லை, ஒரு சிலருக்கு கொடுக்கப்பட்டு, இரண்டு மூன்று மாதங்களில் அவர்கள் நீக்கப்பட்டும் இருக்கிறார்கள். இவைகள் அரசுக்குத் தெரியுமா? வருங்காலத்திலே உடனடியாக நடவடிக்கை எடுத்து, இப்படி நீக்கப்பட்டவர்களுக்கு உத்தியோகங்கள் கொடுக்க அனுமதிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, பள்ளியில் படித்த மாணவர்கள் அனைவருக்கும் உத்தியோகம் கொடுத்துக் கொண்டு வருவதுதான் இந்த அரசினுடைய கொள்கையாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் படித்த மாணவர்கள் வேலை வாய்ப்பு இன்றி கஷ்டப்படுவதைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். அதைப் பற்றிய விவரம் ஒன்றும் இல்லை. யார் என்று அவர்கள் என்னிடம் குறிப்பிட்டால், அவர்களுக்கு வேலை வாய்ப்பைக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளை அரசு செய்யும்.

செல்வி ப. விசயலட்சுமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 1981–82 ஆம் ஆண்டில் உடல் ஊன முற்றோர்கள் தொழில் பள்ளிகளின் மூலம் எத்தனை பேர்கள் பயன் அடைகிறார்கள் என்பதையும் ஒரு மாதத்திற்கு உணவுக்காக எவ்வளவு தொகை வழங்கப்படுகிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, 198 -82 ஆம் ஆண்டு 4,400 மாணவர்கள் பயன் அடைந்துள்ளனர். அவர்களுக்கு உணவுக்காக, மாதம் ரூ 36 ஒதுக்கப்பட்டுள்ளது.

தீவிரகால்நடை அபிவிருத்தி செயற்கைமுறை கருவூட்டும் பணியை விரிவாக்கும் திட்டம்.

*வினா எண் 753—திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

தமிழகம் முழுமையும் தீவிர கால்நடை அபிவிருத்தி செயற்கை முறை கருவூட்டும் பணி விரிவாகச் செய்யப்பட திட்டம் ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தற்சமயம் ஏதும் இல்லை.

திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தீவிர கால்நடை அபிவிருத்தி செயற்கை முறை கருவூட்டும் பணியை அரசு எந்தத் திட்டத்தின் அடிப்படையில் செயல் படுத்துகிறது? தமிழகம் முழுவதும் கால்நடை அபிவிருத்தி செயற்கை முறை கருவூட்டும் பணி அமுல்படுத்தப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தீவிர கால்நடை அபிவிருத்தி திட்டம் விஞ்ஞான ரீதியான இனவிருத்தி வசதிகள், நோய் தடுப்பு மற்றும் சிகிச்சை பணிகள் ஆகியவற்றை அளித்து பால் உற்பத்தி பெருக்குவது, தீவிர கால்நடை அபிவிருத்தி திட்டத்தின் நோக்கமாகும். ஒவ்வொரு திட்டமும் 50,000 பசுக்கள் மற்றும் எருமைகள் கொண்ட 50 கால்நடைக் கிளை நிலையங்களில் செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டம் தமிழகத்தில் 9 இடங் களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. திருச்சி, மதுரை, தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருநெல்வேலி. வாடிப்பட்டி, உசிலம்பட்டி, தாம்பரம் மற்றும் பண்ருட்டி ஆகிய இடங் களில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் எத்தனை இடங்களில் இந்தத் திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது? மேலும் தஞ்சை மாவட்டத்தில் இந்தத் திட்டத்தை விரிவாக்கும் எண்ணம் அரசுக்கு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் மன்னார்குடியைத் தவிர மற்ற எல்லா இடங்களிலும் தீவிர கால்நடை அபிவிருத்தி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நிதி ஒதுக்கீட்டைப் பொறுத்து ஒவ்வொரு ஆண்டும் படிப்படியாக அந்தத் திட்டம் செயல்படுத்தப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(2) தகவல் கோரல்

(அ) காவேரி நதி நீர் பிரச்சினை.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குக் காலையிலே 11-00 மணிக்கு டெல்லியிலே மத்திய நீர்ப்பாசனத் துறை அமைச்சர் திரு. கேதர் பாண்டே தலைமையிலே நீண்ட நெடுநாட்களாகத் தீர்மானிக் கப்படாமல் இருக்கிற காவேரி நதி நீர் பிரச்னை சம்பந்தமாக.............

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பொழுது காலை 10.19 மணிதான் ஆகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன்: தென் மாநில முதலமைச்சர்கள் கலந்து கொள்கின்ற மாநாடு டெல்லியிலே கூடுவதாக செய்தி வந்திருக்கிறது. ஆனால், தமிழகத்தின் சார்பிலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்து கொள்ளவில்லை யென்றும் அவருக்கு முக்கியமான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைப் பணிகள் இருக்கின்ற காரணத்தினாலே கலந்து கொள்ளவில்லையென்றும் இன்றைக்குக் காலையிலே பத்திரி கையிலே செய்திகள் வந்திருக்கின்றன.

(முற்பகல் 10-20)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பத்திரிகைச் செய்தியை வைத்துப் பேசிக் கொண்டிருக்க வேண்டாம்.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவரவர்களே, உங்கள் மூலமாக நான் இந்த அரசாங்கத்திடம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு அந்த மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சரவர்கள கலந்து கொள்ள இயலாவிட்டாலும் வேறு அமைச்சர், தலைமைச் செயலாளர் கலந்து கொண்டிருக்கலாம்.

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1982 ஏப்ரல் 3

இதைத் தள்ளிப் போட்டுக் கொண்டே போகின்ற காரணத்தினால் தமிழகத்தின் எதிர்காலம் பாதிக்கப்படக் கூடிய அளவிற்கு இருக்கின்ற காரணத்தினாலும், அரசுத் தரப்பிலே ஏன் கலந்து கொள்ளவில்லை என்ற விளக்கத்தை உங்கள் மூலமாக அரசிடமிருந்து தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பொது முக்கியம் வாய்ந்த பிரச்னைகள் குறித்து எதிர் வரிசையில் முன வரிசையிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர்கள் கேட்கலாம் என்று நாம் ஏற்கனவே தீர்மானித்திருக்கிறோம். அந்த அடிப்படையிலேதான் மாண்புமிகு சித்தன் அவாகள் இந்தப் பிரச்னையை எழுப்பியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். இருந்தாலும் அவர்கள் முன் வரிசையில் இல்லையே என்று நாம் அதைப் புறக்கணித்துவிடக் கூடாது. (குறுக்கீடு) அதாவது, எழுப்புவது எப்படி நியாயம் என்பதற்காகச் சொன்னேனே தவிர வேறு ஒன்றும் அல்ல.

இன்றைய தினம் காவேரி சம்பந்தமாக டெல்லியில் பேச்சு வார்த்தைகள் நடைபெறுவதாக இருந்தது. நாமும் கலந்து கொள்வதாக இருந்தோம். காவேரிப் பிரச்னை விரைவில் தீர்க்கப்பட வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தினுடைய கொள்கை. பல்வேறு அரசியல் கட்சிகளும் தமிழகத்தைப் பொறுத்தவரையில் வற்புறுத்தி வருவதும் அதுவே ஆகும். ஆனால் இன்று ஏற்பட்டுள்ள சூழ்நிலையில் எந்த உடன்பாட்டிற்கும் வரக்கூடிய நிலையில் கேரள அரசிலே ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சரவை இல்லை.

அதோடு மட்டுமல்லாமல் மாநிலச் சட்டமன்றக் கூட்டத் தொடர் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இரண்டு மாநிலங்களிலேயும் நடைபெற்றுக் கொணடிருக்கின்றன. சான்றாக, நம்முடைய சட்டமன்றக் கூட்டத்திலேயே எந்த நேரத்தில் வாக்கெடுப்பு கேட்பார்கள் எதிர்க் கட்சியினர் என்பதே தெரியாத வண்ணம் திடீரென்றுகூட இந்த வாக்கெடுப்புகள் எல்லாம் கேட்கக்கூடிய நிகழ்ச்சிகள் நடைபெறுவதை அண்மையிலே நாம் பார்த்திருக்கிறோம். இந்தச் சூழ்நிலையில் சட்டமன்றக் கூட்டத்தொடர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொழுது இன்றைக்குப் பதில் நாளை வைத்துக் கொள்ளலாமா, ஏனென்றால் நாளைய தினம் ஞாயிற்றுக்கிழமையாக இருக்கிறது என்று நம்முடைய அரசின் சார்பிலே கேட்கப்பட்டது. கர்நாடக அரசுக்கும்-அவர்களுக்கும் சட்டமன்றக் கூட்டத் தொடர் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகையினாலே இரு சட்டமன்றக் கூட்டத்தொடர்களும் முடிவுற்ற பிறகு, ஒரு நாளைக் குறிப்பிட்டு அதிலே இந்தப் பேச்சுவார்த்தைகளை வைத்துக் கொள்ளலாம் என்ற வகையிலே இப்பொழுது அது தள்ளிப் போடப்பட்டிருக்கிறது.

1982 ஏப்ரல் 3]

டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் அளித்த பதிலில் கேரளத்தில் ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் அரசு இல்லாத சூழ்நிலையில் இப்பொழுது இந்த மாநாட்டில் கலந்து கொள்வது அவ்வளவு நல்லதல்ல என்ற கருத்தை அறிவித்தார்கள். அப்படியானால் அடுத்த காவேரி பிரச்னை பற்றிய கூட்டம் கேரளத்திலே அரசு உருவாகி-மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு உருவாகிற வரையிலே காத்திருக்கப் போகிறதா என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

இங்கே ஓட்டெடுப்பு திடீரென்று வந்து விடுகிற காரணத்தால் என்று சொன்னார்கள். முதலமைச்சரவர்களே கொண்டு வந்த ஒரு சட்ட முன்வடிவிற்கு ஓட்டெடுப்பு வந்தபொழுது முதலமைச்சரவர்களோ, இந்த அவையிலே முந்தாநாள் இல்லை என்று நான் மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கர்நாடகத்திலேயும் இங்கும் சட்டசபை நடப்பதாகச் சொன்னார்கள். ஆனால் பத்திரிகையில் கர்நாடக முதலமைச்சர் டெல்லியிலேதான் இதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று செய்தி வந்திருக்கிறது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே. மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள், மற்ற அமைச்சர்கள் ஏன் போகக் கூடாது என்றும் கேட்டார்கள். ஆகவே வாக்கெடுப்பு என்றால் முதலமைச்சர் மட்டுமல்ல, மற்ற அமைச்சர்களும் இங்கே 'இருக்க வேண்டியிருக்கிறது என்பதை எதிர்க்கட்சித் தலைவரவர்கள் உணர்ந்து கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

ஆளுநர் ஆட்சி கேரளத்திலே இருக்கிறது என்பதை நான் குறிப்பிட்டதற்குக் காரணம் 1976 ஆம் ஆண்டு தமிழகத்திலே ஆளுநர் ஆட்சி இருக்கும் பொழுது மத்திய அரசு ஒருவகையான உடன்பாட்டைக் கொண்டுவந்ததாகத் தெரிவித்த கருத்தை நாம் மறுக்கின்ற அடிப்படையே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசு இல்லாதபொழுது ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது என்று நாம் எதை வைத்துக் கூறுகிறோமோ அதே காரணம் நமக்குத் திருப்பிக்கூடச் சொல்லப்படும். அந்த அடிப்படையிலே இதை நாம் கவனிக்க வேண்டி இருக்கிறது என்ற வகையில் குறிப்பிட்டேன்.

(ஆ) காங்கிரஸ் கட்சியின் உபதலைவர்

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவை சம்பந்தப்பட்ட பிரச்சினை. அதிலே உங்களுடைய கைட்லைன்ஸ் தேவை. மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் காங்கிரஸ் கட்சியின் உபதலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். ஆனால் வந்து இங்கே முன்வரிசையில்

[திரு. ரா. உமாநாத்] [1982 ஏப்ரல் 3

உட்காரமாட்டேன் என்கிறார். துணைத் தலைவர் சுந்தரராஜ் அவர்கள் அங்கேயே உட்கார்ந்து இருக்கிறார், இங்கே வந்து உட்காரமாட்டேன் என்கிறார். ஒருவேளை நீங்கள்தான் தடுக்கிறீர்களோ என்று தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் யாரையும் தடுக்கிற மாதிரி இல்லை. எல்லோரையும் முன்னுக்குக் கொண்டு வந்து விடலாம். ஆனால் முன்னாலே இடம் இல்லை. இப்போது தான் திரு. ஹாஜாசெரிப் அவர்கள் கடிதம் கொடுத்திருக்கிறார்கள். இனிமேல்தான் அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இது அவர்கள் கட்சியின் பிரச்சினை.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே. நான் முன்னுக்கு வரவேண்டும் என்பதிலே நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்களுக்கு இருக்கின்ற ஆர்வத்தை நான் வரவேற்கிறேன், அதற்காக நன்றி கூறுகிறேன். அவருடைய ஆசை விரைவில் நிறைவேறும்.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, நான் ஒன்றைத் தெளிவுப்படுத்த விரும்புகிறேன். எந்தக் கட்சியிலே யார் தலைவர், யார் உபதலைவர் என்பது அவர்கள் இன்டர்னல் மேட்டர், ஆனால், ஒன்ஸ் இட் இஸ் டேக்கன்–அந்த ரைட் கொஸ்டின் அவையிலே வருகிறபோது நான் கட்சி பார்க்க மாட்டேன். எந்தக் கட்சியானாலும் அவுசுக்குள்ள ரைட்ஸ் என்கிறபோது I am out for defending. ஒருவேளை அவரை நீங்கள் உட்கார விடமாட்டேன் என்று சொல்லி விட்டீர்களா என்பதற்காகக் கேட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நல்லவேளையாக என்மீது குற்றம் சாட்டியிருக்கிறீர்கள். அதை நான் தாங்கிக் கொள்வேன்.

(இ) உரிமைப் பிரச்சினையை எழுப்ப அனுமதி.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தாங்கள் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு அனுமதி கொடுத்துள்ளீர்கள். அந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானம் சம்பந்தப்பட்ட பொருள் இந்த அவையிலே ஒத்திவைப்புத் தீர்மானமாகக் கொண்டு வந்து விவாதிக்கப்பட்டது என்று பல பத்திரிகைகளில் 20–ந் தேதி செய்தி போடப்பட்டிருக்கின்றது. இது எந்த வகையிலே பொருத்தமானதாக ஆகிறது என்பதும் (குறுக்கீடு) அதேபோல 246 வது விதியின் கீழ் அவையிலே நடந்து கொண்டு இருக்கின்ற பிரச்சினை சம்பந்தமாக மாண்புமிகு பொன்னுரங்கம் அவர்கள் மீது ஒரு உரிமைப் பிரச்சினையைக் கிளப்ப விழைகிறேன்.

1982 ஏப்ரல் 3] [திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்]

20–3–1982 அன்று வடபழனி கோவில் சம்பந்தமாக இந்த அவையிலே பேசிய கருத்தும், இன்று அவர் கவனஈர்ப்பு தீர்மானமாக கொடுத்திருக்கின்ற கருத்தின் அடிப்படையிலும் தவறான தகவல் கொடுத்திருக்கிறார்கள் என்கிற அடிப்படையிலே அவர் மீது உரிமைப் பிரச்சினையை எழுப்ப எனக்கு விதி 246–ன் கீழ் அனுமதி அளிக்கவேண்டும் என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு என்ன பதில் வருகிறது என்று பார்த்து அதற்குப் பிறகு தான் கொடுக்க முடியும். (குறுக்கீடு) வாசகத்திலே என்ன தவறு என்று நான் பின்னாலேதான் கேட்க முடியும்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கேள்வி நேரத்தில் பதில் சொல்கிறபோது * * * என்று சொன்னார்..........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப்பட்டு விட்டன. (குறுக்கீடு) அதைத் தொடர்ந்து ஏதாவது இருந்தாலும் அதுவும் அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப்படும்.

(முற்பகல் 10.30)

3. ஒத்தி வைப்புத் தீர்மானம்.

கூட்டுறவு விவசாய கடன்கள் பாக்கி மின்கட்டண பாக்கி வசூலுக்காக ஜப்தி நடவடிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து ஒத்தி வைப்புத் தீர்மானம்.

திருவாளர்கள் பெ. சு. திருவேங்கடம், எஸ். ஆண்டித் தேவர், ஆர். கிருஷ்ணன், டி. மணி, என். பழனிவேல், எம். ஆறுமுகம், பெ. உத்திராபதி, ஏ. டி. கருப்பையா, உ. சுப்பிரமணியன், கே. கல்லன், ஆர். தியாகராசன், ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான், இரெ. இராசமாணிக்கம், சோ. அழகர்சாமி, எம். அப்பாதுரை, ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன். பி. சுந்தரம், வி. கிருஷ்ணமூர்த்தி, பி. மொக்கையன் இ. முத்தராமலிங்கம், பி. எம். தங்கவேல்ராஜ், என். சங்கரய்யா பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், கு. ரமணி, ஜே. எஸ். இராசு, மு. அம்பிகாபதி, எஸ். சிவசாமி, செ. இராமலிங்கம், எஸ். செல்லமுத்து, வே. ஆர். சுந்தரம், ஜே. ஹேமச்சந்திரன், என். வரதராஜன், என். எஸ். வி. சித்தன், கே. எம். தங்கமணி, அ. ரகுமான்கான்.

** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், திருமதி டி. யசோதா, ஆகியோர்கள், ''தமிழ்நாடு முழுவதும் பல இடங்களில் கூட்டுறவு விவசாயக் கடன்களுக்காகவும், மின்கட்டண பாக்கிக்காகவும், விவசாயிகளிடம் அரசு ஜப்தி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாலும், மின்சக்தி துண்டிக்கப்படுவதாலும், இதனால் போராடும் விவசாயிகள் கைது செய்யப்படுவதாலும் ஏற்பட்டுள்ள நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி திரு. பெ. சு. திருவேங்கடம் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இன்றையதினம் பிரதம கூட்டுறவு கடன் சங்கங்கள் கொடுத்து இருக்கிற கடன்களை வசூலிப்பதிலும், கூட்டுறவு பிரதம நிலவள வங்கிகளின் கடன்களை வசூலிப்பதில் ஜப்தி என்கிற பெயரால், பல்வேறு கொடுமைகள் கிராமங்களிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பல இடங்களில், வட ஆர்க்காடு மாவட்டமானாலும் சரி, தென் ஆர்க்காடு, கோவை திருச்சி போன்ற எல்லா மாவட்டங்களிலுமே, கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த அதிகாரிகள் மட்டும் அல்லாமல், போலிஸ் அதிகாரிகள் பட்டாளத்தோடு அவர்கள் துணையோடு இன்றைய தினம் பல்வேறு கொடுமைகள் விவசாய மக்களுக்கு இழைக்கப் படுகின்ற ஒரு காட்சியை கிராமத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பல்வேறு இடங்களில் விவசாயிகளும், தாய்மார்களும் மறியல் செய்வதும், அவர்களை போலிசார் கைது செய்வதும், பல இடங்களிலே தடியடிப்பிரயோகம் செய்வதும், இப்படிப்பட்ட ஒரு பயங்கரமான சூழ்நிலை தமிழகத்திலே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே உங்கள் மூலமாக இந்த அரசுக்கு நான் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் கடன் கொடுத்திருந்தாலும், அதைவசூலிக்க வேண்டாம் என்று திராவிட முன்னேற்றக் கழகம் சொல்லவில்லை. இருந்தாலும் வசூலிப்பதிலே இப்படிப்பட்ட அநீதியான கொடுமைகள் இழைக்கப்பட வேண்டுமா என்பதை நான் இந்த நேரத்திலே அரசாங்கத்திடம் இருந்து தெரிந்து கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். சென்ற ஆண்டு கடுமையான வறட்சி ஏற்பட்டபோது நம்முடைய அரசாங்கமே கூட மத்திய அரசிடமிருந்து உதவி கேட்கின்ற போது, 100 ஆண்டுக் காலத்தில் ஏற்படாத வறட்சி தமிழகத்திலே ஏற்பட்டு இருக்கிறது என்பதை நினைவு படுத்தி உதவி கேட்டார்கள் ஆனால் 100 ஆண்டுக் காலம் செய்யாத கொடுமைகளை, இப்படிப்பட்ட விவசாயிகளுக்கு நீங்கள் சென்ற ஆண்டும் இந்த ஆண்டும், இழைத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை நான் நினைவுபடுத்த கடமைப்

பட்டிருக்கிறேன். இந்த ஆண்டும் வறட்சி தமிழகத்திலிருந்து நீங்கிவிட்டதா என்றால் நிச்சயமாக இல்லை. வட ஆர்க்காடு மாவட்டம் போன்ற பல்வேறு மாவட்டங்களில் இப்பொழுதேகூட இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் எல்லாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

அதுமட்டுமல்ல, ஒருசில விவசாயிகளுக்கு நெல் ஓரளவுக்கு விளைந்திருந்தாலும் கட்டுபடி ஆகிற விலை அவர்களுக்குக் கிடைக்கவில்லை என்ற நிலை ஒரு பக்கத்தில் இருக்கிறது. இதைப் பற்றி எல்லாம் நாங்கள் கேட்பதும் நீங்கள் மத்திய அரசைக் கேட்டிருக்கிறோம் என்று சொல்வதும் இன்னொரு பக்கத்தில் இருக்கிறது.

அது மட்டுமல்ல, இன்றைக்கு லெவி போடுகிறீர்களே என்று நாங்கள் கேட்டால், நாங்கள் விவசாயிகளுக்கு லெவி போட வில்லை, வியாபாரிகளுக்குத்தானே லெவி போடுகிறோம் என்று உணவுத்துறை அமைச்சர் சொல்கிறார். இப்படிப்பட்ட கொடுமைகள் இன்றைக்கு நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. நேற்றையதினம் கூட எங்களுடைய கட்சி உறுப்பினர் திரு. இராசமாணிக்கம் அவர்கள் தஞ்சை மாவட்டத்தில் லெவிக்கு நெல் கொடுத்துக்குக்கூட பணம் கொடுக்கவில்லை என்று ஒரு கவன ஈர்ப்பு தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். இப்படிப் பட்ட ஒரு நிலைமை இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது.

அதைப்போன்று இன்றைக்குக் கரும்புக்கு நீங்கள் நிர்ணயித்திருக்கிற விலை கட்டுபடி ஆகவில்லை என்றாலும் கூட கரும்பு கொடுத்திருக்கிற விவசாயிகளுக்குச் சர்க்கரை ஆலையிலிருந்து பணம் தரவில்லை என்ற நிலை இருக்கிறது. அதைத் தான் சட்டமன்ற உறுப்பினர் திரு. துரைமுருகன் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மூலம் பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள்.

அதைப்போன்று இன்றையதினம் கிராமங்களில் நகை வைத்திருக்கிற விவசாயிகள் அந்த நகைகளை வங்கியில் அடகு வைத்து சங்கங்களில் கடனைக் கட்டலாம் என்றால் தேசியமயமாக்கப் பட்ட வங்கிகளானாலும் சரி, கூட்டுறவு வங்கிகளானாலும் சரி, நகைக்கடன் அறவே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இப்படிப் பட்ட ஒரு இக்கட்டான நிலைமையில் இன்றையதினம் விவசாயிகள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் ஆனால் ஜப்தி மட்டும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சில இடங்களிலே விவசாயிகள் தவணை முறையில் கடனை ஓரளவுக்குக் கட்டலாம் என்று இருந்தாலும் ஜப்தி நடவடிக்கை தொடருகிறது.

ஒரு கிராமத்தில் ஏறத்தாழ 1000 மக்கள் தொகை இருக்கிறது என்றால் அந்தக் கிராமத்திற்கு ஜப்தி நடவடிக்கைக்காக கூட்டுறவுத் துறை அதிகாரிகள், மற்றவர்கள் எல்லாம் 500, 600-க்கு மேற்பட்ட அதிகாரிகள் செல்கிறார்கள். கூட்டுறவுத்

துறையைச் சேர்ந்த பல்வேறு அதிகாரிகள், அலுவலர்கள், வருவாய்த் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் செல்கிறார்கள். நான் இன்று பத்திரிகையிலே கூட பார்த்தேன். மாவட்டந் தோறும், அந்த மாவட்ட சூப்பிரண்டு, இரண்டு துணை சூப்பிரண்டுகள், இரண்டு போலீஸ் இன்ஸ்பெக்டர்கள், கணக்கான ரிசர்வ் போலீஸ்கள் துப்பாக்கி ஏந்தி செல்கிற ஒரு நிலைமை இருப்பதாக பத்திரிகையில் பார்த்தேன். நான் அந்த அதிகாரிகளிடம் கேட்டேன். நீங்களும் வாருங்கள், நீங்கள் வரும்போது அவர்கள் கடனை ஒரளவுக்குக் கட்டுவார்கள் என்று சொல்லும்போது அங்கே துணை ஆட்சித் தலைவர் வருகிறார். அதற்கு என்ன காரணம் என்றால் யாராவது ஒரு விவசாயி ஜப்தி செய்யும்போது வீட்டின் கதவாக இருந்தாலும், அண்டா போன்ற பொருட்களாக இருந்தாலும், வேறு எந்த பொருளாக இருந்தாலும் அவைகளை ஜப்தி செய்கிறபோது விவசாயிகள் தடை செய்தால் லா அன்ட் ஆர்டர் கெட்டு விட்டது என்று சொல்லி, உடனே துப்பாக்கிப் பிரயோகம் செய்ய உத்தரவு வழங்குவதற்காக அந்த துணை ஆட்சித் தலைவரும் அவர்களுடன் செல்கிறார். ஆகவே அவர்கள் எல்லோரும் ஜப்திக்கு வருகிறார்கள். வண்டியிலே உட்கார்ந்து இருக்கிறார்கள். ஏதாவது ஒரு சிறு தடை ஏற்பட்டாலும் உடனடியாக துப்பாக்கிப் பிரயோகம் செய்யக்கூடிய கொடுமையான நிலைமை இன்றையதினம் கிராமங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும்கூட இந்த அவையிலே பேசும்போது சொன்னார்கள். நாங்கள் ஜப்தி செய்யச் சொல்ல வில்லை; மத்திய அரசு சொல்கிறது என்று சொன்னார்கள். அதைப்பற்றி நேற்று மதுரையிலே மத்திய அமைச்சர் சொன்னார். கூட்டுறவுச் சங்கக் கடனை வசூல் செய்யலாம், ஆனால் ஜப்தி செய்யச் சொல்லவில்லை என்று மத்திய அரசு சொல்கிறது என்று சொன்னார். இந்த மாநில அரசு ஜப்தி செய்ய வேண்டுமென்று நாங்கள் சொல்லவில்லை என்று சொன்னார்.

நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்கிறேன். தேர்தல் நேரத்திலே நீங்கள் பல வாக்குறுதிகளைக் கொடுத்தீர்கள். இந்த நாட்டு மக்கள் உங்களுடைய வாக்கை நம்பி, உங்களை இங்கே கொண்டுவந்து உட்கார வைத்தார்கள். ஆனால் இன்றைக்கு பத்திரிகைகளிலே 20 கோடி ரூபாய் தள்ளுபடி செய்திருக்கிறோம் என்று சொல்கிறீர்கள். நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதிலேகூட என்னைப்போன்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சந்தேகம் ஏற்படுகிறது. 200 கோடி ரூபாய் கடனை யார், யாருக்கு தள்ளுபடி செய்திருக்கிறீர்கள்? எந்த எந்த மாவட்டத்தில் வங்கியில் எவ்வளவு ரூபாய் தள்ளுபடி என்ற விவரத்தை நீங்கள் இந்த பேரவையில் வைத்தால் என்னைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அதைத் தெரிந்து கொள்ள ஒரு வாய்ப்பு ஏற்படும். இந்த அவையிலே இதுபற்றி பலமுறை

சொல்லப்பட்டிருக்கிறது. நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. அழகர்சாமி அவர்களும் மற்றவர்களும் இந்த பேரவையில் பல நேரங்களில் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு கூட நீங்கள் உயர்மட்டக் குழு அமைத்திருக்கிறீர்கள். அந்தக் குழு இதுவரை எத்தனை மாவட்டங்களுக்குச் சென்றது. என்னென்ன சிபாரிசுகளைத் தந்திருக்கிறது என்று நீங்கள் பேரவையில் விவரம் வைக்கவில்லை.

விவசாயிகளுக்கு இப்படிப்பட்ட கஷ்டம் ஏற்பட்டதற்கு ஒரு முக்கியமான காரணம் வட்டி, அபராத வட்டி என்பதுதான். 1,000 ரூபாய் அசல் என்றால் 3,000 ரூபாய் வட்டி. இந்த அளவுக்கு வட்டி உயர்ந்து விட்டதால்தான் விவசாயிகள் பல கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். அதை எல்லாம் நல்ல முறையில் சீர்தூக்கிப் பார்த்து, நியாயமான அடிப்படையில் விவசாயிகளிடம் கடனை வசூல் செய்யுங்கள். ஆனால் ஜப்தி போன்ற கொடுமையான நடவடிக்கைகள் கூடாது. காரணம் நீங்கள் இந்த நாட்டு மக்களின் நம்பிக்கையைப் பெற்று வந்திருக்கிறீர்கள்.

(முற்பகல் 10.40)

அதைச் சொன்னால், கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் அடித்துச் சொல்கிறார்கள், அரசாங்கத்தின் கணக்கில் கருப்புப் புள்ளி விழுந்து விடும் என்று, மத்திய அரசு சொல்வதாகச் சொல்கிறார்கள். மத்திய அரசாங்கம் சொல்கிறதோ இல்லையோ, மாநில அரசு மக்களின் இருதயத்திலே கரும்புள்ளி வைக்காமல், இந்த மாநில விவசாயிகளைக் காப்பாற்றவேண்டும். அதற்காக இன்னும் விரிவாகப் பேச வேண்டியிருக்கிற காரணத்தால், இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இது குறித்து விவாதிக்க அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: மாண்புமிகு மன்றத்தின் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் கூட்டுறவுக் கடன்கள் வசூலிப்பதற்காக ஜப்தி நடவடிக்கையை அரசு எடுத்து வருகிறது. அந்த நடவடிக்கை வேண்டுமா என்பதைப் பற்றிய கருத்துக்களை நானும் இந்த மன்றத்திலே சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

கூட்டுறவுத் துறை மானியத்திலே பேசுகிற போது, மாண்புமிகு கூட்டுறவு—சட்ட அமைச்சர் அவர்கள் அந்தக் கடனை வசூலிக்காவிட்டால், மத்திய அரசு பிளாக் லிஸ்ட் செய்து விடுவோம் என்று சொன்னதாகச் சொன்னார்கள். அதோடு, ரிசர்வ் வங்கியிலிருந்து கடன் பெறும் தகுதியையும் இழந்து விடுவோம் என்று கூறினார்கள். அது குறித்து மத்திய அரசு கொடுத்த கடிதத்தையும் படித்தார்கள். மத்திய அரசுதான் ஜப்தி நடவடிக்கை எடுக்கச் சொல்கிறது என்று சொன்னார்கள்.

ஆனால், நேற்றையதினம் மத்திய அரசு அமைச்சர் மாநில அரசுக்கு நாங்கள் அப்படிப்பட்ட தாக்கீது கொடுக்கவில்லை என்று சொல்லி இருக்கிறார்கள். மத்திய அரசு ஜப்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லாதபோது, மாநில அரசு ஜப்தி நடவடிக்கை எடுத்து இருப்பதாலும், மாநில அரசு தெரிவித்துள்ள கருத்துக்கும், மத்திய அரசு அமைச்சர் தெரிவித்துள்ள கருத்துக்கும் முரண்பாடு இதிலே இருப்பதாலும், இந்த மன்றத்தில ஏற்கனவே சொல்லப்பட்ட கருத்துக்கு முரண்பட்டதாக இத்தகைய தகவல்கள் வருவதாலும். மாநில அரசு தன்னுடைய நிலையைத் தெளிவாக விளக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடனை வசூலிப்பதற்கு ஜப்தி நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று நான் சொல்லவில்லை. ஆனால். நீங்கள் இதிலே அணுகும் முறை, இதற்காக எடுக்கும் நடவடிக்கை தவறாக இருக்கிறது. போலீஸ் படையோடு சென்று அந்த நடவடிக்கைகளில் ஈடுபடுவதைப் பார்க்கிறேன். நான் சிறு வயதில் இருந்து பார்த்து வருகிறேன். இதற்கு முன்பு ஜப்திகள் நடந்து இருக்கின்றன. ரெவின்யூ ரெகவரி ஆக்டின் கீழ் தாசில்தார்கள் ஜப்தி செய்து இருக்கிறார்கள். அப்போதெல்லாம் இப்படி ஒரு போலீஸ் படை ஜப்தி செய்வதற்காக வந்தது இல்லை. ஆகவே. இப்போதும் அத்தகைய ஒரு போலீஸ் படை இந்த ஜப்தி நடவடிக்கைகளுக்குத் தேவையில்லை, அவசியமும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறு விவசாயிகளுக்கு பல கோடி ரூபாய் வரை விதிவிலக்கு செய்து இருக்கிறோம் சென்ற ஆண்டு என்று சொல்லிக்கொண்டு இருக்கிறோம். இந்த ஆண்டு கரும்பு விலை மிகவும் குறைந்த விலயாக இருக்கிறது. ஆளும் கட்சி உறுப்பினர் கோவைத் தம்பி அவர்கள் பேசுகின்றபோது கூடச் சொன்னார்கள், உற்பத்தியான செலவைச் சரிகட்டக் கூடியவிலை இல்லை, அதனால் விவசாயிகள் கரும்பைத் தீயிட்டுக் கொளுத்துகிறார்கள் என்று சொன்னார்கள். இப்படி விவசாயிகள் உற்பத்தி செய்த பொருள்களுக்கு நியாயமான அளவிற்கு விலை கிடைக்கவில்லை என்கிறபோது எப்படி அவர்களால் வாங்கிய கடனைத் திருப்பிக் கட்டமுடியும் என்பதை அரசு சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆகவே, சிறு விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்ட கடனுக்கான வட்டியைக் குறைக்கவேண்டும் அல்லது வட்டியைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படித் தள்ளுபடி செய்து கொடுத்தால், கடனை அவர்கள் கட்டத் தயாராக இருக்கிறார்கள்.

பஞ்சாப் மாநிலத்தில் ஒரு தீர்மானம் போட்டு இருக்கிறார்கள். வட்டியை மட்டும் கட்டினால் கூட, மத்திய அரசு பிளாக் லிஸ்ட் செய்து இருப்பதை தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொல்கிறார்கள். சிறு விவசாயிகளுக்கு வட்டியைத் தள்ளுபடி செய்து, பெரிய விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ள கடனை வசூலிக்கத் தகுந்த நடவடிக்கைகளை எடுக்கலாம். டிராக்டர் வாங்குவதற்காக பல பெரிய விவசாயிகளுக்கு லோன் வழங்கப்பட்டு இருக்கிறது. அப்படிப்பட்டவர்களிடமிருந்து கடன் வசூல் செய்கிற அடிப்படையில், அந்த டிராக்டரை பறிமுதல் செய்யலாம். அதை விட்டு விட்டு, ஏழை எளிய விவசாயிகளிடமிருந்து அண்டா, கதவுகள் ஆகியவற்றை ஜப்தி செய்வதற்கான நடவடிக்கையை ஏன் எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களில் தண்ணீர் பஞ்சம் ஏற்பட்டு இருக்கிறது. நான் மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மின்சாரக் கட்டணம் கட்டவில்லை என்று சொன்னால், அந்தப் பகுதியில் இருக்கும் டிரான்ஸ்பார்மர்களையே டிஸ்கனெக்ட் செய்து இருக்கிறார்கள். இதனால் அங்கே பணம் கட்டிய 10 பேர் அந்த டிரான்ஸ்பார்மர்களில் இருந்து கரெண்ட் பெறுபவர்களும் பாதிக்கப்படுகிறார்கள். அதற்காக நான் கேட்டுக் கொள்கிறேன். மின்சாரக் கட்டணத்தை வசூல் செய்ய நடவடிக்கை எடுங்கள். அல்லது யார் யார் கட்டவில்லையோ அவர்களுக்கு மட்டும் டிஸ்கனெட் செய்யுங்கள். இப்படி ஒட்டுமொத்தமாக ஒரு டிரான்ஸ்பார்மரிலிருந்து கரெண்ட் டிஸ்கனெக்ட் செய்வது தவிர்க்கப்படவேண்டும். அதைப்போலவே, கரெண்ட் நிறுத்தப்படுவதும் அறிவிப்பு செய்யவேண்டும். காலை இத்தனை மணிமுதல் இத்தனை மணி வரையில் கரெண்ட் கொடுக்கப்படும் என்கிற உத்தரவாதம் கொடுக்க வேண்டும். இப்போது மின்சாரம் எப்போது வரும் என்பதே விவசாயிகளுக்குத் தெரியவில்லை. இப்படி விவசாயிகளை ஜப்தி செய்யும் முறையில் கராராக இருக்கும் அரசாங்கம் மின்சாரம் எப்போது வரும் என்பதையும் சொல்லவேண்டும்.

இந்த அரசாங்கத்தினிடத்தில் பெரிய விவசாயிகள், சிறிய விவசாயிகள் என்ற லிஸ்ட் இருக்கிறது. அந்த லிஸ்ட்டின் அடிப்படையில் சிறிய விவசாயிகளுக்கு வட்டியை குறைத்தோ அல்லது தள்ளுபடி செய்தோ அல்லது தவணை முறையில் கட்டுவதற்கோ உத்தரவிடவேண்டும் அப்படிச் செய்தால் அந்த விவசாயிகள் கட்டத் தயாராக இருக்கிறார்கள். என்னைப்போன்ற சட்டமன்ற உறுப்பினர்களும் அந்தந்தத் தொகுதியில் அதைச் சொல்லத் தயாராக இருக்கிறோம். ஆகவே, போலீஸ் வைத்து ஜப்தி செய்ய வேண்டாம் என்று மறுபடியும் கேட்டுக்கொண்டு, இந்த ஜப்தி செய்வது சம்பந்தமாக விரிவாகப் பேசவேண்டியிருப்பதால், இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இது குறித்து விவாதிக்க அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுக் கடன்கள், மின்சாரக் கட்டணங்கள் ஆகியவற்றின் பாக்கிக்காக தமிழ் நாடு முழுவதும் பரவலாக போலீஸ் படையுடன் ரெவின்யூ அதிகாரிகள் மற்றும் பல அதிகாரிகள் கூட்டமாகச் சென்று, பலகிராமங்களில் ஜப்தி நடவடிக்கைகள் நடந்து வருவதால் தமிழ்நாட்டிலே ஒரு பதட்ட நிலைமை ஏற்பட்டு இருக்கிறது என்பதை நான் இங்கே கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலே நாகமங்கலம் என்ற கிராமத்திலே பூபாலன் என்பவர் 25-3-1982 அன்று கூட்டுறவுக் கடனைக் கட்டி விட்டார்கள். அப்படிக் கட்டியதற்கான ரசீதினை அதிகாரிகளிடத்திலே காட்டியும் கூட அவருடைய வீட்டிலே சோதனை செய்து அந்த வீட்டிலே குடியிருந்தவர்களையும் இம்சித்திருக்கிறார்கள். இதுதான் அந்த ரசீதின் ஃபோட்டோஸ்டட் காப்பியாகும். மேலநாகமங்கலத்தில இருக்கக் கூடிய கதவு இலக்கம் 1/25 ரங்காழ்வார் என்பவர் தாம் கூட்டுறவு சொசைட்டியிலே மெம்பர் இல்லை என்றும், கடன் எதுவும் வாங்கவில்லை என்றும் தெரிவித்தற்குப் பிறகும் அவருடைய வீட்டிலிருந்த 42 மூட்டை நெல்லை ஜப்தி செய்திருக்கிறார்கள். அதை அவர்கள் ஆட்சேபித்திருக்கிறார்கள். அவ்வாறு தாம் கூட்டுறவுக் கடன் எதுவும் வாங்கவில்லை என்று ஆட்சேபித்ததற்காக அவருடைய மகன் பாலகிருஷ்ணன் என்பவரைக் கைது செய்து வழக்கு தொடரப்பட்டிருக்கின்றது. அதிகாரிகள் கேட்கின்றபோது நாங்கள் கடன் எதுவும் வாங்கவில்லை என்று சொன்னபோது, 'எங்களுக்குத் தெரியாது நாங்கள் அதிகாரிகளுக்குப் பாதுகாப்பாக வந்திருக்கிறோம்'' என்று மொட்டையாகச் சொல்லி இருக்கிறார்கள். ஆகவே அவர்கள் பிரச்சினையைப் பற்றி நன்கு கவனிக்கக் கூட தயாராக இல்லை.

அதே போன்று வடஆற்காடு மாவட்டம் ஆலங்காயம் ஒன்றியத்திலே பள்ளிப்பட்டு கிராமத்திலே வசூல் செய்வதற்காக அதிகாரிகள் போய் நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருந்த போது ஏற்பட்ட பிரச்சினையிலே குறுக்கிட்டு சமரசம் செய்ய முயற்சித்த ஜெயராமன் என்பவர் காவல் துறையினரால் அடிக்கப்பட்டு அவருடைய மண்டையே உடைந்திருக்கின்றது. அவர்கள் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். நக்ஸலைட் என்று சொல்லி அவர் மீது கொலை செய்ய முயற்சித்ததாக வழக்கு போடப்பட்டு இருக்கின்றது. தஞ்சை மாவட்டத்திலேயும் இது போன்ற நிலைமைகள் ஏற்பட்டு இருக்கின்றன. கோவை மாவட்டத்திலே பல்லடம் மற்றும் பல இடங்களிலே இந்த மாதிரி கடனைத் திருப்பித் தரவில்லை என்பதற்காக போலீஸ் படையினர் சென்று பொதுமக்களைக் கைது செய்திருக்கிறார்கள். 200-க்கு மேற்பட்டவர்களை 20 பெண்கள் உட்பட கைது செய்திருக்கிறார்கள் என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் பலர் குறிப்பிட்டிருப்பது போன்று இன்றைக்கு விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்காத சூழ்நிலை இருக்கின்றது. மேலும் மறுபடியும் வறட்சி நிலைமை தோன்றக்கூடிய அபாயம் இருக்கின்றது. இந்த நிலையில் ஜப்தி செய்வது என்பது எப்படி நியாயமாக இருக்கும்?

இதற்கு முன்பு போலீஸ் விவாதத்திற்கு பதிலளிக்கும்போது கூட முதல் அமைச்சர் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். மத்திய சர்க்காரிலே இருந்து ஒரு வார்த்தை ஜப்தி செய்ய வேண்டாம் என்று சொல்லிவிட்டால்போதும் நாங்கள் ஜப்திசெய்ய மாட்டோம் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவருக்கு ஆதரவாகவே மத்திய சர்க்காரின் அமைச்சர் திரு. ஆர். வி. சுவாமிநாதன் அவர்கள் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். அந்த அறிக்கையிலே உலகவங்கியின் நிர்ப்பந்தத்தினால்தான் இந்த வசூலைச் செய்யவேண்டி இருக்கின்றது என்று குறிப்பிட்டார்கள். ஆகவே இதுபற்றி அவர்களே ஒப்புக்கொண்டதற்காக நான் நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். உலக வங்கியின் நிர்ப்பந்தம் காரணமாகத்தான் விவசாயிகளிடத்திலே இருந்து வாங்கிய கடனை வசூல் செய்ய வேண்டி இருக்கின்றது என்று அவரே சொல்லிவிட்டார்கள். மேலும் ஒன்றை அவர் சொல்லி இருக்கிறார். 'நாங்கள் வசூல் செய்யவேண்டும் என்றுதான் சொன்னோமே தவிர ஜப்தி செய்யச் சொல்லவில்லை, ஜப்தி செய்யாமலே அரசாங்கம் இந்தக் கடனை வசூலிக்கவேண்டும் என்று சொல்லி இருக்கிறோம், என்று சொல்லி இருக்கிறார்கள். ஆகவே மத்திய அமைச்சர் திரு. சுவாமிநாதன் அவர்களே சொல்லிவிட்டார்கள். வேறு வகையிலே வசூலிக்க முடியுமா என்றுதான் அவர்களும் கேட்டிருக்கிறார்கள். ஆகவே மத்திய சர்க்காரின் அந்த அனுமதி கிடைத்துவிட்டதன் அடிப்படையிலே தமிழ்நாடு பூராவும் நடைபெறக்கூடிய ஜப்தி நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசாங்கம் உடனடியாக நிறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நேற்றையதினம் நானும், திரு. அழகர்சாமி அவர்களும் முதலமைச்சர் அவர்களிடத்திலே உயர்மட்டக் குழுவிலே இருக்கக்கூடிய விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் 5-ம் தேதி சந்தித்துப் பேச விரும்புகிறார்கள் என்று தெரிவித்தேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அதை ஏற்றுக்கொண்டார்கள். பேசலாம் என்று சொன்னார்கள். அப்படிப் பேசுவதற்கு முன்னால் உடனடியாக ஜப்தி நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு உத்தரவிட்டுவிட வேண்டும். அப்போதுதான் பேசுவது பயன் உள்ளதாக இருக்கும். பல சங்கத்தினர் பல பார்முலாக்களை வைத்திருக்கிறார்கள். எப்படிப்பட்ட வகையிலே அபராத வட்டியைத் தள்ளுபடி செய்வது, எப்படிப்பட்டவர்களின் கடன்களைப் பூரணமாக ரத்து செய்யவேண்டும்,

எப்படிப்பட்டவர்களிடமிருந்து தவணை முறையிலே வாங்கலாம் என்றெல்லாம் அவர்கள் சில ஃபார்முலாக்களை வைத்திருக்கிறார்கள். ஆகவே அந்த அடிப்படையிலே சுமுகமான ஒரு முடிவுக்கு வருவதுதான் சரியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே உடனடியாக ஜப்தி நடவடிக்கையை நிறுத்திவிட்டு விவசாய சங்கத்தினரோடு பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், இந்த அரசாங்கத்தையும் வற்புறுத்துவதற்காக இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்துவிட்டு இதுபற்றி விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 10.50]

*திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, தமிழ்நாடு பூராவிலும் உள்ள விவசாயிகள் மத்தியில் இன்று ஒரு பெரிய கொந்தளிப்பதான நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை முதலில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். கூட்டுறவுக் கடன், மற்றக் கடன்கள் சம்பந்தமாக இன்று ஜப்தி நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள். இனறு தமிழ்நாட்டில் பலயிடங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கிறது. அதோடு கூட பலயிடங்களில் மின்சாரத் துண்டிப்பு நடைபெற்று வருகிறது. இரண்டு மணி நேரம் கூட பம்பு செட்களுக்கு தொடர்ச்சியாக மின்சாரம் கொடுக்கமுடியாத ஒரு நிலை இருந்து வருகிறது பலயிடங்களில். அதன் காரணமாக கிணற்றில் தண்ணீர் இருந்தும் மின்சாரம் தொடர்ந்து இரண்டு, மூன்று மணி நேரம் கிடைக்காத காரணத்தால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கக்கூடிய நிலையில் இருக்கிறார்கள்.

செக் போஸ்ட்களை எடுத்துக்கொண்டால் பற்றாக்குறை மாவட்டங்களாக இருக்கக்கூடிய நெல்லை, மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் ஒரு கிராமத்திலிருந்து இன்னொரு கிராமத்திற்கு நெல் கொண்டுபோவதைத் தடை செய்வதால் விவசாயிகள் தங்கள் பொருள்களுக்கு நியாய விலை கிடைக்காது பெரும் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறார்கள். இந்த நிலையில் கடனுக்காக ஜப்தி நடவடிக்கை எடுப்பது என்றால் அது கண்டிக்கத்தக்க விஷயமாகும்.

ஜப்தி செய்யக்கூடாது, செய்ய வேண்டாம் என்று மத்திய அரசாங்கத்தின் அமைச்சர் திரு. ஆர். வி. சுவாமிநாதன் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இந்த கடன் சம்பந்தமாக நான் சொல்ல விரும்புவது, இந்தக் கடன்கள் பத்து ஆண்டுக் காலமாக தொடர்ந்து ஏறத்தாழ 1972 ம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக பாக்கி இருந்து கொண்டிருக்கிறது. இந்தக் கடன் உங்கள் காலத்தில் கொடுத்த கடன் அல்ல. ஆரம்பக் காலத்தில் கொடுத்ததை பல காரணங்களால் திருப்பிச் செலுத்த முடியாமல் ஒத்திவைக்கப்பட்டு இன்று அதைத் திருப்பிச் செலுத்தமுடியாத நிலையில் இருக்கிறார்கள்

விவசாயிகள். அந்தக் கடனுக்காக வட்டி அசலை விட மூன்று மடங்கு நான்கு மடங்கு பெருகிவிட்டது. அபராத வட்டியையும் சேர்த்து வசூலிக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. தனியாரிடம் கடன் வாங்கியிருந்தால் அசலைப்போல் இரண்டு மடங்கு வட்டி செலுத்தியிருந்தால் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டாம் என்று சட்டம் இருக்கிறது. ஆனால் அந்தச் சட்டம் இதற்குப் பொருந்தாது என்று சொல்கிறார்கள். விவசாயிகளுக்கு கடனைத் திருப்பிச் செலுத்தவேண்டாம் என்ற எண்ணம் இல்லை. ஆனால் அவர்களின் விளைபொருள்களுக்கு நியாயமானவிலை கிடைக்காமல் இருக்கிற ஒரு நிலை இருக்கிறது. இப்போது பத்தாயிரம் ரூபாய் கடனை வசூல் செய்வதற்கு இரண்டாயிரம் ரூபாய் வரை செலவு செய்கிறீர்கள். மூன்று ஜீப்கள், முப்பது பேர்கள் போலீஸ் படையோடு செல்கிற நேரத்தில், டாக்ஸி வாடகை, போக வரவு செலவு எல்லாம் இரண்டாயிரம் ரூபாய் அளவிற்கு வந்துவிடும். இன்று கோவை மாவட்டத்தில் பல்லடம் தாலுகாவில் ஒரு கிராமத்தில் 16 பெண்கள், 16 சிறுவர்கள், 36 சிறுமியர் உட்பட ஜப்தி செய்வதை எதிர்த்ததால் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அதேபோல் ஒரு இடத்திற்கு ஜப்தி செய்யச் சென்றபோது வண்டியை ஜப்தி செய்துகொண்டு போங்கள் என்று சொன்னதற்கு அவர்கள் பம்ப் செட்டை தூக்கிக்கொண்டு போயிருக்கிறார்கள். பம்ப் செட்டை கொண்டு போய்விட்டால் எப்படி விவசாயம் செய்வார்கள். பண்டங்கள், பாத்திரங்கள், சைக்கிள்கள் போன்றவற்றை ஜப்தி செய்கிறார்கள்,

இப்போது நீங்கள் உயர்மட்டக் குழு போட்டிருக்கிறீர்கள் முதல் அமைச்சர் அவர்கள் அந்தக் குழுவைச் சார்ந்த விவசாயிகள் சங்கத் தலைவர்களை அழைத்துப் பேசினார்கள். இது சம்பந்தமாக மத்திய அரசிடம், மத்திய அமைச்சரைச் சந்தித்துப் பேசி, முடிந்தால் பிரதம மந்திரியைச் சந்தித்துப் பேசி இது சம்பந்தமாக மேற்கொண்டு என்ன செய்யலாம் என்பது பற்றி ஆலோசிக்கலாம் என்று கூறியிருக்கிறார்கள். இது சம்பந்தமாக விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகளை கூப்பிட்டுப் பேசி உடன்பாடு ஏற்படுவதற்கு முன்னால் ஜப்தி நடவடிக்கைகளில் இறங்குவது என்றால் அது தமிழக விவசாயிகளை கொடுமைப் படுத்துகிற ஒரு காரியமாகும்.

குஜராத் மாநிலத்தில் இதுமாதிரி பழைய கடனுக்காக வட்டியை, அத்தனை விவசாயிகளுக்கும், தள்ளுபடி செய்து மீதிக் கடன் தொகையை பத்து தவணைகளில் ஒழுங்காகச் செலுத்தினால், நான்கு தவணைகள் செலுத்தினால் ஐந்தாவது தவணையை அரசு ஏற்று, இப்படி ஐந்தில் ஒரு பங்கை அரசாங்கம் செலுத்துவது மீதியை விவசாயிகள் செலுத்துவது என்ற முடிவெடுத்து— வட்டியைப் பூராவும் தள்ளுபடி செய்கிறார்கள், மத்திய அரசும் அதற்கு

ஒப்புக்கொண்டு, ரிசர்வ் வங்கியும் அதை ஒத்துக்கொண்டிருப்பதாகவும் சொல்கிறார்கள். எனவே கடனுக்காக வட்டியை முழுவதும் தள்ளுபடி செய்துவிட்டு கடனை தவணை முறையில் வசூலிப்பது என்றால் அதற்கு விவசாயிகள் தயாராக இருக்கிறார்கள். மின்சாரக் கட்டணப் பாக்கியை 1 ப்ளஸ் 1 கட்டவேண்டும் என்று சொன்னபோது பெரும்பாலான விவசாயிகள் அப்படி கட்டிவிட்டார்கள். ஒரு சிலர்தான் கட்டவில்லை.

தண்ணீர் இருக்குமா, தண்ணீர் இருக்காதா, பம்ப் செட்டுக்கு மின்சாரம் வருமா, வராதா என்ற நிலையிலே ஒருசில இடங்களிலே கட்டவில்லையே தவிர, மற்ற இடங்களிலே கட்டிகொண்டு வருகிறார்கள். கட்ட மாட்டோம் என்று சொல்லவில்லை, கடன் கட்டுவதிலே அவர்களுக்கு கொஞ்சம் கஷ்டமிருக்கிறது. இதை உணர்ந்துதான், இது சம்பந்தமாக விவசாயச் சங்கப் பிரதிநிதிகள் — மாண்புமிகு உறுப்பினர் சங்கரய்யா அவர்கள் கூறியதுபோல் — நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 5 ஆம் தேதி சந்தித்துப் பேச விருப்பம் தெரிவித்திருக்கிறார்கள். அப்போது உயர்மட்டக் குழுவும் கூடுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்த உயர்மட்டக் குழுவும் சில சிபார்சுகளைக் கொடுத்திருக்கிறது. இன்றைக்கு நிலவள வங்கியிடமிருந்து வாங்கியக் கடனுக்கு, அபராத வட்டியையும் சேர்த்துக் கட்டவேண்டுமென்று சொல்லுகிறார்கள். 5 ஏக்கர்களுக்கு கீழ் உள்ள விவசாயிகளுக்கு கடன் தள்ளுபடி செய்யப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், 4 ஏக்கர் நிலம் வைத்திருக்கும் விவசாயிகளின் மீது கூட நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள். உதாரணமாக, கும்பகோணம் தாலுகா, முருக்கங்குடியில் இஸ்மாயில் சாய்பு குமாரர் ஜெகபர் அலி, 1974, 75லே கடன் வாங்கியிருக்கிறார். அவர் மொத்தமாக வாங்கியக் கடனில் ரூ. 1,000 செலுத்தியிருக்கிறார். அவர் வாங்கியது ரூ. 2,000. இப்போது ரூ. 3000 கடனும் வட்டியும் சேர்த்துக் கட்டவேண்டுமென்று சொல்லி, அவரால் கட்ட முடியாததால், அதிகாரிகள் ஜப்தி நடவடிக்கை எடுக்கிறார்கள். அவருக்கு மொத்தமிருக்கும் நிலம் சுமார் 11 மா அதாவது 4 ஏக்கர்கள். 5 ஏக்கர்களுக்கு கீழுள்ள விவசாயிகளுக்கு தள்ளுபடி என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், அங்கே தள்ளுபடி செய்யவில்லை. நீங்கள் சில சலுகைகளை அளித்திருக்கிறீர்கள். அந்தச் சலுகைகளை அளித்தாலும், அதிலே உண்மையாக பல பேருக்கு சலுகைகள் கிடைக்காமல் இருக்கிறது. வட்டி சுமைதான் அதிகமாக இருக்கிறது. அதை எப்படி நிவர்த்தி செய்யலாம், எந்த அளவுக்குச் செய்யலாம் என்பதையெல்லாம் விவசாயச் சங்க பிரதிநிதிகளுடன் அரசாங்கம் பேச வேண்டும்.

நிலவள வங்கிக் கடன் வட்டி ரூ. 7.74 கோடியாக இருக்கிறது. இது அரசாங்கத்தின் புள்ளிவிவரக் கணக்கு. அதேமாதிரி இன்றைக்கு மற்றக் கடன்களுக்கு வட்டி ரூ. 36 கோடியிருக்கிறது. மொத்தம் 43 கோடி வட்டி பாக்கியிருக்கிறது. அரசாங்கம் இதிலே வழிவகை கடனாக ரூ. 80

கோடி சென்ட்ரல் பாங்குகளுக்கு கடனுதவி கொடுத்துள்ளது. மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு கொடுத்த ரூ. 80 கோடி கடனை வட்டி பாக்கிக்கு ஈடாக இதிலே கொடுத்து உதவினால், அதிலே வட்டிக்கு ஈடு செய்துவிடும்படியான ஒரு வழிவகையைச் செய்ய முடியும். இது சம்பந்தமாக பிரச்னைகளைத் தீர்த்துவிட முடியும்.

எனவே, இது சம்பந்தமாக ஆளுங்கட்சி உறுப்பினர்களும் தங்கள் கருத்துக்களைச் சொல்வது நல்லது. எனவே, இந்தப் பிரச்னைகளையெல்லாம் விவாதிப்பதற்கு, இதர அலுவல்களை ஒத்திவைத்துப் பேசுவது நல்லது. உடனடியாக இந்த ஜப்தி நடவடிக்கைகளை நிறுத்தி, விவசாயப் பிரதிநிதிகளை அழைத்துப் பேசி, எப்படி வட்டியைத் தள்ளுபடி செய்யலாம் என்பதைப் பற்றி முடிவு செய்யலாம். மற்ற அங்கத்தினர்களும் தங்கள் கருத்துக்களைக் கூறவேண்டும். வழக்கமாக, ஒத்திவைக்கத் தேவையில்லை என்று சொல்வதை விட்டுவிட்டு, இந்த நாட்டிலுள்ள 4½ கோடி மக்களின் பிரச்னையாக இருப்பதால், இதை ஆழமாக, தீர விவாதிப்பதற்கு இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று கடன் சுமையால் தமிழக விவசாயப் பெருங்குடி மக்கள் மிகவும் துன்பப்படுகிறார்கள் என்றும், அதற்கு ஜப்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதால், மக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். ஆகவே, இதைப்பற்றி சுருக்கமாக சில வார்த்தைகளைக் கூற ஆசைப்படுகிறேன். குறிப்பாக, இந்தச் சமயத்தில் மத்திய, மாநில அரசுகளைப் பற்றி பலத்த விவாதம் நடந்து கொண்டிருக்கிறபோது, மத்திய, மாநில அரசு பற்றி மேலும் சில குறிப்புகளைக் கூற நான் ஆசைப்படுகிறேன்.

மத்திய அரசின்கீழ் 20 மாநிலங்களுக்கு மேல் இருக்கின்றன. மத்திய அரசு உலக வங்கியிடமிருந்து கடன் வாங்கி, மாநிலங்களுக்கு எல்லாம் கடன் கொடுத்து வருகிறது என்பது மக்கள் அனைவருக்கும் தெரியும். நமது முதல்வர் அவர்களுக்கும் தெரியும். மத்திய அரசு உலக வங்கியிடமிருந்து கடன் வாங்கி ரிசர்வ் பாங்கிக்குக் கொடுத்து, அது மாநிலங்களுக்கு, விவசாயிகளுக்கு, நெசவாளர்களுக்கு கடனாகக் கொடுக்கப்படுகிறது. மத்திய அரசுக்கு உலக வங்கி கடன் கொடுத்தார்கள். அந்தக் கடனைத் திருப்பிக் கொடுங்கள் என்று சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, மத்திய அரசு மாநில அரசுகளை தாங்கள் வாங்கியக் கடனை திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று சொல்லுகிறது. ஜப்தி செய்து, விவசாயிகளைக் கொடுமைப் படுத்தி வசூலிக்க வேண்டுமென்று சொல்லவில்லை.

1980 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலின்போது, மாண்புமிகு முதல்வர் அவர்களும், இதர எதிர்க்கட்சியினரும், கம்யூனிஸ்ட் அன்பர்களும், விவசாயிகள் பட்ட அத்தனைக் கடனையும் தள்ளுபடி செய்வோம். எங்களுக்கு வாக்களியுங்கள் என்று மக்களிடம் கேட்டார்கள். இதை நாட்டு மக்கள் அறிவார்கள், விவசாயிகள் அறிவார்கள், அதை நம்பித்தான் மககள் உங்களுக்கு வாக்களித்து, உங்களை இங்கே அமர்த்தியிருக்கிறார்கள் என்பதை நான் இந்தச் சமயத்திலே கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அந்தச் சமயத்தில் மத்திய நிதி அமைச்சராக இருந்த மாண்புமிகு வெங்கட்ராமன் அவர்களை நிருபர்கள் கேட்டபோது, இந்த விவசாயிகள் கடனைத் தள்ளுபடி செய்ய முடியாது என்று அவர்கள் கிளியராகச் சொன்னார்கள், அப்படி நிருபர்கள் வெங்கட்ராமனைக் கேட்டபோது, ரிசர்வ் வங்கி இதற்கு ஒத்துக்கொள்ளாது என்றும் சொன்னார்கள். உடனே நிருபர்கள் தமிழக முதல்வரைக் கேட்டபோது, மத்திய அரசு நிதி உதவி கொடுத்தாலும், கொடுக்காவிட்டாலும், விவசாயிகள் பட்டக் கடன் அத்தனையையும், தள்ளுபடி செய்வோம் என்று, அது சிறு விவசாயிகளாக இருந்தாலும், பெரு விவசாயிகளாக இருந்தாலும், டிராக்டருக்காக கடன் வாங்கிய விவசாயிகளாக இருந்தாலும் அவர்கள் பட்ட கடன் அத்தனையையும் தள்ளுபடி செய்வோம் என்ற உறுதிமொழியை அளித்ததன் பேரில், மக்கள் உங்களுக்கு வாக்களித்தார்கள். ஆகவே தான் நீங்கள் மக்களை ஏமாற்றுவதற்கு மக்கள் மந்தியிலே மத்திய அரசு கொடுமையாக நடந்து கொண்டிருக்கிறது என்று எங்கள் இந்திய காங்கிரஸ் கட்சியின் மீது பழி போடுவதற்கு தான், மத்திய அரசு எங்களை ஜப்தி செய்ய சொல்கிறார்கள். நாங்கள் அவர்கள் செய்ய சொல்லாவிட்டால் செய்யமாட்டோம் என்று தவறான கருத்தை தமிழக மக்களிடத்திலே பரப்புவது நியாயமான கருத்தாக இல்லை. மேலும் மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது போல இன்று நமது தமிழகம் மட்டுமல்ல, ஏறக்குறைய இந்தியாவிலே ஆறு மாநிலங்கள் கடன் பாக்கிகளை திருப்பி செலுத்த வேண்டிய நிலையில் இருக்கின்றன. அந்த ஆறு மாநிலங்களில் தமிழகமும் ஒன்று. அந்த ஆறு மாநிலங்களுக்கும் சேர்த்து தான் மத்திய அரசு ஒரு தாக்கீதை அனுப்பியிருக்கிறது. உடனடியாக கடன் பாக்கிகளை வசூல் செய்து எங்களிடம் வாங்கிய பணத்தை திருப்பிக் கட்டுங்கள் என்று ஆறு மாநிலங்களையும் கேட்டிருக்கிறதே தவிர தமிழகத்தை மட்டும் கேட்கவில்லை என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

(முற்பகல் 11·00)

நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது போல இந்த ஆறு மாநிலங்கள் மட்டுமல்லாமல், இன்று நம்முடைய எதிர்க்கட்சியைச் சேர்ந்த சங்கரய்யா அவர்களும், அழகர்சாமி அவர்களும் மிகவும் தெளிவாகக் குறிப்பிட்டார்கள். பஞ்சாப்

குஜராத் போன்ற மாநிலங்களிலே வட்டியைத் தள்ளி வைத்து அசலை மட்டும் வசூல் செய்ய அவகாசம் அளித்திருக்கிறார்கள். ஆகவே அந்த நிலையை நீங்கள் கைக்கொள்ள வேண்டுமென்று அவர்கள் குறிப்பிட்டது போல, விவசாயிகளைக் கொடுமைப் படுத்தாமல் வசூலிப்பதற்கு நிறைய வழிவகைகள் இருக்கின்றன. குறிப்பாக ஒன்றை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

எங்களுடைய திருச்சி மாவட்டத்திலே திருச்சி மாவட்ட ஆட்சியாளர் அவர்கள் ஒரு நல்லமுறையைக் கையாண்டு வருகிறார்கள். அவர்கள் ஒவ்வொரு கிராமத்திற்கும் செல்கிறார்கள். ஒவ்வொரு கிராமத்திலும் கூட்டம் போடுகிறார்கள். விவசாயிகளை நீங்கள் பட்ட கடன்களை திருப்பிக் கட்டுங்கள் என்று கேட்டு ஒவ்வொரு ஊரிலும் கூட்டம் போட்டு, அந்த கூட்டத்தின் மூலம் வசூல் செய்து வருகிறார்கள். என்னுடைய தொகுதியான கிருஷ்ணராயபுரத்தில் பஞ்சாயத்து யூனியனில் சென்ற மாதம் அந்த கடன் திருப்பிச் செலுத்துவோர் கூட்டம் என்ற கூட்டத்தை திருச்சி மாவட்ட கலெக்டர் போட்டு ஆயிரக்கணக்கான விவசாயிகள் கடனை திருப்பி செலுத்தியிருக்கிறார்கள். இதுபோன்ற சுமூகமான முறையை, நல்லமுறையை விவசாயிகளை கொடுமைப்படுத்தாத முறையை கையாண்டு விவசாயிகளிடமிருந்து கொஞ்சம், கொஞ்சமாக வசூல் செய்ய நீங்கள் முன் வரலாம்.

மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியதைப் போல போதுமான மின்சார சப்ளை இல்லை, போதிய அளவு கிணற்றிலோ, ஆற்றிலோ தண்ணீர் கிடையாது. விவசாயிகள் பெரிதும் அவதிப்படுகிறார்கள். மேலும் திருச்சி மாவட்டத்தில் சென்ற மாதத்தில் ஒரு புயல் ஏற்பட்டு ஏறக்குறைய 30 லட்சம் ரூபாய் நஷ்டம் எற்பட்டது என்று நேற்று கூட இந்த அவையிலே பேசப்பட்டது. இதுபோன்று விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஒன்றை நான் ஆணித்தரமாக கூறிக்கொள்ள விரும்புகிறேன். விவசாயிகள் நிலத்தில் கால் வைக்கவிடவில்லை என்று சொன்னால் நிச்சயமாக இந்த மன்றத்தில் உட்கார்ந்து இருப்பவர்களும், அல்லது மற்றவர்களும் கூட சோற்றிலே கை வைக்க முடியாது, கொடுமையான பஞ்சம் ஏற்படும் என்று இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன்.

மத்திய அமைச்சர் ஆர். வி. எஸ். அவர்கள் மதுரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். நாங்கள் கொடுத்த கடனை விவசாயிகளிடத்திலிருந்து வசூல் செய்து கொடுங்கள் என்று தாக்கீது அனுப்பியிருக்கிறோமே ஒழிய அவர்களை சிரமப்படுத்தவோ அல்லது ஜப்தி செய்யவோ அல்லது போலீசை கொண்டு மிரட்டியோ வசூல் செய்ய சொல்லவில்லை என்று கிளியராகச் சொல்லியிருக்கிறார்கள்.

சென்றமாதம் விவசாய அமைச்சர் அவர்கள் பெங்களூர் வந்திருந்த போது தமிழகத்தைச் சேர்ந்த விவசாயிகள் சங்கங்கள் அகதனை பேரும் சேர்ந்து மத்திய அரசு தான் வசூல் செய்ய சொல்கிறது. என்று மாநில அரசு குறிப்பிடுகிறது என்று கூறிய போது, அது மாதிரி நாங்கள் சொல்லவில்லை. அதுபோல் மாநில அரசு சொல்லுமானால் அது * என்று மிகவும் ஆணித்தரமாகக் கூறியிருக்கிறார்கள்.

இந்தச் சமயத்தில் பணிவோடு தெரிவித்துக் கொள்வது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மற்றவர்களுக்கும், தவறான வாக்குறுதிகளை நீங்கள் மக்களுக்கு அளித்தீர்கள். தவறான ஒரு நிலையை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருகிறீர்கள். அந்த தவறான நிலையால் நான் நீங்கள் கஷ்டப்படுகிறீர்கள். இந்த நிலையால் எங்கள் மீது பழி சுமத்துவதற்கு, மத்திய அரசு தான் கொடுமைப்படுத்துகிறது என்று மத்திய அரசு மீது பழி போட வேண்டாம் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மேலும் இது பற்றி விவசாயப் பெருங்குடி மக்கள் பெரிதும் அவதிப்படுகிறார்கள். ஆகவே இதை தீர ஆராய வேண்டியிருப்பதாலும், ஜப்தி செய்யாமல் கடனை வசூல் செய்வது பற்றி ஆலோசிக்க வேண்டியிருப்பதாலும் இந்த அவையினுடைய இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த வார்த்தையை அவைக்குறிப்பிலிருந்து நீக்கி விடும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுக் கடன் பாக்கிக்காக ஜப்தி செய்வது பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லிவிட்டார்கள். மத்திய அரசு விவசாயிகளிடம் ஜப்தி செய்தாவது கடன் பாக்கிகளை நீங்கள் வசூல் செய்யவில்லையென்றால், தமிழக அரசு கறுப்புப் பட்டியலிலே சேர்க்கப்படும் என்று சொன்னதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மத்திய அரசுக்கு விவசாயிகள் மீது அனுதாபம் இல்லையென்று சொன்னால், அதற்காக மாநில அரசும் அனுதாபம் காட்டாமல் இருப்பது நியாயம் தானா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இன்றைக்கு நீங்கள் விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கும் போது எதை நம்பி நீங்கள் கடன் கொடுத்தீர்கள்? அவர்களுடைய வண்டி மாட்டை நம்பியோ, அல்லது அவர்கள் வீட்டிலே இருக்கிற தானியங்களை

** மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

நம்பியோ, அல்லது அவர்களது மனைவிமார்கள் கழுத்திலே போட்டிருக்கிற தங்க நகைகளை நம்பியோ கூட்டுறவுச் சங்கங்கள் கடன் கொடுக்க வில்லை. அவர்கள் வைத்திருக்கின்ற நிலத்தை நம்பித்தான் அந்தக் கடனைத் தந்திருக்கிறார்கள். நிலத்திலே விளைகின்ற விளைச்சல் மூலம் அந்தக் கடனைத் திரும்பச் செலுத்தி விடலாம் என்று நினைக்கின்ற சூழ்நிலையிலே, வறட்சியின் காரணமாகவோ, அல்லது புயல் போன்ற சூழ்நிலைகளின் காரணமாகவோ அந்தக் கடனைத் திரும்பச் செலுத்த முடியாத ஒரு சூழ்நிலை விவசாய பெருங்குடி மக்கள் மத்தியிலே ஏற்பட்டிருக்கிறது. எனவே, அப்படி ஒரு வேளை ஜப்தி செய்ய வேண்டுமென்ற எண்ணம் இருந்தாலும்கூட எதை ஈடுகட்டிக் கடன் வாங்கினார்களோ அப்படி ஈடுகட்டியதைத்தான் நீங்கள் ஜப்தி செய்ய வேண்டுமே தவிர, ஈடுகட்டாத வண்டி மாட்டையோ தங்க நகைகளையோ ஜப்தி செய்வது சரியல்லவென்று நான் இந்தச் சமயத்திலே சொல்லிக் கொள்கிறேன்.

அதேபோல் இன்றைக்கு எத்தனையோ பேர்களுக்கு எத்தனையோ வழிகளிலே நாம் உதவி செய்கிறோம். எங்கே, யாரோ, ஏமாந்து காட்மண்டுவிற்குச் சென்றவர்களை இங்கே அழைத்து வரக்கூட இந்த அரசு பல இலட்சம் ரூபாய் செலவு செய்து இருக்கிறது. ஆனால் உண்டி கொடுத்தோர், உயிர் கொடுத்தோர் என்று சொல்லப்படுகின்ற விவசாயப் பெருமக்களுக்கு உதவி செய்வதற்கு நீங்கள் பட்சபாதம் காட்டுவது மிகவும் வேதனைக்குரியதாக இருக்கிறது. எந்த வழியிலாவது வருமானத்தைப் பெற்று அந்த விவசாயிகளுடைய கடன் அத்தனையையும் ரத்து செய்வதற்கு, தள்ளுபடி செய்வதற்கு, ஜப்தி செய்யாமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்க வேண்டும். நமது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்கூட நிதிநிலை அறிக்கையிலே ஒன்றைக் குறிப்பிட்டார்கள் பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதைப் பற்றி. வசதி படைத்தவர்களிடமிருந்து தட்டி எடு, ஏழைகளுக்குத் தட்டிக் கொடு என்று சொன்னதைக் குறிப்பிட்டார். ஆனால், இன்றைக்கு அந்த ஏழைகளுக்குக் கொடுப்பதற்குப் பதிலாக ஏழைகள் மீது ஜப்தி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அந்த விவசாயப் பெருங்குடி மக்களுடைய துயரங்களைப் போக்குவதற்கு இன்னும் விரிவாகப் பேச வேண்டிய காரணத்தினாலே, இந்தச் சபையினுடைய இதர அலுவல்களை ஒத்தி வைத்து, இதை விவாதிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

* **திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குத் தமிழ்நாட்டிலே உள்ள இந்த ஜப்தி நடவடிக்கையினால் விவசாயிகளில் பெரும் பகுதி மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அது மாத்திரம் அல்லாமல் சென்ற ஆண்டு நம்முடைய அரசு விவசாயிகளுக்காக, ஏழை மக்களுக்காக, உண்மையிலேயே கிட்டத்தட்ட ரூ 200 கோடிக்குக் கூட அவர்களுடைய கடன்களைத் தள்ளுபட செய்திருக்கிறார்கள். அப்படி தள்ளுபடி செய்திருந்தாலுங்கூடி

எஞ்சியதை அவர்கள் இன்றைக்குக் கட்ட முடியாமல் இருப்பதற்கு ஒரு முழுமையான காரணம் மறுபடியும் மான்சூன் ஃபெயிலூர் தான். எங்கெங்கு நெல் உற்பத்தி செய்கிறார்களோ, அந்த நெல் உற்பத்தி செய்யக்கூடிய இடங்களிலே அந்த நெல்லை விற்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. அது மாத்திரம் அல்ல, இறவைப் பாசனங்கள் போன்ற இடங்களில் எல்லாம் பம்ப்செட் வைத்து கிணறுகளிலே தண்ணீர் இருந்தாலுங்கூட அதை வெளியே எடுக்க, ரெகுலரைஸ் செய்து, 4 மணியிலிருந்து 8 மணி வரை கரன்ட் கொடுக்கப்படும் என்கிற நிலை இல்லாமல், திடீர் திடீரென்று மின்சார பாதிப்பு ஏற்படுகின்ற காரணத்தினாலே, அந்த மின்சார பம்ப்செட் எரிந்துவிடுகின்ற காரணத்தினாலே அவர்கள் உணவு உற்பத்தியைப் பெருக்கி, அரசாங்கத்திற்குச் செலுத்தவேண்டியகடனைக் கட்ட முடியாதநிலையில்இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறார்கள்-ஆகையினாலே, இன்றைக்கு வசூல் செய்வதை நாங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை அந்த விவசாய மக்கள் நல்ல எண்ணம் படைத்தவர்கள். அரசாங்கத்திற்குக் கடனைக் கட்டுவதற்குத் தயாராக இருக்கிறார்கள்; ஆகையினால், இன்றைக்கு நாம் போட்டிருக்கிற உத்தரவை, ஜப்தி நடவடிக்கையை உடனடியாக நிறுத்தி வைக்க அரசாங்கம் இன்றைக்கே ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று நான் இந்த ஏழை விவசாயிகள் சார்பிலே பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-10)

அது மாத்திரமல்லாமல் சில ஜில்லாக்களில் கைது செய்யப்பட்டவர்கள் இன்றைக்கே விடுதலை செய்யப்பட்டு உயர்மட்டக் குழுவோடு இதைப்பற்றி பேசி மக்கள் மத்தியிலே எப்படி வசூலிக்க வேண்டுமென்ற ஒரு ஆலோசனையை செய்து வசூலிக்கக் கூடிய முறையினை ஏற்படுத்த வேண்டும். இங்கே அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், மத்திய அரசு உடனடியாக கடன்களை வசூலிக்க வேண்டுமென்று தாக்கீது அனுப்பியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள், தாக்கீது அனுப்பப்பட்டிருப்பது உண்மையாக இருந்தாலும்கூட எனக்கு முன்னாலே பேசிய பல உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னதைப் போல கர்நாடக மாநிலத்திலே குஜராத் மாநிலத்திலே, பஞ்சாப் மாநிலத்திலே மத்திய அரசின் தாக்கீதை வைத்துக் கொண்டே இன்று முழுமையாக வட்டியைத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். அதைப் போல நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையிலுங்கூட வட்டியைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். லாங்க் டெர்ம் லோனை வசூலிக்க 10 ஆண்டுகள் தவணையும், ஷார்ட் டெர்ம் லோனை வசூலிக்க ஒரு ஆண்டுக்கு லோன் கொடுக்கப்பட்டிருக்கிறது. 120 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டு இருக்கிறது.—3 ஆண்டு கெடுவை நிர்ணயித்து வசூலிக்கக்கூடிய நிலைமையை உருவாக்கினால் விவசாயிகளுக்கு சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து நெல் உற்பத்தி செய்யக் கூடியவர்கள் இன்றைக்கு விற்க முடியாமல் இருக்கிறார்கள். லெவி முறை இருப்பதாலே பெரிய வியாபாரிகள் கொள்முதல் செய்கிற போது அதிலே பாதியை அரசாங்கத்திற்குக் கொடுக்க வேண்டுமென்ற நிலை இருப்பதால் அவர்கள் அதிக விலைக்கு விற்க முடியாமல் அரசாங்கத்திற்குக் குறைந்த விலையிலே கொடுக்க வேண்டியிருக்கிறதே என்று எண்ணுவதால் அவர்கள் நெல் கொள்முதல் செய்வதில்லை என்ற நிலை இருக்கிறது. ஆகவே குறைந்த விலைக்கு விவசாயிகளிடமிருந்து நெல்லை அளக்காமல் இருக்கிறார்கள். இதனால் சிறு சிறு விவசாயிகள் நெல்லை விற்க முடியாமல் அவஸ்தைப்படுகிறார்கள். பக்கத்து ஊர்களுக்கு எடுத்துப் போக முடியாத நிலைமையில் கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே ஒரு ஏக்கருக்கு 2 மூட்டை வீதம் ஒரு குறிப்பிட்ட இடத்தில் கொண்டு வந்து கொடுத்துவிட வேண்டுமென்ற முறையிலே அரசாங்கம் சொல்லிவிடுமானால் அவர்கள் அந்த முறையிலே கொண்டுவந்து கொடுப்பார்கள், பாக்கியை அவர்கள் விற்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே அரசாங்கம் அந்த முறையிலே செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். உர விலை விஷம் போல் ஏறியிருக்கிறது. மத்திய அரசு கடன்களை வசூலிக்க வேண்டுமென்று தாக்கீது அனுப்பிக்கொண்டிருக்கிறது. கடன்களை கொடுப்பதற்கு தயாராக இருக்கிறோம். மத்திய அரசு உர விலையையும் குறைக்காமல் விலை ஏறிக் கொண்டிருப்பதால் விவசாயிகள் மிகவும் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலைகளையெல்லாம் விவாதிப்பதற்காக இந்த மன்றத்தின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் கடந்த சில ஆண்டுகளாக கூட்டுறவுக் கடன்களைத் திருப்பிச் செலுத்தாததன் விளைவாக தமிழ்நாட்டில் கூட்டுறவு ஸ்தம்பித்துப் போய்விடும் ஒரு நிலை உருவாகியுள்ளது. மேலும் இதனைத் தொடரவிடுவது மிகவும் ஆபத்தானது என்ற ஒரு நிலைகூட ஏற்பட்டிருக்கிறது. கூட்டுறவுச் சங்கங்கள் பசுமைப் புரட்சியிலும் பல்வேறு துறைகளின் முன்னேற்றத்திலேயும் ஆற்றிய பணி மகத்தானது என்பதை இந்த அவை அறியும். ஆழ்ந்து சிந்திப்போர் யாருமே கூட்டுறவு சங்கங்கள் நன்கு இயங்க வேண்டும் என்பதில் மாறுபட்ட கருத்தைக் கூறமாட்டார்கள். சுயநலத்திற்காக ஒரு சிலர், வசதிபடைத்த விவசாயிகள் கூட்டுறவு இயக்கத்தையே அழிக்கிற முயற்சியை அரசு கண்டிப்பாக உதாசீனப்படுத்த முடியாது. விவசாயிகளின் குறுகிய காலக் கடன்களை கிராம விவசாயி சேவை சங்கங்களும், நீண்டகாலக் கடன்களை பிரதம நிலவள வங்கிகளும் அளித்து வருகின்றன. குறுகிய காலக் கடன்களுக்கு விவசாய மறுநிதிக் கழகமும் 'அக்ரிகல்சுரல் ரீபைனான்ஸ் அன்ட்

டெவலப்மெண்ட் கார்ப்பரேஷனும்' உதவியை அளிக்கிறது. இன்றுள்ள கடன் நிலுவை விவரங்கள் குறுகிய காலக் கடன்கள் உடனடியாக வசூல் செய்யப்பட வேண்டிய நிலையிலே உள்ள கடன்கள் 76 கோடியே 81 லட்சமும் நீண்ட காலக் கடன்கள் 44 கோடியே 30 இலட்சமும் ஆகும். இந்த நிலுவையை 30-6-82-க்குள் கண்டிப்பாக வசூல் செய்யவேண்டுமென ரிசர்வ் வங்கியும் உலக வங்கியும் மைய அரசும் கூறியிருக்கிறார்கள். மிக முக்கியமான ஒன்று. இப்படி இந்த வசூலைச் செய்யாவிட்டால் என்ன விளைவுகள் ஏற்படும் என்பதையும் மைய அரசும், உலக வங்கியும், ஏ.ஆர்.டி.சி.யும் பின்வருமாறு கூறியிருக்கின்றன: மேற்கொண்டு ரிசர்வ் வங்கி குறுகிய கால கடன் வழங்க உதவியளிக்காது என்று கூறியிருக்கிறது. அடுத்த பயிர் செய்ய கடன் கிடைக்காமல் விவசாயிகள் இன்னல்களுக்கு உட்படுத்தப்பட்டால் அதற்கு அவர்கள் பொறுப்பு இல்லை என்றும்கூட சொல்லியிருக்கிறார்கள். விவசாயிகள் பாதிக்கப்பட்டு உணவு. எண்ணெய் வித்துக்கள் போன்ற விளைபொருட்களின் உற்பத்தி குறையும் நிலை உண்டாவதற்கும் ஏழை எளிய விவசாயிகள் மீண்டும் தனியார் நிறுவனங்களிடம் உயர்ந்த வட்டிக்கு வாங்கவேண்டிய நிர்பந்தத்திற்கு உள்ளாவதற்கும் பல கூட்டுறவு நிறுவனங்களிலே சங்கங்களிலே பணியாற்றுகின்றவர்களுக்குக் கூடசம்பளம்கொடுக்க முடியாத சூழ்நிலை உருவாவதற்கும் நியாய விலைக் கடைகளை விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் தான் நடத்துகின்றன. அது நடத்த முடியாத அளவிற்கு இன்னல்கள் ஏற்படுகின்ற நிலைமை இந்தக் கடன்களை வசூலிக்காமல் இருந்தால் ஏற்படும் என்பதை அவர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

நீண்ட காலக் கடன்களைப் பொறுத்த மட்டில், மைய அரசு விவசாய மறுநிதி வளர்ச்சிக் கழகம் மற்றும் உலக வங்கியினர் 30-6-82 தேதிக்குள் பாக்கிகளை வசூல் செய்தால்தான் மேற்கொண்டு உலக வங்கியின் உதவி கிடைக்குமென்று திட்டவட்டமாக அறிவித்துள்ளார்கள். அப்படி வசூல் செய்யப்படுமென்ற உறுதி அளித்ததால்தான் சமீபத்தில் அமெரிக்காவில் நடந்த பேச்சு வார்த்தைகளில் தமிழ் நாட்டிற்கும் உதவி கிடைக்கும் வாய்ப்பு வந்துள்ளது. ஆனால் நாம் வசூல் செய்கிறோமா என்பதை அவர்கள் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். உலக வங்கி அதிகாரிகளே நேரில் வந்து பார்க்கவும் போகிறார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் விவசாயிகளுக்காக ஒன்றுமே செய்யவில்லை என்ற பொருள் உண்டாகும்படி மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் பேசினார்கள். கடந்த காலத்தில் விவசாயிகள் நலன்களைப் பெற்றிருந்தார்கள்; தற்போது கொடுமைகளைச் சந்திக்கிறார்கள் என்றுகூடச்சொன்னார்கள். இது எந்த அளவிற்கு ஆதாரமற்ற ஒன்று என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கடந்த எந்தக் காலத்திலும் தமிழக அரசில் மட்டுமல்ல. பாரதத்திலே எந்த அரசும் ஒரு குறுகிய காலத்தில் அறிவிக்காத சலுகைகளை 1977 முதல் 1981 வரை கிட்டத்தட்ட 200 கோடி ரூபாய் அளவிற்கு விவசாயிகளுக்கு—அகில இந்திய ரீதியிலே முன்பு எந்த அரசும் செய்யாத அளவுக்கு சலுகைகளைச் செய்தது மாண்புமிகு புரட்சித் தலைவரவர்களுடைய இந்த அரசுதான் என்பதை நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இருந்தும் தற்போது கட்டாயமாக வசூல் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் வந்துள்ளது. முன்னால் கூறியது போல வேளாண்மை மறுநிதி வளர்ச்சிக் கழகம், ரிசர்வ் வங்கி, மைய அரசு ஆகியோர் இதுபற்றி நமக்கு பலமுறை கடிதங்கள் எழுதியுள்ளார்கள், பல கூட்டங்களிலும் இதுபற்றிப் பேசப்பட்டுள்ளது. பொதுவாக அவர்கள் கூறியுள்ளது, வசூலை எக்காரணத்தைக் கொண்டும் நிறுத்தி வைக்கக் கூடாது; ஜப்தி நடவடிக்கைகளும் எடுக்க வேண்டும்; மாநில அரசின் சொந்த நிதியிலிருந்து கொடுத்துக்கூட கடனைத் தள்ளுபடி செய்யக்கூடாது; ரிசர்வ் வங்கி விதிகள் படியும் வேளாண்மை மறுநிதி வளர்ச்சிக்கழக விதிகள் படியும் குறிப்பிட்ட காலங்களில் நிலுவை அனுமதிக்கப்பட்ட அளவுக்கு மேல் இருக்கக் கூடாது; மாநில அரசு தன் நிதியிலிருந்து இந்தக் காரியங்களுக்கு செலவு செய்வது திட்டங்களுக்கான பணத்தை வீணாக்குவதாகும் (டைவர்ஷன் ஆஃப் ப்ளான் ஃபண்ட்ஸ் ஃபார் நான்—ப்ளான் பர்ப்பசஸ்) கடன்களை ரத்து செய்ய மைய அரசு நிதி உதவி அளிக்காது என பல கடிதங்களில் சொல்லியிருக்கிறார்கள். 1979 ஜூன் 27 ஆம் தேதி மைய விவசாய அமைச்சர் ராவ் பிரேந்திர சிங் அவர்கள், கடன்களை வசூலிக்க வேண்டும், கூட்டுறவு இயக்கம் ஸ்தம்பித்து விடக்கூடாது என்பதற்காகவும் ஒரு கடிதத்தை எழுதினார்கள். அதையடுத்து பிப்ரவரி 27, 1980-இல் மாண்புமிகு விவசாய அமைச்சர் ராவ் பிரேந்திரசிங் அவர்கள் மாண்புமிகு தமிழக கவர்னர் அவர்களுக்கு கடிதம் எழுதியிருக்கிறார்கள். அதிலே தெளிவாகச்சொல்லியிருக்கிறார்கள்.

"The World Bank which provides substantial finance for the A.R.D.C. has laid down that banks which do not have satisfactory performance in collection can not be included under the World Bank project fiuance. The Land Development Bank of your State is one such institution. Unless effective steps are taken for the recovery of loans due, I am afraid that your State may be faced with a chocking of funds through the Land Development Banks which will hamper Development programmes. Despite certain steps taken by the Government in the light of these discussions and programme or Rehablitation suggested, the overdues of the Land Development Banks have risan from 67.10% to 79.32 as on 30th June 1979. 188 out of 223 primary land development banks were tatally ineligible for re-finance facility. It is apprehended that the situation has not improved materially since but may have worsened. I shall, therefcere be grateful if you could have this looked in to so that effective strps are taken to recover overdues on a priority basis."

(முற்பகல் 11.20)

என, எபக்டிவ் ஸ்டெப்ஸ் என்பதை அவர் வெறும் ஐப்தி என்று மட்டும் அல்லாமல், மிகக் கடுமையாக தீவிர நடவடிக்கை எடுத்து வசூலை செய்யவேண்டுமென்று 1980 ஆம் ஆண்டு பிப்ரவரி 27–லே, மாண்புமிகு கவர்னருக்கு எழுதி இருந்தார். அதை அடுத்து பாரத பிரதமர் 1980 ஆகஸ்ட் 30-ந் தேதி மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு ஒரு அஞ்சல் எழுதி இருக்கிறார்கள்.

"As stated by the Union Finance Minister, if a State Government wishes to go ahead with any scheme to write off co-operative loans they must do so with their own funds and no central assitance can be given for this purpose. However, I should like to point out that such decisions have serious implications in regard to the future of the co-operative credit system, repayment of dues of co-operative institutions and the re-cycling of funds so as to effectively serve the farming community. The decision is also likely to generate similar presures in other State and results in a general division of scarce resources from plan to non-plan expenditure. It would be advisable not to fritter away resources which are needed for development of backward areas and weaker sections."

என்று சொல்லிவிட்டு, மாண்புமிகு பிரதமர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள்.

"While in several parts of India, 1979-80 was a year of serious darught and hence a year in which the repayment ability of the farmer hos been badly ereded, this is not so in Tamil Nadu."

என்று சொல்லி இருக்கிறார்கள். பாரதப் பிரதமர் அவர்கள் பாரதத்திலேயே வறட்சி ஏற்பட்டு பாதிப்பு அதிகமாக ஏற்பட்டு இருந்தாலும் தமிழ்நாட்டில் அத்தகைய வறட்சி ஏற்படவில்லை என்ற அந்தக் கருத்தை பாரதப் பிரதமர் ஆகஸ்டு 30, 1980-ல் எழுதி, தமிழகத்தில் அத்தகைய வறட்சி ஏற்படவில்லை என்று சொல்லிவிட்டு, சொல்லுகிறார்—

In fact in 1979-80 Tamil Nadu's foodgrain production I understand is somewhat higher than tha in 1978-79. Hence when compared to mos other a a es in India; Tamil Nadu has much less ju ification for having recourse to a blanket wri e off of loans for all small and marginal farmers.

நல்ல நிலையிலேயே தமிழகத்தின் உணவு நிலை இருக்கிறது என்று நான் அறிகிறேன். தமிழகம் மற்ற மாநிலங்களை விட விவசாயத்திலே வளமாக இருக்கிறபோது கூட்டுறவுக் கடனை

ரத்து செய்வது தவறு என்பதை மாண்புமிகு பிரதமர் சுட்டிக் காட்டி இருக்கிறார்கள். அதை அடுத்து 2.12.1980 அன்று திரு ராவ் பிரேந்திர சிங், மத்திய விவசாய அமைச்சர் அவர்கள் மறுபடியும் ஒரு அஞ்சலை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எழுதி இருக்கிறார்கள்.

"Please refer to my D.O. letter No. 574. Minister (Agri)/80 dated, 27th February 1980 to Shri Prabudos Pawari former Governor Tamil Nadu regarding the implementation of he programme sugge ted for rehabilitating he Tamil Nadu Sta e Land Development Bank In his reply Shri Patwari indicated the steps taken by the Tamil Nadu Government for implmenting the rehabilitation programme I am sure you must have had an opportunity to review the financial Position and Performance of the SLDB.

என்று சொல்லி

"Descite certain meaures taken by the State Government in implemening he rehabilitaion programme, I find that the ov r dues Position of the SLDB and i s primaries continues o be unsa isfac ory."

அதை அடுத்து சொல்லுகிறார்கள்.

"At that time an assurance was given that the State Government would vigorously pursue the implmentation of the ime bound rehabilitation programme to ensure tnat the SLLBS and other primaries improve the recovery performance and eligibility. Uuless firm measures are taken by he State Governmen to reverse the trend, I am afraid the SLDBS s ructure in Tamil Nadu may not be able to perform i s role as an ins rument providing investment credit to reali e the VI plan objectives relating to land develeem nt, minor irriga ion Subsidiary occupations' forestry and oiher allied activities."

என்று சொன்ன மத்திய அமைச்சர் அவர்கள் இறுதியிலேயே இன்னும் சற்று கடுமையாக சொல்லுகிறார்—

"The IDA has withheld sending its Appraisal M s ion in the light of mounting overdues in the LDB structure of certain States including Tamil Nadu."

மாண்புமிகு மைய அமைச்சர் 2.12.80-ல் எழுதுகிறபோது தமிழகத்தைப் பொறுத்தவரையிலும் உலக வங்கியினுடைய உதவி அடுத்த ஆண்டுக்கு, அடுத்து கடன் பெறுவதற்காக எவ்வளவு தரலாம் என்ற ஆய்வுநடத்த வருகிற குழுவையே தமிழகத்திற்குப் போகவேண்டியதில்லை என முன் கூட்டியே அவர்களை பிளாக் லிஸ்ட் செய்து விடலாம் என்ற முடிவுக்கு வந்துவிட்டார்கள் என்பதனை மாண்புமிகு மைய அமைச்சர் ராவ் பிரேந்திர சிங் அவர்கள் 2.12.80—ல் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

அவர் அதைச் சொல்லிவிட்டு –

The project now hinges on the progress made in the States in improving the recovery position and eligibility of the SLDB. You will share with me the anxiety that we should not lose IDA assistance due to lack of satisfactory performance in few States.

என அந்தத் தேதியிலே குறிப்பிட்டார்கள். அதை அடுத்து அதே தேதியில்

I am aware of the recent steps taken by the State Government to enforce action against the wilful defaulters. I hope that the State Government would lend its support to the LDB and ensure the recovery of its dues so that the SLDB regains its position of one of the premier co-operative credit institutions in the country.

I shall be grateful if you could kindly have the matter thoroughly reviewed and advise us of the action being taken to improve the recovery position of the co-operative land development banking sructure in your States.

என்று அந்த அஞ்சலில் அவர்கள் எழுதினார்கள். அதைத் தொடர்ந்து மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர், திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள், 3-12-80ல் தொடர்ந்து மத்திய அரசிலிருந்து ஒரு கடிதம் எழுதுகிறார்கள். அதில் அவர்கள்

I am writing this letter to invite your personal attention to the very srious and critical problem of overdues of the State Land Development Bank and those of the primary land development banks of Tamil Nadu. The latest estimates of overdues furnished by the ARDC shows a sharp deterioration in the position of recovery of dues. I find that in the case of Tamil Nadu the position continues to be serious both at the State Land Development Bank (SLDB) level as also at the primary Land Development Bank (SLDB) level.

The on-going ARDC project is likely to be fully disbursed in the next few months and we are now engaged in a dialogue with the World Bank and other international donors for mobilising further credit assistance for the next ARDC IV Project scheduled to start in December 1981. In this context the very sharp deterioration in the overdues position in Tamil Nadu is causing us deep concern. The World Bank have pointed out to us the worsening overdues position of the SLDE and PLDBS and have indicated that Tamil Nadu State may not even be eligible.

இங்கேதான் நாம் கவனிக்க வேண்டியது. மாண்புமிகு மத்திய நிதிஅமைச்சர் அவர்கள் எழுதுகிறார்கள். உலக வங்கி சொல்லி விட்டதாக சொல்கிறார்கள்.

For continued participation in ARDC III when the strict eligibility criteria of recovery of 50% overdues come into force shortly. The continuance of this situation will naturally affect adversely the State inclusion in ARDC IV by the world Bank

தமிழக விவசாயப் பொருளாதாரத்தில் அக்கரை உள்ள மத்திய நிதி அமைச்சர் மாண்புமிகு திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் உலக வங்கி இடத்திலே, தமிழ்நாடு இடம் பெறாமல் போய்விடும், அந்தச் சூழ்நிலையை உருவாக்காதிர்கள் என்று எழுதுகிறார்கள். It will be most embarrassing if such situation were to arise as it would detract from the objective of nation-wide coverage of ARDC credit projects.

என்று அவர் எழுதிவிட்டு

Immediate steps are therefore necessary to remedy the situation.
என்று அவர் எழுதிவிட்டு

It seems from the position of overdues of SLDB and PLDBs that no vigorous follow-up action has been taken for implementing rehabilitation programme and to recover overdues.

மாநிலஅரசு கடன் நிலுவைகளை வசூல் செய்ய விகரஸ் ஸ்டெப்ஸ் கடுமையான நடவடிக்கை எடுக்கவில்லை என்று நான் அறிகிறேன் என்று எழுதியிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டின் சார்பிலே டெல்லியிலே உள்ள அமைச்சர் அவர்கள் எழுதியிருக்கிறார்கள்.

As the situation has now become critical and there is a likelihood of exclusion of Tamil Nadu from ARDC III and ARDC IV of World Bank.

சென்ற ஆண்டு இறுதிக்குள்ளே டிசம்பர் 81 வாக்கிலே தமிழகம் பிளாக்லிஸ்டு-க ஏற்பட வேண்டிய நிலை இருந்தது. அதைக் காப்பாற்றியது நாங்கள் எடுத்த முயற்சி மட்டுமல்ல, மத்திய அமைச்சர் மாண்புமிகு வெங்கட்ராமன் அவர்கள் தமிழகம் பிளாக் லிஸ்ட் ஆகிவிட்டால், தமிழகத்தின் முன்னேற்றம் பாதிக்கப்பட்டுவிடும் என்று தனிப்பட்ட முறையில் முயற்சி எடுத்த காரணத்தினால், தமிழகம் பிளாக் லிஸ்ட் ஆகிற நிலையில் இருந்து தப்பித்தது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, மாண்புமிகு அமைச்சர் ராவ் பிரேந்திர சிங் அதை அடுத்து ஏப்ரல் 27, 1981 அதே போல் ஒரு கடுமையான கடிதம் எழுதுகிறார்கள்.

While in some cases non-payment may be accounted for by adverse seasonal conditions, the main reasons for accumulation of loan dues are connected with wilful default and a poor climate for recovery

The co-operative credit instutions are the major instruments providing credit to the agriculturists. If their capacity to meet the increasing needs of the rural sector is impaired in any way the pace of progress in rural areas will itself be jeopardised. It is therefore, necessary to refrain from taking decisions.

இதுதான் நாம் முக்கியமாக கவனிக்க வேண்டிய ஒன்று. மத்திய ஸ்டேட் காபினட் அமைச்சர் திரு ஆர். வி. சுவாமிநாதன் அவர்கள் மத்திய அரசு ஜப்தி நடவடிக்கை எடுக்கச் சொல்லவில்லை என்று சொல்கிறார்கள், அது எந்த அளவிற்கு ஒரு தவறானது, அவர் அப்படிச் சொல்லியிருக்கமாட்டார்கள் என்று நம்புகிறேன் அவருக்கும் மேல் இருக்கின்ற, சம்பந்தப்பட்ட நிதி அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட விவசாய அமைச்சர் அவர்கள் ராவ் பிரேந்திரசிங் பிறகு பிரதம அமைச்சர் அவர்கள் அதிகாரபூர்வமாக லெட்டர் எழுதியிருக்கின்ற போது, பத்திரிகையிலே இப்படி அந்தச் செய்தியைச் சொன்னார் என்று நான் நம்பவில்லை.

(முற்பகல் 11.30)

காரணம் அவருக்கு மேலே இருக்கிற அமைச்சர் அதிகாரப்பூர்வமாக கையெழுத்திட்டு தமிழக அரசுக்கு எழுதி இருப்பதால் அவர் பத்திரிக்கைக்கு சொல்லியிருகின்ற செய்தியை நான் நம்பவில்லை. ஒரு பொறுப்பான பதவியில் இருக்கிற மாண்புமிகு ஆர். வி. சுவாமிநாதன் அவர்கள் அதுவும் விவசாயத் துறையிலே இருக்கிற ஒரு அமைச்சர் இதை தெரியாமல் இருக்க மாட்டார்கள் கடன் வசூல் செய்ய நடவடிக்கை எடுங்கள் ஜப்தி நடவடிக்கை மட்டுமல்ல, இத்தகைய கடுமையான நடவடிக்கைகளை எடுத்து கடனை வசூல் செய்ய வேண்டுமென்று எழுதி இருக்கும்போது இவர் இப்படி சொல்லியிருக்க மாட்டார் என்று கருதுகிறேன் அடுத்து சொல்கிறார்.

"It is therefore necessary to refrain from taking decision that have long-term adverse effects on the efficient functioning of the co-operative credit institution like blanket measures for write-off or suspension of recovery or total ban on the use of coercive processes

மாநில அரசு எந்தவித முடிவையும் எடுக்கக்கூடாது என்று மாண்புமிகு அமைச்சர் ராவ் பிரேந்திரசிங் அவர்கள் சொல்கிறார்கள். எத்தகைய முடிவு எடுக்கக்கூடாது என்றால்,

ban on the use of coersive processes

ஜப்தி போன்ற கடுமையான நடவடிக்கை எடுப்பதை நிறுத்துவதற்கான ஒரு டெசிஷனை மாநில அரசு எடுக்கக்கூடாது என்று மத்திய அமைச்சர், மாணபுமிகு ஆர்.வி. சுவாமிநாதன் அவர்களுக்கு மேலே இருக்கிற ஒரு விவசாய அமைச்சர் அவர்களே

கையெழுத்திட்டு தமிழக அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். ஒரு வேளை இது விவசாய துணை அமைச்சர் திரு. சுவாமிநாதன் அவர்களுக்குத் தெரியாமல் இருக்கலாம், அல்லது அவர் ஒன்றை சொல்லி பத்திரிகையில் வேறு ஒன்று வந்திருக்குமோ என்று நான் அச்சப்படுகிறேன்.

அதை அடுத்து ரிசர்வ் வங்கி ஒரு அஞ்சலை தமிழக அரசுக்கு எழுதி இருக்கிறது.

"The Prime Minister has declared that this year should be the year of productivity. The high level of overdues in the corperative credit structure in your state is one of the areas which has been causing a serious concern to all of us for quite some time. As will be seen from the following data, the overdues position contionus to be unsatisfactory in the last 2–3 years although 1980–81 crop seasons were, by and large, satisfactory in various parts of the country, Particularly in Tamil Nadu......"

தமிழ்நாட்டிலே நல்லமுறையில் விவசாயம் இருந்த போதிலும் வாங்கிய கடனை ஏன் திருப்பித் தராமல் இருக்கிறார்கள்? ஏன் நடவடிக்கை எடுககவில்லை என்று சொல்லி விட்டு — இங்கேதான் மாண்புமிகு உறுப்பினர்கள் கவனிக்க வேண்டும் — மீண்டும் ஜப்தி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று எழுதுகிறார்கள்.

"As you are aware, the Study Team on Overdues of Co-operative Credit instituions (1974) constituted by the Reserve Bank had analysed the reasons for the mounting level of overdues in co-operatives and had come to the conclusion that the defauls were, by and large, willfull and lack of will and discipline among the cultivators to repay were the Principal factors responsible for the prevalence of overdues in the Co-operatives The study Team further observed that the apathy of the managements of co-operatives in taking quick action against recalcitrant members and absence of favourable climate, for which the state Governments were primarily responsible, had, interalis served as the contributory factor for the mounting overdues........

இந்த கூட்டுறவுக் கடனை வசூல் செய்யாமல் இருப்பதற்கு மாநில அரசுதான் பொறுப்பு என்று சொல்கிறார்கள்.

THIRU DURAIMURUGAN: On a Point of order, Sir.

Hon. THIRU C.PONNAIYAN: I am not yielding. It is a very important discussion. The hon. Member may raise his poin at the ent

THIRU DURIMURUGAN: Sir, I am raising a very important point of order.

HOn.THIRU. C. PONNAIYAN: The hon.Member has got the right to raise his point after I conclude my speech. I am not yielding now.

THIRU DURAIMURUGAN: I am on a point of order, Sir.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: துணைத் தலைவர் அவர்களே, நான் தொடர்ந்து படிக்க தாங்கள் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

The hon .Member has got the right to take up the point immediately after I conclude my reply.

"....The study Team had made recommendations for arresting the deteriorating trend of overdues and these were communicated to you and the co-operative institutions for implementation....

திரு. துரைமுருகன் : ஒன்று ஆங்கிலத்தில் படிக்கச் சொல்லுங்கள் அல்லது தமிழில் படிக்கச் சொல்லுங்கள். ஆங்கிலத்திலும் தமிழிலும் மாறி, மாறி படித்து ஏன் டைம் வேஸ்ட் செய்கிறார்?

HON.THIRU C.PONNAIYAN: It is further stated in the letter:

"..You will appreciate that there is an urgent need for initiating appropriate steps for tackling the problems of overdues, on the priority basis, if the co-operative credit structure is to provide adequate financial support to the programs of agricultural development. In this connection....(interruption)

நான் படித்து ஆக வேண்டும். காரணம் மைய அமைச்சர் ஒன்றை எழுதியிருக்கிறார். அது மாண்புமிகு ஆர்.வி. சுவாமிநாதன் அவர்களுக்குத் தெரியாமல் இருக்க முடியாது. (குறுக்கீடு) திரு. துரை முருகன் அவர்களுக்கு ஆங்கிலமும் தெரியும். தமிழும் தெரியும் என்பது எனக்கு நன்றாகத் தெரியும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை முருகன் அவர்கள் அண்ணா வழியில் வந்தவர்கள். அண்ணா அவர்கள் ஆங்கிலத்தையும், தமிழையும் ஏற்றுக் கொண்டார்கள். மத்திய அரசிலிருந்து எழுதியிருக்கும் கடிதம் ஆங்கிலத்தில் தான் இருக்கிறது. அதை அப்படியே படித்தால் 'எபெக்டிவ்வாக' இருக்கும் என்பதால் படிக்கிறேன். விளக்கம் தரவேண்டும் என்பதற்காகத் தமிழில் சொல்கிறேன்.

ரிசர்வ்வங்கி வெகு அண்மையில்-11.1.82 அன்று ஒரு கடிதம் எழுதியிருக்கிறது. அதில் தெளிவாக ஜப்தி நடவடிக்கை பற்றி எழுதியிருக்கிறார்கள்.

"...It is also essential on the part of the State Government to create proper climate for recovery of co-operative dues by initiating coercive action for recovery of dues from the wilful defaulters..."

இங்கே கூட, சடும் நடவடிக்கைகள், கொடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் திருவேங்கடம் அவர்கள் சொன்னார். ஜப்தி என்று பொருள் வரக்கூடிய முறையில் 'கொயர்ஸிவ் ஆக்ஷன்' என்ற வார்த்தையை ராவ் பிரேந்திர சிங்-மைய வேளாண்மை அமைச்சர் பயன்படுத்தியிருக்கிறார். ரிசர்வ் வங்கியும் பயன்படுத்தியிருக்கிறது. அந்த அடிப்படையில் தான் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் கூட அறிவித்து இருக்கிறார்கள்.

In regard to the write-off by the State Government of the outstanding payments, they will be adjusted against the Central assistance by the Central Government to the State Five Year Plan or non-Plan.

கூட்டுறவுக் கடனை மாநில அரசு தன்னுடைய சுய வருவாயிலிருந்து ஒருவேளை ரத்து செய்வார்களானால், அப்படி ரத்து செய்யக்கூடாது, தப்பித் தவறி ரத்து செய்தால், இந்த மாநில அரசுக்கு பிளான், நான்-பிளான் பிராஜெக்ட்ஸ்ஸுக்கு மத்திய அரசு தர இருக்கிற நிதியிலிருந்து பிடித்து விடுவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இதை வேறு யாரும் சொல்லவில்லை, பாரதப் பிரதமர் அவர்களே சொல்லியிருக்கிறாாகள்.

17-3-82—ல் டெல்லியில் ஒரு பெரிய கூட்டத்தை மத்திய அரசு கூட்டியது. திரு. ராவ் பிரேந்திரசிங் அமைச்சரவை மூலமாகக் கூட்டப்பட்டது. அந்தக் கூட்டத்தில் அவர்கள் சொன்னார்கள். தெளிவாக மைய அரசு சொல்லியிருக்கிறது. எப்படியும் இந்த வசூலில் முன்னேற்றம் காட்டியாக வேண்டும்; வசூலை நிறுத்தக் கூடாது. ஜப்தி போன்ற நடவடிக்கைகள் கூட எடுக்கவேண்டும் என்று அந்தக் கூட்டத்தில் முடிவு செய்து, தெரிவித்து இருக்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவையில் நான் கூறிய இந்த விளக்கத்தின் மூலமாக டெல்லி அரசாங்கம், உலக வங்கி, பாரதப் பிரதமர், மாண்புமிகு மத்திய விவசாய அமைச்சர் ராவ் பிரேந்திரசிங், மாண்புமிகு மைய நிதி அமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன், ரிசர்வ் வங்கி ஆகியோர் சொன்ன நடவடிக்கைகள் சாதாரண நடவடிக்கைகள் அல்ல-கோயர்சிவ் ஸ்டெப்ஸ், இம்மீடியட் ஸ்டெப்ஸ், ஸ்பீடி ஸ்டெப்ஸ் எல்லாம் எடுக்கவேண்டும் என்று மாநில அரசுகளுக்கு அறிவுறுத்தி, அப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுத்து, அந்த வசூலை 30-6-82-க்குள் செய்யாவிட்டால்

தமிழகம், உலக வங்கியிடமிருந்து உதவி அடுத்து பெறுவதற்கான தகுதியை இழந்து விடும் என்கிற நிலையை நமக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். முன்னரே அந்த நிலையேற்பட்டு கிட்டத்தட்ட 6 மாதத்திற்கு முன்னாலேயே தமிழகம் ஒரு இருண்ட சூழ்நிலைக்குச் செல்லும் ஒரு பயங்கரமான நிலை இருந்தது. மாநில அரசு எந்த ஆட்சியிலும் இல்லாத அளவிற்கு 200 கோடிக்கு தள்ளுபடி செய்தோம். அதிலே கிட்டத்தட்ட 75 கோடி ரூபாய் வழிவகைக் கடன்கள் என்ற முறையில் கூட்டுறவு சங்கங்கள், மைய வங்கிகள் லேண்ட் மார்ட்கேஜ் பேங்க், டெவலெப்மென்ட் பேங்க் ஆகியவற்றிற்கெல்லாம் அவர்கள் கடன் பெறும் தகுதியை பெற வேண்டும் என்பதற்காக தந்த காரணத்தால், மைய அரசும், இப்பொழுது இருக்கும் ஆர். வி. சுவாமிநாதன் போன்றவர்களும், உலக வங்கியிடம் பேசிய காரணத்தால் தான், 6 மாதத்திற்கு முன்னாலலேயே பிளாக் லிஸ்ட் ஆகும் நிலையில் இருந்து தப்பித்தோம் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். 6 மாதம் அவகாசம் வேண்டும என்று இந்த அவையில் கேட்டார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவா அவர்களும் விவசாயிகளின் நலன் கருதி, இந்த அவையில் கேட்டதற்கு இணங்கவும், விவசாயப் பிரதிநிதிகள் கேட்டதற்கு இணங்கவும் கடும் நடவடிக்கை எடுத்து வசூல் செய்யக் கூடாது என்று 6 மாதத்திற்கு கேட்டு, ஒத்தி வைத்தார்கள்.

(முற்பகல் 11.40)

மாநில அரசு ஒத்தி வைத்தால் மைய அரசும், உலகவங்கியும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களும் கண்டிப்பார்கள். வசூலிப்பதற்கு கடும் நடவடிக்கை எடுக்காமல் நிறுத்தி வைக்கின்ற காரணத்தால் உலக வங்கியின் கடன் கிடைக்காமல் தமிழ்நாடு ப்ளாக் லிஸ்டிலே சேருமேயானால் அதற்கு தமிழக அரசுதான் பொறுப்பு என்ற அளவிலே மைய அரசு மாநில அரசுக்கு எழுதிவிட்டதற்குப் பிறகும். அப்படி அஞ்சல் மூலமாகக் குறிப்பிட்டுச் சுட்டிக் காட்டியதற்குப் பிறகும் வசூல் செய்யவில்லை என்றால் அடுத்த ஆண்டுக்கு 300 கோடி, 400 கோடி ரூபாய் கடன் கிடைக்காத நிலைமை ஏற்பட்டு கூட்டுறவுச் சங்கங்களை எல்லாம் இழுத்து மூடவேண்டிய நிலைமை ஏற்படும். அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டால் அதற்கு யார் பொறுப்பு ஏற்பது என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும். 20 சதவீத பணக்கார விவசாயிகள் தூண்டிவிடுவதன் காரணமாக போராட்டம் நடத்துவதன் காரணமாக விவசாயக் கடன்களை வசூலிப்பதை நிறுத்திவிட்டால் மைய அரசு சொல்லி இருப்பது போன்று தமிழகம் ப்ளாக் லிஸ்டிலே சேர்க்கப்பட்டுவிடும், அதனால் அடுத்த வருஷத்திற்கு உதவிகள் எதுவும் கிடைக்காமல் விவசாயமே செய்ய முடியாமல் போய் கிராமப் பொருளாதாரமே ஸ்தம்பித்து நின்றுவிடும். 20 சதவீத பணக்கார விவசாயிகள் கையிலே உள்ள பணத்தை வைத்துக்கொண்டு விவசாயத்தை நடத்தி விடுவார்கள். ஆனால்

மீதமுள்ள 80 சதவீத விவசாயிகளுக்கு எந்தவிதமான கடனும் கிடைக்காத காரணத்தால் அவர்களால் விவசாயம் செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டு கிராமப் பொருளாதாரமே சீர் கெட்டுவிடும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அரசியலுக்கு அப்பால் நின்று எண்ணிப் பார்க்க வேண்டும். ஏழை விவசாயிகளின் நலனிலே அக்கறை கொண்டு அவ்வாறு எண்ணிப் பார்க்க வேண்டும்.

அடுத்து கடுமையான நடவடிக்கைகளை எல்லாம் எடுக்கிறோம் என்று மாண்பமிகு உறுப்பினர் சிலர் சொன்னார்கள். கண்டிப்பாக அப்படி நடக்கவில்லை. எப்படி எப்படி வசூலிக்க வேண்டும் என்று நிர்ணயித்திருக்கிறோம். எல்லா விவசாயிகளிடத்திலேயும் ஜப்தி செய்யவேண்டும் என்று சொல்லவில்லை. ட்ராக்டர் வைத்திருக்கிறார்கள், கார் வைத்திருக்கிறார்கள். பெரிய பங்களாக்கள் வைத்திருக்கிறார்கள். சினிமா தியேட்டர் மட்டுமல்லாமல் பெரிய மில்கள் கூட வைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் கடனைக் கட்ட மறுக்கிறார்கள். அப்படி இருக்கின்ற சுமார் 20 சதவீதம் பணக்காரர்கள் வாங்கி இருக்கின்ற கடன் ஒட்டுமொத்தக் கடனிலே 50 சதவீதத்திற்கு மேல் இருக்கின்றது. அவர்கள் இப்படிப்பட்ட போராட்டத்தைத் தூண்டி விடுகிறார்கள். ஆகவே கடன்களை ரத்து செய்துவிட்டால், அல்லது ஒத்திவைத்துவிட்டால், வசூலிக்காமல் விட்டுவிட்டால் தமிழகம் ப்ளாக் லிஸ்ட்டிலே சேர்க்கப்பட்டுவிடும் என்றும் அதனால் கடன்கள் எல்லாம் கூட கிடைக்காத சூழ்நிலைகள் ஏற்படும் என்று மைய அரசு சொன்னதற்குப் பிறகும் வசூலிக்காமல் இருந்தால் ஏற்படுகின்ற நிலைமைக்கு யார் பொறுப்பேற்றுக் கொள்வது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

மேலும் இந்த அரசைப் பொறுத்தவரையிலே Electric and oil engires should not be attached, where there are standing crops requiring irrigation.

Necessary wearing apparel, cooking vessels, beds and cots of the borrowers and members of his family should not be attached. என்று தெளிவாகச் சொல்லி இருக்கிறோம்.

Small household articles, the doors and windows of the houses of the borrower should not be attached as such a trachment may not help recovery but will only attract criticism from public. என வீட்டிலே உள்ள பொருட்களை ஜப்தி செய்யக்கூடாது என்று சொல்லி இருக்கிறோம்.

One pair of plough bulls belonging to the borrower should not be subject to attachment. Milch animals should not be attached. அது மட்டுமல்ல ஒரு விவசாயிக்கு இரண்டே எருதுகள், உழவு மாடுகள் இருந்தால் அதை ஜப்தி செய்யக்கூடாது என்றும்

அதற்கு மேலே இருந்தால்தான் பிடிக்க வேண்டும் என்றும் சொல்லி இருக்கிறோம். மேலும் கறவை மாடுகள் இருந்தாலும் அவற்றையும் ஜப்தி செய்யக் கூடாது என்று சொல்லி இருக்கிறோம்.

The quantity of foodgrains required for the use of the borrower as seeds or for consumption should not be attached. ஒரு விவசாயி வீட்டிலே விவசாயத்திற்காக வைத்திருக்கின்ற விதை நெல்லை மட்டுமல்ல, வீட்டு உணவுக்காக வைத்திருப்பதையும் ஜப்தி செய்யக்கூடாது என்று சொல்லி இருக்கிறோம்.

Personal ornaments and articles of the borrower and the members of his family held as sacred religiously or sentimentally should not be attached. சென்டிமென்டின் காரணமாக ஒரு புனிதமான பொருளாகக் கருதி வீட்டிலே வைத்திருக்கின்ற விலை அதிகமான பொருள்களைக் கூட அவர்கள் தொடக்கூடாது என்று தெளிவாக உத்தரவிட்டிருக்கிறோம் என்பதை நான் இந்த அவைக்குத் தெளிவாகச் சொல்லி இருக்கிறேன். மத்திய அரசினுடைய ரிசர்வ் வங்கி, அக்ரிகல்சரல் ரீஃபைனான்ஸ் டெவலப்மென்ட் கார்ப்பரேஷன் மற்றும் நமக்கு உதவுகின்ற உலக வங்கி ஆகிய அனைத்துமே விவசாயக் கடனைக் கட்டாயமாக வசூலிக்க வேண்டும் என்று அதாவது இம்மீடியட் ஸ்டெப்ஸ், ஸ்பீடி ஸ்டெப்ஸ், கேயர்சிவ் ஆக்ஷன் எடுக்கவேண்டும் என்ற அடிப்படையிலே வசூலிக்கவேண்டும் என்று பல அஞ்சல்கள் மூலமாக மாநில அரசுக்குத் தெரிவித்து விட்டதற்குப் பிறகும் கூட அதை வசூலிக்காவிட்டால் இந்தப் பிரச்சினைக்கு மாநில அரசுதான் பொறுப்பு என்று கூட தெளிவாக்கப்பட்டுவிட்ட பிறகும் இந்த உண்மை நிலையினை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன். அப்படி அவர்கள் உண்மை நிலையினை ஏற்றுக்கொண்டு விவசாயப் பெருங்குடி மக்களின் நலனை மனதில் கொண்டு 30-6-80-க்குள் இந்தக் கடனைக் கண்டிப்பாக வசூலிக்க வேண்டிய நிலைமை இருப்பதால், இல்லை என்றால் அடுத்த ஆண்டுக்கு ஏழை விவசாயப் பெருங்குடி மக்கள் பயிர்க் கடனைப் பெற முடியாத அளவுக்கு உலக வங்கி கடனை நிறுத்திவிடக்கூடிய ஒரு இருண்ட சூழ்நிலையைத் தடுப்பதற்கு நலிந்த விவசாயிகளின் நல்வாழ்வுக்காக இந்த வசூலை நாம் நிறுத்தாமல்நடத்தியாக வேண்டும் என்பதை இந்த அவை ஏற்கும் என்று நம்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

எனவே இப்பிரச்சினை குறித்து விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கத் தேவையில்லை என் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் மூலமாக அவைக்குத்தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே இந்த அவையை ஒத்தி வைத்து இதன் மீது விவாதிக்க வேண்டாம் என்று தமிழக விவசாயிகள் நலன்கருதி மாண்புமிகு உறுப்பினர்கள் இதை ஒப்புக் கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதிக நேரம் பேசியாகி விட்டது. எப்போதுமே, அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு ஒன்றும் பேசக்கூடாது.

திரு. என். சங்கரய்யா: மத்தியப் சர்க்கார் நிர்ப்பந்தம் செய்வதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம்; ஆட்சேபிக்கிறோம்; எதிர்க்கிறோம். ஆனால் அதற்கு மாநில அரசும் முன்வரவேண்டும். நாங்கள் அதற்குத் துணைநிற்கத் தயார். ஆனால், அவர்களுடைய நிர்ப்பந்தத்திற்கு நீங்கள் இன்றைக்கு பணிந்துபோனால், அது சரியல்ல. எனவே, நீங்கள் இன்றைக்கு......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இம்மாதிரியாக அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு, விரிவாகப் பேசக் கூடாது.

திரு. என். சங்கரய்யா: இதனால் சிறு விவசாயிகளும், மத்திய தர விவசாயிகளும் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிப்பார்கள் என்று எதிர்பார்த்தேன். இன்னமும் காலம் இருக்கிறது இப்படி சொல்வது சரியல்ல....

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு முதல்வர் அவர்கள் 5ஆம் தேதியன்று இதுபற்றி பேசயிருக்கிறார். இன்னும் ஒருநாள் தான் இருக்கிறது. ஆகவே, இதைப்பற்றியெல்லாம் அப்போது பேசலாம்....

திரு. என். சங்கரய்யா: ஜப்தியை நிறுத்த வேண்டுமென்று தான் நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 17-3-82 அன்று டெல்லியில் நடைபெற்ற கூட்டத்திலே, 'கோயர்சிவ் ஸ்டெப்ஸ்' தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், ஜப்தி செய்வதை நிறுத்தக்கூடாது என்றும், இல்லையென்றால் இதற்குத் தமிழக அரசுதான் காரணம் என்றும் சொல்லுகிறார்கள். மேலும் அஞ்சல் மூலம் அவர்கள் அறிவித்து விட்டபிறகு, நாங்கள் பேசாமல் இருப்பது சரியல்ல. உங்களுடைய உணர்வோடு நாங்களும் ஒன்றியிருக்கிறோம். எந்தக் காலத்திலும், எந்த அரசும், எந்த மாநிலத்திலும், யாரும் செய்யாத அளவுக்கு தமிழகத்தின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் விவசாயப் பெருங்குடி

[திரு. சி. பொன்னையன்] [1982 ஏப்ரல் 3

மக்களின் நலனைக் கருதி, இதுகாறும் 200 கோடி ரூபாய் அளவுக்கு சலுகைகள் அளித்திருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். எங்களுக்கும் மக்கள்மீது, உங்களுக்கு இருக்கின்ற அளவிற்கு மேல் அதிகம் இல்லாவிட்டாலும், உங்கள் அளவுக்கு எங்களுக்கும் ஏழை எளியவர்கள்பால் அக்கறை இருக்கிறது. அந்த வகையிலேதான், ஏழை எளியவிவசாயப் பெருங்குடி மக்களுக்கு உதவ வேண்டுமென்ற ஆர்வத்திலேதான் ரூ. 200 கோடிக்கு சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கிறது. என்றாலும், மத்திய அரசுக்கு இதை எடுத்துச் சொல்லவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் சங்கரய்யா அவர்கள் சொல்லுகிறார்கள். நாங்கள் அப்படி எடுத்துச் சொல்லாமல் இல்லை: வற்புறுத்தாமல் இல்லை. டெல்லிக்குச் செல்லும்போதும், நேரிலே வற்புறுத்திச் சொல்லியிருக்கிறோம். ஆனால், அவர்கள் அஞ்சல் மூலமாக இதை எழுதிவிட்டதால், இந்த அரசுக்கு இருக்கின்ற இன்னல்களையும் நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா: விவசாய சங்கத் தலைவர்களுடன் பேசியிருக்கிறார்கள். ஆனால், இதற்கிடையில் ஜப்தி நடவடிக்கை இல்லை என்று அவர்கள் சொல்லாத காரணத்தினால், நானும், எங்கள் கட்சியைச் சார்ந்தவர்களும் வெளிநடப்பு செய்கிறோம்.

(மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்)

திரு. சோ. அழகர்சாமி: 30-6-82-க்குள் நிலுவையைக் கட்ட வேண்டும் என்று சொல்லுகிறார்கள். விவசாயிகள் கட்ட மாட்டேன் என்று சொல்லவில்லை. மொத்தமாகக் கட்ட முடியாது கடன் கஷ்டம் இருப்பதால், கொஞ்சம் கொஞ்சமாகக் கட்டுகிறோம் என்றுதான் சொல்லுகிறார்கள், தவிர, விவசாய சங்கத் தலைவர்களை முதல்வர் அவர்கள் அழைத்துப் பேச ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இத்தகைய நிலைமைகள் இருக்கின்றபோது, அதற்கிடையில் ஜப்தி நடவடிக்கையை நிறுத்துவதாக அமைச்சர் அவர்கள் சொல்லாத காரணத்தினால், நாங்களும் இதற்கு ஆட்சேபணை தெரிவித்து, வெளியேறுகிறோம்.

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளி நடப்புச் செய்தனர்.)

திரு. துரைமுருகன்: தமிழக அரசு, மத்திய அரசு ஒப்புக் கொண்டாலும், கொள்ளாவிட்டாலும் விவசாயிகள் அனைத்து கடனையும் ரத்து செய்வோம் என்று கூறி, விவசாயிகளை ஏமாற்றி வாக்குகளைப் பெற்றுக் கொண்டு....

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறானத் தகவலைச் சொல்லுகிறார். எனவே, அதற்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மாநில அரசு சொந்த வருவாயிலே இதற்கு ஏற்பாடு செய்வதா இருந்தாலும், அதை ரத்து செய்யக்கூடாது என்று....

1982 ஏப்ரல் 3]

திரு. துரைமுருகன்: ஐ ஆம் நாட் ஈல்டிங்., ஐ ஆம் நாட் ஈல்டிங்....

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்: துரைமுருகன் முழுவதுமாகப் பேசட்டும்.

(முற்பகல் 11.50)

திரு. துரைமுருகன், மத்திய அரசு ஒத்துக்கொள்ளாவிட்டாலும் நாங்களே விவசாயிகளுடைய அத்தனைக் கடன்களையும் ரத்து செய்வோம் என்று வாக்காளர்களிடத்திலே வாக்குறுதி கொடுத்து வாக்குகளைப் பெற்று ஆட்சியிலே அமர்ந்துவிட்ட அரசு இன்றைக்கு, ஏனய்யா விவசாயிகளுடைய கடன்களை ரத்து செய்யவில்லை, மாறாக ஜப்தி செய்கிறீர்களே என்று கேட்டால்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அமைச்சர் விளக்கம் சொல்லியாகிவிட்டது. உணர்ச்சிவசப்படாமல் மெதுவாகப் பேச வேண்டும்.

திரு. துரைமுருகன்: ஜப்தி நடவடிக்கையை தொடர்ந்து எடுத்து வருகின்ற காரணத்தினாலே அந்த ஜப்தியை சிறிது காலத்திற்கு தள்ளிவையுங்கள் என்ற கோரிக்கையைக்கூட இந்த அரசு புறக்கணித்து விட்டகாரணத்தினால் ***வெளிநடப்புச் செய்கிறோம்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: ** **

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லையென்பதால் இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

** ** **

***மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

(நண்பகல் 12.00)

** ** **

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒத்தி வைப்புத் தீர்மானத்தில் வெளியேறும் சமயத்தில் குறிப்பிட்ட சில வார்த்தைகளை ஒட்டித்தான் இந்தப் பிரச்னையே வந்தது. ஆகவே, அது சம்பந்தமாக இதுவரை நடைபெற்ற விவாதம் அத்தனையும் அவைக்குறிப்பில் இருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) 'வாக் அவுட்' பண்ணியது இருக்கும்.

4. அறிவிப்புகள்

(அ) அலுவல் ஆய்வுக் குழு—உறுப்பினர்கள் நியமனம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு அறிவிப்புகள். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 256 (1)-ன் கீழ், 1982—83-ம் ஆண்டுக்குப் பின்வரும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை அலுவல் ஆய்வுக் குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன்:—

1. மாண்புமிகு பேரவைத் தலைவர்
2. மாண்புமிகு முதல் அமைச்சர்
3. மாண்புமிகு பேரவை முன்னவர்
4. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர்
5. மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி,
எதிர்க்கட்சித் தலைவர்.
6. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்
7. திரு. க. அன்பழகன்
8. திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப்
9. திரு. என். சங்கரய்யா
10. திரு. சோ. அழகர்சாமி
11. திரு. குமரி அனந்தன்
12. திரு. திருப்பூர் இரா. மணிமாறன்,
அரசு கொறடா
13. திரு. எஸ். ஆண்டித்தேவர்

***மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

14. திரு. ப. நெடுமாறன்
15. திரு. பி. முகமது இஸ்மாயில்
16. திரு. ஏ. சாகுல் ஹமீது
17. திரு. என். எஸ். வி. சித்தன்

பேரவை 256 (1)ன் கீழ் அலுவல் காரணமாக மாண்புமிகு பேரவைத் தலைவர் இக்குழுவின் தலைவர் ஆவார்.

(ஆ) பேரவை விதிகள் குழு—உறுப்பினர்கள் நியமனம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 291 (1)-வது விதியின்கீழ், 1982—83 ஆம் ஆண்டுக்குப் பின்வரும் சட்டமன்ற பேரவை உறுப்பினர்களை பேரவை விதிகள் குழுவின் (Rules Commitee) உறுப்பினர்களாக நான் நியமிக்கின்றேன்:—

1. மாண்புமிகு முதல் அமைச்சர்
2. மாண்புமிகு பேரவை முன்னவர்
3. மாண்புமிகு திரு.சி. பொன்னையன்
கூட்டுறவு-சட்ட அமைச்சர்
4. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்
5. திரு. திருப்பூர் இரா. மணிமாறன்
அரசு கொறடா
6. திரு. சி. சோபால்
7. திரு. பி. ஜி. நாராயணன்
8. திரு. சு. முத்துக்கிருஷ்ணன்
9. திரு. சேலம் மு. ஆறுமுகம்
10. திரு. என். முத்துவேல்
11. திரு. ப. சுந்தரம்
12. திரு. கே. ஆர். சுந்தரம்
13. திரு. கே. சௌந்திரராசன்
14. திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப்
15. திரு. கே. சட்டநாத கரையாளர்
16. திரு. என். எஸ். வி. சித்தன்

(பேரவைத் தலைவர்] [1982 ஏப்ரல் 3

பேரவையின் 291 (1)-வது விதியின் கீழ், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் தலைவர் ஆவார்.

(இ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு—உறுப்பினர்கள் நியமனம்

மாண்புமிகு பேரவை தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 264 (1) வது விதியின் கீழ் பின்வரும் உறுப்பினர்களை 198-283 ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவிற்கு (கமிட்டி ஆன்டெலிகேட்டட் லெஜிஸ்லேஷன்) உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன்:—

1. திரு. இ. இராமசுப்பிரமணியன்
2. திரு. பூ. மு. நரசிம்மன்
3. திரு. மே. அ. இராசகுமார்
4. திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்
5. திரு. டி. வெங்கடரெட்டி
6. திரு. மா. சின்னராசு
7. திரு. என். விஜயபாலன்
8. திரு. ஜே. ஹேமச்சந்திரன்
9. திரு. ஆர் நவநீதகிருஷ்ண பாண்டியன்
10. திரு. என். வ. என். சோமு
11. திரு. மு. அரங்கநாதன்
12 திரு. சீ. சிவப்பிரகாசம்

பேரவையின் 265 வது விதியின் கீழ் திரு.மா. சின்னராசு அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமிக்கிறேன்.

மேலும், மேற்படி குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட ஐந்து மேலவை உறுப்பினர்கள் நியமிக்கப் பெற்றுள்ளார்கள் என்று மாண்புமிகு மேலவைத் தலைவரிடமிருந்து செய்தி வரப் பெற்றுள்ளது:—

1. திரு. ஈ. வெ. அ. வள்ளிமுத்து
2. திரு. க. மீனாட்சிசுந்தரம்
3. திரு. செ, முத்துசாமி
4. திரு. ஜேப்பியார்
5. திரு. ம. சங்கரலிங்கம்

1982 ஏப்ரல் 3] பேரவைத் தலைவர்

(ஈ) அரசு உறுதிமொழிக் குழு—உறுப்பினர்கள் நியமனம்
மாண்புமிகு பேரவைத் தலைவர் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 279 (1)—வது விதியின் கீழ் பின்வரும் பேரவை உறுப்பினர்களை 1982–83 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் (கமிட்டி ஆன் கவர்ன்மென்ட் ஆஷ்யூரன்ஸஸ்) உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன்.

1. திரு. வ. சத்தியமூர்த்தி
2. திரு. ப. குருசாமி
3. திரு. த. மாரிமுத்து
4. திரு. சோ. கலிதீர்த்தான்
5. திரு. ஏ. எம். சேதுராமன்
6. திரு. க. பாரமலை
7. திரு. சு. பாலன்
8. திரு. பம்மல் நல்லதம்பி
9. திரு. சி. பழனிமுத்து
10. திரு. என். பழனிவேல்
11. திரு. தி. கா நல்லப்பன்
12. திரு. பொ. வஜயராகவன்

பேரவையின் 280 (1) வது விதியின் கீழ் திரு. க பாரமலை அவர்களை இக்குழுவின் தலைவராக நியமனம் செய்கிறேன்.

(2) குழுக்களுக்கு மேலவை உறுப்பினர்கள் தேர்தல்
மாண்புமிகு பேரவைத் தலைவர் சட்டமன்ற மேலவைத் தலைவரிடமிருநது கீழ்க்கண்ட செய்திகள் வரப்பெற்றுள்ளன.

1982-83 ஆம் ஆண்டிற்கான சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட ஐந்து மேலவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்.

1. திரு. நீலநாராயணன்
2. திரு. காடுவெட்டி கண்ணப்பன்
3. திரு. ப. மாணிக்கம்
4. திரு. வி. வி. வி. ஆனந்தம்
5. திரு. ஏ. ஜே. தாஸ்

1982-83 ஆம் ஆண்டிற்கான சட்டமன்றப் பேரவை பொதுக் கணக்குக் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட ஐந்து மேலவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்.

1. டாக்டர் தி. இரா. சனார்த்தனம்
2. திரு. சி, ரா. லெட்சுமிகாந்தம்
3. திரு. எஸ். முத்து
4. திரு. எஸ். ஆறுமுகம்
5. திரு. க. இராமமூர்த்தி

1982-83 ஆம் ஆண்டிற்கான சட்டமன்றப் பேரவை பொது நிறுவனங்கள் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட ஐந்து மேலவை உறுப்பினர்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்

1. திரு. எஸ். ஆர். இராதா
2. திரு. சி. இராமலிங்கம்
3. திரு. ஏ. ஆர். தாமோதரன்
4. திரு. பா. ரா. தாமஸ்
5. திரு. ஆர். டி. சீத்தாபதி

5. கவன ஈர்ப்புகள்

(அ) வடபழனி கோயில் நிலம் விற்பனை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திருவாளர்கள் ப. பொன்னுரங்கம், பாபு ஜனார்த்தனம், இரா. தாமரைக்கனி, எம். சின்னசாமி, து. புருஷோத்தமன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவனஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் திரு ப. பொன்னுரங்கம் இதை மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. ப. பொன்னுரங்கம் தலைவர் அவர்களே வடபழனி கோயிலுக்கு சொந்தமான நிலத்தை விற்பனை செய்வது சம்பந்தமாகப் பொது மக்களிடையே ஏற்பட்டுள்ள கவலை குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி அற நிலைய அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு ஆர் எம். வீரப்பன்: பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

சென்னை அருள்மிகு வடபழனி ஆண்டவர் ஆலயத்திற்கு சாலிகிராமத்தில் 21/2, 26, 23/1, 43, 49, 59/1 ஆகிய சர்வே எண்களில் 10.56 ஏக்கர் நிலம் சொந்தமாக உள்ளது. அறநிலையத்துறை அலுவலகங்களில் பணிபுரியும் கடைநிலை ஊழியர்கள், பதிவுறை எழுத்தர்கள் மற்றும் ஓட்டுநர்கள் ஆகியோர் சேர்ந்து வடபழனி ஆண்டவர் நற்பணி மன்றம் என்ற கூட்டுறவு சங்கம் அமைத்து, அம்மன்றத்தில் உள்ள 120 நபர்களுக்கு மேற்படி நிலத்தில நபர் ஒன்றுக்கு 0.03 செண்டு வீதம் விலைக்கு வீட்டுமனைகளாக பிரித்து கொடுக்குமாறு கோரி 15-7-1977ல் மனு கொடுத்துள்ளனர். மேற்படி மன்றத்தின் அங்கத்தினர்கள் கோரிய நிலத்தை அரசு நிர்ணயம் செய்யும் விலைக்கு விற்கலாம் என்று சென்னை இந்து சமய அறநிலையத் துறை துணை ஆணையர் பரிந்துரை செய்தார். சட்ட விதிகள் படி இந்த நிலத்தை ஆலய ஊழியர்களுக்கு விற்பனை செய்வதில் மறுப்புகள் மற்றும் கருத்துக்கள் கேட்டு அறிவிப்பு செய்த போது ஆலய அறங்காவலர்கள், மேற்படி நிலத்தை பொது ஏலத்தில் விற்றால் ஆலயத்திற்கு நன்மை தரும் என்று ஆட்சேபணைக் கருத்து தெரிவித்தனர். அதே சமயத்தில் நற்பணி மன்றத்தினர் தங்களுக்கு அரசு நிர்ணயம் செய்யும் விலைக்கு மேற்படி நிலத்தை விற்பனை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினார்கள். இதற்கிடையில் மேற்படி ஆலயத்திற்கு சொந்தமான நிலங்களை விற்பனைக்கு கேட்டு, பல்லவன் போக்குவரத்து கழக ஊழியர் கழகம், சைதை கூட்டுறவு வீட்டு மனை சங்கம், சாலிக்கிராமம் குடியிருப்போர் சங்கம் மற்றும் தனியார்களும் கேட்டு மனுக்கள் அனுப்பியிருந்தனர். இவற்றில் சைதை கூட்டுறவு வீட்டு மனைச் சங்கம் மேற்படி ச.எண். 21-2 வகையறாவில் உள்ள 6.24 ஏக்கர் நிலத்தை மட்டுமே கேட்டனர். சைதை கூட்டுறவு மனை சங்கத்தின் வேண்டுகோளுக்கு ஆதரவாக, (மாநில கூட்டுறவு வீட்டு வசதி) பதிவாளா கடிதம் அனுப்பியுள்ளார். இதையொட்டி அறங்காவலர் குழு தனது 28.3.81ந் தேதிய தீர்மானத்தின்படி மேற்படி நிலத்தின் தற்போதைய மதிப்பு கிரவுண்டு 1-க்கு ரூ. 15,000— என்றும் இந்த விலைக்கு மனுவில் குறிப்பிட்டுள்ள சைதாப்பேட்டை கூட்டுறவு வீட்டு மனை சங்கத்திற்கு கொடுப்பதா அல்லது வடபழனி நற்பணி மன்றத்திற்கு கொடுப்பதா அனைத்து நிலங்களையும் பொது ஏலத்தில் விற்பனை செய்யலாமா என்பதற்கும் மேற்படி நிலங்களுக்கு நியாயமான மார்க்கெட் விலை கிடைப்பதற்கும் ஆணையர் முடிவு எடுக்குமாறு அறங்காவலர் குழு கேட்டுக்கொண்டது. அதற்குப்பிறகு ஒரு கிரவுண்ட் விலை ரூ. 18,900 என சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் நில மதிப்பு செய்துள்ளார். அதைத் தொடர்ந்து மேற்படி நிலத்தை கிரவுண்ட் ஒன்றுக்கு ரூ. 20,000— கொடுத்து சகம் வாங்கிக் கொள்ள சைதாப்பேட்டை கூட்டுறவு வீட்டு மனை சங்கம் விருப்பம் தெரிவித்ததன் பேரில், ஆணையரால் 6,2.1982 தேதியன்று அதன்

மீது மறுப்புகளும் மற்றும் கருத்துக்களும் கேட்டு அறிவிப்பு செய்யப்பட்டது. மேற்கண்ட அறிவிப்புக்கு அருள்மிகு வடபழனி யாண்டவர் நற்பணி மன்றம் திரு வை. பூமிநாதன் வடபழனி, மற்றும் திரு எஸ். கண்ணன், வடபழனி ஆகியோர் மேற்படி சைதாப்பேட்டை கூட்டுறவு வீட்டு மனை சங்கத்திற்கு விற்பனை செய்வதை ஆட்சேபனை செய்து மனுக்கள் அனுப்பியுள்ளனர். மேற்கூறிய ஆட்சேபனை மனுக்கள் ஆணையரின் பரிசீலனையில் உள்ளன. இதற்குப்பிறகு வடபழனி ஆண்டவர் ஆலய நிர்வாகத்தினருக்கு அனுப்பிஅவர்களுடைய கருத்துக்கள் கேட்கப் பட்டு, பிறகு தான் இறுதியாக ஒரு முடிவு செய்யப்படும். நிலம் விற்பனை சம்பந்தமாக எந்த முடிவும் இதுவரை எடுக்கப்பட வில்லை. இதையொட்டி ஆலயப்பணியாளர்கள் மத்தியிலோ, பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியிலோ எந்தவிதமான பரப்போ பதட்ட நிலையோ ஏற்படவில்லை. ஏற்பட எந்தக் காரணங்களும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

திரு. ப. பொன்னுரங்கம்: நான் குற்றமாகச் சொல்லவில்லையே.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பொன்னுரங்கம் இது வரையில் கேட்டது நீக்கப்படுகிறது. புதிதாகக் கேள்வியாகக் கேளுங்கள.

(பிற்பகல் 17.10)

திரு. ப. பொன்னுரங்கம்: துணைத் தலைவரவர்களே, இந்த நிலம் காரணம் இல்லாமல் விற்கப்படுகிறது என்பது ஒன்று ஏன் விற்கப்படுகிறது என்பது கேள்வி. இந்த நிலத்தைப் பொது ஏலத்தில் விட்டால் அதிகப் பணம் கோயிலுக்குக் கிடைக்கும் என்று டிரஸ்டிகளே சொல்லுகிறார்கள். அவர்கள் கருத்துக்கு மாறாக உங்கள் அறிக்கையிலே சொல்லியிருக்கிறீர்கள். பொது ஏலத்தில் விடாமல் குறிப்பிட்ட சொசைட்டிக்கு விற்பதன் காரணம் என்ன அடுத்து

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள் பேச முடியாது. இரண்டு கேள்விகள் கேட்டு இருக்கிறீர்கள். அவற்றுக்கு அமைச்சருடைய பதிலைக் கேளுங்கள்.

மாண்புமிகு ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இங்கே எனக்கு அனுப்பியிருக்கின்ற சட்ட மன்றத் துறையிலேயிருந்து அனுப்பியிருக்கின்ற நோட்டீசில்

"சென்னை வடபழனி கோயிலுக்குச் சொந்தமான 216 கிரவுண்ட் நிலத்தை அநியாயமாகக் குறைந்த விலைக்கு கொடுப்பதால் அக்கோயிலில் பணியாற்றுகின்ற ஊழியர் கள் மத்தியிலும், அக்கோயிலுக்குச் செல்லுகின்ற பக்தர்கள் மத்தியிலும், அப்பகுதி வாழ் பொது மக்கள் மத்தியிலும் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறுத்து."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

என்று எனக்கும், எங்கள் துறைக்கும் அனுப்பியிருக்கிறார்கள். அங்கே குறைந்த விலைக்கு விற்க முயற்சிக்கலாமா என்பது பற்றி நீண்ட வரலாற்றை அறிக்கையாக தந்திருக்கிறேன். அங்கே பதட்ட நிலை ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக் கிறார்கள். அங்கே ஒரு பதட்டமும ஏற்படவில்லை என்பதையும் மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குத்தான் பதட்டம் எற்பட்டிருக் கிறது என்ற கருத்தை தெளிவாக சொல்லியிருக்கிறேன். இங்கே கேள்வியாக கேட்டார்கள். கேள்வி கேட்டுப பதிலாகப் பெறு வதில் நியாயம் இருக்கிறது. இப்பொழுது என்ன அவசியம் வந்து விட்டது நிலத்தை விற்பதற்கு என்று கேட்டார்கள். நான் ஒன்றை நினைவுப்படுத்தினால் தவறாக நினைத்துக் கொள்ளக் கூடாது

அவர்கள் ஆட்சியிலே இருந்த காலத்தில் இதே வடபழனி பழனி ஆண்டவர்கோயில் நிலத்தை சுமார் 1½ ஏக்கர் நிலத்தை ஏலம் விட்டார்கள். ஏலம் விட்டு வேறு யாருமே எடுக்காமல் ஒருவர் வேணு செட்டியார் என்பவர் 75 ஆயிரம் ரூபாய்க்கு எடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அமைச்சர் அவர்கள் பதிலை இந்த பார்மிலே தான் சொல்ல வேண்டும் என்று விதிகளிலே இல்லை (கூச்சல் குழப்பம்) அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். அப்போது முன்னாலே நடந்தது என்ன என்று சொல்வதிலே என்ன தவறு இருக்கிறது. (கூச்சல், குழப்பம்) தயவு செய்து நீங்கள் அமருங்கள். மாண்புமிகு அமைச்சர் தொடர்ந்து பேசுவார்.

மாண்புமிகு ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை இந்த மன்றத்திலே வேறொரு முறையிலே எழுப்பி, தவறான தகவலை எல்லாம் தந்து அதுவும் இந்த மன்றத்தில் பதிவாகி இருக்கின்றது. பத்திரிகைகளிலும் வந்திருக்கின்றது, சம்பந்தப்பட்ட உறுப்பினர் கள் இங்கே வைத்திருக்கின்ற வேண்டுகோள் எல்லாம் இருக் கின்றன. அதற்குப் பிறகு கவனஈர்ப்புத் தீர்மானமாக அதைத் தலைவர் அவர்கள் அனுமதித்திருக்கிறார்கள். நாங்கள் அதற்கான விளக்கத்தைத் தந்திருக்கிறோம் யாருக்கும் விற்று விடவில்லை அதை விற்பதற்கான முயற்சியை மேற்கொள்ளுகிற போது அது சட்டபூர்வமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஒரு கிரவுண்டு 20 ஆயிரம் ரூபாய்க்கு இந்தக் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு வீடு கொடுக்கின்ற சங்கமாக 1957-லே இருந்து பணியாற்றுகின்ற மாண்புமிகு முன்னாள் முதல்வர் காமராஜ் காலத்திலிருந்து பணியாற்றுகின்ற ஒரு குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு வீடு கட்டுவதற்கு என்ன விலை வருவாய்த் துறை நிர்ணயிக்கிறதோ அதைக் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம் என்று கேட்டு—இரண்டாண்டு காலமாக அது

[ஆர்.எம்.வீரப்பன்] [1982 ஏப்ரல் 3

தொடர்ந்து அந்த விலை நிர்ணயிக்கப்பட்டு—அது 3 ஆயிரமாக தொடங்கி இப்போது மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் 8500 ரூபாய என்று நிர்ணயித்த நேரத்தில், அதை 20 ஆயிரம் ஒரு கிரவுண்டு என்று இவர்களுக்கு வழங்கலாமா அதற்கு ஆட்சேபனை இருக்கிறவர்கள் தெரிவிக்கலாம் என்று ஆணையர் அவர்களால் ஆட்சேபனை அறிவிப்புதான் கேட்டிருக்கிறார்கள். ஆட்சேபனை எல்லாம் இப்போது வந்திருக்கின்றன. அதற்குப் அவை அன்று பரிசிலித்து அறங்காவலர்களுக்கு அனுப்பி அவர்கள் இதற்கு சம்மதம் அளித்தால் இந்த முடிவு நிர்ணயிக்கப்படும்.

இதற்கிடையில் இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒருகேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். அந்தக கேள்விக்கு பதில் சொல்லுவதற்கு விடாமல் இப்படி இந்த மன்றத்தைக் குழப் பத்தில் ஆழ்த்துவது, குழப்பத்தில் ஆழ்த்தி உண்மைகளை வெளி வராமல் செய்வது அவதூறுகள் மாத்திரமே இங்கே சொல்வதற்கு இடம் அளிப்பது என்று பிரதான எதிர்க்கட்சி இப்படி ஒரு நடைமுறையை ஏற்படுத்திக் கொள்வதை மாண்பு மிகு துணைத் தலைவர் அவர்களே உங்கள் மூலம் நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். (கூச்சல், குழப்பம்)

(பிற்பகல் 12.20)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் அமருங்கள். (குறுக்கீடு) அதாவது ஒரு குற்றச்சாட்டுக்கு அமைச்சர் பதில் சொல்வதற்கு முழுமையான நேரம் இல்லை என்ற அந்த அர்த்தத்திலே அவர் சொல்கிறார்கள். (குறுக்கீடு). எதிர்க் கட்சிகள் குற்றச்சாட்டை சுமத்துகிறார்கள். அதே அளவுக்கு எனக்கு பதில் சொல்லக்கூடிய அளவிற்கு நேரம் வேண்டும் என்று சொல்கிறார்கள். (குறுக்கீடு). உங்களை ரூண்ட் பண்ணவில்லை.

திரு. துரைமுருகன்: ஒரு பிரதான எதிர்க்கட்சியைப் பற்றி இந்த அவையில் உண்மையை மறைப்பதுபோல் ஒரு தவறான கருத்தை அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். நாங்கள் திருப்பி அந்த வார்த்தையைச் சொன்னால் ஒத்துக்கொள்வீர்களா, (குறுக்கீடு). அமைச்சர் சொன்னதை நீக்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒவ்வொரு வார்த்தை யையும் எடைபோட்டுப் பார்த்துக் கொண்டிருந்தால் இந்த அவையை நடத்த முடியாது.

திரு. துரைமுருகன்: அமைச்சர் அவர்கள் ஒட்டு மொத்த மாக ஒரு கட்சியைப் பற்றிச் சொல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒரு குற்றச்சாட்டை சொல்லும்போது எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் உண்மை வெளிவராமல் மறைக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். வேறு ஒன்றும் இல்லை.

1982 ஏப்ரல் 3]

திரு. துரைமுருகன்: நாங்கள் திருப்பிச் சொன்னால் நீங்கள் நீக்குகிறீர்கள். எனவே அமைச்சர் அவர்கள் சொன்னதை நீக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நாம் ஒரு முடிவுக்கு வருவோம். இனிமேல் அவைக்குறிப்பில் இருந்து நீக்குவதை நாம் நிறுத்தி விடுவோம்.

திரு. துரைமுருகன்: அமைச்சர் சொன்னதை நீக்கிவிட்டு பிறகு அந்த முடிவுக்கு வருவோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்படி ஒவ்வொன் றையும் நீக்குவது என்றால் காலந்தோறும் நீக்கிக்கொண்டே தான் இருக்கவேண்டும். 2 மணி நேரம், 3 மணி நேரம் என்று பேசுவதையெல்லாம் நீக்கவேண்டும். இதிலே குற்றச்சாட்டு ஒன்றும் சொல்லவில்லை.

திரு. துரைமுருகன்: அப்படி என்றால் நாங்கள் சொல் வதையும் நீங்கள் ரிக்கார்ட் பண்ணுங்கள், (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஏற்கனவே ரிக்கார்ட் ஆகியிருக்கிறது. (குறுக்கீடு). இப்படி நீக்கிக்கொண்டே இருந் தால் ஒவ்வொருவர் பேசியதையும் நீக்கிக்கொண்டேதான் இருக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் பொன்னுரங்க. அவர்கள் பேசும்போது ஒரு சந்தேகத்தை எழுப்பியிருக்கிறார்கள் (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒவ்வொரு வார்த் தைக்கும் நாம் அர்த்தம் பார்க்கக்கூடாது (கூச்சல், குழப்பம்).

திரு. துரைமுருகன்: அந்த வார்த்தையை நீக்குங்கள். ஒட்டு மொத்தமாக அவர் பேசக்கூடாது. அவர் எங்கள் மீது அலிகேசன் சொல்கிறார் (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதில் ஒன்றும் அலிகேசன் இல்லை. நீங்கள் ஏன் அதைக் குறையாக எடுத்துக் கொள்கிறீர்கள். குறையாகப் பார்ப்பதை விட்டுவிடுங்கள்.

திரு. துரைமுருகன்: ஏற்கனவே இருக்கிறது. அலிகேசன் சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நான் குறிப்பை பார்த்துவிட்டுச் சொல்கிறேன். தயவுசெய்து உட்காருங்கள். அந்த வாசகம் என்ன என்பதைப் பார்த்துவிட்டு சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது, அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். பிரதான எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் ஒரு குற்றச்சாட்டையும், ஒரு அவதூறையும் சொல்கிறார்கள். ஆனால் நாங்கள் அதற்கு பதில் சொல்வதற்குள் குழப்ப நிலைமை வளர்ந்து, உண்மைகளை.. (குறுக்கீடு) சொல்லி முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நாம் ஒரு வரைமுறை வைத்துக்கொள்வோம். ஒரு உறுப்பினர் பேசுகின்றபோது, அவர் பேசி முடித்தபிறகு எந்தக் கருத்து இருந்தாலும், அது முடிந்த பிறகு சொல்வோம். (கூச்சல், குழப்பம்). எல்லாம் பேசிக்கொள்வோம். அவையினுடைய கண்ணியத்தை நாம் பார்க்கவேண்டும். கூச்சல், குழப்பம் என்று வருவது நமக்கு நல்லதல்ல, (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் மீண்டும் பதில் சொல்வதற்கான வாய்ப்பு எனக்குக் கொடுக்கவில்லை, அதற்குள் இப்படி சொல்கிறார்களே என்ற ஏக்கத்தின் காரணமாக அவர்கள் குறிப்பிட்டார்கள். (கூச்சல், குழப்பம்) அந்த உணர்வின் அடிப்படையிலேதான் அவர்கள் பேசினார்கள். நானும் அதை கேட்டுக் கொண்டிருந்தேன். (கூச்சல், குழப்பம்).

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து எல்லோரும் அமருங்கள். அமைச்சர் பதில் முடிந்துவிட்டதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (கூச்சல், குழப்பம்).

திரு. துரைமுருகன்: எதிர்க்கட்சியைப் பற்றி அமைச்சர் அவதூறாகச் சொன்னதை, அந்த வார்த்தைகளை நீக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாபுண்மிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, அதையும் சொல்லிவிடுகிறேன். இங்கே இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தை கொடுத்திருக்கிற உறுப்பினர்களில், திராவிட முன்னேற்றக்கழகத்தை சேர்ந்த திரு. பொன்னுரங்கம் அவர்கள் முதலிலே பெயரைக் கொடுத்திருக்கிற காரணத்தினாலே, அவர்கள் எழுந்து கேள்வியைக் கேட்டார்கள். நான் அவையிலே ஒரு அறிக்கை வைக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்தேன். அதற்குப்பிறகு அவர்கள் தொடர்ந்து, பேசுவதுபோல் இப்போது அமைச்சர் அவர்கள் விற்கவில்லை என்று சொல்கிறார்; விற்பதற்கு

என்ன அவசியம் வந்தது, அந்தக் கோயிலுக்கு என்ன பஞ்சம் வந்தது; நஷ்டம் வந்தது என்று கேட்டார்கள். அறங்காவலர்கள் அங்கே இல்லாத யாரோ ராமகிருஷ்ண பாபு என்றெல்லாம் அவர் நீட்டிக்கொண்டே போக ஆரம்பித்தார்கள். மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்கள் நீங்கள் கேள்வியாக கேளுங்கள் என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு உறுப்பினர் 2 கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். அவருடைய பேச்சிலிருந்துஅந்த சுருக்கத்திலிருந்து நான் தெரிந்துகொண்டது, அதாவது இப்போது விற்பதற்கு என்ன அவசியம் வந்தது, ஆலயத்திற்கு அப்படி என்ன வந்தது என்றெல்லாம் நீங்கள் சொல்லும்போது, ஏலத்தில் விற்கக்கூடாது, இதுதான் அவருடைய கேள்வி என்று நான் எடுத்துக்கொண்டு இருப்பதை அவர்கள் ஏற்றுக்கொள்வார்களே யானால், நான் பதில் சொல்ல, அதாவது ஏன் இந்த ஆலயங்கள் நிலங்களை விற்கிறோம் என்பதற்கான காரணத்தை சொல்கிறபோது, அதுவும் வடபழனி ஆலயத்திற்குச் சொந்தமான நிலத்தை இதற்கு முன்னாலேயிருந்த அறங்காவலர்கள், ஏலம் எப்படி போட்டிருக்கிறார்கள், குத்தகைக்கு விட்டிருக்கிறார்கள் என்ற ஒரு வரலாற்றைச் சொல்லத்தானே ஆரம்பித்தேன்.

ஆரம்பிப்பதற்குள்ளேயே, பேசக் கூடாது, சொல்லக்கூடாது என்று குரலை எழுப்பினார்கள், கூக்குரலை எழுப்பினார்கள். நான் அதற்கு எழுந்து சொன்னேன். இங்கே குற்றம் சுமத்தியுள்ள மாண்புமிகு உறுப்பினர் பொன்னுரங்கம் அவர்கள், இப்போது இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே 'விற்க முயற்சிப்பது' என்று கேட்டு இருக்கிறார். சில நாட்களுக்கு முன்னால் இதே அவையில் 'விற்றுவிட்டதாகவும், கோடிக்கணக்கில் நஷ்டம் ஏற்பட்டு விட்டதாகவும் சொல்லியிருக்கிறார்.' அதுவும் பதிவாகியிருக்கிறது. ஆகவே, அப்படிபட்ட நிலையில் இங்கே அவர்கள் எதைவேண்டுமானாலும் சொல்லி பதிவு செய்யலாம், அமைச்சர்கள் விளக்கம் அளிக்கிற நேரத்தில் அதற்கு வாய்ப்பு அளிக்காமல் பிரதான எதிர்க்கட்சியினர் குழப்பம் செய்கிறார்கள் என்றுதான் சொன்னேன், (கூச்சல், குழப்பம்).

திரு. ப. பொன்னுரங்கம்: தலைவர் அவர்களே, முயற்சிப்பதாகத் தான் சொன்னேன். விற்க முயற்சிப்பதில் பல கோடி கொள்ளை போய் இருக்கிறது என்று தான் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விற்க முயற்சிப்பதில், எப்படி பல கோடி ரூபாய் போகும்? வியாபாரம் முடிந்துவிட்டது என்று சொன்னால், அதிலே வேண்டுமானால் கோடியோ, லட்சமோ போகலாம். இத்தகைய நிலைமைகளைத் தவிர்ப்பதற்காகத்தான், ஒத்தி வைப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்கிற வரையில் அதைப் பற்றி இந்த அவையில் எதையும் சொல்லக் கூடாது என்று அடிக்கடி சொல்லிவருகிறேன். ஆனால், மாண்புமிகு உறுப்பினர்கள், தங்களுக்கு இருக்கும் ஆர்வத்தின்

காரணமாக, 'பாயின்ட் ஆப் ஆர்டர்' என்று சொல்லி, அந்தப் பிரச்னையை அவையில் தெரிவித்து விடுகின்றனர். அதனால் தான் இத்தகைய பிரச்னைகள் வருகின்றன. இப்போது, விதி 54-ன் கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானம் வந்து இருக்கிறது. ஆகவே அதற்கு விளக்கம் அளிப்பதன் மூலம் இந்தப் பிரச்னையை விரைவாக முடிக்க வேண்டும்.

திரு. ஆர். மணிமாறன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், திரு. பொன்னுரங்கம் அவர்கள் தான் அவ்வாறு கூறவில்லை என்று சொன்னார்கள். அவையின் நடவடிக்கைக் குறிப்பில் உள்ளதை நான் தெரிவிக்கிறேன், 'மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடபழனி கோவிலுக்குச் சொந்தமான....'

திரு. துரைமுருகன்: அவைக் குறிப்பு அவருக்கு எப்படிக் கிடைத்தது?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அந்தப் பிரச்னை குறித்து ஏற்கனவே எழுப்பிய குறிப்பு அது. இன்றைக்குப் பேசிய குறிப்பு அல்ல. சட்டமன்ற அவைக் குறிப்பு ரகசியமான தஸ்தாவேஜி அல்ல. யார் வேண்டுமானாலும் அதைப் படிக்கலாம். குறிப்பு எடுத்துக் கொண்டு இங்கே வந்து பேசலாம்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது கொடுத்திருக்கிற அந்தத் தீர்மானத்தையும் படித்து விட்டேன். 'விற்க முயற்சிப்பது சம்பந்தமாக ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து' என்று இப்போது கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறார்கள். சென்ற இரண்டு வாரங்களுக்கு முன்பு இதே அவையில் மாண்புமிகு பொன்னுரங்கம் அவர்கள் இந்தப் பிரச்னை குறித்துப் பேசினார்கள். அந்தக் குறிப்பு என்னிடத்தில் இருக்கிறது. 'மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடபழனி கோவிலுக்குச் சொந்தமான 216 ஏக்கர் நிலத்தை அநியாயமாக விற்பனை செய்து, கோடிக் கணக்கான ரூபாய்க்கு அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்பட்டு இருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன், என்று சொல்லியிருக்கிறார். உடனே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் குறுக்கிடுகிறீர்கள். அதற்கு அடுத்த நாள் பத்திரிகையில் வருகிறது. 'வடபழனி கோவிலில் நிலம் விற்பனை, கோடிக் கணக்கில் கொள்ளை' தமிழக சட்டமன்றத்தில் பொன்னுரங்கம் வினா என்று பத்திரிகைகளில் வருகிறது.

எனக்கு இருக்கும் கவலையெல்லாம் இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மூலம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு விளக்கம் அளிக்கவேண்டும் என்பது தான். அதேநேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் பொன்னுரங்கம் அவர்களுக்கு இருக்கும்

சந்தேகத்தையும் நீக்கவேண்டியவனாக இருக்கிறேன். அவர் முன்னாலே சொன்ன குற்றச்சாட்டை இப்போது மாற்றிக் கொண்டு இருக்கிறார். அதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர் கேட்டது இரண்டு கேள்விகள். ஏன் அதை விற்க வேண்டிய அவசியம் வந்தது? இன்று தமிழகத்தில் அறநிலையத் துறைக்கு, ஆலயங்களுக்கு இருக்கும் நிலங்கள் எல்லாம் கேட்பாரற்று யாருக்கும் பொறுப்பற்றுப்போய், கண்டவர்கள் எல்லாம் ஆக்கிரமித்துக்கொள்ளும் நிலை இருந்து வருகிறது என்பது இப்போது எடுக்கும் முடிவு அல்ல. அதற்காகத்தான் இதே ஆலயம் சம்பந்தப்பட்ட ஒரு முன்மாதிரியைச் சொல்ல வந்தேன். அதைச் சொல்லவிடாமல் நிறுத்தி விட்டார்கள். மாண்புமிகு தலைவரவர்களே, இப்போதும் நான் சொல்லப் போகிறேன், தயவுசெய்து நீங்கள்தான் எனக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும். இதே வடபழனி ஆண்டவர் கோவிலினுடைய நிலத்தை 1973 ஆம் ஆண்டிலே சுமார் ஒன்றரை ஏக்கர் மனைக்கட்டு நிலத்தை ஏலம் போடலாம் என்று அன்றைக்கு முடிவு செய்தார்கள். அப்போது எப்படி முறைகேடு நடைபெற்றது? வேணுச்செட்டியார் எப்படி எடுத்தார்? பணம் கட்டாமல் எப்படி உதவி செய்யப்பட்டது? பின்னாலே 75,000 ரூபாய் கொடுத்தார், அவர் எடுத்து யார், யாருக்கு எல்லாம் கொடுத்தார் என்பதைப்பற்றி எல்லாம் பின்னாலே அறிக்கைகள் வந்து, முறைகேடு செய்ததாகக் குற்றச்சாட்டுகள் வந்து அதன் பேரில் பல நடவடிக்கைகள் எல்லாம் எடுக்கப்பட்டு வருகின்றன. சம்பந்தப்பட்ட ஆணையர், துணை ஆணையர்கள் எல்லாம் என்ன சொல்லி இருக்கிறார்கள் என்பதற்குள்ளே நான் நுழையவில்லை. அதை எல்லாம் நான் சொல்வதாக இருந்தால் பிரதான எதிர்க்கட்சியினருக்கு இன்னும் கொஞ்சம் கோபம் வரும். நான் அதற்குள்ளே சொல்லமாட்டேன். ஆனால் அன்றைக்கு என்ன காரணம் சொல்லப்படுகிறது? (குறுக்கீடு)

(பிற்பகல் 12-30)

***திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒரு கருத்தைப் பதிலாகச் சொல்கிறபோது தாங்கள் செய்கிற நியாயமான காரியங்களை விளக்குவதற்கு, அமைச்சரவர்கள் தாராளமாகத் தெரிவிக்கலாம். எதிர்க்கட்சியிலே உள்ளவர்களின் சந்தேகங்கள் தவறு என்று விளக்கலாம். அதற்குமேல் ஏற்கெனவே இப்படி ஒரு தவறு நடைபெற்றிருக்கிறது என்று சொல்வதிலே கூட எனக்கு மாறுபாடு கிடையாது. அது தவறுதானா என்று அப்படிப்பட்டவை பற்றி விசாரணை முடிந்து நாட்டுக்குத் தெரியும் ஒரு காலம் வரும். ஏனென்றால் அமைச்சர்கள் சொன்னாலும், எதிர்க்கட்சியிலே உள்ளவர்கள் சொன்னாலும் இறுதியில் விசாரணை இல்லாமல் முடியாது.

ஆனால் அதற்கு இடையே இதைச் சொன்னால் எதிர்க்கட்சியினருக்கு, பிரதான எதிர்க் கட்சியினருக்கு கோபம் வரும் என்று சொல்வதன் நோக்கம் என்ன? மாண்புமிகு அமைச்சர் வீரப்பன் அவர்கள் சொல்வதைப் புரிந்துகொள்ளாமலிருப்பதற்கு ஒன்று எனக்குத் தமிழ் தெரியாமல் இருக்க வேண்டும், அல்லது நான் பேச்சை விளங்கிக் கொள்ள முடியாதவனாக இருக்க வேண்டும், அல்லது என் காது செவிடாக இருக்க வேண்டும். அமைச்சர் ஒரு உள்நோக்கத்தோடு 'பிரதான எதிர்க்கட்சியில் உள்ளவர்களுக்குக் கோபம் வரும்' என்று சொல்வது மறைமுகமாக எதிர்க்கட்சியில் உள்ளவர்களை குற்றஞ் சாட்டுவது. அதுதான் அவர்களுடைய நோக்கம் என்று சொன்னால் அதனுடைய விளைவை ஏற்றுக்கொள்ளட்டும்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, நான் மிக்கப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன், இந்தச் சம்பவம் சிறிது நேரத்திற்கு முன்னால் நடந்தபோது நீங்கள் அவையில் இல்லை. நான் இதைச் சொல்ல ஆரம்பித்தேன். வடபழனி ஆண்டவர் ஆலயத்திற்குச் சொந்தமான நிலத்தை 1974 ஆம் ஆண்டிலேயே என்று சொல்ல ஆரம்பித்தேன். உடனே அங்கே இருந்து எதிர்ப்புக் குரல்கள் எழுந்தது. அதைத்தான் நான் குறிப்பிட்டேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்கள் குறிப்பிடுவதைப்போன்று ஒரு உள்நோக்கம் இல்லை. உள்நோக்கம் கற்பித்துப் பேசுகின்ற உரிமை இந்தத் தரப்பிலே இருக்கக்கூடாது, நான் ஏற்றுக்கொள்கிறேன். அதேமாதிரி இந்த மன்றத்திலே இருக்கிற எல்லோருக்கும் இருக்கக்கூடாது.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு தலைவரவர்களே, வாதத்தை வாதமாக நடத்துவோம். நாம் யாரும் ஒருவரைவிட ஒருவர் உயர்ந்தவரும் அல்ல; தாழ்ந்தவரும் அல்ல; சம உரிமை உள்ளவர்கள். அமைச்சர் என்ற காரணத்தால் அதிக விளக்கம் பெற்று இருக்கலாம். அந்த விளக்கம் எதிர்க்கட்சியினருக்குக் கிடைக்காமல் இருக்கலாம். நீங்கள் சொல்வது நியாயமாகக் கூட இருக்கலாம். ஆனால் சொல்கிறபோது 'பிரதான எதிர்க்கட்சியினருக்கு கோபம் வரும், உடனே கிளர்ந்து எழுவார்கள். அப்படித்தான் ரகளை நடக்கிறது, என்று 2, 3 முறை முன்னாலே சொல்லி, அதன் காரணமாகத்தான் அந்தத் தகராறு வந்தது. மறுபடியும் அதையே சொல்கிறார். அமைச்சரவர்கள் விளக்கத் தச் சொல்லிக் கொள்வதில் மாறுபாடு கிடையாது. நீங்கள் எதைச் சொன்னாலும் அதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம் என்று பொருள் அல்ல. ஆனால் சொல்ல உரிமை இருக்கிறது. அதை ஏற்றுக்கொள்ளவோ, மறுக்கவோ எங்களுக்கு உரிமை இருக்கிறது. ஆனால் இதனால் இந்த விளைவு என்ற கருத்து ஏதோ பிரதான எதிர்க்கட்சியினர் மட்டுந்தான் இந்த அவையிலே வேண்டும் என்றே ரகளை செய்வது போல அமைச்சரவர்கள் சொல்ல விரும்பினால் அது அவருடைய விருப்பம்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, எப்படிப் பிரதான எதிர்க்கட்சியினருக்கு ஒரு அவப் பெயரை உண்டாக்க வேண்டுமென்ற எண்ணம் எனக்குக் கிஞ்சித்தும் இல்லை. ஆனால் நான் ஒரு விளக்கம் தர ஆரம்பிக்கும்போதே தடுக்கிறார்கள். நான் அதை விட்டுவிட்டு, இப்போது விளக்கத்தை மட்டும் சொல்லிவிடுகிறேன்.

பொதுவாக தமிழ்நாட்டுக் கோவில் நிலங்களைப்பற்றி ஏற்கெனவே சொல்லிவிட்டேன். இதே வடபழனி ஆண்டவர் கோவில் நிலத்தில் 1.45 ஏக்கர் நிலத்தை ஏலம் போட்டு, 1974 ஆம் ஆண்டு 75,000 ரூபாய்க்கு வேணுச்செட்டியார் என்பவருக்கு விற்றிருக்கிறார்கள். அப்போது சொல்லப் பட்டிருக்கிற காரணம் இது தனியாக இருக்கிறது, பாதுகாப்பு இல்லை, கண்டவர்கள் எல்லாம் வந்து குடிசைகள் போடுகிறார்கள், ஆலயத்திற்கு வருமானம் இல்லை, ஆகவே, ஏலம் போடுகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு ஒரு 40 கிரவுண்டு இன்னொரு அஞ்சுகமான இல்லத்திற்கு கூட மாதம் ஒரு கிரவுண்டு 4 ரூபாய் வாடகைக்கு விட்டிருக்கிறார்கள். அப்போதும் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், இதனால் வருமானம் இல்லை, எனவே விட்டிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த ஆலயத்திற்கு வறுமை வந்துவிட்டதா என்று கேட்கிறார்கள்.

வறுமைக்காக விற்பதில்லை. 1975–ஆம் ஆண்டிலே இருந்து அங்கே பணியாற்றுகின்ற ஆலய ஊழியர்களும், அறநிலையத் துறையிலே இருக்கின்ற கடைநிலை ஊழியர்களும் ஆளுக்கு அரை கிரவுண்ட் கொடுங்கள், நாங்கள் வீடு கட்டிக் கொள்கிறோம் என்று 120 பேர் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே 1975–ஆம் ஆண்டிலே இருந்து ஆரம்பிக்கப்பட்டப் பிரச்சினை. அதற்குப் பிறகு சைதாப்பேட்டையிலே உள்ள—இப்போது இங்கே சொல்லப்பட்டிருக்கின்ற கூட்டுறவு வீட்டு மனைச் சங்கம் என்பது இன்று நேற்று ஏற்பட்டதல்ல. ஒரு பத்திரிகையிலே எடுத்துச் சொன்னதைப் போன்று அது பினாமியும் அல்ல. 1957–ஆம் ஆண்டிலே தொடங்கப்பட்டு பல்வேறு கட்சிக்காரர்களாலும், குறைந்த வருவாய் உள்ளவர்களாலும் நடத்தப்படுகின்ற சங்கம் அது. காங்கிரஸ் கட்சியின் ஆட்சிக் காலத்திலே முன்னாள் முதலமைச்சர், பெருந்தலைவர் காமராஜர் அவர்களாலே துவக்கி வைக்கப்பட்டு, முன்னாள் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்களாலே ஆதரிக்கப் பட்ட சங்கம் அது. இந்தச் சங்கம்தான் கேட்கின்றது, குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கு வீக்கர் செக்‌ஷனுக்குக் கொடுக்க வேண்டும் என்பதுதான் விதி. ஆகவே அந்த ஆலயத்தின் வறுமை காரணமாக விற்கவில்லை. சமுதாயத்தினுடைய தேவையை ஒட்டி—ஆலயத்தின் பணியாளர்களும், அறநிலையத்துறையின் கடைநிலை ஊழியர்களும், எழுத்தர்களும் கேட்டார்கள். 1975—

ஆம் ஆண்டிலே தொடங்கி 7, 8 ஆண்டுக் காலமாக தொடர்ந்து பரிசீலிக்கப்பட்டு வந்து கடைசியில் ரூ3,000-க்கு நாங்கள் வாங்கிக் கொள்கிறோம் என்றும் அந்த ஆலய ஊழியர்கள் கொடுங்கள் என்றும் கேட்டதற்குப் பிறகு, 'வீக்கர் செக்ஷனாக இருக்கின்ற எங்களுக்குக் கொடுங்கள், ஏலத்திலே விட்டால் தனிபட்ட முதலாளிகள் அதை எடுத்துக்கொள்வார்கள், எங்களுக்குக் கிடைக்காது' என்று கேட்டதை ஒட்டி 3,000 ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டு அதன்பிறகு சென்றஆண்டு சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் 18,500 ரூபாய் என்று கடைசியாகத் தீர்மானித்தார்கள். அதன்பிறகு 1,500 ரூபாய் அதிகமாக்கி 20,000 ரூபாய்க்கு ஒரு மனை என்று விலை நிர்ணயித்து அதன்படி இந்தச் சங்கத்தினருக்கும், ஆலய ஊழியர்களுக்கும் தரலாம் என்றும் அதற்கு ஆட்சேபணை இருப்பவர்கள் தெரிவிக்கலாம் என்றும் ஆணையர் அப்ஜக்ஷன் நோட்டீஸ் கால் ஃபார் பண்ணி இருக்கிறார். இதுதான் நடந்திருக்கின்றது விற்பனைக்கான காரணம் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆகவே விற்கப்படவும் இல்லை, கோடிக்கணக்கிலே கொள்ளை நடைபெறவும் இல்லை.

20 ஆயிரம் ரூபாய்க்குதான் நிச்சயிக்கப் பட்டிருக்கின்றது. அதை ஏன் ஏலத்திலே கொண்டுபோகவில்லை என்றால் வீக்கர் செக்ஷன்ஸ் போட்டிபோட முடியாத நிலைமை ஏற்பட்டுவிடும். இந்தச் செய்தியைப் பற்றி வெளியிட்ட பத்திரிகைகூட யாரோ ரியல் எஸ்டேட்காரரர்கள் 50,000 ரூபாய் தருவதாகச் சொன்னார்கள் என்று குறிப்பிட்டது. ஆனால் ஏலத்திலே விட்டால் 50,000 ரூபாய் என்ன ஒரு இலட்சம் ரூபாய்க்குக் கூட எடுத்துக்கொள்வார்கள். ஆனால் ஆலைய ஊழியர்களுக்குக் கிடைக்காது. வீக்கர் செக்ஷனுக்குக் கிடைக்காமல் போய்விடும். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில்தான் இந்த பிரச்சினையின்மீது முடிவு எடுப்பதற்கு அறநிலையத்துறை விரும்புகிறதே தவிர இதிலே ஒளிவு மறைவு இல்லை. விற்பனையும் நடைபெறவில்லை. எனவே அப்படி நடைபெற்றதாகச் சொன்னது சபைக்குக் கொடுக்கப்பட்ட தவறான தகவல் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பழ ஜனார்த்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே ஒதுக்கப்பட்டிருக்கின்ற 10.56 ஏக்கர் நிலம் ஒரு கிரவுண்ட் 20 ஆயிரம் ரூபாய்க்கு விற்கப்படுவதாகச் சொன்னார்கள். ஆனால் பல கோடி ரூபாய் மதிப்புள்ளது என்று சொல்லப்படுகின்றது. ஆகவே இதிலே மறைமுகமாக நெப்போடிசம் இருப்பதாகப் பரவலாகப் பேசப்படுகின்றது. ஆகவே இதிலே நல்ல முறையை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களிடத்திலே நான் பணிவோடு ஒன்றைக் கேட்டுக்கொள்கிறேன். இங்கே ஏதோ கோடிக்கணக்கான அளவுக்கு அன்டர்ஹேண்ட் டீலிங்ஸ், நெப்

போட்டிஸம் நடப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். இந்த அவையிலே இவ்வளவு விளக்கம் அளித்ததற்குப் பிறகும் அவர்கள் கோடிக்கணக்கிலே கொடுக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். எனவே மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் விளக்கம் அளிக்கவேண்டும். இதிலே எதுவும், ஒளிவு மறைவே இல்லை. தெளிவாகச் சொல்லி இருக்கிறேன். ஆக்ஷன் விட ஆரம்பித்தால் யார் கேட்பார்கள் என்பதைத் தெளிவாகச் சொல்லி இருக்கிறேன். இந்தச் சங்கம் ஒன்றும் பினாமிச் சங்கம் அல்ல. எல்லா கட்சிக்காரர்களும் இருக்கின்ற சங்கம். ரிஜிஸ்ட்ரார் ஆஃப் கோவாப்பரேட்டிவ் சொசைட்டீஸ் என்ற அதிகாரியே அதற்கு அனுமதி வழங்கி சிபாரிசு செய்திருக்கிறார். எங்களுடைய ஆலய ஊழியர்களும் கேட்கிறார்கள். அரை கிரவுண்ட் வேண்டும் என்று கேட்கிறார்கள். ஆலய ஊழியர்களுக்குக் கொடுத்தால் பினாமியா? தொழிலாளர்களுக்குக் கொடுத்தால் பினாமியா? மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தக் கருத்தைச் சொல்லி இருக்கிறார்கள். அதனாலேதான் பழைய சம்பவங்களை எல்லாம் சொல்ல ஆரம்பித்தால் அவர்களுக்குக் கோபம் வந்துவிடுகின்றது என்று சொன்னேன்.

(பிற்பகல்—12.40)

திரு. க. அன்பழகன் : ஒவ்வொரு நேரமும் 'பழைய சம்பவங்களை நான் சொல்ல ஆரம்பித்தால்' என்று கூறுகிற அமைச்சர் அவர்கள் ஒன்றைப் புரிந்து கொள்ளவேண்டும். எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் சொல்லும்போது வெளியிலே கிடைக்கின்ற விவரங்களைத்தான் சொல்லமுடியும். மறுக்கிற உரிமை அரசுக்கு நிச்சயமாக இருக்கிறது. மறுத்துச் சொல்வதில் மாறுபாடு கிடையாது, ஆனால் வெளியே இருந்து அறியப்படுகிற உண்மைகளை, கூறப்படுகிற கருத்துக்களைச் சொல்கிற காரணத்தால் அதை ஒரு குற்றச்சாட்டாக எடுத்துக் கொள்வது என்பது நியாயமல்ல. மாறாக விளக்கங்கள்தான் சொல்லவேண்டும். அப்படி விளக்கம் தரும்போது இப்படி ஒவ்வொரு முறையும் சுட்டிக்காட்டுவது என்பது அமைச்சர் அவர்களுக்கு எப்படியோ வழக்கமாக ஆகியிருக்கிறது. இருந்தாலும் அமைச்சர் அவர்கள் சொல்கிற அந்தக் கருத்து பற்றி கேட்க எனக்கு உரிமை இல்லை. இதை ஒரு விவாதமாக ஆக்கியிருக்கிற காரணத்தால் இதைச் சொல்லவேண்டிய ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது, எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் இப்படியெல்லாம் பேசக்கூடிய நிலைமை வருவதற்குக் காரணம் கோவிலிலே பணியாற்றுகிறவர்களுக்குத் தரப்பட வேண்டிய அந்த உரிமையை விட்டு மீறி வேறு ஒரு சங்கத்திற்கு அந்த உரிமை போய் விடுகிறது என்ற எண்ணம் ஏற்படுகிறது. கோவிலில் பணியாற்றுகிறவர்களுக்குக் கொடுக்கலாம். அந்த உரிமையைப் பாதுகாக்கிற முறையில் செயல்படக்கூடிய நிலைமை இருக்குமானால் இந்தப் பிரச்னை இவ்வளவு வேகமாக எழுந்திருக்காது.

[1982 ஏப்ரல் 3

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: இங்கிருக்கிற எதிர்க் கட்சிகள், எந்த எதிர்க்கட்சியானாலும் சரி அல்லது ஆளுகிற கட்சியில் இருக்கிறவர்களானாலும் சரி இந்த அரசாங்கத்திடத்தில் தகவல்களைத் தேடித் தரவும், அல்லது வெளியே சொல்லப் படுகிற தவறான தகவல்களாக இருந்தால் அதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வந்து உண்மைத் தகவலைப் பெறவும் உரிமை இருக்கிறது. நான் இல்லை என்று சொல்லவில்லை. ஆனால், அப்படி வெளியே சொல்கிற தகவல்கள்தான் உண்மை, அவையில் தரப்படுகிற தகவல்கள் தவறானவை என்று திட்ட மிட்டு மீண்டும் மீண்டும் உறுப்பினர்கள் சொல்வதை மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் ஏற்றுக்கொள் கிறார்களா என்று தங்கள் மூலம் தெரிந்துகொள்ள விரும்பு கிறேன்.

பிறகு அவர்கள் எழுப்பிய கருத்துக்கு வருகிறேன். அவர் களுக்கு விடை அளிக்கிறேன். 120 ஆலய ஊழியர்களுக்கு அரை கிரவுண்ட் கொடுக்கிறோம். மொத்தப் பரப்பு 10.56 ஏக்கர். இவர்களுக்கு 360 சென்ட்ஸ். 360 சென்ட்ஸ் என்றால்—ஒரு ஏக்கருக்கு 18-3/4 கிரவுண்ட்ஸ் வரும். ஆகவே 36 பேர்களுக்கு ஒரு ஏக்கரில் கொடுக்கமுடியும். நான்கு ஏக்கர் சொச்சம் இவர்களுக்கு ஒதுக்க அங்கேயே முடிவு எடுக்கிறோம். பாதி அறநிலையத் துறை ஊழியர்களுக்கு, மிச்சம் இருக்கிற ஆறு சொச்சம் ஏக்கர் சைதாப்பேட்டை கூட்டுறவு வீட்டுமனை சங்கத்திற்குத் தரலாமா என்பதுதான் ஆட்சேபணைக்குரிய நோட்டீஸ். அதற்குத்தான் அப்ஜெக்ஷன்ஸ் கால்ஃபார் செய்திருக் கிறார்கள். எங்களுடைய அறநிலையத் துறை ஊழியர்களுக்கு இல்லாமல் விட்டுவிடுவோமா? நீங்கள் அதற்காக வாதாடுகிற உரிமை படைத்தவர்கள் என்றால், என்ன ஐயா அக்கிரமம், ஆலய ஊழியர்கள் வீடு இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள், அவர்களுக்கு ஒதுக்காமல் யாருக்கோ கொடுக்கிறீர்களே என்று கேட்டால் நான் அதற்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக் கிறேன். எங்கள் ஆலய ஊழியர்களுக்கும் ஒதுக்கியிருக்கிறோம். என்ன விலை நிர்ணயம் செய்கிறீர்களோ அதைத் தருவோம் என்றார்கள். காரணம், அவர்கள் ரூ. 3,000-க்கு கேட்டவர்கள். பிறகு ரூ. 15,000 என்று ட்ரஸ்ட் போர்ட் தீர்மானிக்கிறது. கலெக்டர் ரூ. 18,500 என்கிறார். மூன்று ஆண்டுகள் கழித்து, இப்போது ரூ. 20,000 என்று நிச்சயிக்கிறார்கள். ஆலய ஊழியர்களும் நாங்களே அந்தத் தொகையைக் கொடுத்து விடுகிறோம், எங்களுக்குக் கொடுங்கள், ஏலம் விடாதீர்கள் என்கிறார்கள். ஆகவே நான்கு ஏக்கர் சொச்சம் அவர்களுக்கு, மீதி ஆறு ஏக்கர் சொச்சம் சைதாப்பேட்டை கூட்டுறவு வீட்டு மனைச் சங்கத்திற்கு. ஆலய ஊழியர்களின்மீது எங்களுக்கு மிகுந்த அக்கறை இருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

1982 ஏப்ரல் 3]

(ஆ) தொப்பையாற்றின் குறுக்கே பாலம் கட்டுவதில் தாமதம்.

திரு. செ. செம்மலை: தலைவர் அவர்களே, ''சேலம், தர்மபுரி மாவட்டங்களுக்கு இடையே ஓடுகின்ற தொப்பை யாற்றின் குறுக்கே பாலம் கட்டும் பணியில் ஏற்பட்டு வரும் வீண் காலதாமதம் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

பென்னாகரம்—பெரும்பாலை சாலையில் கி. மீ. 34/2ல் தொப்பையாறு குறுக்கே ஒரு உயர்மட்டப் பாலம் கட்டும் வேலையானது ரூ. 14.50 லட்சத்துக்கு 5-வது ஐந்தாண்டுத் திட்டம் மத்தியசாலை நிதி திட்ட வேலைகள் கீழ் 1976-ம் ஆண்டு ஜூலை திங்களில் மத்திய அரசு ஒப்பளித்தது. 8 மீட்டர்களில் 7 கண்கள் கொண்ட மேற்கண்ட பால வேலை யின் மதிப்பீடு தேசீய நெடுஞ்சாலைத் தலைமை பொறியாளரால் 1978ம் ஆண்டு ஜனவரி திங்களில் ரூ. 7.727 லட்சத்திற்கு தொழில் நுட்ப ஒப்பளிப்பு அளிக்கப்பட்டது.

2. ஒப்ப அறிவிப்பு 12-4-1978ல்- அழைக்கப்பட்டு வேலை திரு. பி. கே. சித்தையனுக்கு ஒப்படைக்கப்பட்டு பாலத்திற்கான இடம் 18-8-1978ல் கொடுக்கப்பட்டது. கால அட்டவணையின் படி வேலை 17.7.1979-ல் முடிவடைந்திருக்க வேண்டும். ஒப்பந்தக்காரர் வேலை ஒப்பந்தத் தொகையான ரூ. 3.929 லட்சத்துக்குப் பதிலாக 2.80 வரை கால நீடிப்பு கொடுத்திருந்தும் கூட ரூ. 83,460 மதிப்பு மட்டும் வேலை முடித்திருந்தார். அவரின் ஒப்பந்தம் 24-3-1980-ல் கோட்டப் பொறியாளர் (தேசீய நெடுஞ்சாலை), சேலம் அவர்களால் முழுவதும் நீக்கப் பட்டது. ஒப்பந்தக்காரர் ஓ. எஸ். எண். 561/80 ஐ. ஏ. எண். 621/80-ல் துறை மீதமுள்ள வேலையை மற்றொரு நிறுவனத்திற்கு ஒப்படைப்பு அளிப்பதற்குத் தற்காலிகத் தடை வாங்கினார். இந்தத் தடையானது தகுந்த எதிர்மனு செய்து நீக்கப்பட்டது. மீத முள்ள வேலைகளுக்கு 4-6-1980, 26-6-1980, 16-7-1980-ல். ஒப்ப அறிவிப்புக்கு விடப்பட்டதில் அதற்கு ஆதரவில்லை. 12-11-1980ல் நான்காவது அழைப்பின்போது திரு. பி. கே. பெரியண்ண கவுண்டரிடமிருந்து ஒரு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு 20-1-1981-ல் வேலை அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. வேலையை எல்லா வகைகளிலும் முடிக்க எட்டு மாதங்கள் அவகாசம் கொடுக்கப்பட்டது. இந்த ஒப்பந்தக்காரர் கூட,

இந்த வேலை செய்யாததாலும், திருப்தியில்லா வேலை நடந்ததாலும், 1–4–1981-ல் கோட்டப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை) சேலம் அவர்களால் அவரின் ஒப்பந்தம் ஒரு பகுதி நீக்கம் செய்யப்பட்டது.

3. மேற்கூறிய வேலையின் பகுதி நீக்கப்பட்ட பாகம் திரும்பவும் ஒப்ப அறிவிப்பு செய்யப்பட்டு வேலை திரு. பி. கே. கருப்பண்ணனுக்கு 14-5-1981-ல் ஒப்படைக்கப்பட்டு வேலை 25–5–1981ல் ஆரம்பிக்கப்பட்டது. வேலையில் மேற்கண்ட பாகம் முடிக்க ஆறு வாரங்கள் அவகாசம் கொடுக்கப்பட்டது. போதுமான முன்னேற்றம் இல்லாததால் அவரின் ஒப்பந்தம் கோட்டப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை), சேலம், அவர்களால் 21–8–1981–ல் முழுதும் நீக்கப்பட்டது.

4. திரு. பி. கே. பெரியண்ண கவுண்டரின் ஒப்பந்தம் பகுதி நீக்கம் செய்யப்பட்ட பிறகு அவர் மீதமுள்ள வேலையின் பாகத்தில் எந்தவித முன்னேற்றமும் காட்டவில்லை. அதனால் அவரின் ஒப்பந்தம் கோட்டப் பொறியாளரால் எல்லாவித நடைமுறைகளையும் கவனித்து முழுவதும் நீக்கப்பட்டது.

5. மீதமுள்ள வேலைகளை 14–10–1981–ல் ஒப்ப அறிவிப்புக்கு விடப்பட்டது. அதற்கு ஒப்பந்தம் ஏதும் வரவில்லை. இதனிடையே மேட்டூர் நீர்த்தேக்கத்தில் தண்ணீர் நிறைந்து வழிந்ததால் இந்த இடம் தண்ணீருக்குள் மூழ்கிவிட்டது. இந்த வேலைக்கு மேலும் ஒப்பந்தங்கள் கிடைக்க மேலும் சந்தர்ப்பம் இல்லாததால் இந்த வேலைக்குத் தேவையான நடப்பு அட்டவணை விதங்களைக் கொண்ட மாற்றப்பட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு 1–3–1982ல் தலைமை பொறியாளரால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. மீதமுள்ள வேலை இத்துறை மூலம் நடந்து கொண்டிருக்கிறது.

6. பழைய அனுபவத்தினால் ஒப்பந்தக்காரர் நீதிமன்றத்திலிருந்து தடை வாங்கி துறை மீதமுள்ள வேலைகளைச் செய்வதற்குத் தடுப்பார் என நினைக்கப்பட்டது. ஆகையால் தடுப்பு நடவடிக்கையாக முன்சிப் நீதிமன்றம் மேட்டூர் ஒரு தரப்பு தடைக் கட்டளைக் கொடுக்காதவாறு கேட்டுக்கொண்டு கேவியட் (Caveat) மனு செய்யக் கோரி அரசைக் கேட்கப்பட்டது. இது அரசால் ஏற்கப்பட்டு கேவியட் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட காரணங்களால் வேலையை முடிப்பதில் தாமதம் ஏற்படுகிறது.

1. ஒப்பந்தக்காரர்களின் பங்கில் கடமை தவறியது.
2. நீதி மன்றத்தின் தடைக்கட்டளை.
3. மேட்டூர் நீர்த் தேக்கத்திலிருந்து தண்ணீர் வந்து இடத்தை மூழ்கடிக்கச் செய்தல்.

7. தற்போதுள்ள வேலையின் முன்னேற்றம்.

5 பாலத்தூண்கள், 2 சார்புச் சுவர்களுக்கு அடித்தளம் முடிவடைந்துள்ளது. மீதமுள்ள ஒரு பாலத்தூண் அடித்தளம் 0.30 மீ. ஆழத்திற்கு நிறுவப்பட்டுள்ளது. 4 பாலத்தூண்களில் அடிமட்டத்திற்கு மேலே கீழ்க்கட்டுமானத்திற்கு கற்கலவை செய்தல். 1.85 மீட்டரிலிருந்து 3.90 மீட்டர் உயரம் வரையிலும் இரு சார்புச் சுவர்களிலும் 3.63 மீ. லிருந்து 3.90 மீட்டர் வரையிலும் உயரம் செய்யப்பட்டுள்ளது.

8. மழைக்காலத்திற்கு முன்பே எல்லா வேலைகளையும் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. செ. செம்மலை: காலதாமதம் செய்த கடமை தவறிய ஒப்பந்தக்காரர் ஒப்பந்தம் நீக்கப்பட்டதாகவும் பிறகு மாற்று மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் இப்போது இந்தப்பணியை துறையே செய்து வருவதாகவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் தெரிந்து கொள்ள விரும்புவது மாற்று மதிப்பீடு காரணமாக கூடுதலாக அரசுக்கு எவ்வளவு செலவாகிறது? இப்படி ஒப்பந்தம் செய்துவிட்டு அது கட்டுப்படியாகவில்லை என்று ஒப்பந்தக்காரர் பின்னால் விலகிவிடுகிறார்கள். அதனால் கூடுதலாக அரசு செலவு ஏற்படும் சூழ்நிலை ஏற்படுகிறது. இந்த நிலையைத் தவிர்க்க அப்படிப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, இதுகுறித்து மேட்டூர் முன்சீப் கோர்ட்டில் ஒரு வழக்கு போடப்பட்டு, அதற்குத் தடைகள் பெறப்பட்டன. அரசாங்கம் மூலமாக 'காவியட்' மனு செய்யும்படி, அங்கே இருக்கக்கூடிய நீதிமன்றம் கேட்டது. அதற்கான 'காவியட்' மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. ஆனாலும், இதற்குத் தடை பிறப்பித்த பிறகும், காலதாமதம் ஏற்படுவதற்குக் காரணம், ஒப்பந்தக்காரர்கள் பங்கில் கடமை தவறியது, நீதிமன்றத்தின் தடைக் கட்டளை இருந்தது, மேட்டூர் நீர்த் தேக்கத்திலே இருந்து தண்ணீர் வந்து, அந்த இடத்தை மூழ்கடித்து விடும் என்ற அந்தக் காரணத்தினால், அந்த வேலைகள் தடைப்பட்டன. ஆனால், மழைக் காலத்திற்கு முன்பு அந்த வேலைகள் முடிக்க வேண்டுமென்று அதற்கான நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறோம். சீக்கிரமாக வேலைகள் முடிவடையும்.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பாலம் கட்டி முடிக்கப்பட்டால், தர்மபுரி, சேலம் மாவட்டங்களுக்கு ஒரு இணைப்புப் பாலமாக அது அமையும். இப்போது அந்தச் சூழ்நிலை இல்லாததால், அந்த ஆற்றில் படகு விபத்து ஏற்பட்டு, பல உயிர்கள் பலியாகின்ற சூழ்நிலை இருக்கிறது. மழைக் காலத்திற்கு முன்பு கட்டி முடிக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதி

மொழி தந்தார்கள். அதற்கு நன்றி. நான் கேட்டுக்கொள்வதெல்லாம், இனியும் காலதாமதம் ஏற்படாமல், ஒரு குறிப்பிட்ட காலத்தை நிர்ணயம் செய்து, அந்தக் காலத்திற்குள் இதைக் கட்டி முடிப்பதற்கான நடவடிக்கையை அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, சீக்கிரமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஊ) எதிர்பாராச் செலவு நிதி (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவு, 1982.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு: தமிழ்நாடு 1982ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவும் ஆளுநர் தனது இசைவைத் தெரிவித்துள்ளார்.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) எதிர்பாராச்செலவு நிதி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(எ) பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு: தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு அறிமுகம் செய்ய ஆளுநர் தனது இசைவைத் தெரிவித்துள்ளார்.

(6) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஆ) பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் ; இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(இ) பத்திரிகைப் பணியாளர்கள் நிவாரண நிதிச் சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு பத்திரிகைப் பணியாளர்கள் நிவாரண நிதிச் சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஈ) தொழிலாளர் நல நிதி (திருத்த) சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதி (திருத்த) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஏ) பேரவையில் நடைபெற்ற நிகழ்ச்சி தொடர்பாக.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று நடைபெற்ற சம்பவங்களுக்குப் பிறகு எல்லாவற்றையும் அவைக் குறிப்பிலே இருந்து நீக்கிவிட்டேன். இனி இப்படிப்பட்ட வார்த்தைகள்தான் அவைக் குறிப்பிலே இருக்கும் என்பதைப் பத்திரிகை நிருபர்களுக்கு இந்த மன்றத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

"சட்ட அமைச்சர் அவர்கள் கூறிய வார்த்தை குறித்து, மாண்புமிகு முதல்வர் அவர்கள் வருத்தம் தெரிவித்துக் கொண்டதோடு, அமைதி காக்கவேண்டும் என்று எல்லோருக்கும் வேண்டுகோள் விட்டதை ஒட்டி, அவையில் அமைதி ஏற்பட்டது. பின்னர் பிற அலுவல்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன."

இந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலே இருக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

6 அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

[பிற்பகல் 12.50]

(2). குடியிருப்புச் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு குடியிருப்புச் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 67/1981) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

*திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே. இன்றையதினம் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற 1981 ஆம் ஆண்டு குடியிருப்புச் சட்டங்கள் மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்தச் சட்டம் 1971ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்ட சட்டம் ஆகும். அந்தச் சட்டத்தில் சில திருத்தங்களைக் கொண்டு வந்து இன்றைய தினம் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இந்தச் சட்ட மன்றத்திலே வைத்திருக்கிறார்கள். இந்தச் சட்டம் 1971-ல் டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது கொண்டுவரப்பட்டது. ஒப்பற்ற தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன கருத்தின் அடிப்படையில், தமிழகத்திலே வறுமையால் வாடிக்கொண்டிருக்கின்ற அனைவருக்கும் உண்ண உணவும், உடுக்க உடையும் இருக்க இடமும் வேண்டுமென்று சொன்னாரே அந்தக் கருத்தின் அடிப்படையில் வறுமையால் வாடிக்கொண்டிருக்கின்ற குடியிருப்

*1981 ஆகஸ்டு 24 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் **வெளியிடப்** பெற்றுள்ளது.

பதற்கு கூட இடமில்லாது தவித்துக் கொண்டிருக்கின்ற ஏழை, எளியவர்களுக்குச் சொந்தமாக இடம் கொடுத்து அவர்கள் அதிலே குடியிருக்கவேண்டும் என்பதற்காக 28—6—71 ஆம் நாளில் திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தது. அந்தச் சட்டத்தில் ஒருவர் குடியிருக்கிற அந்த இடம் அவருக்கு உடமையாக்கப்படுகிறது, சொந்தமாக்கப்படுகிறது என்ற முறையிலே டாக்டர் கலைஞர் அவர்களால் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அந்தச் சட்டத்தின் மூலமாக தஞ்சாவூர் மாவட்டத்தில் 1 லட்சத்து 75 ஆயிரம் பேர்கள் பயன் அடைந்தார்கள், ஆனால் தமிழகத்திலே அன்றைக்கு இருந்த நிலைமை குடியிருப்பதற்குக்கூட இடம் இல்லை, தாம் குடியிருக்கிற இடம் பிறருக்குச் சொந்தமானது என்ற நிலைமையில் ஏழை, எளியவர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் அனைவருக்கும் படுத்து உறங்குவதற்குக் கூட இடம் இல்லை என்ற நிலை இருந்தபோது அவர்கள் சொந்த இடத்திலே படுத்து உறங்க வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில் கொண்டுவரப்பட்டது. அன்றைய தினம் தமிழகத்திலே தஞ்சை மாவட்டத்தில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் மட்டா, மிராசுதார்களுக்கு, கோயில்களுக்கு, மடங்களுக்குச் சொந்தமாக இருந்தன. ஒரு நாள் வேலைக்கு வரவில்லையென்றால் வீட்டினைப் பிரித்து வீதியிலே எறிவதும் பண்டபாத்திரங்களையெல்லாம் தூக்கியெறிந்து வெளியே போ என்று சொல்வதுமான நிலைமை இருந்தது. அதை மாற்றியமைக்கக்கூடிய வகையில் அவர்கள் குடியிருக்கின்ற மனைகளை அவர்களுக்குச் சொந்தமாக்கித்தர வேண்டுமென்ற அடிப்படையில் கொண்டு வரப்பட்டது. அன்றைய தினம் ஏழை எளிய விவசாய குடும்பங்களிலே பிறந்தவர்கள் பயன் அடைந்து அண்ணா அவர்கள் சொன்னார்களே இருக்க இடம் வேண்டுமென்று, அந்த முறையிலே அவர்கள் சொந்த இடத்திலே நிம்மதியோடு உறங்கினார்கள்.

இன்றைய தினம் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சில திருத்தங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அப்போது பட்டா வழங்குவதற்கு டெபுடி கலெக்டர் என்ற அந்தஸ்தில் ஒருவர் இருந்தார். அதற்குப் பதில் இப்போது வட்டாட்சியரிடத்திலே அந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்படுகிறது. பட்டா வழங்கப்பட்ட இடங்களில் சிலர் பினாமியாக விற்கிறார்கள், சிலர் பினாமியாக அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள், அதை மாற்ற வேண்டுமென்பதற்காக பினாமியாக கொடுத்திருக்கிறார்கள் என்றால் அதை அரசாங்கம் எடுத்துக் கொள்ளும் என்ற முறையில் கொண்டு வந்து இருக்கிறார்கள். ஆனால் பட்டா கொடுக்கிறபோது 10 ஆண்டுக்குள் அப்படி மாற்றப்பட்டால் பட்டா ரத்து செய்யப்படும் என்று அந்தச் சட்டத்திலேயே இருக்கிறது. அதுதான் நியாயமாகும். நான் சொல்

வதற்குக் காரணம், கிட்டத்தட்ட 30, 40 ஆண்டு காலமாக ஒரு இடத்தை அனுபவித்து வருகிறவர்களுக்கு நாம் பட்டா உரிமையை இந்தச் சட்டத்தின் மூலமாக செய்து கொடுத்திருக்கிறோம். அவர்கள் வசதியான வீடுகளை எல்லாம் கட்டி இருந்திருக்கிறார்கள். அவர்கள் அனுபவித்து வருகிற இடத்தை அவர்களுக்கு உரிமை செய்து கொடுத்திருக்கிறோம். அவர் தவறாக வேறு ஒருவருக்கு மாற்றம் செய்து விடுவாரானால் அந்தப் பட்டாவை ரத்து செய்யலாமே தவிர அந்த இடத்தையும், வீட்டையும் நஷ்ட ஈடு கொடுக்காமல் அரசு எடுத்துக் கொள்ளும் என்று இந்தச் சட்டத்திலே இருக்கிறது. அதை தயவு செய்து மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களுடைய பட்டாவை ரத்து செய்யலாமே தவிர இடத்தையும் வீட்டையும் அரசு பறிமுதல் செய்து கொள்ளும் என்று சொல்லியிருப்பது நியாயமல்ல. அதேபோல அரசாங்கத்தின் சார்பாக நிலத்தை ஆர்ஜிதம் செய்து நாம் கொடுக்கக்கூடிய இடத்திற்கு பினாமியாக துஷ்பிரயோகம் செய்து விற்று விடுவார்களானால் அதை அரசாங்கம் எடுத்துக் கொள்வதிலே எனக்கு ஆட்சேபணை இல்லை, எடுத்துக் கொள்ளலாம். ஆனால் குடியிருக்கக் கூடிய இடத்தை அவர்களுக்குப் பட்டா செய்து கொடுக்கும்போது சட்டத்திற்குட்பட்டு அந்தப் பட்டாவை ரத்து செய்து வீட்டை பறிமுதல் செய்வோம் என்று சொல்வது நியாயம் அல்ல. அந்த திருத்தத்தை அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்று நான் கருதுகிறேன். இப்படிப்பட்ட இடங்களுக்கு விதிவிலக்கு கொடுக்க வேண்டும்.

அதேபோல தஞ்சை மாவட்டத்திலே இன்றைய தினம் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் மடங்களுக்கும் கோவில்களுக்கும் சொந்தமாக இருக்கின்றன. அந்த இடங்களுக்கெல்லாம் பட்டா கொடுக்கப்படவில்லை. பட்டா கொடுக்காத நிலங்களில் குடியிருக்கிற ஏழைகளுக்கு, விவசாயிகளுக்கு, கோவில்களுக்கும் மடங்களுக்கும் சொந்த இடமாக இருந்தாலும் கூட பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைய தினம் குடியிருக்க இடம் இல்லாமல் பல்லாயிரக்கணக்கான ஏழை மக்கள் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தில் அரசாங்கத்தின் சார்பாகக்குடியிருப்பதற்கு இடங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. வழங்கப்படுகிற இடங்கள் நஞ்சையிலே கொடுத்திருக்கிறார்கள். அப்படி கொடுக்கிறபோது பட்டா கொடுப்பதிலே ஒரு விதி இருக்கிறது. ஆறு மாதத்திற்குள் அந்தப் பட்டா பெற்றவர்கள் வீடு கட்டி குடி வந்து விட வேண்டும். அவர்களின் அனுபவத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். வீடு கட்டி அங்கே இருக்கவில்லை என்று சொன்னால் பட்டா ரத்தாகும் என்று விதி இருக்கிறது. நாம் கொடுக்கக்கூடிய இடம் நஞ்சையிலே கொடுத்தால் 4 அடி, 5 அடி பள்ளமாக இருக்கும். அந்தப் பள்ளத்தை தூர்த்து, ஆறு மாத காலத்திற்குள் அந்த ஏழைகளால் வீடு கட்டிக்கொள்ள முடியுமா என்றால், நிச்சயமாக முடியாது. அப்படிப் பட்டா கொடுக்கிறபோது நஞ்சையாக இருக்குமானால், திராவிட முன்னேற்ற கழக ஆட்சிக் காலத்தில் அதைத் தூர்த்து

மேடாக்கி வீடு கட்டிக் கொடுத்ததைப் போல அரசாங்கத்தின் சார்பாக கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நஞ்சையை மேடாக்கி அரசாங்கத்தின் சார்பிலே கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் குடியிருப்பதற்குப் பட்டா கொடுத்த இடங்கள் நஞ்சையாக இருந்த காரணத்தாலே வீடு கட்ட முடியாமல் தரிசாக கிடக்கின்றன. தரிசாக, அனுபவிக்காமல் இருக்கிற இடங்களை அரசாங்கம் உடனடியாக எடுத்து, மறுபடியும் மேடாக்கி இல்லாதவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது) ஒரே ஒரு வார்த்தை கூறி முடித்து விடுகிறேன். நான் நேற்றைய தினம் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடத்திலே சொன்னதைப் போல, குடியிருக்கிற இடத்திலே வீடு கட்டியிருக்கிறவர்கள், அவர்களுக்கு தேவையில்லாத நேரத்திலே விற்று விட்டு, அல்லது அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கு கொடுத்துவிட்டு வேறு ஊருக்குச் சென்று விட்டால் தயவு செய்து அதை பினாமியாக எடுத்துக் கொள்ளாதீர்கள். அதை அரசாங்கத்திற்கு மாற்றம் செய்யப்பட்டதாக எடுத்துக் கொள்ளாமல், அரசாங்கத்தின் சார்பாக கொடுக்கக் கூடிய இடத்தை மட்டும் இந்தச் சட்டம் கட்டுப்படுத்தும் என்ற அந்த நிலையை உண்டாக்க வேண்டுமென்று கூறி வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-00)

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று அரசு சார்பில் கொண்டு வந்திருக்கிற 1981-ஆம் ஆண்டு குடியிருப்புத் திருத்தச் சட்டத்தின்மீது பேசுவதிலே நான் பெருமைப்படுகிறேன். முன்பு இராஜாஜி அவர்கள் 1952—ஆம் ஆண்டிலே பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் ஒன்று கொண்டு வந்தார்கள். அப்படிக் கொண்டு வந்த பொழுது பரீசோதனையாக, தஞ்சை ஜில்லா எடுத்துக் கொள்ளப்பட்டது. அப்படி எடுத்த சமயத்திலே முதலாளிகளிடம் நேர் சமரச வார்த்தை பேசி, ஏழை விவசாயிகளை, குடியிருக்கிற இடங்களை விட்டு எக்காரணத்தைக் கொண்டும் வெளியேற்றக் கூடாது என்று சொன்னார்கள். ஆனால், அவர்களுடைய ஆட்சிக்காலத்திற்குப் பிறகு நிலைமை வேறாகி விட்டது. அவருக்குப் பிறகு, கோயிலைச் சேர்ந்தவர்கள், மடத்தைச் சேர்ந்தவர்கள், தனிப்பட்ட நிலச்சுவாந்தார்கள், அந்த விவசாயிகள் வேலை நிமித்தம் காரணமாக வெளியூர் சென்று திரும்புகிறபொழுது அவர்களுடைய வீடுகளுக்கே வரக்கூடாது என்ற அவல நிலையை உண்டாக்கினார்கள். அப்படி உண்டாக்கிய பொழுது, 1971வது ஆண்டியே குடியிருப்புப் பாதுகாப்புச் சட்டம் கொண்டு வரவேண்டிய

அவசியம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டது. அப்படிச் சட்டம் வந்தும் இன்னும் அந்தக் குறைகள் நீக்கப்படவில்லை. அந்தச் சட்டத்திலே எப்படியிருந்தாலும் மேல் குடியிருப்பு, கீழ் குடியிருப்பு என்று ஒரு பிரிவை உண்டாக்கினார்கள்.

ஒரு குடிசை இருக்குமானால் அந்தப் பகுதியிலிருக்கிற மேல் மட்டச் சுவர்கள், அதற்கு வேய்ந்திருக்கிற கூரைகள், அதிலே இருக்கிற கழிகள், அவைகள்தான் அவர்கள் வைத்திருக்கலாமே தவிர, அந்தக் குடிசை இருக்கிற கீழ் பூமி அந்த நிலச் சுவாந்தாருக்குச் சொந்தம் அல்லது மடாதிபதிகளுக்குச் சொந்தம், அல்லது அறக்கட்டளைகளுக்குச் சொந்தம் என்று சொல்லி, பல ஏழைகள் வெளியேற்றப்பட்டார்கள். அப்படி வெளியேற்றப்பட்ட நிலைமை வந்த பொழுதுதான் கீழ்க் குடியிருப்பு என்பதையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்ற அவசியம் அரசாங்கத்திற்கு வந்தது. இப்பொழுது மேல் குடியிருப்பு, கீழ் குடியிருப்பு என்று வந்தாலும் அங்கே இருக்கிற தென்னை மரங்கள், பூவரசம் மரங்கள், மூங்கில் மரங்கள் எங்களுக்குச் சொந்தம் என்று சிவில் கோர்ட்டுகளுக்குப் போகிற அளவுக்குக்கூட நிலச் சுவாந்தார்கள், மடத்தலைவர்கள், அறக்கட்டளைகள் இந்த ஏழை எளியவர்கள் மீது வழக்கு தொடர்கின்ற நிலை இருந்து கொண்டிருக்கிறது. தஞ்சை ஜில்லா, திருநெல்வேலி ஜில்லா, திருச்சி ஜில்லா, சிதம்பரம் தாலுகா போன்ற பல இடங்களிலே. ஏழைகள் கோர்ட்டுகளுக்கு இழுக்கப்பட்டு அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அப்படியிருக்கும் போது நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் நல்லெண்ணத்தோடு அப்படி இருக்காத வகையில், தமிழ்நாடு பூராவும் இந்தச் சட்டத்தினால் ஏழை, எளிய மக்களுக்கு மேல் குடியிருப்புகள், கீழ் குடியிருப்பகள் என்று பிரிக்கப்படுகின்ற நிலை இருக்குமானால், அவர்கள் இருக்கிற இடம் அவர்களுக்கே சொந்தமாகும்—தமிழ்நாட்டிலே இருக்கிற அத்தனை பேர்களுக்கும் இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறேன் என்று ஒரு முறை சொன்னார்கள், அவர் சொன்னதை நான் வரவேற்றாலும், சட்டம் நிறைவேற்றினாலும், நடைமுறையிலே பார்க்கிற பொழுது அவல நிலைமை ஏற்படுகிறது.

குறிப்பாக, இந்தச் சட்டத்தின் 7-வது பிரிவில் வட்டாட்சியர் தரத்திற்குக் குறையாத அதிகாரிகள் இவைகளைச் சீர்படுத்த வேண்டும், செயல்படுத்த வேண்டுமென்று இந்தச் சட்டத்திலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. நிச்சயமாக அமைச்சர் அவர்கள் நிர்வாகத் துறையிலே இருந்து வந்தவர்கள். நிர்வாகத்திலே இருக்கிற அதிகாரிகள் எவ்வளவு நல்ல எண்ணத்தோடு, எத்தனை சட்டங்கள் கொண்டு வந்தாலும், எத்தனை இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கொடுத்தாலும், கீழ் நிலையிலே உள்ளவர்கள் நல்லவர்களாக இருப்பார்களானால், இந்தச் சட்டங்களின் பயனை நாட்டு மக்கள் அடைய முடியும். அப்படிக் கீழ்நிலையிலே இருப்பவர்கள் அவர்களுடைய ஏழ்மை காரணத்தினாலோ, அல்லது அவர்களுடைய இருப்பிடம் காரணத்தினாலோ, அல்லது அவர்களுக்குச் சொந்தம் என்ற எண்ணம் உருவாகிற காரணத்தினாலோ, கீழ் மட்டத்திலே உள்ளவர்களால், நாம் எத்தனை சட்டங்கள்

நிறைவேற்றினாலும். அமுலாக்கப்படுவதிலே அவல நிலைமைகள் ஏழை, எளிய மக்களுக்கு உண்டாகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆகவே நான் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறேன். வட்டாட்சியர் என்பதற்கு பதில், குறைந்தபட்சம் கோட்டாட்சித் தலைவருடைய அதிகாரத்திற்குக் கொண்டு வந்து அவைகளை அமுல்படுத்தவும், கண்காணிக்கவும், சிபாரிசு செய்யவும், அதிலே உண்மைகளைக் கண்டறியக் கூடிய நிலைமைகளை உருவாக்குவதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும். ஆகவே, இந்த வட்டாட்சியர் என்றுள்ள ஷரத்தை ஆர். டி. ஓ. அளவுக்காவது உயர்த்த வேண்டுமென்பதை நான் வற்புறுத்திக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்,

அந்த எழை எளிய மக்கள் பல சங்கடங்களை அனுபவித்திருப்பது, நமக்கு நன்றாகத் தெரிந்திருக்கும். ஒரு உதாரணம் சொல்ல வேண்டுமென்றால், தஞ்சை மவட்டத்திலேயே ஒரு கிராமத்திலே பல பேர்கள் அரசுக்குச் சொந்தமான நிலங்களைப் பட்டா செய்து கொண்டார்கள். ஆனால், அரிசன மக்கள் பட்டா கேட்டபொழுது, அந்த அதிகாரி, மற்றவர்களுக்குப் பட்டா செய்து கொடுத்தாரே, அதே அதிகாரி, அரிசன மக்களுக்குப் பட்டா கேட்டபொழுது, நீர்பிடிப்பு என்று சொன்னார்கள். மற்றவர்களுக்குக் கொடுக்கும் போது, சுற்றியுள்ள இடங்களையெல்லாம் கொடுத்துவிட்டு, நடுவலே இருக்கிற நிலத்தை, தஞ்சை ஜில்லாவிலே இருக்கிற அரிசன மக்கள் கேட்ட பொழுது, அதே அதிகாரி, நீர்பிடிப்பு என்று சொன்னார்கள். ஆனால், சுற்றுப்புறத்திலே இருக்கிற இடங்களிலே நீர்ப்பிடிப்பு இல்லை, நடுவிலே மட்டும் நீர்ப்பிடிப்பு இருக்கிறது. இன்று வரையிலும் பட்டா கொடுக்கப்படவில்லை. ஓரத்தநாடு தாலுகாவிலே இந்த அவல நிலை இருக்கிறது. திருத்துறைப்பூண்டி தாலுகாவிலே இந்த அவல நிலை இருக்கிறது, சிதம்பரம் தாலுகாவிலே இந்த அவல நிலை இருக்கிறது. 25 வருஷங்களாகக் கேட்டும் இன்னமும் அதில் முடிவு ஏற்படவில்லை. ஆகவேதான் சொல்கிறேன், இங்கே உள்ள என்னுடைய திருத்தத்திலே அரசாங்கத்தை நான் கேட்டுக் கொள்வது, தாசில்தார் தரத்திற்குக் குறையாமல் இருக்க வேண்டுமென்பதற்குப் பதிலாக கோட்டாட்சித் தலைவர் தரத்திற்குக் குறையாமல் இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பலயிடங்களில் வீட்டு மனைகளுக்கு இடம் கொடுக்கிறோம். நான்கு அடி, ஐந்து அடி, மூன்று அடி என்று பள்ளம் இருப்பதைக் கொடுத்திருக்கிறோம். அவைகளிலே 6 மாதங்களிலே கட்ட வேண்டுமென்றால் நிச்சயமாக விவசாயத் தொழிலாளர்களாக இருந்தாலும் சரி, மழை மக்களாக இருந்தாலும் சரி, எந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் 6 மாதங்களுக்குள்ளே 3 அடி 4 அடி பள்ளம் உள்ள இடத்தில் கட்ட முடியாது. எனவே குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகள் என்று சட்டத்திலே இல்லாவிட்டாலும் உத்தரவாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குடியிருப்பு உள்ள இடத்தை மேல் குடியிருப்பு, கீழ்க் குடியிருப்பு என்று எடுத்துக் கொள்வதைவிட, குடியிருக்கும் இடம் என்று எடுத்துக்கொண்டு, அவர்கள் சுற்றிலும் வளர்த்த மரங்களை, அவர்கள் உண்டாக்கிய சொத்துக்களை அவர்களுக்கே கொடுக்க வேண்டுமென்று கேட்டு, இந்தச் சந்தர்ப்பம் அளித்தமைக்கு நன்றி தெரிவித்து என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கின்ற குடியிருப்புச் சட்டங்கள் திருத்தச் சட்ட முன்வடிவை ஆதரித்து என்னுடைய ஒருசில வார்த்தைகளை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்ளலாம் என்று கருதுகிறேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் பினாமி என்ற அடிப்படையில் கொண்டு வந்துள்ள இந்தச் சட்டம் பினாமி என்பது நிருபிக்கப்பட்டால் பட்டாவை ரத்து செய்துவிடுவோம் என்று எச்சரித்திருக்கிறார்கள். நான் அமைச்சரிடம் தெரிவித்துக் கொள்கிறேன், இந்தச் சட்டத்திற்கு மேலும் ஒரு திருத்தம் கொடுக்க வேண்டுமென்று விரும்பினால். தீவிரமான இலட்சியங்களைக் கிராமப்புற மக்களுக்காக உருவாக்கிக் குடியிருப்பு மனைகளை ஏற்படுத்த வேண்டுமென்று விரும்பி இந்தத் திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கின்ற மாண்புமிகு அமைச்சரவர்கள், ஏழை வர்க்கத்திடம் ஏமாற்றி பினாமி என்ற பெயரில் ஜமீன் அடக்கு முறைகளை வைத்து நிலங்களை அபகரித்துள்ள பட்டாவை ரத்து செய்வதோடு பினாமி என்ற பெயரில் அதிக இடங்களைக் கைப்பற்றியிருப்பவர்களுக்குச் சிறைத் தண்டனை கிடைக்கும் அளவிற்கு இந்தச் சட்டத்தை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மக்களுக்குப் பயன்படும் திட்டங்களைத் தீவிர நடவடிக்கை என்ற பெயரால் அரசு எடுக்கும்பொழுது அதற்கு உறுதுணையாக அரசு இயந்திரங்கள் செயல்படும்பொழுது மக்களையும், சர்க்காரில் பணியாற்றுகிறவர்களையும் ஏமாற்றக் கூடிய அளவிற்கு ஏற்றம் பெற்றவர்கள் கிராமப்புறங்களில் உள்ள ஏழை எளிய மக்கள் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சரவர்களும் அறிவார்கள். தஞ்சை மாவட்டமானாலும், திருச்சி மாவட்டமானாலும், இராமநாதபுரம் மாவட்டமானாலும் அல்லது கோவை மாவட்டமானாலும் இப்படி ஏழை மக்களுக்காக ஒதுக்கப்பட்ட பட்டாக்கள் பல பெயர்களில் பினாமியாக இருப்பது அமைச்சருக்குத் தெரிந்து தான் இந்தத் திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

நான் அமைச்சரவர்களுக்குத் தெரிவிப்பதெல்லாம், இந்தத் திருத்தச் சட்டத்தோடு, பட்டா பாஸ் புத்தகம் என்ற அமைப்பை நீங்கள் உருவாக்கியிருக்கின்றீர்கள். அந்த பட்டா

பாஸ் புத்தகங்களை வழங்கும்போது, ஏழை எளிய மக்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கும்பொழுது பட்டா பாஸ் புத்தகங்களையும் வழங்கும் நிலையை உருவாகக வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நிலச் சீர்திருத்தத்தின் அடிப்படையில் உச்சவரம்புச் சட்டத்தால் மிச்சப்பட்ட நிலங்களை ஏழை மக்களுக்குப் பிரித்துக் கொடுக்கும்பொழுது பட்டா பாஸ் புத்தகம் வழங்கும் சூழ்நிலைகளை உருவாக்கி எவ்வளவு வெற்றியை எதிர்பார்க்க முடியுமோ அந்த வெற்றியைக்கூட, நிலங்கள் இல்லாத வீட்டுமனைப் பட்டா இல்லாதவர்களுக்கு நிலக் குடியிருப்பு நிலைகளை உருவாக்கும் தருவாயில் அரசு பட்டா பாஸ் புத்தகம் வழங்கும் சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வட்ட ஆட்சியாளர்கள் அந்தஸ்துக்கு உள்ளவர்கள் இந்தப் பட்டாக்களைப் பறிமுதல் செய்யும் சூழ்நிலையில் குடியிருப்புத் திருத்தச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டும். வட்டாட்சியாளர்கள் அந்தஸ்திற்கு இருப்பது பாராட்டிற்குரியது மாண்புமிகு பெரியவர் அவர்கள் ஆர்.டி.ஓ. அந்தஸ்திற்கு இதை உயர்த்த வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். வட்டாட்சியாளர் அந்தஸ்தில் இருந்தால்தான் ஏழை எளிய மக்கள் வட்டாட்சியாளரை எளிதாகப் பார்க்க முடியும். பினாமியால் தங்கள் பட்டா பாதிக்கப்பட்டிருக்கிறது என்ற உணர்வு ஏற்பட்டால் வட்டாட்சியாளரிடம் எடுத்துச் சொல்வதற்கு ஏதுவாக இருக்கும்.

பினாமி என்ற பெயரால் ஏழை மக்களின் இல்லங்களை அல்லது ஒப்படைக்கப்பட்ட வீட்டுமனைகளை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பவர்கள், அதிலே கட்டிடங்களைக் கட்டியிருந்தாலும் அரசு பறிமுதல் செய்வது என்பதை மனப்பூர்வமாக விரும்பி வரவேற்பதோடு, பெரிய அளவிற்குத் திட்டமிட்டு பினாமி என்ற பெயரால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற இப்படிப்பட்ட திட்டமிட்ட பினாமி முறையை ஒழிக்கும் சூழ்நிலையை உருவாக்கி, அப்படிப்பட்டவர்களுக்குச் சிறைத் தண்டனை அளிக்கும் வகையில் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1.10)

திரு.என்.பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, தமிழ்நாடு குடியிருப்புச் சட்டம் மேலும் திருத்துவது சம்பந்தமாக இந்த சட்ட முன்வடிவில், குடியிருப்புதாரர்கள் 10 ஆண்டுகளுக்கு அவர்கள் வாங்கிய நிலத்தை விற்கக் கூடாது என்று இங்கே திருத்தம் வருகின்றது. அதை 5 ஆண்டுகளாக மாற்றவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். காரணம் அவர்கள் அந்த நிலம் பெற்றிருக்கக் கூடியவர்கள்

எந்தவிதமான வசதியும் இல்லாத சாதாரண ஏழைகள், குறிப்பாக தாழ்த்தப்பட்ட ஆதிதிராவிட மக்கள் வீட்டுமனைப்பட்டா வாங்கி குடியிருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பல ஆண்டுகாலமாக இந்த மனைகளை வாங்கி வீடுகளைக் கட்ட முடியாத சூழ்நிலையில் வெறும் குடிசைகளைப் போட்டு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

ஆகவே அவர்கள் குடிசைகளிலே வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கு பட்டா கொடுத்த உடனே அவர்களுக்கு உரிய கடனைக் கொடுத்து வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கான ஏற்பாட்டை அரசு செய்துவிட்டால் இந்தமாதிரியான நிலை வராது. அதோடு ஏதோ சந்தர்ப்பத்தில் அவர்கள் வெளி ஊரிலே வாழலாம் என்று அவர்கள் கிராமத்திலே வாழ இயலாத சூழ்நிலை ஏற்பட்டு, விற்றுவிட்டு போகும் நிலை ஏற்படலாம். அப்படி ஏற்படக்கூடியவர்களுக்கு அந்த மாதிரி விற்றுவிட்டிருக்கலாம் என்ற காரணத்தில் அவர்கள் உரிமையை முழுவதும் ரத்து செய்யக் கூடாது. அதற்குப் பதிலாக அவர்களுக்கு சிறு தொகையை அபராதமாக விதித்து அவர்களுக்கு மீண்டும் கொடுப்பதற்கு அரசு உரிய நடவடிக்கையை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு இந்த நிலத்தை விற்கும் அளவுக்கு அந்த நிலைமைக்கு அவர்கள் ஏன் வருகிறார்கள் என்பதை அரசு கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பினாமி பினாமி என்று சொல்லி இருக்கிறார்கள். என்ன பினாமி இதிலே இருக்கின்றது. ஆயிரக்கணக்கான ஏக்கர்களை பினாமி என்ற பெயரால் இன்றைக்கு வைத்திருக்கின்ற, மோசடி செய்யக்கூடிய பேர்கள் உலவிக் கொண்டிருக்கின்ற நேரத்தில், இந்த 3 சென்ட், 4 சென்ட் நிலத்தை என்ன செய்யப்போகிறார்கள். ஏன் ஏமாற்றப் போகிறார்கள். இந்த நாட்டிலே பெரிய கோடீசுவரர்கள் எல்லாம் இப்படிப்பட்ட பினாமி நிலங்களை வைத்திருக்கும் போது, இவர்கள் செய்வதை பினாமியாகக் கருதாமல், இவர்களுக்கும் சில பிரச்சினைகள் இருக்கலாம், அதனாலே செய்யலாம் அதை பெரிய தவறாகக் கருதாமல் எடுத்துக் கொள்ளவேண்டும் என்றுக் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், பட்டாக்கள் கொடுக்கும்போது 3 சென்ட் 4 சென்ட் என்று கொடுக்கிறார்கள். அது போதுமானதாக இல்லை சில இடங்களில் 2 சென்டுகள் கூட கொடுக்கிறார்கள். அதை வைத்து அவர்கள் வங்கியிலேயும் கடன் வாங்கி வீடு கட்டும் சூழ்நிலை முடியாமல் இருக்கின்றது. எனவே குறைந்த பட்சம் 10 சென்ட்டாவது அவர்களுக்குப் பட்டா கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் அவர்களுக்குப் போதுமானதாக இருக்கும். அவர்கள் குழந்தை குட்டிகளை வைத்துக் கொண்டு குடிசைகள் போட்டு வாழ்வதற்கு ஏதுவாக இருக்கும். பட்டா கொடுக்கும் நிலையை 10 சென்ட் என்று நிர்ணயிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்குப் பெரும்பாலும் புறம்போக்கு நிலங்களிலேதான் பட்டா கொடுக்கிறார்கள். தனியார் நிலங்களை ஆக்கிரமித்து கொடுக்கும் பட்டாக்கள் அவ்வளவு அதிகமாக இல்லை என்று தெரிகிறது. இந்தப் புறம்போக்கில் கிராமப் பஞ்சாயத்துகளிலே இருக்கக் கூடிய புறம்போக்கு நிலங்களை கொடுக்கிறார்கள், நகரப் பஞ்சாயத்துகளிலே இருக்கக்கூடிய புறம்போக்கு நிலங்களைக் கொடுக்க முடியாத சூழ்நிலையில் இருக்கின்றது. பேரூராட்சியிலே உள்ள புறம்போக்கு நிலங்களிலே நூற்றுக்கணக்கான குடும்பங்கள் குடிசைகளைப் போட்டுக் கொண்டு இருக்கிறார்கள். பல ஆண்டுகளாக இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் பட்டா வாங்கமுடியாத நிலை இருக்கின்றது. காரணம் மேஜர் பஞ்சாயத்திலே இருக்கின்ற நிலங்களைக் கொடுப்பதற்கு அதிகாரம் இல்லை என்று தாசில்தார் சொல்லுகிறார். நகரப் பஞ்சாயத்திலே இருக்கக்கூடிய ஏனழைகளுக்கு உடனடியாக பட்டா கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல கோவில் மடங்களுக்குச் சொந்தமான நிலங்களை எல்லாம் எடுத்து, குடியிருக்கக் கூடிய இடத்தைப் பட்டா போட்டுக் கொடுக்க வேண்டும். இதிலே சிரமங்கள் இருந்தாலும், சட்டக் குறைபாடுகள் இருந்தாலும் அதைப் போக்குவதற்கு அமைச்சர் ஆணை பிறப்பிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல ஊரை ஒட்டி இருக்கின்ற நஞ்சை நிலத்தை எடுக்கக்கூடாது என்று சட்டம் இருக்கிறது. புஞ்சையைத்தான் கொடுக்கவேண்டும் என்று சட்டம் இருக்கிறது. புஞ்சை இல்லாத ஊர்கள் பல இருக்கின்றன. ஆகவே அது நஞ்சையாக இருந்தாலும் பரவாயில்லை' பொதுமக்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு ஊரை ஒட்டிய நஞ்சை நிலமாக இருந்தாலும் அதை எடுத்துக் கொடுப்பதிலே தவறு இல்லை என்று நான் கூறிக்கொண்டு, முடித்துக்கொள்கிறேன்,

திரு. பி. எம். தங்கவேல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு குடியிருப்புச் சட்டத்திற்கு மேலும் சில திருத்தங்களைக் கொண்டு வந்திருப்பதைப் பற்றி நான் சார்ந்திருக்கும் காங்கிரஸ் கட்சியின் சார்பாக சில வார்த்தைகள்ளக் கூறலாம் என்று நினைக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல், பினாமி நிலம், பினாமி நிலம் என்ற வார்த்தைகள்தான அதிகமாக அடிபடுகிறதே ஒழிய, பினாமியை எப்படிக் கண்டுபிடிப்பது, பினாமி நிலம் என்று எப்படி நிரூபிப்பது என்பதற்கான முகாந்திரம் எதுவும் இந்தச் சட்டத்திலே இல்லை.

மேலும், இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு வட்டாட்சித் தலைவருக்கு அதிகாரம், கொடுக்கப்பட்டிருக்கிறது. அவரை மக்கள் சுலபமாக அணுகி, சட்டத்தை நிறைவேற்றிக் கொள்ளலாம், அதற்கான சந்தர்ப்பம் இருக்கிறது என்று திரு. கோவைத்தம்பி அவர்கள் கூறினார்கள். ஆனால்,

கொடுக்கப்பட்டுள்ள திருத்தத்திலே வட்ட ஆட்சித் தலைவர் என்பதை மாற்றி, கோட்டாட்சித் தலைவர் என்று திருத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதைக் கவனிக்கவில்லை என்று கருதுகிறேன். எனவே, உறுப்பினர் கோவைத்தம்பி அவர்கள் குறிப்பிட்டதைப்போல் இந்த அதிகாரத்தை வட்ட ஆட்சித் தலைவருக்குக் கொடுக்கலாம் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும், இப்போது 'டிரான்ஸாக்ஷன் அண்ட் ஏலியனேஷன் பற்றி நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். கோட்டாட்சித் தலைவருக்கு இதிலே அப்பலெட் ஜூரிஸ்டிக்ஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு ஒரு டிரிபியூனல் மாதிரி ஏற்படுத்தி, அவருக்கான அப்பலெட் ஜூரிஸ்டிக்ஷனைக் கொடுக்கவேண்டும். அப்போதுதான் சிவில் கோர்டுக்குப் போனால், அந்த ஏலியனேஷன் உண்மையா அல்லது கற்பனையா, அல்லது உண்மையல்லாததா என்றெல்லாம் கண்டுபிடிக்க முடியும். ஆகவே, அந்த அப்பலெட் ஜூரிஸ்டிக்ஷனை சப் கோர்டுக்கு கொடுக்கும்படியாக கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், உண்ண உணவும், இருக்க இடமும், உடுக்க உடையும் வேண்டுமென்று பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் போராடி, அதற்கு வேண்டிய காரியங்கள் எல்லாம் காங்கிரஸ்ஆட்சி காலத்திலே, செய்யப்பட்டுஏழை எளிய மக்களுக்கு வீட்டு மனைகள் கொடுக்கப்பட்டன. இந்தச் சட்டத்தின்கீழ் ஏழை எளிய மக்கள் என்றால், தாழ்த்தப்பட்ட அல்லது மேலும் ஆதிதிராவிட மக்களுக்குத்தான் நிலத்தை ஆர்ஜிதப்படுத்திக் கொடுப்பதற்கான வழிவகை இருக்கிறது. ஆனால், இந்தச் சலுகை பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இல்லை. பிற்படுத்தப்பட்ட மக்கள் பல இடங்களிலே வீட்டு மனைகள் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள் ஆகவே, அப்படிப்பட்ட பிற்பட்ட மக்களுக்கு வீட்டு மனை கொடுப்பதற்கு கோவில் நிலங்களையும் ஆங்காங்கே உள்ள பெரிய மிராசுதாரர்களின் நிலங்களையும் அவர்களுக்குக் கொடுக்கலாம். அந்த நிலங்களிலே அவர்கள் ஆக்கிரமிப்பு செய்திருந்தால், அதை அத்தகைய ஏழை எளிய மக்களுக்கே, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கே கொடுக்கவேண்டும; சலுகை செய்யவேண்டும்.

மேலும், மாண்புமிகு உறுப்பினர் பழனிவேல் அவர்கள் குறிப்பிட்டதைப்போல், கஷ்டத்திற்காக அல்லது வேறு வழியில்லாமல் அவர்கள் நிலங்களை விட்டுச் சென்று விட்டால்; அவர்களுக்கும் காம்பன்சேஷன் கொடுக்கவேண்டும். அதேபோல், ஈடு, போக்கியம் வைத்தால், சட்டப்படி செல்லாது என்று சொல்லி, அதை சர்க்கார் எடுத்துக் கொள்ளக்கூடாது. ஏழைஎளிய மக்கள் தங்கள் கஷ்டத்திற்காக நிலங்களை ஈடு, போக்கியம் வைத்திருந்தால், அது உண்மையிலேயே கஷ்டப்படுபவர்களுடைய நிலமாக இருந்தால், அவர்களுக்கு நஷ்டஈடு கொடுக்க வேண்டும் என்று இந்தச் சமயத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், என்னுடைய தொகுதியில் 1977லே குடகனாறு உடைந்து பல ஊர்கள், பல கிராமங்கள் பாதிக்கப்பட்டன. அவர்கள் தங்கள் நிலங்களையெல்லாம் விட்டுவிட்டு, ரோடிலே குடியிருக்கிறார்கள். அத்தகைய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக, லாலாபேட்டை, பிள்ளைபாளையம் பேரன்ற இடங்களில் அவர்கள் ரோடிலே வாழ்ந்து வருகிறார்கள். அதிலே பிற்படுத்தப்பட்ட மக்கள் இருக்கிறார்கள். அவகளுக்கு நில ஆர்ஜிதம் செய்து கொடுக்க முடியாது என்று இந்தச் சட்டத்திலே இருக்கிறது. அப்பேர்ப்பட்டவர்களுக்கு கோயில் நிலங்கள் நிறைய இருக்கின்றன; அதேபோல் டிரஸ்டு நிலங்கள் நிறைய இருக்கின்றன. அதைக் கொடுப்பதற்கு பழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டு, அதற்கான சட்டத் திருத்தம் கொண்டு வரவேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

(பிற்பகல் 1.20)

திரு, எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு துணைத் தலைவர வர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு குடியிருப்புச் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித் தமைக்காக முதலில் நன்றித் தெரிவித்துக்கொள்கிறேன்.

1971 ஆம் ஆண்டிலே ஜூன் 19-ந்தேதி எந்த மனையில் குடியிருப்புதாரர் இருந்தாரோ அதே மனை அவருக்கு தஞ்சை மாவட்டத்தில் சொந்தமாக்கப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. இராசமாணிக்கம் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படி அவர்கள் கொண்டுவந்த அந்தச் சட்டத்தை தமிழ்நாடு பூராவும் விரிவு படுத்தினாலும் அந்தச் சட்டத்தினால் பலன் அதிகமாக சிடைக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

அந்தச் சட்டத்திலே ஒருவருக்கு எத்தனை சென்ட் நிலம் ஒதுக்கவேண்டுமென்று விதிமுறைகள் இல்லாத காரணத்தால் $1\frac{1}{2}$ செனட், 2 சென்ட் என்று நிலத்தை வழங்கினார்கள்; பெரும் நிலச் சொந்தக்காரர்கள் விரும்பினால் ஏழை குடியிருப்பு தாரர்களுக்குப் பயன்படாத முறையில் $1\frac{1}{2}$ சென்ட், 2 சென்ட் என்றுதான் நிலம் ஒதுக்கப்பட்டது. அதனால் அங்கே குடியிருக் கிறவர்களுக்கு எந்தவிதமான பலனும் இல்லாமல் வெளியேறக் கூடிய நிலைமை கூட ஏற்பட்டது. அப்படிப்பட்ட நிலை இல்லாமல், பட்டணத்தில் சொல்வதைப்போல அரை கிரவுண்ட்டு குறைந்தது 3 சென்ட் - நிலமாவது வழங்க வேண்டும். அப்படி இருந்தால் தான் அந்த இடத்திலே அவர்கள் வசதியாக வீடு கட்டிக்கொண்டு, பக்கத்தில் இருக்கிற நில்த்தில் அவர் களுடைய ஆடுமாடுகளை வைத்துக்கொள்ள வழி வகை ஏற்படும். அந்த நிலையை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்தில் தென்னை மரங்கள், மற்றுள்ள மரங்கள் இருந்தால் அந்த மரங்களை எல்லாம் அனுபவிக்க முடியாமல் தடுக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். இந்தச் சட்டத்தில், குடியிருப்புதாரர்களுக்குத்தான் அதன் பலன் கிடைக்கும்படி விட்டிருக்கிறார்கள். அதற்கு அரசாங்கம் நஷ்டயீடாக வழங்கும் போது அந்த விவசாயிகளிடம் அல்லது குடியிருப்புதாரரிடம் இருந்து பணம் வசூல் செய்யாமல் அவர்களுக்கு பட்டா செய்து கொடுக்கிறது என்று கூற விரும்புகிறேன். நிலச்சொந்தக் காரர்கள் குடியிருப்புதாரர்கள் பலன் பெறுவதை தடுத்து நிறுத்தக்கூடிய நிலைமை இல்லை. அந்த மரங்களை குடியிருப்பு தாரர்களுக்கே உரிமையாக்குவதன் மூலம் அவர்களே பலன் பெற முடியும். ஏனென்றால் அவர்கள்தான் அந்த மரங்களை உருவாக்கி வளர்த்தவர்கள். ஆகவே, அந்த மரங்கள் அவர்களுக்குத்தான் சொந்தமாக இருக்க வேண்டும்; அவர்களுக்கு உரிமையாக்குவது தான் நியாயம். மேலும் அப்படிப்பட்ட இடங்களிலே அவர்கள் வீடு கட்டிக்கொள்வதற்கு இங்கே கடன் வழங்கு கின்ற நிலைமை இருப்பதைப்போல அவர்களுக்கும் அதை விரிவு படுத்தி, வீட்டுவசதியை அதிகமாக ஏற்படுத்தித்தர வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெரிய நிலச்சுவாந்தார்கள் குடியிருப்பு உரிமை பெற்றவர் களை வெளியேற்றி, அந்த நிலங்களை தங்களுக்குச் சொந்த மாக்கி, அந்த வீடுகளைப் பிரித்துப்போட்டுவிட்டு, தங்களுக்கு உரிமையாகிக் கொள்கிற நிலைமை இல்லாமல், மீண்டும் அநத நிலம் நிலச் சொந்தக்காரர்களுக்கு போகாமல் பார்த்துக் கொண்டால், அந்த மனைகளை மனை கேட்டு விண்ணப்பிக் கின்ற வேறு நபர்களுக்கு, ஏழை எளிய மக்களுக்கு ஒதுக்க முடியும் என்பதால், அந்தவகையிலே இந்தத் திருத்தச் சட்டம் வந்திருக்கிறது. ஆகவே, அந்த நிலச்சொந்தக்காரர்கள் அந்த விவசாயிகளை, குடியிருப்புதாரர்களை தொல்லைப்படுத்தி, திரும்ப எடுத்துக்கொள்கிற நிலைமைகளை மாற்றுவதற்காக கொண்டு வந்திருக்கிற இந்தச் சட்டத்தை நான் வரவேற்கிறேன்.

அதைப்போல இப்படிப்பட்ட சட்டத்தைக் கடந்த காலத்தில் கொண்டுவந்தபோது பாதை வசதி இல்லாமல், போக்குவரத்து வசதி இல்லாமல் தடுத்திருக்கிறார்கள். அதைக் கருத்தில் கொண்டு இப்படிப்பட்ட குடியிருப்புதாரர் களுக்கு போக்குவரத்திற்கு நல்ல முறையிலே பாதை வசதி ஏற்படுத்தித் தரவேண்டும்.

கடந்த காலத்திலே திருத்துறைப்பூண்டி, பட்டுக்கோட்டை போன்ற பகுதிகளில் தென்னந்தோப்புகளில் குடியிருக்கிறவர் களுக்குப்பாதை வசதி இல்லாமல் செய்த காரணத்தால் அவர் கள் தென்னைமரங்களில் திருடுகிறார்கள் என்று சொல்லி, அவர்கள் மீது திருட்டு வழக்குப் போடுகின்ற நிலைமை எல்லாம்

இருக்கிறது. அவர்களுக்குப்பாதை வசதி செய்துதர வேண்டும். இல்லை என்றால் அந்தக்குடியிருப்புதாரர்கள் விரும்பினால், நிலச் சொந்தக்காரர் அவர்களுக்கு வேறு இடத்தில் மனை கொடுத்து, வீடு கட்டிக்கொடுப்பதாக இருந்தால், அந்த இடத்தைக் குடியிருப்புதாரர்களுக்கு பட்டா கொடுப்பதாக முடிவு செய்வதாக இருந்தால் அங்கே அவர்களுக்குச் சற்று அதிகமான இடம் ஒதுக்கிக்கொடுத்து, அவர்கள் அந்த இடத்திற்கு மாறிச் செல்ல வசதி செய்து தரவேண்டும். அதன்மூலம் குடியிருப்பு தாரர்களுக்கு நல்ல நிலையை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சில இடங்களில் அரசினால் வீட்டுமனை கொடுக்கப்பட்ட இடங்கள் நஞ்சை நிலமாக இருக்கின்ற காரணத்தால், அந்த இடம் மிகவும பள்ளமாக இருப்பதால் அங்கே ஏழை விவசாயி களால் வீடு கட்டிக்கொள்ள முடியவில்லை. அந்த இடங்களை மேம்பாடு செய்துகொள்ள வசதி இல்லாமல் இருக்கிற காரணத் தால் அரசாங்கமே தேசிய கிராமப்புறத் திட்டத்தின்கீழ் அந்த இடங்களை எல்லாம் தூர்த்து, மேம்பாடு செய்துகொடுக்க அரசு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உத்தரவிட வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். இப்படிப்பட்ட நிலைமைகளை உருவாக்கித் தருகிற அதேநேரத்தில் 10 ஆண்டுகளாக ஒருவர் ஒரு இடத்தில் இருந்தால் அந்த இடத்தைவிட்டு மாற்றாமல், அந்த விவசாயிகளிடம் அல்லது குடியிருப்புதாரர்களிடம் இருந்து நிலத்தை நிலச் சொந்தக்காரர்கள் திரும்பப் பெற்றுக்கொள்ள முடியாமல் இருக்கின்ற வகையிலே கொண்டுவந்திருக்கிற இந்தச் சட்டத்தை வரவேற்று அமர்கிறேன். வணக்கம்.

திரு பொ. உத்திராபதி. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே நமது வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள திருத்தச் சட்டத்தைப் பொது வாக வரவேற்று ஒரு சில கருத்துக்களைச் சொல்லவிரும்புகிறேன். வீட்டு மனைகள் கொடுப்பதைப் பற்றி ஒவ்வொரு கட்சியிலும் பேசிக்கொண்டு இருக்கிறோம். காங்கிரஸ் ஆட்சி நடைபெற்ற காலத்திலும் சரி, அடுத்து திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த காலத்திலும் சரி இது பேசப்பட்டு வருகிறது. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்த காலத்தில் ஒரே நாளில் லட்சம் பட்டாக்கள் தஞ்சை மாவட்டத்தில் வழங்கினார்கள். பட்டா வழங்கப்பட்டதே தவிர இன்னும் உரிய நிலம் தெரிந்தபாடில்லை. பல பேருக்கு 1 சென்ட், 2 சென்ட் கிடைத்தது. சில பேருக்கு 5 சென்ட், 10 சென்ட் கிடைத்தது. அதைப்போலவே வீடு ஒரு பக்கம், பட்டா ஒரு பக்கம், என்று கொடுத்து, சர்வே, நெம்பர் எங்கே என்று கூட கண்டுபிடிக்க முடியாத நிலை இருக்கிறது. இப்படி பல்வேறு குறைபாடுகள் பட்டா கொடுக்கும் நிலையில் இருந்து வருகிறது.

இந்த ஆட்சி வந்து 4 வருஷம் ஆகிறது. இந்த 4 வருஷமாக அமைச்சர் அவர்களும் சொல்கிறார்கள். நாங்கள் எல்லோருக்கும் பட்டா போட்டு கொடுத்துவிட்டோம் என்று சொல்கிறார்கள். குறிப்பாக நான் ஒன்றைச்சொல்கிறேன். என்னுடைய திருத்துறைப்பூண்டி தொகுதியில், குளத்தங்கரை என்ற பகுதியில் 75 பேருக்குப்பட்டா கொடுக்கவேண்டும் என்று சிபார்சு செய்யப்பட்டு, ஒரு ஆண்டு ஆகிவிட்டது, இன்னும் கொடுக்கப்படவில்லை. முத்துப்பேட்டை பகுதியில் பட்டா கேட்டு ஆயிரக் கணக்கான மனுக்கள் தேங்கிக் கிடக்கின்றன. இந்த மாதிரி தமிழ்நாடு முழுவதிலிருந்தும் பட்டா கேட்டு மனு வந்து கொண்டு இருக்கிறது. இன்னும் அனைத்து பேருக்கும் பட்டா வழங்க முடியவில்லை. அதேபோல, கோவில்கள், அறக் கட்டளைகள், தர்மஸ்தாபனங்கள் இப்படிப்பட்ட இடங்களில், குடியிருப்பவர்களுக்கும் இன்னும் பட்டா கொடுக்கப் படவில்லை. தனியார் நிலத்தில் குடியிருக்கப் பட்டா கொடுக்கப் பட்டாலும், அவர்கள் ஹைக்கோர்ட்டில் ஸ்டே வாங்கிவிடுகிறார்கள். இப்படிச்சட்டத்தில் இருக்கும் ஓட்டைகளை அடைத்து, சகலபேருக்கும் மனைப்பட்டா கொடுக்கவேண்டும்.

1975 ஆம் ஆண்டிலேயே தஞ்சை மாவட்டத்தில் 50-60 வீட்டு மனைப் பட்டா ஒதுக்க சர்வே செய்தார்கள். ரோடு அமைத்தார்கள். கல்லெல்லாம் போட்டார்கள். ஆனால் இன்னும் அந்த இடங்களில் மனைப் பட்டா வழங்கவில்லை. பல இடங்களில் இந்த நிலை இருக்கிறது. அந்த இடங்களில் எல்லாம் உடனடியாக மனை இல்லாதவர்களுக்கு, மனை வழங்குவதற்கு அரசாங்கம் துரிதமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோல், பட்டுக்கோட்டை தொகுதியில் நேரடியாக அமைச்சர் அவர்கள்கூடச் சென்று பார்த்து இருக்கிறார்கள். பட்டுக்கோட்டையில், துவரங்குறிச்சி பஞ்சாயத்திலும், கன்னிகாடு, என்ற இடத்திலும் உள்ள மக்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலும் மனு கொடுத்து இருக்கிறார்கள். தாசில்தாரிடத்திலும் மனு கொடுத்திருக்கிறார்கள். இன்னும் அவர்களுக்கு மனை வழங்குவதற்கு யாதொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. நான் கேட்டுக் கொள்வது எல்லாம், மனை வழங்கப்படுமானால், 10 ஆண்டுகாலத்திற்கு இடையிலே அவர்கள் அடமானம் வைத்தாலும், அல்லது விற்றாலும் அந்த இடத்தை மீண்டும் அரசாங்கமே எடுத்துக்கொள்வது என்று திருத்தம் கொண்டு வந்து இருக்கிறார்கள்— அந்தத் திருத்தத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் அதே நேரத்திலே இந்த மனை பெற்றவர்கள் சாதாரண ஏழை எளிய மக்கள், அவர்கள் பையனுக்குத் திருமணமோ அல்லது பெண்ணுக்கு ஒரு சடங்கோ செய்யவேண்டும் என்று சொன்னால், அந்த நிலத்தை அடமானம் வைப்பதைத் தவிர வேறு வழியில்லை. ஆகவே, இந்த 10 ஆண்டுகாலம் என்பதை 5 ஆண்டு காலம் என்று ஆக்க வேண்டும். அப்படிக் குறைத்தால்தான், அவர்கள் இந்த நிலைமைக்கு ஆளாகாமல் தப்பித்துக்கொள்ள முடியும் என்று சொல்கிறேன்.

நான் இறுதியாகச் சொல்லவிரும்புவது. நீங்கள் ஆட்சிக்கு வந்து 4 ஆண்டுகள் ஆகின்றன. உங்களுடைய ஆட்சிக் காலம் 1985–யோடு முடிவடைகிறது. அதற்குள் பட்டா கேட்டுள்ள அனைவருக்கும் பட்டா கொடுக்கவேண்டும். மனை இல்லாமல் வாழும் அனைத்துப் பேர்களுக்கும் மனைப்பட்டா கொடுக்க வேண்டும். இப்படி கொடுக்கவேண்டும் என்று சொன்னால், தாசில்தாரை நம்பி மட்டும் நாம் மனைப்பட்டா அனைத்து பேருக்கும் கொடுத்துவிட முடியாது.

ஒவ்வொரு தாலுக்கா மட்டத்திலும். சர்வ கட்சிக்குழு அமைக்கவேண்டும். அதிலே தாசில்தாரையும் அங்கம் வகிக்கச் செய்யவேண்டும். அந்த சர்வ கட்சிக் குழு எந்தெந்த தாலுக்காக்களில் ஏழை விவசாயிகள், தொழிலாளர்கள் மனைப் பட்டா இல்லாமல் இருக்கிறார்கள் என்கிற கணக்கை எடுத்து, அந்த மாதிரியான ஒரு சர்வே செய்து, அந்த சர்வேயை 6 மாத காலத்திற்குள் முடித்து, அவர்களுக்கு எல்லாம் மனைப் பட்டா வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.)

(பிற்பகல் 1.30)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவையின் முன் அனுமதியுடன் பேரவையின் நேரம் நீட்டிக்கப்பெறுகின்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவின் மீது பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் பொதுவாக வரவேற்றிருக்கிறார்கள். ஒன்றிரண்டு திருத்தங்களையும் தந்திருக்கிறார்கள். கடைசியாகப் பேசிய நம்முடைய உறுப்பினர் திரு. உத்திராபதி அவர்கள் குடியிருப்பவர்களுக்கு வீடு கொடுப்பதற்கு முயற்சி செய்து அங்கே ரோடு மற்றவைகளை எல்லாம் ஆய்வு செய்துவிட்டதற்குப் பிறகு சில முடியாமல் இருக்கின்றன என்று சொன்னார்கள். அப்படி முடியாமல் இருந்தாலும் அவற்றை எல்லாம் அரசு கவனித்து விரைவிலே செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மற்றொரு வேண்டுகோளையும் கொடுத்தார்கள். எத்தனையோ லட்சக்கணக்கான விவசாயிகள் வீட்டுமனை இல்லாமல் ஒண்டிக் குடித்தனம் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அதைப்பற்றி கணக்கெடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். இந்த அரசைப் பொறுத்தவரையில் குடிமனை கூட இல்லாமல் இருப்பதை அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து திரு. எம்.எஸ். மாணிக்கம் ஒன்றைச் சொன்னார்கள். குடியிருக்கின்ற இடத்தைச் சுற்றி கொஞ்சமாவது நிலம் கொடுக்கவேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். இந்தச் சட்டமுன்வடிவிலேயும் சரி, பழைய சட்டத்திலேயும் சரி, யார் யார் எங்கே குடியிருக்கிறார்களோ, எவ்வளவு நிலத்திலே குடியிருக்கிறார்களோ அந்த நிலம் பூராவும் அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. அதுமட்டுமல்ல, அவர்கள் வாழ்வதற்கு ஏற்றவாறு குடியிருக்கின்ற வீட்டைச் சுற்றி இருக்கின்ற நிலத்தக் கூட ஆர்ஜிதம் செய்து கொடுக்க வேண்டும் என்று சொல்லி, கொடுத்திருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்கேயாவது சரியாக இல்லை என்றால் அவற்றைச் சரியாகச் செய்வதற்கு இந்த அரசு தயாராக இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தச் சட்டத்தைக் கொண்டுவருவதிலே சில சங்கடங்கள் இருக்கின்றன என்று சொன்னார்கள். திரு. இராசமாணிக்கம் அவர்கள் பேசுகின்றபோது யாராவது அவற்றை விற்றுவிட்டு வேறு எங்கேயாவது போகவேண்டும் என்றால் அதை அனுமதிக்க வேண்டும் என்று கேட்டார்கள். அப்படி விற்கக்கூடாது என்பதற்காகத்தான் இந்தச் சட்டமே கொண்டுவரப்பட்டது. இதிலே பினாமி வந்துவிடக் கூடாது, யாராவது நிலத்தை விற்று விட்டு இன்னொரு பெயருக்கு இருந்துகொண்டு இன்னொருவர் வாசம் செய்கின்ற நிலைமையைத் தடுக்கவேண்டும் என்பதற்காகத்தான் கொண்டுவரப்பட்டிருக்கின்றது.

இதுவரையிலும் தமிழகத்திலே 1971 ஆம் ஆண்டு குடியிருப்புச் சட்டத்தைப் பொறுத்தவரையிலே 1,78,822 பேருக்கு குடியிருப்பு உடமை உரிமையாக்கப்பட்டு இருக்கின்றது. 1976 ஆம் ஆண்டு கிராம கைவினைஞர்களுக்கு அந்த உரிமை வழங்கப்பட்டிருப்பதைப் பொறுத்தவரையிலே 274 தான். ஆனால் 1,78,822 என்றாலும், 274 என்றாலும் இது எல்லாம் மிகக் குறைந்த எண்ணிக்கைதான் என்று அரசு கருதுகின்றது. அப்படிக் குறைவு என்று அரசு கருதுவதன் காரணத்தால்தான் இந்த அவையின் மூலமாக இந்த நாட்டுக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். யார் யார் அதாவது கைவினைஞர்களாக இருப்பவர்களோ, விவசாய தொழிலாளர்களாக இருப்பவர்களோ அவர்கள் எல்லாம் அரசு நிலத்திலோ அல்லது வேறு நிலத்திலோ குடியிருந்தால் அப்படிக் குடியிருப்பவர்களுக்கு அந்த நிலம் ஒப்படைககச் செய்யாவிட்டால் நீங்கள் சாதாரண மனுக்களின் மூலமாக தகுதி உள்ள அதிகாரிகளிடத்திலே எழுதிக்கொடுத்து பெறவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதனை இந்தச் சட்டமுன்வடிவினைக் கொண்டுவருவதன் மூலமாக நாட்டில் இருக்கின்ற மக்களுக்கு அறிவிப்பு செய்து அதன்மூலம் அவர்கள் நன்மை அடையவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நம் இளையபெருமாள் அவர்கள் கூடச் சொன்னார்கள். ஒன்று ஆர்.டி.ஓ. இருக்க வேண்டும் அல்லது தாசில்தார் இருக்க வேண்டும் என்று. முன்னால் இருந்த சட்டத்தில் ஆர்.டி.ஓ, தாசில்தார் என்பதல்ல. முன்னால் இருந்த சட்டத்தில் ஆதரைஸ்ட் ஆபீஸர் என்றிருந்தது.

Authorised Offieor mean any Gazetted Officer authorised by the Government.

ஆதரைஸ்ட் ஆபீஸர் என்று வரும்போது ஆர்.டி.ஓ. தாசில்தார் இவர்கள் கஸெட்டட் ஆபீஸர்களாக இருந்தார்கள், இப்போது கஸெட்டெட் என்ற வார்த்தையே இல்லை,

Authorised Officer means any Revenue Officer not lower than the Tahsildar.

என்று இன்று போட்டிருக்கிறோமே தவிர வேறு ஒன்றுமில்லை. ஆதரைஸட் ஆபீஸர் என்று போட்டிருப்பது

Authorised Officer means any Revenue Officer not below the rank of a Tahsildar.

முதலில் any Gazetted Officer authorised by the Government. என்று போட்டிருந்தது. இப்போது ஒன்றும் புதிதாகக் கொண்டுவரவில்லை. அதில் தாசில்தார் இல்லை என்பதால் இதைக் கொண்டு வந்திருக்கிறோம்

இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையில் இது எல்லோரும் வரவேற்கக் கூடிய சட்டம் என்பதால் இதைப்பற்றி உறுப்பினர்களுக்கு விளக்கமாகச் சொல்லந் தேவையில்லை. இதைக் கொண்டு வந்ததன் ஒரேநோக்கமே, இந்தச் சட்டம் இல்லாவிட்டால் முதலில் யாராவது விற்றுவிட்டால் ரத்தாகிறது. ரத்தான பிறகு பினாமி இருக்கிறார்கள். பினாமியை ஒழிப்பதற்குத்தான் இந்தச் சட்டம். ரத்தாகிவிட்டால் அரசுக்கு இந்த நிலம் திருப்பிப் போய் விடுகிறது. உச்சவரம்புச் சட்டத்தின் மூலம் நிலம் கொடுக்கிறபோது அவர்களிடம் பணம் வாங்குகிறோம் தவணை முறையில். ஆனால் இதைக் கொடுக்கிறபோது அரசாங்கமே எல்லாப் பணத்தையும் கொடுக்கிறது. முதலில், ரத்தான பிறகு யாரிடம் போவது என்பதில்லை. அப்படியானால் அதில் சில சங்கடங்கள் ஏற்படுகின்றன. பினாமி நிலத்தை வைத்து இருப்பவர்களுக்கு ஊக்கம் கொடுக்காமல் இருக்க இது செய்யப்படுகிறது, இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்,

திரு கு. ப. பழனியப்பன்: ஒரு சிறிய விளக்கம் பெற விரும்புகிறேன். இந்த குடியிருப்புச் சட்டத்தில் ஒரு நடைமுறைச் சிக்கல் இருப்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? குடியிருக்கிற இடம், பயிரிடுகிற நிலம் இவற்றிற்கு எந்தவிதமான தஸ்தாவேஜும் பெறமுடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. இந்தச் சட்ட அடங்கலில் 6 (இ) ல்யார் பயிரிடுகிறார்கள், யார் குடியிருக்கிறார் என்பதை எழுதக் கூடாது என்று அரசு உத்தரவுஇருக்கிறது இதற்கு அரசு ரிக்கார்டு எதுவும் கிடைக்காது. அதரைஸ்டு ஆபிஸா நேரடியாக முடிவு செய்து ஸ்டே கொடுக்கமுடியாது. இது ரெவின்யூ பிரச்சனை. சிவில் கோர்ட்டுக்குப் போகலாம் என்றால் சிவில் கோர்ட்டுக்கு போக முடியாது என்று சட்டத்தில் இருக்கிறது. போலீஸுக்கு போகமுடியுமா என்றால், போலிஸ் ஸ்டேஷனுக்குச் சென்றால் இது சிவில் கேஸ் என்கிறார்கள். ஆகவே, எந்தவிதமான ஆதரவும் இல்லாத சூழ்நிலையில் ஏழை விவசாயிகள் பாதிக்கப்படக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே ஆரசு இதைக் கண்காணித்து விவசாயிகளுக்குப் பாதுகாப்பு தருகிற வகையில் ஆதரைஸ்டுஆபிஸர் சொல்கிறபோது நிலச்சுவாந்தார் தான் இல்லை என்பதை நிரூபிக்க வேணடும் என்ற வகையில் ஒரு சட்டம் கொண்டுவர முயற்சி செய்யப்படுமா அல்லது அதரைஸ்ட் ஆபிசர் ஸ்டே கொடுக்கலாம்என்றுஉத்தரவிடப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் குடியிருப்புச் சட்டம் என்றால் முதலில் குடியிருப்பார்கள். அங்கே யார் போய் பார்த்தாலும் குடியிருப்பார்கள். அதுவே குடியிருப்பதற்கு அத்தாட்சியாகும். வேறு அத்தாட்சி தேவை இல்லை,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் பேரவை முன்னுள்ள கேள்வி :

தமிழ்நாடு 1981—ஆம் ஆண்டு குடியிருப்புச் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண், 67/ 1981) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்,

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 8 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

Clause 1

MR. DEPUTY SPEAKER:- The question is, That Clause 1 do stand part of the Bill.

HON. THIRU. S. D. SOMASUNDARAM: Sir I move the following amendment :

"In Clause 1 in sub-clause (1) for the figures "1981", substitute the figures 1982."

The amendment was put and carried,

பிரிவு 1 திருத்தப் பெற்றபடி பேரவையின் முடிவுற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

Enacting formula.

MR. DEPUTY SPEAKER : The question is, That the Enacting formula do stand part of the Bill.

HON. THIRU.S. D. SOMASUNDARAM :- Sir I move the followning amendment:

"In the enacting formula, for the words "Thirty second year substitute the words Thirty-third year

The amendment was put and carried.

முகப்புரை திருத்தப்பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

நெடுந்தலைப்பு பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981—ஆம் ஆண்டு குடியிருப்புச் சட்டங்கள (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 67/ 1981' திருத்தப் பெற்றபடி நிறைவேற்றப் பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை மறுநாள் 5- 4- 1982 ஆம்தேதி திங்கட்கிழமை காலை 9.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1 .42 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் எதுவுமில்லை

தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை

திங்கட்கிழமை, 1982 ஏப்ரல் 5

பங்குனி 23, துன்மதி — திருவள்ளுவர் 2013

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''கதங்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி
அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து''

சினம் தோன்றாமல் காத்துக் கல்வி கற்று அடக்கமுடைய வனாக இருக்க வல்லவனுடைய செவ்வியை, அவனுடைய வழியில் சென்று அறம் பார்த்திருக்கும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

அரசு சார்பில் நடத்தப்பெறும் ஆகஸ்டு 15 சுதந்திர நாள் கொண்டாட்டம்

*வினா எண் 754.—திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழக அரசு நடத்தும் ஆகஸ்டு 15 சுதந்திரநாள் கொண்டாட்டத்தின் போது ஆங்காங்கே சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு அழைப்புகள் அனுப்பப்படுவது நிறுத்தப்பட்டு உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கு பென்ஷன் வழங்குவதற்கு 1944 ஆம் ஆண்டு வரை சுதந்திரப் போராட்டத்திலே ஈடுபட்டவர்களுக்கு பென்ஷன் என்று அரசாங்கம் அறிவித்திருக்கிறது. 1947 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் நாள் நாடு சுதந்திரம் பெறும்வரை பல்வேறு பகுதிகளிலும், சுதேச சமஸ்தானங்களிலும் சுதந்திரப் போராட்டத்திலே பலர் ஈடுபட்டார்கள். 1947 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் நாள் வரையில் நாட்டின் பல பகுதிகளிலும், சுதேச சமஸ்தானங்களிலும் சுதந்திரப் போராட்டத்திலே ஈடுபட்டவர்களுக்கு அரசு பென்ஷன் வழங்க முன்வருமா?

[1982 ஏப்ரல் 5

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுபற்றிய ஒரு செயற்குறிப்பு முதலமைச்சரின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. 1944 ஆம் ஆண்டுக்குப் பின்பும் 1947 ஆம் ஆண்டு வரையும் நாட்டுக்காக விடுதலைப் போராட்ட இயக்கங்களில் பங்குகொண்டு சிறைத்தண்டனை பெற்றவர்களுக்கும் ஒய்வூதியம் தரப்பட வேண்டுமென்று அவர்கள் கேட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சரின் ஒப்புதலுக்கு அது அனுப்பப்பட்டிருக்கிறது. விரைவிலே அதுபற்றி முடிவு எடுக்கப்படும்.

தியாகிகள் பென்ஷன் பெறுவதற்கான வருமான வரம்பை ரதது செய்யும் திட்டம்.

*வினா எண்—755. திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசிடமிருந்து தியாகிகள் பென்ஷன் பெறும் தியாகிகளின் வருமான வரம்பை ரத்து செய்யும் திட்டம் தமிழக அரசிடம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) மற்றும், (ஆ):—அரசியல் ஒய்வூதியம் வழங்குவதற்காக வகுக்கப்பட்டுள்ள வருமான உச்ச வரம்பை அரசு அண்மையில்தான் மேலும் தளர்த்தியுள்ளது. இப்பொழுது ஆண்டு வருமானம் ரூ. 5,000 என்று உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதனை அறவே ரத்து செய்யும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, சுதந்திரப் போராட்டத் தியாகிகள் சான்றுகள் பெறுவதிலே பல்வேறு சிரமங்கள் இருக்கின்றன. 35, 40 ஆண்டுகளுக்குமேல் ஆகிவிட்டதால் தற்போது சான்றுகள் எல்லாம் அழிந்துவிட்டன. அவைகள் எல்லாம் பெரும்பாலும் கிடைக்கவில்லை. எனவே, வேறு வகையில் அவர்கள் சான்றுகள் கொடுப்பதற்கு வழியிருக்கிறதா என்பதை அரசு ஆராயுமா? இந்த தியாகிகள் பென்ஷன் வழங்குகிற கொள்கையை அறிவிப்பதற்கு முன்னதாக அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்திலே ஒரு தியாகிகள் பட்டியல் அரசாங்கத்தால்

1982 ஏப்ரல் 5]

தொகுக்கப்பட்டு அச்சடிக்கப்பட்டு வெளியிடப்பட்டு இருக்கிறது. அந்தப் பட்டியலில் இடம் பெற்றிருந்தால் போதுமானது என்று கருதி அவர்களுக்கும் பென்ஷன் அளிப்பதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலங்கடந்ததன் காரணமாக அல்லது ஆவணங்கள் சிதைந்து விட்டதன் காரணமாக சிறைச்சாலைகள் பதிவேட்டில் நகல்கள் பெற முடியாத நிலையில் அவைகள் முன்னாள் முதலமைச்சர் அல்லது அமைச்சர் அல்லது சட்டமன்றப் பேரவை அல்லது மேலவை உறுப்பினர்கள் ஒருவரிடமிருந்து பெறப்பட்டு சக கைதி சான்றிதழ், 'கோ—பிரிசனர்ஸ் சர்டிபிகேட்' பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுமென்று முடிவு செய்து அதற்கான உத்தரவுகள் 1-4-80 அன்று வழங்கப்பட்டு உள்ளது. மனுதாரர் மத்திய அரசு ஒய்வூதியம் பெறுபவராக இருந்து, மாநில ஓய்வூதியத்திற்கு விண்ணப்பித்துக் கொண்டால் அவர்கள் மீண்டும் சிறைச்சாலை சான்றிதழ் பெற வேண்டும் என்று வற்புறுத்தப்படாமல், இதர விதிகளுக்கு உட்பட்டு மாநில ஒய்வூதியம் வழங்கப்படலாம் என்று உத்தரவிட்டிருக்கிறது.

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, தியாகிகள் இந்த நாட்டின் விடுதலைக்காக பாடுபட்டு அனைத்தையும் தியாகம் செய்தவர்கள். அவர்களுக்கு மரியாதை செய்வதன் காரணமாகவும், இன்று அவர்கள் ஏழ்மை நிலையில் இருப்பதன் காரணமாகவும் இந்த பென்ஷன் குறித்து அவர்கள் கோருகிறார்கள், அரசும் கொடுக்க முன் வந்திருக்கிறது. ஆகவே பண வரம்பைத் தளர்த்தியிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். எஞ்சியுள்ள தியாகிகள் மிக மிகக் குறைவு. ஆகவே மிகப்பெரிய பணக்காரர்கள் தவிர ஏனைய தியாகிகளுக்கு இந்த வரம்பு முறையை இடையூறாகக் கருதாமல் எல்லோருக்கும் பென்ஷன் வழங்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுபற்றி முதலிலேயே குறிப்பிடப்பட்டது. முதலில் 1200 ரூபாய் வருமானம் உள்ளவர்களுக்கு, அதற்குக்குறைவாக உள்ளவர்களுக்குத்தான் ஒய்வூதியம் வழங்கப்படுவது என்று இருந்தது. அதற்குப் பிறகு 2-12-78-லே ஆண்டுக்கு 1500 ரூபாயாக உயர்த்தி, மேலும் அதனை இப்போது 9-12-80 முதல் 5,000 ரூபாயாக ஆண்டு வருமானம் உச்சவரம்பாக வைக்கப்பட்டுள்ளது. அதிலே தியாகிகள் என்கிறபோது ஏழையாக இருப்பவர்கள் மட்டும்தான் ஒய்வூதியம் பெறவேண்டுமென்ற அடிப்படையில், அதற்கு முன்னாலே 5,000 என்று வரையறுத்து இருக்கிறோம். அதற்கு மேற்பட்டு தியாகங்கள் செய்தவர்கள் வேறு முறையிலே கௌரவிக்கப்பட வேண்டு

மென்று அவர்களுக்குத் தாமிரப் பட்டயங்கள் வழங்கப்படுவது போன்ற இப்படிப்பட்ட சிறப்புகள் செய்யப்பட்டு கொண்டிருக்கிறது. ஆகவே உச்சவரம்பை 1,200 ரூபாயிலிருந்து 1,500 ஆக மாற்றி இப்போது 5,000 ரூபாயாக மாற்றப்பட்டிருக்கிறது.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, தியாகிகள் என்று சொன்னால் அதிலே தியாகத்தை நாம் தரம் பிரித்துப் பார்க்க முடியாது. சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கிறவர்கள் தங்களுடைய வருமானத்தைப் பெற்றுக்கொண்டு அவர்கள் அந்தத் தியாகிகள் பென்ஷனையும் பெறலாம். இரண்டு வகையில் சட்டமன்ற உறுப்பினர் பென்ஷனும், தியாகிகள் பென்ஷனும் பெறக் கூடாது என்று இருந்ததைக் கூட அரசு மாற்றியிருக்கிறது. இந்த நிலையில் சாதாரண தொண்டர்களாக இருந்து கஷ்டப்பட்ட தியாகிகள் ஏராளமான பேர்கள் இன்று கஷ்டத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிறவர்களுக்கு 5,000 ரூபாய் என்று சொன்னால் ஒரு மாதம் 350 ரூபாய் 400 ரூபாய் அந்தக் குடும்பத்திற்கு வருமானம் வந்தால் போதும், பென்ஷன் கிடைக்காது. அந்த நிலையை மாற்றி அவர்களுக்கு வரம்பு விகிதம் இல்லாமல் அதைக் கொடுப்பதற்கு அரசு முன் வருமா? இல்லாவிட்டால் இப்படிப் பட்ட பிரித்தாலும் நிலைமைகள் ஏற்படும் என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.இந்த அரசு அதைக் கவனிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று கஷ்டப்படுகிற தொண்டர்களுக்குக் கிடைக்கவேண்டும். ஏழை, எளியவர்களுக்குக் கிடைக்க வேண்டும் என்று ஆரம்ப காலத்திலிருந்தே ஆராயப் பட்டு, ஆராயப்பட்டு பல்வேறு வகைகளிலே இதற்கு ஓய்வூதியத்தினுடைய உச்சவரம்பை அதிகமாக வைத்திருக்கிறோம். இப்போதுகூட பிற்பட்டோர் நலனுக்காக வழங்கப்படுகிறதென்றாலும் ஸ்காலர்ஷிப் மற்றவைகள் 5,000 ரூபாய் உச்ச வரம்பு என்று வைத்திருக்கிறோம். தாழ்த்தப்பட்டவர்களாக இருந்தால் 6,000 ரூபாய் வருமானம் உள்ளவர்களுக்குக் கீழே இருப்பவர்களுக்குத்தான் ஸ்காலர்ஷிப் தருவதாக நாம் சொல்லியிருக்கிறோம். ஆகவேதான் 1,500 ரூபாயாக இருந்ததை 5,000-ரூபாய் என்று மாற்றியிருப்பதற்குக் காரணமே மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று இருப்பதால்தான். இதற்கு உச்ச வரம்பே இல்லாமல் இருக்குமானால் பணக்காரர்களாக இருப்பவர்களும், மற்ற வசதி படைத்தவர்களும் கூட தியாகிகளாக இருக்கிறார்கள். அவர்களுக்கும் ஓய்வூதியம் தரவேண்டுமென்ற நிலைதான் அதனாலே ஏற்பட்டு விடும். அவர்கள் எல்லாம் கௌரவிக்கப்பட வேண்டியவர்கள்தான். சிறப்பு செய்யப் பட்டிருக்கிறார்கள். அதனுடைய தன்மைகளைப் பொறுத்த வரையில் மத்திய அரசு 6 மாத காலம் சிறையில் இருந்தால்தான் என்று வைத்தது, மாநில அரசு 3 மாதம் காலம் என்று

வைத்தது. அதற்குப் பிறகு ஒரு மாத காலம் இருந்தால்போதும் என்று வைத்து இப்போது மூன்று வார காலம் இருந்தாலே அவர்களைத் தியாகிகளாக ஏற்றுக்கொண்டு ஓய்வூதியம் வழங்கலாம் என்று இதுபோன்ற சலுகைகள் படிப்படியாக அளிக்கப்பட்டு வருகின்றன.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, சுதந்திரப் போராட்ட வீரர்கள் எந்தவிதமான பிரதிபலனையும் எதிர் பாராமல் 1942-ல் விடுதலைப் போராட்டத்தின் போதும், அன்னிய நாட்டுத் துணிகளைப் புறக்கணிக்கிற போதும், 1942—ல் இரண்டாவது உலக யுத்தத்தின் போதும் பட்டாளத்தில் சேராதே என்று அவர்கள் வீராவேசத்துடன் பாடி ஈடுபட்டவர்கள்' அவர்களுக்கு இன்றையதினம் சான்றிதழ் இல்லை. அவர்களுடன் சிறையிலே இருந்தவர்கள் கொடுத்த சான்றிதழை வைத்து அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுமா அல்லது அவர்களுக்கு அரசு தியாகிகள் மானிய நிலம் கொடுத்திருக்கிறதே, அதை வைத்தாவது அவர்களுக்கு— சான்றிதழ் இல்லாதவர்களுக்கு நிலத்தின்படி மானியம் வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-10]

மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலேயே நான் இதற்கு விடை அளித்தேன். முன்னாள் முதலமைச்சர்கள் அல்லது அமைச்சர்கள் அல்லது நாடாளுமன்ற உறுப்பினர்கள் அல்லது சட்டமன்றப் பேரவை -மேலவை உறுப்பினர்கள், இவர்கள் எக்ஸ்-பிரிசனர் என்ற முறையில் சக கைதி சான்றிதழ் தந்தாலே போதும். மத்திய ஓய்வூதியத்திற்கென குழு அமைக்கப்பட்டிருக்கிறது. முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு பக்தவத்சலம் தலைமையில் இதற்கென அமைக்கப்பட்டுள்ள குழுவினர் சிபாரிசு செய்தால் மத்திய ஓய்வூதியம் தர பரிந்துரை செய்யலாம் என்ற நிலையை நாம் இப்பொழுது கடைப்பிடிக்கிறோம்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தியாகிகள் பென்ஷன் சிறையிலே இருந்தவர்களுக்கு மட்டும் இப்பொழுது வழங்கப்படுகிறது. ஆனால் சிறையிலே இருந்தவர்கள் அதற்கான ஆதாரம் கொடுக்கவில்லை என்றால், அவர்களுடன் கூட இருந்தவர்கள் அத்தாட்சி வழங்க வேண்டுமென்று அரசு ஆணையிலே இருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். தியாகிகளாக இருந்தவர்கள் பலர் அப்பொழுது சிறையிலே இல்லாமல், பல மாதங்கள் தலை மறைவாக இருந்திருக்கிறார்கள். அப்படி சிறையிலே இல்லாமல், தலைமறைவாக இருந்தவர்கள் இன்றையதினம் வறுமையிலே வாடிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிச் சிறைச்சாலையிலே

இல்லாமல் தலைமறைவாக இருந்தவர்களுக்கு அரசின் சார்பிலே ஏதாவது மானியம் வழங்க அரசு ஆவன செய்யுமா? அப்படி தலை மறைவாக இருந்தவர்களுக்கு யார் சான்றிதழ் வழங்கவேண்டும்? அதைப் பரிசீலனை செய்து இந்த அரசு ஏதாவது ஆணையிடுமா என்று நான் முன்னவர் அவர்களிடமிருந்து. தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தியாகிகளுக்கு ஓய்வூதியம் மற்றும் மானியம் தருவது என்பதற்கு ஆரம்ப காலத்திலேயிருந்து ஒரு குறிப்பிட்ட அளவு வைத்துத்தான் தரப்படுகிறது. அவர்களுக்குத்தான் நாம் தரமுடியும். தலைமறைவாக இருந்தவர்கள் என்று கணக்கெடுக்கும்போது உண்மையான கணக்கு எந்த அளவு வரும் என்று தெரியவில்லை. இப்பொழுது கூட, சில பேர் அரசியல் காரணங்களுக்காக அல்லாமல் வேறு காரணங்களுக்காகச் சிறை சென்றவர்கள், தியாகம் செய்தவர்கள் பெறுகின்ற ஓய்வூதியத்தினை வாங்கிவிட்டார்கள் என்று குழுவினரே குற்றம் சாட்டியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட இடர்ப்பாடுகள் வருகிற காரணத்தால் சில சிக்கல்கள் ஏற்படுகின்றன. நாணயமாக, நேர்மையாக தருவார்கள் என்ற நம்பிக்கையின் பேரில்தான் சான்றிதழ் வழங்க வேண்டுமென்று வைத்திருக்கிறோம். அப்பொழுது தலை மறைவாகியிருந்தவர்கள் ஒருசிலர் இருக்கக் கூடும். ஆனால், அப்படிப்பட்ட தன்மைகளை நாம் ஏற்படுத்துகிறபொழுது அதற்கு உரிமையில்லாதவர்கள் உரிமைக் கொண்டாடி விடக்கூடிய பல்வேறு சங்கடங்கள் ஏற்படக்கூடும். இதையெல்லாம் தனியாக ஆராயவேண்டும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு பென்ஷன் வழங்குகிற நேரத்திலே ஜெயில் சர்ட்டிபிகேட் இல்லாதிருக்கிற காரணத்தினாலே, ஜெயிலில் உடன் இருந்தவர்களுடைய சர்ட்டிபிகேட்டை வாங்கி மத்திய அரசுக்கு அனுப்புகிற நேரத்திலே, அதனால் பென்ஷன் கிடைக்காமல் காலதாமதம் ஆகிற காரணத்தாலே இங்கேயிருக்கிற தியாகிகள் டெல்லி சென்று பென்ஷன் வாங்குகிற நிலை இல்லாத காரணத்தினாலே, அரசாங்கமே முயற்சி எடுத்து டெல்லியிலே இருக்கிற விசேஷ பிரதிநிதி மூலமாகவோ அல்லது வேறு முயற்சியின் மூலமாகவோ, ஜெயில் சர்ட்டிபிகேட் இல்லாதிருப்பவர்களுக்கு, ஜெயிலிலே உடனிருந்தவர்கள் கொடுத்த சான்றிதழை வைத்து, விரைவாக பென்ஷன் வாங்கிக் கொடுக்க அரசு முயற்சி செய்யுமா என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்மிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஓய்வூதியம் தருவதற்கு அவர்கள் தனியாக விதிமுறைகள், மற்றவைகள் எல்லாம் வைத்திருக்கிறார்கள். அந்த விதிமுறைகளை மாற்ற வேண்டு

மென்றால், அதை டெல்லி அரசுதான் மாற்றவேண்டும். நான் சொல்வதெல்லாம் மாநில அரசு தருகிற ஓய்வூதியங்களைப் பொறுத்தவை. அவர்கள் 6 மாதம் என்று நிர்ணயித்தார்கள். மாநில அரசு முதலிலே 3 மாதம் என்று நிர்ணயித்தது. அதற்கும் கீழே தண்டனை பெற்று தியாகம் செய்தவர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னதன் பேரில் ஒரு மாதம் என்று ஆக்கி இப்பொழுது 3 வார காலம் இருந்திருந்தாலே பென்ஷன் வாங்கலாம் என்று வைத்திருக்கிறோம்.

திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டின் விடுதலைக்காகப் போராடிய தியாகிகளுக்கு இப்பொழுது அளிக்கப்படுகின்ற ஓய்வூதியம் போல் தமிழ் மொழியைக் காப்பாற்றுவதற்காக உயிர் நீத்தவர்களது குடும்பங்கள், தியாகச் செம்மல்கள், சிறை சென்றவர்கள், இவர்களுக்கு அளிக்கப்படுகின்ற உதவித் தொகையை நாட்டில் பெருகி வருகின்ற பொருளாதார வீக்கத்தின் அடிப்படையில் மறுபரிசீலனை செய்து உயர்த்தித்தர தமிழக அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் மொழிக்குப் பாடுபட்டு சிறை சென்று தியாகம் செய்தவர்களுக்கு எந்த வகையிலே ஓய்வூதியம் தரலாம் என்பதைப் பற்றி அரசு தனியாக ஆராய்ந்து வருகிறது.

திரு. கோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசிடமிருந்து தியாகிகள் பென்ஷன் பெறும் தியாகிகளின் வருமான வரம்பை ரத்து செய்யும் திட்டம் உள்ளதா என்ற கேள்விக்கு அமைச்சரவர்கள் வருமான வரம்பை 5,000 ரூபாயாக ஆக்கியிருப்பதாகக் கூறினார்கள். அந்நிய ஆட்சியை எதிர்த்துத் தியாகம் செய்தவர்களுக்குச் சன்மானமாக வழங்குகிறோம். மத்திய அரசு வழங்குகின்ற தியாகிகள் பென்ஷனுக்கு வருமான வரம்பை அகற்றியிருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்கின்ற பென்ஷனுக்குக்கூட வருமான வரம்பில்லாமல் அனைவருக்கும் கொடுக்கிறோம். தியாகிகள் பென்ஷனுக்கு மட்டும் ஏன் வருமான வரம்பை வைத்திருக்க வேண்டும்? எனவே, அந்த வருமான வரம்பை உடனடியாக ரத்து செய்யுமா? மத்திய அரசால் கொடுக்கப்படுகின்றவர்களுக்கு நாம் கொடுப்பதில்லை. ஆறு மாதங்களுக்குக் குறைவாகச் சிறையிலே இருந்தவர்களுக்குத்தான் நாம் கொடுக்கிறோம். அவர்களுக்கு மத்திய அரசு கொடுக்கவில்லை. எனவே, இந்த வருமான வரம்பை அறவே நீக்குவதற்கு அமைச்சரவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, ஓய்வூதியம் தர வேண்டுமென்பது, கஷ்டப்படுகின்ற நிலைமையிலுள்ள, தியாகம் செய்தவர்கள், தியாகிகளைக் கௌரவிப்பது என்பது வேறு; அவர்களைக் காப்பாற்றுவது என்பது வேறு

காப்பாற்றுகின்ற நிலையிலேதான் இந்த நிலைமைகளெல்லாம் ஆரம்பத்திலே, காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே தொடங்கப்பட்டு 1,200 ரூபாயாக இருந்து, 1,500 ரூபாயாக ஆகி, இப்பொழுது 5,000 ரூபாயாக ஆகியிருக்கிறது. மேலும் கூட்டலாமா என்று வேண்டுமானால் கேளுங்கள்; ஆனால் உச்சவரம்பே இல்லாமல் செய்வது என்பது அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதாக ஆகாது. அதைத் தனியாகத்தான் ஆராய வேண்டும்.

கன்னியாகுமரி கடற்கரை பகுதிகளில் வெளி நாட்டவர் மீன் பிடிப்பதைத் தடுக்கும் திட்டம்

* வினா எண். 756—திரு. சு. முத்துக்கிருஷ்ணன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி கடற்கரைப் பகுதிகளில் வெளிநாட்டுக் கப்பல்கள் (இந்தோசீனா, தைவான்) மீன் பிடிப்பது பற்றி அரசுக்குத் தெரியுமா?

(ஆ) இதனால் குமரி மீனவர்கள் பாதிக்கப்பட்டு அரசுக்கு முறையிட்ட பின்னால் அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

(இ) மத்திய அரசுடன் இது சம்பந்தமாக அரசு தொடர்பு கொண்டு உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) மற்றும் (ஆ):— அயல்நாட்டுக் கப்பல்கள் இந்தியக் கடற்பகுதியில் ஊடுருவும்போதெல்லாம் காவல்துறையினரின் அதிகார வரம்பிற்குட்பட்ட கடல் எல்லைக்குள் ஊடுருவும் அயல் நாட்டுக் கப்பல்களை விழிப்புடன் மீன்துறை மற்றும் தனியார் விசைப்படகுகளைக் கொண்டு கண்காணிக்குமாறு அறிவுறுத்தப் பட்டுள்ளது. புதிதாக நிறுவப்பட்டுள்ள கிழக்கு மண்டல கடலோரப் பாதுகாப்புப் பணி மற்றும் சென்னையில் உள்ள இந்தியக் கப்பல்படை பிரிவும் இச்சம்பவங்களைத் தடுக்குமாறு அவ்வப்போது கேட்டுக்கொள்ளப்பட்டன.

(இ) அயல்நாட்டுக் கப்பல்களின் ஊடுருவல் குறித்த தகவல்கள் அனைத்தும் தமிழ்நாடு அரசு மூலம் மத்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. இந்தியக் கடல் எல்லைக்குள் அயல்நாட்டு மீன்பிடிக் கப்பல்களின் ஊடுருவலைத் தடுக்கும் முகத்தான், மத்திய அரசு தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக 8-5-1981 நாளிட்ட, மத்திய அரசு பாதுகாப்புத் துறையின் கடிதத்தின் மூலம் தமிழ்நாடு அரசுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்திய கடல் மண்டல மசோதா (அயல்நாட்டு மீன்பிடித்தலை ஒழுங்குப்படுத்துதல்) 1981 என்றும் மசோதா ஒன்றை இயற்றி அதனைச் சட்ட மாக்கவும் மத்திய அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவரவர்களே, இந்தியக் கடற்பகுதியில் மிக்க விழிப்புடன் இருந்து அந்நிய நாட்டுப் படகு களைக் கண்டு பிடிக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது; ஆனால் உண்மை அப்படி இல்லை. கடந்த சில மாதங்களுக்கு முன்பு 8 கப்பல்கள், 10 கப்பல்கள் கூட நின்று மீன்பிடித்துக் கொண்டு சென்று விட்டார்கள். அதுபற்றி ஆர்.டி.ஓ. அவர்களிடம் தெரிவிக்கப்பட்டும் பந்தோபஸ்து செய்யப்படவில்லை. எனவே, அப்படிப்பட்ட நிலைமைகளை உடனடியாகத் தடுத்து நிறுத்து வதற்கு ஏதாவது அவசரச் சட்டம் போட்டு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கடந்த ஆண்டு, அதாவது 22-8-80, 2-9-80, 2-10-80, 6-10-80, மற்றும் 23-10-80 ஆகிய நாட்களில் கன்னியாகுமரி மாவட்டக் கடற்கரை ஓரங்களில் அயல் நாட்டு மீன்பிடிக் கப்பல்கள் குறிப்பாக தைவான் நாட்டுப் பெரும் மீன்பிடிக்கப்பல்கள் ஊடுருவி மீன்பிடித்ததன் காரணமாகத் தமிழக மீனவர்கள் மீன்பிடித் தொழில் பாதிக்கப்பட்டது தமிழக அரசுக்குத் தெரிவிக்கப்பட்டது. இதை உடனடியாக மத்திய அரசுக்குக்கூட நாம் தெரிவித்தோம். அந்தச் சமயத்தில் இரண்டு கப்பல்கள் கைப்பற்றப்பெற்று அதன் காரணமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் இந்த அவையிலே எடுத்துச் சொல்லப்பட்டிருக் கிறது. ஆகவேதான் இதற்கு நிரந்தரப் பாதுகாப்புத் தர வேண்டுமென்று நாம் மத்திய அரசுக்குச் சொல்லியிருக்கிறோம். ஆகவே, கடலோரப் பாதுகாப்புக்கு ஏற்பாடுகள் செய்வது மட்டுமல்லாமல் இந்தியக் கடல் மண்டல மசோதா ஒன்றை மத்திய அரசு கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கிறது. அதன்படி மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுவது போன்ற தீவிரமான நடவடிக் கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, கடலில் நமது எல்லை எவ்வளவு? கடலிலிருந்து 200 மைல் தூரம் அந்தந்த நாட்டுக்குச் சொந்தம் என்று சர்வ தேச முடிவு ஏதாவது உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அந்தந்த நாடுகளுடைய கடற்கரையிலிருந்து 200 மைல் அளவிற்கு அந்தந்த நாட்டுக்குச் சொந்தம். அதற்கப்பாலுள்ளது உலகம் முழுவதும் உள்ள நாடுகளுக்குச் சொந்தம். அந்த எல்லைக் குள்ளே வரும்பொழுதுதான் நாம் நடவடிக்கை எடுக்க வேண்டி யவர்களாக இருக்கிறோம்.

[1982 ஏப்ரல் 5

ஆறுமுகநேரி, காயல்பட்டினம் பேரூராட்சிகளுக்கான குடிநீர்த் திட்டங்கள்.

*வினா எண் 757— திரு. ரா. கு. பெருமாள்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் தொழிலாளர்கள் நிறைந்துள்ள ஆறுமுகநேரி, காயல்பட்டினம் பேரூராட்சிகளின் குடிநீர்த் திட்ட விஸ்தரிப்புக்கான திட்டம் ஏதேனும் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் இத்திட்டத்திற்காக அரசு செலவிட எண்ணியுள்ள தொகை எவ்வளவு?

(இ) இதனால் பலன் அடையும் கிராமங்கள் எத்தனை? மக்கள் எண்ணிக்கை எவ்வளவு?

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம்: (அ) மற்றும் (ஆ): ஆம். ஆறுமுகநேரி பேரூராட்சிக்கு ரூ. 6.19 இலட்சமும், காயல்பட்டினம் பேரூராட்சிக்கு ரூ. 7.96 இலட்சமும் செலவிட அரசு அனுமதி வழங்கியுள்ளது.

(இ) பயனடையும் மக்கள் ஏறக்குறைய 10,000 பேர்கள்.

திருச்சி தாலுகாவை இரண்டாகப் பிரிக்கும் திட்டம்.

*வினா எண் 758— திரு எம். சின்னசாமி; திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம் திருச்சி தாலுகாவை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம்: ஆம்.

(முற்பகல் 9.20)

திரு. எம். சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திருச்சி தாலுகாவை இரண்டாகப் பிரிக்கவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி பிரிக்கப்படவிருக்கும் அந்தத் தாலுகாவுக்கு என்ன பெயர் வைக்கப்படும்? எந்தெந்த பிர்க்காக்கள் இந்த புதிய தாலுகாவில் சேர்க்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, எந்தெந்த பிர்க்காக்கள் இந்தப் புதிய தாலுகாவில் சேர்க்கப்படும் என்ற தகவல் இல்லை. தகவல் இல்லை என்றாலும் திருச்சி வட்டம் இரண்டு பிரிவுகளாகப் பிரித்து அமைக்கப்படும். அப்போது திருச்சி ஒரு வட்டமாகவும், திருவரங்கம் ஒரு வட்டமாகவும் அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1982 ஏப்ரல் 5]

தஞ்சை சரஸ்வதிமகால் நூல் நிலையத்தில் பணிபுரியும் ஓய்வு பெற்ற பணியாளர்கள்.

*வினா எண் 759—திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையத்தில் ஓய்வு பெற்ற நான்கு பணியாளர்கள் ஓய்வூதியமும், பணிக்கால ஊதியமும் சேர்த்து பெறுவது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் வேலையில்லா பட்டதாரிகளுக்கு இப்பணிகள் வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம். இப்போது இருவர் மட்டுமே அவ்வாறு உள்ளனர்.

(ஆ) தஞ்சை சரஸ்வதி மகால் நிர்வாகக் குழுவே இது குறித்து முடிவு செய்ய வேண்டும்.

கோவாப்டெக்ஸ் துணிகளை மேல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் திட்டம்.

*வினா எண் 760—திரு. இ. கணேசன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கோவாப்டெக்ஸ் துணிகள் மேல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றனவா?

(ஆ) ஆம் எனில் ஏற்றுமதியை அதிகரிக்க அரசு ஊக்கம் அளிக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மற்றும் (ஆ) ஆம்

திரு. இ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிளீடிங் மெட்ராஸ் ரகத் துணிகள் வெளிநாட்டில் நிறைய கிராக்கி இருந்தது என்பது அரசுக்குத் தெரியுமா? நம் நாட்டிலே உள்ள தனிப்பட்ட ஏற்றுமதியாளர்கள் தரம் குறைந்த துணிகளை வெளிநாடுகளுக்கு அனுப்பியதால், அந்த மார்க்கெட்டு வீழ்ந்துவிட்டது அரசுக்குத் தெரியுமா? கைத்தறி துணிகளை ஏற்றுமதி செய்ய, லாப நோக்கம் கொண்ட தனியார் நிறுவனங்களுக்கு அனுமதி வழங்காமல், அரசு நிறுவனமான கோ-ஆப்டெக்ஸ் மூலம் வெளிநாடுகளுக்கு அனுப்பி, நிறைய அந்நிய செலாவணியைப் பெறுவதற்கு இந்த அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே' நல்ல கைத்தறி துணிகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வியாபாரத் தப் பெருக்குவதன் மூலமாக, கைத்தறி நெசவுத் தொழில் நல்ல தரத்தைப் பெறவேண்டும் என்ற நோக்கம் அரசுக்கு இருக்கின்றது. அதனால் தான் 'கோ—ஆப்டெக்ஸ் இன்டர் நேஷனல்' என்ற ஒரு பகுதியை நாம் ஆரம்பித்திருக்கிறோம். அவர்கள் இதிலே இப்போது ஊக்கத்தோடு செயல் புரிந்து வருகிறார்கள். தனியார்களுடைய வியாபாரம் என்பது, அவர்கள் தங்களுக்குள்ள உரிமையைப் பயன்படுத்தி செய்து வருகிறார்கள். அவர்கள் தவறு செய்யாமல் இருக்கக்கூடிய அளவுக்கு கட்டுப் பாட்டை வேண்டுமானால் அரசு பரிசீலிக்கலாம்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படும் கைத்தறித் துணிகளை வெளிநாடுகளில் விளம்பரம் செய்கின்ற வகையில் வெளிநாடுகளில் கைத்தறி விற்பனை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றனவா? இல்லை என்றால் வெளிநாடுகளில் கைத்தறி விற்பனை நிலையங்களை அமைக்க அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, சிங்கப்பூரிலே ஒரு நிறுவனத்தை நாம் ஆரம்பித்து இருக்கிறோம். அது தவிர ஏஜண்டுகள் மூலமாக ஆஸ்திரேலியா, அமெரிக்கா போன்ற நாடுகளுக்குக் கைத்தறி துணிகளை ஏற்றுமதி செய்து வந்தோம். ஆஸ்திரேலியாவும், அமெரிக்காவும் தற்போது கைத்தறித் துணிகள் வாங்குவதை நிறுத்திவிட்டார்கள். இப் போது சிங்கப்பூரிலே ஒரு நிறுவனம் இருந்து கொண்டு வருகிறது. அதன் மூலமாக வேறு பல புதிய முயற்சிகளை எடுத்து, ஏற்று மதி செய்ய முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, நம் தமிழ கத்திலே உற்பத்தியாகின்ற கைத்தறித் துணிகளை வாங்கிக் கொண்டு இருந்த ஆஸ்திரேலியா, அமெரிக்கா போன்ற நாடுகள் ஏன் வாங்குவதை நிறுத்திவிட்டன? இப்போது எந்தெந்த நாடு களில் ஏற்றுமதி செய்கிறார்கள்? தரமான துணிகளாக இருக்க வேண்டும் என்று சரியாக கண்காணித்து அனுப்பினால், தமிழகக் கைத்தறி நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பு பெருக வாய்ப்பு இருக்கின்றது. அதற்கு என்ன திட்டத் தஇந்த அரசு வைத்திருக் கின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, ஆஸ்திரேலியாவுக்கு நாம் ஏற்றுமதி செய்து கொண்டிருந்தோம். அங்கே நம்மிடத்திலே இருந்து வாங்கிக் கொண்டிருந்த நிறு வனத்தில் அவர்களுக்கு ஏற்பட்ட பிரச்சினை காரணமாக இப்போது அதை நிறுத்திக் கொண்டார்கள். அமெரிக்காவைப் பொறுத்தமட்டில் நாம் ஒரு ஏஜண்டு மூலமாக அனுப்பிக் கொண்

டிருந்தோம். இப்போது அவரே தனிப்பட்ட முறையிலே துணிகளை வாங்கித் தயாரித்து அவர்களுக்கு அனுப்புவதன் காரணமாக நம்மிடம் வாங்குவதை நிறுத்திவிட்டார்கள். வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதைப் பொறுத்தமட்டில் அந்தத் துறையிலே இருக்கின்றவர்கள் சொல்லுகிற கருத்தை வைத்து பார்க்கிறபோது ஒரு வருடம் அல்லது 18 மாதங்களுக்கு முன்னாலே அப்போது இருக்கக்கூடிய மக்களுடைய விருப்பத்தை அறிந்து துணிகளைத் தயாரித்தால்தான் அந்த ஏற்றுமதியை வெளிநாடுகளுக்கு வெற்றிகரமாக நாம் செயல்படுத்த முடியும் என்று தெரிவிக்கிறார்கள். அந்த அடிப்படையிலே என்ன செயயலாம் என்பதைப் பற்றி யோசித்துக் கொண்டிருக் கிறோம்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது என்னென்ன ரகங்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன? அதே நேரத்திலே வெளிநாடு களிலே இருக்கின்ற மக்களைக் கவருகின்ற வகையிலே புதிய புதிய ரகங்களை அறிமுகப்படுத்தும் எண்ணம் அரசுக்கு இருக் கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டைத் துணி, துண்டு போன்ற பல்வேறு ரகங்களை ஏற்றுமதி செய்துக் கொண்டிருக்கிறார்கள். அதிலே அவர்களுடைய தேவை என்னென்ன என்பதை உணர்ந்து அந்த அடிப்படையிலே அவைகளைத் தயாரித்து அனுப்ப வேண்டிய முறையிலே நாம் அது குறித்து பரிசீலிக்க வேண்டி யவர்களாக இருக்கிறோம்.

திரு. ஆர். நவநீத கிருஷ்ணபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோ—ஆப்டெக்ஸ் தயாரிக்கும் லுங்கிகளை இலங்கையில் உள்ளவர்கள் விரும்பி வாங்குவதாக சொல் கிறார்கள். எனவே, இலங்கையில் ஒரு கோ—ஆப்டெக்ஸ் விற்பனை நிறுவனம் ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமே கடையைத் திறப்பது என்பது ஒரு முறை. அந்தந்த நாடுகளில் உள்ள ஏஜெண்டுகள் மூலமாக விற்பனை செய்வது இன்னொரு முறை. இதிலே ஏஜெண்டுகள் மூலமாக நாம் துணிகளை அனுப்பி விற்பனை செய்வது கொஞ்சம் தேவலாம் என்ற நிலைமை இருந்துவருகிறது. நாமே கடையைத் திறந்து துணிகளை அங்கேவிற்பனை செய்வதாக இருந்தரல், அங்கே உள்ள உள்நாட்டுக்காரர்களுடைய மார்கெட்டோடு போட்டி போடுகின்ற அளவுக்கு தயாரித்து விற்பனை செய்யக்கூடிய அளவிற்கு இங்கே இருந்து போகின்ற வர்களால் செய்ய முடியாது. ஆகவே அதை யோசனை செய்து பார்க்க வேண்டும்.

திருமதி எ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு காலத்தில், இந்த பிளீடிங் மெட்ராஸ் துணிக்கு வெளிநாடுகளில் அதிக கிராக்கி இருந்தது. பிறகு அந்தத் துணிக்கு சரியான கிராக்கி இல்லை என்ற காரணத்தினால் அந்த கிராக்கிப் போய்விட்டது. அதை முதலிலே கூட கேட்டார்கள். அமைச்சர் அவர்கள் சரியான பதில் சொல்லவில்லை. அந்த பிளீடிங் மெட்ராஸ் துணியை நல்ல தரமான முறையில் பழைய நிலைமைக்குக் கொண்டுவர அரசு முன் வருமா? அதோடு நம்முடைய உள்நாட்டிலும் ஜனதா துணியை ஏழை எளிய மக்களுக்கு கோ-ஆப்பரேடிவ் சொசைடி மூலமாக கொடுக்கிறோம். அதற்கு கிராமங்களில் அதிக கிராக்கி இருக்கிறது. அதை அதிக அளவில் உற்பத்தி செய்து கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாடுகளுக்கு அனுப்பும் துணியாக இருந்தாலும் சரி, உள்நாட்டில் விற்பனை செய்யும் துணியாக இருந்தாலும்சரி, வியாபாரத்தில் நாணயம் இருக்கவேண்டும். அதற்கு மாறாக இருந்தால் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதுதான் அரசினுடைய விருப்பம். ஆகவே நெசவாளர்கள் இந்தத் தயாரிப்பிலே ஏதாவது தவறு செய்தால் அதை அரசு வன்மையாகக் கண்டிக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நல்ல தரத்தோடு துணிகளை விற்கவேண்டியது நம்முடைய கொள்கை. அதோடு நெசவாளர்களுக்கு ஒரு பாதுகாப்பாகவும், நிரந்தரமாகத் தொழில் கிடைக்கவும் வழிவகைகளை அரசு செய்கிறது. உள்நாட்டிலே இந்த ஜனதா ரகங்கள் எல்லா கூட்டுறவு விற்பனை நிலையங்களிலும் விற்பனை செய்ய நாம் முயற்சி எடுக்கலாம்.

திரு. ஏ. சி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலை நாடுகளில் தமிழர்கள் வாழுகின்ற பெரும்பாலான இடங்களில் பட்டுச் சேலைகளுக்கு அதிகமாக டிமாண்ட் இருக்கிறது. அங்கே 500 ரூபாய் விலை மதிப்புள்ள பட்டுச் சேலைகள், 2000, 3000 ரூபாய் என்று விற்கப்படுகிறது. எனவே, தமிழர்கள் அதிகமாக வாழுகின்ற இடங்களுக்கு பட்டுச் சேலைகளை ஏற்றுமதி செய்ய ஏதாவது வழிவகை செய்ய முன்வருமா? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேலைநாடுகளுக்குச் சென்று நிலைமைகளை அறிய ஒரு சுற்றுப்பயணம் மேற்கொள்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு நாடுகளில் உள்ள நிலைமையைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால், சுற்றுப்பயணம் செய்தும் தெரிந்துகொள்ளலாம். இங்கே இருந்தும் தெரிந்துகொள்ளலாம். ஆகவே, அது ஒரு பிரச்சினை அல்ல. ஆகவே, நாம் தயாரிப்பைப் பெருக்குவதற்கு என்னென்ன செய்வது என்பதை செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 761 ஒத்திவைக்கப்படுகிறது.

பெரும்பள்ளம் ஓடை அருகில் குடிசைவாழ் மக்களுக்கு வீடுகள் கட்டித்தரும் திட்டம்.

*வினா எண் 762—திரு. ச. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு நகர் பெரும்பள்ளம் ஓடை ஓரத்தில் வசிக்கும் குடிசை மக்களுக்கு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எத்தனை வீடுகள் கட்டப்படும்?

(இ) அதற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(ஆ) 400 அடுக்கு குடியிருப்புகள்.

(இ) ரூ. 52.23 இலட்சங்கள்.

வேலூரில் பீடித் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம்

*வினா எண் 763—திரு என். ஏ. பூங்காவனம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பீடித் தொழிலாளர்களுக்கு சேமநல திட்டத்தின் கீழ் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வேலூரில் பீடித் தொழிலாளர்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது துவங்கும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) மற்றும் (ஆ) மைய அரசின் தொழிலாளர் நல அமைச்சகத்தின் கீழ் இயங்கும் பீடித் தொழிலாளர் நலநிதி நிறுவனம்தான் பீடித் தொழிலாளர் நலத் திட்டங்களை நிறைவேற்றும் பணியினை மேற்கொண்டுள்ளது. இந்நிறுவனம் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் வேலூருக்கருகில் சத்துவாச்சாரி என்னுமிடத்தில் பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினருக்கான திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட 184 வீடுகளில் 150 வீடுகளைப் பீடித் தொழிலாளர்களின் குடியிருப்புக்காக ஒதுக்கவேண்டும் என்று வேண்டியது. அவ்வாறே 150 வீடுகள் பீடித் தொழிலாளர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

[1982 ஏப்ரல் 5

(முற்பகல் 9.30)

திரு. என். ஏ. பூங்காவனம்: தலைவரவர்களே, இந்த 150 வீடுகள் ஒதுக்கப்படுவதிலே பீடித் தொழிலாளர்கள் முதலிலே ஏதாவது பணம் செலுத்த வேண்டுமா? ஆம் என்றால் எவ்வளவு பணம் செலுத்த வேண்டுமென்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவாகளே, முதலிலே 500 ரூபாய் செலுத்த வேண்டும். மத்திய அரசு ஒருவருக்கு 1,500 ரூபாய் மானியம் தருகிறது. பிறகு 228 மந்த்லி இன்ஸ்டால்மென்டில் 19 வருஷங்களில் கட்டினால் போதும்.

திரு. என். ஏ. பூங்காவனம்: தலைவரவர்களே, எங்களுடைய மாவட்டத்தில் சுமார் 50,000 பீடித் தொழிலாளர்கள் இருக் கிறார்கள். ஆனால் இப்போது வேலூரில் மட்டுந்தான் ஒரு பகுதியில் வீடுகள் கட்டப்படுகின்றன. அந்த நகரத்தைச் சுற்றிலும் 10,000—க்கு மேல் பீடித் தொழிலாளர்கள் இருக் கிறார்கள், இதோடு நின்றுவிடுமா அல்லது வேறு இடங்களிலும் வீடுகள் கட்டப்படுமா? பீடித் தொழிலாளர்கள் ஆரம்பத்தில் 500 ரூபாய் கட்டவேண்டுமென்று இருக்கிறது. அவர்கள் வேலை யில்லாமல், போதிய வருமானம் இல்லாமல் கஷ்டப்படுவதால் முதலில் 100 அல்லது 150 ரூபாய் கட்டினால் போதும் என்ற முறையை அரசு ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, இன்ஸ்டால்மென்ட் பேஸிசில் கட்டினால் போதும் என்று முடிவு செய்யப்படுகிறது. செஸ் பண்டு வசூல் செய்வது மத்திய அரசு. அவர்களே, மானியம் தருகிறார்கள். மாநில அரசுக்கு அதிலே பங்கு இல்லை. எனவே மாநில அரசு பணம் கொடுக்க வேண்டிய சாத்தியம் உள்ளதாக நான் கருதவில்லை.

திரு. கே. ஆர். சுந்தரம்: தலைவரவர்களே, 19 ஆண்டுத் தவணையில் பணம் கட்ட எற்பாடு இருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் அவர்கள் வேலை செய்கிற பீடித் தொழில் அதிபர்கள் ஷூவர்ட்டி' கொடுக்க வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் இருப்பத கத் தெரிகிறது. தொழில் அதிபர்கள் அதற்குத் தயாராக இல்லை. ஆகவே, அதில் சிரமம் இருக்கிறது. இந்த சிரமத்தைப் போக்க தொழிலாளர்களே, நேரடியாக பணம் செலுத்தினால் போதுமானது என்ற நிலையை உருவாக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்; தலைவரவர்களே, இதற்கான ஒரு கமிட்டி மாநில மட்டத்தில் இருக்கிறது, நான் தான் அந்தக் கமிட்டியின் தலைவராக இருக்கிறேன். இந்த விஷயம் அந்த கமிட்டியிலே வந்தால், இதுபற்றி பரிசீலனை செய்து ஏற்ற முடிவு எடுக்கப்படும்.

1982 எப்ரல் 5]

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவரவர்களே, பீடித் தொழிலா ளார்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். குறிப்பாக நெல்லை மாவட்டத்தில் இலட்சக்கணக்கான பீடித் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். ஆகவே இந்த வீடு கட்டும் திட்டம் தமிழ் நாட்டில் எந்தெந்த இடத்தில் எத்தனை வீடுகள் வீதம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது? இதுவரை எவ்வளவு வீடுகள் ஒதுக்கப் பட்டுள்ளன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, என்னுடைய ஞாபகம் சரியாக இருக்குமானால் வேலூர் வரையில்தான் இது என்று கருதுகிறேன். இந்த செஸ் பண்டு திட்டம் 16-2-1977 முதல் 1-4-1979 வரையில் இருந்தது. அதற்குப் பின்னால்தான் ஜனதா ஆட்சியில் அது நிறுத்தப் பட்டது. பின்னால் நம்முடைய அரசு ஒரு தீர்மானம் நிறை வேற்றி மத்திய அரசுக்கு அனுப்பியது. அதனால்தான் இந்தத் திட்டம் மீண்டும் வந்தது என்று நான் சொல்லவில்லை. மத்திய அரசு மீண்டும் கொண்டுவந்திருக்கிறது. 1-1-1982 முதல் மீண்டும் இந்தத் திட்டம் அமுலுக்கு வந்திருக்கிறது. பணம் இனிமேல்தான் வரவேண்டும். பணம் குவிந்த பிறகு (அக்குமு லேட் ஆன பிறகு) இதுபற்றி மாநில அளவில் உள்ள குழு ஆலோசனை செய்யும்.

திரு. பு. கோ. ஆனூர் ஜெகதீசன்: தலைவரவர்களே, பீடித் தொழிலாளர்களின் அவல நிலையை உத்தேசித்து, அவர்களுக்கு இருக்கிற கஷ்டங்களை உத்தேசித்து, ஒவ்வொரு நகரத்திலும் இப்படிப்பட்ட வீடு கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராக்வானந்தம்: தலைவரவர்களே, இதிலே தொழிலார்கள் கொடுக்க வேண்டிய பங்குத்தொகை. அதாவது அட்வான்சாக கொடுக்கவேண்டியது 500 ரூபாய். 228 இன்ஸ்டால்மென்டில் 19 வருஷங்களில் மீதி தொகையைச் செலுத்தலாம். ஒவ்வொருவருக்கும் 1,500 ரூபாய் மானியம் என்ற வகையில் செஸ் பண்டிலிருந்து தரப்படுகிறது. செஸ் பண்டு எவ்வளவு அதிகமாக ஆகிறதோ அதைப்பொறுத்துதான் விரிவுபடுத்தும் திட்டம் இருக்கிறது. அந்தத் தொகை அதிகம் ஆகவேண்டும். அதன் பின்னால் நாம் சண்டைபோட்டு, மத்திய அரசிடமிருந்து எவ்வளவு கேட்க வேண்டுமோ அதற்கு இந்த அரசு முயற்சி எடுக்கும்.

உப்பளங்களில் பணியாற்றும் தொழிலாளர்களின் எண்ணிக்கை

*வினா எண் 764—திரு. ஆர். கிருஷ்ணன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1982 ஏப்ரல் 5

(அ) உப்பளங்களில் பணியாற்றும் தொழிலாளர்கள் தமிழ் நாட்டில் எத்தனை பேர்?

(ஆ) அவர்களுக்கு சட்ட ரீதியாக சம்பளம் மற்றும் சலுகைகள் வழங்கப்படுவதில்லை என்பதை அரசு அறியுமா?

(இ) ஆம் எனில் அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) தமிழ்நாட்டில் உப்பளங்களில் பணியாற்றும் தொழிலாளர்களின் எண்ணிக்கை 9,860.

(ஆ) இது சம்பந்தமாக அரசுக்கு எவ்வித புகார்களும் இதுவரை வரவில்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ரா. கிருஷ்ணன்: பேரவைத் தலைவர் அவர்களே, உப்பளத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், குறிப்பாக தூத்துக்குடி பகுதியில் மட்டுமே 10,000க்கும் மேற்பட்டவர்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ள குறைந்த பட்ச சம்பளத்தை விட, அவர்கள் அதிகமாகச் சம்பளம் தற்போது வாங்கிக் கொண்டு இருப்பதால், அந்த குறைந்த பட்ச அளவை 'ரிவைஸ்' செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, கூடுமான வரையில் இந்த அரசு செய்யக்கருதி இருப்பதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் கேட்கவேண்டிய நிலை தற்போது இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது புதிதாகக் குறைந்த பட்ச ஊதியக் குழு அமைப்பதற்கு கமிஷனரிடத்தில் தகவல் கேட்கப்பட்டு இருக்கிறது. அவரிடமிருந்து செயற்குறிப்பு வந்தவுடன் மறுபடியும் அந்த குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயிக்க குழு அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, இந்த உப்பளத் தொழிலாளர்கள் நிரந்தரம் செய்யப்படாமலேயே நீண்ட காலமாக இருக்கிறார்கள். அதன் காரணமாக ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இன்றைக்கு ஒரு உப்பளத்திலும், மற்றொரு நாள் வேறொரு உப்பளத்திலும் என்ற முறையில் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே, அவர்களை நிரந்தரமாக்குவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, அதன் காரணமாகத்தான் எல்லாத் தொழிலாளர்களுக்கும் நல்ல தொழிற்சங்கங்கள் அமைக்கப்படவேண்டும் என்று அரசு சொல்கிறது. All workers should be organised என்று

1982 ஏப்ரல் 5]

கருதுகிறது. எனவே, அத்தகைய நல்ல அமைப்புகளை உருவாக்கி அந்த அமைப்புகளின் மூலமாக தொழிலாளர்கள் தங்களுடைய கோரிக்கைகளை சொல்லி, முதலாளிகள் மட்டத்தில் அதைச் செய்து தரவில்லையென்று சொன்னால், அரசு அதில் ஆவன செய்ய முயற்சிக்கும்.

திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உப்பளங்களில் பணியாற்றும் ஊழியர்களைப் பற்றி ஒரு குழு பரிசீலித்து அறிக்கை அளித்து இருப்பதாக அறிகிறேன். அந்த உப்பளங்களில் பணியாற்றும் ஊழியர்கள் இளம் வயதிலேயே கண் இழந்து விடுவதாகவும், அவர்களுடைய தோற்றம் விகாரமாக ஆகிவிடுகிறது என்றும் சொல்லப்படுவதை அரசு அறியுமா? ஆகவே, இத்தகைய முறையில் பணியாற்றும் அவர்களுக்கு 6 நாள் பணியாற்றியபின், 7-வது நாள் ஊதியத்தோடு கூடிய விடுமுறை கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, இதற்குத் தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் விளக்கமாகத் தரப்படும்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்: தலைவர் அவர்களே, உப்பளங்களில் வேலை பார்க்கும் தொழிலாளர்கள் கடற்கரையில் அதிகமாக இருப்பதால், அவர்களுக்குக் கண் போய்விடுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் ஏற்கனவே சொன்னது முழுக்க முழுக்க உண்மை. அவர்களுக்குக் கண் பார்வை போய்விடுவதோடு மட்டுமல்லாமல், தோல் வியாதியும் அவர்களுக்கு வந்து அவதிப்படுகிறார்கள். ஆகவே, அந்த உப்பள முதலாளிகளிடத்தில் அரசாங்கம் சொல்லி, அத்தகைய தொழிலாளர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, உப்பளங்களில் வேலை செய்பவர்களுக்கு கண் பார்வை போய்விடுவது உண்மையா? தோல் வியாதியால் பாதிக்கப்படுவது உண்மையா? அப்படியானால் என்ன நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து இருக்கிறது, என்ற கேள்வியை மாண்புமிகு உறுப்பினர்கள் தனியாகக் கேட்டால், அதற்குப் பின்னால் தகவல் சேகரித்து நான் பதில் தருகிறேன்.

திரு. டி. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே தாமரைக்குளம் என்ற பகுதியில் சுமார் 200-க்கும் அதிகமான தொழிலாளர்கள் உப்பளங்களில் பணியாற்றுகிறார்கள். அவர்களுக்கு அரசாங்கம் நிர்ணயித்து இருக்கும் குறைந்தபட்ச கூலி கொடுக்கப்படவேண்டும் என்று நிலைமைகள் இருந்தும், அது கொடுக்கப்படவில்லை. ஆகவே, அவர்களுக்கு அந்தக் கூலியைக் கிடைக்கச் செய்யும் வகையில் நடவடிக்கைகளை எடுக்குமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, குறைந்தபட்சக் கூலியை கொடுக்கவேண்டும் என்பது கட்டாயம். எனவே குறைந்தபட்சக் கூலி எங்காவது கொடுக்கப்படவில்லை என்று புகார் வந்தால், உடனடியாக அதைப் பற்றி பரிசீலித்து, நடவடிக்கை எடுக்கவேண்டும் என்கிற வகையில் அதற்காக ஒரு டி. சி. எல். (மினிமம் வேஜெஸ்) நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆகவே, அவர் மூலமாக இந்தத் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்சக் கூலி கிடைக்கச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கெ. சொக்கலிங்கம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறைந்தபட்சக் கூலி கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். அது எந்த அளவிற்குக் கொடுக்கப்படுகிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா? அது எந்த அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, குறைந்த பட்சக் கூலி நிர்ணயிப்பதற்கு இரண்டு வகைகள் இருக்கின்றன. ஒன்று-நோட்டிபிகேஷன். அதாவது—ஒரு முடிவை எடுத்து, அதை நோட்டிபை செய்து, அதற்கு யாரிடமிருந்தாவது அப்ஜெக்ஷன் வருகிறதா என்று பார்த்து, அதற்குப் பின்னாலே அந்த முடிவை கன்பர்ம் செய்வது. இன்னொன்று, குழு அமைப்பது. அந்தக் குழு செய்கிற பரிந்துரையின் அடிப்படையில் அதை அமல் படுத்துவது என்பதாகும். ஏற்கனவே, உப்பளத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்சக் கூலி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அது நிர்ணயித்து நான்கு ஆண்டுகாலம் ஆகிவிட்ட காரணத்தால்,

மீண்டும் ஒரு குழு அமைக்க எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. கமிஷ்னரிடத்திலிருந்து தகவல் கிடைக்கப்பெற்றவுடன், புதியதாகக் குழு அமைக்கப்படும். அந்தக் குழுவின் பரிந்துரை வந்த பிறகு அது கட்டாயம் செயல்படுத்தப்படும்.

மத்திய அரசு இயற்ற உத்தேசித்திருக்கும் கட்டிடக் கட்டுமானத் தொழிலாளர் வரைவுச் சட்டம்

*வினா எண் 765—திரு என். எஸ்.வி. சித்தன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா.—

மத்திய அரசு இயற்ற உத்தேசித்திருக்கும் கட்டிடக் கட்டுமானத் தொழிலாளர் மத்திய வரைவுச் சட்டம் 1980-ன் பேரில் மாநில அரசு தெரிவித்துள்ள கருத்துக்கள் எவை?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: ஒரு விவர அறிக்கை *அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

(முற்பகல் 9-40)

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15, 16 தேதிகளில் டெல்லியிலே நடைபெற்ற தொழிலாளர் நல அமைச்சர்கள் கூட்டத்திலே இந்தச் சட்டத்தைப் பெரிதும் வரவேற்று தமிழக அரசு தெரிவித்திருக்கின்ற கருத்துக்களிலே ஏறத்தாழ 5 கருத்துக்களைப் பற்றி இங்கே விவர அறிக்கை வைக்கப்பட்டிருக்கின்றது. இந்த 5 கருத்துக்களின் மீது மத்திய அரசு தெரிவித்திருக்கின்ற கருத்துக்கள் எவை? இவற்றை மத்திய அரசு ஏற்றுக் கொண்டதா? அதற்குப் பின்னர் அவர்கள் அளித்த பதில் பற்றிய விவரம் என்ன?

மாண்புகுமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறதா, இல்லையா என்பது தெரியவில்லை. ஆனால் மத்திய அரசால் உருவாக்கப்பட்டிருக்கின்ற சட்டத்தில் நல்ல சிறப்பான அம்சங்கள் இருக்கின்றன. எனவே மத்திய அரசு தன்னுடைய சட்டத்தைக் கொண்டு வந்து அமல் படுத்தினால் அது எப்படி அமல்படுத்தப்படுகின்றது, எப்படி தொழிலாளர்களுக்குப் பலன் அளிக்கின்றது என்று பார்த்து அதிலே குறை இருந்தால் மாநில அரசு என்னென்ன திருத்தங்கள் செய்யவேண்டும் என்பதை மத்திய அரசிடம் மீண்டும் வலியுறுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

345-ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப் பெற்றுள்ளது.

[1982 ஏப்ரல் 5

திரு. என். எஸ். வி. சித்தன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் இருக்கின்ற இந்தக் கட்டிடம் மற்றும் கட்டுமனத் தொழிலாளர்களின் எண்ணிக்கை பற்றிய விவரம அரசிடம் இருக்கின்றதா? சில நாட்களுக்கு முன்பு தமிழக அரசே இந்த மாதிரி உடல் உழைப்புத் தொழிலாளர் பற்றிய சட்டம் கொண்டுவந்ததாக அறிகிறேன். அதிலே இந்தக் கருத்துக்கள் முழுமையான அளவுக்கு இடம் பெற்றிருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, மத்திய அரசு ஒரு சட்டம் நிறைவேற்றிக் கொண்டுவர இருக்கின்றது. இந்த அரசைப் பொறுத்தவரையிலே அதிலே நாங்களும் பரிந்துரை கொடுத்திருக்கிறோம். அதிலே எல்லா அம்சங்களும் இருக்கும் என்று கருதுகிறோம். ஆனால் துரதிஷ்டவசமாக மத்திய அரசு அந்தச் சட்டத்தைக் கொண்டு வராவிட்டால் எல்லா அம்சங்களையும் உள்ளடக்கிய சட்டத்தைத் தயார் செய்து இந்த அரசு வைத்துக் கொண்டிருக்கின்றது. எனவே மத்திய அரசு தவறினால் அல்லது அதிலே காலதாமதமானால் மாநில அரசே இதுபற்றிய சட்டத்தைக் கொண்டு வந்து இதே அவையிலே அறிமுகப்படுத்தி, நிறைவேற்றுவதற்கு எல்லா முயற்சிகளும் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்-

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மத்தியச் சட்டத்திலே இழப்பீட்டுத் தொகை அளிப்பதற்கு வசதி செய்து அதற்கான வழிவகை செய்யப்பட்டிருக்கின்றதா? அதேபோன்று மாநில அரசு தயாரித்திருக்கின்ற சட்டத்திலேயும் இது உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே சொல்லும்போது மத்திய அரசு கொண்டுவந்திருக்கின்ற சட்டம் நன்றாக இருக்கின்றது என்று சொன்னேன். தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பாக இருக்கின்றது. கட்டுமானப் பணியாளர்களுக்கு அவர்தம் நிறுவனத்தினர் ஈட்டுறுதி வசதி அளிக்கவும் விபத்துக்கள் நேரிடின் இழப்பீடு வழங்கவும் அந்தச் சட்டம் உறுதியளிக்கின்றது. எனவே தொழிலாளர்கள் சிறைக்குப்போகும் வரை போராடியபோது கூட இழப்பீடு தருவதற்கு மத்திய அரசு சட்டத்திலே இடம் இருக்கின்றது, எனவே அருள் கூர்ந்து அந்தச் சட்டம் வரும் வரை காத்திருங்கள். போராட்டதைத் நிறுத்துங்கள் என்று சொன்னேன். எனவே இழப்பீடு தர அச்சட்டத்திலே இடமிருக்கிறது.

1982 ஏப்ரல் 5]

நொய்யல் ஆற்றிலிருந்து மின் பம்பு செட் மூலம் தண்ணீர் இறைக்க அனுமதி வழங்கும் திட்டம்.

*வினா எண் 766 திரு ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி; மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நொய்யலாற்றில் தண்ணீர், ஆயில் என்ஜின் மூலம் எடுக்கும் விவசாயிகளுக்கு மின் பம்புசெட் மூலம் தண்ணீர் எடுத்துக்கொள்ள அனுமதி வழங்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது. இதுபற்றி அரசு பரிசீலனை செய்துவருகிறது.

திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நொய்யலாற்றில் தண்ணீர் ஆயில் என்ஜின் மூலம் எடுக்கும் விவசாயிகளுக்கு டீசல் கிடைக்காத காரணத்தாலும், டீசலின் விலையேற்றத்தாலும் அவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே அதைக் கருத்தில் கொண்டு விரைவில் அவர்கள் பம்ப்செட் வைத்துக்கொள்வதற்கு அனுமதி வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே அது குறித்து அரசு ஆய்வு செய்து கொண்டிருக்கின்றது.

திரு. கோவைத் தம்பி. மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, நொய்யலாறு, அமராவதியாறு போன்ற பகுதிகளில் கோவை, பெரியார் மாவட்டத்தில் பல்லாயிரக்கணக்கான சிறு விவசாயிகள் பல ஆண்டுக்காலமாக அன்-ஆதரைஸ்ட் மோட்டார்ஸ் என்ற வகையிலே அந்த மோட்டார்களை வைத்துக்கொண்டு தண்ணீர் இறைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கையிலே ஒளி ஏற்றும் விதத்தில் சேலம் மாவட்டத்தில் திருச்செங்கோடு பகுதியில் கூட்டுறவு முறையில் அமைக்கப்பட்டிருக்கின்ற இந்த மின் விசை மோட்டார்களுக்கு அரசு அங்கீகாரம் கொடுத்திருக்கின்றது, அதே நிலையினை அமராவதி, நொய்யலாற்றிலும் ஏற்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததுபோல் 1950 ஆம் ஆண்டில் உணவு உற்பத்தி இயக்கம் காரணமாக பல்வேறு பகுதிகளில் இப்படி அங்கீகாரம் பெறாமலேயே பாசனவசதியை அவர்களாகவே செய்து கொண்டிருக்கக்கூடிய நிலைமையை ஒவ்வொரு கட்டத்திலும் அரசாங்கம் முறைப்படுத்தியிருக்கிறது. அதன்படி 1955 இல் ஒரு முறையும் 1962-ல் ஒரு முறையும் அவைகளை முறைப்படுத்தி அனுமதி கொடுத்திருக்கிறோம். அதற்குப் பிறகும் இப்போது பல்வேறு பகுதிகளில், குறிப்பாக நொய்யலாறு, அமராவதிப் பகுதிகளில், இது முறைப்படுத்தப்பட வேண்டுமென்று விவசாயிகள் பெரிய அளவிற்கு அரசுக்கு விண்ணப்பித்திருக்கிறார்கள். அரசாங்கம் ஏற்கனவே சேலம்

[1982 ஏப்ரல் 5

மாவட்டத்தில் ஒரு முடிவை எடுத்ததைப்போல் இதையும் செய்யலாமா என்பதை இப்போது மனிதாபிமானத்தோடு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது.

திரு. தி. கா. நல்லப்பன்: இந்த நோய்யலாற்றிலிருந்து தண்ணீர் எடுத்துக்கொள்வதற்கு மாண்புமிகு நீர்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் மனிதாபிமானத்தின் அடிப்படையில் பரிசீலிப்பதற்காகக் கூறினார்கள். இருந்தாலும் சில சந்தர்ப்பங்களில் வருவாய்த் துறை அதிகாரிகள் நிர்ப்பந்தமாக அந்த விவசாயிகளுக்கு பல்வேறுவிதத்தில் இடையூறாக இருக்கிறார்கள். ஆகவே அதையும் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: இதுவரை நிர்ப்பந்தித்து அல்லது அவர்கள் நீரேற்று பாசன முறைகளைக் கையாளக் கூடாது என்று சட்டப்படி தெரிவித்தாலும் அதையும் மீறி விவசாயிகள் இப்போது நீரைப் பயன்படுத்தி வருகிறார்கள். அதற்காக, பயன்படுத்தக்கூடாது என்று கடுமையான நடவடிக்கைகள் எடுப்பதில்லை. ஒரு பெவல்ட்டி மாதிரி, ஒரு குறிப்பிட்ட தொகை வசூல் செய்கிறோம் என்றளவிற்கு இருக்கிறதே தவிர அந்த நீரை எடுத்துக்கொள்ளக்கூடாது என்று இதுவரை கட்டாயப்படுத்தவில்லை. இருந்தாலும் அதையும் முறைப்படுத்திவிடலாமா என்பதுபற்றி இப்போது அரசாங்கம் ஆலோசித்துக்கொண்டிருக்கிறது.

பாசன வாரியம் அமைக்கும் திட்டம்.

*வினா எண் 767—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குளங்கள், ஏரிகள், அணைக்கட்டுகள் ஆகியவைகளின் பாசன வசதிகளை ஒழுங்குபடுத்த பாசன வாரியம் அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது. பாசன வாரியம் என்ற தனிப்பட்ட அமைப்பை ஏற்படுத்தலாமா என்பது குறித்து அரசு ஆய்வு செய்து வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி: கடல் நீரைக் கொண்டு பாசனம் செய்யலாம என்று சோவியத் யூனியன் விஞ்ஞானிகளும் ஜப்பான் நாட்டு விஞ்ஞானிகளும் ஆராய்ச்சி செய்து அறிவித்திருக்கிறார்கள். அதன்படி, கடல் நீரைக்கொண்டு பாசனம் செய்யும் முறையை இந்த வாரியம் மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: வாரியம் இன்னும் வரவில்லை. அது வந்ததற்குப் பிறகு அதைப் பற்றி யோசிக்கலாம்.

திரு. இரா. தாமரைககனி: காவிரியையும் கங்கையையும் இணைக்கும் திட்டத்திற்கு முன்னோடியாக குறைந்தபட்சம் தமிழ்நாட்டிலுள்ள ஆறுகள் அனைத்தையும் இணைக்கும் திட்ட பரிசீலிக்கப்படுமா?

1982 ஏப்ரல் 5]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மூலக் கேள்வி பாசன வாரியம் அமைப்பது பற்றியது.

திரு. என். பழனிவேல்: குளங்கள், ஏரிகள், அணைக்கட்டுக்கள் போன்றவைகளை இணைத்து வாரியம் அமைக்கக்கூடிய யோசனை அரசின் பரிசீலனையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இந்தக் குளங்கள், ஏரிகள் போன்ற பகுதிகளில் காட்டு இலாகாவினர் கன்றுகளை நட்டு அவை சிலயிடங்களில் பெரிய மரங்களாக ஆகிவிட்டன. இதனால் கண்மாய்களில் சகதி, மற்றும் குப்பைக் கூளங்கள் போய் தங்கி அங்கே தண்ணீர் தேங்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. அதை துப்புரவு செய்யமுடியாததொரு நிலை இருக்கிறது. அவ்வளவு அடர்த்தியான மரங்கள் இருக்கின்றன. ஆகவே இப்படிப்பட்ட மரங்கள் குளங்கள் ஏரிகளில் இருப்பதை தடுத்துநிறுத்த இந்த அரசு முயற்சியெடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: கேள்வி, பாசன வாரியம் அமைப்பது பற்றியது. தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்ல வசதியாக இருக்கும்.

திரு. பொ. உத்திராபதி: இந்த குளங்கள், ஏரிகள், அணைக்கட்டுகள் ஆகியவைகளின் பாசன வசதிகளை ஒழுங்குபடுத்த ஒரு பாசனவாரியம் அமைக்க இருப்பதாக, அது பற்றி ஆய்வு செய்து வருவதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இப்படி நல்ல காரியத்திற்காக அமைக்கப்படும் அந்த வாரியம் எப்போது அமைக்கப்படும்? அப்படி அமைத்ததற்குப் பின்னால் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்று அந்தந்த மாவட்டங்களில் உள்ள ஏரிகள், குளங்கள் இவற்றின் பாசன வசதி மற்றும் விவரங்களை தயார் செய்து குறிப்பிட்டதொரு காலத்திற்குள் முடிக்க அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்குமா?

[முற்பகல் 9.50]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாரியம் அமைப்பதினுடைய முக்கியமான நோக்கத்தைச் சொல்ல விரும்புகிறேன். இப்போது சில விதி முறைகளை வைத்துக்கொண்டு, பொருளாதார ரீதியாக கட்டுப்படியாகக்கூடிய ஒரு அடிப்படையை வைத்துக்கொண்டு, துறை செய்யக்கூடிய திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருக்கிறோம். வறட்சி ஏற்படும் சூழ்நிலையைப் பார்க்கின்ற போது, அந்தந்தப் பகுதிகளில் இந்த விதிமுறைகள் பின்பற்றப்படுவதில்லை. மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதிகளில் இந்தத் திட்டங்களை நிறைவேற்றுகின்றபோது, லாப நஷ்டக் கணக்குகளைப் பார்க்காமல், நமது அரசு அவ்வப்போது சில முக்கியமான திட்டங்களை துறையோடு சேர்த்து செய்வதற்கு பார்க்கின்ற

போது காலதாமதம் ஏற்படலாம். அல்லது அதற்கு அதிகமான அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்கின்றபோது, ஒவ்வொரு பட்ஜெட்டிலும் அதற்கு நிதி ஒதுக்குகின்ற சூழ்நிலை அதிகம் இல்லாமல் இருக்கலாம். இதற்கு ஏ.ஆர்.டீ.சி. நிதி நிறுவனத்திடமிருந்து நிதி பெற்று முக்கியமான சில வேலைகளை, இந்த வாரியம் எடுத்துக்கொண்டால், துறை ஏற்கனவே கவனித்தும் வரக்கூடிய வேலைகளைத் துரிதப்படுத்துவதற்கு இது வாய்ப்பாக இருக்கும். பல்வேறு அம்சங்களை உள்ளடக்கி, வாரியம் அமைக்கின்றபோது, அடுத்த அமைச்சரவை கூட்டத்திலே இது பற்றி விவாதிக்கப்படும். நீங்கள் கூறிய பல்வேறு விஷயங்களை, அந்தக் கூட்டத்திலே பரிசீலனை செய்து முடிவெடுக்கப்படும்.

திரு. உ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, குளங்கள், ஏரிகள், அணைக்கட்டுகள் ஆகியவைகளில் பாசன வசதியை ஒழுங்குபடுத்துவதற்கு, ஒரு வாரியம் அமைப்பது நல்லதென்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். எங்கள் பகுதி வறண்ட பகுதியாக இருக்கிறது. அந்த வறண்ட பகுதிகளில் அதிகமாகக் கண்மாய்கள், குளங்கள், குட்டைகள் இருக்கின்றன. இன்னும் பல ஆண்டுகள் ஆனாலும், இப்படிப்பட்ட சீர்திருத்தங்களைச் செய்வதற்கு வாய்ப்பில்லை, ஆகவே, இந்த வாரியம் அமைப்பதன் மூலம் இவைகளைச் சீர்திருத்தம் செய்ய முடியும். அதை உடனடியாகச் செய்ய அரசு முன்வருமா? அல்லது தற்போது நீர்ப்பாசன குழுவின் மூலம் அமைச்சர் அவர்கள் ஆலோசனை பெற்று, அதை மேலும் வலுப்படுத்தி, இந்தப் பாசன வசதிகளைப் பெறுவதற்கு, விவசாயிகளுக்குத் துணை புரியுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே என்னுடைய தலைமையில் இப்போது சட்டமன்ற பேரவை, மேலவை உறுப்பினர்களைக் கொண்ட பாசன ஆலோசனைக் குழு செயல்பட்டு வருகிறது. இக்குழு தமிழ்நாட்டில் பாசனம் சம்பந்தப்பட்ட விஷயங்கள்பற்றி அரசுக்கு யோசனை கூறும் அளவிலே ஒரு அமைப்பாக இருக்கிறதே தவிர, பெரிய அதிகாரம் அதற்கு ஒப்படைக்கப்படவில்லை. அதனால்தான், முழு அதிகாரத்தையும் பெற்ற ஒரு வாரியம் அமைக்கப்பட்டால், முக்கியமாக நீங்கள் சொல்லக்கூடிய வறண்ட பகுதி, பிற்படுத்தப்பட்ட பகுதி, பின்தங்கிய மாவட்டம் ஆகியவைகளைப் பார்த்து, அதிலே தனிக் கவனம் செலுத்த முடியும். அந்த வாரியத்தை அமைப்பது பற்றி நாம் யோசித்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பாசன வசதி வாரியம் அமைப்பதன் மூலமாக, நாம் எவ்வளவு செலவழிக்கிறோமோ, அதைத் திரும்பப் பெறுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். பாசனத்திற்காக குளங்கள், ஏரிகளை நாம் அமைப்பதற்கு செலவழிக்கும் தொகையை எப்படித்

திரும்பப் பெற முடியும்? ஆகவே, அதைச் செய்வதற்கு அரசே வாரியத்திற்கு நிதி ஒதுக்கி வருமா அல்லது எப்படி வாரியம் செயல்படும் என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி நிறுவனங்களிடமிருந்து உதவி பெறவேண்டுமென்று வருகின்றபோது, நிச்சயமாக திருப்பிச் செலுத்தக்கூடிய தகுதியையும் உருவாக்கிக் கொள்ளும் அந்த வாரியம். ஏற்கனவே, ஓராண்டிற்கு கிட்டத்தட்ட 30, 40 கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்கிறோம்; அப்படிச் செய்தாலும் கூட, நாம் விரும்புகின்ற அளவுக்கு எல்லா இடங்களிலும் பிரச்னையைத் தீர்க்க முடியவில்லை; வாரியம் அமைக்கப்படுகின்றபோது, உதாரணமாக ஒரு குறிப்பிட்ட குளத்தை நாம் ஸ்டாண்டர்டைஸ் செய்கிறபோது, கரைகளை ஓரளவு ஆழப்படுத்தி, மதகுகளை மாற்றிக் கட்டுகிறபோது, கிட்டத்தட்ட 1000 ஏக்கர்கள் கூடுதலாகப் பாசன வசதியைப் பெறுகிறபோது, அந்தப் பகுதியிலே பாசன வசதியைப் பெறக்கூடியவர்கள் ஒரு தொகையை அரசுக்கு செலுத்தி, நாம் வாங்கியக் கடனைத் திருப்பிக் கொடுக்கலாம். அதற்கு அரசும் மானியம் கொடுப்பது பற்றி யோசிக்கலாம். அப்படி ஒரு சிஸ்டம் இருந்தால்தான், எல்.ஐ.சி., ஏ.ஆர்.டீ.சி. போன்ற நிதி நிறுவனங்கள் அரசு திட்டங்களுக்கு நிதி உதவி தருவதில்லை; வாரியம் அமைத்துக் கேட்டால், அந்தத் திட்டங்களுக்கு அவர்கள் கடனுதவி, குறைந்த வட்டியில், நீண்டக் காலக் கடன் தருகிறார்கள், அப்போதுதான் இதற்கு வாய்ப்பு ஏற்படும். நிச்சயமாக நீங்கள் கூறிய அந்தக் கருத்துக்களையெல்லாம் கருத்திலே எடுத்துக் கொண்டு, அடுத்துக் கூடும் அமைச்சரவைக் கூட்டத்திலே முடிவெடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பின்னால் சட்டமன்ற உறுப்பினர்களிடம் தங்கள் பகுதிகளிலுள்ள ஏரிகளைப்பற்றிய விவரங்களையெல்லாம் பற்றிய தகவல்களைக் கேட்டு அவர்களும் கொடுத்திருக்கிறார்கள். அதுபற்றி என்ன முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது? குழு அமைத்ததாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் குழுவிலே இது பரிசீலிக்கப்பட்டதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, இதுவரை இந்த ஆண்டுக்குள்ளேயே இரண்டு முறைகள் நீர்ப்பாசன ஆலோசனைக் குழு கூட்டத்தை நடத்தியிருக்கிறார்கள். அதிலே உறுப்பினர்கள் கொடுத்த விஷயங்களைச் சொல்லியிருக்கிறார்கள். இப்போது நாம் எடுத்துக்கொண்டிருக்கிற திட்டங்களில் சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுத்த திட்டங்களில் சிலவற்றிற்கு முன்னுரிமை கொடுத்து பல்வேறு திட்டங்களை எடுத்துக் கொண்டிருக்கிறோம். இன்னும் மற்றத் திட்டங்களை விரைவுபடுத்தவேண்டுமென்று அதிகாரிகள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

திரு. ஜே. எஸ். இராசு : தலைவர் அவர்களே, பாசன வாரியம் அமைக்கப்படும்பொழுது வறட்சியால் காலங்காலமாக பாதிக்கப்பட்ட பகுதியிலிருந்து பொதுமக்கள் பிரதிநிதிகளையும் சட்டமன்ற உறுப்பினர்களையும் இணைத்துக் கொள்கின்ற யோசனை அரசுக்கு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : கூடுமானவரை அந்த யோசனை அரசின் கருத்திலே இருக்கிறது.

சிதம்பரம் பொதுப்பணித்துறை டிவிஷனிலுள்ள புராதனக் கால்வாய்களை நவீன மயமாக்கும் திட்டம்,

*வினா எண். 768—திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் பொதுப்பணித்துறை டிவிஷனில் உள்ள புராதன வாய்க்கால்களை காவிரி டெல்டா நவீனமயமாக்கப்படும் திட்டத்தை நீட்டி நவீனமயமாக்க ஒரு திட்டத்தை தலைமை பொறியாளர் அரசுக்கு பரிந்துரை செய்திருக்கிறாரா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) ரூ. 18.04 கோடி செலவில் கீழ் கொள்ளிடம் அணைக்கட்டு திட்டம் மற்றும் சேத்தியாத்தோப்பு அணைக்கட்டு திட்டங்களின் கீழ் வரும் வாய்க்கால்களை நவீனப்படுத்துவதற்கான திட்டச் சுருக்கம் (Project Brief) தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களால் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. வி. வி. சுவாமிநாதன் : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தரைமேல் ஓடுகிற வெள்ளத் தண்ணீரில் 55 சதவீதம் சிதம்பரம் பொதுப் பணித்துறை டிவிஷன் வழியாகச் செல்கிறது. சேத்தியாத்தோப்பு லோயர் அணைக் கட்டுக்குக் கீழே உள்ள நீர்ப்பாசன வாய்க்கால்கள் எல்லாம் பல நூற்றாண்டுக்காலமாக சரியாக சீரமைக்கப்படாததால் குறுகி, மேடிட்டு வெள்ளம் வந்தாலும் பாதிக்கப்படுகிற நிலையும் வறட்சி வந்தாலும் பாதிக்கப்படுகிற நிலையும் இருப்பதால் செலவில் சிக்கனம் ஆவதையும் பலன் அதிகம் தரக்கூடியதையும் கருதி டீப் அன்ட் டீடெய்ல்டு இன்வெஸ்டிகேஷன் என்ற முறையிலே ஆய்வு செய்யச் சொல்லி விரைவிலே எடுத்துக் கொள்ள அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : இப்போது அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டிருப்பது ப்ராஜக்ட் பிரீப்தான். டீட்டெய்ல்ட் இன்வெஸ்டிகேஷனுக்கு அனுப்ப அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் 2, 3 சந்தர்ப்பங்களில் தலைமைப் பொறியாளரையும் என்னையும் சந்தித்துப் பேசி

விரைவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள் அந்தத் திட்டத்தின் அவசியம் கருதியும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துக்கொள்கின்ற முயற்சியைக் கருதியும் திட்டத்தை விரைவிலே எடுத்துக்கொள்ள அரசு நிச்சயமாக ஆணையிடும்.

திரு. க. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, காவிரி டெல்டாவை நவீனப்படுத்துகின்ற திட்டத்தில் அந்த காவிரி டெல்டாவினுடைய சீப் கன்ட்ரோல், அதைக் கட்டுப்படுத்துகின்ற நிலையம் சிதம்பரத்திலே இருக்கிறது. தெற்கு ராஜன் வாய்க்காலின் தண்ணீர்க் கட்டுப்பாட்டு நிலையமும்கூட சிதம்பரத்தில் இருப்பதால் இந்த காவிரி டெல்டாவை சீரமைப்பது சிரமமாக இருக்கிறது. ஆகவே அதை மாற்றி சீர்காழிக்கோ மாயவரத்திற்கோ கொடுப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : கட்டுப்பாட்டு நிலையம் சிதம்பரத்திலே முறையாக செயல்படுகிறதா இல்லையா என்றுதான் பரிசீலிக்க வேண்டுமே தவிர சிதம்பரத்திலிருப்பதை சீர்காழிக்கோ அல்லது மாயவரத்திற்கோ கொண்டுபோவது பற்றியல்ல. இப்போது அது சரியாக இருக்கிறது. கீழ்க் கொள்ளிடம் அணைக்கட்டு திட்டம், மற்றும் சேத்தியாத்தோப்பு அணைக்கட்டுத் திட்டத்தின் கீழ் வரும் வாய்க்கால்களை நவீனப் படுத்துவதற்காக உள்ள திட்டம் பற்றியது. ஏற்கெனவே அதற்கான புராஜக்ட் ப்ரீப் 18 கோடி ரூபாய் செலவிலே உள்ள திட்டச் சுருக்கத்தை அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே அதிலே இந்தப் பிரச்சினை வராது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 769 மற்றும் 770 ஆகியவை ஒன்றாகச் சேர்த்து எடுத்துக்கொள்ளப் பெறுகின்றன.

தமிழகத்தில் நிறுவப்படவுள்ள காகித ஆலைகள்.

*வினா எண் 769—திரு. செ. செம்மலை, திரு. ஏ. எம். சேதுராமன், திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், திரு. த. வேணுகோபால், திரு. இல. பலராமன், மற்றும் திரு. கு. ரமணி : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சர்க்கரை ஆலைகளிலிருந்து கிடைக்கும் கரும்பு சக்கையைப் பயன்படுத்தி காகிதம் தயாரிக்கும் காகித ஆலைகள் நிறுவும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எந்தெந்த இடங்களில் நிறுவ அரசு உத்தேசித்துள்ளது ?

[1982 ஏப்ரல் 5

* வினா என் 770—திரு. பெ. சு. திருவேங்கடம் : திரு. ப. வெங்கடசுப்ரமணியம் மற்றும் திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் ஆரம்பிக்கப்படவிருக்கும் காகிதத் தொழிற்சாலைக்கு உலக வங்கியில் கடன் கோரப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) மற்றும் (ஆ) தலைவர் அவர்களே. கரும்புச் சக்கையை மூலப் பொருளாகக் கொண்டு ஆண்டிற்கு 50,000 டன் செய்தித்தாளும் 40,000 டன் எழுதுதாளும் உற்பத்தி செய்வதற்காக திருச்சி மாவட்டத்தில் புகளூரில் காகிதத் தொழிற்சாலை ஒன்று நிறுவ அரசு ஆணை பிறப்பித்துள்ளது. திட்டத்தின் மதிப்பு ரூ. 190 கோடியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உலக வங்கி இத்திட்டத்திற்கு இந்திய அரசு, இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி ஆகியவற்றின் மூலம் 100 மில்லியன் அமெரிக்க டாலர் கடனுதவி அளிக்க ஒப்புக்கொண்டுள்ளது. இத்திட்டத்திற்கான நிதி வசதிகள் குறித்து உலக வங்கி மற்றும் இந்திய நிதி நிறுவனங்களுடன் 23-9-1981 அன்று உடன்படிக்கைகள் கையெழுத்திடப்பட்டுள்ளன. இது தவிர மதுராந்தகத்திலே கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு அருகிலே சுமார் ஒரு நாளைக்கு 15 டன் உற்பத்தி செய்யக்கூடிய, 4 கோடி மதிப்பீட்டில் ஆலை ஒன்று நிறுவ செயற்குறிப்பும் நடவடிக்கையிலே இருக்கிறது.

[முற்பகல் 10.00]

திரு. செ. செம்மலை : தலைவர் அவர்களே, இதுபோன்ற காகித ஆலைகள் நிறுவுகிறபோது ஏற்கனவே இருக்கிற சர்க்கரை ஆலைகள் அருகே அமைக்கப்படாமல் தொழில்கள் பரவலாக்கப் படவேண்டுமென்ற அடிப்படையில், இந்த தொழில்கள் பின்தங்கிய பகுதிகளில் இதுபோன்ற காகித ஆலைகளை நிறுவ அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னதைப்போல அந்த பகுதிகள் தொழிலிலே பின்தங்கிய பகுதிதான். ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கிற போது அதற்கு அடிப்படை ஆதாரமாக தேவைப்படுகிற பொருள்கள் போன்றவற்றையும் கவனத்தில் கொண்டுதான் துவக்கப்பட வேண்டும். சுற்றிலும் சர்க்கரை ஆலைகள் நிரம்பி யிருக்கிற அந்த கரூர் பகுதியிலே புகளூரை தேர்வு செய்திருக் கிறோம். இங்கே மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு பக்கத்திலே அந்த இடத்தை தேர்வு செய்திருக்கிறோம்.

1982 ஏப்ரல் 5]

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, இப்போது கரும்பு சக்கையிலிருந்து திருச்சியிலே ஒரு பெரிய ஆலையும், மதுராந்தகத்திலே தினம் 15 டன் காகிதம் உற்பத்தி செய்யக்கூடிய அளவிலே ஒரு காகித தொழிற்சாலையும் ஆரம்பிக்க இருப்பதாக தெரிவித்தார்கள். மதுரை மாவட்டத்தில் நிலக்கோட்டை தாலுக்காவில் இரண்டு பெரிய சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. ஒன்று கூட்டுறவு முறையிலும் மற்றொன்று தனியார் துறையிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நிலக்கோட்டை பகுதி மிகவும் பின்தங்கிய பகுதியாக இருப்பதால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இங்கே இருப்பதால், நிலக்கோட்டை பகுதியிலே அரசாங்கமே காகிதத் தொழிற்சாலை ஒன்றை ஆரம்பிக்க பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, ரூபாய் 190 கோடி மதிப்பீட்டில் அமைய இருக்கிற காகித தொழிற்சாலை இந்தியாவிலேயே முதன்மையான பெரிய தொழிற்சாலையாகும். இதற்கு ஏறக்குறைய ஏழு சர்க்கரை ஆலைகளிலிருந்து கரும்பு சக்கைகள் தேவைப்படுகிறது. மதுராந்தகம் பக்கத்திலே சிறிய அளவிலே 4 கோடி மதிப்பீட்டில் ஆரம்பிக்க இருக்கிறோம். அவைகள் வெற்றி கரமாக அமைந்தால் இதுபோன்று மற்ற இடங்களிலே கரும்பு சக்கையிலிருந்து காகிதம் தயாரிக்க ஆலை நிறுவ முடியும் என்று நிலைமை இருந்தால் அவைகள் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. த. வேணுகோபால் : தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்திலே கரும்பு சக்கையை பயன்படுத்தி காகித ஆலை ஏற்படுத்த வேண்டுமென்று பல மனுக்கள் அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன. வட ஆற்காடு மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம் என்பதைக் கருதி அந்த மாவட்டத்திலே சர்க்கரை ஆலைகள் நிறைய இருக்கின்றன என்பதால் அந்த காகிதத் தொழிற்சாலையை அங்கே ஆரம்பிக்க முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, ஏற்கனவே சொன்னேன். எடுத்துக்கொண்டிருக்கிற தொழிற் சாலைகள் உற்பத்தியை துவங்கிய பின்னாலே மற்ற கோரிக்கைகள் மற்ற இடங்களில் துவங்குவதைப் பற்றி அரசாங்கம் முடிவு செய்ய இயலும்.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, திருச்சிக்கு அருகில் 190 கோடி அளவில் ஆரம்பிக்கவிருக்கும் காகித தொழிற் சாலை கூட்டுறவுத் துறையிலா, அல்லது அரசு நிறுவனமா ? கூட்டுறவு துறையிலே வேலூரில் இருக்கிற மூன்று ஆலைகளையும்,

மற்ற இடங்களில் உள்ள ஆலைகளையும் வைத்து கூட்டுறவுத் துறை மூலமாக, வட ஆற்காடு மாவட்டம் பின்தங்கிய மாவட்டம் என்பதை கருத்தில் கொண்டு, திருப்பத்தூரில் காகித தொழிற் சாலை ஆரம்பிக்க வேண்டுமென்ற நோக்கம் இருப்பதால் அந்த மாவட்டத்தில் ஒரு கூட்டுறவு காகித் தொழிற்சாலை ஆரம்பிக்க அரசு பரிந்துரை செய்ய முன்வருமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் என்கிற பெயராலே அரசு நிறுவனமாகத்தான் அந்தத் தொழிற்சாலை அமைய இருக்கிறது. வட ஆற்காடு மாவட்டத்தைப் பற்றித்தான் ஏற்கனவே இன்னொரு உறுப்பினரும் கேட்டார். இப்பொழுது ஜாயின்ட் செக்டாரிலே ஒரு தொழிற்சாலையும், மதுராந்தகம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையின் பெயரிலே ஒரு தொழிற்சாலையும், தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் என்ற பெயராலே ஒரு தொழிற்சாலையும் இந்த மூன்றும் முடிவு பெற்று உற்பத்தியைத் தொடங்கியதற்குப் பிறகு மற்ற இடங்களிலே புதியதாக தொழிற் சாலை தொடங்குவதைப் பற்றி அரசு பரிசீலிக்க முடியும்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, இந்தத் தொழிற் சாலை அரசாங்கத் துறையிலே அமைக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது நல்லது, வரவேற் கத்தக்கது. இது பெரிய தொழிற்சாலையாக அமைந்திருக் கின்றது. ரூ. 195 கோடி மூலதனத்தில் ஆரம்பிக்கப்பட இருக்கிறது என்றால், இன்னும் கொஞ்சம் விஸ்தரிக்க, பெரிதாக ஆரம்பிக்க வழி இருக்கிறது. இதிலே, எத்தனை இலட்சம் டன் காகிதம் நியூஸ்பிரின்டாக உற்பத்தியாகும் ? மற்ற ரகமான காகிதங்கள் எவ்வளவு உற்பத்தியாகும் ? நம்முடைய நாட்டிலே நியூஸ்பிரிண்ட் ரொம்பக் குறைவாக இருக்கிறது. அதனாலே நியூஸ்பிரின்ட் விலை அதிகமாகி பத்திரிகைகளுக்கும் விலை அதிகமாகி, சிறுசிறு பத்திரிகைகள்கூட நடத்த முடியாத நிலைமை இருக்கும்போது. நியூஸ்பிரின்ட் உற்பத்திக்கு முதன்மை ஸ்தானத்தைக் கொடுத்து, அதை அதிகப்படியாக உற்பத்தி செய்ய இந்தத் தொழிற்சாலையிலே ஏதாவது திட்டம் இருக்கிறதா என்று அறிய விருப்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டொன்றுக்கு 50,000 டன் செய்தித் தாள், 40,000 டன் அச்சிடும் தாள் உற்பத்தி செய்வது என்கிற அளவிலேதான் அந்த நிறுவனம் அமைய இருக்கிறது. எனவே, நியூஸ்பிரின்ட் — செய்தித்தாள் காகிதத்தைத் தயாரிக்க முன்னுரிமை கொடுத்துதான் அதைக் கவனத்திலே கொண்டுதான் இந்தத் தொழிற்சாலை துவங்கப்பட இருக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் காகித ஆலைக்காக, உலக வங்கியிடம் கோரப்பட்டிருக்கிற கடன் தொகை எவ்வளவு ? உலக வங்கி கடன் கொடுக்க ஒப்புக் கொண்டிருக்கிறதா ? இந்த வங்கியினுடைய ஆலோசகராகத் தனியார் ஒருவரை நியமிப்பது ஏன் ? அதனுடைய அக்ரிமென்ட் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நான் ஏற்கனவே சொன்ன பதிலை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனிக்கவில்லையென்று நான் கருதுகிறேன். உலக வங்கி 100 மில்லியன் டாலருக்கு ஒத்துக் கொண்டு விட்டது. 23–9–1981 லே அதற்கான அக்ரிமென்ட் போடப்பட்டிருக்கிறது என்று நான் ஏற்கனவே சொன்னேன். தனியாரை அதன் தலைவராகப் போட்டிருப்பதைப் பற்றி ஏற்கனவே சட்ட சபையிலே பலமுறை விவாதிக்கப்பட்டிருக்கிறது. டெக்னோகிராட் என்கிற முறையிலே ஏற்கனவே அவருக்கு இருக்கிற தொழில் நுட்ப அறிவைப் பயன்படுத்தி, அந்த ஆலையை முழுமையாகச் செம்மையாகக் கொண்டு வர வேண்டு மென்பதற்காக, அவருடைய ஆலோசனைகள் பெறுவதற்காக, அவரைத் தலைவராகப் போட்டிருக்கிறோம் என்பதைப் பல நேரங்களிலே இந்த மன்றத்திலே எடுத்துச் சொல்லியிருக் கிறோம்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மொத்தம் எவ்வளவு காகிதம் தேவைப்படுகின்றது? தமிழகத்தில் துவங்க இருக்கிற இத்தொழிற்சாலை எவ்வளவு உற்பத்தி செய்ய இருக்கிறது என்பதையும் இந்த ஆலை கூட்டுறவுத் துறையிலே ஆரம்பிக்கப்பட இருக்கிறதா, ஜாய்ன்ட் செக்டாரிலே ஆரம்பிக்கப்பட இருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு உறுப்பின ருடைய கேள்விக்கு ஏற்கனவே பதில் சொல்லிவிட்டேன். 50,000 டன் செய்தித்தாளுக்காகவும், 40,000 டன் எழுது தாளுக்காகவும் திட்டமிடப்பட்டிருக்கிறது என்று ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். இன்றையதினம் இந்திய நாடு முழுமைக்கும் இதைப் போல் பத்திரிகை பேப்பரானாலும் அல்லது எழுதுத்தாள்களானாலும் அதிகமாக தேவைப்படுகிறது. இறக்குமதி செய்யப்படுகிற நிலைமையிலே இருக்கிறது. எனவே, மத்திய அமைச்சர் திவாரி அவர்கள் கூடச் சொன்னார்கள். இதை நாங்கள் முன்மாதிரியாக எடுத்துக் கொண்டிருக்கிறோம். இது வெற்றிகரமாகச் செய்யப்பட்ட பிறகு. இந்த டெக்னாலஜியை எல்லாம் பயன்படுத்தி, உத்தரப் பிரதேசத்திலேகூட இதுபோன்ற ஆலை அமைக்க வேண்டும். இதற்காகத் தமிழக அரசு உதவி செய்ய வேண்டும். இதை நீங்கள் விரைவாக அமுல் செய்ய வேண்டுமென்று மத்திய தொழில் துறை அமைச்சர் என்னோடு

பேசுகிறபொழுதும் அதைப் போல் முதலமைச்சரிடமும் சொல்லி யிருக்கிறார்கள். அந்த அளவுக்குக் கூட இது இருந்து கொண்டிருக்கிறது. செய்தித்தாள் காகிதத்திற்கான தேவைகள் இந்திய நாடு முழுவதும் மிக அதிகமாக இருக்கிறது.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புகளூரில் அமைய இருக்கிற இந்தத் தொழிற் சாலைக்கு 7 சர்க்கரை ஆலைகளிலிருந்து கரும்பு சக்கையைப் பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் அவர்கள் கூறியுள்ளார்கள். அந்த 7 சர்க்கரை ஆலைகள் எது எது என்பதை அறிவிப்பார்களா? அடுத்து, இந்த ஆலைக்கு உலக வங்கியிடமிருந்து கடனாகப் பெறப்படுகிறது என்று அமைச்ச ரவர்கள் அறிவித்தார்கள். இந்த உலக வங்கியில் பெறக்கூடிய கடனுக்கு நாம் செலுத்த வேண்டிய வட்டிவிகிதம் என்ன என்பதையும் அறிவிப்பார்களா?

(முற்பகல் 10.10)

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சக்தி சுகர்ஸ், டெக்கான் சுகர்ஸ், டெக்கான் சுகர்ஸ் அண்டு அக்பரி லிமிடெட், சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை, தர்மபுரி மாவட்டக் கூட்டுறவு சர்க்கரை ஆலை, பெரம்பலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை மற்றும் காவேரி சுகர்ஸ் அண்டு கெமிகல்ஸ் லிமிடெட் போன்ற தொழில்களில், அதே போன்று தனியார் துறையிலே இன்னும் சில தொழிற்சாலைகளிலே கூட அந்தப் பகுதிகளிலே கேட்டு மனுக்கள் வந்திருக்கின்றன. அந்த ஆலைக்கு வேண்டிய கரும்புச் சக்கைகளைத் தர ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. வட்டி விகிதம் பற்றி என்னிடத்திலே குறிப்பில்லை. அதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினரவர்கள் தனியாகக் கேட்டால் பதில் சொல்கிறேன். கடன் அளவைப்பற்றித்தான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவரவர்களே, கியூ சி பிராசஸ் மூலம் உலகத்தில் எங்கே யாவது நியூஸ்பிரின்ட் தயாரித்திருக்கிறார்களா? வெறும் காகிதம் கூடச் செய்வது சிரமம் என்று நிபுணர்கள் சொல்வது சரியா? காகித ஆலை நிறுவுவதற்கு .00 கோடி என்று இருந் தது இப்பொழுது 200 கோடி என்று உயர்ந்திருப்பதற்குக் காரணம் என்ன? அந்நியச் செலாவணியில் இதன் மூலம் ஏதாவது இலாபம் உண்டா என்று தெரிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்ரகசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே. சென்ற ஆண்டு தொழில் துறை மானியக் கோரிக்கையில் பேசுகின்ற பொழுது மாண்புமிகு எதிர் கட்சித் தலைவர் கலைஞர் அவர்களும் நீங்கள் கேட்ட இதே சந்தேங்களையெல்லாம் கேட்டார்கள். இதே மன்றத்திலே அப்பொழுதும் பதில்களெல்லாம் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆகவே, இன்றைய தினம் மத்திய அரசு இவற்றையெல்லாம் பரிசீலித்த பின்னாலேதான் ஒப்புக் கொண்டிருக்கிறது. உலக வங்கி 90 கோடி ரூபாய் பணத்தைச் சாதாரணமாக யாரும் கேட்கிறார்கள் என்பதற்காக, யாருடைய தாட்சண்யத்திற் காகவும் 90 கோடி ரூபாயை உலக வங்கி தராது? ஆகவே, கரும்புச் சக்கையைக் கொண்டு வெற்றிகரமாகக் காகித ஆலையை நிர்வகிக்க முடியும் என்பதெல்லாம், ஐ. டி. பி. ஐ., மைய அரசு, உலக வங்கி ஆகியவையெல்லாம் ஆய்வு செய்து இங்கு வந்து இடத்தைப் பார்த்து, இந்த டெக்னாலஜிகளை யெல்லாம் ஒப்புக்கொண்ட பிறகுதான் இந்த, அக்ரிமெண் டெல்லாம் போடப்பட்டிருக்கிறது.

*வினா எண்771– திரு பெ. சு திருவேங்கடம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பார..-

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் தொழில் வளர்ச்சிக் கழகம் தனியார் கூட்டில் காகிதத் தொழிற்சாலை ஆரம்பிக்க உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன?

(இ) எவ்வளவு முதலீட்டில்?

(ஈ) ஆண்டு உற்பத்தி திறன் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) ஆம்

(ஆ) தென்னாற்காடு மாவட்டத்தில் பன்ருட்டி தாலுக்கா வில், வடகுத்து கிராமத்தில் காகித உற்பத்தி செய்யும் ஒரு தொழிற்சாலை கங்கப்பா காகித ஆலை என்ற பெயரில் திரு. டி. ஜி. கிருஷ்ணமூர்த்தி என்பவரோடு கூட்டுத்துறையில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தால் நிறுவப்பட்டு இயங்க இருக்கிறது.

(இ) இது சுமார் ஐந்தரை கோடி மதிப்பீட்டிலே நிறுவப் பட்டு வருகிற தொழிற்சாலை.

(ஈ) 10,000 டன்கள் ஆண்டுக்கு உற்பத்தியாக இருக்கும். சுமார் 500 பேருக்கு வேலைவாய்ப்பு கிட்டும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, பண்ருட்டி தாலுக்காவிலே இப்படியொரு ஆலை ஆரம்பிப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள், அதேபோன்று, வடாற்காடு மாவட்டத்தில் பேரூர் பகுதியில் ஏராளமான மூங்கில்கள் கிடைக்கின்றன. அங்கே அதுபோன்ற காகித ஆலையை ஆரம்பிப்பதற்கு அரசு ஆய்வு செய்யுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் மூன்றுபேர் வடாற்காடு பற்றிக் கேட்கிறார்கள். வடாற்காடு மட்டுமல்ல: தமிழகத்திலே உள்ள எல்லா மாவட்டங்களிலேயும் இதேபோன்று பல தொழிற்சாலைகள் வந்தால் நல்லது தான். ஆனால் எடுக்கப்பட்டிருக்கின்ற இந்த மூன்று தொழிற்சாலைகளும் வெற்றிகரமாக இயங்க ஆரம்பித்த பிறகு தான் மற்ற இடங்களிலே புதுத் தொழிற் சாலைகளைத் தொடங்குவது பற்றிப் பரிசீலிக்க முடியும்.

திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தனியாருடன் சேர்ந்து ஆரம்பிக்கின்ற ஒரு கூட்டுத் தொழிற்சாலை என்று அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள் இதற்கு யார் சேர்மனாக இருப்பார்கள்? பொதுத் துறையிலே ஆரம்பிக்கப்படுகின்ற புகளூர் காகித ஆலைக்கு சேஷசாயியைச் சேர்ந்த விஸ்வநாதனை நியமித்திருக்கிறார்கள். அவர் டெக்னிக்கல் தெரிந்தவர் என்று சொல்கிறார்கள். நாட்டிலே எவ்வளவோ பேர் டெக்னிக்கல் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள் எனவே இன்டர்வியூ வைத்து தேர்ந்தெடுக்கிறார்களா அல்லது நேரடியாகவே தேர்ந்தெடுக்கிறார்களா? அந்த டெர்ம்ஸ் ஆப் ரெபரன்ஸ் என்ன, அதே போன்று கூட்டுத் துறையிலே இருப்பவைகளுக்கு அரசாங்கத்திலே இருப்பவர்கள் அங்கே தலைவராக இருப்பதற்கு வழிவகை செய்வார்களா? சேஷசாயி விஸ்வநாதனை நியமிக்க டெர்ம்ஸ் ஆப் ரெபரென்ஸ் என்ன என்பதையும் அவரை, எந்த அடிப்படையில் நியமித்தார்கள் என்பதையும், அதேமாதிரி நிலைமை இன்றைக்கும் அப்படி செய்யப்படுமா என்ற விவரத்தையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், ஜாயின்ட் செக்டாருக்கும் பொதுத் துறைக்கும் வேறுபாடு இருக்கின்றது. ஜாயின்ட் செக்டார் புரோமோட்டராக திரு. துரைமுருகன் கூட ஒரு

தொழிற்சாலையை ஆரம்பிக்கலாம், அதிலே தலைவராக இருந்து நடத்தலாம். நாம் தென்னார்க்காடு மாவட்டம் பண்ருட்டியில் ஏற்படுத்தியிருக்கிற இந்த தொழிற்சாலைக்கு திரு. கிருஷ்ண மூர்த்தியைப் புரமோட்டராகக் கொண்டு 5 கோடியில் ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சாலை. அதற்கு அவர்தான் தலைவராக இருப்பார். அரசு கொடுக்கிற பணத்துக்கு, அரசு போடுகிற மூலதனத்துக்கு அரசுத் துறையில் இருந்து ஐ. ஏ. எஸ் அதிகாரி ஒருவர் டைரக்டராக இருப்பார். ஏற்கனவே சொன்னது தமிழ் நாடு செய்தித்தாள்—நியூஸ்பிரின்ட் தொழிற்சாலை பொதுத் துறையிலே வருகிறது. அந்தத் தொழிற்சாலைக்கு ஏற்கனவே சேஷசாயி பேப்பர் நிறுவனத்தால் நடத்தப்பட்டு வருகின்ற காரணத்தாலும், அதைப்போல ஒரு பெரிய அளவிலே ஒரு தொழிற்சாலையை அவர்களே நடத்த ஏற்கனவே விரும்பி இருந்த காரணத்தாலும், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலும் அவர்தான் எக்ஸ்பர்ட் என்று என்னாலே நிச்சயமாக சொல்ல முடியும். ஏனென்றால் பெரிய அளவிலே ஒரு காகித ஆலையை அவர் நடத்தி வருகின்றவர். அவரை, அவருடைய தொழில் நுட்ப அறிவை, அவர் கற்றிருக்கின்ற, உலக நிறுவனங்களோடு பெற்றிருக்கின்ற தொடர்புகளை எல்லாம் பயன்படுத்தி அந்தத் தொழிற்சாலையை முழுமையாகக் கொண்டு வருவதற்காகத்தான் இவ்வாறு அவரைத் தலைவராக போட்டிருக்கிறோம், இதற்கு மத்திய அரசு உட்பட, மத்திய அரசு அமைச்சர்கள் உட்பட, சம்பந்தப்பட்டவர்கள் அத்தனை பேர்களும் அதற்கான அனுமதியை வழங்கி இருக்கிறார்கள என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் 761, 772, 773 கியவை மாண்புமிகு அமைச்சர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பெறுகின்றன. வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(2) உரிமைப் பிரச்சனை

சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில், ஓர் உறுப்பினர் தாக்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவை உரிமை மீறல் குறித்த பிரச்னை. 2-3-1982 அன்று மாண்புமிகு உறுப்பினர் திரு திருநாவுக்கரசு? — [illegible] ந்தநாமன் அவர்கள் பேரவையில் அவை மீறல் குறித்த ஒரு பிரச்சினையை எழுப்பினார். அதன் மீது எனது தீர்ப்பு பின்னர் அளிக்கப்படும் என்று நான் கூறியிருந்தேன். இப்போது என்னுடைய தீர்ப்பு அளிக்கப்படுகிறது.

[பேரவைத்தலைவர்] [1982 ஏப்ரல் 5

26-2-1982 அன்று உறுப்பினர்கள் தங்கும் விடுதியில் திரு. தீர்த்தராமன் அவர்கள் தாக்கப்பட்டார் என்பதால் இப் பிரச்சினை எழுப்பப்பட்டது. பேரவையில் அப்போது மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டது—''நான் சட்டமன்ற உறுப்பினர் கடமையை நிறைவேற்ற முடியாமலும்—தடுக்கும் வகையிலும் என்னைக் கொலை செய்ய முயன்றார்கள். மேலும் இந்த நிகழ்ச்சி நான் சட்டமன்ற உறுப்பினர் என்கிற முறையில் கடமையைச் செய்வதற்கு ஊறு செய்யும் விதத்தில் நடந்து இருக்கிறது''.

மாண்புமிகு உறுப்பினர் தாக்கப்பட்டதன் நோக்கம் சாட்சியங்களை விசாரித்து ஆய்ந்து முடிவெடுக்க வேண்டும். உறுப்பினர் விடுதி அவையின் அமைப்பு எல்லைக்குள் சேர்க்கப்படவில்லை. ஆயினும் அவர் விடுதியில் இருந்தது பேரவையின் கூட்டங்களில் கலந்து கொள்வதற்காகத்தான் என்பதில் ஐயமிருக்க முடியாது.

எனவே, இப்பிரச்சினை குறித்து நன்கு ஆராய வேண்டிய அவசியம் இருப்பதாக நான் கருதுவதாலும், அவை உரிமைக் குழு தான் இதைச் செய்ய முடியும் என்று நான் கருதுவதாலும், பேரவையின் 255-வது விதியின் கீழ் எனக்குள்ள விசேஷ அதிகாரத்தைப் பயன்படுத்தி, இப் பிரச்சினையை ஆய்ந்து அறிக்கை அளிக்க அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கிறேன்.

3. தகவல் கோரல்

106-வது விதியின் கீழ் அளிக்கப்பெற்ற அறிக்கைகளின் மீது விவாதம்

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2, 3 நாட்களுக்கு முன்னால், அரசாங்கம் 106-வது விதியின் கீழே ஒரு அறிக்கையை இங்கே வைத்த நேரத்தில், அந்த விதியின் கீழ் அரசாங்க அறிக்கையாக வைக்கப்படுகிற காரணத்தால் அதை எதிர்கட்சிகள் வாதிக்க வேண்டிய வாய்ப்பு இப்போது இல்லை என்று சொன்னாலும் விவாதிக்க உரிமை தர வேண்டும் என்று எதிர்கட்சிகளின் சார்பிலே பலரும் கேட்டு, தாங்களும் விவாதிப்பதற்காக ஒரு நாளை, ஒரு நேரத்தை

1982 ஏப்ரல் 5] [திரு. க. அன்பழகன்]

ஒதுக்குவதாக அறிவித்தீர்கள். ஆளும் கட்சி சார்பாக அமைச்சர்களும் ஏற்றுக் கொண்டார்கள். அது பற்றி நேரத்தையும் நாளையும் உறுதிப்படுத்துவதற்கு அலுவல் ஆய்வுக்குழுவிலே கலந்து பேசலாம் என்று தெரிவிக்கப்பட்டு, 2 நாட்கள் அலுவல் ஆய்வுக் குழுவும் கூடி, நேரத்தைக் குறிப்பிட முடியாமல் மறுபடியும் கலந்து ஆலோசிக்கக் கூடிய நிலையில் ஒத்தி வைக்கப்பட்டது. சட்ட மன்றம் இன்னும் ஒரு நாள்தான் கூடு என்ற ஒரு சூழ்நிலை இருக்கின்றது. எனவே இந்த அவையின் அனைத்து உறுப்பினர்களும், அனைத்துக் கட்சிகளும் கேட்டுக் கொண்ட பொதுவான வேண்டுகோளை ஏற்று உறுதி கூறிய அந்த அடிப்படையில் 106-வது விதியின் கீழ் வைக்கப்பட்ட அறிக்கை மீது ஆர்.என். மாணிக்கம் என்ற அதிகாரி தந்த குற்றச்சாட்டுகள் மீது முதலமைச்சர் சார்பாக பதில் அளிக்கிற வகையில், அவையில் வைக்கப்பட்ட அந்த அறிக்கையின் மீது விவாதிப்பதற்கான நேரத்தை, நாளை-நாளை என்றால்-தேதியையும் நேரத்தையும் தாங்கள் இந்த அவைக்கு அறிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் ஏற்கனவே இது பற்றி அலுவல் ஆய்வுக் குழுவிலே உங்களிடத்திலே எல்லாம் கலந்து பேசி இருக்கிறேன் என்பதை மாண்புமிகு பேராசிரியர் ஒத்துக் கொள்வார் என்று நான் நம்புகிறேன். இன்றைக்குக் கூட அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்ட வேண்டும் என்று காலையிலேயே அதற்கான அறிக்கை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அனுப்பி இருக்கிறேன். ஆகவே அலுவல் ஆய்வுக்குழு இன்றைக்கு 11 மணிக்கு கூடும். அதிலே இருக்கின்ற சிரமங்களை எல்லாம் நான் உங்களுக்கு எடுத்துச் சொன்னேன். அதிலே இருக்கின்ற சட்ட விதிமுறைகளை எல்லாம் நான் உங்களிடத்திலே எடுத்துச் சொல்லி இருக்கிறேன். நாம் எல்லாம் கூடி அதன் மீது முடிவெடுக்கவேண்டுமே தவிர, நான் இங்கேயே தீர்ப்பை அளிப்பது நல்லதாக இருக்காது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள் என்று நான் நம்புகிறேன். ஆகவே அலுவல் ஆய்வுக்குழுவிலே இதுபற்றி விவாதிக்கலாம், பேசலாம், அதன் மீது என்ன முடிவு எடுக்கிறீர்களோ அதற்குக் கட்டுப்பட நான் தயாராக இருக்கிறேன்.

(முற்பகல் 10-20)

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய ஆலோசனைகளை அல்லது கருத்துக்களை ஏற்றுக் கொள்கிற முறையிலே அலுவல் ஆய்வுக் குழுவிற்கு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், நானும், மற்ற கட்சியைச்

சேர்ந்தவர்களும் கூட வந்து கலந்து கொண்டிருக்கிறோம். அங்கே சில கருத்துக்கள் பேசப்பட்டன. வெளியிலே எப்படிப் பட்ட கருத்துக்கள் உலவவிடப்பட்டிருக்கின்றன என்று சொன்னால், அலுவல் ஆய்வுக்குழுவிலே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், வேறு சிலரும் சட்டப் பேரவையில் இந்த விவாதத்தை எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக, ஏதோ கெஞ்சிக் கூத்தாடியதைப் போல் ஒரு தவறான கருத்து வெளியிலே உலவவிடப்பட்டிருக்கிறது. எனவே, அலுவல் ஆய்வுக் குழுவிலே எதிர்க்கட்சித் தலைவரும் நானும் திராவிட முன்னேற்றக்கழகத்தின் சார்பிலே வந்து, இந்த அவையிலே ஒத்துக்கொள்ளப்பட்டு உறுதி அளிக்கப்பட்டதை நாங்கள் வலியுறுத்திச் சொன்னாலும் கூட, ஏதோ நாங்கள் ஏதோ தனிப் பட்ட முறையில் கெஞ்சிக் கூத்தாட வேண்டிய நிலையில் இருப்பதாக வெளியிலே ஒரு தவறான கருத்து பேசப்படுகிற, ஒரு சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிற காரணத்தால், அவையினுடைய தலைவராக உள்ள தாங்கள், அவையிலே எடுக்கப் பட்ட முடிவுகளைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பினை யுடைய தாங்கள், சட்ட மன்றத்தில் ஒட்டு மொத்தமாக எடுக் கப்பட்ட முடிவைத் தனிப்பட்ட முறையில் கைவிடுவதோ, நீக்குவதோ முறையல்ல என்ற காரணத்தால் அதைக் காப் பாற்றக் கூடிய முறையில் நேரத்தை உறுதி செய்து அதன் மூலமாக எந்த நேரத்திலே அது நடைபெறும் என்று தெரிவிக்கத் தாங்கள் கடமைப்பட்டிருக்கிறீர்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நாங்கள் அலுவல் ஆய்வுக் குழுவிற்கு வந்து நாளும் கூட தனிப்பட்ட முறையிலே வேண்டுகோள் விடுவதற் காக வருவதைப் போல் உள்ள நிலையில், தாங்களே முடிவு எடுத்து அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: யாரோ வெளியிலே சொல்லுகிறார்கள் என்பதற்காக, மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் அப்படிப்பட்ட கருத்துக்களைச் சொல்லக் கூடாது. நாம் ஒரு குழுவில் கலந்து பேசவேண்டுமென்பதற்காகத் தான் அலுவல் ஆய்வுக் குழு இருக்கிறதே தவிர யாரோ இரண்டு பேர்கள் வெளியிலே அலுவல் ஆய்வுக் குழுவைப் பற்றி கருத்துக்களைச் சொன்னால், அதற்கு மன்றமோ நாமோ பொறுப்பேற்றுக் கொள்ள முடியாது. அங்கு யாரோ சிலர் வேண்டுமென்றே சில கருத்துக்களை வலிந்து கூட சொல்லலாம். அப்படி நீங்கள் வேண்டிக் கொண்டதாக ஒரு வரலாறு இல்லை. அப்படிப்பட்ட தவறான கருத்துக்கள் வந்ததற்கு என்ன முகாந் திரம் என்று எனக்குத் தெரியவில்லை. ஆகவே, அப்படிப்பட்ட கருத்துக்கள் இருந்தால், அதை நீங்கள் மனதிலேயிருந்து நீக்கிவிட்டு, நாங்கள் அலுவல் ஆய்வுக் குழுவிற்கு வந்து கலந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அரசின் மிகப் பெரிய பொறுப்பிலே இருப்பவர்கள் கூட ஆப் தி ரிக்கார்ட் என்ற பெயராலே பத்திரிக்கையாளர்கள் இடத்திலே அப்படிப் பட்ட கருத்துக்களை சொல்லியிருக்கிறார்கள். இது விவாதத் திற்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது என்று உறுதியாக சொல்லுகிறார்கள். எனவே தான் எங்களுக்கு மனதிலே ஐயம் ஏற்படுகிறது. அது மாத்திரம் அல்ல. அலுவல் ஆய்வுக்குழுவில் அரசின் சார்பிலே வாதாடுகின்ற நேரத்திலே; இதிலே விவாதமே வேண்டாம் என்ற அளவிலே தான் வாதாடப்படுகிறது. ஆகவே, நீங்கள் இதற்கான நிச்சயமாக விவாதிக்கப்படும், விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும், இந்த 7, 8 தேதிக்குள் ளாக என்று அறிவித்து, அந்தத் தேதி, 7, 8-ஆ என்பதைப்பற்றி ஆலோசிக்க மட்டும். எங்களை அலுவல் ஆய்வுக்குழுவிற்கு அழைத்தால் அது மிகப் பொருத்தமாக இருக்கும். விவாதம் வேண்டாமா வேண்டுமா என்பதற்கு அலுவல் ஆய்வுக்குழுவைக் கூட்டுவது முறையல்ல. விவாதம் என்றைக்கு என்பதைத் தாங் கள் முடிவு செய்ய வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பேராசிரியர் அவர்கள் இங்கே கருத்துக் களைக் கூறியிருக்கிறார்கள். இந்த அலுவல் ஆய்வுக்குழுவில் நானும் இருந்தேன், எல்லோரும் இருந்தோம். அவர்கள் கூறி யதைப் போன்று அவர்கள் கெஞ்சவோ, கேட்கவோ போன்ற நிலைமைகள் எல்லாம் நடைபெறவில்லை என்பதையும், பிரி அட் பிராங்க் டிஸ்கஷன் என்ற நிலைமையிலே தான் தாங்கள் எடுத்துச் சொன்னீர்கள். நாங்களும் ஆராய்ந்தோம். ஒரு திட்ட வட்டமான முடிவு ஏற்படாத காரணத்தால் நேற்றும் கூடி விவாதம் முடிவுறாமல், இன்றைக்கு வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அலுவல் ஆய்வுக் குழுவிலே எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள். அவர்களும் கருத்துக்களை எடுத்துச் சொல்லி யிருக்கிறார்கள். அதுபற்றி முடிவு செய்ய வேண்டியது அலுவல் ஆய்வுக்குழுவும், அதற்குத் தலைமை தாங்குகிற தாங்களும் தான், ஆகவே அந்த வகையிலே நிலைமை இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது 11 மணிக்கு அலுவல் ஆய்வுக்குழு கூட இருப்பதன் காரணமாக தங்களுடைய சீரிய தலைமையின் கீழ் மீண்டும் பேசுகின்ற போது தாங்கள் ஒரு முடிவை எடுக்கப் போகிறீர்கள் அலுவல் ஆய்வுக்குழு ஒத்துக் கொள்ளாத எந்த முடிவையும் தாங்கள் எடுக்கப் போவதில்லை. அந்த அடிப்படையிலே 11 மணிக்கு அலுவல் ஆய்வுக்குழுகூட இருப்பதால், அங்கே பேசப்படுகின்ற கருத்தையும் அறிந்து, தாங்கள் தக்கதொரு முடிவை எடுப்பதுதான் முறை. அதற்கு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1982 ஏப்ரல் 5

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அன்றைய தினம் இந்த அவையிலே அறிவிக்கப்பட்டது போல், பதில் சொல்வதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம், கேட்பதற்கு உங்களுக்கு துணிவு இருக்கிறதா என்ற கேள்வி கேட்கப்பட்ட போது, இந்த அவையிலே விவாதம் எடுத்துக் கொள்ளப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது. விவாதம் எடுத்துக் கொள்ளப்படும் தேதியை நிர்ணயிப்பதற்காக மட்டும் அலுவல் ஆய்வுக்குழு கூட்டப்பட வேண்டுமே தவிர, விவாதம் எடுத்துக் கொள்ளப் படுமா என்பதற்காக அது கூட்டப்படத் தேவையில்லை. விவாதம் எடுத்துக் கொள்ளப்படுமா என்பதற்கான பதில் இப்போது தேவை.

*மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரர் அவர்களே, விவாதம் எடுத்துக்கொள்ளப்படுமா என்று முடிவு சொல்ல வேண்டும் என்பது எதிர்பார்க்கின்ற கலைஞர் அவர்களுடைய கருத்தாகும், ஆனால் நான் அந்த நிலைமையில் இல்லை என்பதையும் விதிமுறைகளின்படி அறிக்கை வைக்கப்பட்ட பிறகு அதைப்பற்றி விவாதிப்பதற்கு சட்டமன்றத்திலே இடமில்லை என்பதையும் நாம் நன்றாக தெரிந்து, பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று அறிந்து கேட்ட பிரச்சனைகளில். வாக்குவாதத்திலே சொன்ன ஒரு கருத்தை வைத்துக்கொண்டு அதைச் சட்டமாக்க வேண்டுமென்ற முறை உருவாகுமானால் விதிமுறைகளை மாற்ற வேண்டிவரும் என்று நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு தலைவரவர்களே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விவாதத்தில் இரண்டு பக்கம் அப்போது சொன்னதை வைத்து எதிர்க்கட்சியிலே உள்ளவர்கள் விவாதம் வேண்டுமென்று கேட்பது முறையல்ல என்ற முறையிலே சொல்கிறார்கள், எதிர்க்கட்சியிலே உள்ளவர்கள் ஆளும் கட்சியிலே உள்ளவர்கள் மட்டும் பேசிக்கொண்ட பிரச்சனையாக அன்றைய தினம் முடிக்கப்படவில்லை. இந்த அவையிலே ஆளும் கட்சிக்காரர்களும் எதிர்க்கட்சிக்காரர்களும் விவாதம் நடத்திய போது சொன்னார்கள் என்பதை ஏற்றுக் கொள்கிறோம். நான் அன்றையதினம்

1982 ஏப்ரல் 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: * * * * * *

என்று சொன்னது அன்றையதினம் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறது: இப்போதும் அதை நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

திரு. க. அன்பழகன்: அதை நான் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், அதை ஒரு பிரச்சனையாக கருதாமல் அவைத் தலைவர் ஒப்புக்கொண்டால் அது இந்த அவை ஒப்புக்கொண்டதாகும். என்பதால் தங்கள் மூலமாக அந்தக் கருத்து வரவேண்டும் என்று சொல்லி, தாங்கள் விவாதத்திற்கு ஒப்புக்கொண்டு நாள் குறிப்பிடப்படும் என்று எடுத்துச் சொல்லி அன்றைக்கு அறிவித்திருக்கிறீர்கள். நீங்கள் எடுத்துக்கொள்ளப்படும என்று சொன்ன காரணத்தால்தான் அன்றைக்கு 106 வது விதியின்கீழ் அந்த அறிக்கை படிக்கப்பட்டதை உள்ளபடியே மறுக்காமல் ஏற்றுக்கொண்டோம். ஆக, விவாதத்திற்கு அனுமதிக்கப்படும் என்று சொன்ன பிறகு இப்போது முதலமைச்சர் அவர்கள் விதிமுறைகளை மாற்ற வேண்டிவரும் என்று சொல்கிறார்கள். விதி எப்போதும் மாறும். விதி மாறும் என்கிறபோது. ஆளும் கட்சியிலே உள்ளவர்களும், எதிர்க்கட்சிகளிலே உள்ளவர்களும் கலந்து பேசி விதிகளை மாற்றலாம். ஆனால் சட்டமன்றத்திலே ஏற்று கொள்ளப்பட்டிருக்கிற ஒரு முடிவு இந்த அவையில் கைவிடப்படுமா என்று நான் கேட்க விரும்புகிறேன். விவாதத்தை கைவிட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வற்புறுத்துவது இந்தப் பிரச்சனையைப் பற்றி விவாதிக்க எதிர்க்கட்சியினருக்கு தாங்கள் ஏற்படுத்தித்தந்த வாய்ப்பு மறுக்கப்படுவதாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே. ஒருசில கருத்துக்களைச் சொல்வதற்கு நான் கட்டாயப்படுத்தப்பட்டிருக்கிறேன். காவல்துறை மானியத்தில் விவாதம் நடந்த போது முதல் நாள் நான் பேசி முடியாமல் மறுநாள் பேசவேண்டிய நிலைமை ஏற்பட்டது. அப்போது விவாதத்தை முடிக்கின்ற நாளில் இரண்டரை மணி நேரம் நான் பேசினேன். பல ஆதாரங்களை வைத்து ஒவ்வொன்றுக்கும் நான் பதில் சொல்ல முயன்றபோது 'நேரம் இல்லை' 'நேரம் இல்லை' என்று சொன்னவர்களில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் இருக்கிறார்கள் என்று நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். குறிப்பிலும் அது இருக்கலாம்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1982 ஏப்ரல் 5

அந்த நிலையிலேதான் விவாதத்தை முடிக்க வேண்டியிருந்ததால் நான் இதற்குப் பதில் சொல்ல முடியவில்லை. அன்றைய தினம் பதில் சொல்லியிருந்தால் விஜயராகவன் அவர்களுக்கு இந்தப் பிரச்சனை வந்திருக்காது. அதற்குப் பிறகும் வெளியே போய் நாங்கள் கேட்ட கேள்விகளுக்கு எல்லாம் பதில் வரவில்லை என்று அங்கே சொன்ன பிறகு வெளியே மக்கள் மத்தியிலே ஒரு தவறான கருத்து உருவாகி, ஏதோ முதலமைச்சராக இருக்கிற நான் அல்லது இந்த அரசு ஒரு பிரச்சனைக்கு பதில் சொல்ல முடியாமல் அல்லது ஒதுங்குகிறார்கள் என்ற நிலை ஏற்படுத்தப்பட்ட பிறகுதான் இப்படிப்பட்ட அறிக்கை வைக்க நிர்ப்பந்தம் இந்த அரசுக்கு ஏற்பட்டது. அதன் பிறகுதான் அந்த 106—வது விதியின் கீழ் அறிக்கை வைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அன்றையதினம் என் கண்வலி காரணமாக நான் வர முடியவில்லை. இங்கே விவரதம் வந்து பேசி முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. சர்ச்சை வேண்டாம் என்ற காரணத்தாலோ என்னவோ தலைவர் அவர்களே, எனக்குத் தெரியாது விவாதத்திலே அப்படி சொல்லியிருக்கலாம். ஆனால் நான் சொல்ல விரும்புவது. விதியை அடிப்படையாக வைத்துதான் நாம் ஒவ்வொன்றையும் செய்து கொண்டிருக்கிறோம். இங்கே அவையில் வற்புறுத்தப்பட்ட ஒன்றை நிறைவேற்ற வேண்டுமென்று சொன்னால் இந்த அவையில் விதியை மாற்றிக் கொண்டே இருக்கப்போகிறோமா அல்லது விதியின் அடிப்படையிலே செயல்பட வேண்டுமென்று நாம் முடிவு செய்து அதன்படி செய்யப்போகிறோமா என்பது பிரச்சனையாகி விடுகிறது என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன்,

[முற்பகல் 10-30]

டாக்டர். மு. கருணாநிதி: தலைவர் அவர்களே. நேரம் இல்லாத காரணத்தால், நண்பர் சுந்தரராஜ் அவர்களும், நண்பர் விஜயராகவன் அவர்களும் எழுப்பிய முன்னாள் ஐ. ஜி. மாணிக்கம் அவர்கள் தந்த குற்றச்சாட்டு பற்றிய பதிலை விளக்கமாக அளிக்க இயலவில்லை என்றும் அதற்குப் பிறகு இங்கே விளக்கப்பட்டது என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள், அவர்கள் அன்றைய தினம் வரமுடியாவிட்டாலும். மறுநாள் வந்து 105—வது விதியின்படி 'தன்னிலை விளக்கம்' அளித்து இருப்பார்களானால்' அல்லது படித்து இருப்பார்களானால்; அதிலே நிச்சயமாக விவாதிக்க இடமில்லை என்றாலும் அப்படி தன்னிலை விளக்கம் வருகின்ற நேரத்திலேகூட சில நேரங்களில் குறுக்கிடுவது உண்டு. வேறு ஒரு அவையில கூட குறுக்கிட்டு அமைச்சர் பதில் சொல்லியிருப்பதைப் பார்த்து இருக்கிறேன்,

1982 ஏப்ரல் 5] [டாக்டர். மு. கருணாநிதி]

ஆனால் இங்கே விதி 105—ன் கீழ் தன்னிலை விளக்கம் கொடுப்பது விட்டு விட்டு, 106—வது விதியின் கீழ் அந்தப் பொருள் கொண்டு போகப்பட்டுவிட்ட காரணத்தால், அது பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னை என்று வந்துவிட்டது. எனவே அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பு என்ற முறையில் அவை முன்னவர் நாவலர் அவர்கள் அன்றையதினம் 106—வது விதியின் கீழ் படித்தார்கள். பொது முக்கியத்துவம் வாய்ந்த தலைப்பின் கீழ் அதைக் கொண்டுவந்து விட்டதால் பொது முக்கியத்துவம் வாய்ந்த அறிக்கையைப் பற்றி விவாதிக்க சட்டத்தில், இருக்கிற காரணத்தால். நாங்கள் அதைப் பற்றி கேட்கிறோமே அல்லாமல் வேறு அல்ல.

திரு. என். சங்கரய்யா; தலைவர் அவர்களே, அன்று இந்தப் பிரச்னை வந்தபோது, சபையிலேயே அதைப் பற்றி விவாதிப்பதற்கு வாய்ப்பு வேண்டும் என்று கேட்ட நேரத்தில். நான் ஒரு யோசனை சொன்னேன். அது அரசாங்கத்தின் தரப்பிலும் ஏற்றுக்கொள்ளப்பெற்றது. அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்டி அதற்குத் தேவையான நேரத்தை ஒதுக்கலாம் என்று பேசப்பட்டது, இரண்டு நாள் கூடினோம் முடியவில்லை. இருப்பினும் சபையில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில், மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆலோசனைக்கிணங்க அவர்கள் நிர்ணயிக்கும் வரம்பிற்குள் விவாதத்தை நடத்துவது என்று முடிவு செய்தோம். அவ்வாறு நடத்துவதுதான் சரியானதாக இருக்கும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் கருதுகிறது.

தலைவர் அவர்கள் தெரிவித்த பின்னணியில் பார்த்தால் அந்த அறிக்கை வைத்தது கூட விதிகளுக்குப்புறம்பானது என்ற முடிவுக்குத்தான் வரவேண்டியிருக்கும். அதுவும்கூட அந்தக் கமிஷனின் நடவடிக்கைகள் பற்றிய பிரச்னையிலே ஒரு விளக்கத்தைக் கூறுகிறது என்ற காரணத்தால் அந்த அறிக்கை கொடுத்தே கூட அதற்குப் பாதகமாக வரும். ஆகவே, அந்த அறிக்கையை வெளியிட்ட பிறகு, அது அவையின் மேஜையில் வைக்கப்பட்டு, அவையின் தஸ்தாவேஜாக மாறிய பிறகு காவல் துறை முன்னாள் தலைவர் தந்துள்ள அந்தப் பிரச்னை குறித்து கட்சியின் தலைவர்கள் பேசுவது, சில வரம்புக்குட்பட்டு பேசுவது என்று ஓரளவிற்கு நாம் பேசி முடிவு எடுத்து இருப்பதை ஒட்டி இடையிலே ஏற்பட்ட நிகழ்ச்சிகள் காரணமாக இறுதி முடிவு செய்ய முடியவில்லைஎன்றாலும் அந்தப் பிரச்னை சம்பந்தமாகஎன்னென்ன பேசலாம் என்று நிர்ணயித்து இந்த மன்றத்தில் அந்த விவாதத்தை நடத்துவது சரியாக இருக்கும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது.

திரு. என். எஸ்.வி. சித்தன்: மாண்புமிக்கப் பேரவைத் தலைவர் அவர்களே காவல்துறை மானியக் கோரிக்கை மீது பேசுகின்ற நேரத்தில் எங்கள் கட்சியின் துணைத் தலைவர் திரு. சுந்தரராஜ் அவர்கள் இந்த அவையில் முறைப்படி அந்தப் பிரச்னையை எழுப்பினார்கள். அந்தப் பிரச்னைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள் என்று எதிர்பார்த்தோம். ஆனால் அப்போது பதில் அளிக்காமல் பின்னாலே 106—வது விதியின் கீழ் அரசுத் தரப்பில் ஒரு அறிக்கையை மன்றத்தில் வைக்கப்பட்டது. அன்றையதினமே எங்கள் கட்சியின் சார்பாக நான் பேசும்போது சொன்னேன். இது முக்கியமான பிரச்னை யாக இருப்பதால் சாதாரணமாக 106—வது விதியின் கீழ் வைக்கப்படுகிற அறிக்கை மீது விவாதம் இல்லை என்று இருப்பதால் அப்படி அறிக்கை வைப்பதை எதிர்த்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே நேரடியாக வந்து விளக்கம் சொன்னால் பொருத்தமாக இருக்கும் என்று சொன்னோம். அந்த விதியை இப்போது நானும் படித்துக் காட்டுகிறேன். நீங்களும் படித்து இருப்பீர்கள் என்று கருதுகிறேன்.

விதி 106 (1)-வது பிரிவில் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பொருளைப் பற்றி ஓர் அமைச்சர் பேரவைத் தலைவரின் இசைவுடன் அறிக்கை ஒன்றை அளிக்கலாம். (2) அவ்வறிக்கை மீது அப்போது எவ்வித விவாதமும் இருத்தல் கூடாது ஆனால், அதற்கு அடுத்த பிரிவில் (3) உள்விதி(1)-ன் கீழ் அறிக்கையளிக்க விரும்பும் ஓர் அமைச்சர் எந்நாளில், அந்த அறிக்கையை அளிக்க விரும்புகிறார் என்பதையும், பேரவைத் தலைவரின் பார்வைக்கு வைக்க அதன் பிரதி ஒன்றையும் முன்கூட்டியே செயலாளருக்கு அனுப்பவேண்டும். என்று இருக்கிறது. ஆகவே, அந்த அறிக்கை மீது அன்றைக்கு விவாதம் வைத்துக்கொள்ளக்கூடாது என்பதுதான் தெளிவாக இருக்கிறது. ஆனால அந்த அறிக்கை வைக்கப்பட்ட பிறகு இந்த இரண்டு தரப்பிலும் விவாதம் வைக்கப்படவேண்டிய அவசியத்தைப் பற்றி பேசி, அதற்கு விளக்கம் அளிக்கவேண்டும் என்பதையும் எடுத்துச் சொல்லி, அதற்கு அவையிலும் இசைவு தெரிவிக்கப்பட்டு இருப்பதால். இது ஒரு முக்கியமான பிரச்னை யாக இருப்பதால், அவையிலே சொன்னதற்கு ஏற்ப அதை விவாதத்திற்கு எடுத்துக்கொள்வது தான் முறையாக இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றைய தினம் இந்த அறிக்கை அவையின் முன் வைக்கப்பட்ட நேரத்திலே விவாதங்கள் நடைபெறுவது என்பது சரியாக இருக்காது என்றும் ஆகவே வேறு ஒரு விதத்தில் அது சம்பந்தமாக விவாதத்தை நடத்தலாம் என்றும் ஏற்றுக்

கொள்ளப்பட்டு அந்த அடிப்படையிலே அந்தப் பிரச்னைக்கு அன்று தீர்வு காணப்பட்டது. எனவே அவையில் ஏற்கெனவே ஒப்புக்கொள்ளப்பட்ட, கூறப்பட்ட அந்த அடிப்படையிலே விவாதம் நடத்துவதுதான் சரியான நடைமுறையாக இருக்கும் என்பதை கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே தெரிவித்துக்கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; 41-வது விதியின் 17-வது பகுதி விதி 65, விதி 71 லே 7 வது பகுதி, விதி 81 ஆகிய இவைகளை விதிகள் நம்முடைய சட்டமன்ற திட்ட நடைமுறையிலே இதுபற்றி தெளிவுபடுத்துகின்றன. 41 வது விதியின் 17 வது பகுதியிலே சட்டப்படி அமைக்கப்பெற்ற விசாரணைக்குழு நீதி மன்றமாக அல்லது பகுதி நீதிமன்றமாக இயங்க சட்டப்படி அமைக்கப்பெற்ற ஆணைக்குழு அல்லது ஆய்வதற்காகவோ, புலனாய்வதற்காகவோ அமைக்கப்பெற்ற குழு ஆகியவற்றின் ஆய்வில் இருக்கும் ஒரு பொருள் பற்றிய தகவலைச் சாதாரண மாக அது கேட்கக் கூடாது. ஆயினும் அவற்றின் ஆய்வுக்கு எந்தவிதக் குந்தகமும் ஏற்படுத்தாதவாறு இருப்பின், அவைகள் கடைப்பிடிக்கும் முறைப்பற்றியதாகவோ எப்பொருளைப் பற்றி ஆராய அமைக்கப்பெற்றன என்பதைப் பற்றியதாகவா விசாரணை எந்நிலையில் உள்ளது என்பதைப் பற்றியதாகவோ அமையலாம் என்று குறிப்பிடப்பட்ருக்கிறது. எனவே, இந்த அளவுக்குத்தான் விவாதிப்பதற்கு சட்டப்படி இடம் இருக்கின்றது இது ஒரு கமிஷன் முன்பு அதாவது ஒரு குழுவின் முன் வைக்கப் பட்டிருக்கின்ற பிரச்னையாக இருக்கின்றது. ஆனால் இதிலே வரம்புக்குட்பட்டு பேச முடியும் என்று திரு. சங்கரய்யா அவர்கள் கருதுகிறார்கள். ஆனால் உணர்ச்சிவயப்பட்டு விட்டால் வரம்பு மீறித்தான் பேசப்படுகிறது. இந்த அவையிலே பல நேரங்களில் அப்படிப் பேசப்படுகின்ற சூழ்நிலைகள் வந்திருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனைபேரும் அறிவார்கள். ஆகவே, விசாரணைக்கு முன்பாக இருக்கின்ற பிரச்னையை எடுத்து நாம் பேச ஆரம்பித்தால் அதற்குப் பிறகு, விசாரணைக் குழு என்ன காரியத்தைச் செய்ய முடியும் என்பதையும் அந்த விசாரணைக் குழுவிலே எப்படி. தீர்ப்பு வழங்க முடியும் என்பதையும் நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். மேலும் அது பற்றி இங்கே விவாதிப்பதன் மூலம் நம்மால் என்ன தீர்ப்பினைக் காண முடியும் என்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டும். ஏன் என்றால் தீர்ப்பு வழங்குகின்ற அதிகாரம் என்னிடத்தில் இல்லை. சபையிலே பேசுகின்றவர்களுக்கு அனுமதி கொடுத்து சபையை ஒழுங்குபடுத்துவதற்குத்தான் நான் தலைவராக இருக்கிறேன். ஆனால் இங்கே சில பிரச்சனை களிலே சில சிறந்த சொற்பொழிவுகளை ஆற்றுகிறீர்கள் என்று வைத்துக்கொண்டால் அதற்கான தீர்ப்பை அளிக்கின்ற நிலையிலே

[மாண்புமிகு பேரவைத் தலைவர்] [1982 ஏப்ரல் 5

நானும் இல்லை, இந்த மன்றமும் இல்லை. ஆகவே இந்த
நிலைமையிலே விசாரணைக் குழுவின் முன்பு இருக்கின்ற
பிரச்சினையை எடுத்து வைத்து விவாதித்தால் வரைமுறைக்குட்
பட்டு எப்படி விவாதிக்க முடியும் என்பதைப் பற்றி நாம்எண்ணிப்
பார்க்கவேண்டும்.

மேலும் அன்றைக்கு எல்லோருக்கும் உணர்ச்சிவசப்பட்ட
நிலையிலே இருந்தார்கள். ஒருவருக்கொருவர் வாதப்பிரதி
வாதங்கள் செய்து விவாதம் தேவை என்று கேட்டார்கள்.
அப்போது 105 வது விதியினை 106 வது விதியாக மாற்றப்பட்டது
கூட மாண்புமிகு முதல்வர் அவர்கள் கண்ணுக்கு மருந்து போட்
டிருந்ததன் காரணத்தால் அன்றைக்கு அவர்களால் வரமுடிய
வில்லையாதகையால் அவர்கள் கேட்டுக்கொண்டதன் அடிப்படை
யில், அவை முன்னர் அன்றைக்கு அறிக்கை வைத்தார்கள்
அப்படி அறிக்கை வைப்பதற்கு சட்டப்படி இடம் இருக்கிறது
என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். ஆகவே
அந்த வகையிலேதான் அது வைக்கப்பட்டதே தவிர வேறு
ஒன்றும் இல்லை. ஆகவே விசாரணைக் குழுவின் முன்பு
இருப்பதைப் பற்றி கட்டாயம் பேச வேண்டும் என்று எப்படி
வரும்புகிறீர்கள் என்பதைத் தெரிவிக்கவேண்டும்.

டாக்டர். மு. கருணாநிதி: தலைவரவர்களே, தங்களுடைய
விளக்கத்திலே இருந்து நான் அறிந்துகொள்வது அலுவல் ஆய்வுக்
குழுவினைக் கூட்டி அதிலே நாங்கள் கலந்துகொண்டும் பயன்
இல்லை என்பதைத்தான்.

மாண்புமிகு போவைத் தலைவர்: அலுவல் ஆய்வுக் குழு கூட்டப்
பட்டதன் காரணம் என்னவென்றால் மாண்புமிகு உறுப்பினாகள்
தாராளமாக தங்கள் கருத்துக்களைச் சொல்லவேண்டும் என்பதற்
காகத்தான்,

டாக்டர்- மு. கருணாநிதி, தலைவர் அவர்களே, மீண்டும்
நாங்கள் வற்புறுத்துவதெல்லாம் அலுவல் ஆய்வுக் குழு
கூட்டத்தைக் கூட்டுவதற்கு முன்பே விவாதம் உண்டா இல்லையா
என்பதை முன்பே தெரிந்துகொள்வதுதான் முக்கியமானதாகும்.
எனவே விவாதமே இல்லை என்றால் பிறகு அலுவல் ஆய்வுக்
குழுவைக் கூட்டவேண்டிய அவசியமே இல்லை. மேலும் அரசு
தரப்பிலே இருந்து கூறப்பட்ட கருத்துகளிலே இருந்து தெரிந்து
கொள்வது அரசு அன்றைக்குத் தந்த உறுதிமொழியினை மீறு
கின்றது என்பதுதான். மேலும் தாங்களும் அந்த வகையிலே
அன்றைக்குத்தந்த உறுதிமொழியினைக் கடைப்பிடிக்க முடியாத
சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கின்றது. எனவே நாங்கள் எங்கள்
கட்சியினுடைய கண்டனத்தைத் தெரிவிக்க வெளிநடப்பு
செய்கிறோம்.

1982 ஏப்ரல் 5]

(திராவிட முன்னேற்றக் கழகத்தை சார்ந்த உறுப்பினர்கள்
வெளி நடப்பு செய்தனர்)

திரு. என். சங்கரய்யா: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த சபையிலே பல அவசியங்களை முன்னிட்டு
ஒரு முடிவு செய்யப்பட்டிருக்கின்றது. அந்த அடிப்படையிலே
விவாதம் நடைபெறும் என்று முடிவு செய்யப்பட்டது. அதை
இப்போது நிறைவேற்ற முடியாது என்பது நாடாளுமன்ற ஜன
நாயகத்தினுடைய பாரம்பரியத்திற்கே இழுக்காகும். அது
இனிமேல் ஏற்படக் கூடாது என்பதைத் தெரிவிப்பதற்காக
நான் என்னுடைய கட்சியினருடன் வெளிநடப்புச் செய்கிறேன்.

(மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிய சார்ந்த உறுப்பினர்கள்
வெளிநடப்புச் செய்தனர்,)

(முற்பகல் 10.40)

திரு. சோ. அழகர்சாமி: அதே காரணத்தை வைத்து எங்கள்
கட்சி சார்பிலும் நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம்.

(கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.)

திரு. ஏ. சாகுல் ஹமீது: ஜனநாயக முறைகளுக்கு விரோதமாக
இப்போது விவாதத்திற்கு மறுப்பு அளிக்கிற காரணத்தால்
இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் சார்பில் நான் வெளிநடப்பு
செய்கிறேன்.

(இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் உறுப்பினர் வெளிநடப்பு
செய்தார்).

திரு. குமரி அனந்தன்: தலைவர் அவர்களே, இந்தப் பிரச்னை
பற்றி அன்று வாதப்பிரதிவாதம் நடந்தபோது ஆளுகிற தரப்
பிலிருந்து அமைச்சர் அவர்கள் சொன்ன உறுதிமொழியினை
சபாநாயகர் அவர்கள் ஏற்று இங்கே சொன்னார்கள்
என்பதை நாங்கள் அனைவருமே ஒத்துக்கொள்கிறோம், அதே
போல் சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் தாக்குதலுக்கு ஆளா
வார் என்று சொல்லப்பட்ட நேரத்தில் வளாகம் இந்த விதிக்
குள்ளே வருவதில்லை என்று தலைவர் அவர்கள்...,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தப் பிரச்னை பற்றிப்
பேசுங்கள். உறுப்பினர் பிரச்னை பற்றி நாளை வைத்துக்
கொள்ளலாம்.

திரு, குமரி அனந்தன்; முதலில் சபாநாயகர் அவர்கள்
உரிமை மீறல் ஆகாது என்று சொன்னதற்குப்பின்னாலும்,,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரிமை மீறல் ஆகாது என்று சொல்லவில்லை. ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு சொல்கிறேன் என்று சொன்னேன். அதற்கு என் தீர்ப்பைச் சொன்னேன். உரிமைமீறல் ஆகுமா ஆகாதா என்று பார்த்துச் சொல்வதாகத்தான் சொன்னேன்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் நான் எதைச் சொல்ல வருகிறேன் என்பதைச் சொல்லி முடிவது வரை பொறுத்திருந்து பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என் தீர்ப்பைப் பற்றி விளக்கம் அளிக்க உறுப்பினர்களுக்கு உரிமை கிடையாது. எந்தச் சபையிலும் அதை அனுமதிப்பதில்லை. உங்கள் கருத்துக்களை வேறு வகையில் சொல்லலாம். என் தீர்ப்பு பற்றி 'காமென்ட்' செய்வதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது.

திரு. குமரி அனந்தன்: உங்கள் தீர்ப்பைப் பற்றி நான் சொல்லவில்லை. விதிகளுக்கேற்ப என்னுடைய உரிமைகள் பற்றி ஓரளவு நான் அறிந்துதானிருக்கிறேன். நான் இங்கே குறிப்பிட விரும்புவது என்னவெனில், சபாநாயகர் அவர்கள் அன்று சொன்னபோது இப்போதிருக்கிற விதிகள் இதற்கு இடம் கொடுக்கவில்லை என்று சொன்னீர்கள். பின்னால் அலுவல் ஆய்வுக் குழுவில் வைத்து இந்தப் பிரச்னைக்கு ஏற்ப தலைவர்கள் எல்லாம் சில முடிவுகளைச் சொன்னபோது அனைத்து தரப்பிலும் இருந்து....

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: இங்கே பேசப்பட்டதைப் பற்றி அலுவல் ஆய்வுக்குழுவில் வைத்து விவாதித்து முடிவெடுக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கும னால்.. அலுவல் ஆய்வுக் குழுவிற்கு சில அதிகாரங்கள் உண்டு. விதிகளை மாற்றுவதற்கு உள்ள அதிகாரம் அலுவல் ஆய்வுக் குழுவிற்குக் கிடையாது.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ஒருவிளக்கம் சொன்னார்கள். நான் அந்தப் பிரச்னைக்குள் போகவில்லை. அதேபோல் இன்றும். சபாநாயகர் அவர்கள் அன்று தெரிவித்த கருத்தின் அடிப்படையில் நாங்கள் இன்று மீண்டும் அந்தப் பிரச்னையைக் கிளப்புகிறபோது சில விதிமுறைகளுக்கு, சில விசாரணைக் கமிஷன், சட்டதிட்டங்களுக்கு-அது பாதகமாக அமையும் என்று அவர்கள் விரும்புவார்களானால் அதைப் பற்றி அலுவல் ஆய்வுக்கு மறுபரிசீலனை செய்யலாம் என்ற எண்ணத்தில் இதை எடுத்துக் கொள்வதில் தவறில்லை. எனவே உங்களைப் பொறுத்தவரையில் அதை எடுத்துக்கொண்டு விவாதிக்கவில்லை என்று சொல்வதற்காக நாங்கள் வெளிநடப்பு செய்யவில்லை, இங்கேயே அமர்கிறோம்,

திரு. எஸ். ஆண்டித்தேவர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்று தினங்களுக்கு முன்னால் இந்த அவையிலே பத்திரிகையில் வந்த செய்தி குறித்து விவாதித்த நேரத்தில் அரசாங்கத்தின் சார்பில் 106-வது விதியின்கீழ் ஒரு அறிக்கை வைக்கிறபோது மாண்புமிகு தலைவர் அவர்கள் அதைப்பற்றி விவாதிக்கலாம் என்று ஏற்றுக் கொண்டு அலுவல் ஆய்வுக் குழு முடிவு செய்யலாம் என்று கூறி பிறகு அலுவல் ஆய்வுக் குழு கூடி சில நிர்ப்பந்தங்கள் காரணமாக விவாதிக்கப்படாமலேயே அலுவல் ஆய்வுக் குழு கூட்டம் ஒத்தி போடப்பட்டது. தலைவர் அவர்களுக்கும் தெரியும். அதற்குப் பின்னால் இன்று அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டம் கூட்டப்பட்டிருக்கிறது. அதிலே விவாதிக்கலாம் என்று அத்தனை தலைவர்களும் ஏற்றுக்கொண்டு இப்போது மாண்புமிகு தலைவர் அவர்களும், மாண்புமிகு முதல்வர் அவர்களும் இப்போது அதை விவாதிக்க வேண்டியதில்லை, விதி இல்லை என்று குறிப்பிட்டு தலைவர் அவர்கள் சொல்கிறபோது ஒரு கருத்தைச் சொன்னார்கள். அது நீதிமன்றமா அல்லது அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட குழுவா என்ற ஒன்றைச் சொல்லி அது விசாரணையில் இருக்கிறபோது அதைப்பற்றி விவாதிக்கவேண்டியதில்லை என்பது போன்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் கருத்துக்களைச் சொல்லுங்கள் என்று கேட்டேன். நான் ஒரு தீர்ப்பைச் சொல்லவில்லை,

திரு. எஸ். ஆண்டித்தேவர்: குழு அமைக்கப்படுவது பற்றி விவாதிக்கப்பட்டு, 41-ன் கீழ் எங்களைக் கட்டுப்படுத்தினீர்கள். அப்படி இருக்கின்றபோது, நம் அரசு அறிக்கை வந்ததற்குப் பின்னால், அந்த ஐ. ஜி. அவர்கள் இன்றும் பத்திரிகையிலே சில செய்திகளை வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அப்படி செய்திகளை மறுபடியும், மறுபடியும் அவர்கள் வெளியிடுவதற்கு இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப்படி அவர்மீது தனிப்பட்ட முறையிலே அரசின் சார்பிலே நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, மறுபடியும், மறுபடியும் செய்திகள் பத்திரிக்கைகளிலே வருகின்ற காரணத்தால், அது இந்த அரசுக்கும், முதல்வருக்கும் களங்கம் ஏற்படுத்துகின்ற வகையிலே இருக்கிறது. ஆகவே, இதிலே நாம் ஒரு தெளிவான முடிவு எடுப்பதற்காக, ஜனங்களுக்கு விளக்குவதற்காக இங்கே விவாதித்து, பத்திரிகைகளிலே வெளிவருவதற்கு வழிவகை செய்யப்படுமா என்று முதல்வர் அவர்களையும், இந்த அரசையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, வெளியிலிருந்து ஒருவர் அறிக்கை விட்டுக் கொண்டிருக்கிறார். நாம் சட்டமன்றத்தில் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறோம். இங்கே இருக்கின்றவர்கள் சந்தேகத்தைக் கிளப்புகிறார்கள். கொஞ்ச நேரத்திற்கு முன்னால்கூட, 'ஆப் தி ரெகார்ட்' என்று யாரையோ சொன்னதாக இங்கே குறிப்பிட்டு, பதிவு செய்திருக்கிறார்கள் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள். ஆனால், இது மரபுக்குப் புறம்பானது. 'ஆப் தி ரெகார்ட்' என்று அவர் சொன்னது எப்படியிருக்கிறது என்பதையும் நாம் சிந்திக்காமல் இருக்க முடியவில்லை. பேரவைத் தலைவர் இதற்கு தீர்ப்பளிக்க வேண்டியிருக்கிறது. இதற்கிடையில், நாம் என்ன தான் பதில் சொன்னாலும், வெளியிலே இருப்பவர்கள் மீண்டும் ஏதாவது சொல்லிக் கொண்டிருப்பார்கள். இதை ஒரு அரசியலாக்க வேண்டுமென்பதற்காக இப்படி ஒரு நிகழ்ச்சி தேவைப்படுகிறதே தவிர, நடைபெறுகிறதே தவிர, வேறல்ல என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். உண்மை வெளி வரும்போது, யார் குற்றம் செய்தவர்கள், எப்படி எப்படி குற்றம் செய்தார்கள். எப்படி பழி சுமத்தினார்கள் என்பது நீதிமன்றத்திலே வெளியிடப்படும் என்பதை நான் சொல்ல முடியுமே தவிர, நான் கூறுகின்ற பதிலே தீர்ப்பாகி விடாது. ஆகவே, அதற்குப் பிறகு நீதி மன்றத்திலே இருந்து தீர்ப்பு வருகின்ற வரையில் நாம் காத்திருக்க வேண்டியிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நம்முடைய பேரவை விதிகளிலே இதுசம்பந்தமாக 4 விதிகள் இருக்கின்றன. அதைச் சொல்ல விரும்புகிறேன்.

விதி 65-லே, "சட்டப்படி அமைக்கப்பெற்ற விசாரணைக் குழு, நீதிமன்றமாக அல்லது பகுதி நீதிமன்றமாக இயங்க சட்டப்படி அமைக்கப்பெற்ற ஆணைக்குழு அல்லது ஒருபொருள் குறித்து ஆய்வதற்காக, அல்லது புலனாய்வதற்காக அமைக்கப் பெற்ற குழு அல்லது விசாரணை மன்றம் ஆகியவற்றின் ஆய்வில் இருக்கும் பொருள் குறித்து விவாதம் எழுப்பும் வகையில் அமையும்தீர்மானம் சாதாரணமாக அனுமதிக்கப் பெறலாகாது."

ஆயினும் அவைகள் கடைபிடிக்கும் நடைமுறைகள் அல்லது அவற்றின் முன்னுள்ள பொருள்கள் அல்லது விசாரணை எந் நிலையில் உள்ளது என்பதைப் பற்றியதாக இருந்து, அவைகளின் ஆய்விக்குக் குந்தகம் ஏற்படுத்தக் கூடியதாக இருக்காது எனப் பேரவைத் தலைவர் திருப்தி அடைந்தால், அவர் தம் உசிதப்படி அத்தகைய பொருள் பற்றி மட்டும் அவையில் எழுப்புவதற்கு அனுமதிக்கலாம் என்று, அந்த வரம்புக்கு இந்தச் சட்டத்திலே எனக்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

அதேபோல், விதி 75-லே, 7வது பகுதியிலே, "சட்டப்படி அமைக்கப் பெற்ற விசாரணைக் குழு நீதி மன்றமாக அல்லது பகுதி நீதிமன்றமாக இயங்க சட்டப்படி அமைக்கப் பெற்ற ஆணைக் குழு அல்லது ஒரு பொருள் குறித்து ஆய்வதற்காக

அல்லது புலனாய்வதற்காக அமைக்கப்பெற்ற குழு ஆகியவற்றின் ஆய்வில் இருக்கும் எப்பொருளோடும் தொடர்புடையதாக இருத்தல் கூடாது" என்று அழுத்தம் திருத்தமாக அதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

விதி 81–லே, "சட்டப்படி அமைக்கப் பெற்ற விசாரணைக் குழு நீதிமன்றமாக அல்லது பகுதி நீதிமன்றமாக இயங்க சட்டப்படி அமைக்கப்பெற்ற ஆணைக் குழு அல்லது ஆய்வதற்காகவோ, புலனாய்வதற்காகவோ அமைக்கப் பெற்ற குழு இவற்றின் ஆய்வில் இருக்கும் ஒரு பொருள் பற்றி விவாதம் எழுப்பும் வகையில் அமையும் தீர்மானம் சாதாரணமாக அனுமதிக்கப் பெறலாகாது,

எனினும், அவற்றின் ஆய்வுக்கு எவ்வித இடையூறும் ஏற்படுத்தாது என்று பேரவைத் தலைவர் கருதினால், அவைகள் கடைப்பிடிக்கும் முறை குறித்தோ, எப்பொருளைப் பற்றி ஆராய அவை அமைக்கப்பெற்றன என்பதைக் குறித்தோ, விசாரணை எந்நிலையில் உள்ளது என்பதைக் குறித்தோ எழுப்பப் பேரவைத் தலைவர் தம் உசிதப்படி அனுமதிக்கலாம் என்று இருக்கிறது.

(முற்பகல் 10.50)

அதைத்தான் நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மன்றத்திலே சொன்னேன். உணர்ச்சிவசப்பட்டு எல்லை கடந்து வார்த்தைகள் வந்துவிடுமானால் அதைக் கட்டுப்படுத்துவது என்னால் இயலாத காரியம் என்பதையும், அதே நேரத்திலே எப்படிப்பட்ட வாதப் பிரதிவாதத்தையும் எதிர்க் கட்சித் தரப்பிலே கிளப்பி அதற்கு ஆளுங்கட்சித் தரப்பிலே ஒரு பதில் சொல்லப்படுமானால் அதற்கு நான் தீர்ப்பு அளிக்கிற நிலையிலே இல்லை என்பதையும், அதைப்போல இந்த மாமன்றத்திலே எழுப்பப்படுகிற பேச்சுக்களின் விளைவாக--மக்கள் மன்றம்தான் முடிவு கட்டமுடியுமே தவிர—இங்கே முடிவு எடுக்கமுடியாது என்பதையும் தெரிவித்து எனக்கு வழிகாட்ட வேண்டுமென்று தான் நான் கேட்டேனே தவிர வேறு ஒன்றும் இல்லை என்று மீண்டும் வற்புறுத்திச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

THIRU K.S.G. HAJA SHAREEF: Mr. Speaker Sir, we note he explanation you have given just now. The whole point would have been diffused if at the time the matter was taken up, the Government had said hat they are not guilty; that the matter is sub-judice and hat therefore, his need not be discussed. But the Government have made a statement on behalf of the Chief Minister. The Leader of the House and other Minister concerned have made a statement. Tha is why the Opposition Parties are now demanding a short discussion or a long discussion whatever it is, on this subject. The Hon. Speaker has to give a ruling as to what exactly is the position. If the Government had no issued a long statement, the matter would not have been raised today

திரு, ப. நெடுமாறன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அலுவல் ஆய்வுக் குழுவிலே ஒரு பிரசனையை அனுப்புவது என்பது இந்தச் சபையின் விவாத நேரத்தை வீணாக்காமல் இருப்பதற்கும் அதே நேரத்திலே இதுபோன்ற பிரச்சினைகளை சபையிலே பொதுவாக விவாதிக்க அனுமதித்தால் உணர்ச்சி வசப்பட்டு வேறு நிகழ்ச்சிகள் வந்துவிடக்கூடாது என்பதற்காகவும் தான் இந்தப்பிரச்சினையை தாங்கள் அலுவல்ஆய்வுக்குக் குழுவிற்கு அனுப்பிவிட்டீர்கள். இன்றைக்கும் அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தை நீங்கள் கூட்டி இருக்கிறீர்கள். இந்த விவாதத்தை அங்கே வைத்திருக்கலாம், இந்தச் சபையின் நடவடிக்கைகளை எப்படி நடத்த வேண்டுமென்று நான் உங்களுக்குச் சொல்லித் தருவதற்காக நான் இதை சொல்லவில்லை, தயவு செய்து தாங்கள் அப்படி எடுக்காதீர்கள். அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்திலே நடத்தவேண்டிய விவாதத்தை இங்கே எப்படி அனுமதித்தீர்கள் என்று எனக்குப் புரியவில்லை. இதன்மூலம் இந்தச் சபையின் நேரம் வீணாகியிருக்கிறது. ஆகவே அலுவல் ஆய்வுக் குழுவிலே வைத்து முடிவு எடுப்பதற்கு எல்லாக் கட்சித் தலைவர்களையும்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சபையின் நேரம் வீணாக்கப்படவில்லை. அலுவல் ஆய்வுக் குழுவிலே முடிவு எடுத்தோம். முன்வரிசையிலே இருக்கக்கூடிய தலைவர்கள்ஏதாவதுகருத்துக்கள் பேச விரும்பினால் அவர்களை பேச அனுமதிப்பது நல்லது என்று நாம் அலுவல் ஆய்வுக் குழுவிலே முடிவு எடுத்தோம். ஆகவே முன்வரிசையிலே உள்ள தலைவர்கள் பேச விரும்புகிறபோது என்னதான் கருத்துக்களை அவர்கள் சொல்கிறார்கள் என்று கேட்பது இந்த மன்றப் வாடிக்கையாகவும், மரபாகவும் வைத்துக் கொண்டிருக்கிறது. அதை அலுவல் ஆய்வுக்குழு ஏற்றுக் கொண்டிருக்கிறது. நேரக் கேடு ஒன்றும் கிடையாது. ஆனாலும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கருத்து இருக்க முடியும். அவர்களுக்கு சொல்ல உரிமை உண்டு. அலுவல் ஆய்வுக் குழுவிலே முடிவு எடுக்கப்பட்டது. உங்களுக்கு அந்த உரிமை இருப்பதன் காரணமாகத்தான் பேசிக்கொண்டிருக்கிறீர்கள் என்று கருதுகிறேன். அலுவல் ஆய்வுக் குழுவிலே எடுக்கப்பட்ட முடிவு, ஆகவே நான் ஏற்றுக்கொள்ள வேண்டியவனாக இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு, நெடுமாறன் இங்கே இந்தப் பிரச்சினையை எப்படி எழுப்ப அனுமதித்தீர்கள் என்று கேட்டார்கள். வெளியே நான் இருந்தாலும் அல்லது அறையிலே இருந்தாலும் கேட்டுக் கொண்டே இருந்தேன். அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்டியிருக்கிறோம், 11 மணிக்கு பேசலாம் என்றால் முடியாது, இதற்கு தீர்ப்பு வழங்கிவிட்டுத்தான் அங்கே போய் பேசவேண்டுமென்று இங்கே எதிர்க்கட்சித் தலைவர் சொன்னதை தயவுசெய்து உறுப்பினர்கள் மறந்துவிடக் கூடாது. சில நிர்ப்பந்தங்கள் சுமுகமாக

தீர்க்கப்படவேண்டும் என்ற நிலையில் தலைவர் காட்டுகிற நல்லுணர்ச்சியும் மற்றவர்கள் விட்டுக்கொடுக்கிற பாங்கும் ஏதோ சிலருக்குச் சாதகமாக அமைத்துக்கொள்ள திறமை இருக்கிறது என்பதல்ல, அந்த வாய்ப்பை அவர்கள் பெற்றுவிடுகிறார்கள் என்ற காரணத்தினாலே இப்படிப்பட்ட நிலைமைகள் உருவாகின்றன என்பதை வருத்தத்தோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன். அமைச்சரவையின் சார்பிலே அன்றைய தினம் ஏற்றுக்கொண்டது உண்மையிலேயே சட்டத்திற்குப் புறம்பானது தான். அதை மறுக்க முடியாது. பிரச்சினைகள் உருவாகிறபோது இங்கே சொல்லியிருக்கிறார்கள். நான் இருந்திருந்தால் அன்றேமறுத்து இருப்பேன், அதற்கு நேரம் இல்லாமல் போய்விட்டது, அதற்குஇயலவில்லை. அதேநிலைமை அப்போதே முடிந்து இருக்கும். திரும்பக் கேட்டார்கள். எப்போது கேட்டார்கள்? ஒன்றை நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டு இருக்கிறேன். நேரத்தை எடுத்துக் கொள்கிறேன் என்று. யாரும் தவறாகக் கருதாதீர்கள், காவல் துறை மானியத்தில் கேட்ட கேள்வியைப் பற்றி அதிலே எழுந்து கேட்டிருக்கலாம், எதிர்க்கட்சித் தலைவர் இன்னொரு பிரச்சினையில் பேசும்பொழுது இதை இணைத்தார்கள்.

அதற்கு நான் பதில் சொல்ல வேண்டிய கட்டாயம் எனக்கு ஏற்பட்டு விட்டது. அதனால் தான் இந்த அறிக்கை இங்கே வைக்கப்பட்டதே தவிர, இந்த அறிக்கையை வைக்க கூட நான் விரும்பவில்லை. காரணம் நீதி மன்றத்திலே இருக்கிற ஒன்றைப் பற்றி ஒரு விளக்கம் தருவது நியாயமல்ல. ஆனால் குற்றச்சாட்டு என்ற வகையிலே ஏதோ நான் அச்சப்படுவதைப் போலவும், அதை விளக்கம் தருவதில் ஏதோ சூழ்நிலை சரியாக இல்லை என்பதைப் போலவும் நிலைமைகள் வெளியே உருவாக்கப்படுவதால் தவிர்க்க முடியாமல் இந்த அறிக்கையை நான் நேராக வரமுடியாவிட்டாலும் மாண்புமிகு முன்னவர் அவர்கள் மூலமாக அதை படிக்க நான் கேட்டுக் கொண்டேன். அவர்களும் படித்தார்கள். ஆனால் அதோடு விடாமல் விவாதிப்பதற்கு கேட்ட பிறகுதான் சட்டத்தை தெரிந்தவர்கள், சட்டத்தை வைத்து ஏழு ஆண்டுகள் இந்த ஆட்சியை நடத்தியவர்கள் கேட்ட பிறகு இந்த கேள்வி வந்து இந்த சூழ்நிலை உருவாகி இருக்கிறதே தவிர நியாயப்படி நான் முன்னால் குறிப்பிட்டதைப் போல அந்த விதிகளை வைத்து, அதை அதற்கு உள்ளிட்டு அலுவல் ஆய்வுக் குழு தீர்மானத்தை எடுத்திருக்கிறது. அலுவல் ஆய்வு குழுவே இந்த விதிகளை மாற்றவேண்டுமென்ற நிலைமைகள் உருவானல் என்ன நிலைமை என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். என்ன தீர்ப்பு என்பதை தலைவர் அவர்கள் எப்படி சொல்ல முடியும் என்று எனக்கு தெரியவில்லை. ஹாஜா செரீப், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். எப்படி அனுமதித்தார்கள் என்றால் நான் இன்னமும் சொல்வேன். நம்முடைய பேரவைத் தலைவர் அவர்களை நான் குறைவாக மதிப்பிட இல்லை. எப்படியாவது சர்ச்சைகள் இல்லாமல்

இந்த சட்டமன்றம் நடந்து விட வேண்டுமென்று அவர்கள் அக்கறை காட்டுவதாலே உண்மையிலேயே ஆளும் கட்சியில் இருக்கிற எங்களுக்கு கொஞ்சம் சலுகைகள் குறைவாக இருக்கிறது. மற்றவர்களுக்கு சலுகைகள் அதிகமாக இருக்கிறது. இதை நாங்கள் அனுமதிக்கிறோம். இங்கே எங்களுடைய உறுப்பினர்கள் எவ்வளவு வேதனைபடுகிறார்கள் என்பதை நான் இங்கே சொல்லிதான் ஆக வேண்டும். மற்றவர்களுக்கு இருக்கிற அந்த வாய்ப்புகள் ஆட்சிக் கட்டிலிலே இருக்கிறவர்களுக்கு இல்லை. காரணம் நமது வீட்டு குழந்தை பேசாமல் இரு என்று அவர்கள் சொல்லிவிடுகிறார்கள். நாங்கள் கஷ்டப்படுகிறோம், எப்படியாவது சுமுகமாக நடக்கட்டும். ஆகவே உண்மையை நிருபிப்பதற்கு எங்களுக்கு வாய்ப்பு குறைவாக இருக்கிறது, என்று சொன்னாலும், மூன்று, நான்கு மாதங்களில் இந்த விஷயத்தைப் பற்றி உண்மைகள் வெளி வரப்போகிறது. அதுவரையில் தான் இந்த அறிக்கை வேலை செய்யும். தேர்தல் வந்தால் பயன்படும் என்று பார்த்துக் கொள்வார்களே தவிர உண்மை என்ன என்பது நீதிமன்றத்திலே ஆதாரங்கள் வெளி வருகிறபோது, அதற்குரிய விவரங்கள் வெளிவருகிற போது உண்மை வெளிவரும் என்பதை சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

4. அறிவிப்புகள்.

அ. மேலவைத் தலைவரிடமிருந்து வந்துள்ள செய்தி.

நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 1982.

நிதி ஒதுக்க (எண் 2) சட்டமுன்வடிவு, 1982.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவுகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்று பரிந்துரைகள் எதுவுமின்றி திருப்பியனுப்பப்பட்டதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

1. தமிழ் நாடு 1982–ஆம் ஆண்டு நிதி ஒதுக்க சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 22/1982).

2. தமிழ் நாடு 1982–ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 26/1982).

5. கவன ஈர்ப்புகள்:

(அ) கைத்தறி நெசவாளர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற நூல் மற்றும் கூலி குறைக்கப் பெற்றிருப்பது.

திரு. பூ. மு. நரசிம்மன்: தலைவர் அவர்களே, "செங்கல்பட்டு மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டத்தில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், நெசவாளர்களுக்குக் கொடுக்கின்ற நூல் மற்றும் கூலியைக் குறைத்ததினால் அவர்கள் படும் இன்னல்" குறித்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

செங்கை மாவட்டம் பள்ளிப்பட்டு வட்டத்தில் சுமார் 32 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் இயங்கி வருகின்றன.

பள்ளிப்பட்டு வட்டத்தில் செயல்பட்டு வரும் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் நெய்யப்படும் துணி ரகங்களையும், நெய்யும் உறுப்பினர்களின் எண்ணிக்கையையும் கருத்திற் கொண்டு, தேவையான நூலை, அரக்கோணம் மற்றும் காஞ்சிபுரம் கோ–ஆப்டெக்ஸ் நூல் விற்பனை நிலையங்கள் மூலம் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. இதற்கான "நூல் அட்டைகளும்" (Yarn Cards) அப்பகுதியிலுள்ள சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இச்சங்கங்களில் இயங்காத தறிகளை இயங்க வைப்பதின் மூலமும், புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதன் மூலமும் நெய்யும் தறிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது, அல்லது உற்பத்தி செய்யும் ரகங்கள் மாறும்போதும், மாற்றத்திற்கு ஏற்ப அவ்வப்போது நூல் ஒதுக்கீடுகளும் தேவையான அளவிற்கு அதிகரித்து வழங்கப்பட்டு வருகின்றன.

சங்கங்களில் பணமுடை ஏற்படும்போது அல்லது கோ–ஆப்டெக்ஸ் நூல் விற்பனை நிலையங்களில் தேவையான நூல் இருப்பில் இல்லாத காலங்களில் சங்கங்கள் நேரடியாக கூட்டுறவு நூற்பாலைகளிலிருந்து நூல் கொள்முதல் செய்து கொள்ள ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. தவிர, தற்பொழுது பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிலும், கோ-ஆப்டெக்ஸிலும் நிலவி வரும் நிதி நெருக்கடியை கருத்தில் கொண்டு, சங்கங்களுக்கு, கூட்டுறவு நூற்பாலைகளிலிருந்து தேவையான அளவிற்கு கடனுக்கு நூல் பெற்று வழங்க சரக உதவி இயக்குநர்கள் மற்றும் கூட்டுறவு நூற்பாலை நிர்வாக இயக்குநர்கள் கோரப்பட்டுள்ளனர்.

சங்க அங்கத்தினர்களுக்கு, அவர்கள் நெய்து தரும் ரகங்களுக்கேற்ப கூலி நிர்ணயம் செய்யப்பட்டு கூலி வழங்கப்பட்டு வருகிறது. நூல் விநியோகம் செய்யும்பொழுதே கூலி முன் பணமும் அவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு

பள்ளிப்பட்டு வட்டத்திலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க நெசவாளர்களுக்கு நூல் மற்றும் கூலி கொடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கின்றன. கூலியைப்பொறுத்த வரை, கலர் காடாவுக்கு மட்டும் மீட்டர் ஒன்றுக்கு ரூ. 1.50 என இருந்ததை சமீபத்தில் சங்கத் தலைவர்களின் அனுமதியின் பேரில் ரூ. 1.43 என குறைக்கப்பட்டிருந்தது. அதை மீண்டும் ரூ. 1.50 அளவுக்கு உயர்த்தி கொடுக்கப்பட வேண்டுமென்று சம்பந்தப்பட்டவர்களுக்கு தக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

திரு. பூ. மு. நரசிம்மன்: தலைவர் அவர்களே, விளக்க அறிக்கையில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தறிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது, அல்லது உற்பத்தி செய்யும் ரகங்கள் மாறும் போது, மாற்றத்திற்கு ஏற்ப அவ்வப்போது நூல் ஒதுக்கீடுகளும் தேவையான அளவிற்கு அதிகரித்து வழங்கப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் நெசவாளர்களுக்கு கொடுக்கப்பட்ட நூலை துணியாக உற்பத்தி செய்து சங்கங்களுக்கு கொடுக்கப்பட்டு தங்களிடம் நூல் இல்லாமல் வேலையற்று நெசவாளிகள் பள்ளிப்பட்டு வட்டத்தில் வ டுகிறார்கள். எனவே நெசவாளர்கள் துயர் துடைக்க வேண்டும். அவர்கள் பாதிக்கப்படாமல் இருக்க தேவையான நூல் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

(முற்பகல் 11.00)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கொடுத்த தகவலின்மேல் அரசு தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்.

திரு. பூ. மு. நரசிம்மன்: துணைத் தலைவர் அவர்களே, நெசவாளர்களுக்குக் கூலி உயர்வு கொடுக்கப்படும் என்று விளக்க உரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்காக நன்றி கூற கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் துணிகள் கொள்முதல் செய்யப்படாமல் தேங்கிக் கிடக்கின்றன. இதனால் நெசவாளர்களுக்குக் கூலி தரப்படாமல் போய்விடுகிறது. எனவே, உற்பத்தியாகும் துணிகளைக் கொள்முதல் செய்ய அரசு துரித நடவடிக்கை எடுக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபற்றி அரசு பரிசீலனை செய்யும்.

(ஆ) சென்னை நகரிலும் புறநகர்ப் பகுதிகளிலும் குடிதண்ணீர் தட்டுப்பாடு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருவாளர்கள் மு. அம்பிகாபதி, இரா. கருப்பையா, தி. கா. நல்லப்பன், ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ''சென்னை நகரிலும் புறநகர்ப் பகுதிகளிலும் குடிதண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் பொது மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

தற்சமயம் சென்னை நகரில் குடிநீர் தட்டுப்பாடு ஏதும் இல்லை. இனி நேரக்கூடிய தட்டுப்பாட்டினை செவ்வனே சமாளிக்க முன் ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

2. சென்னை நகருக்கு தற்போது வழங்கப்படும் குடிநீரின் அளவு நாளொன்றுக்கு சுமார் 245 மில்லியன் லிட்டர் (நாள் ஒன்றுக்கு 54 மில்லியன் காலன்) ஆகும். இதில் சுமார் 20 மில்லியன் லிட்டர் நிலத்தடி நீராகும். சென்ற ஆண்டு இதே சமயம் வழங்கப்பட்டதைவிட இது 10 மில்லியன் லிட்டர் அதிகமாகும். இதனால் தற்சமயம் குறிப்பாக சொல்லும் அளவுக்கு எந்த பகுதியும் பாதிக்கப்படவில்லை. வாரியத்துக்கு வரும் ஒரு சில புகார்கள் அவ்வப்பொழுது கவனித்து ஆவன செய்யப்படுகிறது.

3. 1981-ஆம் ஆண்டு சென்னை செங்கல்பட்டு மாவட்டங்களில் வடகிழக்கு பருவமழை குறைவாக பெய்தது யாவரும் அறிந்ததே. இதன் காரணமாக 1.1.82 அன்று சென்னைக்கு குடிநீர் வழங்கும் ஏரிகளாகிய பூண்டி, சோழவரம் மற்றும் புழலேரி நீர்பிடிப்புப் பகுதிகளில் முழு அளவில் 56 சதவிகிதமே இருந்தது (3621 மில்லியன் கன அடி/6483 மில்லியன் கன அடி). தற்போது வழங்கப்படும் அளவில் ஏரிகளில் உள்ள நீர் 1982 ஆகஸ்டு மாதம் வரை நீடிக்கும். கோடையில் மழை பெய்யாவிடில் அக்டோபரில் பருவமழை பெய்யும் வரை இந்த நீரையே நகருக்கு வழங்கவேண்டும். அப்படி நேர்ந்தால் ஏரிகளிலிருந்து வழங்கப்படும் தண்ணீர் படிப்படியாக குறைக்கப்படும். ஆனால் இதற்கு ஓரளவு ஈடு செய்ய நிலத்தடி நீரின் அளவு அதிகரிக்கப்

படும். மேலும் மதகுக்கு கீழேயுள்ள நீரை இறைத்து நகருக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. நீர்த்தேக்க நிலையங்களில் (Reservoirs) நீர்மட்டம் மதகுக்குக் கீழே குறைந்த நேரங்களில், ஆழ்துளைக் கிணறுகளிலிருந்து அதிக அளவு தண்ணீர் இறைத்து நகருக்கு வழங்கப்படும். எனவே எவ்வித தட்டுபாடுமின்றி குடிநீர் வழங்க முன்நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டு வறட்சியின்போது அமைத்த குழாய் கிணறுகளை புதுப்பித்தல், மேற்கொண்டு தேவையான இடங்களில் புதிய குழாய் கிணறுகள் அமைத்தல், இருக்கும் கிணறுகளை தூர் எடுத்து ஆழப்படுத்துதல் போன்ற பணிகள் நடத்த இப்பொழுதிருந்தே ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. தண்ணீர் தட்டுப்பாடுள்ள இடங்களில் தண்ணீர் தொட்டிகள் கூடுதலாக பொருத்தி லாரிகள் மூலம் அவைகளை அன்றாடம் நிரப்பி நீர் வழங்க ஏற்பாடுகள் நடந்து வருகிறது. இப்பணிகளைச் செய்ய ரூ. 72.46 இலட்சம் செலவிற்கு ஒரு திட்டத்தை தயாரித்து, சென்னை பெருநகர் குடிநீர் வாரியம் வேண்டிய நடவடிக்கைகளை இப்பொழுதிருந்தே எடுத்து வருகிறது.

4. சென்னை நகர் பகுதி நீங்கலாக, சென்னை நகரின் அருகாமையிலுள்ள தாம்பரம், திருவொற்றியூர், ஆலந்தூர், பல்லாவரம் நகராட்சிகள், பம்மல், அனகாபுத்தூர், சிட்லப்பாக்கம் ஆகிய பேரூராட்சிகள், ஆவடி, அம்பத்தூர் ஆகிய நகரியங்கள் ஆகியவற்றில் குடிநீர் வழங்குவதற்கான ஏற்பாடு பற்றிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

தாம்பரம் நகராட்சிக்கு பாலாற்றை ஆதாரமாகக் கொண்ட குடிநீ திட்டம் பயனிலுள்ளது. இத்திட்டம் நகராட்சியால் பராமரிக்சப்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் புதிதாக உருவாகியுள்ள பகுதிகளுக்கு குடிநீர் வழங்குவதற்கான திட்டம் தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் ஆய்வில் உள்ளது.

திருவெற்றியூரில், கடற்கரையோரத்தில் நிறுவப்பட்டுள்ள நீரூற்றுக் கிணறுகள் மூலம் தினசரி 18 இலட்சம் லிட்டர் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், உடனடித் தேவைக்காக ரூ. 8.72 இலட்சம் மதிப்பீட்டில் மணலி தொழிற்பேட்டைக்குச் செல்லும் நீரேற்றும் குழாயிலிருந்து நீரை எடுத்து வழங்கும் திட்டம் 1979ல் முடிக்கப்பெற்றுள்ளது.

1978-ல் ஆலந்தூர் மற்றும் பல்லாவரம் பகுதியில் ஏற்பட்ட கடும் தண்ணீர் பஞ்சம் காரணமாக, கீழ்க்கண்டவாறு நாள் ஒன்றுக்கு 0.4 மில்லியன் காலன் குடிநீர் வழங்கு திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஆலந்தூர் உடனடி குடிநீர்த் திட்டம்: திருவான்மியூரில் லிருந்து 0.2 மில்லியன் காலன் தண்ணீர் பெறப்பட்டு, ஆலந்தூரின் ஒரு பகுதிக்கு வழங்கப்படுகிறது. இது நீங்கலாக ஆலந்தூர் நகராட்சியில் 34 ஆழ்துளைக் கிணறுகள் போடப்பட்டு கைப்பம்புகள் மூலமாக குடிநீர் வழங்கப்படுகிறது.

பல்லாவரம் உடனடி குடிநீர் திட்டம்: இத்திட்டத்தின்கீழ் ன்றத்தூரின் நான்கு துளைக் கிணறுகளிலிருந்து தினசரி 0.2 மில்லியன காலன் தண்ணீர் பல்லாவரம் நகராட்சிக்கு வழங்கப்படுகிறது. மேலும் 29 ஆழ்துளைக் கிணறுகள் போடப்பட்டு கைப்பம்புகள் மூலமாக நகராட்சிக்கு தண்ணீர் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் வழியோரப் பேரூராட்சிகளான பம்மல், அனகாபுத்தூர் ஆகியவற்றிற்கும் பொதுக் குழாய்கள் மூலம் தண்ணீர் வழங்கப்படுகிறது.

ஆவடி மற்றும் அம்பத்தூர் குடிநீர்த் திட்டம்: ஆவடி னரகக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் தினசரி 3 மில்லியன் காலன் தண்ணீர் ரெட்ஹில்ஸ் (Red Hills) ஏரியிலிருந்து உந்தப்பட்டு ஆவடி கனரகத் தொழிற்சாலை (Heavy Vehicles Factory, Avadi) அம்பத்தூர் தொழிற்பேட்டை, அம்பத்தூர் நகரியம், ஆவடி நகரியம் மற்றும் பல தொழிலகங்களுக்கும் குடிநீர் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் வழங்கும் நீரை 6 மில்லியன் காலனாக உயர்த்துவதற்கான அபிவிருத்தித் திட்டம் செயலுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் சமீபத்தில் அம்பத்தூர் நகரியத்துக்கு உடனடித் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் அம்பத்தூர் உடனடி குடிநீர்த் திட்டம் ரூ. 40 இலட்சம் மதிப்பீட்டில் செயலுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

5. சென்னை பெருநகரைச் சுற்றியுள்ள ஏனைய புறநகர் பகுதிகளில் கடும் கோடையினால் வறட்சி ஏற்பட்டு குடிநீர் தட்டுப்பாடு உண்டாகுமானால் உடனடியாக அப்பகுதகளில் ஆழ்துளைக் கிணறுகள் நிறுவி, குடிநீர் வழங்குவதற்கு தேவையான இயந்திரங்களும் (துளையிடு கருவிகளும்) தளவாடப் பொருள்களும் தமிழ்நாடு குடிநீர் வாரியத்திடம் உள்ளன. எனவே, சென்னை புறநகர்ப் பகுதிகளில் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படுமானால் அவற்றை தவிர்க்க குடிநீர் வடிகால் வாரியம் க்க நடவடிக்கை எடுக்க இயலும்.

திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்த ஆண்டும் இல்லாத அளவு இந்த ஆண்டு தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என்பது மட்டு இல்லாமல் இயற்கையாக கோடையிலே பெய்யக்கூடிய சிறு மழைகூட இந்த ஆண்டு இல்லாததன் காரணமாக, குடிதண்ணீர் தட்டுப்பாடு மேலும் அதிகரிக்கக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கிறது. அமைச்சர் அவர்கள் அவரது அறிக்கையிலே இதைத் தீர்ப்பதற்குப் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த நிலைமை உருவாகியிருப்பதை கவனத்திலே எடுத்து சென்னை நகரத்திலும் அதைச் சுற்றியுள்ள புறநகர் பகுதியிலும் இருக்கக்கூடிய மக்களுக்கு

இன்றையதினம் ஏற்பட்டிருக்கிற இந்தப் பதட்டமான ஒரு நிலையைத் தணிப்பதற்கான முறையிலே குடிதண்ணீர் குறைவற்று கொடுப்பதற்கு வேறு என்ன நடவடிக்கைகள் எடுக்க அரசு உத்தேசித்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது 54 மில்லியன் காலன் ஒவ்வொரு நாளும் கொடுக்கப்பட்டு வருகிறது. இதை இந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரையில் தொடர்ந்து கொடுப்போம். அதற்கு மேல் கொடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுப்போம் என்பதை இங்கே விவர அறிக்கையிலே இரண்டாம் பக்கத்திலே சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் விரும்பினால் நான் படிக்கத் தயாராக இருக்கிறேன். கிணறுகளைத் தூர் எடுக்கத் தயாராக இருக்கிறோம். கிரவுண்ட் வாட்டர் பூமிக்கு அடியிலே இருக்கிற தண்ணீரை, எவ்வளவு வேகமாக எடுக்க வேண்டுமோ அவ்வளவு வேகமாக எடுத்துக் கொண்டு வரத் தயாராக இருக்கிறோம். அதே போல் ஆழ்துளை கிணறுகள் வைத்து தண்ணீர் எடுக்கத் தயாராக இருக்கிறோம். எப்படியிருந்தாலும், மக்கள் அவதிப்படாமல் பெற வேண்டுமென்பதற்காக ரூ. 72.46 இலட்சம் இதற்காகவே தனியாகவே ஒதுக்கி வேலை செய்ய இருக்கிறோம். இந்தப் பணம் போதவில்லையென்றால், money will not be a problem எவ்வளவு அதிகமாக வேண்டுமானாலும் செலவழித்து தண்ணீர் வழங்குவதற்கு சகல ஏற்பாடுகளும் அரசு செய்யும்.

திரு. நி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்சமயம் சென்னை நகரில் குடிதண்ணீர் தட்டுப்பாடு எதுவும் இல்லையென்று மாண்புமிகு அமைச்சருடைய அறிக்கை கூறினாலும், தண்ணீர் தட்டுப்பாடு உள்ள இடங்களில் தண்ணீர் தொட்டிகள் கூடுதலாகப் பொருத்தி லாரிகள் மூலம் அவைகளை அன்றாடம் நிரப்பி நீர் வழங்க ஏற்பாடுகள் நடந்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்கள். ஏற்கெனவே போடப்பட்டுள்ள அந்த ஆழ்துளைக் கிணறுகள் சென்னை நகரத்தில் அதிகமாக இருந்தும் லாரிகளில் தண்ணீர் விநியோகம் செய்ய வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, லாரியில் தண்ணீர் கொடுப்பது என்பது எந்தெந்த பகுதியிலே தண்ணீர் இல்லை என்று கவலைப்படுகிறார்களோ, அக்கறையோடு எங்களுக்கு சொல்லுகிறார்களோ அந்த இடத்திலே இரும்பு தொட்டி வைத்து லாரிகளில் தண்ணீர் கொண்டுபோய் தருகிறோம். இரும்புத் தொட்டி வைக்கமுடியாத அளவுக்கு இருந்தால் லாரிகளைக் கொண்டுபோய் மூலை முடுக்குகளில் எல்லாம் குழாய்கள்

இல்லாத இடங்களில் தண்ணீர் கொடுக்கிறோம். எப்படியும் தண்ணீர் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்கிறோம். லாரியிலே கொடுப்பதற்குக் காரணம் அங்கே குழாய்கள் இல்லாத காரணத்தால்தான். அதாவது 'பப்ளிக் ஃபவுன்டன்' பொதுமக்கள் உபயோகப்படுத்தும் நீர் கொடுக்கும் பகிர்மான குழாய்கள்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில், திருவொற்றியூரிலே கடற்கரையோரத்தில் நிறுவப்பட்டுள்ள நீருற்றுக் கிணறுகள் மூலம் தினசரி 18 இலட்சம் லிட்டர் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது என்று அமைச்சர் அவர்கள் கூறி இருக்கிறார்கள். ஒரு வேளை அந்தத் தகவல் அதிகாரிகளால் தவறாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றது என்று நான் கருதுகிறேன். காரணம் முந்தாநாள் நான் திருவொற்றியூர் சென்றிருந்தபோது குடிநீர் தட்டுப்பாடு மிகவும் கடுமையாக, மோசமாக இருக்கின்றது என்று என்னிடம் ஏராளமான பேர்கள் சொன்னார்கள். ஒரு வேளை அந்த 18 இலட்சம் காணாமல் இருந்திருக்கலாம். அப்படிப்பட்ட பகுதியிலே கூடுதலாக தண்ணீர் கொடுக்க அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா? அதேபோல சென்னைக்கு கிருஷ்ணா தண்ணீர் வரும் என்று சொல்கிறார்கள். விரைவிலே கொண்டு வந்து சென்னைக்கும், அதன் சுற்றுப்புற நகரங்களுக்கும் தட்டுப்பாடு இல்லாமல் தண்ணீர் கொடுக்க ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல 18 லட்சம் வழங்காமல் இருக்குமானால், அது தவறாக இருக்குமானால், அதை விசாரித்து அந்த அதிகாரிமீது, மிகக் கடுமையாக இன்குலூடிங் சஸ்பென்சன் நடவடிக்கை எடுக்கப்படும். அவர் சொல்வதைப்போல அந்த தண்ணீர் போதாது என்றால் அதைப் பற்றி விசாரிக்க குடிநீர் வாரிய அதிகாரிகள் மூலம் ஏற்பாடு செய்கிறேன். கிருஷ்ணா நதி நீரைப் பற்றி பிறகு விவரமாக விவாதிக்கலாம்.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) சம்பளம் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேறப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இச் சட்ட முன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச் சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

ஆ. எதிர்பாராச் செலவு நிதி (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவு 1982.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 29/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண்.29/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (இரண்டாவது திருத்த) (சட்ட முன்வடிவு சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 29/1982) நிறைவேற்றப்பெற வேண்டும்,

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப் பெற்றது.

---

*1982 ஏப்ரல் 3 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

ஆ. கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1982

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கேளிக்கைவரி (திருத்த) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

இ. கேளிக்கை வரி திருத்த சட்ட முன்வடிவு 1982.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கின்றது,

(ஈ) பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1982

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 30/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.

திரு என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி சட்டத்தினை மேலும் திருத்துவதற்காக கொண்டு வரப்பட்டுள்ள சட்ட முன்வடிவின் மீது இந்திய தேசிய காங்கிரஸ் சார்பாக என்னுடைய கருத்துக்களை உங்கள் முன்னாலே வைக்க விரும்புகிறேன். இந்த விற்பனை வரி என்பது மூதறிஞர் இராஜாஜி அவர்களால் தமிழகத்திலே முதன் முதலாக மது விலக்கு அமல் செய்யப்பட்ட நேரத்திலே காங்கிரஸ் கட்சிக் காலத்திலே கொண்டு வரப்பட்டது என்பதை நாம் அறிவோம். அதனாலே தான் இது ஆங்கிலத்திலே மெட்ராஸ் சேல்ஸ் டாக்ஸ் என்று சொல்லுவார்கள். இதனை முன் உதாரணமாகக்

---

*1982 ஏப்ரல் 3 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

கொண்டு ஏனைய மாநிலங்களும் இதனை கொண்டு வந்தது என்பதை நாம் அறிவோம்.

(முற்பகல் 11.10)

அரசாங்கத்தினுடைய வருவாயைக் கணக்கில் எடுத்துக் கொண்டு பார்ப்போமானால் அரசாங்கத்திற்கு மிக அதிகமாகத் தருகின்ற ஒரு துறையாக, இன்னும் சொல்லப்போனால், பொன் முட்டையிடும் தங்க வாத்தாக இந்த வணிக வரி இலாக்கா செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆனாலும் கூட என்ன காரணத்தாலோ வாய்ப்பு கிடைக்கின்ற நேரங்களிலே இந்த வணிக வரி சதவீதத்தை அதிகரிப்பது என்பது தொடர்ந்து ஒரு வழக்கமாக இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசாங்கத்தினுடைய பல்வேறு நல்ல திட்டங்களுக்காக வருவாயைப் பெருக்க வேண்டுமென்பதிலே கருத்து வேறுபாடு யிருக்கமுடியாது. ஆனாலும் இதை ஒரு சாக்காக வைத்துக் கொண்டு வணிகவரி சதவீதத்தை உயர்த்திக் கொண்டே போவோமானால் மற்ற மாநிலங்களைத் துணைக்கு அழைத்து அவர்கள் உயர்த்தியிருக்கிறார்கள் என்று சொல்லிக்கொண்டே போவோமானால். பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, நான் உங்கள் மூலமாக தெரிவித்துக்கொள்கிறேன். வரியை உயர்த்த உயர்த்த வரி ஏய்ப்பவர்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்ற முறையிலே அதிகமாக இருக்கிறது என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே வரியை 4 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாக உயர்த்துகின்ற அதே நேரத்திலே, 4,5 தடவைகள் நன்கு யோசித்து, நமக்கு எவ்வளவு வரி 5 சதவீதம் என்று சொல்லுகின்ற அந்தக் கணக்கை விட்டுவிட்டு, உண்மையிலே வணிக வரியை எந்த அளவிற்கு முறையாக இருக்கிறது அதை எப்படி வசூலிப்பது என்ற அளவில் அரசாங்கத்தினுடைய நிர்வாக இயந்திரத்தை இன்னும் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு, அதன் மூலமாக வரியை வசூலிப்போமானால், இன்றையதினம் இந்த 5 சதவீத வரியைவிட அதிகமாக நிதி அரசுக்குக் கிடைக்கும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இங்கே 4 சதவீதத்தை 5 சதவீதமாக உயர்த்துவது, உண்மையிலே அது மேல்நிலையிலே உள்ளவர்களை மட்டும் அல்ல, சாதாரண நிலையிலே இருக்கின்ற மக்களையும் பாதிக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன். இந்த 4 சதவீதத்தை 5 சதவீதமாக உயர்த்துகின்ற அதே நேரத்தில், ஏதோ சமுதாயத்திலே மேல்நிலையிலே வாய்ப்பும் வசதியும் உள்ளவர்கள்தான் பொருள்களை வாங்குகிறார்கள் என்று கருதாமல், பல்வேறு பொருள்களை இன்றையதினம் பொருளாதாரத் துறையிலே நலிந்தவர்கள்கூட வாங்குகின்றார்கள். அந்தப் பொருள்களின் மீது இந்த 4 சதவீதம் உயர்த்துகின்ற வரியை அவர்கள் மீது விழும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்றையதினம் இதனைக் கருத்தில்கொண்டுதான் வணிகப் பெருமக்கள் கோரிக்கையை முன் வைத்து ஒரு ஊர்வலமாக வருவதாகவும் நான் அறிகிறேன். ஆகையால் அரசாங்கத்தில் இதுமாதிரி உயர்த்துகின்ற நேரத்தில் ஒரு முறைக்கு 2 முறை யோசித்து உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இந்த அரசாங்கம் பட்டுத்துணிக்கு 5 சதவீதம் வரி என்று விதித்து அதை இப்போது ரத்து செய்திருப்பதை, அது காலம் கடந்த ஒன்றாக இருந்தாலும், அதை ரத்து செய்ததற்கு நான் அரசாங்கத்தை பாராட்டுகிறேன். ஆனால் அதே நேரத்தில் வரி போடுவதற்கு முன்னாலே இதையெல்லாம் நன்றாக யோசித்து மக்களைப் பாதிக்காத அளவிற்கு அரசாங்கம் வருகின்ற காலங்களிலே வரியை விதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒவ்வொரு தடவையும் வரியை விதித்துவிட்டு பின்னாலே எல்லோரும் சொன்னார்கள், எடுத்துவிட்டோம் பாருங்கள் என்று விளம்பரத்திற்காக வருகின்ற காலங்களில் செய்யவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், 2 பக்கத்திலே, 4வது பிரிவிலே, உட்பிரிவு ஏ-யில், மைக்கேராஸ்கோப் என்ற இனம் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதைத் தவிர்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். காரணம் என்னவென்றால், இந்த பொருள், வைத்தியத்துறையிலேயும். விஞ்ஞானத் துறையிலேயும், மிகவும் முக்கியமாகப் பயன்படுகின்ற காரணத்தால், இந்த மைக்கேராஸ்கோப் என்ற அந்த இனத்தை தள்ளுபடி செய்யலாம் என்று அரசாங்கத்திற்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நான் இங்கே முன்னாலே சொன்னதுபோல் அரசாங்கம் வரி விதிக்கின்ற நேரத்திலே கவனமாக இருக்க வேண்டும் இன்னும் சொல்லப்போனால் சிமெண்ட் மீது வரியை 10 சதவீதத்திலிருந்து 12 சதவீதமாக உயர்த்தலாம் என்ற அரசாங்கத்தின் தீர்மானம் இருக்கிறது. இதனாலே நடுத்தர நிலையிலே உள்ளவர்கள் வீடு கட்டுவதற்கு மிகவும் கஷ்டப்படுவார்கள். அதேநேரத்தில் வீடு வாடகையும் கூடுகின்ற காரணத்தினால், இதை அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களே, இந்த விற்பனை வரி போடுவதைப் பொறுத்தவரையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கொள்கை ரீதியாக எதிர்க்கிறது. விற்பனை வரி என்பது மறைமுகமான ஒரு வரி. மறைமுக வரி என்பது சாதாரண மக்கள்; குறிப்பாக நுகர்வோர்மீது போடப்படக்கூடிய ஒரு வரி. இந்த விற்பனை வரிதான் விலையேற்றத்திற்கு அடிப்படை காரணமாக இருக்கிறது. குறிப்பாக மத்திய அரசு ஆனாலும் சரி, மாநில அரசு ஆனாலும் சரி கொள்கை ரீதியாக நேர்முக வரி என்ற வருமான வரி போன்றவற்றை அதுவும் வசதி படைத்தவர்கள் மீது போடுகிற நேர்முக வரியை ஆண்டுக்காண்டு குறைத்துக்கொண்டே போவதும், அதே

நேரத்தில் பரவலாக, பெருவாரியாக இருக்கக்கூடிய குறைந்த வருமானம் உள்ள மக்கள் நுகர்கின்ற பொருள்களுக்குப் போடு கின்ற மறைமுகவரியை உயர்த்துவதுமாக இருக்கிறது. அந்த அடிப்படையில் இன்றைக்கு விற்பனை வரி மேலும் அதிகமாக உயர்த்தப்பட்டிருப்பது கண்டு வருந்துகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

பலமுறை விற்பனை வரி இப்போது 4% என்று இருப்பதை 5% ஆக உயர்த்த வேண்டிய அவசியம் என்ன? அதற்கான காரணத்தை அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மின்சாரப் பொருட்கள், மின்சார கருவிகள் மீது இருந்த 9% வரியை 10% ஆக உயர்த்தி இருக்கிறார்கள். இப்படிப்பட்ட வரி ஏற்றத்தினால் சாதாரண மக்கள்தான், சாதாரண நுகர்வோர்கள்தான் பெரும்பாலும் பாதிக்கப்படு கிறார்கள்.

அதைப்போல குழந்தைகள் சாப்பிடுகின்ற பிஸ்கட்; சாக்லெட் மற்றுமுள்ள இனிப்புகளுக்கு வரியை 8சதவீதத்திலிருந்து 10 சதவீத மாக உயர்த்தியிருக்கிறார்கள். இங்கே, பட்ஜெட்டிலே சிறு குழந்தைகள் மீது இந்த அரசு பரிவோடு நடந்துக்கொள்கிறது. ஒரு வேளையாவது அவர்கள் நல்ல உணவு உண்ணவேண்டும் என்பதற்காக 100 கோடி ரூபாய் திட்டத்தைக் கொண்டு வரு கிறோம் என்று சொன்னார்கள். ஆனால் இங்கே அந்த ஏழை எளிய குழந்தைகள் சாப்பிடுகிற பிஸ்கட், சாக்லெட், இனிப்பு களுக்கு வரியை உயர்த்தியிருக்கிறார்கள். மேட்டுக்குடியில் இருக்கிற குழந்தைகள் இந்தப் பொருட்களைச் சாப்பிடுகிறார்கள் என்று இல்லை. சாதாரண, ஏழை எளிய குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகளும் சாப்பிடுகிறார்கள். ஆகவே இந்த வரியைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல இன்றைக்கு எல்லாவிதமான சக்திகளினாலும் இயக்குகின்ற மோட்டார்களுக்கு, மின்சார பம்புசெட்டுகளுக்கு இருந்த வரிவை 6 சதவீதத்திலிருந்து 8 சதவீதமாக உயர்த்தியிருக் கிறார்கள். இதனால் பம்புசெட் விலை ஏறும்; விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள்.

அதைப்போல சிமெண்ட் மீதிருந்த வரி 10 சதவீதத்திலிருந்து 12 சதவீதமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. அதுவும் இன்றைக்கு சாதாரண மக்கள், ஏழை எளிய மக்கள் 1 மூட்டை 1½ மூட்டை சிமெண்ட் வாங்கும் போதுகூட இந்த வரி உயர்வின் காரணமாக விலை ஏறி, கஷ்டப்படுவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

அதைப் போன்று கைத்தறி நெசவாளர்களும் இன்றைக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நூல் விலை ஏறியிருக்கிறது, மற்ற சில பொருள்களும் விலை ஏறியிருக்கிறது. அதன் காரணமாக துணி விலை ஏறியிருக்கிறது. அதனால் நுகர்வோர்கள் குறைவு. அதனால் உற்பத்தி குறைவு, இப்படி பல்வேறு காரணங்களால் கைத்தறி நெசவாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் மீது இந்த அரசு பரிவோடு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் கைத்தறி நெசவாளர்கள் வாங்கிப் பயன்படுத்துகின்ற கூப்பு நூலுக்கும் விசைதறியில் பயன்படுத்தும் நூலுக்கும் வரியை உயர்த்தியிருக்கிறார்கள். 3 சதவீதமாக இருந்த வரி இன்றைக்கு 4 சதவீதம் என்ற அளவுக்கு உயர்த்தப்படும்போது விலை ஏற்றம் வரும் என்பதில் சந்தேகம் இல்லை. அப்படி வரும்போது நிச்சயமாக நெசவாளர்கள் பாதிக்கப்படுவார்கள். அதைப் போன்று கைத்தறி துணி வாங்குகிறவர்களும் பாதிக்கப்படு வார்கள். ஆகவே, இதை பரிசீலனை செய்ய வேண்டுமென்று கெட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று கச்சா ரப்பர், பைனாக்குலர் போன்ற பொருள்கள் மீதும் வரியை உயர்த்துவது சரியல்ல. பைனாக் குலர், மைக்ரோஸ்கோப் போன்ற விஞ்ஞான கருவிகளின் மீது வரி உயர்வு ஏற்பட்டால் அவற்றின் விலை உயர்ந்து, நியாயமான விஞ்ஞான சம்பந்தப்பட்ட வளர்ச்சிக்கு குந்தகம் ஏற்படும் என்ப தில் சந்தேகம் இல்லை. ஆகவே, இதையும் பரிசீலனை செய்து இதை ரத்து செய்யவேண்டும் அல்லது பழைய நிலையிலேயே இருக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11.20)

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த பொது விற்பனை வரி சட்டத்தைத் திருத்தி 4%-லிருந்து 5% ஆக விற்பனை வரியை உயர்த்துவது என்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கண்டிக்கிறது. காரணம் இந்த வரியைப் போடுவதால் பாதிக்கப்படுகிறவர்கள் பெரும் பாலும் ஏழை எளியவர்கள் தான். நாம் ஒரு புறத்திலே வரியை ஏற்றி, மறுபுறத்திலே அவர்களுக்குச் சலுகைக் கொடுத்தாலும் கூட, வாங்குகிற மக்கள் விலை ஏற்றத்தின் காரணமாக நிச்சய மாக பாதிக்கப்படுவார்கள். அதைப்போலவே, இந்த பல முனை வரியைப் பொறுத்தவரையில், சிறு வியாபாரிகளாக இருக்கக்கூடிய வர்கள் தங்களுடைய பொருள்களை வாங்கி விற்கிறபோது ஓரள விற்கு கணிசமாக அவர்கள் வரியைக் கட்டுவதற்கு தயாராக இருக்கிறார்கள். ஆனால், பெரும் வியாபாரிகள் இரண்டு கணக் குகளை வைத்துக் கொண்டு, வாங்குகிறவர்களையும், அரசையும் ஏமாற்றும் சூழ்நிலை இப்போது பலமுனை வரியின் காரணமாக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

1949–ஆம் ஆண்டிலே இந்த விற்பனை வரியைக் கொண்டு வந்ததற்கான காரணம், நோக்கம், அன்றையதினம் மதுவிலக்கை ரத்து செய்ததால், மதிப்பிற்குரிய ராஜகோபாலாச்சாரி அவர்கள் கொண்டு வந்தார்கள். ஆனால், சென்ற ஆண்டு நம் மது விலக்கை தளர்த்தியிருக்கிற காரணத்தால் — எடுக்கவில்லை என்று வைத்துக்கொண்டாலும் - நமக்கு 100 கோடி ரூபாய் ஆண்டு ஒன்றுக்கு வருவாய் வருமென்று கணக்கிடப்பட்டு இருக்கிறது. அப்படி வருமானம் வருகின்ற நிலை இருந்தும், இன்றைக்கு 4 சதவீதத்திலிருந்து 5 சதவீதம் என்று உயர்த்துவது வேண்டாம் என்பதை இந்த அரசு தயவுசெய்து பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, விவசாயிகள் வாங்கக்கூடிய மின் மோட்டார்கள், கைத்தறி நெசவாளர்கள் பயன்படுத்தக்கூடிய நூல், மற்றும் சாமான்கள் ஆகிய பொருள்களின்மீது இருக்கும் வரிகளையும் நாம் உயர்த்துகின்ற காரணத்தால், அவர்கள் பெரும்பாலும் பாதிக்கப்படுவார்கள் என்பதால், அவற்றைப் பரிசீலித்து, பலமுனை வரியிலிருந்தும் ஒரு முனை வரியாக அதனை, ஆக்கவேண்டும் என்று கேட்டு, முடிக்கிறேன்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தைத் திருத்துவதன் மூலம் 4 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாக விற்பனை வரியை உயர்த்துவதற்காகக் கொண்டுவந்துள்ள சட்டமுன்வடிவின் மீது காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் சார்பில் நான் சில கருத்துக்களைச் சொல்லவிரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல தடவை இங்கே உறுதி கூறியிருக்கிறார்கள். இன்றைக்கு வியாபாரிகள் இந்த விற்பனை வரி உயர்வை எதிர்ந்து, ஊர்வலமாக கோட்டைக்கு வருவதாகப் பத்திரிக்கையில் செய்தி பார்த்தோம். 4 சதவீதத்திலிருந்து 5 சதவீதம் என்ற அளவிற்கு விற்பனை வரியை உயர்த்துவது அவர்கள் எதிர்க்கிறார்கள். சில பொருள்களுக்கு ஒரு முனை விற்பனை வரி வேண்டும் என்று கேட்கிறார்கள், சில பொருள்களுக்கு வரி விலக்கு வேண்டும் என்று கேட்டிக் கொண்டிருக்கிறார்கள். இது நான் சொல்லிதான் அமைச்சர் அவர்களுக்கு தெரியவேண்டும் என்பது இல்லை. அன்றைக்கு மாண்புமிகு மூதறிஞர் ராஜாஜி அவர்கள் மதுவிலக்கை தீவிரமாக அமல்படுத்த வேண்டும் என்கிற நிலையில் இந்த விற்பனை வரியைக் கொண்டு வந்தார்கள். ஆனால் இன்றைக்கு மது விலக்கைத் தளர்த்தியதன் மூலம் அரசாங்கத்திற்கு மேலும் 100 கோடி ரூபாய் வருமானம் வருகின்ற நேரத்தில் இந்த வரி உயர்வு தேவைதானா என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

அதேபோன்று மாட்டுத் தீவனத்திற்கு உபயோகிக்கும் பொட்டுக்கடலைத் தூள், பருத்தித் தூள் ஆகியவற்றிற்கு வரி விலக்கு வேண்டும் என்று கேட்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர்

அவர்களும் பல தடவை உறுதி சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அமைச்சர் அவர்களிடத்தில் இது குறித்து அடிக்கடி கேட்டுக் கொண்டுவருவதால், இந்த தடவை அதற்கு வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்படி விற்பனை வரியைப் போடுவதன் மூலம், பாதிக்கப்படுபவர்கள் சாதாரண மக்கள்தான். எத்தனை சதம் உயர்த்தினாலும், அதனால் வியாபாரிகள் பாதிக்கப்போவது இல்லை. அவர்கள் மக்களிடத்தில் வசூலித்துக்கொடுத்து விடுவார்கள். ஆகவே, இந்த வரி உயர்வை ரத்து செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, பட்டுத் தரிகளுக்கு விதிக்கப்பட்ட வரியை அரசு ரத்து செய்தது. அது பாராட்டுக்குரிய ஒன்றாகும். அதைப்போலவே, விசைத் தறி நூல், கைத்தறி நூல் போன்றவற்றிற்கு 2 சதவீதத்திலிருந்து 4 சதவீதம் என்று வரி உயர்த்தியிருப்பதையும் ரத்து செய்யவேண்டும். நெசவாளர்கள் மிகவும் பாதிக்கப்படுவார்கள் என்பதால், அதை ரத்து செய்யவேண்டும் என்று காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

இனிப்புப் பொருள்களாகிய பிஸ்கட், சாக்லெட் போன்றவற்றிற்கு வரி விதிப்பது சரியல்ல. அந்த வரியை விதிக்க வேண்டாமென்று வியாபாரிகள் கோரும் கோரிக்கை நியாயமான கோரிக்கை. அதை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டு, உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, 1982 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்ட முன்வடிவை நான் வரவேற்கிறேன். அந்த விற்பனை வரிச் சட்டத்திலே ரிஜிஸ்ட்ரேஷன் பிரிவிலே ஒருசில நடைமுறைகளை மாற்றியமைக்கும்படி நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அப்படி திருத்தங்களைச் செய்தால் வரி ஏய்ப்பினைத் தடுக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. வெறும் கட்டணத்தை மட்டும் பெற்றுக்கொண்டு அந்த வியாபாரியைப் பதிவு செய்கின்ற சூழ்நிலை இருக்கின்றது. அப்படி இல்லாமல் அந்த வியாபாரத்திலே இருக்கின்ற பங்குதாரர்களின் ஃபோட்டோக்களையும் ரிஜிஸ்ட்ரேஷன் ஃபார்மிலே இணைத்து அவர்கள் கொடுக்கவேண்டும் என்ற நிலையினை உருவாக்கினால், வெளி மாநிலங்களிலே இருந்து இங்கே வந்து வியாபாரம் செய்கின்றவர்களில் பலர் இங்குள்ள வியாபாரத்தை மூடிவிட்டு வரிப் பாக்கியை வைத்துவிட்டு சென்றுவிடுகிற நிலைமையைத் தடுக்கலாம். அப்படி அதிகமாக இருக்கின்ற வரி ஏய்ப்பினைத் தடுப்பதற்கு அந்த ஃபோட்டோக்கள் இருந்தால் அதன்மூலம் அவர்களைக் கண்டுபிடிப்பதற்கு வாய்ப்பு இருக்கின்றது. ஆகவே,

அந்தப்பிரிவைச் சேர்த்து அதன்மூலம் வரி ஏய்ப்பினைத் தடுக்க வேண்டும். மேலும் அந்தத் துறையின் அதிகாரிகளுக்குக் கூடுதலாக அதிகாரங்களை வழங்கி வரி ஏய்ப்பினைத் தடுக்க நம்முடைய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் ரிஜிஸ்ட்ரேஷன் செய்கின்றபோது மிகவும் சாதாரணமாக பதிவு செய்யக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. அந்தச் சூழ்நிலையை மாற்றி வியாபாரிகள் பதிவு செய்யப்படுகின்றபோது அவர்களை பற்றிய முழு விவரங்களை அறிந்துகொள்கின்ற வகையிலே நான் கூறிய விதிமுறைகளைச் சேர்த்து அந்த வகையிலே மாற்றியமைக்க வேண்டுமென்று வேண்டி விரும்பிக்கேட்டுக் கொள்கிறேன்.

வரி ஏய்ப்பு அதிகமாக இருக்கின்ற காரணத்தால் அந்தத் துறையிலே நம்முடைய வருவாய்த்துறை அதிகாரிகள் அதிகமாகக் கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இது ஏன் ஏற்படுகின்றது என்றால் வியாபாரிகளைப் பதிவு செய்கின்ற காலத்திலே போதுமான செக்யூரிட்டிக் கொடுக்கப்படாத சூழ்நிலை இருப்பதுதான்; எனவே போதுமான செக்யூரிட்டி பெற்று இந்த வரி ஏய்ப்பினைத் தடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அடுத்து வியாபாரத் துறையிலே பில் ஆஃப் டிரேடிங் என்பது தமிழகத்திலே அதிகமாக வளர்ந்து வருகின்ற சூழ்நிலையை நாம் காண்கிறோம். ஆகவே அந்தத் துறையிலே பில் ஆஃப் டிரேடிங் என்ற ஃப்ராடைத் தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து நல்லமுறையிலே வரி ஏய்ப்பினைத் தடுக்க வழி ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன், அடுத்து விற்பனை வரித் துறையிலே அதிகாரிகள் நல்ல முறையிலே பணியாற்றுவதற்காக அவர்களுக்காக ஒரு ட்ரெயினிங் இன்ஸ்டிடியூட்டை நம்முடைய தமிழகத்திலே ஆரம்பித்து அந்தத் துறையின் அதிகாரிகள் அந்தச் சட்டத்தினை முறையாக தெரிந்து செயல்படுவதற்கு வழிவகுத்தால் நலமாக இருக்கும். விற்பனைவரி அட்வைசரிக் கமிட்டி போதுமான பலத்தை உள்ளடக்கியதாக இல்லை. எனவே The advisory Committe should be strengthened and reactivised. என்று நம்முடைய அமைச்சரவர்களைக் கேட்டு முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவைப் பற்றி நான் நீண்ட நேரம் விளக்கம் சொல்ல வேண்டியதில்லை என்று கருதுகிறேன். ஏனென்றால் இதற்கு முன்னாலே கொண்டுவரப்பட்ட வரவுசெலவுத் திட்டத்திலேயே அதுபற்றி குறிப்பிட்டு இன்றைக்கு இந்தச் சட்ட முன்வடிவினை நிறைவேற்றுகின்ற நேரத்திற்கு வந்திருக்கிறோம். அங்கே சொல்லப்பட்ட விளக்கத்திற்கு மேலும் விளக்கம் அளிக்கின்ற வகையிலே சிலவற்றைச் சொல்லி இருக்கின்றோமே தவிர ஒன்றும் புதுமையில்லை,

நம்முடைய அருமைச் சகோதரர் காங்கிரஸ் கட்சியினுடைய துணைத்தலைவர் திரு. சித்தன் அவர்கள் சொல்கிறபோது இது பொன்முட்டையிடும் வாத்தாயிற்றே, எனவே அடிக்கடி அதைத் தொந்தரவு செய்கிறீர்களே என்று கருத்துப்பட சொன்னார்கள். இது பொன்முட்டையிடுகின்ற வாத்து என்பதால்தான் அதைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு வாத்துக்கு சொந்தக்காரர்களாக உள்ளவர்களுக்கு இருக்கின்றது. மேலும் அந்த வாத்துக்கு நன்றாகத் தீனி போட்டால்தான் நன்றாக முட்டையிடும், பெரிய முட்டையாகப் போடும். ஆகவே அந்த வாத்தை நன்றாகப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு இந்த அரசுக்கு இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அந்த வாத்தை அறுத்துப் பார்த்தால் ஒரே ஒரு முட்டைதான் இருக்கும். அதற்கு மேல் முட்டை இருக்காது என்பதும் இந்த அரசுக்கு நன்றாகத் தெரியும்.

(முற்பகல் 11-30)

ஆகையினால்தான் நீண்ட நாட்களாக இருந்தும் இன்றைக்கும் கழுத்தை அறுக்கவில்லை. அதற்குப் பதிலாக அதற்கு நன்றாக தீனி போடப்படுகிறது.

இந்த ஆண்டுதான் புதிதாக வரி போட்டிருக்கிறோம். இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு புது வரிகள் போடவில்லை. பலவற்றிற்கு வரி தள்ளுபடி கொடுத்திருக்கிறோம். அதை வேண்டுமானால் இங்கே படித்துக் காண்பிக்க முடியும். இந்த வருடம்தான் வரி போடப்பட்டிருக்கிறது, புதிதாக. சென்ற ஆண்டு பிப்ரவரியில் இருந்து எவ்வளவு வரி கிடைத்ததோ அதை விட இந்த ஆண்டு பெப்ரவரி வரையில் 114 கோடி, 115 கோடி ரூபாய் அதிகமாக வந்திருக்கிறது என்று சொன்னால் பொன் முட்டை இடுகிற வாத்துக்கு எவ்வளவு நன்றாக தீனி போடுகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. புதிதாக வரி போட்டோம் என்று சொன்னார்கள். இந்த அரசுக்கு புதிதாக வரி போடவேண்டும் என்ற எண்ணம் இல்லை. ஆனால் புது வரிகள் போடாமல் பல முயற்சிகள் எடுக்கிறபோது அந்த முயற்சிகள் சில நேரங்களில் வெற்றி பெறுகிறது அந்த முயற்சிகள் வெற்றி பெறுகிறது. என்று சொல்கிறபோது அரசாங்க அதிகாரிகள் தீவிரமாக வேலை செய்ய வேண்டும், வரிகளை யார் யார் தரவேண்டுமோ அது சிந்தாமல் சிதறாமல் அரசாங்கத்திற்கு கொண்டுவருகிற

முயற்சியில் அவர்கள் ஈடுபட வேண்டும். இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு மூன்று நான்கு ஆண்டுகளாக எந்தப் புது வரியும் போடாமல் பல பொருள்களுக்கு வரி தள்ளுபடி கொடுத்தும் கூட இந்த ஒரு ஆண்டில் 115 கோடி ரூபாய் அதிகமாக வந்திருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும்.

சில சமயங்களில் சில வணிகர்கள் தவறுகள் செய்யும்போது அதைக் கட்டுப்படுத்துகிற அதிகாரம் சில இடங்களில் மாநில அரசுக்கு இருந்தாலும் சில இடங்களில் மாநில அரசுக்கு இல்லாமல் அதிகாரம் மத்திய அரசுக்குத்தான் இருக்கிறது. மத்திய அரசு என்று சொல்கிறபோது, தமிழ்நாட்டில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு இருக்கிறது என்பதால் இந்த அரசுக்கு மட்டும் ஒன்றைச் செய்கிறது என்று சொல்லவில்லை அவர்கள் செய்யக்கூடிய நல்ல காரியங்கள் இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள எல்லா மாநிலங்களுக்கும் அது எந்த மாநிலமானாலும் சரி, காங்கிரஸ் ஆட்சி இருக்கிற மாநிலமானாலும் சரி, கம்யூனிஸ்ட் கட்சி ஆளுகிற மாநிலமானாலும் சரி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆளுகிற மாநிலமானாலும் சரி, எல்லா மாநிலங்களுக்கும் கிடைக்கின்றன. ஆனால் அப்படிச் செய்யக்கூடிய சிலவற்றைச் செய்ய விட்டுவிடுகிறார்கள் என்பதைச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

புது வரி போட்டிருக்கிறீர்களே என்று காங்கிரஸ் கட்சி துணைத் தலைவர் திரு. சித்தன் அவர்கள் கேட்டார்கள். மைய அரசுக்கு எல்லா அரசுகளும் ஒரு கோரிக்கை விடுத்தது. சிலயிடங்களில் வரியை ஏமாற்றுகிறார்கள். கண்ஸைன்மென்ட் என்ற முறையில் சாமான்களைக் கொண்டு போகிறார்கள். வொர்க் கான்ட்ராக்ட் இருக்கிறது. ஒன்றைச் சொல்கிறேன். லிப்ட் இருக்கிறது. லிப்ட் செய்கிறவர்கள் எலக்ட்ரிக் லிப்ட் வைக்க வேண்டுமென்றால், அவர்களே, கான்ட்ராக்ட் எடுத்து விட்டால், அதற்கு யார் சொந்தக்காரரோ அவர்களுக்கு இதற்கு வரி போட முடியாது ஒருயிடத்தில் ஏர் கண்டிஷன் செய்ய வேண்டுமென்றால், அந்தக் கம்பனி கான்ட்ராக்ட் எடுத்துக் கொண்டால் அவர்கள் ஏ ஸி. வைத்தால் அதற்கு வரி போட முடியாது. இதுபோல் பல இடர்பாடுகள் உள்ளன. வேறு சில இடங்களில் பொருளின் விலை குறைவாக இருந்தால் சாமான்களை அங்கிருந்து வாங்கி வரும்போது அதற்கு வரி போட முடியாது. ஆக எல்லா மாநிலங்களும் மைய அரசுக்கு ஒரு வேண்டுகோள் விட்டிருக்கிறது. 46-வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தம் பற்றிய சட்ட முன்வடிவு நாடாளுமன்றத்தில் இருக்கிறது. அந்த அரசியல் அமைப்புச் சட்டத் திருத்தமே போதும், அதனால் நம் மாநிலத்திற்கு மட்டும் 15-ல் இருந்து 20 ரூபாய் வரை வருவாய் வரும். பலயினங்களில் மத்திய அரசு சார்பில் மாநில அரசுக்கு சங்கடங்கள் வருகின்றன. 1935 ப்ரொவின்ஷியல் ஆக்ட்படி

நம் நாட்டிற்கு சுதந்திரம் கிடைப்பதற்கு முன்பு மாநிலங்களுக்கு இருந்த அதிகாரங்கள் இப்போது மாநிலங்களுக்கு இருக்கக்கூடிய அதிகாரங்களை விட கூடுதலாக இருந்தது. அந்த அதிகாரங்களில் பலவற்றை மத்திய அரசு எடுத்துக் கொண்டு விட்டது, சில இனங்களில் வரி போட்டு மாநிலங்களுக்கு தரவேண்டிய அளவிற்கு தராத நிலை இருக்கிறது. மாநிலங்களுக்கு எவ்வளவோ வரவேண்டும். எத்தனையோ கோடி ரூபாய் மாநிலத்திற்கு வரவேண்டியது வரமுடியாமல் போய்விடுகிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். இவைகளையெல்லாம் நாம் எண்ணிப்பார்த்து விட்டு, மத்திய அரசுக்குச் சொல்லிச் சொல்லிப் பார்த்துவிட்டு வேறு வழியில்லாமல் இந்த வரியைப் போடுகின்ற அளவுக்கு வந்திருக்கிறோமே தவிர வேறல்ல என்பதை நான் மிகவும் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். எதற்காக வரி இந்த போடப்பட்டிருக்கிறது என்பதையும் நான் இங்கே ஏற்கனவே எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, ரயில்வேயிக்கு இன்றைக்கு போடப்பட்டுள்ள வரியில், இன்றைக்கு மத்திய அரசு மூலமாக மாநிலத்திற்கு 1 கோடி வருகிறது எவ்வள்வு வரவேண்டுமென்றுகணக்கிட்டால் 10 கோடி வரவேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையிலே தான், பல சங்கடங்கள் இருப்பதன் காரணமாகத்தான் இந்த அரசு வரி போட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் இந்த மானியக் கோரிக்கையிலேயே இதைபற்றியெல்லாம் விளக்கமாகத் தெரிவித்திருக்கிறேன். எந்தெந்த பொருளகளின்மீது வரி போட்டால் மாநில அரசுக்கு வருவாய் அதிகம் வருமோ அதற்கெல்லாம் மத்திய அரசும் வரி போட்டிருக்கிறது. அப்படி இந்த ஆண்டு மட்டும் எந்த அளவுக்கு வரி போட்டிருக்கிறார்கள், அதனால் அவர்களுக்கு எத்தனை ஆயிரம் கோடி ரூபாய் வருவாய் வருகின்றது என்ற ஒரு விளக்கத்தைச் சொல்ல வேண்டியிருக்கிறது. இந்த ஆண்டு மத்திய அரசு போட்டிருக்கும் வரியால் அவர்களுக்கு 539 கோடி ரூபாய் வரும். அது மட்டுமல்ல, இந்த ஆண்டு மத்திய அரசுக்கு வரக்கூடிய மொத்த வருவாய் எவ்வளவு என்றால் ரூ. 21,846 கோடி. அதிலே எல்லா மாநிலங்களுக்கும் அவர்கள் பிரித்துக் கொடுப்பது ரூ. 4,716 கோடிதான். இன்றைக்கு அவர்கள் எல்லாப் பொருள்களின்மீதும் வரி போடுகிறார்கள். இதைத் தவிர, மத்திய அரசு இன்னும் சிலவற்றை எடுத்துக்கொள்ளப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

மத்திய அரசு அப்படி சொல்லியிருப்பதற்கு, அது முடியாது என்று தெரிவித்திருக்கிறோம். வனஸ்பதி, டிரக்ஸ் அண்டு மெடிசன்ஸ், சிமென்ட், பேப்பர் மற்றும் பேப்பர் போர்ட்ஸ், பெட்ரோலியம் புராடக்ட்ஸ் ஆகியவைகளை அவர்கள் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று தெரிவித்தார்கள் இதன் மூலம் மட்டும் நம்முடைய மாநில அரசுக்கு ஆண்டுக்கு 106 கோடி ரூபாய் வருவாய் வருகிறது. ஆகவே. இது கூடாது என்று நாம் தெரிவித்துள்ளோம். எனவே, இப்படிப்பட்ட பல

சங்கடங்களை எதிர்த்துத் தான் இன்றைக்கு மாநில அரசு இந்த வரியைப் போட்டிருக்கிறது.

இன்னும் சொல்ல வேண்டுமானால், மாநில அரசு தான் மக்களுடைய தேவைகளைப் புரிந்து, அதற்கு வேண்டிய ஆக்கப்பூர்வமான காரியங்களையெல்லாம் செய்து வருகிறது; ஆனால், வளர்கின்ற வரிகளையெல்லாம் மத்திய அரசு எடுத்துக் கொள்கிறது; தேய்கிற வரிகளையெல்லாம் மாநில அரசுக்குக் கொடுக்கிறது. இதைத் தான் மாண்புமிகு உறுப்பினர் சொன்னபோது, வாத்து முட்டையிடுகிறது. அந்த வாத்துக்கு தீனி போட்டு, கொஞ்சம் அதிக முட்டைகளை, பெரிய முட்டைகளைப் பெறுவதிலே ஈடுபட வேண்டும். இன்றைக்கு இதை இந்த அரசு செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புதிதாக வரி போடவில்லை. ரப்பரை பற்றிச் சொன்னார்கள். ரப்பர் மீது வரி போடவில்லை; இதிலே பல பிரிவுகள் இருக்கின்றன. அதற்கு கிளாரிபிகேஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படியெல்லாம் இன்றைக்கு இந்த அரசு புதிதாக எந்த வரியையும் பாடவில்லை சில குறிப்பிட்ட இனங்களுக்கு வரி போடுவது பற்றி இதிலே விளக்கமாகச் சொல்லியிருக்கிறோம். இவைகள் மூலம் வரும் வரி அதிகமில்லை. 24, 25 கோடி தான் வருகிறது. மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்த்துத் தான் இந்த வரி போடப்பட்டிருக்கிறது. எனவே, இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொண்டு, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

> ''தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 30/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 முதல் 6 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

(முற்பகல் 11-40)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

> ''தமிழ்நாடு 1982-ம் ஆண்டு பொது விற்பனை வரி மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 30/1982) நிறைவேற்றப் பெற

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று. சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

(2) ஊராட்சிகள் (உள்ளூர் செஸ் மேல்வரி விதிப்பைச் செல்திறனாக்குதல்) சட்ட முன்வடிவு 1932.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

> ''தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (உள்ளூர் செஸ் மேல்வரி விதிப்பைச் செல்திறனாக்குதல்) சட்டமுன் வடிவு* சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.

துணைத் தலைவர் அவர்களே, 1958 ஆம் ஆண்டு தமிழ் நாடு ஊராட்சிகள் சட்டம் 1-2-1960 முதல் அமலுக்கு வந்தது. இச்சட்ட பிரிவு 116 இன் கீழ் உள்ளூர் செஸ் மேல்வரி விதிக்கப்பட்டு வந்தது. அப்பிரிவில் உள்ளூர் செஸ் மேல்வரி, அரசால் நிர்ணயிக்கப்படும் உச்சவரம்பிற்கு உட்படும் என்று கண்டிருந்தது. 1970 ஆம் ஆண்டு வரை உச்ச வரம்பு ஏதும் அரசால் நிர்ணயிக்கப்படவில்லை என்ற காரணத்திற்காக அது வரை விதிக்கப்பட்ட உள்ளூர் செஸ் மேல்வரி செல்லாது என சென்னை உயர்நீதி மன்றம் தீர்ப்பு அளித்தது. எனவே 1971 ஆம் ஆண்டில் ஒரு சட்ட திருத்தம் கொண்டுவரப்பட்டது. அதில் உள்ளூர் செஸ் மேல்வரியின் உச்சவரம்பு ரூ. 1.50 ஆக நிர்ணயிக்கப்பட்டது. இச்சட்ட திருத்தம் 21-8-1971-லிருந்து அமலுக்கு வந்தது.

இச்சட்ட திருத்தத்தில், அரசால் விதிக்கப்பட்ட உச்ச வரம்பு 1-1-1960-லிருந்து அமலுக்கு வரவேண்டுமென தெளிவாக குறிப்பிடப்படாமையால் சட்டத்தை மறுபடியும் தக்கவாறு திருத்தாவிட்டால் 21-8-1971 க்கு முன் விதிக்கப்பட்ட உள்ளூர் செஸ் மேல்வரி செல்லுபடி ஆகாது என உயர்நீதி மன்றம் மற்றொரு ரிட் மனுவில் சுட்டிக்காட்டி உள்ளது, எனவே உயர்நீதி மன்றத்தின் அறிவுரைக்கு இணங்க 1-1-1960 லிருந்து 21-8-1971 வரை ஏற்கெனவே விதிக்கப்பட்டு வசூலிக்கப்பட்ட உள்ளூர் செஸ் மேல்வரி விதிப்பை செல்திறன் ஆக்குவதற்காக இச்சட்ட திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆகவே இது அவசியமானது. இதிலே வேறு கருத்துக்கள் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இருக்காது என்று நினைக்கிறேன். இதற்கு மேல் ஏதாவது புதிய கருத்துக்கள் இருந்தால் மட்டும் தெரிவிக்குமாறு பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

திரு உ. சுப்பிரமணியன்: துணைத் தலைவர் அவர்களே, எப்படியிருந்தாலும் விவாதத்திற்கு வந்ததற்குப் பிறகு எங்களுக்குத் தோன்றுகிற யோசனைகளை சொல்வதில் தவறில்லை என்று கருதுகிறேன். உச்ச நீதி மன்றத்தில் சொல்லிய தீர்ப்பின் அடிப்படையில் இது கொண்டுவரப் பட்டிருக்கிறது. ஏற்கனவே வசூல் செய்யப்பட்டதைக் திருப்பிக் கொடுக்கவேண்டிய

---

* 1982 மார்ச் 29-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

அவசியம் வரும் என்ற கருத்திலே இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டு இருக்கிறது. அதைத் தான் நான் நாட்டின் விவசாயி மக்களின் சார்பாக முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன். முதலமைச்சர் அவையிலே இன்றைக்கு விவசாயிகளின் கடன்களை தள்ளுபடி செய்யுங்கள் என்றும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாடு விவசாயிகள் இன்றைக்கு பல்வேறு வரிகளுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள் பஞ்சாயத்து யூனியன் செஸ் பல வகையில் இன்றைக்கு உயர்த்தப் பட்டிருக்கிறது. 1½ ரூபாய் அல்லது 2½ ரூபாய் அளவுக்கு பொது மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட பிரதிநிதிகள் விலகியதற்குப் பிறகு அதிகாரிகள் ஆட்சியை மேற்கொண்டதற்குப் பிறகு உடனே உயர்த்தப்பட்டு இருக்கிறது. இதனால் அவர்கள் பல்வேறு வகைகளில் சிரமப்படுகிறார்கள். அடிப்படை நிலத் தீர்வையாக 10 ரூபாய் வசூலிக்கப்பட்டது. இன்றைக்கு ஏறக்குறைய 45 ரூபாய்க்கு கட்ட வேண்டிய நிர்ப்பந்த நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. உயர் நீதி மன்றத் தீர்ப்பின் வாயிலாக ஒரு சலுகை பெறக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறபோது அதை ஏன் அரசாங்கம் தடுக்க வேண்டும் என்று நான் விவசாயிகள் சார்பாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். ஏதோ சட்டத்தின் காரணமாக பாதிக்கப்பட்டிருப்பதை இப்போது காப்பாற்றுவதிலிருந்து தடுப்பதற்குக் காரணம் இல்லை. 10 ஆண்டுகள் செஸ் தான் நமக்கு கிடைக்கவேண்டும். அந்த செஸ் அற்பமானது என்று கருதினால் அந்த அற்பமான தொகையை ஏன் தள்ளிவிடக் கூடாது என்று நான் கேட்கவிரும்புகிறேன். நிலவரியை ரத்து செய்தாலே தமிழ்நாட்டு வருமானம் பாதிக்கப்படபோவதில்லை என்று சொல்கிற நேரத்திலே செஸ் என்று 2½ ரூபாய் வசூலிக்கப்படுகிறது. அகஸ்மாத்தாக கிடைக்கிற வசதியை இடையிலே அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டுத் தடுக்க வேண்டாம். விவசாயிகளுக்கு நன்மை கிடைக்கக்கூடிய வகையிலே ஒன்றும் குடி மூழ்கி போய் விடாது, அரசாங்கத்திற்கு கோடிக் கணக்கான நஷ்டம் ஏற்படப் போவதில்லை என்று சொல்லி இந்த சட்ட திருத்தம் தேவையில்லை என்று என்னுடைய அபிப்பிராயத்தை சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

திரு. செ. சிவசாமி: துணைத் தலைவர் அவர்களே. 1-1-1969—லேயிருந்து 21-8-7 வரை இந்த காலத்திலே போடப்பட்ட செஸ் சம்பந்தமாக இன்றைக்கு புதியதொரு சட்டத்தை கொண்டு வந்திருக்கிறார்கள். காலம் கடந்த சட்டம், ஏற்கெனவே காங்கிரஸ் அரசாங்கத்திலே கூட கைவிட்டு விடப்பட்ட சட்டம், என்று கூட சொல்லலாம். அவர்களே இதை வலியுறுத்தவில்லை. அவர்கள் காலத்திலே கோர்ட் தீர்ப்பு சொல்லப்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்கு ஏதோ சிறிய தொகை, நன்மை கிடைக்கும் என்ற முறையிலே இந்த கோர்ட் தீர்ப்பு அளித்திருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் பழைய பாக்கி வசூல் பண்ணுவதைப் போல மீண்டும் திருத்தம் கொண்டு வருவதன் மூலம் இதை திருப்பி கேட்காவிட்டாலும் பாக்கி இருப்பதை வசூல் செய்வதற்கு நிர்ப்பந்தம் இருக்கிறது

இப்படிப்பட்ட நிலைமையை கணக்கில் எடுத்துக்கொண்டு விவசாயிகளுக்கு நன்மை செய்யும் முறையிலே இதை வற்புறுத்தாமல் நிறுத்தி வைப்பதற்கான ஏற்பாட்டை செய்ய வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன்

திரு. டி. மணி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த ஊராட்சி ஒன்றிய செஸ் வரி சம்பந்தமாக ஏற்கனவே அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கத்தை தந்தார்கள். 1-1-61—லேயிருந்து 10 ஆண்டு காலத்திலே இருக்கிறவற்றை திருப்பி பிடிக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிற நிலைமைகள் வருகிறது என்று கூறினார்கள். ஆகவே நான் கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம் செஸ் வரியிலே ஏற்கனவே ஒரு ரூபாய் இருந்த இடத்திலே 1.50 செலுத்த வேண்டிய ஒரு கட்டாய தன்மை ஏற்பட்டுள்ளது. இதை தவிர்ப்பதற்கும் விவசாயிகளைப் பொறுத்த வரையில் நான் தெளிவாக கேட்டுக் கொள்வதெல்லாம் விவசாயிகளுக்கு தண்ணீர் வரி, நில வரி, ஏனைய வரிகள் இருக்கிறபோது செஸ்வரி வருகிற போது கிராமத்திலே இருக்கிற விவசாயிகளைப் பொறுத்தவரையில் இது எந்த அளவிற்கு துன்ப துயரங்களை ஏற்படுத்தும் என்பதை கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். குறிப்பாக விவசாயிகளுக்கு சுமைகளை குறைக்கிற அளவிலே ஒருமுனை வரியாக போட்டாலும் நன்றாக இருக்கும், ஏனென்றால் பல்வேறு விதமான வரிகள் தண்ணீர் வரி நில வரி என்ற இப்படிப்பட்ட வரிகளை சேர்த்து ஒருமுனை வரியாக கொண்டு வருவது சரியாக இருக்கும். இந்த புதிய செஸ் வரி ஏற்பாட்டை ஓரளவு தளர்த்தி விவசாயிகளுக்கு நன்மை கொடுக்கிற அளவிற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவர் அவர்களே, இந்த சட்ட திருத்தம் கடந்த 71 ஆம் ஆண்டு கொண்டு வந்தார்கள். ஆனால் கொண்டு வந்த சட்டம் சரியான சட்டமாக இல்லையென்பதற்காக தான் இப்போது உயர்நீதி மன்றத்திலே குறிப்பிட்டு காட்டியதை போல ஒரு திருத்தம் நாம் கொண்டு வந்திருக்கிறோம். குறிப்பாக ஏற்கனவே இந்த வரிகள் எல்லாம் வசூலிக்கப்பட்ட வரிகள். 1-1-60-லேயிருந்து 21-8-71 வரையில் வசூலிக்கப்பட்ட வரிகள் தான். புதிய வரி இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் நாம் போடவில்லை. ஏற்கனவே போட்ட வரி வசூலிக்கப்பட்ட வரி. அதற்கு ஒரு திருத்தம் கொண்டு வந்திருக்கிறோம், மேலும் ஊராட்சி மன்றங்களைப் பொறுத்தவரையில் மாண்புமிகு அண்ணன் சிவசாமி அவர்களுக்கும், மணி அவர்களுக்கும் நன்றாக தெரியும். நிதிநிலைமை எவ்வளவு மோசமாக இருக்கிறது ஊராட்சி ஒன்றியங்களுக்கு என்பதை மிகவும் நன்றாகத் அவர்களுக்குத் தெரியும். ஆகவே இவைகளை திருப்பி கொடுத்து விட்டால் ஊராட்சி மன்றங்களின் நிதிநிலைமை எப்படி இருக்கும் என்பதை தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஆகவே இது மிக முக்கிக்மான சட்டங் அந்தத் திருத்தம் முக்கியமாக தேவைப்படுகிறது என்கிற காரணத்திற்காக இதை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டு சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே இதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு ஊராட்சிகள் உள்ளூர் செஸ் மேல்வரி விதிப்பைச் செல்திறனாக்குதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (உள்ளூர் செஸ் மேல்வரி விதிப்பை செல் திறனாக்குதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 25/1982) நிறைவேற்றப் பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

(ஊ) இந்தியக் கூட்டாண்மை (தமிழ்நாடு திருத்த) சட்டமுன் வடிவு 1982

(முற்பகல் 11–50)

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1982 ஆம் ஆண்டு இந்தியக் கூட்டாண்மை (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு* (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 27/1932) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 மற்றும் அட்டவணை ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

---

* 1982 மார்ச் 30 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப் பற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: துணைத் தலைவர் அவர்களே, 1982 ஆம் ஆண்டு இந்தியக் கூட்டாண்மை (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டம் முன்வடிவு எண் 27/1932) நிறைவேற்றப் பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

7. அரசினர் தீர்மானம்

விதி 30- ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 30 (3)-ன்கீழ் இன்றைய நிகழ்ச்சி நிரலில் இனம் 4 அரசினர் சட்ட முன்வடிவுகள் (ஆய்வு செய்தல்) என்பதன் கீழ் வரிசை எண் V-ல் உள்ள தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 45/1980) (ஆய்வுக்குழு திருத்தி அமைத்தவாறு) என்பதைத் தள்ளி வைத்து விட்டு அடுத்து இனம் உள்ள 5-ல் நிர்வாகம் பற்றிய அவசரப் பொருள் குறித்து ஒரு மணி நேரத்திற்கு மேற்படாத குறுகிய கால விவாதம் என்பதை எடுத்துக் கொள்ள வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

ஒரு மணி நேர விவாதம்,

சேது சமுத்திர திட்டம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, நிர்வாகம் பற்றிய அவசரப் பொருள் குறித்து ஒரு மணி நேரத்திற்கு மேற்படாத குறுகிய கால விவாதம். திரு. செ. சிவசாமி விவாதத்தைத் துவக்கி வைப்பார்கள்.

திரு. செ. சிவசாமி: துணைத் தலைவர் அவர்களே. கீழ்க்கண்ட நிர்வாகம் பற்றிய அவசரப் பொருள் குறித்து ஒரு மணி நேரத்திற்கு மேற்படாத குறுகிய கால விவாதத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென மொழிகிறேன்:

''சேது சமுத்திரத் திட்டத்தை மீண்டும் அமுல் நடத்த அண்மையில் கமிட்டி அமைக்கப்பட்டுள்ளதாலும், தமிழ்நாடு பொருளாதார ரீதியில் நன்மை அடைவதாலும் ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்பை உண்டாக்கக் கூடியதாக இருப்பதாலும், கடலோர நீர்ப்போக்குவரத்து அதிகரிக்க சந்தர்ப்பமிருப்பதாலும், பெருங்கப்பல்கள் இலங்கையைச் சுற்றிக் கொண்டு வராமல் குறுக்கு வழியில் வருவதால் சிக்கனம் ஏற்படுவதாலும் மேற்படித் திட்டம் உடனடியாக எடுத்துக் கொள்ளப் வேண்டும்''.

பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் சம்பந்தமாக தொடர்ந்து ஆட்சியிலுள்ளவர்கள் பல தடவைகளிலே பேசிக் கொண்டு வருகிறார்கள். ஆனால், காலங்கடந்து எடுக்கப்பட்டாலுங்கூட இன்றைக்கு முக்கியமான திட்டமாகும். நல்ல திட்டமாகும் புரட்சிகரமான திட்டமாகும். பாக் ஜலசந்தியையும் மன்னார்வளைகுடாவையும் இணைக்கக்கூடிய திட்டம். உலக கப்பல் போக்குவரத்து மார்க்கத்தை இந்தியக் கப்பல் போக்குவரத்து மார்க்கத்துடன் இணைக்கக்கூடிய மிகப்பெரிய கால்வாய் திட்டம். அதுதான் சேதுசமுத்திர திட்டமாகும். தலைமன்னாருக்கும் தூத்துக்குடிக்கும் இடையிலே கிட்டத்தட்ட 22 மைல்கள் உள்ளன. ஆழமற்ற சடல் பாறைகள் தொடர்ந்து இருப்பதால், ஆழமற்ற கடற்பகுதியை ஆழப்படுத்தி இலங்கையைச் சுற்ற மல் குறுக்குப் பாதையில் செல்ல, தரைப் பகுதியாக இருந்தாலும் கடல்பகுதியாக இருந்தாலும் வெட்டி ஆழப்படுத்தி, கப்பல்கள் போகக்கூடிய நிலைமையை உருவாக்குவதுதான் சேதுசமுத்திர திட்டமாகும். இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலே உள்ள 2° மைல் நீர்ப் பகுதியிலே சுண்ணாம்புக் கல் பாறைகள் நிரப்பியிருப்பதன் காரணமாக, பெரிய கப்பல்கள் போக முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அதன் காரணமாக இலங்கையைச் சுற்றுவதால் மிகப்பெரிய பாதகங்கள் ஏற்படுகின்றன.

இது 1860—ல் கமாண்டர் டாயலர் அவர்களால் இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டது. 1861-ல் திரு டவுன் செய்ட்லால் என்பவராலும். 1862—லே சென்னை கவர்னர் அவர்களாலும், 1871 ஆம் ஆண்டு ஸ்டாடீதர்டு அவர்களாலும், 1872-லே ர பின்சன் அவர்களாலும் புரபோசல்கள் வைக்கப்பட்டன. இப்படியாக உருவாக்கப்பட்ட இத்திட்டம் 1-11-1955—லே இந்தியப் போரசால் டாக்டர் எ. ராமசாமி முதலியார் அவர்கள் தலைமையில் கமிட்டி அமைக்கப்பட்டது. இந்த கமிட்டி அமைக்கப்பட்ட பிற்பாடு பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, அந்தக் கடல் பகுதி முழுவதும் சர்வே செய்யப்பட்டு, அதற்காக ரிட்டையர்டு இன்ஜினியர் கோவில் பிள்ளை என்பவர் மிகவும் உதவிகரமாக இருந்திருக்கிறார். இர்வின் என்ற கப்பலின் உதவியால் அந்த கடற் பகுதி முழுவதும் சர்வே செய்யப்பட்டது. அதற்குப் பிறகு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் முக்கியமான பல சிபாரிசுகள் மட்டுமல்லாது, தூத்துக்குடி துறைமுகத் திட்டத்தையும் சேர்த்து ஒருங்கிணைந்த சேது சமுத்திர திட்டமாக உருவாக்கப்பட்டது. எங்களது தலைவர் எம், கல்யாணசுந்தரம் அவர்களால் 7.9.1955-ல் இந்த திட்டத்திற்கு திருத்தங்கள் கொண்டு வரப்பட்டு விரிவாக விவாதிக்கப்பட்டு இந்தச் சபையில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

1961-ல் கேப்டன் டேனிஸ் என்பவரால் மறுபடியும் திருத்தப்பட்டு 26 அடி ஆழத்தை 36 அடி ஆழமாக மாற்றப்பட்டுஏற்றுக் கொள்ளப்பட்டது, அதற்குப் பிறகு 12.9.1963-ல் மீண்டும் திருத்தப்பட்டு இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திலே சேர்க்கப்பட்டது. 27.2.1968—லே ஹை லெவல் கமிட்டி கூடி திட்டச் செலவு 25 கோடியை 4. கோடியாக திருத்தி உருவாக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதற்குப் பிறகு நீண்ட அமைதிக்குப் பின் இப்போது ஒரு கமிட்டி அமைக்கப்பட்டு கடந்த ஆண்டு ஆகஸ்ட் 9,10,11 தேதிகளில் விசாரணை செய்யப்பட்டுள்ளது. புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நமது அரசும் 77, 78, வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிட்டது. 1979, 80-லே குறிப்பில் காணப்படவில்லை. 81-லே மீண்டும் குறிப்பிடப்பட்டது. உலகத்தில் சூயஸ் கால்வாய், பனாமா கால்வாய், கீழ் கால்வாய் என்ற மூன்று மிக முக்கியமான கால்வாய்களைப் போல. இந்த நான்காவது கால்வாயாக சேதுசமுத்திர திட்டக் கால்வாயையும் மிகவும் முக்கியமான கால்வாயாக இருக்கிறது. இலங்கையைச் சுற்றி ஒரு பயணத்தில் 3.4 மைல் கூடுதல் சுற்று வருகிறது. போகவர 768 மைல்கள் கூடுதல் சுற்றவேண்டியதாக உள்ளது. அதனால் காலம் வீணாகிறது; எரிபொருள் வீணாகிறது.

இலங்கையைச் சுற்றி வருவதால் என்ன நிலைமை ஏற்படுகிறது என்றால், தூத்துக்குடி சென்னை நேர்வழி 316 மைல்கள்தான். இலங்கையைச் சுற்றுவதால் 768 மைல் கூடுதலாக சுற்றவேண்டியுள்ளது. இந்தத் திட்டம் நிறைவேறினால் ஆண்டுக்கு 90 லட்சம் டன் எடையுள்ள 2000 கப்பல்கள் போய் வருமென்றும் அதனால் ஆண்டுக்கு 1.35 கோடி ரூபாய் வருமானம் வருமென்றும் 39 லட்சம் செலவினங்கள் போக 96 லட்சம் மிச்சப்படுமென்றும் 1960, 61, 62 ஆய்வு புள்ளி விவரங்கள் கூறுகின்றன. இன்றைய நிலையில் கூடுதலாக மேலும் பல லட்சம் ரூபாய் மிச்சமாகும் என்று புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

1968-ல் 38 கோடியில் நிறைவேற்றமுடியும் என்ற திட்டம் 1981-82ல் 120 கோடியில் முடியும் நிலை உள்ளது. தற்போது எடுத்தாலும் கூட கிட்டத்தட்ட 6,7 ஆண்டுகள் ஆகும் திட்ட செலவு மேலும் அதிகமாகும். இதனால் தூத்துக்குடி துறைமுகம் வியாபாரத்தில் பெருகும். அதிகமான பெரும் கப்பல்கள் தங்கும் அரசுக்கு நல்ல வருமானமும் கிடைக்கும். எனவே இந்தியப் பேரரசு இதுவரையில் கடைபிடித்த காலதாமதத்தைத் தவிர்த்து செயலில் தீவிரமாக இறங்கி இந்தத் திட்டத்தை அமல் படுத்தவேண்டும். மீண்டும் அங்கே வற்புறுத்தவேண்டும். தற்போதைய கமிட்டிக்கு தமிழக அரசு என்ன ஆலோசனைகளை தெரிவித்திருக்கிறது என்பதைத் தெரிவதோடு இந்தத் திட்டத்தை உடனடியாக இப்போது எடுத்துக் கொண்டாலும்,

கிட்டத்தட்ட 130 கோடி ரூபாய்க்கு மேல் ஆகிவிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதிகச் செலவில் போடப்படுகின்ற இந்தத் திட்டம் வீணாகிப் போகக் கூடாது என்ற காரணத்தால் இதை மீண்டும் இங்கே வற்புறுத்த விரும்புகிறேன். தற்போது இந்தத் திட்டத்தின் பயனாக தூத்துக்குடி துறைமுகத்தில் வியாபாரம் பெருகும். அதிகப்படியான கப்பல்கள் நிற்கும். அரசுக்கு நல்ல வருமானம் வரும். தமிழ்நாட்டில் பொருளாதாரம் வளரும். தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல இந்தியப் பொருளாதாரம் வளரும். அதனுடைய பாதுகாப்பு மையங்கள் பெருகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(நண்பகல் 12.00)

அதுமட்டுமல்ல, மத்திய கமிட்டிக்கு உதவி செய்யும் முறையிலே மாநில கமிட்டி ஒன்றை அமைத்து, அந்தக் கமிட்டியின் மூலமாக எவ்வப்போது இருக்கக்கூடிய நிலமைக்குத் தக்கவாறு உன்னிப்பாக செயல்பட வேண்டுமென்றும், அதற்கான முறையிலே மாநிலக் கமிட்டியை அமைக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். இந்தக் கால்வாய் திட்டம் நிறைவேறுமானால் ஏற்படும் நன்மைகள் என்ன என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

1. வறட்சி மாவட்டமான ராமநாதபுரம் மாவட்டத்தில் மக்களுக்கு வேலைவாய்ப்பு பெருகும். தொழில் வளம் பெருகும் அதன் மூலம் மாவட்டத்தின் முன்னேற்றம் பெருகும்.

2. இலங்கையிலிருந்து வெளியேற்றப்படும் தமிழ் மக்களுக்கு குறிப்பாக இராமநாதபுரம் மாவட்ட மக்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் முறையில் கால்வாய் திட்டம் நிரந்தரப் பணி வேலைகளைக் கொடுக்கும்.

3. இலங் கயைச் சுற்றிக் கொண்டுபோகும் நிலைமையை மாற்றி தூரம். குறையும். எரிபொருள் மிச்சமாகும். ஒரு பயணத்திற்கு மட்டும், கிட்டத்தட்ட 67 ஆயிரம் ரூபாய் அந்நியச் செலவாணி மிச்சப்படுகிறது.

4. நேரமும் தூரமும் குறைவதால் எரிபொருள் மிச்சப் படுவதால் அதிகமான கப்பல்களை ஈடுபடுத்த முடியும்.

5. தூத்துக்குடி அனல் மின் நிலையத்திற்குத் தேவைப் படும் நிலக்கரி ஸ்பிக் நிறுவனத்திற்கான நிலக்கரி, ஆல்கலின் ரசாயனம், தொழிற்சாலைக்கு வேண்டிய தேவைப்படும் பொருள்களின் இறக்குமதி அளவு உயரும். மேலும் திருநெல்வேலி இராமநாதபுரம் மாவட்டங்களிலுள்ள இதர தொழற்சாலை களுக்கு வேண்டிய நிலக்கரியைக் கொண்டுவரமுடியும்.

6. ஐரோப்பிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதில் 80 சதவீதமும், இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்வதில் 20 சதவீதமும் கப்பல்கள் மூலம் நடைபெறுகிறது. இவைகள் இலங்கையைச் சுற்றுவதால் நேரம், செலவு, எரிபொருள், அதிகமாக இருக்கிறது. இவைகள் எல்லாம் குறைந்தால் கப்பல் வாணிகம் பெருகும். உப்பு ஏற்றுமதியும் பெருகும். எப்படி என்றால், இந்த திட்டத்தின் மூலமாக நாம் வங்காளத்திற்குத் தேவையான உப்புகளை ஏற்றுமதி செய்ய முடியும். அதோடுகூட உப்பு ஏற்றிக் கொண்டு செல்கின்ற கப்பல்கள் திரும்பி வரும் போது, நமக்குத் தேவையான நிலக்கரியை அங்கிருந்து கொண்டு வர வசதியாக இருக்கும்.

அதுமட்டுமல்ல, இந்தத் திட்டம் மிக முக்கியமான திட்டம். காரணம் இது தேச பாதுகாப்பிற்கு மிகவும் உதவியாக இருக்கும். இலங்கையைச் சுற்றிக்கொண்டு போவதால் ராணுவ ரகசியங்களை அயல்நாடுகள் தெரிந்து கொள்ளும் சந்தர்ப்பம் அதிகமாக இருக்கிறது. இன்றைக்குப் பார்ப்போமானால் நம்முடைய ஆரம்ப காலத்திலே வடபகுதியிலேயிருந்துதான் இந்தியாவிற்கு ஆபத்து இருந்தது. ஆனால் வடபகுதியிலும்கூட ராணுவ முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பலத்த ஏற்பாடு செய்துகொண்டு தாக்குதல் வராத அளவிற்கு தடுக்கப்படுகிறது. ஆனால் இன்றையதினம் எந்த இடத்திலேயிருந்தும் தாக்குதல் வரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதன் காரணமாக குறிப்பாக தமிழகத்திலேகூட தாக்கக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. எனவே இந்தத் திட்டத்தின் மூலமாக கடலோரப் பகுதி முழுவதுமே, சென்னையிலிருந்து தென் பகுதி முழுவதுமே இங்கே ராணுவ முக்கியத் துவம் வாய்ந்த நிலையை உருவாக்க, தேசத்தினுடைய பாதுகாப்பிற்கு இது ஒரு முக்கியமான திட்டம். இந்த திட்டத்தை உடனடியாக கொண்டுவரவேண்டும், என்று நான் மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கிழக்கு கடற்கரை ரோடு அபிவிருத்தி திட்டம், இதன் மூலமாக போக்குவரத்து அதிகரிக்கும், இந்தக் கிழக்கு கடற்கரை ரோடுகளைப் பொறுத்தவரையில் பல கோடிக்கணக்கான ரூபாய் செலவில் பாலங்கள் கட்டப்பட்டு அந்த ரோடுகள் எல்லாம் அபிவிருத்தி செய்யாததன் காரணமாக இந்த நாட்டினுடைய பந்தோபஸ்து, அந்த ரோடுகள் போடுவதை துரிதப்படுத்துவதன் காரணமாக இருக்கிறது. இந்த திட்டம் நிறைவேறினால், அந்த ரோடுகள் பலப்படும். இந்த திட்டம் நிறைவேறினால், தேசத்தின் பாதுகாப்பும் பெருகும். போக்குவரத்தும் பெருகும் என்று நான் சொல்லிக் கொள்கிறேன். ஆகவே, மிக முக்கியமான இந்த திட்டத்தைத் தாமதப் படுத்தாமல் அந்த தென் பகுதியிலே குறிப்பாக மத்திய அரசாங்கம் இன்றைக்குத் தமிழகத்தைப் பொறுத்தமட்டில் இருக்கக்கூடிய நிலைமையைப் பார்ப்போமானால் எடுப்பார்

கைப்பிள்ளைப் போல் இருந்துகொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட திட்டங்களை நிறைவேற்ற வேண்டும். அதுமட்டுமல்ல தென் பகுதியிலே உருவாக்கப்பட்டு இன்றைக்கு இருக்கக்கூடிய அகல ரயில் திட்டங்கள் எல்லாம் கைவிடப்படக்கூடிய ஒரு நிலைமை இருக்கிறது.

அதுமட்டுமல்ல, அனல் மின் திட்டம், அணு மின் திட்டம் போன்றவைகள் எல்லாம் உடனடியாக சமுதாயத்திற்குத் தேவைப்படுகின்ற திட்டங்கள் எல்லாம் இன்றைக்குக் கைவிடப் பட்டிருக்கின்ற நிலைமை இருக்கிறது. அதேபோல், சேது சமுத்திர திட்டம். இந்த திட்டத்தை வற்புறுத்தும் முறையிலே தமிழக சட்டமன்றப் பேரவையில் ஒரு தீர்மானத்தின் மூலமாக வலியுறுத்தி உடனடியாக இந்த ஆண்டு இந்த திட்டத்தை மத்திய அரசு ஏற்றுக்கொள்ள ஒரு ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சேது சமுத்திரம் திட்டம் பற்றி இங்கே ஒரு மணி நேர விவாதத்தை எடுத்துக்கொண்ட மாண்புமிகு சபாநாயகர் அவர்களுக்கு முதலிலே நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

கட்சி வேறுபாடு இல்லாமல் இந்த மன்றத்திலே இருக்கக் கூடிய அனைத்து உறுப்பினர்களும் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்பதிலே அக்கறை கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாடு முழுவதிலும் இருக்கக்கூடிய மக்கள் இந்தத் திட்டம் எப்போது நிறைவேற்றப்படும் என்று பலவாண்டு காலமாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இன்று நேற்று அல்ல. 18[illegible] ஆம் ஆண்டிலிருந்து ஏறத்தாழ 120 ஆண்டுக் காலமாக இந்தத் திட்டத்தைப் பற்றி தமிழ்நாட்டிலே பேசிப் பேசி சலித்துப்போய் விட்டது. 1[illegible] ஆம் ஆண்டில் கமாண்டென்டன்ட் டெயிலர் என்ற ஆங்கிலேய எஞ்சினியர் 50 இலட்சம் ரூபாய் செலவில் இந்தத் திட்டத்தை வகுத்துக் கொடுத்தார். 186[illegible]ல் இன்னொரு ஆங்கிலேய எஞ்சினியர் ராபர்ட் சன் என்பவர் 60 இலட்சம் ரூபாய் செலவில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றலாம் என்று சொன்னார். 1872ல் சர் ஜான் கூட்டே என்பவர் 1,25,0[illegible],000 ரூபாய் செலவில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றலாம் என்று சொன்னார்கள். 1921 ஆம் ஆண்டிலே சென்னை மாநில அரசு இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று ஒரு முயற்சியை எடுத்தது. இலண்டனில் உள்ள பிரிட்டிஷ் அரசாங்கம்தான் பணம் ஒதுக்க வேண்டியிருந்ததால் அவர்கள் பணம் தர மறுத்துவிட்டார்கள். ஆகவே, மீண்டும் இந்தத் திட்டம் கிடப்பில் போடப்பட்டது. 1945 ஆம் ஆண்டில் இந்திய அரசு அன்றைக்கு பிரிட்டிஷ் ஆட்சியில் இருந்தபோது இதற்கு போர்ட் டெக்னிக்கல் கமிட்டி ஒன்றை அமைத்தது. அந்தக் கமிட்டி தன்னுடைய ரிப்போர்ட்டை கொடுத்தது. அதற்குப் பின்னரும் இந்தத் திட்டம் கிடப்பில் போடப்பட்டது.

அதன் பிறகு 1955-ல் டாக்டர் ஏ. இராமசாமி முதலியார் தலைமையில் ஒரு கமிட்டியை மத்திய அரசு அமைத்தது. இந்தக் கமிட்டி பலதடவை கூடி, ஆராய்ந்து ஒரு அறிக்கையை மத்திய அரசுக்கு அளித்தது. 1955-ல் போடப்பட்ட இந்தக் கமிட்டியின் அறிக்கையும் கிடப்பிலே போடப்பட்டது. 1963-ல் மத்திய அமைச்சரவையின் எமர்ஜென்சி கமிட்டி கூடி இந்த சேதுசமுத்திரத் திட்டம் இந்திய பாதுகாப்புக்கு இன்றியமையாத ஒரு திட்டம் என்பதால் 4-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று முடிவு செய்து அறிவித்தது. ஆனாலும், இத்திட்டம் அமுல்நடத்தப்படவில்லை. 1965 ஆம் ஆண்டில் மீண்டும் இதுபற்றி ஆராய வி. சி வெங்கடேஸ்வரன் தலைமையில் ஒரு கமிட்டி போடப்பட்டது. அவர்களும் சுற்றி, ஆராய்ந்து, அந்தத் திட்டத்தை 37 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றலாம் என்று சொல்லி, ஒரு அறிக்கைத் தயாரித்து மத்திய அரசுக்குக் கொடுத்தார்கள். ஆனாலும், அந்தக் கமிட்டி அறிக்கையை மத்திய அரசு ஏற்றுக் கொள்ளவில்லை.

அதற்குப் பின்னால் 1981 ஆம் ஆண்டு மத்திய நிதி அமைச்சராக இருந்த ஆர். வெங்கட்ராமன் அவர்கள் இந்தத் திட்டத்தைப் பற்றி ஒரு அறிவிப்பு கொடுத்தார்கள். இந்தத் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. இதற்கு 110 கோடி ரூபாய் செலவாகும்: இந்தத் திட்டத்தை அரசாங்கம் விரைவிலே எடுத்துக் கொள்ளும் என்றும் உறுதிமொழி கொடுத்தார்கள். அதன் பின்னால் 1981 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் மீண்டும் மத்திய அரசு கமிட்டி போட்டது. எச். ஆர். இலட்சுமி நாராயணன் தலைமையில் ஒரு கமிட்டி, போட்டு ஆய்வு நடத்த மத்திய அரசு உத்தரவு போட்டிருக்கிறது.

ஆக, ஏறத்தாழ 120 ஆண்டுக்காலமாக பிரிட்டிஷ் ஆட்சியில் 9 கமிட்டிகளும், சுதந்திரம் வந்ததற்குப் பின்னால் நம்முடைய சுதந்திர ஆட்சியில் 3 கமிட்டிகளும் ஆக 12 கமிட்டிகள் வரிசையாக அமைக்கப்பட்டு அந்த கமிட்டிகளுடைய அறிக்கை அரசாங்கத்திற்குக் கிடைத்த பின்னாலும் இன்னும் இந்தத் திட்டம் அமுலுக்கு வரவில்லை. இன்னும் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படவில்லை என்று வருத்தத்தோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(முற்பகல் 12.10)

மதிப்பிற்குரிய டாக்டர் ஏ. இராமசாமி முதலியார் கமிட்டியினர் அந்தத் திட்டத்தைப் பற்றி தெளிவாகச் சொல்லி இருக்கிறார்கள். தூத்துக்குடித் துறைமுகத் திட்டமும், சேதுசமுத்திரத் திட்டமும் ஒன்றுடன் ஒன்று பிணைக்கப்பட்டு, இணைபிரிக்க முடியாதவையாகும். தூத்துக்குடி துறைமுகத்திற்கும், சேதுக் கால்வாய்க்கும் உள்ள உறவு என்பது கொழும்புத் துறைமுகத்திற்கும் இலங்கையைச் சுற்றிச் செல்லும் கடற்பாதைக்கும் உள்ள

உறவுக்குச் சமமானது. இரண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்திற்குள்ளாகவே இத்திட்டத்தை நிறைவேற்றி விடலாம் என்று சர் ஏ. இராமசாமி முதலியார் கமிட்டி அறிக்கை சொல்கிறது. ஆனால் அந்தக் கமிட்டியின் முடிவுகள், பரிந்துரைகள் ஆகியவற்றை மத்திய அரசு செயலாற்றுவதற்கு எடுத்துக் கொள்ளவில்லை. அந்தத் திட்டத்தாலே என்னென்ன பலன்கள் விளையும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் சிவசாமி அவர்கள் அவற்றைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். நானும் சிலவற்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(1) மேற்கு கடற்கரையிலிருந்து சென்னை செல்லும் தூரத்தில் 350 மைல் குறையும்,

(2) இலங்கையைச் சுற்றாமல் கப்பல்கள் வருவதால், ஒரு நாள் முதல் $1\frac{1}{2}$ நாள் வரையில் கப்பல் பயணம் மிச்சமாகும்.

(3) இந்தத் திட்டத்திற்காக அரசாங்கம் போடும் முதலீட்டின் பேரில், முதலாண்டு $4\frac{1}{2}$ சதவீதம் வட்டி அளவிற்கு வருமானம் வரும். இந்தத் திட்டம் முடிந்த 11-வது ஆண்டில் இருந்து 7 சதவீதம்வட்டித் தொகை அளவிற்கு வருமானம் கிடைக்கும். 15-வது ஆண்டில் இருந்து $8\frac{1}{2}$ சதவீதம் வட்டி அளவிற்கு வருமானமாக கிடைக்கும் 30-வது ஆண்டில் இருந்து 14 சதவீதம் வட்டி அளவிற்கு வருமானமாகக் கிடைக்கும். ஆகவே இந்தத் திட்டம் லாபகரமான திட்டம்.

(4) இந்தச் சேது கால்வாயைப் பராமரிக்கும் செலவும் குறைவாக இருக்கும். அதிகம் இருக்காது;

(5) கால்வாயில் செல்லும் கப்பல்களின் மூலம் கிடைக்கும் வருமானத்தில் 80 சதவீதம் அந்நியச் செலாவணி என்கிற வகையில் நமக்குக் கிடைக்கும்.

(6) தூத்துக்குடி துறைமுகமும் இதன் மூலம் மிகப் பெரிய வளர்ச்சியை அடையும்.

(7) தூத்துக்குடி துறைமுகம்—சேது சமுத்திரக் கால்வாய் இரண்டும் சேர்ந்து தென் மாவட்டங்களில்—குறிப்பாக-மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி-ஒரு மிகப் பெரிய பொருளாதாரப் புரட்சியை ஏற்படுத்தும். அந்த மாவட்டங்களில் இருந்து ஏற்றுமதி, இறக்குமதி ஆகியவற்றைப் பெருக்கும். வணிகம் வளம் பெறும். புதிய புதிய தொழில்கள் அந்த மாவட்டங்களில் தோன்றும். இதன் காரணமாக அங்கேயுள்ள மக்களின் வாழ்க்கைத் தரம் உயரும்.

(8) கடற்படைக் கப்பல்களுக்கும், வாணிபக் கப்பல்களுக்கும் பாதுகாப்பான கால்வாயாக இது விளங்கும். ஏனென்றால், புயல் அபாயமுள்ள இலங்கைக் கடற்கரையைச் சுற்றிச் செல்வது

அபாயம் நிறைந்ததாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆகவே, பாதுகாப்புக்கேற்ற வகையில் அந்தக் கால்வாய்த் திட்டம் இருப்பதால், அந்தச் சேதுக் கால்வாய் அமைத்து கடற்பயணத்தைப் பாதுகாப்பானதாகச் செய்யமுடியும்.

(9) இந்தத் திட்டத்தின் மூலம் சேதுக் கால்வாயின் இரு புறமும் உள்ள துறைமுகங்கள் வளர்ச்சி அடையும். தமிழகத்தைச் சுற்றி பல்வேறு துறைமுகங்கள் இருக்கின்றன. இலங்கையைச் சுற்றியும் பல்வேறு துறைமுகங்கள் இருக்கின்றன. ஆகவே, இந்த சேதுக் கால்வாய் திட்டத்தின் காரணமாக ஈழ நாட்டில் உள்ள துறைமுகங்களும் வளர்ச்சி அடையும். ஈழ நாட்டில் உள்ள தமிழர்களும் இதனால் பயன்பெறுவார்கள். இரண்டு பக்கமும் இதனால் பயன்பெறுவதால் இந்த இரு நாடுகளும் அனைத்துலக சுற்றுலா ஸ்தலங்களாக மாறும். தமிழ் நாட்டில் தூத்துக்குடியும், ஈழநாட்டில் காஸ்கேசன்துறையும் ஏசியாவிலேயே மிகப்பெரிய துறைமுகங்களாக மாறும் வாய்ப்பு இதனால் இருக்கிறது.

(10) நிலக்கரி, உப்பு, சிமென்ட் போன்ற பெருமளவிற்கு எடுத்துச் செல்லப்படும் பொருள்கள் கடல்மார்க்கமாகச் சென்றால், குறைந்த செலவில் இதன் மூலம் கொண்டு செல்ல வழியேற்படும். தமிழகத்திற்கு ஆண்டுதோறும் நிலக்கரி 25 லட்சம் டன் வருகிறது. உப்பு 30 லட்சம் டன் சாதாரணமாக கொண்டு செல்லப்படுகிறது. மற்ற சரக்குகள் 20 லட்சம் டன் வருகிறது. இவைகளையெல்லாம் இந்தக் கால்வாய் மூலம் ஏற்றுமதி இறக்குமதி செய்யப்பட்டால் கப்பல் பயண தூரம் குறையும். எரிபொருள் மிச்சமாகும். கப்பல் கட்டணம் குறையும்.

இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த இந்தத் திட்டம், தமிழகத்தின் தென்மாவட்டங்களைச் செழிக்கச் செய்யும் இத்திட்டம், என்ன காரணத்தாலோ மீண்டும் மீண்டும் ஒத்திப் போடப்படுகிறது என்பதைப் பார்க்கிறபோது, எனக்கு வியப்பாக இருக்கிறது. நான் இங்கே வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் போடப்பட்ட 9 கமிட்டியும், அதற்குப் பின்னாலே போடப்பட்ட 3 கமிட்டியும், ஆக மொத்தம் 12 கமிட்டியும் இந்தத் திட்டத்தை பரிந்துரை செய்த பின்னாலும் இந்தத்திட்டத்தை அப்படியே வைத்து இருக்கிறார்கள் என்றால், அதற்கு அரசியல் ரீதியான காரணங்கள் இருக்கின்றன என்று நான் குற்றஞ்சாட்ட விரும்புகிறேன்.

இலங்கைப் பிரதமராக இருந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயகா அவர்கள் இந்த சேது சமுத்திர திட்டம் நிறைவேற்றப்பட்டால், கொழும்புத் துறைமுகத்தின் முக்கியத்துவம்

போய் விடும் இலங்கையில் கப்பல் தொழில் அழிந்து விடும் அபாயம் இருக்கிறது என்று கேட்டுக் கொண்டதால் இந்தத் திட்டம் அப்படியே வைக்கப்பட்டு இருக்கிறது என்று குற்றச்சாட்டு இருக்கிறது.

அந்தக் குற்றச்சாட்டுக்கு இடம் கொடுக்காமல் மத்திய அரசு இதை நிறைவேற்றவேண்டும்.

'The project is financially justified, technically sound, commercially worth while and politically expedient.' என்று சர் இராமசாமி முதலியார் கமிட்டி தெளிவாகச் சொல்லி இருக்கின்றது. அதை ஏற்று இந்தத் திட்டத்தை மத்திய அரசு உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்றும் இதன் மூலம் தமிழகத்தில் வாழ்கின்ற மக்களும், இலங்கையில் வாழ்கின்ற ஈழநாட்டுத் தமிழர்களும் நல்வாழ்வு வாழவும், வளம் பெறவும் கூடிய நிலைமை இருக்கின்ற காரணத்தால் இந்த மன்றத்திலே இருக்கின்ற சகல கட்சி உறுப்பினர்களும் இதை ஆதரிக்கிறார்கள் என்ற அந்த உணர்வையும் மத்திய அரசு உணர்ந்துகொண்டு இதை நிறைவேற்ற வேண்டும் என்று மத்திய அரசை நம்முடைய அரசு நிச்சயமாக வலியுறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு உரையை முடிக்கிறேன்.

திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டத்தினுடைய முக்கியத்துவத்தைப் பற்றி இந்த மாமன்றத்தின் மூலமாக மத்திய அரசினுடைய கவனத்தை ஈர்க்கவேண்டும் என்ற வகையிலே இந்த மாமன்றத்திலே ஒரு மணி நேர விவாதம் நடத்துவதற்கு ஒத்துக்கொண்டு இதைப்பற்றி விவாதிப்பதற்கு வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நீண்டநெடுங்காலமாக வற்புறுத்தப்பட்டு வருகின்ற இந்த சேது சமுத்திரத் திட்டம் பொருளாதார ரீதியிலே சாத்தியமான ஒரு திட்டம். ஆயிரக்கணக்கானபேர்களுக்கு மேல் வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய திட்டம். நீர்ப்பகுதியினை அதிகரிக்கச் செய்து அதேநேரத்திலே கடல் வழிப் பயணத்தின் தூரத்தைக் குறைக்கின்ற மிக முக்கிய ஆக்கபூர்வமான திட்டமாக இருக்கின்றது. இந்தத் திட்டமானது மேற்கு கடற்கரையிலிருந்து கிழக்குக் கடற்கரைக்கும், கிழக்குக் கடற்கரையிலிருந்து மேற்குக் கடற்கரைக்கும் உள்ள பல நூறு மைல்கள் தூரத்தைக் குறைக்கின்ற ஒரு திட்டமாகும். இப்படிப்பட்ட ஒரு அருமையான திட்டம் மத்திய அரசினிடத்திலே தேங்கிக் கிடக்கின்ற திட்டங்களிலே ஒன்றாக இன்றைக்கு இருக்கின்றது. ஆனால், இந்தச் சேது சமுத்திரத் திட்டம் என்பது ஏதோ பத்து, பன்னிரண்டு ஆண்டு காலமாக வலியுறுத்தப்பட்டு வருகின்ற திட்டம் என்றுதான் பலரும் அறிந்திருப்பார்கள். 1860 ஆம் ஆண்டிலே இந்தத்

திட்டம் பற்றிப் பரிசீலிக்கப்பட்டு இன்றைக்கு ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுவிழாக் கொண்டாடி 120-வது ஆண்டிலே மெல்ல மெல்ல நடைபோட்டுக்கொண்டிருக்கின்றது; ஆனால் சேது சமுத்திரத்திட்டம் பற்றி பரிசீலிக்க ஆரம்பித்த காலத்திலேயும், அதற்குப் பின்னால் ஆரம்பிக்கப்பட்ட பல திட்டங்கள் வெகு காலத்திற்கு முன்பே நிறைவேற்றப்பட்டு கடல் பகுதியிலே கப்பல் பணியிலே அவை வெற்றிகரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. உதாரணமாகச் சொல்லவேண்டும் என்றால் சூயஸ் கால்வாய்த்திட்டம் இந்தத் திட்டத்திற்குப் பின்னால் ஆரம்பிக்கப்பட்டு 1869-ல் முடிவு பெற்று இன்றைக்கு சர்வதேச ரீதியிலே மிகப்பெரிய லாபத்தைக் கொடுத்துக்கொண்டிருக்கின்றது அது. பனாமாக் கால்வாய்த் திட்டம் 1914-லே நிறைவேற்றப்பட்டது. இப்படி இத்திட்டத்திற்குப் பின்னால் ஆரம்பிக்கப்பட்ட திட்டங்கள் எல்லாம் நிறைவு பெற்று வெற்றிகரமாக இயங்கி வருகின்றன. இந்தத் திட்டம் மட்டும் ஏனோ மத்திய அரசினுடைய ஃபைலிலே தூங்கிக்கொண்டு இருக்கின்றது. மத்திய அரசு இதைத் துரிதமாக நிறைவேற்றாமல் அத்திட்டம் தூங்கிக்கொண்டிருக்கின்றது என்பதை எண்ணிப்பார்க்கின்றபோது வேதனையாக இருக்கின்றது.

கன்னியாகுமரியிலிருந்து கல்கத்தாவிற்கும், விசாகப்பட்டினத்திற்கும், சென்னைக்கும் உள்ள கடல் போக்குவரத்தைத் துரிதப்படுத்தி தூரத்தைக் குறைக்கின்ற இந்தத் திட்டம் பற்றி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. நெடுமாறன் மற்றும் திரு. சிவசாமி அவர்கள் எடுத்துக் காட்டியதைப்போல் பல முறை ஆராய்ந்து ஆராய்ந்து அலுத்துப் போய்விட்டது. 1920-லே சென்னை ராஜதானியின் ஆலோசகராகவும், தலைமை இன்ஜினியராகவும் இருந்த திரு. ராபர்ட் பிரிஸ்டோ என்பவர் 60 இலட்சம் ரூபாயிலே இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியும் என்று ஒரு அருமையான ஆய்வு அறிக்கையைக் கொடுத்தது மட்டுமல்லாமல் அன்றைக்கு இருந்த அரசாங்கம் இதை நிறைவேற்றி வைக்கவேண்டும் என்று வலியுறுத்திச் சொன்னார்கள். அவருடைய ஆலோசனையின் பேரிலேயே அன்றைக்கு சென்னை ராஜதானியின் உயர் அதிகாரியான லார்ட் வெல்லிங்டன் அவர்கள் தலைமையில் ஒரு கமிட்டியை அமைத்தார்கள். அந்தக் கமிட்டி அமைத்து அது நிறைவேற்ற வேண்டும் என்று சொல்லிவிட்ட பிறகு அதற்கு வாய்ப்பளிக்காமலே போய்விட்டார்கள். அதன்பின் அன்றைக்கு இருந்த இந்தியப் பேரரசு அதற்கான நிதி ஒதுக்காத காரணத்தால் அந்த அறிக்கை கிடப்பிலே போடப்பட்டுவிட்டது. அதன்பின் இது அகில இந்திய ரீதியிலே சாத்தியமான ஒரு திட்டம் என்று தொழில்நுட்ப வல்லுநர்கள் எல்லாம் சிபாரிசு செய்திருக்கிறார்கள். அரசியல் ரீதியிலும் எல்லா கட்சியினரும் அதனை ஆதரித்ததன் காரணத்தால் அதற்குப் பின்னால் 1952-லே சர் ராமசாமி முதலியார் அவர்களின் தலைமையிலே ஒரு கமிட்டி போட்டார்கள்.

அந்தக் குழு சென்னை துறைமுகத்தையும் கல்கத்தா துறைமுகத்தையும், அங்கிருந்து போகிற கப்பல்களையெல்லாம் சர்வே செய்து இது பொருளாதார ரீதியில் அன்னியச் செலாவணியை ஈட்டிக் கொடுக்கக்கூடிய ஒரு அருமையான திட்டம் என்று வலியுறுத்திக் கூறியிருக்கிறது. அந்தத் திட்டமும், அந்த அறிக்கையும் தூங்கிக் கொண்டிருக்கின்றன. அந்தத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. அதற்குப் பின்னர் 1965-ம் ஆண்டில் அன்று தலைமைப் பொறியாளராக இருந்த திரு. வெங்கடேசன் தலைமையில் ஒரு குழு போடப்பட்டது. அந்தக் குழுவும் அறிக்கைக் கொடுத்திருக்கிறது. திரு நடராஜன் என்ற ப்ராஜெக்ட் ஆபீஸர் கூட அந்தக் குழுவிற்கு உறுதுணையாக இருந்தார்கள். அந்தக் குழு 37 கோடி ரூபாய் மட்டும் செலவு செய்தால் இந்தத் திட்டத்தை நிறைவேற்றலாம் என்று ஆய்வு அறிக்கை கொடுத்தார்கள். அதுமட்டுமல்லாமல், மன்னார்வளைகுடா, பாக் ஜலசந்தியை ஆழப்படுத்தினால் கப்பல் போக்குவரத்திற்கு வசதியாக இருக்கும். இரண்டையும் இணைத்து 37 கோடி ரூபாயில் திட்டத்தை நிறைவேற்றலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தத் திட்டமும் தூங்கிக் கொண்டிருக்கிறது.

[பிற்பகல் 12-20]

வெங்கடேசன் கமிட்டி ஆய்வறிக்கையில் அவர்கள் பரிந்துரை செய்திருப்பது என்னவென்றால், இத்திட்டத்தை நிறைவேற்றினால் மேற்குக் கடற்கரையிலிருந்து கிழக்குக் கடற்கரைக்கு ஒரு வழிப் பாதை போதும், கப்பல்போக்குவரத்திற்கு அது மிகவும் வசதியாக இருக்கும் என்று சொல்லி இருக்கிறார்கள். அந்த அறிக்கையும் கிடப்பில் போடப்பட்டிருக்கிறது. பிறகு இந்தத் திட்டம் செயல்படுமா, செயல்படாதா என்று எண்ணிக் கொண்டிருந்த நேரத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு இந்தத் திட்டத்திற்கு உயிர் கொடுக்கவேண்டும் என்று மைய அரசை தொடர்ந்து வற்புறுத்தி வந்திருக்கிறார்கள். பின்னர் அன்று நிதி அமைச்சராக இருந்த, இன்று பாதுகாப்பு அமைச்சராக இருக்கும் மாண்புமிகு திரு ஆர். வெங்கட்ராமன் அவர்கள் இந்தத் திட்டம் ரூ. 100 கோடிச் செலவில் நிறைவேற்றப்படும் என்று மீண்டும் மறுபரிசீலனை செய்யப்படும் என்று அவர்கள் அறிவித்தார்கள். அதற்குப் பிறகு 1981 ஆம் ஆண்டு திரு. லட்சுமிநாராயணன் அவர்கள் தலைமையில் ஒரு குழு போட்டார்கள்.

இந்தத் திட்டம் பற்றிய பொருளாதார சாத்தியக்கூறுகள், எந்த அளவிற்கு இந்திட்டம் நிறைவேற்றப்படுமானால் நமக்கு அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் என்பது பற்றியெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் திரு நெடுமாறன் அவர்கள் வெகு அழகாக எடுத்துச்சொன்னார்கள். ஆக, இத்திட்டம் பொருளாதார ரீதியில் அந்நியச் செலாவணியை ஈட்டிக் கொடுக்கக்

கூடிய அருமையான திட்டம். அதோடு கப்பல் போக்குவரத்திற்கும் மிகவும் வசதியான திட்டமாகும். எனவே இந்தத் திட்டத்தை நிறைவேற்றியாக வேண்டும். 120 ஆண்டுகளாக தொங்கிக் கொண்டிருக்கும் இத்திட்டம் கண்டிப்பாக நிறைவேற்றப்படவேண்டும். அதனால் தமிழ்நாட்டிற்கு பொருளாதார லாபம் கிடைக்கும். அந்நியச் செலாவணி கிடைக்கும். பல ஆயிரக்கணக்கான பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். எனவே இத்திட்டத்தை மத்திய அரசு மேற்கொள்ளும் வகையில் மத்திய அரசை வற்புறுத்த, இம்மாமன்றம் மூலம் அவர்கள் கவனத்தை ஏதாவது ஒரு வகையில் ஈர்க்கவேண்டும். அந்த வகையில் ஒரு தீர்மானம் மூலமாகவோ அல்லது கடிதங்கள் எழுதியோ இத்திட்டத்தின் முக்கியத்துவம் பற்றி மத்திய அரசை வலியுறுத்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டு எனக்கு இதில் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

*திரு. கு. ரமணி: மதிப்பிற்குரிய மாற்றுத் தலைவர் அவர்களே, ஆளுங் கட்சியும், எதிர்க்கட்சிகளும் ஒன்றாகச் சேர்ந்து வலியுறுத்தக் கூடிய ஒரு முக்கியமான திட்டம், இந்த சேது சமுத்திரத் திட்டம். இதைப் பற்றி இந்த விவாதத்தின்மூலம், தமிழக மக்களுடைய, இந்த சட்டமன்றத்தினுடைய கருத்தை மத்திய அரசுக்கு நாம் ஆணித்தரமாக எடுத்துச்சொல்ல வேண்டும் என்பதற்காக ஒரு விவாதம் இன்றைக்கு நடைபெறுகிறது. இதைப்பற்றி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன்.

ஆங்கிலேயர் காலத்தில் 1860 ஆம் ஆண்டிலே இருந்து, இந்தத் திட்டம் ஆராயப்பட்டு வந்தது என்றால், இது மிக முக்கியமான தேவையான திட்டமாக இருக்கிறது என்பதைத் தான் காட்டுகிறது. ஆங்கிலேயர் போனதற்குப் பிறகு, நாடு சுதந்திரம் பெற்றதற்குப் பிறகு, அந்தத் தேவை குறைந்து விடவில்லை. அதிகமாகி இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அன்றைக்கு 50 இலட்சம் ரூபாயில் இந்தத் திட்டம் நிறைவேறியிருக்கும் என்று சொன்னால், இன்றைக்கு மேலும் அதிகம் செலவாகும். இதற்காக போடப்பட்ட கமிட்டிகளின் எண்ணிக்கையெல்லாம் எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். ராமசாமி முதலியார் கமிட்டி, வெங்கடேசன் கமிட்டி ஆகியவைகள் எல்லாம் ஆராய்ந்து, தமிழக மக்கள், வர்த்தக ஸ்தாபனங்கள், தொழில் முதலாளிகள், பல்வேறு நல உரிமைகள் சம்பந்தப்பட்டவர்கள் எல்லாம் இந்தத் திட்டம் சரியான முறையிலே நிறைவேற்றப்பட வேண்டும், உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்திக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஏனென்றால், இந்தத் திட்டத்தினுடைய நன்மை அப்பேர்ப்பட்டது.

அது மட்டுமல்ல, உலகத்தில் இப்படிப்பட்ட திட்டத்தை நினைத்து போட்டுவிட முடியாது. சூயெஸ் கால்வாய், பனாமா கால்வாய் என்று சொல்லுகிறார்கள். ஆனால், இன்றைக்கு இந்திய உபகண்டத்தில் இப்படிப்பட்ட ஒரு இயற்கையான திட்டம் அமைந்துள்ளது. இந்த திட்டத்தை நிறைவேற்றுவதற்காக சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டு வந்தும், இதுவரை நிறைவேற்றுவதற்கான சாத்தியப்பாடு ஏற்படவில்லை. ஆனால், அதற்கான இயற்கை சூழ்நிலை இருக்கும்போது, அந்தத் திட்டத்தைக் கிடப்பில் போடுவதற்கும், முடக்கி வைப்பதற்கும் என்ன காரணம் என்பதை நாம் ஆழமாக சிந்தித்துப் பார்க்கவேண்டும். இன்று மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் தெரிவித்தது போல், இதிலே ஒரு உண்மை நிலையை நாம் பார்க்கிறோம். மன்னார் வளைகுடா, பாக் ஜலசந்தி ஒன்றாக சேர்ந்து, இணைக்க அந்த இராமேஸ்வரம் கரை வழியிலே இந்தப் பெரிய ஒரு வாய்க்காலை வெட்டி, அந்த வேலை நடந்து முடிந்தால், கப்பல் போக்குவரத்துக்கு நூற்றுக்கணக்கான மைல் தூரம் குறையும். அதனால், கப்பல் போக்குவரத்துக்கு அதிக வசதி ஏற்படும். எல்லாவற்றுக்கும் மேலாக, எரிபொருள் விலை இன்றைக்கு பயங்கரமாக ஏறிக் கொண்டிருக்கிறது. ஒரு டிரிப் அந்தக் கப்பல் அங்கே போய் வருவதற்கு ரூ. 67,000 அதிகம் செலவாகின்றது என்று சொல்லுகிறார்கள். நமது தமிழக அரசாங்கம் கடைசியாக ஒரு மெமோராண்டத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அதிலே இதன்மூலம் 5 கோடி ரூபாய் அளவுக்கு அந்நிய செலாவணி ஈட்டுவதற்கு வசதி இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அங்கே கப்பலைப் பயன்படுத்துவதற்கு வாய்ப்பு அதிகமாகிறது. அந்நிய செலாவணி பெருகுகிறது. வியாபார போக்குவரத்து அதிகரிக்கிறது. நாட்டின் வளர்ச்சிக்கு இது முக்கியம். ஆகவே, இந்தத் திட்டம் தமிழகத்தின் வளர்ச்சிக்கு உதவக்கூடிய திட்டம். இதைக் காலம் தாழ்த்துவதினால், மத்திய அரசுக்கு இதில் விருப்பமில்லையோ என்ற கேள்வியைக் கூட கேட்க வேண்டியிருக்கிறது. இல்லாவிட்டால், பல கமிட்டிகள் போட்டும், அவர்கள் ஆலோசனைப் பெற்றும் நிறைவேற்றப் படாமல் இருப்பதற்கு, காலம் தாழ்த்துவதற்கு என்ன காரணம் இருக்க முடியும்? இதை மிகவும் ஆழமாகச் சிந்திக்க வேண்டியிருக்கிறது.

தூத்துக்குடி துறைமுகத் திட்டம் எவ்வளவு முக்கியமானது என்பதைப் பார்க்கவேண்டும். அந்தத் திட்டத்தையும், இந்தத் திட்டத்தையும் இணைத்து, அந்த முறையில் செயல்பட்டால், ஒரு பெரிய தொழில் வளாகம், இன்டஸ்ட்ரியல் காம்பிளெக்ஸ் தூத்துக்குடியில் உருவாக்க முடியும். இப்போது, தூத்துக்குடியிலே 600 மெகாவாட் அனல் மின் உற்பத்தி செய்யக்கூடிய வாய்ப்பிருக்கிறது. போன வருடம் 4 இலட்சம் டன் கரியைக் கொண்டு வந்திருக்கிறோம். அடுத்து 1983 ஆம் ஆண்டு 19 இலட்சம் டன் கரியைக் கொண்டு வரக்கூடிய நிலைமை இருக்கிறது. அதை

இன்னும் விரிவுபடுத்தினால், 48 இலட்சம் டன் கரியைக் கொண்டு வருவதற்கான வாய்ப்பிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அப்பேர்ப்பட்ட ஒரு கப்பல் போக்குவரத்து வாய்ப்பை இன்றைக்கு மின் வாரியத் தேவைக்கான கரியைக் கொண்டு வருவதற்கு வசதியாக இருக்கும். ரயில்மூலமாகக் கொண்டு வரவேண்டுமென்றால், செலவு ஜாஸ்தியாக ஆகும். அதனால், மின் கட்டணத்தை உயர்த்தி, தமிழக மக்கள் தலையில் சுமத்தக்கூடிய நிலைமை வந்திருக்கிறது. இங்கே பட்ஜெட் விவாதத்திலேகூட இதைப் பார்த்தோம். இப்படிப்பட்ட திட்டம் வந்தால், கரியை சுலபமாக கொண்டு வந்தால், நிச்சயமாக மின்கட்டணம் குறைவதற்கு உதவியாக இருக்கும். எனவே, அதற்கான முயற்சியை எடுத்துக்கொள்ள வேண்டும்.

[பிற்பகல் 12.30]

அது மட்டுமல்ல, கல்கத்தா, விசாகப்பட்டணம், சென்னை துறைமுகம் வழியாக மேற்குக் கடற்கரையில் செல்லவேண்டிய கப்பல்கள் துரிதமாக வந்துபோக வழி ஏற்படும். மேற்கு வழியாக அந்நிய நாடுகளின் துறைமுகங்களுக்குச் செல்ல வேண்டிய அன்னிய நாட்டுக் கப்பல்கள் சுலபமாகச் செல்ல வழியுண்டாகும். ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியிருக்கின்ற பல்வேறு விஷயங்களோடு நன்மைகளைப் பொறுத்த வரையில் இந்த விஷயங்களும் உள்ளன.

வேலைவாய்ப்புக்கு தமிழகத்திலே இது ஒரு வரப்பிரசாதமாக அமையும். இராமநாதபுரம் மாவட்டத்திலே ஆயிரக்கணக்கான மக்கள் வறட்சியில் அகப்பட்டுக் கொண்டு கஷ்டப்படுகிறார்கள், அவர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும். இலங்கையிலிருந்து வந்துள்ள அகதிகளைப் பற்றி நாம் விவாதிக்கிறோம். அவர்கள் வேலையில்லாமல் திணறுகிறார்கள். அவர்களில் சுமார் 10 ஆயிரம் பேர்களுக்கு வேலை கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட முக்கியமான திட்டத்தைக் கிடப்பில் போடுவதற்கு காரணம் இல்லாமல் இருக்கமுடியாது. தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கு இடையூறாக மத்திய அரசின் போக்குதான் இருக்கிறது என்று குற்றஞ்சாட்டினால் அது தவறாகாது. இந்தத் திட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து பார்த்து நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். இந்த திட்டமே நிறைவேற்றப்பட முடியாமல் போய்விடுமோ என்று நினைக்கவேண்டியிருக்கிறது. 1960 ஆம் ஆண்டிலே 50 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று இருந்தது, 1968 ஆம் ஆண்டில் அது 38 கோடியாகும் என்று கணக்கிடப்பட்டு 1980 ஆம் ஆண்டில் 110 கோடியாகும் என்று சொல்கிறார்கள் கடிவாளம் அறுந்த குதிரையின் வேகத்திலே விலைவாசி இன்றைக்குப் போய்க் கொண்டிருக்கின்ற நிலையிலே 110 கோடி ரூபாய் மேலும் எத்தனை கோடி ரூபாய் ஆகுமோ தெரியவில்லை. இவ்வளவு பணம் செலவழிக்கப்பட வேண்டியிருக்கிறது என்று சொல்லி இதைத் தடுக்கவேண்டும் என்ற

முறையிலே நிதி நெருக்கடி என்றோ அல்லது பொருளாதார நெருக்கடி என்றோ சொல்லி கைவிட்டால் அது தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கு உகந்ததாக இருக்காது. நிபுணர் கமிட்டி 1981 ஆம் வருடத்திற்குள் பல தடவைகள்கூடி அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறது. இராமநாதபுரத்திலே கூடியிருக்கிறது, தூத்துக்குடியிலே கூடியிருக்கிறது, மதுரையிலே கூடியிருக்கிறது, கடைசியாக சென்னையிலே கூடியிருக்கிறது. தமிழக அரசினுடைய மெமோரண்டம் கொடுக்கப்பட்டு பிரதிநிதிகள் எல்லாம் விளக்கியிருக்கிறார்கள். பாராளுமன்ற உறுப்பினர்கள் சட்டமன்ற பேரவை, மேலவை உறுப்பினர்கள் வர்த்தகக் கழகங்கள், தொழில் முதலாளிகள் பலதரப்பட்ட இன்டரஸ்ட்ஸ் நல உரிமை உள்ளவர்கள் சாட்சியம் கொடுத்திருக்கிறார்கள். அத்தனை பேர்களும் இந்த நிறைவேற்றவேண்டுமென்று சொல்லியாகிவிட்டது. கடைசியாக 1981 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் சென்னையிலே நடந்த கூட்டத்திலே சொல்லியும்கூட நாம் இப்போது 1982இல் விவாதித்துக் கொண்டிருக்கிறோம். ஏன் இந்தத் திட்டம் கிடப்பில் போடப்படுகிறது, முடக்கிவைக்கப்படுகிறது என்பதற்கு எந்தவிதமான நியாயமும் காரணமும் சொல்லப்படவில்லை. எவ்வளவு நிபுணர்கள் ஆராய்ந்து முடிவு சொல்லியானபிறகு இன்னும் நிறைவேற்றப்படவில்லை. ஆங்கிலேயர் காலத்திலே முடிவு எடுக்கப்பட்டும், காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே முடிவு எடுக்கப்பட்டும் பல தடவைகள் கூறியும் தமிழக அரசு மூலமாக துரித நடவடிக்கை எடுத்து நிறைவேற்றவேண்டுமென்று சொல்லிக்கொண்டிருக்கின்ற நிலையில் இருக்கிறோம், ஆகவே இனிமேல் நிபுணர் குழு தேவையில்லை கடைசியாக வந்திருந்த கமிட்டியினுடைய சிபாரிசும் இருக்கிறது. அதைக் கணக்கிலே எடுத்துக்கொண்டு உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். இந்திய அரசாங்கம் மிகுந்த ஜாக்கிரதையோடும், முனைப்போடும் செய்வதற்கு முன்வர வேண்டும். தமிழக அரசாங்கமும் இங்கே இருக்கின்ற சகல கட்சிகளும் வேற்றுமையின்றி வலியுறுத்தவேண்டும். வறுமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்ற மக்களுக்கு வேலை கிடைக்கிற நிலைமை கடலோர கப்பல் போக்குவரத்திலே ஏற்படுகின்ற சௌகரியங்கள், இண்டர்நேஷனல் வாட்டர்ஸ் பகுதியில் போகாமல் நம்முடைய கடற்கரையின் ஓரமாகவே நமது யுத்தக் கப்பல்கள் போக்குவரத்து செய்யக்கூடிய முறையிலே இருக்கிறது, அது யுத்த கப்பல்களுடைய போக்குவரத்துக்கும் பயன்படும், ஆகவே மிகுந்த முக்கியத்துவமாக உள்ள திட்டத்தை நிறைவேற்ற அத்தனை பேர்களும் ஆளுங்கட்சியும் எதிர்க்கட்சியும் அரசாங்கமும் எல்லோரும் சேர்ந்து வற்புறுத்தி இந்த வருஷமே வேலை தொடங்கப்படவேண்டும், அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் அப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்க எப்படிப்பட்ட நிர்ப்பந்தத்தை உருவாக்கவேண்டுமோ அதைப்பற்றி எதிர்க்கட்சிகளோடு கலந்து ஆலோசனை செய்து தகுந்த ஒரு திட்டத்தை உருவாக்கவேண்டுமென்ற முறையில் — இதற்கு சமாதானம் சொல்லிவிட்டால் போதாது — இந்த நிலைமைக்கு

அரசாங்கம் வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய சர்க்கார் இதை செய்யக்கூடியமுறையிலே ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். தமிழக மக்கள் — தமிழகத்தின் தொழிற் வளர்ச்சிக்குக் குறுக்கே நிற்கிறது மத்திய அரசு என்று குற்றஞ் சாட்டுவார்கள் — அதைப் பொறுக்கமாட்டார்கள், தொழில் வளர்ச்சி குறைந்துவிட்டால் தொழில் வளர்ச்சிக் குறைந்த மாவட்டம் என்று முத்திரை குத்துவார்கள். தொழில் வளர்ச்சியை ஏற்படுத்துகின்ற கடலோரப் போக்குவரத்தை அதிகரிக்கின்ற இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு தாமதம் செய்ய எந்த நியாயமும் கிடையாது. தாமதப்படுத்தினால் தமிழக மக்கள் பார்த்துக் கொண்டிருக்க மாட்டார்கள் என்ற எச்சரிக்கையை இந்திய அரசாங்கத்திற்கும் எடுத்துக் காட்டி தமிழக அரசும் முன்வந்து தேவையான ஏற்பாட்டை செய்ய வேண்டுமென்றும், நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

திரு. உ. சுப்பிரமணியன்: மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த திட்டம் தமிழக மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து கேட்கிற திட்டம் என்கிற உணர்வு ஏற்படுத்த வேண்டுமென்று நாங்களும் பங்கு கொள்கிறோம். வேறு தவறான கருத்துக்கள் இருக்கக்கூடாது என்று தெளிவாக சொல்வதற்கு நாங்களும் பங்கு கொள்கிறோம். எங்களுடைய பாராளுமன்ற உறுப்பினர் திரு.கே.டி. கோவல்ராம் அவர்கள் இந்தத் திட்டத்தை வலியுறுத்தி அடிக்கடி பாராளுமன்றத்தில் குரல் கொடுக்கிறார்கள் என்பது எல்லோரும் பத்திரிகை வாயிலாக அறிந்த உண்மையாகும். சேதுசமுத்திர திட்டம் பல ஆண்டு காலமாக தாமதப்பட்டிருக்கிறது என்றால் அதற்கு பல்வேறு காரணங்கள் இருக்கலாம். அது எவ்வளவு அவசியம் என்பதை இந்த மாமன்றத்திலே பல்வேறு சமயங்களில் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். இந்திய கடற்கரைக்கு வர இலங்கையைச் சுற்றி வராமல் நேராக கல்ப் ஆப் மன்னார், பாக் ஜலசந்தியைக் கடந்து வந்தால் பல நூற்றுக்கணக்கான மைல்கள் தூரம் மிச்சம் ஆகிறது என்ற உண்மை எல்லோருக்கும் தெரிந்தது தான். இந்தியாவினுடைய கடற்கரை மிகவும் நீண்ட நெடிய கடற்கரை. அதில் துறைமுகங்கள், கட்டிடங்கள் அபிவிருத்தி அடையவேண்டுமென்பது எல்லோருக்கும் இருக்கிற ஆசை. தமிழ் நாட்டிலே தான் அதிகமான அளவில் துறைமுகப் பட்டினங்கள் இருந்து வந்திருக்கின்றன. அதை அபிவிருத்தி செய்வதிலே நமக்கு உதவியாக இருக்கவேண்டும். இப்போது அங்கே இருக்கிற நிலை அது ஆழப்படுத்த வேண்டுமென்ற நிலை. கொழும்புக்கு சென்று, கொழும்புக்கு தெற்கே வந்த பிறகு திரிகோணமலை சுற்றி வர வேண்டும் என்றால் மேலும் அதிக தூரம் ஆகிறது. உலகத்திலே பெரிய கப்பல்கள் 30 ஆயிரம், 40 ஆயிரம் டன்கள் நிறை கொண்ட கப்பல்கள் வர முடியாததற்கு காரணம், அந்த பகுதி

ஆழமில்லாது இருப்பதுதான் காரணம். அதை ஆழப்படுத்தி விட்டால் தொழும்பு துறைமுகத்தைத் தொட்டாலும், தொடாவிட்டாலும் அந்த பகுதியிலிருந்து கிழக்கு ஆசிய நாடுகளுக்கு, கல்கத்தா, டாக்கா போன்ற நகரங்களுக்கு செல்லக்கூடிய வாய்ப்பு இருக்கிறது, என்பதை நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் பண்டார நாயகா அவர்களுக்கு உறுதிமொழி கொடுத்திருப்பது போலவும், இதை நிறைவேற்றாமல் தாமதப்படுவது போலவும் மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் ஒரு பிரச்னையை எழுப்பியிருக்கிறார்கள். நிச்சயமாக இருக்கமுடியாது. நம்முடைய தேசம் முதலில், அதனுடைய முக்கியத்துவம் முதலில் என்ற கருத்திலே அவர்களுக்கு எந்தவிதமான ஐயப்பாடும் தேவையில்லை.

திரு. ப. நெடுமாறன்: மாற்றுத் தலைவர் அவர்களே, அது உண்மையாக இருக்கமுடியாது என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சுப்பிரமணியம் அவர்கள் சொன்னார்கள். நான் ஒன்றை அவர்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். The Sri Lanka Government then headed by Sirimavo Bandara nayaka pleaded with the Indian Government that the execution of the project would spell the economic ruin to Sri Lanka's Ports and its Shipping Industry என்று அவர்கள் எழுதியிருக்கிற கடிதத்தை வைத்து 'ஆன் லுக்கர்' பத்திரிகையில் 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16-ம் தேதி வந்திருக்கிறது. இது பற்றி பாராளுமன்றத்தில் எழுப்பப்பட்டிருக்கிறது. அங்கே மத்திய அரசாங்கத்தின் சார்பில் எந்த பதிலும் அளிக்கப்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

திரு உ. சுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, அவர்கள் சொல்வதிலே எந்தவிதமான குற்றச்சாட்டும் இல்லை. 'தென் பிரைம் மினிஸ்டர் பண்டாரா நாயகா பிளீடட்' என்று தான் சொல்லியிருக்கிறார்களே தவிர, இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் அதற்கு ஒப்புக் கொண்டார்கள் என்று அதிலே குறிப்பிடப்படவில்லை.

திரு. ப. நெடுமாறன்: மாற்றுத்தலைவர் அவர்களே, அவர்கள் பிளீட் பண்ணினார்கள். ஆனால், இந்த திட்டத்தை இன்னும் அமல் படுத்தவில்லை. இரண்டுக்கும் தொடர்பு இருக்குமோ, அவர்கள் கேட்டுக்கொண்டதால்தான் நீங்கள் இந்தத் திட்டத்தை செயல்படுத்தாமல் இருக்கிறீர்களோ என்ற சந்தேகத்தை நான் எழுப்பியிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வாதப் பிரதிவாதங்கள் இதிலே வேண்டாம். எல்லோரும் சேர்ந்து அந்தத் திட்டத்தைக் கொண்டு வர பார்ப்போம்,

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, நான் முதலில் குறிப்பிட்டேன். இதற்கு எங்களுக்கு முழு உடன்பாடு இருக்கிறது. நாங்களும் சேர்ந்து வற்புறுத்திக் கொண்டு வந்திருக்கிறோம். அவர்கள் கொடுத்திருக்கிற புள்ளிவிவரப்படி 1962-லேயிருந்து நடைபெறாமல் இருக்கிற திட்டம். அது ஏதோ காங்கிரஸ் அரசாங்கம் மட்டும் தாமதப்படுத்தி விட்டது என்று சொல்வது என்பது சரியாக இருக்காது. தமிழ் நாட்டினுடைய நிலையைக் கருதி, நாட்டினுடைய கப்பல் போக்குவரத்து, வாணிபம் போன்றவற்றை கருதி இந்த திட்டம் அமுல் படுத்த வேண்டுமென்ற கோரிக்கையில் நாங்களும் உங்களோடு உடன் இருக்கிறோம் என்பதைச் சொல்லி விடைபெறுகிறேன், வணக்கம்.

[பிற்பகல் 12-40]

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப்: மிஸ்டர் ஸ்பீக்கர் சார், இந்தச் சேதுசமுத்திர திட்டம் நல்ல திட்டம். இது அவசியம் சீக்கிரம் உருவாகினால் நமக்கு ஏற்படக்கூடிய நன்மைகள் பல இருக்கின்றன. அதனால் சீக்கிரம் உருவாக வேண்டுமென்று நானும் கேட்டுக்கொள்கிறேன். சில அங்கத்தினர்கள் பேசும் பொழுது எந்தக் காரணத்தினாலோ, கவர்ன்மென்ட் ஆஃப் இந்தியா இதை டிலே செய்கிறது என்று சொன்னார்கள். Marine engineering is a very very difficult engineering in the whole world உலகத்திலே இருக்கக்கூடிய பல சங்கடமான துறைமுகங்களிலே மெட்ராஸ் துறைமுகம் ஒன்று. 6 மாதத்திற்கு மணல் கேப் காமரினிலிருந்து கிழக்கேயும் 6 மாதத்திற்கு கிழக்கிலிருந்து தெற்கேயும் போகின்றது. அதன் காரணமாக மெட்ராஸ் துறைமுகத்திலே வருஷா வருஷம் குறைந்தது 12 இலட்சம் டன் மணல் எடுத்து, எங்கே கடல் ஆழமாக இருக்கிறதோ அங்கே கொண்டு போய் போடுகிறார்கள். அதே மாதிரி சேதுசமுத்திர திட்டம் இருக்கிறதே அது மிகவும் சிக்கலான திட்டம். பல நிபுணர்கள் அதை ஆலோசித்து, அங்கே நிறைய 'ஹாலோ ரீஃப்ஸ்' இருக்கின்றன. ஆகவே, டெப்த் எடுத்து, பெரிய, பெரிய கப்பல்கள் செல்லக் கூடிய நிலையை அங்கே உருவாக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இப்பொழுதிருக்கக் கூடிய நிலையில் 1 இலட்சம் டன் எடையுள்ள சரக்குகளை ஏற்றிவரக்கூடிய கப்பல்களும் இருக்கின்றன. இப்பொழுதெல்லாம் 40,000, 50,000 டன் கப்பல்கள் குறைவு. லால் பகதூர் சாஸ்திரி என்ற கப்பல் 90,000-விருந்து 1 இலட்சம் டன் எண்ணெய் ஏற்றிக்கொண்டு போகிற பெரிய கப்பல். இந்தத் திட்டம் வேண்டுமென்றால், அதற்குத் தகுந்தவாறு ஆழப்படுத்த வேண்டும். சாதாரணமாக, பெரிய கப்பல்கள்

எல்லாம் சிலோனைச் சுற்றி வரும் என்றால் அது நல்லமுறையில் இருக்காது. ஆகவே, கவர்ன்மென்ட் ஆஃப் இந்தியா, இதில் ரொம்பக் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள். எந்தவிதமாக செய்தால், 1 இலட்சம் டன், மற்றும் அதற்குமேல் சுமக்கக்கூடிய கப்பல்கள் சுலபமாகப் போகமுடியும் என்று திட்டமிட்டிருக்கிறார்கள்,

இதனால், கொலம்போவினுடைய முக்கியத்துவம் போய்விடும் என்று சில அங்கத்தினர்கள் பேசினார்கள். கொலம்போவினுடைய முக்கியத்துவத்திற்கும் இதற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. கொலம்போவைச் சுற்றிப் போகிறதே ஒழிய, கொலம்போ போர்ட்டிலே தங்கி, அங்கேயிருந்து தண்ணீரோ, ஆயிலோ எடுத்துக் கொண்டு போவது கிடையாது. அந்த ஐலண்டை சுற்றிக்கொண்டுதான் போகிறது.

அடுத்தது, இந்தத் திட்டம் அவசியம் வருமேயானால் 1½ நாள் 'சேவ்' ஆகிறது. இந்த 1½ நாளுக்கு எவ்வளவு ஆயில் சேவ் ஆகிறது என்பது ஒவ்வொரு கப்பல் சொந்தக்காரருக்கும் நன்றாகத் தெரியும். அதன் காரணமாக, எவ்வளவு பிளான்ஸ் சேவ் ஆகும் என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

தூத்துக்குடி போர்ட் பெரிய போர்ட். மெட்ராசுக்கு அடுத்தது கொச்சின் போர்ட் என்றிருந்தது. இப்பொழுது தூத்துக்குடி பெரிய போர்ட் என்று கப்பல் சொந்தக்காரர்களே கவர்ன்மென்ட் ஆஃப் இந்தியாவிடம் சொன்னார்கள். தூத்துக்குடி பெரிய போர்ட் எனறால், அதை நமக்காகத்தான் செய்திருக்கிறார்கள். அது இப்பொழுது இன்டர்நேஷனல் போர்ட்டாக இருக்கிறது. சிலோன் போர்ட்டில் ஏதாவது தகராறு ஏற்பட்டால், உடனே தூத்துக்குடி போர்ட்டுக்கு வந்து சரக்குகளை இறக்கிவிடுகிறார்கள். திரும்ப, தூத்துக்குடி போர்ட்டிலிருந்து சரக்குகளை எடுத்துக்கொண்டு சிலோனுக்குப் போகிறார்கள். ஆகவே, அது ஒரு இன்டர்நேஷனல் போர்ட். தூத்துக்குடி பெரிய போர்ட்டானது நமக்கு மிகவும் அட்வான்டேஜாக இருக்கிறது. தூத்துக்குடி போர்ட்டுக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்தார்கள். அது மிகவும் வரவேற்கத்தக்கது. அதே மாதிரி இந்தச் சேதுசமுத்திர கால்வாய் திட்டத்தையும் சீக்கிரம் அவர்கள் நிறைவேற்றித் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கு லெவி போடலாம். எப்படி சூயெஸ் கானலுக்கு லெவி போட்டார்களோ, அதைப்போல் ஒவ்வொரு கப்பலுக்கும் லெவி போடலாம். நீங்கள் சுற்றிக் கொண்டு போவதால் இவ்வளவு செலவாகிறது. இப்பொழுது இவ்வளவு வருவாய் மிச்சம், அதிலிருந்து ஒரு பகுதியை நீங்கள் கொடுக்க வேண்டுமென்று ஒவ்வொரு கப்பலுக்கும் லெவி போடலாம். இதையும் வர்கள் கவனித்துப் போட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சேது சமுத்திரத் திட்டத்தைப்பற்றி இங்கே ஒரு மணி நேர விவாதம் நடத்தி, மத்திய அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு இதைக் கொண்டு வருவதற்காக நாம் இங்கே ஏற்பாட்டைச் செய்திருக்கிறோம்.

1960 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட இந்த மாபெரும் திட்டத்தைப்பற்றி விவாதிக்கக் கூடிய அல்லது பேசக்கூடிய வாய்ப்பு நமக்குக் கிடைத்ததே என்று நாம் மகிழ்ச்சி அடைந்தாலும், நம்முடைய எதிர்காலச் சந்ததியினரும் இதையே பேசிக்கொண்டு, விவாதித்துக கொண்டிருக்கக் கூடாது என்பதிலேயும் நாம் கண்ணுங்கருத்துமாக இருக்கிறோம். அந்த அடிப்படையிலேதான் மத்திய அரசாங்கத்தினுடைய கவனத்தைக் கொஞ்சம் ஆழமாகவும், அக்கறையோடும் ஈர்க்க வேண்டுமென்பதற்காக இன்றையதினம் இதை நாம் நடைமுறைப் படுத்துவதற்காக விவாதித்துக் கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் பேசுகின்ற பொழுதுகூட, மாநில அரசு இதற்குச் சமாதானம் சொன்னால் போதாது, மத்திய அரசுக்குச் சொல்ல வேண்டிய வகையில் சொல்ல வேண்டுமென்ற கருத்தைச் சொன்னார்கள். எந்தெந்த வகைகளிலே சொல்ல வேண்டுமென்பதையெல்லாம் நாங்கள் ஆழமாகச் சிந்தித்து எடுத்துச் சொல்லியிருக்கிறோம் என்பதையும், இந்த ஒரு மணி நேர விவாதத்தைக்கூடச் சமாதானம் சொல்வதற்காக அல்ல; மாண்புமிகு உறுப்பினர்களோடு சேர்ந்து இந்த அரசினுடைய எண்ணத்தையும் வலியுறுத்துவதற்காகத்தான் கொண்டு வந்திருக்கிறோம் என்பதையும் நான் இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே ஆரம்பிக்கப்பட்ட காலத்திலே எவ்வளவு செலவாகும் என்பதையும், இப்பொழுது எவ்வளவு செலவாகும் என்பதையெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இதனுடைய பயனைப்பற்றி இங்கே பேசியவர்கள் மிகச் சிறப்பாக எடுத்துச் சொல்லியிருந்தாலும், இரண்டொன்றை நானும் தொட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

பின் தங்கிய மாவட்டமாக இராமநாதபுரம் மாவட்டம் இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். வறட்சியாலும் ஆண்டுதோறும் அது அதிகமாகப் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுமேயானால் அந்த மாவட்டம் செழிப்படைவதற்கான வாய்ப்பிருக்கும் என்று நம்முடைய அரசாங்கம் கருதுகிறது.

அதுமட்டுமல்லாமல் 1980 ஆம் ஆண்டு கணக்குப்படி 110 கோடி ரூபாய் செலவாகும் என்று கணக்கைச் சொல்லியிருக்கிறார்கள். இன்றையதினம் 1982 ஆம் ஆண்டு. இன்னும் எவ்வளவு கோடி அதிகமாக ஆகும் என்று நமக்குத் தெரியாது.

எனவே, அத்தனை கோடிகள் அங்கே செலவழிக்கப்படும்பொழுது அதிலே பெரும்பகுதி அங்கேயிருக்கின்ற மக்களுக்குச் சம்பளமாக அது பயன்படும் என்பதிலே நாம் கொஞ்சம் அதிகமான அக்கறையைக் காட்டிக் கொண்டிருக்கிறோம். அதேபோன்று இதனுடைய ஒட்டுமொத்தமான வருமானம் ஏறத்தாழ ஒரு ஆண்டுக்கு 232 இலட்சம் ரூபாய் இருக்கும் என்று நாம் கணக்குப் போட்டு வைத்திருக்கிறோம்.

அது மட்டுமல்ல, இன்று அது ஒருவழிப் பாதையாக அமைக்கப் பட்டாலும் கூட, 15, 16-வது ஆண்டுகளிலே அது இரண்டு வழிப்பாதையாக அமைக்கப்பட வேண்டுமென்ற எண்ணத்தை எடுத்து சொல்லியிருக்கிறோம் இன்றைய தினம் உள்ள நிலைமைப்படி இது அமலாக்கப்படுமேயானால் ஏறத்தாழ 155 இலட்சம் டன் அந்த வழியாக எடுத்துச் செல்வதற்கு வாய்ப்பு நமக்கு இருக்கிறது என்பதையும் அதன் மூலமாக 350 மைல்கள் நமக்கு ஒவ்வொரு முறையும் மிச்சமாக ஆகும் என்பதையும் நாம் வலியுறுத்திக்கொண்டுதான் இருக்கிறோம்.

அதுமட்டுமல்ல, தூத்துக்குடி துறைமுகத்தைப் பொறுத்த வரையில் இந்தக் கால்வாய் அமைக்கப்பட்டதால்தான் ஒரு சிறப்பான வளர்ச்சியைப் பெறுவதற்கான வாய்ப்பு இருக்கிறது என்பதை ஆழமாக உணர்ந்திருக்கிறோம். அதுமட்டுமல்ல, தூத்துக்குடியும், அதற்குச் சுற்றியிருக்கின்ற இடங்களிலும் அத்தனை தொழிற்சாலைகளும் முன்னேறுவதற்கான வாய்ப்பும் அல்லது வளர்ச்சி அடைவதற்கான வாய்ப்பும் இந்தச் சேது சமுத்திரத் திட்டம் அமலாக்கப்பட்டால்தான் முழுமையாகக் கிடைக்கும் என்பதையும் வலியுறுத்திக்கொண்டிருக்கிறோம்.

இன்னொன்றைக் குறிப்பாக இன்றையதினம் உள்ள சூழ் நிலையில் சொல்ல வேண்டுமானால், தூத்துக்குடி அனல் மின் நிலையத்திற்கு நாம் கொண்டு வருகின்ற நிலக்கரியைக் கொண்டு வந்து சேர்ப்பதற்கு அந்தக் கால்வாயினால் ஏறத்தாழ 660 கடல் மைல்கள் மிச்சமாகும் என்ற கணக்கையும், 47 மணி நேரம் அதன் மூலமாக மிச்சப்படுத்த முடியும் என்ற கணக்கையும் கொடுத்திருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல, ஏறத்தாழ 1,36,47,036 ரூபாய் இன்றையதினம் உள்ள கணக்குப்படி நமக்கு மிச்சமாகும் என்ற கணக்கையும் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலேயிருந்து இன்றுவரையில் எப்படி அதனுடைய மதிப்பீட்டுத் தொகை உயர்ந்து கொண்டு வந்திருக்கிறது என்பதை நான் சொல்லியாக வேண்டும்.

1860 ஆம் ஆண்டு கணக்குப்படி ஏற்கனவே சொல்லியபடி 50 இலட்சத்திலே இதை முடிக்கலாம் என்ற கணக்கைக் கொடுத்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு 1968 ஆம் ஆண்டுக்கு நீங்கள் வருவீர்களேயானால் ஏறத்தாழ 37·50 கோடி ஆகுமென்ற கணக்கைக் கொடுத்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு 1974 ஆம்

ஆண்டு நாம் பார்த்தால் 65·50 கோடி ஆகும் என்ற கணக்கைக் கொடுத்தார்கள். அதற்குப் பிறகு 1979 ஆம் ஆண்டு ஜூன் என்ற இந்த ஆண்டிலே கணக்குப் பார்த்தால் 106 கோடி ரூபாய் ஆகும் என்று கணக்கைச் சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு 1980 ஆம் ஆண்டு — ஓரே ஆண்டு — அந்த ஆண்டிலே நவம்பர் மாதம் நமக்குக் கிடைத்த கணக்குப்படி பார்த்தால் ஏறத்தாழ 110 சோடி ஆகும் என்ற கணக்கைக் கொடுத்திருக் கிறார்கள். இன்றையதினம் எவ்வளவு ஆகும் என்பதைப்பற்றி நமக்குத் தெரியாது.

[பிற்பகல் 12.50]

இங்கே மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். 'வேதாளம் மீண்டும் முருங்கை மரம் ஏறுகிறது' என்று சொன்னார்கள். அதைப் பற்றிக் கூட எனக்குக் கவலை இல்லை. ஆனால் இந்தத் திட்டத்தினுடைய மதிப்பீடு இப்படி ஏறிக்கொண்டே போகிறதே என்பது தான் என்னுடைய கவலை. எது எங்கே ஏறுகிறது என்பதைவிட இந்தத்திட்டத்தினுடைய மதிப்பீடு இப்படி ஏறிக்கொண்டே போகிறது. அதற்காகத்தான் இதை உடனடியாக நிறைவேற்றவேண்டும் என்றுதான் இந்த அரசாங்கம் ஆழமாகவும், ஆணித்தரமாகவும் வலியுறுத்திக் கொண்டிருக்கின்றது. 12—9—1977 ஆம் ஆண்டு நமக்கு ஒரு கடிதம் மைய அரசாங்கத்தில் இருந்து வந்தது. அதை செயல் படுத்துவதற்கான உடனடித் தேவைகளைப் பற்றி நீங்கள் முழுமையாக நிரூபிக்கவில்லை என்ற கருத்தை அவர்கள் தெரிவித்தார்கள். உடனடியாக இந்த அரசாங்கம் ஒரு குழுவை ஏற்படுத்தி, அந்தக் குழுவின் மூலமாக அதற்கான முக்கியத் துவத்தை நாம் எடுத்துச் சொன்னோம்.

அதுமட்டுமல்லாமல், இந்த முக்கியத்துவத்தைத் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் 1979 ஆம் ஆண்டு ஜூன் மாதம் மத்திய அரசாங்கத்தினுடைய போக்குவரத்துத் துறை அமைச்சருக்கு ஒரு கடிதத்தை வலியுறுத்தி எழுதினார்கள். அதற்குப் பின்னாலே மீண்டும் அவர்களிடத்திலே இருந்து பதில் கிடைத்தது. 1980 மார்ச்சிலே நமக்கு ஒரு கடிதத்தை எழுதினார்கள். பொருளாதார ரீதியாக பார்க்கிறபோது அதாவது செலவு வரவுகளை எல்லாம் பார்க்கிறபோது இது அவ்வளவு லாபகரமாக இருக்குமா என்ற ஐயம் அந்த அரசாங் கத்திற்கு ஏற்பட்டிருக்கிறது. எனவே விரிவான குறிப்பு தேவை என்று மத்திய அரசாங்கத்திடமிருந்து நமக்கு எழுதினார்கள். இது கிடைத்த உடனே நாம் அதன் மீது விரிவான குறிப்பை அறிக்கையை அவர்களுக்கு அனுப்பிவைத்திருக்கிறோம். அனுப்பியதோடு மட்டுமல்லாமல் நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் 6-8-1980 இல் மீண்டும் ஒரு கடிதத்தை அதே முறையில் வலியுறுத்தி இது கொடுக்கப்படவேண்டுமென்பதை ஆணித் தரமாகச் சொல்லி கடிதத்தை எழுதினார்கள். அதற்குப்

பின்னாலும் மீண்டும் இது அவ்வளவு பயன் உள்ளதாக இருக்குமா என்ற ஒரு வினாவை எழுப்பி ஒரு கடிதத்தை எழுதிவிட்டு அதைத் தொடர்ந்து ஒரு கமிட்டியை அமைக்கிறார்கள். அது தான் 12-வது கமிட்டி என்று கணக்குச் சொல்கிறார்கள். ஆண்டுகள் போய்க்கொண்டிருக்கிறது. அதே கணக்கிலே விலையேறிக் கொண்டே இருக்கிறது. இதனுடைய மதிப்பீடு ஏறுகிறது அதேபோன்று கமிட்டியினுடைய எண்ணிக்கையும் ஏறிக்கொண்டே வந்து இருக்கிறது. 12-வது கமிட்டியிலே லட்சுமிநாராயணன் என்பவர் தலைவராக பொறுப்பேற்று அந்த கமிட்டி இன்றைய தினம் நடந்துகொண்டிருக்கிறது. இதிலே கூட கோவில்பிள்ளை என்ற ஒருவர் இருந்தார். அவரை மாண்புமிகு குமரி அனந்தன் அவர்கள் ஒருமுறை என்னிடத்திலே கூட்டிவந்து நேரிலே பேசினோம். அவருக்குள்ள அக்கறையைப் பார்க்கிறபோது உண்மையிலேயே ஆச்சரியமாக இருந்தது. அதற்காக மற்ற உறுப்பினர்கள் அதிலே அக்கறை இல்லாமல் இருந்தார்கள் என்று சொல்ல நான் தயாராக இல்லை. மிக விரைவாக அவர்கள் செய்திருக்கிறார்கள். நல்ல முறையிலே செய்து இருக்கிறார்கள். கோவில் பிள்ளை இன்றைய தினம் இல்லாத காரணத்தினால் அவரைப்பற்றி சுட்டிக்காட்ட வேண்டியவனாக இருக்கிறேன். அவர் எந்த அளவு ஆர்வத்தோடு அவராக ஒரு குறிப்பை எடுத்து அவராகவே அந்தத் திட்டத்தைப் பற்றி ஒரு விளக்கத்தையும் உருவாக்கி நமக்கும் கொடுத்தார்கள், மத்திய அரசுக்கும் கொடுத்தார்கள். இன்றைய தினம் அவர் இல்லாதிருப்பது ஒரு பெரிய இழப்பு என்றுகூட நான் கருதுகிறேன். அதற்குப் பதிலாக சிவலிங்கம் என்பவரையும் மத்வான் என்பவரையும் அந்தக் கமிட்டியிலே புதிதாக சேர்த்திருக்கிறார்கள். அந்த கமிட்டி இங்கே வந்த போதுகூட பல இடங்களிலே ஆய்வுகளை நடத்தினார்கள். அப்போதுகூட நம்முடைய மாநிலத்தின் சார்பாக அதிகாரிகளை அனுப்பி 11-8-1981 அன்று சென்னையிலே சந்தித்து இதனுடைய முழு விளக்கத்தையும் அவர்களுக்கு கொடுத்திருக்கிறோம். இங்கேயிருக்கிற வர்த்தக சங்ககங்களைச் சேர்ந்தவர்களுக்கும் இதுசம்பந்தமாக குறிப்புகளைக் கொடுத்து அவர்களும் அவர்களுக்குத் தெரிந்ததை அந்தக் குழுவினிடத்திலே சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையிலே மாநில அரசு இந்த குறுகிய காலத்திற்குள் — இது 1860 லிருந்து 122 ஆண்டுக்காலமாக தொடர்ச்சியாக இருக்கிற திட்டம் என்று சொன்னாலும் — இந்த 3, 4 ஆண்டுக்காலத்திற்குள் இந்த அரசாங்கம் வெகு வேகமாக பல முறைகள் இதற்காக வலியுறுத்தியிருக்கிறது என்பதற்காகத் தான் இந்தக் கருத்தை எடுத்துச் சொல்கிறேன்.

இப்போது கூட அங்கே இராமநாதபுரத்திலிருந்து அந்த மக்கள் இவர்களைப் பார்த்து இராமேஸ்வரத்தைப் பொறுத்த வரையில் இப்போது கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்தத் திட்டம் நிறைவேறினால் இது இரண்டாகப் பிரிக்கப்பட்டுவிடும். எனவே அது இல்லாமல் செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். தனுஷ்கோடி வழியாக இதைச் செய்யவேண்டுமென்ற ஒரு மனுவைக் கொடுத்தார்கள், இந்த மனு கொடுக்கப்

பட்டது என்று தெரிந்தவுடனே நாங்கள் யாரும் சொல்லாமலேயே நாங்களே ஒரு குழுவை அமைத்தோம். இந்த குழு அமைக்கப் பட்டு தனுஷ்கோடி வழியாக இதைச் செய்வதற்கு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதை அறிவதற்காக இந்தக் குழு அமைக்கப்பட்டு ஏறத்தாழ 3 லட்சம் ரூபாய் அந்த செல வினத்திற்காக நாங்கள் ஒதுக்கி இருக்கிறோம். அந்தப் பணி வேகமாக நடந்து கொண்டிருக்கிறது. ஏறத்தாழ பாதிப் பணி களுக்கு மேல் முடித்திருக்கிறார்கள், அது முடிந்தவுடனே அந்த அறிக்கையை அவர்களுக்குக் கொடுக்க இருக்கிறோம். இந்த அளவிலே இந்த அரசாங்கம் மிகத் தீவிரமாக இதை வற்புறுத்தி வருகிறது என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரையில் இரண்டு பேர்கள் பேசி இருக்கிறார்கள். மற்றக் கட்சிகளிலே ஒவ்வொருவர் பேசி னாலும்கூட நான் எது தேவை என்று கருதினேனோ அந்த அடிப்படையிலே 2 பேர் கருத்துக்களை எடுத்துத் தெரிவித்திருக் கிறார்கள். இதற்குச் சாதகமாக இந்தத் திட்டம் நிறைவேற வேண்டுமென்பதற்காக தங்களுடைய முழுமையான கருத்துக் களை வலியுறுத்தி சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் சொல்கிற போதும்கூட சட்டமன்றக் காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் ஒரு கருத்தைக் சொன்னார்கள். இது நிறைவேற்றப்படுவதற்கு என்ன என்ன சிக்கல்கள் இருக்கின்றன என்பதையும் அரசு எவ்வளவு கண்ணுங்கருத்துமாக அதை அணுகுகிறது என்பதையும் சொன்னார்கள்.

1860 ஆம் ஆண்டிலேயிருந்து இது கண்ணும் கருத்துமாக செய்யப்பட்டு வந்து கொண்டேயிருக்கிறது. ஆனால் இதில் எனக்கு இருக்கிற வருத்தம் எல்லாம் இது நம்முடைய காலத் திற்குள் நிறைவேற்றப்படவேண்டுமென்பதுதான் என்னுடைய ஆசையாக இருக்கிறது, அந்த அடிப்படையிலே கண்ணும்கருத்து மாக செயல்பட்டாலும் கூட விரைவாக செயல்படுத்தவேண்டியது நம்முடைய கடமை உரிமை என்று கருதுகிறேன், இன்னும் ஒரு கருத்தைச் சொல்ல வேண்டுமானால், ஏற்கனவே இவ்வளவு மதிப்பீட்டுத் தொகை என்று ஒதுக்கிவிட்டார்கள். இன்றைக்கு மதிப்பீட்டுத் தொகை 110 கோடி என்று சொல்கிறார்கள். 1968-ஆம் ஆண்டிலே ஆரம்பித்தபோது 37.50 கோடி என்று சொன்னார்கள். எனவே இவ்வளவு பணம் செலவாகும் என்ற கணக்கு போட்டபிறகு இதில் குறைபாடுகள் இருக்கிறது என்று காலம் தாழ்த்துவது என்பது சரியாக இருக்காது. இந்த திட்டத் திற்கான மதிப்பீடு போடப்படாமல் இருக்குமேயானால் முழுமை யாக ஆய்வு நடத்தி முடிக்கப்படவில்லை என்றால் நாம் ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் திட்டத்திற்கான மதிப்பீடு போட்ட பிறகு முழுமையான ஆய்வு நடத்திக் கொண்டிருக்கிறார்கள், கண்ணும்கருத்துமாக பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. நாமும் கொஞ்சம் இன்னும் நடத்தித்தரவேண்டுமென்று ஆணித்தரமாக கேட்டுக்கொண்டிருக் கிறோம். இங்கே திரு. ரமணி அவர்கள் பேசும்போது, இன்னொரு

(திரு. சு. முத்துசாமி) [1982 ஏப்ரல் 5

கருத்தைச் சொன்னார்கள். இந்த தமிழகம் வளருவதில் மத்திய அரசாங்கம் விரும்பவில்லை என்று ஒரு கருத்தைச் சொன்னார்கள் இதை நான் ஏற்றுக்கொள்வதற்கு தயாராக இல்லை. காரணம் இந்த தமிழ்நாடு போல் பல்வேறு மாநிலங்கள் சேர்ந்ததுதான் இன்றையதினம் இந்திய துணைக்கண்டமாக இருக்கிறது. ஒரு மாநிலம் வளர்ச்சி அடைந்தால்தான் இந்திய துணைக்கண்டம் ஒட்டு மொத்தமாக வளர்ச்சி அடையும் என்பதிலே யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. அப்படி நாம் நினைக்கிற போது நிச்சயமாக மத்திய அரசாங்கம் இந்த மாநிலத்தை' நம்முடைய தமிழகத்தை எந்தவகையிலும் புறக்கணிக்க மாட்டார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அந்த அடிப்படையிலே நீங்கள் அத்தனை பேரும் சொல்லியிருக்கின்ற கருத்துக்களை பிரதிபலிக்கின்ற வகையிலே இந்த அரசு மத்திய அரசாங்கத்தை வலியுறுத்தும் என்றும், இந்த ஆண்டு எப்படியும் சேர்த்தாக வேண்டுமென்று கேட்டுக்கொள்ள நம்முடைய உரிமையைப் பயன்படுத்துவோம் என்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்,

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) பேரவை அலுவல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவிற்கு இணங்க பேரவையின் அலுவல் கீழ்க்கண்டவாறு அமைக்கப்பட்டிருக்கிறது என்பதை பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்:

6-4-1982 செவ்வாய்க்கிழமை	மகாவீரர் பிறந்த தினம்—விடுமுறை.
7-4-1982 புதன்கிழமை	அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தலும் நிறைவேற்றலும்.

1. தமிழ்நாடு 1982-ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு.
2. தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன் வடிவுகள்.
3. தமிழ்நாடு 1982-ஆம் ஆண்டு பத்திரிகைப் பணியாளர்கள் நிவாரண நிதிச் சட்ட முன்வடிவு.
4. தமிழ்நாடு 1982-ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதி (திருத்த) சட்ட முன்வடிவு.
5. தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு பசுக்கள் வெட்டப்படுவதைத் தடுத்தல்—கால்நடை பாதுகாப்புச் சட்ட முன்வடிவு.

1982 ஏப்ரல் 5] [பேரவைத் தலைவர்]

தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 45/1980) (ஆய்வுக் குழு திருத்தி அமைத்தவாறு) அடுத்த கூட்டத் தொடரில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறும். அடுத்த கூட்டம் ஜூலைத் திங்களில் நடைபெறும். நாள் பின்னர் அறிவிக்கப்படும் பேரவையின் இந்தக் கூட்டம் 7-4-1982 அன்று முடிவடையும்

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளை, 7-4-1982-ந் தேதி காலை 9.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.00 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

(9) பேரவை முன்வைக்கப் பெற்ற ஏடுகள்..

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

162. தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு சாராய (தயாரித்தல் விதிகளில்-சில திருத்தங்கள் செய்வது குறித்து 20-7-1981-ஆம் தேதியிடப்பெற்ற மதுவிலக்கு-ஆயத் தீர்வைத் துறையின் 126-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937 54 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.)

163. தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு சாராய (சில்லறை விற்பனைக் கடைகள்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 10-12-1981-ஆம் தேதியிடப்பெற்ற மதுவிலக்கு-ஆயத் தீர்வைத் துறையின் 349-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.

164. தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு (சில்லறை விற்பனைக் கடைகள்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 15.12.1981-ஆம் தேதியிடப்பெற்ற மதுவிலக்கு-ஆயத் தீர்வைத் துறையின் 361-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

165. தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு சாராயம்-கள் (தனியார் அனுமதிச்சீட்டு) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 15-2-1981-ஆம் தேதியிடப்பெற்ற மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறையின் 362-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ்பேரவைமுன் வைக்கப் பெற்றது).

166. தமிழ்நாடு 1940-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 18-1-1982ஆம் தேதியிடப்பெற்ற உள்துறையின் 97-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (1932-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

167. தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு குடிசை மாற்று வாரியப் பணியாளரமைப்பு விதிகளில் சிலதிருத்தங்கள் செய்வது குறித்து 13-3-1981 ஆம் தேதியிடப்பெற்ற வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 179-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. (தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (மேம்படுத்துதல், நீக்குதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 72 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.

168. தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு குடிசை மாற்று வாரியப் பணியாளரமைப்பு விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 12-5-1981-ஆம் தேதியிடப் பெற்ற வீட்டுவசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 329-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (மேம்படுத்துதல், நீக்குதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 72 (2) உட்பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

அ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

—எதுவுமில்லை—

இணைப்பு.

257ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 765-க்கான விடையைக் காண்க.

1980ம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 15, 16-ம் தேதிகளில் புதுடெல்லியில் நடைபெற்ற தொழிலாளர் நல அமைச்சர்களின் நிலைக்குழுவின் (Standing Committee of Labour Ministers) முதலாவது கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட பொருட்கள் மீதான கருத்துக்களைத் தெரிவிக்கையில் மத்திய அரசு இயற்ற உத்தேசித்துள்ள கட்டிடம் மற்றும் கட்டுமானத் தொழிலாளர் வரைவுச் சட்டத்தினைப் பெரிதும் வரவேற்று இவ்வரசு கீழ்க்கண்ட கருத்துக்களைத் தெரிவித்துள்ளது:—

(1) கட்டிடம் மற்றும் கட்டுமானத் தொழில் மிகவும் கடினமானதும் நிலையில்லாததுமான ஒரு தொழிலாகும். ஆகவே அத்தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களுக்கு வேலை பாதுகாப்புக்கு உத்திரவாதம் அளிப்பதற்கேற்ப சட்டத்தில் போதுமான வழிவகைகள் ஏற்படுத்த வேண்டும். இல்லாவிடில் இவ்வுரிமைகளைக் கோரும் தொழிலாளிக்கு அடுத்த நாளே வேலையிழக்கும் நிலை ஏற்படக்கூடும். ஆகவே துறைமுகத் தொழிலாளர்களுக்கு உள்ள சலுகைகள் போன்று இத்தொழிலாளர்களுக்கும் சலுகைகள் வழங்கும் வகைகளைக் கருத்திற்கொண்டு துறைமுகத் தொழிலாளர்களுக்குள்ளவை போன்று கட்டிடக் கட்டுமானத் தொழிலாளர்களுக்கும் இச்சட்டத்தில் வழிவகைகள் செய்யப்பட வேண்டும்.

(2) கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம், உணவு நிறுவனங்கள் சட்டம் இவற்றில் உள்ளது போன்று புகார்களைக் கவனிப்பதற்கென்று தனி அமைப்புக்களை நியமிக்க வேண்டும். கட்டிடம் மற்றும் கட்டுமானத் தொழிலாளர் தம் குறைகளை நிவர்த்தி செய்யும் வகையில் இத்தொழிலாளர் நேரிடையாகவே தொழிலாளர் உயர் அதிகாரிகளைச் சந்திப்பதற்கேற்ற வகையில் சட்டத்தில் வழிவகைகள் ஏற்படுத்த வேண்டும்.

(3) பெரிய அணைக் கட்டும் இடங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொள்வதற்கு சட்டத்தில் வழிவகை ஏற்படுத்த வேண்டும்.

(4) சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல் குறித்து நாட்டிடை தொழிலாளர் நிறுவனம் (International Labour Organisation) ஏற்கனவே செய்துள்ள பரிந்துரைக்கேற்ப உத்தேசித்திருக்கும் சட்டத்தின் பிரிவு 2 (C)ன் கீழ்வரும் 'சிறுவர்' என்பதாக விளக்கத்தில் குறிப்பிட்டுள்ள வயது வரம்பை 16ஆக உயர்த்த வேண்டும்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

புதன்கிழமை, 1982 ஆம் ஆண்டு ஏப்ரல் 7

பங்குனி 25, துன்மதி—திருவள்ளுவர் 2013.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 8—00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வந் தகைத்து''

பணிவுடையவராக ஒழுகுதல் பொதுவாக எல்லோர்க்கும் நல்லதாகும். அவர்களுள் சிறப்பாக செல்வர்க்கே மற்றொரு செல்வம் போன்றதாகும்.

1. இரங்கல் குறிப்பு

முன்னாள் உறுப்பினர் திரு. எஸ் ஆறுமுகம் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. எஸ். ஆறுமுகம் அவர்கள் 2-1-82 ஆம் தேதியன்று மறைந்ததை இப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆறுமுகம் அவர்கள் 1952 ஆம் ஆண்டிலிருந்து 1957 ஆம் ஆண்டுவரை சேலம் மாவட்டம் திருச்செங்கோடு (செட்யூல்ட் வகுப்பு) தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும், இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை எய்தியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்)

2. வினாக்கள்—விடைகள்

உறுக்குறியிட்ட வினாக்கள்.

தீயணைப்புப் பணியாளர்களுக்கு குடியிருப்புகள் கட்டும் திட்டம்.

*வினா எண். 74—திரு என். பழனிவேல்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தீயணைக்கும் படையில் பணிபுரியும் அலுவலர்களுக்கு வீட்டு வசதி செய்து தரும் திட்டம் எந் நிலையில் உள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தீயணைப்புப் பணியாளர்களுக்கு குடியிருப்புத் திட்டம் ஒவ்வொரு ஆண்டும், குறைந்தது மூன்று தீயணைப்பு நிலையங்களில் பணி புரிபவர்களுக்காவது நிறைவேற்றப்பட வேண்டும் என்ற கருத்தில் முதல் கட்டமாக சிவகாசி, இராணிப்பேட்டை, உடுமலைப்பேட்டை ஆகிய மூன்று இடங்களில் பணிபுரியும் தீயணைப்பு பணியாளர்களுக்கு குடியிருப்புகள் கட்ட 22–1–1982–ம் தேதியிட்ட அரசு ஆணையில் ஆணையிடப்பட்டுள்ளது.

திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் : தலைவரவர்களே, இந்த தீ அணைக்கும் படையிலே வீட்டுவசதித் திட்டம் இதுவரை எங்கெங்கு அமுலாக்கப்பட்டிருக்கிறது? இன்னும் எங்கெல்லாம் அமுலாக்க அரசாங்கம் பரிசீலித்துக்கொண்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இப்போதுதான் அமுல்படுத்துவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. முதல் கட்டமாக சிவகாசி, இராணிப்பேட்டை, உடுமலைப்பேட்டை ஆகிய மூன்று இடங்களில் 120 குடியிருப்புகள் கட்டுவதற்கு 40,50,000/-ம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது முடிந்த பிறகு அடுத்த கட்டமாக தாராபுரம், பெரியகுளம், பெரம்பலூர் ஆகிய இடங்களில் வீடு கட்டும் முயற்சி இருந்து வருகிறது.

புதிய தீயணைக்கும் இயந்திரங்களை இறக்குமதி செய்யும் திட்டம்

*வினா எண்.—775 திரு. குமரிஅனந்தன்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதியதாக தீயணைப்பு இயந்திரங்கள் இறக்குமதி செய்ய மத்திய அரசிடம் அனுமதி கோரப்பட்டுள்ளதா?

(ஆ) எத்தனை இயந்திரங்கள் வாங்க எவ்வளவு ரூபாய் நிதி உதவக் கேட்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இறக்குமதி செய்வதற்கு எந்த முயற்சியும் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இப்போது புதிதாக நீரைப் பாய்ச்சி தீயை அணைப்பதற்குப பதிலாக நுறையைப் பரப்பி தீயை அப்படியே அணைக்கின்ற இயந்திரங்கள் வந்திருப்பதாக செய்தித் தாள்களில் படிக்கிறோம். அவைகளை இறக்குமதி செய்ய அரசு முயலுமா? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, தக்க நேரத்தில் இறக்குமதி லைசென்ஸ் (இம்போர்ட் லைசென்ஸ்) கோரப்படும். இவ்விதம் புதிய இயந்திரங்கள் வாங்க இப்போது உதவி கேட்கவில்லை. ஆனால் பொது

காப்பீட்டு நிறுவனத்திலிருந்து (ஜெனரல் இன்ஷூரன்ஸ் கம்பெனி) 1,41,00,000 ரூபாய் கடன் உதவி கிடைத்திருக்கிறது. அதிலிருந்து போர்ட்டபிள் பம்புகள் 10, ஆம்புலன்ஸ் வண்டிகள் 10, கேசி எண். 1000 கேலன் கொள்ளளவு உள்ள நீர் வண்டிகள் 12, இதர வண்டிகளும் வாங்க திட்டமிடப்பட்டிருக்கிறது. இன்றைக்கு புதிய புதிய வகை தீ அணைப்பு இயந்திரங்கள், மற்றவைகளை உள்நாட்டில் வாங்கவும் தேவைப்பட்டால் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யவும் முயற்சி செய்கிறோம். அந்த வகையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது சம்பந்தமான குறிப்பு இல்லை; அதுபற்றி எதிர்காலத்தில் ஆராய்ந்து, தேவைப்பட்டால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. குமரி அனந்தன்: தலைவர் அவர்களே, வால்டாக்ஸ் சாலையில் இருக்கும் தீயணைப்பு நிலையத்தில் இருக்கிற தீயணைப்புப் பயிற்சிப்பள்ளிக்கும், தங்கசாலையில் இருக்கும் தீயணைப்பு நிலையத்திற்கும் தீயணைப்பு வண்டிகள் கட்ட, 10–20 லாரிசேசிஸ் வாங்கி 4–5 ஆண்டுகள் ஆகியும், அப்படியே போடப்பட்டு, பாடிகள் கட்டப்படாமல் அது இருப்பது அரசுக்குத் தெரியுமா? அப்படியானால், அதை விரைவில் பயன்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதைப் பற்றிய விவரக் குறிப்புகள் இல்லை. தனிக் கேள்வி போட்டால் அதனுடைய முழு விவரங்களையும் அறிவிக்கலாம்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, தீயணைப்பு நிலையங்களில், சில இடங்களில், உள்ள வாகன வசதிகள் என்று பார்க்கிறபோது, இப்போது இருக்கும் மோட்டார் வாகனங்கள் மிகப் பழமையானதாக இருப்பதால்,— அது செய்யக்கூடிய பணி அவசர முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதால்,—அவைகள் விரைவாகச் செல்ல முடியாமல் இருக்கின்றன. ஆகவே, அத்தகைய இடங்களில் இருக்கும் வாகனங்களை புதுப்பிக்கும் முயற்சியை அரசு எடுக்குமா? உசிலம்பட்டியில் அப்படி ஒரு பழைய வாகனம் இருப்பதாக அறிகிறேன். உடனடியாக அதைப் புதுப்பிப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, ஒவ்வொரு தீயணைப்பு நிலையத்திலும் உள்ள வாகனங்களும், அதனுடைய கால அளவு, அது எவ்வளவு தூரம் சென்று இருக்கிறது, எப்படி பயன்படுத்தப்பட்டு இருக்கிறது என்பதை கணக்கிட்டு, அந்தக் கணக்கின் அடிப்படையில், அவைகள் தள்ளப்பட்டு, புது வண்டிகள் வாங்கும் முயற்சி எடுக்கப்படுகிறது. இப்படி பழைய வண்டிகள் ஆங்காங்கு புதுப்பிக்கப்படும் திட்டம் ஆண்டுதோறும் செய்யப்பட்டு வருகிறது. வருகின்ற ஆண்டிலும் அதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் கேட்டது குறித்து முழு விவரம் இல்லை. இருப்பினும் மேற்குறிப்பிட்ட அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் கூறும் கருத்தும் மேற்கொள்ளத்தக்கதாக இருப்பின் ஆராயப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்தில் பல மாடிக் கட்டிடங்கள் ஏராளமாக எழுந்து வரும் இந்த நேரத்தில், அத்தகைய உயரமான கட்டிடங்களில் தீப்பற்றி விட்டால் அவற்றை சமாளிக்கும் வகையில் போதிய அளவிற்கு தீயணைப்பு இயந்திரங்கள் இல்லை என்றும், எல்.ஐ.சி. கட்டிடத்தில் தீ விபத்து ஏற்பட்ட போது, அப்படிப்பட்ட இயந்திரங்கள் இல்லாததால் பெருத்த நஷ்டம் ஏற்பட்டது. ஆகவே, இத்தகைய பல மாடிக்கட்டிடங்களில் ஏற்படும் தீ விபத்துக்களைத் தடுப்பதற்காக விசேஷ இயந்திரங்களை இறக்குமதி செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறியது போன்று சென்னை நகரில் மிகப் பெரிய கட்டிடங்கள் இருப்பதால், அங்கே தீப்பிடித்து விட்டால் அவற்றைத் தடுப்பதற்காக வசதி பெற்ற 'ஸ்னாக்கல்' என்ற இயந்திரம் 53 லட்ச ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் வாங்கப் பட்டு இருக்கிறது. அது கிட்டதட்ட 103 அடி உயரம் அளவிற்கு எழும்பி அதிலே ஏழு பேர் நின்று, அதற்கும் மேலேயே பல அடி உயரம் அளவிற்கு தீயணைப்புப் பணிகள் செய்ய முடியும். மாண்புமிகு உறுப்பினர் கூறியதைப்போல, எல்.ஐ.சி. கட்டிடம் தீப்பிடித்த போது, அப்படிப்பட்ட யெந்திரம் இல்லை. அதற்குப் பிறகு ஸ்பென்சர், என்னை சுத்திகரிப்பு ஆலை, டிம்பர் ப்ளாஸ்டிக்ஸ் இண்டஸ்ட்ரி. பிறகு சைடன்ஹாம்ஸ் ரோடில் ஏற்பட்ட தீ விபத்துக்கள் ஆகியவற்றில் இந்தப் புதிய இயந்திரம் பயன் படுத்தப்பட்டு இருக்கிறது.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: தலைவர் அவர்களே, தீயணைப்பு நிலையங்கள் தலைநகரங்களிலும் மற்றும் பல இடங்களிலும் துவக்கப்பட்டது, அப்படி துவக்கப்பட்ட பல இடங்களில் தண்ணீர் வசதி இல்லை. வாகன வசதி மட்டும் இருக்கிறது. அதற்கு உதாரணம்—உசிலம்பட்டியில் தீயணைப்பு நிலையம் இருக்கிறது. தண்ணீர் வசதி இல்லை. ஒரு இடத்தில் தீப்பிடித்து விட்டால், அவர்கள் தண்ணீர் எடுத்து வருவதற்காக 10 கிலோ மீட்டர் குறைந்தது செல்லவேண்டியிருக்கிறது. அதற்குள் 5 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பெரியகுளத்தில் இருந்தே வண்டி வந்து தீயணைப்பு செய்கிற நிலைமைகள் கூட இருக்கின்றன. ஆகவே எங்கெங்கே தீயணைப்புநிலையங்கள் துவங்கப் படுகிறதோ அங்கே முதலிலேயே தண்ணீர் வசதியும் செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா? தற்போது, திருமங்கலத்தில் துவக்க இருக்கிற தீயணைப்பு நிலையத்திற்கும் தண்ணீர் வசதி இல்லாமல் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இதைக் கருத்தில் கொண்டு, அதற்குரிய தண்ணீர் வசதியை செய்து தர அரசு என்ன நடவடிக்கைகளை எடுக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, தீயணைப்பு நிலையம் ஏற்படுத்துகிறபோதே, அந்தப் பகுதியினுடைய அளவு அங்கே ஏற்படுகின்ற விபத்துக்களின் எண்ணிக்கை, அங்கே விபத்துக்கள்

அடிக்கடி ஏற்படுகின்றதா என்கிற சூழ்நிலைகள், தண்ணீர் கிடைக்கும் அளவு, மற்றவைகள் எல்லாம் ஆராய்ந்து தான் இடம் தேர்ந்தெடுக்கப்படுகிறது. தேர்ந்தெடுக்கிறபோதே தண்ணீர் இருக்கிறதா இல்லையா என்பதைப் பார்த்திருப்பார்கள் ஆனால் உசிலம்பட்டி நிலைமையைப் பற்றிச் சொல்கிறபோது, அது மேஜர் பஞ்சாயத்து என்று கருதுகிறேன். அப்படிப்பட்ட மேஜர் பஞ்சாயத்தில் ஆயிரக்கணக்கான பேர்கள் வாழ்கிறபோது அவர்களுக்கு குடிக்க, குளிக்க தண்ணீர் இல்லாமல் இருக்காது. அங்கே தீ அணைப்பு நிலையம் கட்டாயம் வேண்டும் என்று கேட்டுத் தான் அமைத்திருக்கிறார்கள். இந்த வசதி வாய்ப்பு முறைகளை எல்லாம் பார்க்காமல் வைக்க மாட்டார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று இடர்பாடு ஏற்பட்டது என்றால் எந்த வகையில் ஏற்பட்டது? ஏன் ஏற்பட்டது என்று தனியாகத்தான் ஆராய வேண்டும். தீ அணைப்பு நிலையங்களில் 500 காலன் கொள்ளளவு ஆயிரம் காலன் கொள்ளளவு, 100 காலன் கொள்ளளவு என்ற அளவுகளில்தான் டாங்குகள் பொருத்தப்படுகிறது. அந்த அளவு தண்ணீர் தேவையை பார்த்துத்தான் வைத்திருப்பார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்ற நிகழ்ச்சி எந்த அடிப்படையில் நடந்தது என்று ஆராய்ந்து பார்த்து தக்க நடவடிக்கைகளை எடுக்கலாம்.

திரு. இல. பலராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தீயணைப்பு நிலையம் மிகவும் வேகமாக பரவலாக அமைக்கப்பெற வேண்டும் என்பது அரசாங்கத்தின் கொள்கையாக இருக்கலாம். ஆனால் கடந்த காலங்களில் நடைபெற்ற பல தீ விபத்துக்களில் பல கோடிக்கணக்கான ரூபாய் மாநில அளவில் நஷ்டம் ஏற்பட்டது. பல தாலுக்கா தலைமையிடங்களிலும், அரசு அறிவித்த பல இடங்களிலும் கூட கடந்த 1, 2 ஆண்டுகளாக நிலையங்கள் ஏற்படாமல் இருக்கின்ற நிலைமைதான் இருக்கிறது. குறிப்பாக வட ஆற்காடு மாவட்டத்தில் போளூர் என்ற இடத்தில் தீ அணைப்பு நிலையம் ஆரம்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு இன்னும் ஆரம்பிக்கப்படாமல் இருப்பதை அரசு பரிசிலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற நிலை என்ன நிலைமையில் இருக்கிறது என்ற குறிப்பு என்னிடத்திலே இல்லை. தனிக் கேள்வியாக போட்டால் முழு விவரங்களைத் தர முடியும். பல புதிய இடங்களில் தீ அணைப்பு நிலையத்தை ஏற்படுத்துவதற்கான திட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூட தம்முடைய உரையிலே குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே அறிவிக்கப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, இன்னும் துவக்கப்படாமல் இருந்தால் அதற்கான காரணங்களை விரைவிலே கண்டு அறிந்து தக்க நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

1982 ஏப்ரல் 7

நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் கூட்டுறவு அங்காடிகளைக் கண்காணிக்க மாவட்ட ஆலோசனைக் குழுக்கள் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 776—திரு. ஏ. எம். சேதுராமன்: திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கூட்டுறவு அங்காடிகளின் செயல் முறைகளை கண்காணிக்க மாவட்ட அளவில் ஆலோசனைக் குழுக்களை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடமுள்ளதா?

(ஆ) கிராமங்களில் கூட்டுறவுக் கடைகளை விரிவாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) பொதுமக்களுக்கு அத்தியாவசியப் பண்டங்கள் சீரான முறையில் விநியோகம் செய்ய மாவட்ட ஆட்சியாளருக்கு உதவுவதற்கும் ஆலோசனை கூறுவதற்கும் மாவட்ட அளவில் ஆலோசனைக் குழுக்களை அமைக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

(ஆ) 11 மாவட்டங்களில் கூட்டுறவுத் துறை சார்பிலும் மீதமுள்ள 4 மாவட்டங்களில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பிலும் 15,000க்கும் மேற்பட்ட கிராம நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன. ஆகவே கூட்டுறவுக் கடைகளை மேலும் அதிகப்படுத்த அரசிடம் திட்டம் ஏதும் இல்லை.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்று கூட்டுறவுத் துறை மூலம் கிராமங்களில் கடைகள் திறக்கப்படும் போது, ஒரு ரெவின்யூ கிராமத்திற்கு ஒரு கடைதான் என்ற விதிமுறை இருக்கிறது என்றும், கூடுதலாக அங்கே கடைகள் திறக்கப்படவேண்டும் என்று கேட்டால், அதற்கு சட்டத்திலே விதிமுறை இடம் கொடுக்கவில்லை என்றும் சொல்கிறார்களே, எனவே ஒரு ரெவின்யூ கிராமத்திற்கு ஒரு கடை என்ற நிலையை மாற்றி, மக்கள் தொகை அடிப்படையில், கூடுதலாக தேவைப்படும் கிராமங்களுக்கு கூடுதலாக கடைகளை ஆரம்பிக்க அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, ஒரு ரெவின்யூ கிராமத்திற்கு ஒரு கூட்டுறவு கடை என்பது அடிப்படையாகக் கொண்டிருக்கும் கொள்கை. கிட்டத்தட்ட பன்னிரண்டாயிரத்து சில்லரை ரெவின்யூ கிராமங்கள் இருக்கின்றன என்றால், மொத்தமாக 15,000க்கும் மேற்பட்ட நியாயவிலைக் கடைகள் இருக்கின்றன. அப்படிப் பார்க்கிற போது, ஒரு கிராமத்திலேயே 2 கடைகள் கூட இருக்கின்றன. கூடுமானவரையில் அட்டைகளின் எண்ணிக்கை கூடுதலாக ஆகாமல் 2000-க்கு மேல் போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். 2000-த்தைத் தாண்டி விட்டால் இரண்டாகப் பிரித்து இரண்டு கடைகளாக வைக்கலாம் என்று கூறியிருக்கிறோம். பல இடங்களில் 500 கார்டுகளே இருக்குன்ற சூழ்நிலை இருக்கிறது. 500-க்கும் 1000-க்கும் உட்பட்ட கார்டுகள் உள்ள கடைகளும் இருக்கின்றன. இன்னும் தூரத்தைக் கருதியும் சில ஊர்களில் இருந்து இன்னும் சிலபல வசதி வாய்ப்புகளை கருதியும் மேற்கொண்டும் சிலபல கடைகள் உருவாக்க வேண்டும் என்று விண்ணப்பம் வந்திருக்கிறது. அவைகளை அரசு ஆராய்ந்து வருகிறது.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் அங்காடிகளிலும் கூட்டுறவு அங்காடிகளிலும் செயல்முறைகளை கண்காணிக்க ஆலோசனைக் குழுக்கள் அமைக்க அரசு உத்தர விட்டுள்ளதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். மாவட்ட அளவில் எல்லா இடங்களிலும் இந்த ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டுவிட்டதா? அப்படி அமைக்கப்பட்ட இடங்களில் இந்தக் குழுக்களுக்கு எந்த விதமான அதிகாரமும் இல்லாமல் இருப்பதாகச் சொல்கிறார்களே, ஆகையால் அதற்கு என்னென்ன அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன? மூன்றாவது இந்தக் குழுக்களில் எல்லாம் எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த பிரதிநிதிகள் சேர்ப்பட்டிருக்கின்றனரா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே மாவட்ட அளவிலே மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அல்லது மாவட்ட வருவாய்த்துறை அதிகாரிகள் ஆகியவர்களின் தலைமையின் கீழ் இந்தக் குழுக்கள் அமைக்கப்படவேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டு அதை நடைமுறைப்படுத்தும்படி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எல்லாம் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அந்தக் குழுக்களிலே முதுநிலை மண்டல மேலாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தைச் சேர்ந்தவர், கூட்டுறவுச் சங்க இணைப் பதிவாளர் ஒருவர், மாவட்டத் தலைமையிடத்திலிருந்து கூட்டுறவுச் சிறப்பு அங்காடி, கூட்டுறவுச் சிறப்பு அலுவலராக இருப்பவர் ஒருவர், மாவட்ட வழங்கு துறை அலுவலர் ஒருவர், மாவட்ட மகளிர் நலத் துறை அலுவலர் ஒருவர், மாவட்ட ஆட்சித் தலைவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட 3 நுகர்வோர் பிரதிநிதிகள், பெண்மணி ஒருவர், ஆதி திராவிடர் ஒருவர் சமூகநல ஊழியர் ஒருவர், மத்திய அரசால் தேர்ந்தெடுக்கப்பட்ட தேசிய நுகர்வோர் மன்றப் பிரதிநிதி ஒருவர் ஆகியவர்கள் மாவட்ட அளவிலே இடம் பெறலாம் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. வட்ட அளவிலே தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் அல்லது சமூகநல ஊழியர் ஒருவர், பொதுநலனிலே அக்கறை

உள்ள பெண்மணி, ஆதி திராவிட சமுகத்தைச் சேர்ந்த பிரமுகர் ஒருவர், பஞ்சாயத்து விரிவாக்க அலுவலர், கூட்டுறவுத் துறையைச் சார்ந்தவர் ஒருவர், வட்ட விநியோக அலுவலர் ஒருவர் ஆகியவர்களை உறுப்பினர்களாகக் கொண்டிருக்கின்ற குழுக்களுக்கு வட்ட ஆட்சித் தலைவர்கள் தலைவராக இருப்பார்கள். ஆங்காங்கே இருக்கின்ற நியாய விலைக் கடைகளை மேற்பார்வையிடவும், அங்கே வைக்கப்பட்டிருக்கின்ற பொருள்களை அதாவது அட்டவணையிலே குறிப்பிடப்பட்டிருக்கின்ற பொருட்கள் இருக்கின்றனவா என்றும், சரியாக விநியோகம் நடக்கின்றதா என்றும் கண்காணிப்பார்கள். ஆனால் கணக்கு வழக்குகளை பார்க்கின்ற மற்றும் தணிக்கைகளைச் செய்கின்ற அதிகாரம் அந்தந்தத் துறையின் அதிகாரிகளுக்கு விடப்பட்டிருக்கின்றது, ஆனால் புகார்கள் ஏதாவது இருந்தால் உரிய அதிகாரிகளுக்கு இந்தக் குழு எடுத்துத் தெரிவிக்கும்.

திரு. பே. சு. திருவேங்கடம்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஒரு வருவாய் கிராமத்திற்கு ஒரு கடை வீதம் கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் ஒரு வருவாய் கிராமத்திலே இரண்டு மூன்று பஞ்சாயத்துக்கள் இருக்கின்ற நிலைமையும் இருக்கின்றது. சில கிராமங்கள் சிறியவையாக இருக்கலாம். சில கிராமங்களிலே அதிகமான மக்கள் தொகை இருக்கக்கூடும். இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் இருக்கின்றது. ஆகவே இந்த ஒரு வருவாய் கிராமத்திற்கு ஒரு கடை என்று சொல்லப்பட்டாலும் ஒரு பஞ்சாயத்துக்கு ஒரு கடை என்று சில பஞ்சாயத்துக்களிலே இருக்கின்றது. ஆகவே அதுபோன்று கடைகளைத் திறக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் முதலிலே கூறியபடி வருவாய் கிராமங்கள் பதினோராயிரத்துச் சில்லரை என்ற அளவிலே இருக்கின்றன. பஞ்சாயத்துக்கள் 12,500 இருக்கின்றன. இப்போது கிராமப்புறங்களிலே 15,000 சில்லரைக் கடைகள் இருக்கின்றன. அப்படிப் பார்க்கின்றபோது ஒரே பஞ்சாயத்திலேயோ அல்லது ஒரே ரெவின்யூ கிராமத்திலேயோ சில பல இடங்களிலே இரண்டு மூன்று இருக்க கூடிய சூழ்நிலை இருக்கின்றது. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோன்று அந்த இரண்டு மூன்று ஏற்பட்டுகின்ற போது அவற்றின் தூரத்தின் அளவையும், மக்களின் எண்ணிக்கையையும் பார்த்து அப்படிக் கட்டாயம் தேவைப்படும் என்றிருக்குமேயானால் கூடுதலாகத் திறக்கலாம் என்ற அளவுக்குத்தான் வைத்திருக்கிறோம். கார்டுகளின் எண்ணிக்கை ஆயிரத்திற்கு மேல்போகாமலும், 500-க்கு மேல் போகாமலும் அதாவது கிராமப்புறததிலே அப்படிக் குறைத்து வைக்கின்ற தன்மையின் அடிப்படையிலேதான் புதிய கடைகள் வைக்கின்ற ஆலோசனை

இருக்கின்றது. ஆகவே கார்டுகளின் எண்ணிக்கை அதிகமாகப் போனால் அவற்றை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்ற வகையிலேயும் அதன்படி கடைகளைத் திறக்க வேண்டும் என்ற செயற்குறிப்பினையும் அரசு ஆராய்ந்து வருகின்றது. ஆகவே எங்கெங்கு துவக்குவது என்பதை அரசு ஆராய்ந்து தக்க முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோவைத்தம்பி : தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு அங்காடிகள் என்பதைப் பொறுத்தவரையிலே 2,000 கார்டுகளுக்கு ஒன்று என்ற அடிப்படையிலே கடைகள் வைத்திருப்பதால் அரசினுடைய நல்ல திட்டங்களின் பேரிலே நாட்டு மக்களுக்கு சலிப்பு சமீபத்திலே ஏற்பட்டிருக்கின்றது என்பது அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வந்ததா? அதை மனதில் கொண்டு கடைகளில் நீண்ட க்யூ இல்லாமல் இருப்பதற்காக 500 கார்டுகளுக்கு ஒரு கடை என்ற அடிப்படையிலே அதைப் பிரித்துக் கொடுக்க முடியுமா? அதற்கு நியாயாதாரம் இல்லை என்று சொன்னால் தனியார் கடைகளுக்கு 100 கார்டு, 200 கார்டு, 50 கார்டு என்று ரேஷன் கார்டுகளைப் பிரித்துக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, 2000 கார்டுகளுக்கு மேலே ஒரு கடை என்பது பெரும்பாலும் பெருநகரங்களிலேதான் இருக்கின்றது. அங்கெல்லாம் அவற்றை இரண்டாகப் பிரிக்கவேண்டும் என்றால் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் போன்ற இடங்களில் அவற்றுக்கான இடங்கள் கிடைப்பது கஷ்டமாக இருக்கின்றது. இப்படிப் பல கஷ்டங்கள் இருப்பதன் காரணத்தால்தான் அவற்றை இரண்டாக பிரிக்கின்ற முயற்சி நடைபெறவில்லை. கார்டுகளின் எண்ணிக்கையை ஓரளவுக்கு குறைக்கவேண்டும் என்ற எண்ணம் இருந்தாலும் 500 கார்டுகளுக்கு ஒரு கடை என்று வைப்பதாக இருந்தால் இன்னும் ஏராளமான கடைகளைத் திறக்கவேண்டிய அவசியம் ஏற்படும். நான் முதலிலே கூறியபடி ஆயிரம் கார்டுகளுக்கு மேலே இருந்தால், தூரமும் அதிகமாக இருந்தால் அதனால் கிராமப்புற மக்களுக்கு கஷ்டமும் அதிகமாக இருந்தால் அப்படிப்பட்ட இடங்களில் புதிய கடைகளைத் திறக்கலாம் என்ற யோசனை அரசினிடத்திலே இருக்கின்றது.

ஆனால் தனியாரிடத்திலே ஒப்படைக்கலாம் என்றால் ஏற்கெனவே அப்படித் தனியார்களிடத்திலே ஒப்படைக்கப்பட்டதில் பல்வேறு புகார்கள் வந்த காரணத்தால் தான் கூட்டுறவுத் துறையும், நுகர்பொருள் வாணிபக் கழகமுமே அதற்கு முழுப் பொறுப்பும் ஏற்கவேண்டிய கட்டாயம் தமிழகத்திலே இருந்து வருகின்றது.

[1982 ஏப்ரல் 7

(முற்பகல் 9.20)

திரு. கு. ரமணி: ஆலோசனைக் குழுக்கள் அமைப்பது சம்பந்தமாக குறிப்பாகக் கேட்கப்பட்டிருக்கிறது. அதற்கு அமைச்சர் அவர்கள் ஆலோசனைக் குழுக்கள் அமைப்பதற்கு உத்தரவுகள் போடப்பட்டுள்ளது என்று சொன்னார்கள். இந்த அவையில் இந்தக் கேள்வி பல சந்தர்ப்பங்களில் கிளப்பப்பட்டுள்ளது. இந்தக் குழுக்கள் எங்கே அமைக்கப்பட்டுள்ளன? பலயிடங்களில் இந்தக் குழுக்கள் அமைக்கப்படவில்லை கோவை போன்ற இடங்களில் கூட இந்தக் குழு இல்லை. என் தொகுதியில் இந்தக் குழு இல்லை. அங்குள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அதை ஏன் அமைக்கவில்லை என்று தெரியவில்லை. ஆகவே இந்தக் குழுக்களை அமைப்பதோடு கூட, அந்த அந்த வட்டாரங்களில் உள்ள கடைகளைக் கண்காணிக்க பொது ஜனப் பிரதிநிதிகளைக் கொண்ட குழுக்களை அமைத்து, ஊழல்கள் நடப்பதைத் தடுக்க குறிப்பிட்ட நாளுக்குள் இதை செய்து முடிக்க வேண்டும் என்று உத்தரவு இடப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இந்தக் குழுக்களை அமைக்கவேண்டும் என்ற ஆணை 1981 ஜூலை திங்கள் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது போல் சிலபல இடங்களில் ஏற்படுத்தப்படவிலலை என்றால் விரைவில் ஏற்படுத்த முயற்சிகளை மேற்கொள்ளலாம். அந்தந்தக் கடைகளை கண்காணித்து அதன்மேல் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க அதிகாரிகளிடம் சொல்ல உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. இந்தக் குழுக்களின் நடவடிக்கைகளை செம்மைப்படுத்த, சீராக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால் அதையும் அரசு கவனித்து அதற்கேற்றபடி ஆணைகள் பிறப்பிக்க அரசு ஆயத்தமாகயிருக்கும்.

திரு. கே. நாராயணசாமி: என் தொகுதியில் கீழ்பெண்ணாத்தூர் ரெவின்யூ வில்லேஜ் இருக்கிறது. அங்கே அமுதம் கூட்டுறவுக் கடையும், சிவில் சப்ளைஸ் கூட்டுறவுக் கடையும் என்று இரண்டு கடைகள் இருக்கின்றன. கீழ்ப்பெண்ணாத்தூரிலிருந்து கருங்காலிக்குப்பம் இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறது. அங்குள்ள ஏழை மக்கள் கூலி வேலை செய்து பிழைக்கும் மக்கள் இரண்டு கிலோ மீட்டர் தூரம் வந்து உணவுப் பொருள்கள் வாங்கிச் செல்வதில் மிகுந்த கஷ்டம் இருக்கிறது. இதைப் பற்றி சிவில் சப்ளைஸ் டிப்பார்ட்மெண்ட் அதிகாரிகளிடமும், கலக்டர் அவர்களிடமும் அந்த ஊருக்கு ஒரு கடையை மாற்றித் தரவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தும் இது வரை அது கவனிக்கப்படாமல் இருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? எனவே அதன்மீது நடவடிக்கை எடுத்து எங்கள் ஊருக்கு மாற்றிக் கொடுக்க ஏழை மக்கள் இரண்டு கிலோ மீட்டர் தூரம் செல்லாமலிருக்கக்கூடிய வகையில் அருகிலேயே உணவுப் பொருள் வழங்குவதற்கு வசதி செய்து தரப்படுமா?

1982 ஏப்ரல் 7]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ரெவின்யூ கிராமங்களுக்கு ஒரு கடை அல்லது இரண்டு கடைகள் என்று வைக்கும் போது இரண்டு கிலோ மீட்டர் அல்லது மூன்று கிலோ மீட்டர் கூட போக வேண்டியிருக்கிறது. ஆங்காங்கிருக்கிற சூழ்நிலையையொட்டி கடைகள் அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளலாமா என மாவட்ட ஆட்சித் தலைவர்கள், கூட்டுறவு அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல் கடையை அவர்கள் வசதிக்கேற்ப மாற்றவேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவரை கேட்டிருப்பதாக அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைப் பற்றிய நிலைமையை என் கவனத்திற்கு கொண்டு வந்தால் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் தக்க நடவடிக்கைகள் எடுக்கலாமா என்பது பற்றி ஆராயலாம்.

ஜெயங்கொண்டம் தொகுதியை வறட்சிப் பகுதியாக
அறிவிக்கும் திட்டம்.

வினா எண்,—777 திரு. பி. தங்கவேலு: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஜெயங்கொண்டம் தொகுதியில் நன்செய், புன்செய் பயிர்கள் பெரும்பாலான பகுதிகளில் மழையின்றி காய்ந்து விட்டதால் மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள் என்பதை அரசு கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதா?

(ஆ) ஆம் எனில் ஜெயங்கொண்டம் தொகுதியை வறட்சிப் பகுதியாக அரசு எப்போது அறிவிக்கும்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்; (அ) ஆம்,

(ஆ) வறட்சி பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு இதுவரை ரூ. 29.89 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 428 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

திரு. கே. ஆர். சுந்தரம்: வறட்சி நிவாரணத்திற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகச் சொன்னார்கள். வட ஆற்காடு மாவட்டத்தில் சென்ற ஆண்டு போல் இந்த ஆண்டும் வறட்சி நிலை ஏற்படக்கூடிய அபாயம் இருக்கிறது. எனவே முன்கூட்டியே வறட்சி நிவாரண வேலைகளை செய்ய அரசு தக்க நடவடிக்கைகள் எடுக்குமா?

மாண்புமிகு பேரவைத்தலைவர்: கேள்வி, ஜெயங்கொண்டம் தொகுதி பற்றியது.

சில பொருட்களுக்கு மாநில அரசால் வசூலிக்கப் படும் விற்பனை வரி.

* வினா எண். 778—திரு. என். வரதராஜன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—(அ) சில பொருட்களுக்கு மாநில அரசு விற்பனை வரி வசூலிப்பதை கைவிட வேண்டுமென்றும், மத்திய அரசு அப்பொருட்களுக்கு வரி விதிக்கும் எனவும் அறிவித்துள்ளார்களா?

(ஆ) ஆம் எனில் அதன்மீது தமிழக அரசு மேற்கொண்டுள்ள நிலை என்ன?

மாண்புமிகு திரு எஸ். டி சோமசுந்தரம்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம். அப்படி ஒரு கருத்து மைய அரசில் இருந்து வருகிறது. (ஆ) விற்பனை வரிக்குப் பதிலாக கூடுதல் ஆயத்தீர்வை விதிக்கும் திட்டம் மத்திய அரசினால் செயல்படுத்தப்பட்டால் மாநிலங்களனைத்தும் உள்ளாட்சி மன்றங்களின் தரத்திற்கோ அல்லது மத்திய அரசின் நிர்வாகப் பிரிவின் சாதாரண தரத்திற்கோ குறைக்கப்பட்டு விடும் என்றும் இத்திட்டத்தை மத்திய அரசு கொண்டு வருவதை மாநில அரசு எதிர்க்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அது மட்டுமல்ல. இந்தத் திட்டத்தினால், மாநில அரசுக்கு இருக்கின்ற வரி விதிக்கின்ற அதிகாரம் தடை செய்யப்படுகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். அது மட்டுமல்ல. அரசியல் சட்டத்தில் மாநிலங்களுக்கு கொடுக்கப்படுகிற அதிகாரத்தை தடை செய்வதாகவும் இந்த முறை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு பாபு ஜனார்த்தனன் ; பேரவைத் தலைவர் அவர்களே, சில பொருள்களுக்கு மாநில அரசு வரி நீக்கம் செய்வதாகவும் ஆனால் அதே பொருள்கள் மீது மத்திய அரசு வரி விதிப்பதை மாநில அரசு எதிர்க்கின்றது என்றும் ஒரு கருத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இதைத் தீர்மானமாக நிறைவேற்றி, மாநில மக்களின் கருத்தை மத்திய அரசுக்கு அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே தீர்மானமாகப் போட்டு அந்தத் தீர்மானத்தை அனுப்புகின்றபோது அது தீர்மானமாகத் தான் அவர்களுக்குத் தெரியும். அதைவிட, மத்தியிலே 1980 செப்டம்பர் 16, 17 தேதிகளில் நடந்த முதலமைச்சர்கள் மகாநாட்டில், முதலமைச்சர் அவர்கள் சார்பிலே

கலந்துகொண்ட வருவாய்த் துறை அமைச்சரால் இதைவிடக் கடுமையாக நேருக்குநேர் சொல்லப்பட்டிருக்கிறது என்பதையும் இதை எழுத்து மூலமாக அச்சிட்டுக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி; தலைவர் அவர்களே, மத்திய அரசு சில குறிப்பிட்ட பொருள்களின்மீது மாநில அரசு விற்பனை வரி போடுவதைத் தாங்கள் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று சொல்வதற்குக் காரணம் என்ன? மாநில அரசு இந்தப் பொருள்களின் மீது விதிக்கும் விற்பனை வரி போதாது என்று அவர்கள் கருதுகிறார்களா? அல்லது மத்திய அரசு தானே எடுத்துக் கொண்டு, மாநில அரசின் வருமானத்தைக் கொஞ்சம் குறைக்கலாம் என்று அவர்கள் பார்க்கிறார்களா? அவர்கள் எத்தனைப் பொருள்களை அப்படி எடுத்துக் கொள்வதாகத் தீர்மானித்திருக்கிறார்கள்? மேலும், அதன்மூலம் எவ்வளவு வரி வருமானம் மாநில அரசுக்குக் குறையும் என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வரவு செலவு கணக்கைப் பற்றிச் சொன்னார்கள். வரவு-செலவுக் கணக்கை விட, மாநிலங்களுக்கு இருக்கின்ற அதிகாரத்தை மத்திய அரசு எடுத்துக் கொள்கிறது. எத்தனை பொருள்களை எடுத்துக் கொள்கிறது? அதனால் எவ்வளவு பணம் நஷ்டம் என்பதைவிட, அவர்கள் அவ்வாறு எடுத்துக்கொள்வது சரியாக இல்லை. அவர்கள் அப்படி ரூ. 100 எடுத்துக்கொள்வதாக இருந்தாலும், அதை எதிர்க்கிறோம். விட்டுக்கொடுக்கத் தயாராக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது அவர்கள் 5 பொருள்களை எடுத்துக் கொள்வதென்றும், அந்த 5 பொருள்கள் மூலம் 106 கோடி ரூபாய் மாநில அரசு வரி வசூலிப்பதை அவர்கள் எடுத்துக் கொள்ள முயற்சி செய்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு குமரி அனந்தன் ; மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, 106 கோடி ரூபாய் வரி விதிக்கின்ற அதிகாரத்தை எடுக்கக் கூடாது என்பதோடு, மாநில அதிகாரம் குறையக்கூடாது என்பதை நமது அரசாங்கம் முடிவு செய்திருப்பதைப் பாராட்டுகிறேன். நம்மைப் போலவே, மாநிலங்களின் அதிகாரம்குறையக் கூடாது என்று கேட்டிருக்கின்ற வேறு அரசாங்கங்கள் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். டி சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்திலும், மத்தியிலும் ஒரே சமயத்தில் ஒரே கட்சியினுடைய ஆட்சி இருக்கிறது. சில இடங்களில் மாறி மாறி இருக்கின்றன. பேசுகின்றபோது, முதலிலே எல்லா மாநிலங்களும் அதிகாரங்களை விடக்கூடாது என்று எல்லா முதலமைச்சர்களும் முதலிலே தெரிவிக்கிறார்கள் அதற்குப் பிறகு, என்ன காரணமோ கட்சியின் ஆணைக்கு கட்டுப்பட்டு, விட்டு விடுகிறார்கள் என்று கருதுகிறேன்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே இருந்து வரக்கூடிய 106 கோடி ரூபாய் மத்திய அரசு எடுத்துக்கொள்ளும் என்று சொல்லப்பட்டது. உண்மையிலேயே மத்திய அரசாங்கமானது தமிழ்நாட்டில் இப்போது பொருளாதாரச் சிக்கலை உண்டாக்கி, அதன்மூலம் அவர்கள் லாபம் பெற விரும்புகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மூலக் கேள்விக்கு முதலிலே படிக்கின்ற போது விளக்கமாக பதில் கொடுத்திருக்கிறேன். இப்படி எடுத்துக் கொள்வதால், மாநில அரசுகள் ஒரு முனிசிபாலிடியாக, குளோரிபைட் முனிஸிபாலிடியாக ஆக்குகின்ற திட்டம்தான் என்பதையும், மேலும் இப்படி எடுத்துக்கொண்டால் மாநில அரசு மத்திய அரசின் ஒரு நிர்வாக யூனிட்டாக, அட்மினிஸ்டிரேடிவ் யூனிட்டாக ஆக்குவதாக ஆகும் என்பதை முதலிலே படித்துக் காண்பித்திருக்கிறேன்,

தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட
கிராமங்களில் பட்டாக்கள் வழங்கும் திட்டம்

* வினா எண். 779—திரு. செ. செம்மலை: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கிராமங்களில் வீட்டுமனைப்பட்டா நிலப்பட்டாக்கள் வழங்குவது நிறுத்திவைக்கப்பட்டிருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் அதன் காரணம் யாது?

(இ) உடனடியாக பட்டாக்கள் வழங்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் :—(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட 16 கிராமங்களில் பாப்பம்பாடி, மானத்தார் ஆகிய இரு கிராமங்களும் தடையாணைக்கு உட்படாதவை என்றும், தசவிளகு அழகு

சமுத்திரம், கருக்கல்வாடி ஆகிய 3 கிராமங்களுக்கு தடையாணை நீக்கப்படாத கிராமங்கள் என்றும், எஞ்சியுள்ள 11 கிராமங்களுக்குத் தடையாணை நீக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9.30)

திரு. செ. செம்மலை : மாண்புமிகு தலைவர் அவர்களே, சேலம் உருக்காலைக்கு நிலம் ஆர்ஜிதம் செய்தபோது, அங்கே அந்த ஆலைக்கு நிலம் தேவைப்படும் என்ற அடிப்படையில் இந்த தடை விதிக்கப்பட்டது. இப்போது தடை நீக்கப்பட்டுள்ளதாக அறிகிறேன். 300 ஏக்கர் நிலம் இருந்தால் போதும் என்று அந்த நிறுவனம் சொன்னதற்கு பிறகு எந்த இடம் என்று குறிப்பிட்டுச் சொல்லாததால் இந்தத் தடை அமலில் இருப்பதாக அறிகிறேன். அந்த நிறுவனம் எந்த இடம் தேவையென்று சொல்லியதற்கு பின்னால் இந்தத் தடையை நீக்கி உடனடியாகப் பட்டா வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, சேலம் உருக்காலைக்கு நிலம் வேண்டும் என்பதற்காக 5 மைல் சுற்றளவிற்கு இந்த தடை முதலில் போடப்பட்டது. இப்போது அவர்களுக்கு எல்லாம் நிலம் கொடுத்துவிட்டு, மீதியை விட்டு விடலாம் என்று தடை நீக்கப்பட்டிருக்கிறது, தடை நீக்கப்பட்டதை எந்தெந்த கிராமங்களுக்குக் கொடுக்கலாம் என்பதை மாவட்ட ஆட்சியாளரால் ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அரசு அதுபற்றி ஆராய்ந்து விரைவிலே ஒரு அறிவிப்பைத் தரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இளநிலை இந்தி ஆசிரியர்களுக்கு தேர்வுநிலை
வழங்கும் திட்டம்.

* வினா எண் 780— திரு. என் எஸ். வி. சித்தன் : மாண்புமிகு கல்வி அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துவக்கப் பள்ளிகளில் (Higher Grade) இளநிலை ஸ்தானத்தில் நியமிக்கப்பட்ட இந்தி ஆசிரியர்களுக்கு இன்னும் தேர்வு நிலை (Selection Grade) வழங்கப்படாத காரணம் என்ன?

(ஆ) அவர்கள் எப்பணியில் தற்போது அமர்த்தப்பட்டிருப்பினும் ஊதியப் பாதுகாப்பு ஆணையின்படி அவர்களுக்கு தேர்வுநிலை வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) துவக்கப் பள்ளிகளில் ஹையர் கிரேடு (இளநிலை) பணியிடங்களில் நியமிக்கப்பட்ட முன்னாள் இந்தி ஆசிரியர்கள், இளநிலை ஆசிரியர்

[1982 ஏப்ரல் 7

களின் தேர்வுநிலை ஊதியத்தைக் காட்டிலும் (அதாவது ரூ. 180-5-200-10-270) அதிகமான ஊதிய விகிதத்தில் (அதாவது ரூ. 210-5-245-10-325) ஊதியம் பெற்று வந்ததால் அவர்களுக்கு தேர்வுநிலை வழங்கப்படவில்லை

(ஆ) இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு தலைவர் அவர்களே. இந்த தேர்வுநிலை வழங்கப்பட வேண்டுமென்று கோரிக்கை அந்த முன்னாள் இந்தி ஆசிரியர்களால் நீண்ட நெடும் நாட்களாக சொல்லி அரசினுடைய ஆய்விலே இருந்து வருவதாக அறிகிறேன். அரசு ஆய்வுகளை விரைவாக முடித்து. அவர்களுக்கு சாதகமான முடிவை அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, பரிசீலனை முடிந்தற்கு பிறகு தான் அதைச் சொல்ல முடியும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க தலைவர் அவர்களே, இந்தப் பிரச்னையிலே நீண்டகலம் எடுத்துக் கொள்வதிலே என்ன காரணம் என்பதைச் சொல்லமுடியவில்லை. இதனாலே அரசாங்கத்திற்கு என்ன இழப்பு அல்லது பாதிப்பு ஏற்படுகிறது. என்னைப் பொறுத்தவரை அவர்களுடைய கோரிக்கை நியாயமான கோரிக்கையாக தான் படுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்பதெல்லாம் ஒரு திட்டவட்டமாக முடிவை அறிவிப்பார்களானால் பணியிலே ஆசிரியர் பெருமக்களுக்கு உதவியாக இருக்கும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனை அறிவிப்பார்களா என்பதை உங்கள் மூலமாக கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் மாண்புமிகு தலைவர் அவர்களே, இளநிலை ஆசிரியர் பதவியில் அமர்த்தப்பட்ட முன்னாள் கிரேடு 1 மற்றும் கிரேடு 2 இந்தி ஆசிரியர்கள் தங்களுக்கும் தேர்வுநிலை வழங்கவேண்டுமென்று, 1.4-73 மற்றும் 1-4-74 முதல் வழங்கவேண்டுமென்று அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். மேலும் ஆசிரியர் பணியில் இல்லாத எழுத்தர்கள், நூலகர்கள், மற்றும் பதிவேடு எழுத்தர்கள் மற்றும் பணியிலே அமர்த்தப்பட்டமுன்னாள் இந்தி ஆசிரியர்கள் தங்களுக்கு தேர்வுநிலைமுறையை 1-4-73 மற்றும் 1-4-74 முதல் வழங்கவேண்டுமென்று கோரிக்கை விடுத்துள்ளனர். ஆகவே இதுபற்றி பல்வேறு சம்பந்தப்பட்ட துறைகளோடு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம், பரிசீலனை முடிந்ததற்குப் பிறகு தக்க முடிவு எடுக்கலாம்.

1982 ஏப்ரல் 7]

திரு. பி. எம். தங்கவேல் ராஜ்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தி இந்த சமயத்திலும் சரி, வருங்காலத்திலும் சரி, கற்றுக்கொள்ள வேண்டிய முக்கியமான மொழியாகும் என்பதிலே யாருக்கும் ஐயம் இல்லை. ஆகவே வட்டாரத்திற்கு ஒரு உயர்நிலைப்பள்ளியிலே இந்தியை இஷ்டபாடமாக அறிமுகம் செய்ய அரசாங்கத்திற்கு உத்தேசம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இருமொழிக் கொள்கையை நாம் பின்பற்றி இருகிறோம். ஆகவே இந்திக்கு நம்முடைய பள்ளிகளில் இப்படிப்பட்ட இடத்தைத் தருவதாக இல்லை.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது இருமொழிக் கொள்கை என்று சொன்னார்கள். அதிலே இப்போது வாக்குவாதத்திற்கு இடமில்லை. ஆனால் சிறுபான்மையோர் அங்கே படிக்கிறவர்கள் தங்களுடைய தாய் மொழியில் படிக்க விரும்புகிறபோது, சென்னை போன்ற இடங்களில் அதிகபட்ச குழந்தைகள் உள்ள பள்ளியிலே அவர்களுக்கு அரசாங்கம் செய்ய வேண்டிய கடமைகளில் ஒன்று என்ற எண்ணத்தோடு அவர்களுக்கு வருங்காலத்திலாவது அறிமுகப்படுத்த முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அது இப்பொழுதே இருக்கிறது. இந்தியை தாய்மொழியாகக் கொண்டவர்கள் தங்கள் மொழியிலே படிப்பதற்குதான் நாங்கள் விரும்புகிறோம்: ஆகவே அந்த வாய்ப்பிருக்கிறது. பஞ்சாபியை தாய்மொழியாக் கொண்டவர்கள் பஞ்சாபியிலே படிக்க வேண்டும். தெலுங்கைத் தாய்மொழியாக கொண்டவர்கள் தெலுங்கிலே படிக்க வேண்டும். கன்னட மொழியை தாய்மொழியாக கொண்டவர்கள் கன்னட மொழியிலே படிப்பதற்கான வாய்பை நாம் தந்திருக்கிறோம். ஆகவே அதிலே ஒன்றும் பிரச்னை இல்லை. தனியாகப் பள்ளிக்கூடம் ஆரம்பிக்க வேண்டுமென்றாலும் அதை நாம் வரவேற்கிறோம்.

திரு, கோவைத்தம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இந்தியை பரப்புவதற்கு மத்திய அரசு ஏதாவது சிறப்பு நடவடிக்கை எடுத்து, நிதி ஒதுக்கியிருக்கிறதா? அதேபோல் தேசிய மொழியான தமிழை வட மாநிலங்களிலே பரப்ப, இந்தியை இங்கே பரப்ப நடவடிக்கை எடுப்பதுபோல், நடவடிக்கை எடுக்கப்படுகிறதா?

[1982 ஏப்ரல் 7

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தி ஆட்சிமொழி என்ற அடிப்படையில் அவர்கள் இந்தியை இங்கே பரப்புவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறார்கள் தமிழைப் பரப்புவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக நமக்கு எந்த விவரமும் இல்லை.

தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் கோராபட்டு

* வினா எண்—781 திரு. ப.வெங்கடசுப்பிரமணியம். மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மொத்த கோரா பட்டு உற்பத்தி என்ன?

(ஆ) தமிழ்நாடு நெசவாளர்களுக்கு மொத்தம் தேவைப படும் கோராபட்டு எவ்வளவு?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (அ) தமிழ்நாட்டில் 1980–81-ஆம் வருடம் 1.50 இலட்சம் கிலோ கோரா பட்டு உற்பத்தி செய்யப்பட்டது. 1981;82 ஆம் ஆண்டு உற்பத்தி 1.75 இலட்சம் கிலோவாக இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

(ஆ) சுமார் 10 இலட்சம் கிலோ (1000 டன்) தேவைப் படுகிறது,

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் அடிக்கடி கோரா பட்டு குறைவு ஏற்பட்டு சீனாவிலிருந்து வரவழைத்து கொடுக்க வேண்டிய சூழ்நிலை தமிழக அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருக்கிறது. இந்த கோரா பட்டு உற்பத்திக்காக அரசு ஏதேனும் சிறப்புத் திட்டம் வைத்து உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அது இந்தத் துறையைச் சேர்ந்தது அல்ல என்றாலும் ஊரகத்துறை அமைச்சரிடத்திலே அதுபற்றிய விவரங்களை கேட்பார்களானால் தக்க விவரங்களை அளிப்பார்கள்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, பட்டு நெசவாளர்களுக்கு இதுபோன்ற சங்கடங்கள் அடிக்கடி ஏற்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இதற்கு நிரந்தர பரிகாரம் காண, அந்தக் குறைபாடுகளைக் கண்டறிய ஏதேனும் சிறப்பு ஆலோசனைக் குழுவை ஏற்படுத்தி அந்தக் குறைபாடுகளை நீக்க அரசு ஆலோசனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்பொழுது பட்டு கிடைக்காத நிலையிலே கூட நாம் மத்திய அரசை அணுகி சீனாவிலிருந்து பட்டை இறக்குமதி செய்து விற்குமாறு கேட்க அவர்கள் ஓரளவு இறக்குமதி செய்திருக்கிறார்கள், இந்த நிலைமை ஓரளவு சீரடைந்து வருகிறது என்று சொல்லப்படுகிறது என்றாலும் எப்படிப்பட்ட நிலைமைகள் கைத்தறி நெசவாளர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை அரசு உணர்கிறது. அதற்குத் தக்க பரிகாரம் காண அரசு முயற்சி செய்யும்.

கல்லூரி முதல்வர்களின் சம்பள விகிதம்

* வினா எண் 782 திரு. ப. நெடுமாறன் மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) பி. லிட். பட்டபடிப்பு கல்லூரிகளின் முதல்வர்களுக்கும் மற்ற கலைக் கல்லூரிகளின் முதல்வர்களுக்கும் அளிக்கப்படும் ஊதியங்களில் வேறுபாடு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் ஊதிய வேறுபாட்டினைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (அ) வேறுபாடு உள்ளது.

(ஆ) இதுபற்றிய ஒரு நபர் குழுவின் பரிந்துரையை அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. ப. நெடுமாறன் மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே. ஒரு நபர் பரிந்துரை என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அந்தப் பரிந்துரை என்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ அரங்கநாயகம் மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்பொழுது அந்த விவரம் என்னிடத்திலே இல்லை. ஆனால் நிதித்துறையிடம் கலந்து கொண்டு அந்தப் பரிந்துரைகளைப் பற்றி பரிசீலித்து அவர்களுக்கு தக்க நிவாரணம் தர வேண்டுமென்ற எண்ணம் கல்வித்துறையிடம் இருக்கிறது.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இத்தகைய பி. லிட் கல்லூரிகள் பத்தே பத்து தானிருக்கின்றன. அவைகளில் வேலை பார்க்கக்கூடிய முதல்வர்களின் கல்வித் தகுதியும் மற்றக் கலைக் கல்லூரிகளில் வேலை பார்க்கும் முதல்வர்களின் கல்வித்தகுதியும் நேகமாக ஒரே மாதிரிதான் இருக்கின்றது. ஆனால், பி. லிட் கல்லூரிகளில் வேலை பார்க்கும் முதலவர்களுக்கு ரூ. 800 ல் ஆரம்பித்து ரூ.1,600 வரை அளிக்கப்படுகிறது. ஆனால், மற்ற கலைக்கல்லூரிகளிலே இருக்கிற முதல்வர்களுக்கு ரூ. 1200 லே ஆரம்பித்து, ரூ. 1,900 வரை அளிக்கப்படுகிறது. இதில் ரூ. 300 தான் வித்தியாசம் இருக்கிறது. இந்த 10

கல்லூரிகளைச் சேர்த்தாலும் அரசாங்கத்திற்கு மாதத்திற்கு ரூ. 30,000 தான் அதிகமாகச் செலவாகும். ஆகவே, அவர்களுக்கு ஊதிய உயர்வை அளிக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9.40)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே. சம்பளத்தை தருகின்றபொழுது நாம் செலவை மட்டும் கணக்கிலே வைத்துக் கொண்டு இதைப் பரிசீலிக்க முடியாது. அவர்களுடைய தகுதி அவர்களுடைய, வேலை, அந்த நிலைமைகளையெல்லாம் வைத்துப் பரிசிலைன செய்துதான் நாம் சம்பள விகிதத்தை தர வேண்டியவர் களாக இருக்கிறோம். அந்த நிலைமைகளைத் தான் இப்பொழுது பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம்.

கைதிகளின் குறைகளை வெளிப்படுத்த எல்லா சிறைகளும் புகார் பெட்டிகள் வைக்கும் திட்டம்

வினா எண் 783 திரு என். பழனிவேல் மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா

எல்லா சிறைச்சாலைகளிலும் புகார் பெட்டி (Complaint Box) வைத்து சிறைக்கைதிகளின் குறைகளை வெளிப்படுத்த வசதி செய்து தர அரசிடம் திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. சி.பொன்னையன்: ஆம்

திரு. செ. இராமலிங்கம் பேரவைத் தலைவரவர்களே, எல்லாச் சிறைச்சாலைகளிலும் இப்படிப் புகார் பெட்டியிருந் தாலும் அந்தந்த சிறைச்சாலைகளிலே இருக்கின்ற கண்காணிப் பாளர்கள் தான் அந்தப் பெட்டியை திறக்கின்ற வாய்ப்பிருக் கிறது. ஆகவே, மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் அதற்கான சாவியை ஒப்படைத்து, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அந்தக் கோரிக்கையைப் பரிசீலனை செய்து ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறியுள்ள ஆலோசனை நல்ல ஆலோசனையாக இருக்கிறது. இது குறித்து அரசு பரிசீலிக்கும்.

திரு. தி. கா. நல்லப்பன் மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தப் புகாரப் பெட்டியில் அவர்கள் பெயரையும் எழுதி அல்லது குற்றச்சாட்டுகளை எழுதிநடைபெறக் கூடிய தவிர்க்க முடியாத சில நிலைமைகளை எழுதிப் போட்டால் கூட அப்பொழுது அவர்களுக்குத் தண்டனை இல்லாவிட்டாலும் பின்னால் யார், என்ன எழுதியிருக்கிறார்கள் என்று அவர்கள் சித்திரவதை செய்யப்படும் ஒரு நிலைமையிருக்கிறது. அப்படி ஏதாவது அதன்பேரில் மனு வந்தால் மாண்புமிகு அமைச்சரவர்கள் அதுசம்பந்தமாகப் பரிசீலிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அத்தகைய மனுக்களை சிறைக் கண்காணிப் பாளரே பார்க்கக்கூடாது என்ற ஒரு நடைமுறையைக் கொண்டு வந்துவிட்டால் இப்படிப்பட்ட பிரச்னை எழாது என்று நான் நம்புகிறேன்.

தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு கூட்டமைப்பு மூலம் பிராந்திய கூட்றவு மையம் நிறுவும் திட்டம்

வினா எண். 784 திரு. இரா. தாமரைக்கனி மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புளி, பருப்பு, மிளகாய், சோப்பு, பிளேடு போன்ற பொருட்களை குறைந்த விலையில் வாங்கக் கூடிய பிராந்திய கூட்டுறவு மையம் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு கூட்டமைப்பு மூலம் நிறுவும் செயற்குறிப்பு அரசு பரிசிலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு.சி. பொன்னையன் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேவைப்படும் பொருட்களை உற்பத்தியாளரிடமிருந்து மொத்த மாக மலிவு விலையில் வாங்கி அவைகளின் மூலம் பொது மக்களுக்கு விநியோகம் செய்ய தமிழ்நாடு இணையம் சென்னை சாலிகிராமத்தில் மண்டல விநியோக மையம் ஒன்றை அமைத்துள் ளது.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவரவர்களே, சென்னை மாநகரத்தில் மட்டும் இந்தக் கூட்டுறவு பிராந்திய மையம் திறக்கப்பட்டுள்ளதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். மற்றும் மாவட்டத் தலைநகரங்களிலேயும், மற்றும் தாலுக்கா தலைநகரங்களிலேயும் இந்தப் பிராந்திய கூட்டுறவு மையம் ஒரு குறிப்பிட்ட கால வரம்புக்குள்ளாகத் திறக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தற்போது இருக்கின்ற மார்க்கெட்டிங் சொசைட்டீஸ் கிராம அளவிலே இருக்கின்ற, வட்ட அளவிலே இருக்கின்ற மார்க்கெட்டிங் அக்ரிகல்சுரல் ப்ரொட்யூசர்ஸ் மார்க்கெட்டிங் சொசைட்டி என மாற்றப்பட்டு, உற்பத்தியாளர் களிடமிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்யும் பொறுப்பை யும், புதிய கூட்டுறவுச் சட்டம் வந்தவுடன் மேற்கொள்ள இருக்கின்றன.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, உணவு தானிய மற்றும் அத்தியாவசியப் பண்டங்களின் மொத்த வியாபாரத்தை முழுவதையுமே அரசு ஏற்க வேண்டுமென்ற கொள்கை அடிப்படையில் அரிசி, கோதுமை, சமையல் எண்ணெய், சிமெண்ட், சர்க்கரை போன்ற மற்ற அத்தியாவசியப் பண்டங்களின் கொள்முதல் விநியோகப் பொறுப்பையும் இப்பொழுது இல்லாவிட்டாலும் படிப்படியாகவாவது அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த இணையத்தினுடைய தற்போதைய பணிகளுடன், இடைத் தரகர்களை அறவே நீக்கிவிட்டு உற்பத்தி செய்கின்ற உழவர்களிடமிருந்து பொருள்களைக் கொள்முதல் செய்து உபயோகிக்கின்ற நுகர்வோர்களுக்கு நேரடியாகத் தர வேண்டுமென்ற திட்டத்தைத்தான் தற்பொழுது நடைமுறைப் படுத்த அரசு உள்ளது. புதிய கூட்டுறவுச் சட்டம் வந்தவுடன் இடைத்தரகர்கள் என்ற பிரச்னை இல்லாத அளவிற்கு நுகர் வோர்களுக்கும் உற்பத்தியாளர்களுக்கும் இடையே அவர்கள் இல்லாமை ஏற்பட வழிவகை செய்யப்படும்.

சேலம் புறநகர்களுக்கு இ.எஸ். ஐ. திட்டத்தை விரிவுபடுத்துதல்

*வினா எண். 785—திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் புறநகர்களுக்கு E.S.I. திட்டத்தை நீட்டிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் என்ன?

(இ) எப்பொழுது செயல்படும்?

(ஈ) எத்தனை பேர்கள் பயன் அடைவார்கள்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) சேலம் புறநகர் பகுதிக்கு ஈட்டுறுதி திட்டத்தை நீட்டித்து, அப்பகுதியில் வாழும் தொழிலாளர்களும், அவர் தம் குடும்பத்தினரும் மருத்துவச் சிகிச்சை பெற, புறநகர் மையப் பகுதியில் ஒரு மருத்துவர் கொண்ட இ.எஸ்.ஐ. மருந்தகத்தை அமைத்து செயல்பட 12-10-81-ல் ஆணையிடப்பட்டுள்ளது.

(இ) மருத்துவம் மற்றும் குடும்பநலத் துறை இயக்குநர், மருந்தகம் அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுத்து வருகின்றார். இது முடிந்ததும், இவ்வரசு மைய அரசுக்கு திட்டம் செயல்படும் தேதியை நிர்ணயித்து திட்டம் செயல்படுத்துவதற் குரிய அறிக்கையை வெளியிடக் கோரும். இவ்வறிக்கை வெளி யானதும் திட்டம் செயல்படும்.

(ஈ) சுமார் 1000 தொழிலாளர்கள் பயன் அடைவார்கள்.

E, S. I. மருத்துவமனை உதவித் திட்டத்தை ஆரல்வாய்மொழி கூட்டுறவு ஆலைக்கு நீட்டிக்கும் திட்டம்.

*வினா எண். 786—திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவிலில் செயல் பட்டுக் கொண்டிருக்கின்ற E.S.I. மருத்துவமனை உதவி திட்டத் தில் ஆரல்வாய்மொழி கூட்டுறவு ஆலையை உட்படுத்தும் எண்ணம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில் அது சம்பந்தமாக எடுக்கப்பட்ட நட வடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் கன்னியாகுமரி புறநகர் பகுதிகளுக்கு ஈட்டுறுதி திட்டத்தை நீட்டித்து 5–8–81-ம் நாளன்று அரசு ஆணையிட்டுள்ளது. இப்புறநகர் பகுதிகளில், ஆரல்வாய்மொழியில் செயல்பட்டுவரும் கூட்டுறவு நூற்பு ஆலை உள்ளடங்கியதாகும். மருத்துவம் மற்றும் குடும்பநலத்துறை இயக்குநர் மருத்துவ வசதிகள் அளிப்பதற்குரிய முன்னேற்பாடு களை தற்போது முடித்துள்ளார். திட்டம் செயல்படுத்துவதற் குரிய மைய அரசின் அறிக்கை வெளியிடக்கோரி, புதுடெல்லி யிலுள்ள தொழிலாளர் ஈட்டுறுதி கழகம் அனுகப்பட்டுள்ளது. அவ்வறிக்கை வெளியானதும் திட்டம் செயல்படும்.

திரு. டி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரல்வாய்மொழியில் உள்ள கூட்டுறவு நூற்பாலையில் பணி யாற்றுகின்றவர்களில் சிலோனிலிருந்து தமிழகத்திற்கு வந்திருக் கின்ற நம்முடைய அகதிகளுக்கு அந்த நூற்பாலையில் இடம் ஒதுக்கப்படவில்லை. எனவே, அந்த இடர்ப்பாடுகளை நீக்கி அவர் களுக்கும் அந்த இடத்திலே இடம் கொடுக்கக்கூடிய ஏற்பாடுகளை அரசு செய்ய முன்வருமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பகுதிக்கு என்று ஒரு திட்டத்தைச் செயல் படுத்துகின்றபோது அங்கு உள்ள எல்லோருக்கும் கான்ட்ரிபூஷன் உண்டு. மாண்புமிகு உறுப்பினர் என்ன சொல்லுகிறார் என்று எனக்குச் சரியாகப் புரியவில்லை. அப்படி ஏதாவது செயல் படுத்தப்பட்டப் பகுதியில் எந்தத் தொழிலாளர்களாவது விடப் பட்டிருக்கிறார்கள் என்றால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைப்பற்றித் தெரிவித்தால் அதற்கு வேண்டிய நடவடிக்கை களை அரசு உடனடியாக எடுக்கும்.

[1982 ஏப்ரல் 7

சென்னை பெரியார் நகருக்கு (பெரவள்ளூர்) குடிதண்ணீர் மற்றும் பாதாள சாக்கடை வசதிகள் செய்து தரும் திட்டம்.

*வினா எண். 787—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் அரசு ஊழியர்களுக்கென ஏற்படுத்தப்பட்ட பெரியார் நகருக்கு (பெரவள்ளூர்) கார்ப்பரேஷன் குடிதண்ணீர் மற்றும் பாதை (பாதாள சாக்கடை) வசதிகள் செய்துதர அரசிடம் திட்டம் ஏதேனும் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) (1) சென்னையில் அரசு ஊழியர்களுக்கென ஏற்படுத்தப்பட்ட பெரியார் நகருக்கு (பெரவள்ளூர்)குடிதண்ணீர் மற்றும் பாதாளச் சாக்கடை வசதிகள் செய்து தரும் திட்டம் அரசிடம் ஏதும் இல்லை.

(2) சாலை அமைக்கும் திட்டம் சென்னை மாநகராட்சியால் செயற்படுத்தப்பட வேண்டும்.

(ஆ) (1) குடிதண்ணீர் }
பாதாள சாக்கடை } கேள்விக்கு இடமில்லை.

(2) பாதை : பெரியார் நகருக்கு (பெரவள்ளூர்) சாலை அமைக்கும் பணிகள் தெற்கு எல்லைச் சாலையைத் தவிர மற்ற எல்லாச் சாலைகளும் ஏற்கனவே அமைத்து முடிக்கப்பட்டு விட்டன. தெற்கு எல்லைச்சாலையில் தண்ணீர் தேக்கத்தினாலும், சாலை அமைக்கும் பாதையில் ஆக்ரமிப்புகள் இருந்ததாலும் இவ்வேலை சென்ற ஆண்டில் நடைபெறவில்லை. சாலை அமைக்கும் பணிக்கான ஒப்பந்தம் சமீபத்தில் முடிவெடுக்கப்பட்டிருப்பதால் இந்தப் பணி இந்த நிதி ஆண்டில் எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களுக்கெல்லாம் குடிதண்ணீர் வழங்கும் திட்டத்தைக் கொள்கையாக அரசு வைத்திருக்கிறது. இந்த பெரியார் நகரில் உள்ள அரசு ஊழியர்களுக்கு குடிதண்ணீர் வழங்க அதுவும் நகராட்சிக்கு உட்பட்ட அந்தப் பகுதியில் உடனடியாக குடிதண்ணீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன். இன்னொன்று, அங்கே மழைக்காலங்களில் தண்ணீர் ரோடுகளில் தேங்கி விடுவதால், அந்தத் தண்ணீரை பாதாள சாக்கடை போன்று அமைத்து அந்த நீரை வெளியேற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

1982 ஏப்ரல் 7]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் நகர் பகுதிக்கு புழல் ஏரியில் இருந்து தண்ணீர் கொடுக்க முடியாத நிலையில் உள்ளது. எனவே, தற்சமயம் அங்கே உள்ளவர்கள் அதற்கு ஏற்பாடு செய்துகொள்ளவேண்டும், அடுத்து மழைக்காலங்களில் மழைநீர் தேங்காமல் தடுப்பதற்கு சென்னை மாநகராட்சி பெரவள்ளூர் அரசு ஊழியர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள பெரியார் நகரில் மழைநீர் வடிகால்வாய்கள் கட்ட ரூ. 45,81,800-க்கு ஒரு சிறப்புத் திட்டம் தீட்டி அதன்படி அந்த சிறப்புத் திட்டத்தை நிர்வாக வசதிக்காகவும், துரித வேலைகளை முடிப்பதற்காகவும் ஏழு சிறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மொத்தம் ரூ. 20.34 லட்சத்திற்கான வேலையை மூன்று பிரிவுகளாகப் பிரித்து முதல் பிரிவினுடைய வேலைகள் முடிந்துவிட்டன. மற்றும் இரண்டாவது, மூன்றாவது பிரிவுக்கான வேலைகள் நடந்து கொண்டுள்ளன. மீதமுள்ள ரூ. 25.47 லட்சத்திற்கான வேலையை நான்கு, ஐந்து, ஆறு மற்றும் ஏழு பிரிவுகளாகப் பிரித்து அதற்குண்டான வேலைகள் சம்பந்தப்பட்ட நிறுவனத்தால் வைப்புத் தொகை கட்டியவுடன் அந்த வேலைகளையும் எடுத்து முடிக்கப்படும். இந்தச் சிறப்புத் திட்டத்தால், பெரியார் நகரில் 30 அடி, 40 அடி மற்றும் 50 அடி அகலமுள்ள தெருக்களில் மொத்தம் 7400 மீட்டர் நீளத்திற்கு வலுவேற்றப்பட்ட கற்பலகையினாலான மூடிய மழைநீர் கால்வாய்கள் கட்டி அதை தற்போது கட்டிமுடிக்கப்பட்ட ஐவஹர் நகர் மழைநீர் வடிகால் வாயுடன் இணைக்கப்படும்.

சென்னை பனைமரத்தொட்டிப் பகுதியில் பொருத்தப்பட்டுள்ள நிலத்தடி குழாய்க்கிணறுகள்.

*வினா எண். 788—திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சென்னை இராயபுரம் பகுதியில் உள்ள பனைமரத்தொட்டியில் (வட்டம் 12) அமைந்துள்ள கார்ப்பரேஷன் லைனில் சென்னை மாநகராட்சியால் பொருத்தப்பட்டிருக்கும் போரிங் பம்புகளில் வரும் தண்ணீரில் மண்ணெண்ணெய் கலந்து வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதுகுறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) தெரியும்.

(ஆ) இப்பகுதி மக்களுக்குப் போதிய அளவு சுத்தமான குடிநீர், வட சென்னை நகருக்கு வழங்கப்படும் குடிநீர் திட்டத்திலிருந்து குழாய்கள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால் அப்பகுதியில் பிற உபயோகங்களுக்காக அமைக்கப்பட்ட நிலத்தடி குழாய்க் கிணறுகளிலிருந்து எடுக்கப்படும் தண்ணீரில் மண்ணெண்ணெய் வாடை உள்ளது. இதற்கு காரணம் துறைமுகத்திலிருந்து இப்பகுதி வழியே மணலி வரை செல்லும் கச்சா எண்ணெய்க் குழாய்களில் கசிவு ஏற்படுவதன் விளைவாகும்.

(முற்பகல் 9-50)

திரு. து. புருஷோத்தமன் : தலைவரவர்களே, அங்கே பொருத்தப்பட்டிருக்கிற போரிங் பம்புகளில் மண்ணெண்ணெய் கலந்து வருகிறது என்று அரசுக்குத் தெரிந்திருந்தும், அங்கே பூமிக்கு அடியில் செல்லுகின்ற எண்ணெய்க் குழாயில் கசிவு இருக்கிறது என்று தெரிந்திருந்தும் அதை பழுதுபார்த்து மக்களுக்கு வேண்டிய நல்ல தண்ணீரைக் கொடுக்க அரசு இனிமேலாவது யோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன். சென்னை பெருநகர் குடிநீர் வாரியத்தின் மூலம் பொருத்துவதற்கு போதுமான குழாய்கள் இல்லை என்று சொல்கிறார்கள். எல்லாப் பகுதிகளுக்கும் குடிநீர் தருகிற குழாய்களை உடனடியாக அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, குடிப்பதற்குக் கொடுக்கப்படும் தண்ணீர் என்பது ஒரு வகை. ஆழ்துளை கிணறுகள் மூலம் மற்ற காரியங்களுக்கு கொடுக்கப்படும் தண்ணீர் என்பது மற்றொரு வகை. இந்த பனைமரத்தொட்டியில் உள்ள மக்களுக்கு நல்ல தண்ணீர் வழங்க 4 பொதுக் குழாய்களும் அதற்கு அருகில் உள்ள கிழக்கு மாதாகோவில் தெருவில் 2 பொதுக் குழாய்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் மூலமாக சென்னை மாநகருக்கு வழங்கப்படுகின்ற நல்ல தண்ணீர் குடிப்பதற்காக வழங்கப்பட்டு வருகிறது. ஆக அந்த மக்களுக்கு 6 குழாய்கள் மூலம் சுத்தமான நல்ல தண்ணீர் வழங்கப்படுகிறது. இது தவிர பனைமரத்தொட்டியிலும், கிழக்கு மாதாகோவில் தெருவிலும் 5 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு, அவைகளிலிருந்து மற்ற காரியங்களுக்காக தண்ணீர் கொடுக்கப்பட்டு வருகிறது. அதைக் குடிக்கக்கூடாது. இந்தக் குழாய்களை அறவே அகற்றிவிட்டு சென்னை பெருநகருக்கு அளிக்கப்படுவது போன்று தண்ணீர் வழங்க முயற்சி செய்யப்பட்டது. ஆனால் அந்த பம்புகளை எடுக்கக் கூடாது என்று சண்டை போட்டு, தடுக்கிறார்கள் அந்தப் பகுதி பொதுமக்கள். சிமை எண்ணெய் வருகிறது, அதைப் பயன் படுத்தக் கூடாது, என்று சொன்னாலும் அந்த பம்புகளை எடுக்கக்கூடாது என்று சொல்லி தடுத்து நிறுத்தி வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மதுராந்தகம் பெரிய ஏரியை ஆழப்படுத்தும் திட்டம்.

*வினா எண் 789—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்ட மதுராந்தகம் பெரிய ஏரியை ஆழப்படுத்தும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்பொழுது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: (அ) மற்றும் (ஆ) செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் பெரிய ஏரியை தூர்வாரி பண்படுத்தும் திட்டத்திற்கான மதிப்பீடு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. எஸ். டி. உகம்சந்த் : தலைவரவர்களே, மதுராந்தகம் பெரிய ஏரியை தூர்வாரும் பணி பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னதற்காக மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இத் திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு? பணி எப்போது தொடங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, சுமார் 157 இலட்சம் ரூபாயில் மதிப்பீடு தயாரித்து, நீர் நிர்வாக ஆணையாளர் மூலம் அரசுக்கு இப்போது அனுப்பப்பட்டிருக்கிறது. அரசு இதுகுறித்து விரைவில் முடிவு எடுக்கும்.

வெள்ளாற்றின் இரு கரைகளிலும் தடுப்புச் சுவர் கட்டும் திட்டம்.

*வினா எண் 790—திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் வட்டத்தில் உள்ள வெள்ளாற்றின் இரு கரைகளிலும் சேத்தியா தோப்பிலிருந்து பரங்கிப்பேட்டை முகத்துவாரம் வரை தடுப்புச் சுவர் கட்டும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) தென்னாற்காடு மாவட்டம், சிதம்பரம் வட்டத்தில் உள்ள வெள்ளாற்றில் சேத்தியாதோப்பு அணைக்கட்டுக்குக் கீழிருந்து புவனகிரி பாலம் வரை வெள்ளத் தடுப்புக்கரை அமைப்பதற்கான செயற்குறிப்பும் மற்றும் மதிப்பீடும் தொடர்ந்து புவனகிரி பாலத்திலிருந்து வங்காள விரிகுடா வரை வெள்ளத் தடுப்புக்கரை கட்டுவதற்கான மற்றொரு செயற்குறிப்பும் மற்றும் மதிப்பீடும் அரசின் பரிசீலனையில் உள்ளன.

திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, சுதந்திரம் அடைந்து 35 ஆண்டுகளுக்குப் பிறகு முதன் முதலாக இந்த வெள்ளாற்றின் இரு கரைகளுக்கும் வெள்ளத் தடுப்புச் சுவர் கட்ட முன்வந்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் தடுப்புச் சுவர் கட்டப்பட்டால் சுமார் 12,000 ஏக்கர் நிலம் வெள்ளச் சேதத்திலிருந்து காப்பாற்றப்பட்டு, அதனால் சுமார் 22 கிராமங்கள் பயன்படும் என்று சொல்கிறார்கள். இந்த வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டும் திட்டத்திற்கு மத்திய அரசு ஏதாவது பணம் ஒதுக்கியிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, பொதுவாக 6-வது ஐந்தாண்டுத் திட்டத்திலே வெள்ளத்தடுப்பு போன்ற இத்தகைய பணிகளுக்காக 19 கோடி ரூபாய் மாநில நிதியிலிருந்து ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த 19 கோடியிலிருந்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வலியுறுத்திய இந்த இரண்டுத் திட்டங்களையும் பரிசீலித்து, இப்போது எடுத்துக் கொள்ள முடிவு செய்யப்பட்டிருக்கிறது, பூர்வாங்கமான சில பணிகள் முடிந்த பிறகு அரசு இதுகுறித்து உத்தரவிடும். சிதம்பரம் வட்டத்தில் உள்ள வெள்ளாற்றில் சேத்தியாத்தோப்பு அணைக்கட்டுக்கு கீழிருந்து புவனகிரி பாலம் வரை வெள்ளத் தடுப்புச் சுவர் அமைப்பதற்கு 130 இலட்சம் ரூபாயும், புவனகிரி பாலத்திலிருந்து வங்காள விரிகுடா வரை வெள்ளத் தடுப்புச் சுவர் அமைப்பதற்கு 126.5 இலட்சம் ரூபாயும் வழங்க திட்டமிடப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டம் இப்போது எவ்வாறு நிறைவேற்றப்படும் என்பது பரிசிலனையில் இருக்கிறது.

திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதி 'ஃப்ளட் ப்ரோன்' பகுதி என்று சொல்கிறார்கள். அது வெள்ளத்தாலும், புயலாலும் அவ்வப்போது பாதிக்கக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. 1977ஆம் ஆண்டில் ஏற்பட்ட வெள்ளத்தின்போது மட்டிரம் சுமார் 4-5 கோடி ரூபாய் அளவிற்கு நஷ்டம் ஏற்பட்டது. இதை மனதில் கொண்டு, இந்த ஆண்டே அரசு விரைவுபடுத்தி அந்தத் திட்டத்தை அமல்படுத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்தது போல் கிட்டத்தட்ட 10–15 கிராமங்களை உள்ளடக்கிய 15,754 ஏக்கர் நஞ்சை நிலங்கள், மற்றும் 7,830 ஏக்கர் புஞ்சை நிலங்கள் பாதுகாக்கப்பட வேண்டிய நிலைமை இருப்பதால், இந்தத் திட்டம் உடனடியாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய ஒன்று என்று கருதப்பட்டு இருக்கிறது. இன்னும் கொஞ்சம் பூர்வாங்க வேலைகள் இருக்கின்றன. மிக விரைவில் அதை எடுத்துக் கொள்ளலாம்.

புதுக்கோட்டையில் தானாக இயங்கும் வார்ப்பு இரும்புத் தொழிற்சாலை ஆரம்பிக்கும் திட்டம்.

* வினா எண். 791—திரு. இரா. தாமரைக்கனி திரு. பெ. சு. திருவேங்கடம் மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழகத்துடன் சேர்ந்து அசோக்லேலண்டு கம்பெனி தானாக இயங்கும் வார்ப்பு இரும்பு தொழிற்சாலை ஒன்றை புதுக்கோட்டையில் ஆரம்பிக்கும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: ஆம். தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் SIDCO அசோக்லேலண்டு நிறுவனத்துடன் சேர்ந்து கூட்டுத் துறையில் joint Sector-ல் சாம்பல் நிற உருக்கு வார்ப்படங்கள் மற்றும் சாம்பல் நிற இரும்பு வார்ப்படங்கள் செய்யும் தொழிற்சாலை ஒன்றை ஆட்டோமோடிவ் காஸ்டிங் லிமிடெட் என்ற பெயரில் புதுக்கோட்டைக்கு அருகில் ரூ.18கோடி மதிப்பீட்டில் அமைப்பதற்காக மைய அரசு இசைவுக் கடிதம் வழங்கியுள்ளது. இத்திட்டம் வெற்றிகரமாக செயல்பட முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, இந்த வார்ப்பு இரும்பு தொழிற்சாலையால் எத்தனை பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்? எப்போது தொழிற்சாலை துவங்கப்பட்டு, எப்போது அந்த வேலைகள் முடியும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்சாலை 1984 ஆம் ஆண்டில் தன்னுடைய உற்பத்தியைத் துவங்கும் என்று எதிர் பார்க்கலாம். சுமார் 1,000 பேருக்கு நேரடியாகவும், இந்தத் தொழிற்சாலையைச் சுற்றி பல உப தொழில்களும், சிறு சிறு தொழில்களும் வருகிற வாய்ப்பு இருக்கிற காரணத்தால், அதிலேயும் ஆயிரக்கணக்கான பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். இப்படி நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலை வாய்ப்பு கிடைக்கும் சாத்தியக்கூறுகள் இருப்பதால், குறைந்தது 5,000 பேருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் மிகவும் பின் தங்கிய தொகுதி அறந்தாங்கி தொகுதியாக இருப்பதால், இந்த வார்ப்பு இரும்புத் தொழிற்சாலையை அறந்தாங்கியில் துவங்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா?

[1982 ஏப்ரல் 7]

(முற்பகல் 10—00)

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்காக மாண்புமிகு உறுப்பினர் பேசியதற்கு நன்றி. ஆனால் இந்தத் தொழிற்சாலை அறந்தாங்கியிலே அல்லது புதுக்கோட்டைக்கு அருகிலே அமைக்கப் படயிருக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆரம்பிக்கிற வார்ப்பு இரும்புத் தொழிற்சாலைக்கு, 18 கோடி ரூபாய் முதலீடு செய்யப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதிலே கம்பெனியினுடைய பங்கு எவ்வளவு நம்முடைய தொழில் வளர்ச்சிக் கழகத்தினுடைய பங்கு எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, ஜாயின்ட் செக்டாரில் 26 சதவீதம் அரசு தரப்பிலேயும், 24 சதவீதம் தனியார்கள் (இன்டஸ்ட்ரியல் புரொமோட்டர்ஸ்) போடவேண்டும் என்றும் இருக்கிறது. மற்றவைகள் எல்லாம் பைனான்சியல் இன்ஸ்டிடியூஷன்கள் மூலமாக கடனாகப் பெறவேண்டிய முறைகள் இருக்கின்றன. ஜாயின்ட் செக்டார் என்று சொன்னால், அந்த முறையிலேயே இதிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. பெ. திருமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த புதுக்கோட்டை மாவட்டத்தில் ஒரு இன்டஸ்டிரியல் காம்பிளக்ஷ் என்று சொல்லத்தக்க தொழிற் பேட்டை விரைவாக அமைக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அது எந்த அளவில் உள்ளது? அதை உடனே ஏற்படுத்த தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டையிலே தொழிற்பேட்டை இன்டஸ்டிரியல் காம்பிளக்ஸ் அமைப்பதற்கான பணிகள் துவங்கப்பட்டு, பணியாளர்கள் அமைக்கப்பட்டு, அதற்கான நில ஆர்ஜித வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

1982 ஏப்ரல் 7]

தமிழ்நாடு எலெக்ட்ரானிக் கார்ப்பரேஷன் மூலம் உற்பத்தி செய்யப்பெற்ற சிறிய ஒலிபெருக்கிகள்

*வினா எண். 792—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு எலெக்ட்ரானிக் கார்ப்பரேஷன் நிறுவனம் சிறிய ஒலிபெருக்கிகளை உற்பத்தி செய்கிறதா?

(ஆ) ஆம் எனில் ஆண்டுக்கு எத்தனை ஒலிபெருக்கிகள் உற்பத்தியாகின்றன?

(இ) இதுவரை எத்தனை உரிமம் பெற்றிருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) பெருமளவில் மின்னணு ஒலிபெருக்கிகளை (Electronic Megaphones) உற்பத்தி செய்து, சந்தையில் பெருமளவில் விற்பனை செய்வதற்கான சாத்தியக் கூறுகளை ஆராயும் நோக்குடன், தமிழ் நாடு மின்னணுத் தொழில் நிறுவனம் தற்போது பரிட்சார்ந்த முறையில் (Experimental basis) மின்னணு ஒலிபெருக்கிகளை உற்பத்தி செய்து வருகிறது.

(ஆ) இது வரை ஆயிரத்து நூறு மின்னணு ஒலிபெருக்கிகளை உற்பத்தி செய்து அதில் நானூறு ஒலி பெருக்கிகளை விற்பனை செய்துள்ளது. சந்தை நிலவரத்தையொட்டி இதன் எண்ணிக்கை ஆண்டொன்றுக்கு மூவாயிரமாக உயர்த்தப்படலாம்.

(இ) தமிழ் நாடு மின்னணுத் தொழில் நிறுவனம் மின்னணு ஒலி பெருக்கிகளை தானே நேரடியாக உற்பத்தி செய்யாமல் சிறு மின்னணுத் தொழில் நிறுவனங்களின் மூலம் தயாரிக்க இருப்பதால் அந்நிறுவனம் மைய அரசிடமிருந்து அதற்கான உரிமம் பெறவில்லை.

திரு. பாபு. ஜனார்த்தனன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த எலக்ட்ரானிக் தொழிற்சாலையிலே மின்னணு ஒலி பெருக்கிகளை உற்பத்தி செய்வதைப் போன்று, வேறு என்னென்ன பொருள்களை எலக்ட்ரானிக்ஸ் சம்பந்தப்பட்ட பொருள்களை - உற்பத்தி செய்ய உத்தேசித்து உரிமம் பெற்றுள்ளது என்பதை அறியவிரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு, தமிழ்நாடு எலக்ட்ரானிக் கார்ப்பரேஷன் நிறுவனம் புதியதாக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் மூலமாக, தமிழகத்திலே மின் அணுத் துறையிலே உற்சாகப்படுத்த வேண்டும், ஊக்கப்படுத்த வேண்டும் என்பதற்காக தோற்றுவிக்கப்பட்டது. இந்நிறுவனம் மத்தியிலிருந்து 8 உரிமங்களைப் பெற்றிருக்கிறது. இன்னும் சில

உரிமங்களைக் கூட கேட்டு மனுச் செய்திருக்கிறது. அதிலே குறிப்பாகச் சொல்லவேண்டும் என்றால் அலுமினியம் எலக்ட்ராலிடிக் கெப்பாசிடர்ஸ், தயாரிக்கும் உரிமம் ஒன்று. இதனுடைய மதிப்பீடு 1 கோடி ரூபாய் அளவுக்கு இருக்கும். அதைபோலவே 19 லட்சம் மூலதன அளவில் ... ஆயிரம் டிஜிட்டல் மின் - அணு கைக்கடியாரங்கள் தயாரிக்கும் உரிமம், அதைப்போலவே எலக்ட்ரானிக் மெகாஃபோன், அதைப்போலவே டிரான்ஸ் ரிசீவர்ஸ் என்று சொல்லக்கூடிய தயாரிப்புக்காக 1 கோடி ரூபாய் மூலதனத்திலே உரிமம் கேட்கப்பட்டிருக்கிறது. அந்த வகையிலே இன்னும் கார்பன்&மெட்டல் பிலிம் ரெஸிஸ்டர்ஸ் மினி கம்பியூட்டர்ஸ், எக்ஸ்ரே எக்கியூப்மென்ட்ஸ் என்று இப்படி பல்வேறுவிதமான உரிமங்களையும், அதைப்போலவே டெலிவிஷன் வீடியோ பிளேயர்ஸ் போன்றவற்றிற்கும் உரிமங்களை தமிழக அரசு பெற்றிருக்கிறது. இவைகளுக்கெல்லாம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. எம். இன்னாசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த எலக்ட்ரானிக் கார்ப்பொரேஷனால் தயாரிக்கப் படும் சிறிய மின் அணு ஒலிபெருக்கியின் விலை என்ன? இந்த மின் அணு ஒலி பெருக்கிக்காக வேறு மாநிலங்களிலிருந்து ஆர்டர்கள் வந்திருக்கின்றனவா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலவவர் அவர்களே, இதுவரை சுமார் 400 தான் விற்பனைக்கு போயிருக்கிறது. சுமார் 1900 அல்லது 2000 ஒலிபெருக்கிகள் உற்பத்தி செய்யப்பட்டன. பொதுவாக காவல் துறை போன்ற துறைகளுக்கு இதை பரிட்சார்த்தமாக கொடுத்துக்கொண்டு வருகிறது. இதனுடைய விலை சுமார் ரூ. 400—லிருந்து 45... வரை இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இதிலே இன்னும் சில மாடிபிகேஷனைச் செய்து, மாடர்னைஸ் செய்ததற்கு பின்னாலே அதற்கான விலையை அந்த நிறுவனம் நிர்ணயிக்கும்.

திரு. எம். இன்னாசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தமிழ்நாடு எலக்ட்ரானிக் கார்ப்பரேஷன் என்ற நிறுவனம் இதுபோன்று வேறு உரிமங்களை வாங்கி வைத்திருக்கின்றதா? அப்படி வாங்கி வைத்திருந்து அந்தத் தொழில்களை நடத்த முடியாமல் இருக்கின்றதா? அப்படி இருந்தால் அவற்றுக்கு தனியார் முன்வந்தால் அவர்களையும் சேர்த்துக்கொண்டு ஜாயின்ட் செக்டர் துறையிலே அந்தத் தொழில்களை ஆரம்பித்து நடத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னென்ன தொழில்கள் ஆரம்பிக்க உரிமங்கள் பெற்றிருக்கின்றது என்றும், எவற்றுக்கெல்லாம்

உரிமங்கள் கோரி மனுச் செய்யப்பட்டிருக்கின்றது என்றும் முதலிலேயே நான் சொன்னேன். தமிழ்நாடு எலக்ட்ரானிக் கார்ப்பரேஷன் ஆங்காங்கே சிலவற்றை துவங்கி நடத்த இருக்கின்றது. இன்றையதினம் இந்த சட்டமன்றக் கூட்டத் தொடரின் இறுதி நாளாகும். எனவே தலைவர் அவர்களே, பத்திரிகைகளுக்கும், வெளியே இருக்கின்ற தொழில் அதிபர் களுக்கும் தங்கள் மூலமாக நான் தெரிவித்துக்கொள்கிறேன். மொத்தம் அனுமதி பெற்ற 8 லைசன்சுகள் இருக்கின்றனவே அதிலே ப்ரமோட்டர்ஸ் என்ற வகையிலே வெளியே இருக்கின்ற தொழில் அதிபர்கள் முன்வந்தால் அவற்றை ஜாயின்ட் செக்டர் நிறுவனங்களாக நிர்மானிப்பதற்கு தமிழ்நாடு எலக்ட்ரானிக் கார்ப்பரேஷன் தயாராக இருக்கின்றது. தொழில் அதிபர்கள் முன்வந்தால் அதை ஏற்றுக்கொள்ள அரசு தயாராக இருக்கின்றது என்பதை உங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன்: தலைவர் அவர்களே, இந்த எலக்ட் ரானிக் சிறிய ஒலி பெருக்கி என்பது நாம் இப்போது சாதாரண மாக நடத்துகின்ற பொதுக்கூட்டங்களுக்குப் பயன்படுத்தப் படுவதில்லையா? அப்படி இல்லை என்றால் இப்போது இருக்கின்ற ஒலிபெருக்கிக்கும், இந்த எலக்ட்ரானிக் ஒலி பெருக்கிக்கும் உள்ள வேறுபாடுகள் என்ன? அவற்றின் சிறப்புக்கள் என்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, எந்தக் கூட்டங்களுக்குப் பயன்படுத்தலாம் என்பது கூடுகின்ற கூட்டத்தின் அளவைப் பொறுத்தது. இது மிகச்சிறிய அளவிலே தயாரிக்கப்பட்டிருக்கின்ற ஒலிபெருக்கியாகும். இது பேட்டரி யிலே இயங்கக்கூடியது. 100, 200 பேர்கள் கூடுவதாக இருந்தால் அப்படிப்பட்ட சிறிய கட்சிக்கூட்டம் போன்றவற்றிற்கு இதைப் பயன்படுத்தலாம். சில அலுவலகங்கள் அல்லது காவல்துறை வெளியே எங்கேயாவது டிரெய்னிங் நடத்துகின்றபோது இதனை பயன்படுத்தலாம். இப்படிச் சின்னச்சின்ன காரியங்களுக்கு இதை பயன்படுத்தலாம். மற்றபடி வேறு ஒலிபெருக்கித்தான் பயன்படுத்தப்பட வேண்டும். அதற்கும் இதற்கும் மிகுந்த வேறுபாடுகள் இருக்கின்றன.

திரு. ஈ. எஸ். எம். பக்கீர் முகமது: தலைவர் அவர்களே, எல்லா ஒலிபெருக்கிகளையும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு எலக்ட்ரானிக் கார்ப்பரேஷன் ஏதாவது முயற்சி செய்திருக்கின்றதா? அப்படி ஏற்றுமதி செய்தால் அன்னியச் செலாவணி கிடைக்கும் என்பதையும் அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அப்படியானால் அவ்வாறு ஏற்றுமதி செய்வதற்கு ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, இந்தச் சிறிய எலக்ட்ரானிக் ஒலிபெருக்கியைப் பொறுத்த வரையிலே இதற்கு வெளிநாடுகளிலே இருந்து எந்தவிதமான வேண்டுகோளோ, எந்தவிதமான விண்ணப்பமோ வரவில்லை. உள்நாட்டிலே அதை விற்பதிலேயே இன்னும் பல பிரச்சினைகள்

இருக்கின்றன. மார்க்கெட்டிலே எவ்வளவு தேவை என்பதை எல்லாம் நிர்ணயம் செய்து அதுபற்றி எல்லாம் முடிவு செய்ததற்குப் பிறகுதான் அவற்றை நிர்ணயிக்க இயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போலீஸ் துறையினரால் உபயோகப்படுத்துகின்ற வாக்கி டாக்கி என்ற கருவி உற்பத்தி செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, அதுபோன்ற திட்டம் தற்போது பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்:

[...ம் பக்கங்களில் 810–900 உடுக்குறியிடாத வினாக்களையும், அவற்றுக்கான விடைகளையும் காண்க]

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுகுறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(3) தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் விடுதியில் பாதுகாப்பு.

திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர் ஒரு முக்கியமான பிரச்சினையைத் தங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. குலசேகர் அவர்கள் எம்.எல்.ஏ. ஹாஸ்டலில் அதாவது நம்முடைய கமிட்டிகள் எல்லாம் கூடுகின்ற அந்த ஹாஸ்டலிலே மேலே தங்கி இருக்கிறார்கள். அதற்குப் பக்கத்திலே திரு. பழனியப்பன் அவர்களும் தங்கி இருக்கிறார்கள். அவர் நேற்றிரவு வெளியே போய்விட்டு சுமார் 12, 12½ மணிக்குத் திரும்பும்போது இரண்டு கான்ஸ்டபிள்கள் மற்றும் ஒரு எஸ். ஐ. ஆகிய மூவரும் சேர்ந்து அவர்களுடைய அறையினுடைய கதவைத் தட்டுகிறார்கள். அப்போது அவருடைய அறையிலே அவருடைய குழந்தையும், துணைவியாரும் இருக்கிறார்கள், வெளியிலே சென்றிருந்த கணவர் தான் திரும்பி வந்துவிட்டார் என்று எண்ணி கதவைத் திறந்து இருக்கிறார்கள்.

[முற்பகல் 10.10]

அப்போதுதான் திரு. குலசேகரன் அவர்கள் மேலே ஏறி வருகிறார்கள், திரு. பழனியப்பன் அவர்களோடு, இவர்களைப் பார்த்தவுடனே ஒரு கான்ஸ்டபிளும் ஒரு எஸ்.ஐ-யும் போய்,

விடுகிறார்கள். ஒரு கான்ஸ்டபிள் மட்டும் பிடிபடுகிறார். அவர் பிடிப்பட்டவுடன், அவரைப் பிடித்துக் கேட்டபோது எனக்கு ஒன்றும் தெரியாது ஸார்' அவர்கள இரண்டு பேர்களும் தண்ணீர் கேட்கச் சொன்னார்கள் என்று சொல்லியிருக்கிறார். அவர்களை நான் அடையாளம் காட்டுகிறேன், வாருங்கள் ஸார் என்று சொல்லி அவர்களை அழைத்துக்கொண்டு புது ஹாஸ்டலுக்கு வருகிறார்கள். புது ஹாஸ்டலுக்கு வந்ததற்குப் பிறகு இவர்களை விட்டு விட்டு அவர் மேலே ஓடிப்போய் மறைந்துவிடுகிறார். இருக்கிற செக்யூரிட்டி, மற்றவர்கள் எல்லாம் ஒரு வானில் ஏறி உட்கார்ந்து கொள்கிறார்கள். அப்படிப்பட்டதொரு நிலைமை நேற்று இரவு உருவாகியிருக்கிறது சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில். ஆகவே, நான் தங்கள் மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவது என்னவென்னில் ஏற்கனவே எம்.எல்.ஏ ஹாஸ்டலில் திருடுகள் அதிகமாகப் போய்க் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. இஸ்மாயில் அவர்கள் அறையைக் கூட உடைத்து பொருள்களை எடுத்துக்கொண்டு போயிருக்கிறார்கள். அதற்குப் பிறகு மற்றும் பல உறுப்பினர்கள் அறைகளில் திருடு போயிருக்கிறது. ஒரு சட்டமன்ற உறுப்பினர் மாதக்கணக்கில் தொடர் கூட்டம் நடக்கும்போது தன் துணைவியாருடன் வந்து தங்கியிருக்கும் போது, அறையை விட்டு விட்டு, அவர் வெளியே சென்று வருவதற்குக்கூட ஒரு பாதுகாப்பற்ற நிலைமை உருவாகியிருக்கிறது. இப்போது கூட அறைகளில் விட்டு விட்டு உறுப்பினர்கள் வந்திருக்கிறார்கள், என்ன நடக்கும் என்று தெரியவில்லை. எங்களுக்கு பாதுகாப்பு அளிப்பது போலீஸ். அந்தப் போலீஸே வேலியே பயிரை மேய்வது போல், அதுவும் சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் அவர் துணைவியார் தனித்திருக்கிறார் என்று தெரிந்ததற்குப் பிறகு கதவைத் தட்டுகிற ஒரு தைரியம் எப்படி வந்தது என்று எனக்குப் புரியவில்லை? இது ஒரு ஸீரியஸானப் பிரச்னை, உணர்ச்சிப்பூர்வமான பிரச்னை. இதில் கட்சி வித்தியாசம் பார்க்காமல்—யாராக இருந்தாலும் ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு நடந்த நிகழ்ச்சி என்று எடுத்துக்கொண்டு பார்க்கவேண்டும். இந்த நிகழ்ச்சியை பல சட்டமன்ற உறுப்பினர்கள் பார்த்திருக்கிறார்கள். கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தோழர்கள்கூட சொல்லியிருக்கிறார்கள். தாங்கள் இப்படிப்பட்ட பாதுகாப்பற்ற நிலைமை இருப்பதை உணர்ந்து அருள்கூர்ந்து இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் இனிமேல் ஏற்படாமல் இருக்க பாதுகாப்பிற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அதோடு அந்த அதிகாரிகள்மீது உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். காலையில் கூட ஒரு அதிகாரி திரு. குலசேகரன் அவர்களைப் பார்த்து, அவர் ஒரு பயித்தம் மாதிரி, ஆகவே அவரை வார்னிங்யோடு விட்டுவிடலாம் என்று கேட்டிருக்கிறார்களாம். அவர்கள்மீது நோட்டீஸ் கொடுத்திருக்கிறோம், சஸ்பென்ட் செய்திருக்கிறோம் என்று சொல்லி ஐ வாஷ் மாதிரி ஒரு நிலையை உருவாக்கி விடுவார்கள். இது ஒரு சீரியஸான பிரச்னை. திரு. குலசேகரன் அவர்கள் பேசினால் உணர்ச்சிவசப்பட்டு விடுவார்கள்

என்று நானே பேசுகிறேன் என்று சொன்னேன். ஆகவே தங்களின் மேலான கவனத்திற்கு இதைக் கொண்டுவருகிறேன். மேலான தீர்ப்பை எதிர்பார்த்து, தாங்கள் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை துரிதமாக எடுத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் திரு. குலசேகரன் அவர்களுடைய அறையில் நேற்று நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி பற்றிக் குறிப்பிட்டார்கள். உள்ளபடியே இது வருந்துவதற்குரிய ஒன்றுதான். சட்டமன்ற உறுப்பினர்கள் தங்குகிற விடுதியில் போதுமான பாதுகாப்பு இல்லாத அளவிற்கு அண்மைக் காலங்களில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொல்லியது மாதிரி மாண்புமிகு உறுப்பினர்கள் அறைகள் உடைக்கப்படுவதும், உள்ளே இருக்கிற பொருள்கள் திருடப்படுவதும் போன்ற நிலைமைகள் நடைபெற்று வருகின்றன. அதற்குக் காரணம், மாண்புமிகு உறுப்பினர்கள் தங்குகிற அறைகள் எல்லாம் ஒரு ப்ரைவேட் கம்பார்ட்மென்ட் என்ற அளவிற்கு அவரவர்களுக்கு ஒரு தனி இருப்பிடம் என்ற ஒரு முறையை மேற்கொண்டு வெளியே இருந்து யாரும் அனுமதிக்கப்படுவதில்லை என்ற ஒரு முறை ஏற்கெனவே வகுக்கப்பட்டு அந்த முறை கையாளப்படாமல் இருந்து வருவதன் காரணமாகத்தான் இந்தியாவில் இருக்கிற வேறு எந்த மாநிலத்திலும் சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதிக்குள்ளே வந்து போகும் நிலை, தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர் விடுதியில்தான் அதிகமான பேர்கள் வருவதும் போவதும், யார் வருகிறார்கள் யார் போகிறார்கள் என்று தெரியாத நிலை ஏற்படுவதின் காரணமாகத்தான் இப்படிப்பட்ட அசம்பாவிதங்கள் எல்லாம் நடைபெறுகின்றன. இந்த திருட்டு சம்பந்தமான நிலைமைகளைப் பற்றி மட்டும் இப்போது சொல்கிறேன். அந்த வகையில் பார்க்கிறபோது, மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேர்களும் கீழே ஒரு குறிப்பிட்ட இடத்தில்தான் மற்றவர்கள் உறுப்பினர்களைச் சந்திக்கலாம், அறைக்கு யாரும் வரக்கூடாது துணைவியார் அல்லது சொந்தக்காரர்கள் தவிர, மற்றவர்கள் யாரும் அறைக்கு வரக்கூடாது என்ற ஒரு கட்டுப்பாட்டிற்கு எல்லோரும் கட்டுப்பட்டு வருவார்களானால் வேறு யாரும் வராந்தாவில் உலாவவோ அல்லது அறைக்குள் வருவதற்கோ இல்லாத அளவிற்கு நாம் தடுப்புக் காவல் செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் பலமுறை கூட்டங்கள் கூட்டியும் இது நடைமுறைப்படுத்தப்படாமல் இருக்கிற நிலையில் மீண்டும் எதிர்க்கட்சித் தலைவர்களையெல்லாம் கூப்பிட்டு

மறுபடியும் ஆலோசனை செய்யலாம். அல்லது ஹவுஸ் கமிட்டி என்றிருக்கிறது. அதைக் கூட்டி ஆலோசனை செய்து ஒரு முடிவு காணலாம். உறுப்பினர் அறையைத் தட்டுகிற அத்தகைய நிகழ்ச்சி பற்றி எடுத்துச் சொன்னார்கள். அதுபற்றி புகார் தந்திருப்பதாக செய்தி வந்திருக்கிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இந்தப் பிரச்னையிலே கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும். அதன்மூலமாக மற்ற உறுப்பினர்களுக்கும் பாதுகாப்பு தரவேண்டும் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். இதுபற்றி தாங்கள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதைத் தடுப்பதற்கு—அது யாராக இருந்தாலும் சரி, நடவடிக்கை எடுக்கவேண்டும். முன்னேற்பாடு இல்லாமல், தட்டுவதற்கு காரணமில்லாமல், அதுவும் குலசேகரன் அவர்கள் வந்துவிட்ட பிறகு, என்ன காரணத்திற்காக தட்டப்பட்டது என்பதைச் சொல்லியிருக்கலாம், ஆனால், எப்போது மறைந்தார்களோ, அவர் வருகின்றபோது ஓடினார்களோ, அதிலே அவர்கள்மீது தவறு இருப்பது என்பது தெரிய வருகிறது. அவர்களைக் காண்பிக்கிறேன் என்று சொன்னவரும் மறைந்துவிட்டார் என்பதிலே, ஏதோ தவறு இருக்கிறது என்பது தெரிய வருகிறது. எனவே, இது விஷயத்தில் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். தாங்கள் முதலமைச்சர் அவர்கள் மூலமாக, இந்தத் துறையின் மூலமாக தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். அந்த வகையிலே நடவடிக்கை எடுத்து, எல்லா உறுப்பினர்களுக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டும். அவர்களுடைய மதிப்பும், கவுரவமும் காப்பாற்றப்பட வேண்டும். இந்த அவையிலே உள்ள 235 உறுப்பினர்களுக்கும் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும். இதிலே கட்சி வேறுபாடு கிடையாது. யாராக இருந்தாலும், நடவடிக்கை எடுக்கவேண்டும். அப்படி நடவடிக்கை எடுத்து, நீதியை நிலைநாட்டி, எந்தெந்த வகையிலே இதற்கு துணைபுரிய வேண்டுமோ, அதைச் செய்ய இந்த அரசு ஆயத்தமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு)....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நடவடிக்கை எடுத்துக் கொள்கிறேன் என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.......

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தங்கள் கருத்தைத் தெரிவித்து விட்டால், பிரச்னை தீர்ந்து விடும்.

[1982 ஏப்ரல் 7

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குலசேகரன் சம்பவத்தைப் பற்றி நான் வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன், குலசேகரன் அவர்கள் காலையில் என்னிடம் தெரிவித்தார்கள். அரசுத் தரப்பிலே நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறேன். இது சம்பந்தமாக முதலமைச்சர் அவர்களோடு பேசுவதாக இருக்கிறேன். எல்லா உறுப்பினர்களுக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்பதிலே எந்தவிதமான கருத்து வேறுபாடும் கிடையாது; கட்சி வேறுபாடும் கிடையாது. எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், எல்லா விதமான மரியாதையும் தரவேண்டும்.

இதற்கான காரணங்களை அவை முன்னவர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஒரு நாளைக்கு 1,200 பேர்கள் காலையிலே மட்டும் வருகிறார்கள். உறுப்பினர்களைப் பார்க்க வருவதாக அவர்கள் சொல்லுகிறார்கள். அதேசமயத்தில் பல்வேறு சம்பவங்களைப் பற்றியும் குறிப்பிட்டார்கள். இதற்கு முன்னால் முத்துராமலிங்கம் அவர்களின் கைக் கடிகாரம், இஸ்மாயில் அவர்களின் அறை உடைக்கப்பட்டிருக்கிறது போன்ற பல்வேறு சம்பவங்களைப் பற்றிய செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, இதற்கெல்லாம் ஒரு கட்டுப்பாடு வேண்டுமென்று சொன்னால், உங்களுடைய ஒத்துழைப்பு வேண்டும். யாரும் வராதபடி பார்த்துக்கொள்ள வேண்டும். அந்த ஆட்சிக் காலத்தில், சம்பந்தப்பட்டவர் இரண்டு பேர் தங்க வேண்டுமென்றால், அப்போது அறைக்கு வாடகையாக ரூ. 2½ கொடுக்கவேண்டும். விருந்தாளியாக வரும் ஒருவருக்கு ரூ. 4 கொடுக்கவேண்டும். இப்போது யாருக்கும் அந்தக் கட்டணம் கிடையாது. அதனால், யார் வேண்டுமானாலும் இஷ்டப்படி வந்து போகக்கூடிய நிலைமை இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைக்கு, அந்த விடுதி போய்விட்டதால், சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் ஒரு கட்டுப்பாட்டிற்கு வந்தால், இதை எல்லாவற்றையும் தவிர்க்க முடியும். அந்த விடுதிக்குள் யாரும் வராமல் தடுக்க காவல் துறையினரைப் போடமுடியும். யாராவது வந்தாலும், அவர்களை விசாரித்து உள்ளே அனுப்புகிற ஒரு சூழ்நிலையை உருவாக்கலாம்.

இன்றைக்கு காலையிலேகூட, என்னிடம் சட்டமன்ற உறுப்பினர்கள் சொன்னார்கள்—லிப்டிலே நாங்கள் ஏற முடியவில்லை; மற்றவர்கள் ஏறிச் செல்வதாகச் சொன்னார்கள். அந்த அளவுக்கு நிலைமை போய் இருக்கிறது. ஆகவே, இந்தப் பிரச்னையின் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும். நடவடிக்கை எடுக்கிறேன். நான் பார்த்துக் கொள்கிறேன். சர்க்கார் இது விஷயத்தில் தீவிரமாக இருக்கிறது என்று தெரிவித்திருக்கிறேன். நடவடிக்கை எடுப்பதிலே, என்னாலான அனைத்தும் செய்வேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

2 ஏப்ரல் 7]

திரு. உ. சுப்பிரமணியன்: இதிலே காவல் துறையினரே, படிச் செய்திருக்கிறார்களே?.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேலியே பயிரை மேய்வதாக மொழி இருக்கிறது. அவர்களும் மனிதர்கள்தான். தவறு ய்யலாம். யார் தவறு செய்தாலும், அவர்கள்மீது வடிக்கை எடுக்கப்படும்.

(முற்பகல் 10.20)

(ஆ) குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய தணிக்கை அறிக்கை.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் லவர் அவர்களே, குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய ஆடிட் போர்ட் 1972-73 ஆம் ஆண்டிலிருந்து 1977-78வரையிலே, ட்டத்தட்ட 10 ஆண்டுகளுக்கு அதாவது ஒருமாமாங்கம் என்று ால்வார்களே, அந்த அளவுக்கு இங்கே வைக்கப்பட்டிருப் ற்குக் காரணம் என்ன? இன்றைக்கு மட்டும் 6 போர்ட்டுகள் கொடுத்திருக்கிறார்கள். ஏதோ சட்ட ன்றத்திற்கு ரிப்போர்ட் கொடுக்கவேண்டுமென்று ஒரு ங்காக இருக்கிறதே தவிர, இதுபோன்ற முக்கியமான போர்ட்டுகளை முன்பே கொடுத்திருப்பார்களானால் ண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் படித்துப் பார்த்து த்துக்களை நல்லமுறையிலே கூற விவாதத்திற்கு நல்ல ய்ப்பு கிடைத்திருக்கும். உங்கள் மூலமாக கேட்டுக் ாள்வதெல்லாம் 7, 8 ரிப்போர்ட்டுகளை பத்து ஆண்டுகளுக்குப் ன்னாலே வைக்கிற முறையை இத்தோடு விட்டு விட்டு, ண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள், வர்கள் வருங்காலத்தில் நல்ல விவாதம் நடைபெறுவதற்கான றையை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மைச்சர் அவர்கள் இதற்கு என்ன சொல்லவிருக்கிறார்கள் ன்பதை அறிய ஆவலாய் இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு தலைவர் வர்களே, 1972, 73 ஆண்டிற்கு வைக்கும்போதே , 78-க்கும் வைத்துவிட்டதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ராட்டுவார்கள் என்று நான் கருதுகிறேன். 72—73-லேயிருந்து, 1976—77 வரையில் ஏன் இவ்வளவு லதாமதம் ஆயிற்று என்பதை மாண்புமிகு உறுப்பினர் வியுறுத்தியதைப் போல, பரிசீலனை செய்து இனி இதுபோன்று டக்காமல் பார்ப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு டுத்துக் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1982 ஏப்ரல் 7

(இ) பேரவை நடவடிக்கைக் குறிப்புகளைச் சில பத்திரிகைகள் வெளியிடும் முறை.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, 5-4-82 அன்று உரிமை மீறல் பிரச்னை குறித்து தாங்கள் அளித்த ஒரு தீர்ப்பினை ** பத்திரிகை திருத்தி வெளியிட்டிருக்கிறது. இதன்மூலம் மாண்புமிகு சபாநாயகர் அவர்களுடைய தீர்ப்பை மக்கள் தவறாகப் புரிந்து கொள்ளக் கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. சபையிலே அறிவித்த தீர்ப்பை மாற்றி வெளியிட்டிருப்பதால்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரிமைப் பிரச்னையை இப்போது எழுப்பாதீர்கள். உரிமை பிரச்னை அனுமதி கொடுத்த பிறகு தான் எழுப்ப வேண்டுமென்ற சம்பிரதாயம் இருக்கிறது. எனவே அது வேண்டாம். ஒரு பத்திரிகை தவறாக வெளியிட்டிருக்கிறது என்று கூறி விட்டு விடுங்கள், அதுபோதும்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ணபாண்டியன்: தலைவர் அவர்களே, அந்தப் பத்திரிகை இன்னொரு ஆங்கில பத்திரிகையும் நடத்துகிறது. அதிலே தவறாக வரவில்லை. தமிழ் பத்திரிகையிலே மட்டும் வேண்டுமென்றே, தலைவர் அளித்திருக்கிற தீர்ப்பினைத் திருத்தி வெளியிட்டிருக்கிறார்கள். இது உரிமை மீறலாகும். எனவே தயவு செய்து நீங்கள் அந்த பத்திரிகை மீது உரிமை மீறல் பிரச்னை குறித்து தீர்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு தலைவர் அவர்களே, தங்களுடைய மேலான கவனத்திற்கு ஒரு பிரச்னையை நான் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அவையிலே கடந்த 3-4-82 ஆம் தேதி நெடுஞ்சாலைத் துறை சார்பிலே ஒரு கேள்விக்கு நான் பதில் சொன்னேன். நான் என்ன பதிலளித்தேன் என்பது அவைக் குறிப்பிலே ஏற்றப் பட்டிருக்கிறது. ஆனால் அடுத்த நாள் வருகிற ** என்ற பத்திரிகையிலே....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பத்திரிகையின் பெயரைச் சொல்லாதீர்கள். பத்திரிகை பற்றி பொதுவாகச் சொல்லுங்கள் போதும்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, 4-4-82 ஆம் தேதி வருகிற அந்த பத்திரிகையிலே நான் சொல்லாத செய்திகள், இந்த அவையினுடைய குறிப்பிலே இல்லாத செய்திகள் வெளியிடப்பட்டிருக்கிறது. குறிப்பாக அவைகள் சொல்வதும், செயல்படுவதும் உண்மைக்கு புறம்பானதாகவும், நியாயத்திற்கும், நேர்மைக்கும் புறம்பாகவும், சட்ட விதிகளுக்கு

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1982 எப்ரல் 7] [திரு ப. குழந்தைவேலு]

ஏற்புடையதாகவும் இல்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுபோன்ற பத்திரிகைகள் இங்கே பத்திரிகையாளர் வரிசையில் இடம் பெறாத அளவிற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதை இந்த நேரத்தில் வலியுறுத்திக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன், காரணம் இதுபோன்ற தவறான செய்திகள் நாட்டிற்கு அளிப்பதன் மூலம் ஒரு தவறான எண்ணத்தை அரசின் மீதும், அமைச்சர்களின் மீதும் களங்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே இப்படிப்பட்ட செயல்கள் நடைபெறாமல் எங்களுக்கு நீங்கள் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் நவநீதகிருஷ்ணபாண்டியன் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் பத்திரிகைகள் பற்றி சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு மாமன்றம் கடைசியாக கூடுகிற நாள் என்பதால் ஒரு கருத்தை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். பத்திரிகையாளர்களுக்கு ஒரு வேண்டுகோளாக வைக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். பல பிரச்னைகள் இங்கே பேசப்படுகின்றன. சில பிரச்னைகள் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகின்றன. அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப்படுகிற செய்திகள் எல்லாப் பத்திரிகைகளிலும் மறுநாள் பார்த்தால் சாங்கோபாங்கமாக வந்துவிடுகின்றன. நன்றாக பார்த்துக் கொண்டு தான் இருக்கிறேன். எல்லாப் பத்திரிகைகளையும் படிக்கிறேன். வாரப் பத்திரிகைகள் உட்பட முடிந்தவரை எல்லாப் பத்திரிகைகளையும் படிக்கிறேன். என்னுடைய வாழ்க்கையில் புத்தகம் படிக்கிற நேரம் கூட இழந்து விட நேரிடுகிறது. இவ்வளவையும் பார்க்கிறபோது சங்கடமாகத் தான் இருக்கிறது. அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படக்கூடிய பகுதிகளை போடாமல் இருப்பது தான் மரபு. நான் பத்திரிகையாளர்களுக்கு வேண்டுகோளாக வைக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். நீக்கப்பெற்ற பகுதிகளைப் போடுவதாலே எந்தப் பலனையும் அவர்கள் பெற்றுவிட முடியாது. மாறாக, நாட்டிலே பல்வேறு பிரச்னைகளுக்குப் பரிகாரம் காண்பதற்குப் பதிலாகப் பல்வேறு பிரச்னைகளை உருவாக்குவதற்குத்தான் இது பயன்படுகிறது. ஆகவே, அப்படிப்பட்ட சூழ்நிலைகள் வராமல் இருப்பது நல்லது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால் பல பத்திரிகைகள் ஒரு பாரம்பரியத்தை நல்லபடியே வளர்த்துக் கொண்டு வருகிற நாடாகத் தமிழ்நாடு இருந்து கொண்டிருக்கிறது. அதற்கு மாறாகத் தயவுசெய்து செயல்பட வேண்டாமென்று நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தாற்போல் இப்படிப்பட்ட பிரச்னைகளை, அடிக்கடி அவைக் குறிப்பிலே இருந்து நீக்குபவைகளைப் போட்டுக் கொண்டே வருவது—அதனால் என்ன செய்யப் போகிறார்கள் என்கிற

ஒரு கருத்து வருகிற சூழ்நிலை ஏற்படுமேயானால் நான் நடவடிக்கை எடுக்கவேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்படுகிற துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாக்கப்படுவேன் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன், நான் பத்திரிகையாளர்களிடத்திலே அன்பு கொண்டவன். அவர்கள் நாட்டுக்கு எல்லாச் செய்திகளையும் தர வேண்டுமென்பதிலே நல்ல நம்பிக்கை உடையவன். அந்த வகையிலேதான் இதை வேண்டுகோளாக வைக்கிறேன், இதை வேண்டுகோளாக வைப்பதாலே இதை ஏதோ சாதாரணமாக எடுத்துக் கொள்ளாமல் தயவுசெய்து இதைப் பற்றி தீர ஆலோசித்து இனி மேலாவது இப்படிப்பட்ட சம்பவங்கள் நடக்காமல் பார்த்துக் கொள்ளும்படி பத்திரிகையாளர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

(A) பேரவை ஒத்தி வைப்பது பற்றிய அறிவிப்பு,

DR.K. SOURIRAJAN; Hon.Mr.Speaker, Sir, I want to draw your kind attention to Article 174 of the Constitu ion;

"174(1)--The Govern or shall from time to time summon the Honse or each House of the Legislature af the State io meet at such time and place as he thinks fit...

Article 160(1) of the Cons itution runs as folliws;

168(1)--For every State iherr shall be a Legisjature which shall consist of he Governor.

அப்படி இருக்கிற நேரத்தில், நேற்றையமுன்தினம் தாங்கள் அடுத்த கூட்டம் ஜூலை திங்கள் நடைபெறும், நாள் பின்னர் அறிவிக்கப்படும் என்று பேரவையில் அறிவித்திருக்கிறீர்கள்.

May I re)peetfully supmit to you, Hon.Mr.Speaker, Sir, tha you have ezceeded on the powers conferred on you by the Constitution. If you feel it is wrong, why should you not come forward now aud expunge it, even though it may be rather late?

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; சபை 'ப்ரோரோக்' ஆனால் தான் கவர்னருக்கு அந்த உரிமை வரும். சபையை முடித்து வைத்தோம் என்று அறிவித்தால்தான் மேதகு ஆளுநருடைய ஆணை வருகிறது. அதுவரையில், இந்தச் சபையை வைப்பதும், தள்ளிவைப்பதும், சில தினங்களுக்கு தள்ளி வைப்பதும் மீண்டும் கூட்டுவதும் எல்லாம் இதுவரையிலே, சட்டமன்றப் பேரவைத் தலைவருடைய பொறுப்பிலே தானிருக்கிறது.

DR.K, SOURIRAJAN: May; I submit to you, Sir if you wish to djourn the House, the date must be specified you cannot adjourn e House without mentioning the date. May kindly tell you sir, if you djourn the House.....

(முற்பகல் 10.30)

மாண்புமிகு பேரவைத் தலைவர்; நாள் குறிப்பிடாமல் ஒத்தி வைக்கலாம். திரும்பவும் நானே சம்மன் செய்யலாம். திரும்பவும் அவையைக் கூட்டலாம். விதி 25-ஐ நான் படிக்கிறேன்;

"25. (1) விதி 117-ன் வரம்பிற்குட்பட்டு பொதுவாக இவ் விதிகளில் பேரவை தனது அன்றாட நடவடிக்கைகளை முடித்துக் கொள்ளக் குறித்துள்ள கால அளவில் அல்லது பேரவையினால் அவ் வப்போது நிர்ணயிக்கப்பெறும் கூட்ட முடிவு நேரத்தில் பேரவை யை அக் கூட்டத் தொடரின் அடுத்த நாளைக்குப் பேரவைத் தலைவர் ஒத்தி வைக்க வேண்டும்:" (குறுக்கீடு) "அல்லது நாள் குறிப்பிடாது ஒத்தி வைக்க வேண்டும்;" என்று இருக்கிறது. நாள் குறிப்பிடாது ஒத்தி வைக்க உரிமை எனக்கு இருக்கிறது.

"மேலும் பேரவையின் முன்னுள்ள அலுவல்களின் நிலைமையை கருத்தில் கொண்டு பேரவையில் கருத்தை அறிந்த பின்னர் பேரவை தலைவர் அதே நாளில் பிந்திய ஒரு நேரத்திற்குப் பேரவையை ஒத்தி வைக்கலாம்" என்றும் இருக்கிறது அலுவல் ஆய்வுக் குழுவிலே ஒரு முடிவெடுத்து அந்தக் கருத்துக்களை அறிந்து நான் பின்னொரு நாளைக் குறிப்பிட்டு ஒத்தி வைக்கலாம். ஆகவே தான் நான் ஜூலை திங்கள் என்று அறிவித்தேன்.

திரு துரைமுருகன்: அப்படி என்றால் நீங்கள் தேதியைச் சொல்ல வேண்டும். ஜூலையில் எந்தத் தேதியில் கூடுகிறது என்று சொல்ல வேண்டும்.

DR.K. SOURRAJAN: That means the session is still continuing, This sitting of the House s still continuing, That is what you actually mean by that Sir. want an explanation from you that the Session continues. If you think that the Session is going on continuing on have got every right to adjourn it months together also till six mohtn.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; நாள் குறிப்பிடாமல் ஒத்தி வைக்கிற வரையில் சட்டமன்றம் நீடித்துக் கொண்டே இருக்கிறது என்று பொருள் ப்ரொரோக் என்று சொல்லிவிட்டால் அது இல்லை.

(உ) அமைச்சர் சுற்றுப்பயண விவர அறிவிப்பு

திரு மு. அம்பிகாபதி ; மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒரு முக்கியமான விஷயத்தை உங்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். மாண்புமிகு தமிழக கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம், எம்.ஏ.,பி,டி.,பி.எல்., அவர்களின் சுற்றுப்பயண விவரம்—6-4-1982 செவ்வாய்க்கிழமை காலை சென்னையிலிருந்து புறப்பட்டு, விமானத்தில் புறப்பட்டு....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதில் என்ன விஷயம் என்பதை மட்டும் சொல்லுங்கள். அமைச்சர் சுற்றுப் பயணம் போகக் கூடாது என்று சொல்லுகிறீர்களா?

திரு மு. அம்பிகாபதி ; இது யாருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது என்றால் திரு. வி. வால்மீகி, என்.பி.எல். தெரு, நெற்குப்பை, திருப்பத்தூர் தாலுக்கா, இராமநாதபுரம் டிஸ்டிரிக்ட்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் மறைந்து விட்டார்கள் என்பதைக் குறிப்பிடுவதற்காகச் சொல்லுகிறார்கள். வேண்டுமானால் அந்த அலுவலகத்திலே சொல்லி அந்தத் தவறை நீக்கி விடலாம்; ஏற்பாடு செய்து விடலாம்.

(ஊ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள்.

திரு து, இராசரத்தினம் ; மாண்புமிகு தலைவரவர்களே, நான் ஏற்கனவே, 2-ஆம் தேதி ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். இன்றைக்கு அவை இறுதி நாளாக இருப்பதால் அது எடுத்துக்கொள்ளப்படாமல் விடுபடுமேயானால் அது மிகவும் வருந்தத்தக்கதாக இருக்கும். 22-ஆம் தேதி பட்டாபிராம் கலவரம் காரணமாக மிகுந்த கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. கொட்டகைகள் எரிந்திருக்கின்றன; வைக்கோல் போர்கள் எரிந்திருக்கின்றன. இதுவரையில் சர்க்கார் மூலம் எந்த உபகாரமும் செய்யப்படவில்லை. உபகாரம் செய்யத்தான் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறேன். அதை அருள் கூர்ந்து எடுக்கும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; நீங்கள் கொடுத்தீர்கள். இன்றைக்கு ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொண்டிருக்கிறேன். ஒன்றுதான் எடுக்க முடிந்தது. ஆகவே தான் உங்களுடையது வரவில்லை. வேறு வகையிலே அரசு அதை அணுகும் என்று நம்புகிறேன்.

திரு து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவரவர்களே, சென்னையிலே மக்களிடையே ஏற்பட்டுள்ள ஒரு பீதி குறித்து ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருந்தேன். அதாவது சென்னையில் ரேஷன் கார்டு கொடுப்பதற்காக விவரங்கள் சேகரிப்பவர்கள் வந்து செல்கிறார்கள். ஆனால் பல்வேறு இடங்களில் அப்படிப்பட்ட விவரம் சேகரிப்பவர்கள் செல்வதில்லை என்ற புகார் இருக்கிறது: தொடர்ந்து இருக்கிறது. குறிப்பிட்டுப் புகார் சொன்னால் கூட அந்த இடத்திற்கு வரவில்லை என்று சொல்கிறார்கள். அவர்களுக்குக் கிடைக்கவில்லை என்றால் பழையபடி கார்டு இருப்பவர்களே மனுச் செய்யும் நிலை ஏற்படும். ஆகவே, வராத பதட்ட நிலையைக் கவனிக்க வேண்டும்- அதைப் போக்க அரசுக்கு இயலுமா என்பதுபற்றிக் கேட்பதற்காக ஒத்தி வைப்புத் தீர்மானம்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; ஏற்கனவே சொன்னபடி ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானத்தை இன்றைக்கு எடுத்துக் கொண்டிருக்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் ; மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சென்னையிலுள்ள கீழ்ப்பாக்கம் மெடிகல் காலேஜ் ஆஸ்பத்திரிக்குச் சென்றிருந்தேன். அங்கேயுள்ள ஈ.என்.டி. வார்டிலே நூற்றுக்கணக்கான பேர்கள் ஆஸ்பத்திரியிலே வைத்தியம் செய்து கொள்ள முடியாமல் அவஸ்தைப் படும் நிலைமையை நேரில் பார்த்தேன், ஒரேயொரு டாக்டர் அந்தப் பிரிவிலே வேலை செய்து கொண்டிருந்தார். ஒரு நாளைக்கு 100 பேர்கள், 150 பேர்கள் அவுட்பேஷன்டுகளாக வருகிறார்கள். எனவே, அங்கே இன்னும் இரண்டு டாக்டர்களைப் போஸ்ட் செய்ய வேண்டுமென்பதற்காக அங்கே நடந்த சண்டையை நான் நேரில் பார்த்த காரணத்தால் 30 ஆம் தேதி கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அது இதுவரையில் வரவில்லை. இன்றைக்குக் கடைசி நாளாக இருப்பதால், அதற்குப் பரிகாரம் காண வேண்டுமென்பதால் அதை அவையில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர். எச். வி ஹண்டே: மாண்புமிகு தலைவர அவர்களே. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன கருத்து இன்னும் இரண்டு ஈ.என்.டி.ஸ்பெஷலிஸ்ட்ஸ் வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். என்னிடத்தில் அந்த மனுவைக் கொடுத்திருக்கிறார்கள். நிச்சயமாக அரசாங்கம் கவனிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்திலே விரும்பத் தகாத பல சம்பவங்கள் நடந்தது இந்த அவைக்குத் தெரியும். ஆனால் கடந்த ஐந்தாம் தேதி அன்றைக்கு மீண்டும் இரண்டு ஜாதிகளுக்கிடையே கலவரம் நடந்திருக்கிறது. ஒரு கொலை நடந்திருக்கிறது. பலர் அடிபட்டிருக்கிறார்கள். அது சம்பந்தமாக ஒத்தி வைப்புத் தீர்மானம்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்குப் பல ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் வந்திருக்கின்றன. இந்தக் கூட்டத் தொடர் இன்று ஒருநாள்தான். இன்றைக்கு ஒரு ஒத்திவைப்பு தீர்மானம் எடுத்துக்கொள்ள இருக்கிறேன்.

திரு. எஸ். இராசாராமன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் குடி இருந்து வருகிற, பேரூராட்சியாக இருக்கின்ற திருவையாற்றில் ஒரு மருத்துவமனை இல்லையென்று....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒத்தி வைப்புத் தீர்மானத்தில் வராது. அடுத்தது ஒத்திவைப்புத் தீர்மானம்.

4 ஒத்தி வைப்புத் தீர்மானம்

சென்னை பல்கலைக் கழக 5வது செமஸ்டர் மறு தேர்வு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் டி. மணி என். பழனிவேல், செ. இராமலிங்கம், அ. ரகுமான்கான், ப. பொன்னுரங்கம், என்.வி.என்.சோமு, வி.கிருஷ்ணமூர்த்தி, குமரி அனந்தன், ப.நெடுமாறன், எஸ்.ஆண்டித்தேவர், இ. முத்துராமலிங்கம், எஸ். என் இராமசாமி, கு.பா. பழனியப்பன், ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொர்ணம், ஜே. ஹேமச்சந்திரன், என்.எஸ். வி. சித்தன் ஆகியோர் சென்னைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் மூன்றாம் ஆண்டில் எழுதிய 5-வது செமிஸ்ட்டர் தேர்வினை மாணவர்கள் திரும்ப எழுத வேண்டும் என்று

கோரப்படுவதால் மாணவர்கள் மத்தியில் எழுந்துள்ள நிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி திரு. சொரணம் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சென்னைப் பல்கலைக் கழகத்திலே ஏற்பட்டு இருக்கின்ற ஒரு மோசடியை விவாதிக்க வேண்டிய ஒரு அவசியத்தை மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பில் இங்கே எடுத்துக் கூற விழைகிறேன். இதிலே பிரதானமாக முன் இருப்பது 5வது செமஸ்டர் பரிட்சை எழுதிய மாணவர்களுக்கு ரிசல்ட் வந்து விட்டது. இப்போது, அதாவது 5-வது செமஸ்டர் பரீட்சை எழுதிய பிறகு ஏற்பட்ட தீ விபத்திலே இவைகள் எல்லாம் சேர்ந்து எரிந்து விட்டது. ஆகவே மீண்டும் நீங்கள் பரிட்சை எழுதவேண்டும் என்று அவர்களுக்கு அறிவிப்பு கொடுக்கப் பட்டுள்ளது அப்படி மீண்டும் பரிட்சை எழுவதற்கு பணம் கட்ட வேண்டும் என்று ஒரு அறிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது, இந்தப் பரிட்சை எழுதியபிறகு பல்கலைக்கழகத்திலே ஏற்பட்ட ஒரு நிகழ்ச்சிக்கு மாணவர்களை பொறுப்பாக்க இப்படி செய்வது சரிதானா என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இந்த மோசடியைப் பற்றி விரிவாக இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலே ஒரு கட்டுரையும் அந்தத் தீ விபத்து பற்றிய ஒரு படமும் போடப்பட்டிருக்கிறது. பல்கலைக்கழகத்திலே பல மோசடிகள் நடைபெற்றிருக்கிறது. இந்த மோசடிகள் பற்றி செய்தி வெளியிட்ட இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிக்கைக்கு பல்கலைகழகத்திலேயிருந்து ஒரு நோட்டீஸ் போகிறது; இப்படிப்பட்ட தவறான செய்தியை நீங்கள் வெளியிட்டு இருக்கிறீர்கள் அது தவறு, எனவே அதை நீங்கள் மறுத்து ஒரு அறிக்கையை உங்கள் பத்திரிக்கையிலே போட வேண்டும் என்று அவர்களை மிரட்டுகிறார்கள். அதற்கு பத்திரிக்கைக்காரர்களிடம் இருந்து என்ன பதில் வருகிறது என்றால் எங்களிடம் தகுந்த ஆதாரங்கள் இருக்கின்றன, வேண்டுமென்றே மோசடி நடைபெற்றிருக்கிறது. எனவே நாங்கள் அதை நிருபிக்கத் தயார், வா ராஜா வா, கோர்ட்டுக்கு என்று பதில் வருகிறது. ஆகவே பல மோசடிகள் நடைபெற்றிருக்கின்றன. உதாரணத்திற்கு ஒன்றை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன், மாண்புமிகு துணைச் சபாநாயகர் அவர்களே, உங்கள் மூலமாக நம்முடைய கல்வி அமைச்சர் அவர்களுக்குக் கொண்டுவருகிறேன். எப்படிப்

[திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம்] [1982 ஏப்ரல் 7

பட்ட மோசடி என்றால். பல்கலைக்கழகத்திலே இருக்கின்ற பழைய பேப்பர்களை விற்பதிலே கூட மோசடி நடைபெற்றிருக்கிறது. 1800 கிலோ எடையுள்ள பேப்பர்களை போட்டு, அதை 900கிலோ என்றுகூறப்பட்டுள்ளது, மீதியுள்ள 900 கிலோவுக்கான பணம் எல்லாம் மோசடி செய்யப்பட்டிருக்கிறது 1800 கிலோ பேப்பருக்கு பதிலாக 900 கிலோ எடை போடப்பட்டு மோசடி நடை பெற்றிருக்கிறது. எனவே, இவைகளை விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தப் பல்கலைக்கழகத்தில் உள்ள சம்பந்தப்பட்ட எக்ஸிகியூடிவ் என்ஜீனியர் ஒருவர் ஒரு ரிப்போர்ட், கான்பிடென்ஷியலாக எழுதியிருக்கிறார்கள். அப்படி எழுதிய அந்த என்ஜினியரை பல நிர்ப்பந்தங்களுக்கு உள்ளாக்கி அவர் அங்கிருந்து மாற்றப்பட்டிருக்கிறார். இது சம்பந்தமாக பல பிரச்சனைகள் பற்றி விவாதிக்க வேண்டியிருக்கிறது. ஏராளமான ரிக்கார்டுகள் எல்லாம் அங்கே தீயிட்டுக் கொளுத்தப்பட்டிருக்கின்றன. இதிலே இருக்கிற விவகாரம் என்னவென்றால் மார்க் லிஸ்ட் மோசடியில் மாட்டிக்கொள்வோமோ என்று நினைத்து பல ரிக்கார்டுகளை கொளுத்தியிருக்கலாம் என்ற சந்தேகம் வருகிறது.

(முற்பகல் 10.40)

திரு. துரைமுருகன் : சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். துணைத் தலைவரவர்களே, செமஸ்டர் முறையைப் பற்றி முதலிலே சொல்லும்போது 4-வது, 5–வது செமஸ்டர்களை எழுத வேண்டும், அதற்குப் பணம் கட்ட வேண்டுமென்று யூனிவர்சிட்டி தெரிவித்தது. அதன் பிறகு 4-வது, 5—வது செமஸ்டர் பெயில் ஆனவர்கள் 6-வது செமஸ்டர் எழுதலாம் என்று மாற்றி அறிவித்திருக்கிறார்கள். சென்ற மாதம் ஒரு செனட் கூட்டம் நடைபெற்றது. நான் இந்த அவையிலிருந்து அந்த செனட் குழுவிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறேன் என்பதால் நானும் அந்தக் கூட்டத்திற்குச் சென்றிருந்தேன். அங்கே இந்த காகிதங்களைக் கொளுத்தியது பற்றி நான் கிளப்பினேன். இந்துப் பத்திரிகையிலும் அது வெளியாகியிருக்கிறது. வைஸ் சான்சலர் வேஸ்ட் பேப்பரை கொளுத்தினோம் என்று சொன்னார். செமஸ்டரைப் பொறுத்த வரையில் 4—வது, 5-வது செமஸ்டர் ரிசல்ட் இன்னும் வரவில்லை. அதற்கு மறுபடியும் பணம் கட்ட வேண்டுமென்று சொன்னோம். இப்போது பெயிலானவர்கள் மட்டும் பணம் கட்டினால் போதும், மற்றவர்கள் பணம் கட்ட தேவையில்லை; அதைப்பற்றி இப்போது கவலைப்பட வேண்டாம், 6—வது செமஸ்டரை எழுதலாம் என்று அறிவித்திருக்கிறார்கள். மாட்டர் செட்டில்டு. ஆக இந்த விவகாரம் முடிந்துவிட்டது. இன்னும் முடிவு பெறாத நிலையில் நாங்கள் கொடுத்த 25, 26 ஒத்திவைப்புத் தீர்மானங்கள் இருக்கின்றன. அவைகளை எல்லாம் நீங்கள் எடுத்துக்கொள்ளவில்லை. ஆனால் முடிந்துபோன பிரச்சனை பற்றிய ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்திருக்கிறீர்களே, இது சரியா என்று தங்களுடைய தீர்ப்பை எதிர்பார்க்கிறேன்.

1982 ஏப்ரல் 7]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : செட்டில் ஆகிவிட்டால் நாம் அதை எடுக்கத் தேவையில்லை என்று கருதுகிறேன். நம்முடைய அவையின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர் அந்த செனட்டில் உறுப்பினராக இருக்கிறார். அவர் இது செட்டில் ஆகிவிட்டது என்பதால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதாவது சொல்வதாக இருந்தால் சொல்லலாம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சனைபற்றி மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் செனட்டில் உறுப்பினராக இருக்கிற காரணத்தால் தெளிவு பெற்றிருக்கிறார்கள். அந்தத் தெளிவு முறைப்படி கடிதம் மூலம் அமைச்சருக்கும் தரப்பட்டிருக்கும். ஆனால் மற்ற உறுப்பினர்களும் தெளிவு பெற்றிருப்பார்கள் என்று நாம் எண்ண முடியாது. அவர்களுக்குத் தெளிவு ஏற்பட்டிருக்க நியாயம் இல்லை; ஆகவே, அவர்கள் நியாயம் கேட்கிறார்கள். பிரச்சனை அவையிலே எடுக்கப்பட்டுவிட்டதால் முறைப்படி கொண்டுபோய் முடிப்பதுதான் பொருத்தமாக இருக்கும்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பிரச்சனைப்பற்றி மட்டும் பேசினால் நல்லது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சொரணம் அவர்கள் வேறுபல பிரச்சனைகளைப்பற்றி எல்லாம் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அது இதற்குப் பொருத்தமாக இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மன்றத்தினுடைய மற்ற உறுப்பினர்களும் இதுபற்றி தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதால் கருத்தைச் சொல்ல தொடரலாம்.

திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் : துணைத் தலைவர் அவர்களே, நான் இதர பிரச்சனைகளுக்குள் போகவில்லை. ஏற்கெனவே இந்தமாதிரி பல ஊழல்கள் நடைபெற்றிருக்கின்றன என்பதைச் சுட்டிக் காட்டுவதற்காகச் சொன்னேன். நமக்குத் தெரியவேண்டியது இந்த செமஸ்டரில் ஊழல் நடந்திருக்கிறதா இல்லையா என்பது முக்கியம். எதிர்காலத்திலே இப்படிப்பட்ட நிலை ஏற்படாமல் இருக்க என்ன ஏற்பாடு என்பதைப்பற்றி விரிவாகப் பேச வேண்டும். இந்த ஊழல்களைக் கண்டுபிடிக்க ஒரு உயர்நீதிமன்ற நீதிபதியைக் கொண்டு விசாரணை நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும். நீதி விசாரணைக் கமிஷன் நியமிக்கப்பட்டு, அவர்கள் தருகின்ற அறிக்கையின் அடிப்படையிலே இந்த ஊழல்களைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்படி பல்வேறு பிரச்சனைகள் பற்றி விரிவாக விவாதிக்க வேண்டியிருப்பதால் சபையின் இன்றைய அலுவல்களை ஒத்திவைத்து, இதுகுறித்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த 3-ஆம் ஆண்டு பட்டப்படிப்பு மாணவர்கள் 5-வது செமஸ்டர் தேர்வுகளை மீண்டும் எழுதவேண்டும் என்று இப்போது கோரப்பட்டு இருக்கிறார்கள். ஏற்கனவே 4-வது செமஸ்டர் தேர்வுகளின் முடிவுகள் இன்னும் வெளி வரவில்லை. இதோடு, 5-வது செமஸ்டர் தேர்வு எழுதப்பட்ட மாணவர்களின் விடைத்தாள்கள் தீ வைத்து கொளுத்தப்பட்டு விட்டதாகச் சொல்லப்படுகிறது. 4-வது செமஸ்டர் தேர்வில் வெற்றி பெறாதவர்கள், 5-வது செமஸ்டர் விடைத்தாள்கள் தீயிட்டு கொளுத்தப்பட்டு விட்டதாலும், 6-வது செமஸ்டர் தேர்வு இப்போது எழுதவேண்டி இருப்பதாலும், மூன்று செமஸ்டர் தேர்வுகள் சேர்த்து எழுத வேண்டிய நிலைமையேற்பட்டு இருக்கிறது. அதோடு, 5-வது செமஸ்டர் தேர்வு எழுத வேண்டிய மாணவர்கள் ஏறத்தாழ 40 லட்ச ரூபாய் கட்ட வேண்டிய சூழ்நிலைமை இருக்கிறது. இதனால் மாணவர்கள் இடத்தில் ஏராளமான சுமைகள் இருப்பதால், மாணவர்கள் சரியான முறையில் படிப்பில் கவனம் செலுத்த முடியாத நிலை இருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல், ஜூன் மாதத்தில் பட்டப்படிப்பின் 3-வது ஆண்டு இறுதித் தேர்வு நடைபெறும் என்று சொல்லப்படுகிறது. இதனால் மேல் படிப்பு படிக்க விரும்புகிற மாணவர்கள், தன்னாட்சி பெற்ற கல்லூரிகளுக்கு மேல்படிப்பு படிப்பதற்கான விண்ணப்பங்கள் போடுவதற்கு முடியாத ஒரு குழப்பமான நிலைமையை பல்கலைக்கழகம் ஏற்படுத்தி இருக்கிறது என்பது மிகவும் வருந்தத்தக்கது.

மாணவர்கள் ஏறத்தாழ 40 லட்ச ரூபாய் இன்றையதினம் 5-வது செமஸ்டருக்காகக் கட்ட வேண்டிய நிலைமை இருக்கிறது. பல்கலைக்கழகத்திற்கு கஸ்டோடியனாக இருப்பவர்கள், அதற்கு பொறுப்பு ஏற்று இருப்பவர்கள் விடைத் தாள்களை தீயிட்டு கொளுத்தினார்கள் என்று சொல்லப்படுகிறது. கேரளத்தில் எம். பி. பி. எஸ். தேர்வில் நடைபெற்ற ஊழல்கள் பற்றி விவரங்கள் வந்ததும், சென்னைப் பல்கலைக்கழகத்தில் இப்படி விடைத்தாள்கள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. எனவே இதைக் குறித்து முறையாக உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவர் மூலம் விசாரணை நடத்த வேண்டும். அப்படி விசாரணை நடத்தினால்தான் அங்கேயுள்ள உண்மை அம்பலம் ஆகும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

எஸ். எஸ். எல். சி. வினாத் தாள் வெளியானதற்கு, அதற்குக் கஸ்டோடியனாக இருக்கும் நபர்கள் மீது எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. கடைநிலை ஊழியர்கள் மட்டத்தில் இருப்பவர்கள் மீது தான் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. அப்படிப்பட்ட நடவடிக்கையை இதில் எடுக்காமல், இந்த விடைத்தாள் தீயிடப்படுவதற்கு யார்

யார் காரணமாக இருந்தார்கள் என்பதை அறிந்து அவர்கள்மீது முறையாக நடவடிக்கை எடுக்கவேண்டும். அவர்களைப் பணி நீக்கம் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னைப் பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரையில் ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னால் சென்னைப் பல்கலைக் கழகம் என்று சொன்னால், அதற்கு ஒரு மரியாதையும், கவுரமும் இருந்தது. ஆனால் இந்த ஆட்சி பொறுப்பேற்றபிறகு, நாளுக்கு நாள் சென்னைப் பல்கலைக்கழகத்தின் மரியாதையும், கவுரமும் குறைந்து வருகிறது. சென்னைப் பல்கலைக்கழகத்தின் மரியாதையும், கவுரமும் குறையாத அளவிற்கு காப்பாற்ற வேண்டிய பொறுப்பு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு இருக்கிறது. எனவே, இப்படிப்பட்ட குழப்பமான நிலையைப் பற்றி விரைமாக விவாதிக்க வேண்டியிருப்பதால் இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து, இது குறித்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரவு-பகல் பாராமல் மிக உழைத்துப் படிக்கின்ற மாணவர்கள் உள்ளம் உடைந்து போய் இருக்கும் சூழ்நிலை உருவாகி இருக்கிறது. விளக்கு எரித்துப் படித்த ஏழை மாணவர்கள் விளக்கமாக எழுதிய விடைத்தாள்கள் இன்றைக்கு எரிக்கப்பட்டு இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இங்கேயிருக்கிற மாண்புமிகு உறுப்பினர் அங்கேயும் அங்கம் வகிக்கும் பேறுபெற்று இருப்பதால், விளக்கம் சொல்வதை நாம் கேட்கும் வாய்ப்பு ஏற்பட்டது. கொளுத்தப்பட்டது வேஸ்ட் பேப்பர் தான் என்று சொல்லப்பட்ட விளக்கத்தை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டுமா என்பது நமக்குத் தெரியவில்லை. அதிலே உண்மையிருக்குமானால், தேர்வு எழுதியவர்களின் அந்தத் தேர்வுத் தாள்களையும், அதற்காகப் போடப்பட்ட அந்த மார்க் ஷீட்டுகளையும் பார்வைக்காக வைக்கப்படும் அளவிற்குப் பல்கலைக்கழகம் முன்வருமா?

அதற்காக மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் கேட்டதைப் போல நீதி விசாரணை அல்லது மிக உயர்ந்த இடத்தில் நடுநிலை தவறாமல் நடத்தும் விசாரணை உடனடியாகத் தேவைப் படுகிறது. மாணவச் செல்வங்கள் படித்துவிட்டு, மேல்படிப்பிற்குச் செல்ல முடியாத சூழ்நிலை உருவாக்கப்பட்டு இருக்கிறது. இப்படி பல தவறுகள் நடந்துகொண்டு இருக்கின்றன என்றும் செய்திகள் வந்துகொண்டு இருக்கின்றன. கம்ப்யூட்டரில் கூட பிழைகள் அடிக்கடி வருவதாகத் தகவல்கள் இருக்கின்றன, எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைப் பற்றி விசாரித்து செம்மைப்படுத்த, ஒரு விசாரணைக் கமிஷன் நியமித்து, அதன் அடிப்படையில் பல்கலைக்கழகத்தின் பெயரை முன்னைப் போல்

நிலை நிறுத்துவதற்கு இந்த அரசு முன்வரவேண்டும் என்று கேட்டு, இது குறித்து விரிவாகப்பேசவேண்டியிருப்பதால், அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இது குறித்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டு, முடிக்கிறேன்.

(முற்பகல் 10.50)

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதை தமிழகத்தின் எதிர்கால தலைமுறையினரை பாதிக்கிற மிக முக்கியமான விஷயமாக கருத வேண்டும். இந்த விஷயம் முடிவு அடைந்துவிட்டது என்று மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் சொன்னாலும் கூட, இதிலே பின்னணியிலே ஏற்பட்டிருக்கிற நிகழ்ச்சியைப்பற்றி மற்ற உறுப்பினர்களில் சிலர் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். அவை பற்றி எல்லாம் நம்முடைய அமைச்சர் அவர்கள் நேரிடையாக, தலையிட்டு, இதிலே முழுவதுமாக ஒரு விசாரணையை நடத்த வேண்டும் என்று நான் வற்புறுத்த விரும்புகிறேன். மாணவர்கள் எழுதிய பரீட்சையை மீண்டும் எழுத வேண்டும் என்று சொன்னால், அந்த சங்கடத்திற்கு யார் பொறுப்போ அவர்கள் மீது மிக கடுமையான நடவடிக்கைகளை எடுத்தால் தான், இதுபோன்ற பொறுப்பற்ற போக்கிற்கு நாம் முற்றுப் புள்ளி வைக்க முடியும். அந்த வகையிலே இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தைப் பற்றி முழுவதுமாக விவாதிப்பதற்காக, இந்த அவையை ஒத்தி வைக்க வேண்டும் என்று வற்புறுத்தி என்னுடைய உரையை முடிக்கிறேன்.

திரு. எஸ். ஆண்டித் தேவர் : மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்த அவையிலே ஒரு முக்கியமான பிரச்னையை, இந்த நாட்டின் வருங்கால சந்ததிகளின், இந்த நாட்டை ஆளுகின்ற பொறுப்பில் வரக்கூடியவர்களாக, இந்த நாட்டை உருவாக்குகின்ற பொறுப்பை ஏற்கக் கூடியவர்களாக இருக்கிற மாணவர்களின் பிரச்னையை எடுத்திருக்கிறோம். கல்லூரி மாணவர்கள் பரீட்சை எழுதி அவர்களுடைய விடைத் தாள்கள் எல்லாம் தீ கொளுத்தியதிலே எரிக்கப்பட்டு விட்டது — என்றுதான் நான் கூற முடியும். எரிந்து விட்டது என்று சொன்னால் அது விபத்தாக இருக்கலாம் என்று பொருள்படும். ஆனால் திட்டமிட்டு செய்ததின் விளைவு தான் என்பது என்னுடைய கருத்து. அப்படிச் செய்ததின் விளைவாக, அந்த மாணவர்கள் எல்லாம் 4, 5 வது செமஸ்டரை விட்டு விட்டு 6வது செமஸ்டரை எழுதலாம் என்று சொன்னால் அவர்கள் வேறு செமஸ்டரை எழுதுவது என்பது மட்டும் அல்ல, 4வது 5வது செமஸ்டரை எழுதிய அவர்களுடைய நிலை என்ன ? அவர்களுடைய தகுதி அடிப்படை ஏதாவது வருங்காலத்தில் அளிக்கப்படவிருக்கிறதா இல்லையா என்பது எல்லாம் தெரியவில்லை. அதையெல்லாம் அமைச்சர் அவர்கள் இங்கே தெளிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏனெனில் இப்படிப்பட்ட தவறுகள் நடந்த காரணத்தாலே கேரளத்திலே 5 ஆண்டுகள் படித்த எம். பி, பி. எஸ் மாணவர்கள் கூட தகுதியில்லை என்று அறிவித்திருக்கிறார்கள். அவர்களுக்கு 4வது 5வது செமஸ்டரிலே வெற்றி வாய்ப்பு இருந்தும், அதை இழந்திருக்கிற காரணத்தால், அவர்களுக்கு இன்னின்ன தகுதிகள் எதிர்காலத்தில் அளிக்கப்படும் என்று வாக்குறுதியையாவது அமைச்சர் அவர்கள் தர வேண்டும். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் அதிகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் சொல்லும்போது, நடந்து முடிந்த பழைய பேப்பர்கள் தாம் எரிக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். அப்படி என்றால், 4வது 5வது செமஸ்டர் தாள்களாவது இருக்க வேண்டுமே, அவைகள் இருக்கின்றனவா அல்லது அவைகளும் பழுதாக்கப்பட்டு விட்டனவா என்பதை எல்லாம் அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும். பழைய பேப்பர்கள் விற்பதிலும் வாங்குவதிலும் கூட, மதுரை பல்கலைக் கழகத்திலே 1½ லட்சம் ரூபாய் அளவிற்கு ஊழல்கள் நடைபெற்றதாக ஆடிட்டில் சொல்லப்படுகிறது. இதுபோன்ற பழைய பேப்பர்கள் வாங்குவதிலும் விற்பதிலும் எல்லாப் பல்கலைக் கழகத்திலும் ஊழல் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இவைகளை எல்லாம் கட்டுக்கோப்பில் கொண்டு வந்து கல்லூரி விளாகத்திற்குள்ளாவது அங்கே தான் மாணவர்கள் நேர்மையை கற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் இருக்கிறது. மாணவர்களை எதிர்காலத்தில் நல்லவர்களாக உருவாக்க வேண்டிய நிலை இருக்கிறது. — ஆனால் அங்கேதான் பரீட்சைத் தாள்களுக்கு தீ வைக்கப்படுகிறது. ஆகவே இப்படிப்பட்ட நிலை பரவாமல் இருப்பதற்கு — கல்லூரி பல்கலைக் கழக விளாகத்திற்குள்ளாவது நேர்மையாக நடைபெறுவதற்கு, உரிய வகையில் ஒரு நீதி விசாரணையை நடத்தி வருங்காலத்தில் இப்படிப்பட்ட தவறுகள் நடைபெறாமல் தடுப்பதற்கும், வருங்கால மாணவர்களுக்கு பாதுகாப்புக் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படுத்துவதற்கும், அவர்களுடைய உள்ளங்களிலே இது பற்றி தவறான எண்ணம் ஏற்படாமல் தடுப்பதற்கும், தக்க நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டும். ஆகவே அது குறித்து விரிவாக விவாதிக்க இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்று வற்புறுத்தி அமர்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, பல்வேறு கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்களை ஒட்டி, இந்திய தேசிய காங்கிரஸ கட்சியினுடைய சார்பிலே என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். சென்னை பல்கலைக் கழகம் என்று சொன்னால், ஒரு காலத்தில் - டாக்டர் லட்சுமணசாமி முதலியார் துணை வேந்தராக இருந்த காலத்தில்- உலகப் புகழ் பெற்ற பல்கலைக் கழகங்கள் ஒன்றிரண்டுக்கு, இணையாக சொல்லப்படுகிற தகுதியை தமிழகம் பெற்றிருந்தது. ஆனால்

என்ன காரணத்தினாலோ அண்மைக் காலத்திலே வருகிற செய்திகள் வேதனைக்குரிய செய்திகளாகவும் கண்டிக்கத்தக்க செய்திகளாகவுமே வருகின்றன.

குறிப்பாக எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல் 4, 5 செமஸ்டர்கள் எழுதிய மாணவர்களின் நிலைமை இன்றையதினம் கேள்விக்குறியாக இருக்கின்றது. நான் கூட கேள்விப்படுகிறேன். தொடர்ந்து கல்லூரிகளிலே இந்த செமஸ்டர் தேர்வுகளுக்கான கட்டணங் களைக் கூட வசூலித்திருக்கிறார்கள் என்று. 300 ரூபாய், 500 ரூபாய் அளவுக்குக் கூட கட்டவேண்டிய மிகப் பரிதாபகரமான நிலைமை எழுந்திருக்கின்றது. இது சாதாரண நிகழ்ச்சி அல்ல. இது வேண்டுமென்றே செய்யப்பட்டதா? அல்லது தேர்வு சரியாக எழுதப்படாததன் காரணமாக அதிலே இருந்து தப்பிப்பதற்காக இந்த முறையைக் கையாண்டு இருக்கிறார்களா என்ற பிரச்சினைகள் எல்லாம் எழுப்பப்படுகின்ற காரணத்தாலும் இந்த மாதிரித் தவறுகள் இங்கே மட்டுமல்ல, வேறு எங்கேயும் நிகழ்ந்து விடக்கூடாது. பி. காம். தேர்வுகள் நடந்து முடிந்து ஒரு பகுதியினருக்கு மட்டும் தேர்ச்சி அளிக்கப்பட்டு இன்னொரு பிரிவினருக்கு தேர்ச்சி அளிக்கப்படாத நிலைமைகள் எல்லாம் ஏற்பட்டு அவை நீதிமன்றத்திலே இருந்து வருகின்றன. எனவே அவற்றின் உள்ளே செல்வதற்கு நான் விரும்பவில்லை.

ஆனால் இதுபோன்ற நிகழ்ச்சிகள் எல்லாம் நடைபெறக் கூடாது என்பதற்காகவும் நடைபெற்ற நிகழ்ச்சியிலே சம்பந்தப் பட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதாலும் இதன் காரணமாக இந்தப் பிரச்சினைக்கு ஒரு பெரிய விசாரணையை நடத்தி நல்ல தீர்வினை ஏற்படுத்தவேண்டும் என்பதாலும் மேலும் இது சம்பந்தமாக பல்வேறு ஊழல்கள் நடைபெற்றதாகப் பேசப்படுவதால் அதைப்பற்றி விரிவாகப் பேச வேண்டி இருப்பதாலும் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்குமாறு வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னைப் பல்கலைக் கழகத்தில் இணைந்துள்ள 110 கல்லூரிகளுக்கு பட்டப்படிப்பு மற்றும் முதுநிலை வகுப்புகளுக்கு பருவத் தேர்வுகள் நடத்த வேண்டி யுள்ளது. ஒவ்வொரு ஆண்டிலும் இரண்டு பருவத் தேர்வுகள் நடத்த வேண்டியுள்ளது. ஒவ்வொரு பருவத்திற்கும் 90 வேலை நாட்களே உள்ளன. முதலாவது பருவம் ஜூலை மாதத்தில் தொடங்கி அக்டோபர் மாதத்தில் முடிவடைகிறது. தேர்வுகள் நவம்பர் மாதத்தில் நடைபெறுகின்றன. இரண்டாவது பருவம் டிசம்பர் மாதத்தில் தொடங்கி மார்ச் மாதத்தில் முடிவடைகிறது. தேர்வுகள் அனைத்தும் ஏப்ரல் மாதத்தில் நடைபெற உள்ளன. இளங்கலை மற்றும் பட்டப்படிப்புக்கள் மூன்று ஆண்டுகள் அல்லது ஆறு பருவங்கள்.

முதுகலைப் பட்டப் படிப்பு இரண்டு ஆண்டுகள் அதாவது நான்கு பருவங்களைக் கொண்டவையாகும். முந்திய பருவத் தேர்வுகளில் வெற்றிபெறாத மாணவர்கள், அடுத்த பருவத்துக்குச் செல்லலாம். எனவே, தற்பொழுது ஆறாம் பருவத்தில் படிக்கும் மாணவர்கள், முந்திய பருவத் தேர்வுகளில் சில எழுத வேண்டி யிருக்கலாம். அதே போன்று நான்காம் பருவத்தில் உள்ள மேற்படிப்பு மாணவர்கள் முந்திய பருவங்களில் நிலுவை வைத்து இருக்கலாம்.

சென்னைப் பல்கலைக் கழகம் கடந்த பருவத் தேர்வுகளை 1981 நவம்பர்—டிசம்பர் மாதங்களில் நடத்தியது. இத்தேர்வு களின் முடிவுகள், தேர்வுகள் முடிந்த இரண்டு மாத காலத்திற்குள் அதாவது 1982 பிப்ரவரி மாத இறுதிக்குள் வெளியிட்டிருக்க வேண்டும். ஆனால், முடிவுகள் இன்னும் வெளிபிடப்படவில்லை. சில நடைமுறைக் காரணங்களினால் பல்கலைக் கழகம் குறிப்பிட்ட காலத்திற்குள் தேர்வு முடிவுகளை வெளியிட முடியவில்லை என்று தெரிவித்துள்ளது.

1982, ஏப்ரல்—மே மாதங்களில் நடைபெறவிருக்கும் தேர்வு களுக்குப் பதிவு செய்ய விரும்பும் மாணவர்கள் வெற்றி பெறாத தேர்வுகளுக்கு மீண்டும் தங்களைப் பதிவு செய்துகொள்ள நடந்து முடிந்த தேர்வுகளின் முடிவைத் தெரிந்துகொள்ள விரும்புகிறார்கள் தேர்வு முடிவுகள் வெளியிடுவதில் ஏற்பட்ட காலதாமதத்தின் காரணமாக அது தற்போது இயலாது. எனவே 1981, டிசம்பரில் நடந்து முடிந்த தேர்வு முடிவுகளுக்குக் காத்திராமல், எல்லாப் பாடத் தேர்வுகளுக்கும், பதிவுசெய்துகொள்ளுமாறு மாணவர்களை சென்னைப் பல்கலைக் கழகம் கேட்டுக் கொண்டது. ஆனால் மாணவர்களுக்கு அவ்வறிவுரை மனநிறைவு தரவில்லை. காரணம் அவர்கள் எல்லா பாடத் தேர்வுகளுக்கும் கூடுதலான தேர்வுக் கட்டணம் செலுத்த வேண்டியுள்ளது. நிலுவைப் பாடங்கள் சிலவற்றில் அவர்கள் தேர்வு பெற்றிருக்கலாம். மேலும், 1981 டிசம்பர் மாதத் தேர்வில் வெற்றி பெற்றிருக்க முடியும் என்ற திடமான நம்பிக்கை இருந்தும்கூட, அவர்கள் எல்லாப் பாடத் தேர்வுகளுக்கும் தயார் செய்ய வேண்டியுள்ளது.

மாணவர்களின் இவ்வுணர்வுகள் அரசின் கவனத்தை ஈர்த்தன. இது குறித்து கல்வி அமைச்சர், கல்விச் செயலாளர், சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர், பதிவாளர், தேர்வு கட்டுப் பாட்டலுவலர், கல்லூரிக் கல்வி துணை இயக்குநர் ஆகியோர் விவாதித்து எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில், சென்னைப் பல்கலைக் கழகம் கல்லூரி முதல்வர்களுக்கு 27-3-1982 நாளிட்ட சுற்றறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளது. இளங்கலை மற்றும் இளம் அறிவியல் பட்டப்படிப்பு (பி.ஏ., பி.எஸ்.ஸி.) மாணவர் களின் ஐந்தாம் பருவத் தேர்வு தவிர மற்ற பருவத் தேர்வுக்கான விண்ணப்பங்களை மட்டும் மாணவர்களிடமிருந்து பெற்று 8-4-1982 நாளுக்குள் பல்கலைக் கழகத்திற்கு அனுப்புமாறு கல்லூரி

முதல்வர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். 1981 டிசம்பர் திங்களில் நடந்து முடிந்த தேர்வுகளின் முடிவுகள் 1982, ஏப்ரல் திங்கள் இறுதியில் வெளியிடலாம் என்று எதிர்பார்க்கப் படுகிறது. நிலுவையில் உள்ள பாடத் தேர்வுகளுக்கு பதிவுசெய்ய விரும்பும் மாணவர்கள் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்ட நாளி லிருந்து பதினைந்து நாட்களுக்குள் தனியாக விண்ணப்பங்களை அனுப்பலாம். விலையில்லாத பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப் பங்களை 1981, டிசம்பர் மாதத் தேர்வு முடிவுகள் வெளியான பதினைந்து நாட்களுக்குள் பெற்று அனுப்புமாறு கல்லூரி முதல் வர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ள இறுதி நாள் பின்னர் அறிவிக்கப்படும். 1981 டிசம்பர் அதற்கு முன்னர் நடந்த தேர்வுகளில் வெற்றி பெறாத மாணவர்களுக்கென்று எல்லாப் பருவங்களுக்கும் தனியே ஒரு துணைத் தேர்வு நடத்தப்படும். இத் தேர்வினை விரைவில் 1982 ஜூன் திங்களில் துவங்கிட பல்கலைக் கழகம் அனைத்து முயற்சி யினையும் கைக்கொள்ளும். இவையே மேற்குறிப்பிட்ட பல்கலைக் கழகச் சுற்றறிக்கையின் உள்ளடக்கமாகும்.

(முற்பகல் 10-00)

இந்நிலையில் மாணவர்களுக்கு எவ்வித இன்னலும் ஏற்பட வழியில்லை, அவர்கள் எவ்வித பாதிப்புக்கும் உட்படுத்தப்பட வில்லை. அண்மைக் காலங்களில் ஏற்பட்ட நிர்வாக காரணங் களினால், செயல்முறைகளில் காலதாமதம் ஏற்பட்டு விடுகிறது. தேர்வு முடிவுகள் உரிய காலத்தில் பல்கலைக் கழகம் வெளியிட முடியாதது, வருங்காலத்தில் முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும் என்று அரசு ஏற்கனவே பல்கலைக் கழகங்களுக்கு உறுதியாக கூறியுள்ளது. எனவே, அவையை ஒத்திவைக்க வேண்டிய பதட்ட நிலை இதில் ஏதுமில்லை.

இதில் நான் விளக்க வேண்டிய ஒன்று, ஐந்தாவது செமிஸ்டர் பரீட்சை எழுதிய மாணவர்கள் அந்தத் தேர்வு முடிவுகள் வெளி யிடப்படாத நிலையில் அவர்கள் இயல்பாக ஆறாவது செமிஸ்டர் பரீட்சை எழுத இருக்கிறார்கள். ஆறாவது செமிஸ்டர் பரீட்சை எழுதுகிறபோது ஐந்தாவது செமிஸ்டர் பரீட்சையில் தோற்றி ருந்தால், அதில் ஏதாவது பாடங்களில் பெயிலாகியிருந்தால், அதையும் அவர்கள் எழுதுவார்களா, இந்தத் தேர்வு முடிவுகள் வராத காரணத்தால் அவர்கள் எழுதுவதா அல்லது எழுத வேண்டாமா என்ற பிரச்னை இருந்தது. அதற்கு பல்கலைக் கழகத்தில் இருந்தவர்கள் என்ன ஏற்பாடுகள் செய்தார்கள் என்றால் நீங்கள் அதற்கும் பணம்கட்டிவிடுங்கள், அதற்குள் தேர்வு முடிவுகள் வந்தால் நீங்கள் பெயிலகியிருந்தால் எழுதுங்கள், இல்லை யென்றால் எழுத வேண்டாம், பணத்தைத் திருப்பித் தந்துவிடு கிறோம் என்று சொன்னார்கள். அப்படியே நீங்கள் இரண்டாவது தடவை எழுதினாலும் கூட நீங்கள் எதில் அதிகமாக மார்க்ஸ் வாங்கியிருக்கிறீர்களோ அதை எடுத்துக் கொள்கிறோம் என்று அவர்கள் சொன்னார்கள். எப்படியும் தேர்வு முடிவுகள் வரும் என்ற அடிப்படையில்தான் அவர்கள் அந்த யோசனையைச்

சொன்னார்கள். ஆனால் அந்தத் தேர்வு முடிவுகள் வராத நிலையில் பல்வேறு சந்தேகங்களை பல்வேறு தரப்பிலிருந்து ஏற்படுத்தி வந்தார்கள். அதிலே ஒன்றுதான் மேற்குறிப்பிட்ட இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை என்று கருதுகிறேன், அவர்கள் ஒரு வதந்தியை வெளியே சொல்ல ஆரம்பித்தார்கள். அதாவது விடைத் தாள்களுக்கு தீவைத்துவிட்டார்கள் என்று சொன்னார்கள். விடைத்தாள்களுக்கு தீ வைத்துவிட்டால் பிறகு ரிசல்ட் வெளியிட முடியாது. ஆகவே அவர்கள் நேரடியாக நிறுத்திருக்கிறார்கள், நாங்கள் ஆதாரம் இருக்கிறது என்று பதில் சொல்லியிருக்கிறோம். நமக்குத் தேவை ஆதாரம்தானே தவிர அதாரம் தருவோம் என்ற வார்த்தை அல்ல. இப்போதுள்ள நிலை ஐந்தாவது செமிஸ்டர் பரீட்சைத் தேர்வு முடிவுகள் வந்ததற்குப் பிறகு தான் அதை எழுதுவதா வேண்டாமா என்பதைப் பற்றி மாணவர்கள் முடிவு செய்யவேண்டும். அதற்குப் பின்தான் ஒரு தேர்வு வைப்பதாக பல்கலைக் கழகம் முடிவு செய்திருக்கிறது. ஆகவே ஆரம்பத்தில் இருந்த குழப்ப நிலையையும் மாணவர்களுக்கு அவர்கள் எண்ணிக் கொண்டிருந்த கஷ்டங்கள் இப்போது இதை அறிவித்திருக்கிற காரணத்தினால் இல்லை என்பதால் அந்தப் பிரச்னை முடிந்து விடுகிறது. அதைத்தான் திரு. துரைமுருகன் அவர்களும் செனட் உறுப்பினர் என்ற முறையில் எடுத்துச் சொன்னார்கள். எனக்கு தரப்பட்டிருக்கிற விளக்கமும் அதுதான் என்ற அடிப்படையில் இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து இதைப் பற்றி விவாதிக்க வேண்டிய தேவை இல்லை என்று கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சரின் விளக்கத்திற்குப்பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லை யென்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

5. அறிக்கை அளித்தல்

துணை வினாவிற்கு அளித்த விடைக்கான திருத்தம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சட்டப் பேரவை விதி 107(1)-ன் கீழ் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : துணைத் தலைவர் அவர்களே தவறாக மீட்டர் காட்டும் ஆட்டோ ரிக்ஷாக்களைத் தடைசெய்வது குறித்து பேரவை வினா எண். 694ன் தொடர்பாக 30—3—82 அன்று சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. செ. இராமலிங்கம் அவர்கள் ஆட்டோ ரிக்ஷாவின் தற்போதைய குறைந்த பட்சக் கட்டணம் எவ்வளவு என்று வினா எழுப்பினார். அதற்கு பதில் அளிக்கையில் ஆட்டோ ரிக்ஷாவின் குறைந்த பட்ச கட்டணம் இரண்டு ரூபாய் என்று கருதுகிறேன் என்றும், அது பற்றிப் பார்த்த பிறகு நான் மீண்டும் தெளிவாகத் தர விரும்புகிறேன் என்றும் கூறியிருந்தேன்.

[திரு. சு. முத்துசாமி] [1982 ஏப்ரல் 7

அண்மையில் ஏற்படுத்தப்பட்ட பெட்ரோல் விலை உயர்வின் காரணமாக ஆட்டோ ரிக்ஷாவின் ஒரு கிலோ மீட்டருக்கான கட்டணம் 80 காசிலிருந்து 90 காசுகளாக உயர்த்தப்பட்டது. ஆனால் குறைந்தபட்சக் கட்டணத்தில் மாறுதல் ஏதும் ஏற்படுத்தப் படவில்லை. தற்பொழுது ஆட்டோ ரிக்ஷாவின் குறைந்தபட்சக் கட்டணம் ரூ. 1.70 என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

6. அறிவிப்புகள்.

(அ) மேலவைத் தலைவரிடமிருந்து வரப்பெற்ற செய்தி

பயிர்களுக்கு கேடு விளைவிக்கத்தக்க பூச்சிகளையும், நோய்களையும் பற்றிய (திருத்த) சட்ட முன் வடிவு, 1982.

நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும், முறைப் படுத்தலும்) திருத்தம் சட்ட முன்வடிவு, 1982.

பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு, 1982.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை சட்டமன்ற முன்வடிவுகள் திருத்தம் ஏதுமின்றி நிறை வேற்றப் பெற்றதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிட மிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

(1) தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு பயிர்களுக்குக் கேடு விளைவிக்கத்தக்க பூச்சிகளையும் நோய்களையும் பற்றிய (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 65/1981).

(2) தமிழ்நாடு 1982-ஆம் ஆண்டு நகர்ப்புற நிலம் (உச்ச வரம்பு கட்டுதலும், முறைப்படுத்தலும்) திருத்தச் சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 66/1981).

(3) மேலும், தமிழ்நாடு 1982-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி(இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 62 1981) மேலவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, பரிந்துரை எதுவுமின்றி திருப்பியனுப்பப்பட்ட தாகவும், மாண்புமிகு மேலவைத் தலைவரிடமிருந்து செய்தி வரப் பெற்றுள்ளது.

7 கவன ஈர்ப்புகள்.

(அ) மதுரை 'ஆல்பர்ட் விக்டர் பாலம்'

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருவாளர்கள் இரா. தாமரைக்கனி என். எஸ். வி. சித்தன், டி. மணி, ப. நெடுமாறன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கவனத்திற்கு கொண்டு வருவார்

1982 ஏப்ரல் 7]

திரு. இரா. தாமரைக்கனி: துணைத் தலைவர் அவர்களே, ''மதுரை 'ஆல்பர்ட் விக்டர் பாலம்' அபாய நிலையில் இருப்பது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

அறிக்கை.

''ஆல்பர்ட் விக்டர்'' பாலம் மதுரை மாநகராட்சி எல்லையுள் கி.மீ. 440/4 லிருந்து 441 வரை தேசிய நெடுஞ்சாலை 7ல் (நகர்ப் புறம்) அமைந்துள்ளது. இப்பாலம் நல்ல நிலையில் உள்ளது. 1982-ம் வருடம் பிப்ரவரி மாதத்தில் இப்பாலத்திற்கு ரூ. 8,200 செலவில் வண்ணம் (colour washing) அடிக்கப்பட்டது. தவிர 1982-ம் வருடம் மார்ச் மாதத்தில் ரூ. 2,700 செலவில் கைப்பிடி சுவர்களில் சிறு மராமத்து வேலைகள் செய்யப்பட்டன. மேலும் இப்பாலத்தின் கரையோரப்பகுதிகளில் உள்ள களைகள் நீக்கப் பட்டன. ஆகவே பாலம் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. பாலம் பாதிக்கக் கூடிய அபாயம் ஏதுமில்லை. மேலும் இப்பாலத்தின் அருகாமையிலேயே உள்ள தாம்போகியும் நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வருகிறது என்பதை இத்தருணத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் மதுரை வந்த ஒரு தலைமைப் பொறியாளர் அவர்கள் இந்த ஆல்பர்ட் விக்டர் பாலம் கட்டி 100 ஆண்டுகள் ஆகிவிட்டது, அது பலவீனம் அடைந்துள்ளதாக அறிவித்தார்கள். அந்த அறிவிப்பு பத்திரிகைச் செய்தியாக வந்த காரணத்தினால், அந்தப் பாலத்திலே மக்கள் செல்வதற்கு தங்கள் உயிரைப் பணயம் வைத்துச் செல்கிறார்கள். இந்தப் பாலம் பேராபத்திலே இருக் கின்ற காரணத்தினால், பஸ், லாரிகள் செல்வதற்குத் தடை விதித்து, குருவிக்காரன்சாலை பாலம், அரசரடி பைப்பாஸில் உள்ள காமராஜர் பாலம் வழியாகச் செல்வதற்கும், பிளஷர் கார்கள் மட்டும் இந்தப் பாலத்தின் வழியாகச் செல்வதற்கும் அரசு ஆவன செய்யுமா? அது மட்டுமல்ல. இந்த ஆல்பர்ட் விக்டர் பாலம் வழியாக பஸ், லாரிகள் செல்வதற்குத் தடை விதிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இருக்கின்ற அந்தப் பாலம் நல்ல நிலைமையிலே இருந்து கொண்டிருக்கிறது. சமீபத்தில் கூட, பொறியாளர்கள் எல்லாம் சென்று பார்த்துவிட்டு வந்திருக்

கிறார்கள். மோசமாக இருந்தால், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். இருக்கின்ற நிலையில், பெரிய வாகனங்கள் சென்று கொண்டுதான் இருக்கின்றன. அப்படிப்பட்ட அபாயம் அந்தப் பாலத்திற்கு இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரையிலே இருக்கின்ற அந்தப் பாலம், தேசிய நெடுஞ்சாலையிலே இருப்பது மட்டுமல்லாது, வளர்ந்து வருகின்ற மதுரைக்கு வடக்குப் பகுதியிலே இருக்கின்றவர்கள், மதுரையினுடைய தெற்குப் பகுதியோடு தொடர்பு கொள்ளக்கூடிய பாலமாக இருப்பதனால், மக்கள் தினசரி போய் வருகின்ற ஒரு பாலமாக இருப்பதால், இந்தப் பாலத்தைப் பற்றி நாம் எல்லாம் அறியக்கூடிய வகையில் ஒரு செய்தி வந்திருப்பதால்தான், இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறோம். எங்களுக்குக் கிடைத்தச் செய்தி, அந்தப் பாலம் சரியாகப் பராமரிக்கப்படாமல், அதிலே விரிவுகள் இருக்கின்றன என்பது. இன்னும் செடிகள் முளைத்துக் கொண்டிருப்பதாகவும் செய்திகள் வந்த காரணத்தினால்தான், ஒரு பெரிய ஆபத்து மக்களுக்கு நிகழக்கூடாது' அவர்கள் உயிருக்கும், உடைமைக்கும் ஆபத்து ஏற்படக்கூடாது என்பதனால் இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். என்னுடைய நினைவு சரியாக இருக்குமானால் சில ஆண்டுகளுக்குமுன் அந்தப் பாலம் அகலப்படுத்தப்பட்டதாக நினைக்கிறேன். ஆகவே, அரசாங்கம் அங்கே இன்னொரு பாலத்தைக் கட்டுவது பற்றி யோசிக்க வேண்டும் அல்லது இதைப் பற்றி மறு பரிசீலனை செய்து, எந்தவிதமான விபத்துக்களும் ஏற்படாதவாறு, அந்தப் பாலத்தைப் பராமரிக்கக் கூடிய முயற்சியைச் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத்தலைவர் அவர்களே, இருக்கின்ற இந்தப் பாலம் தேசிய நெடுஞ்சாலை 7-ல் இருக்கிறது. ஆகவே, இந்தப் பாலத்தைக் கட்டவேண்டுமென்று சொன்னால், மத்திய அரசினுடைய ஒப்புதல் வேண்டும். மத்திய அரசு பணம் கொடுத்தால், அதைச் செய்கின்ற நிலையிலே நாம் இருக்கிறோம். ஆனால், இருக்கின்ற நிலைமையில் அந்தப் பாலம் நல்ல நிலைமையிலே இருக்கின்றது என்று பொறியாளர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஏற்கனவே ஆல்டர்நேட் ரூபாட் என்று சொல்கிற வகையிலே ஒரு தாம்போகி கூட கீழே இருந்து கொண்டிருக்கிறது. அதுவும் கூட நல்ல நிலையிலேதான் இருந்து கொண்டிருக்கிறது. விரிவுகள் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். விரிவுகள் இருந்தால் கண்டுபிடித்து எங்கெங்கு விரிவுகள் இருக்கின்றனவோ அவைகளை எல்லாம் பார்த்து நடவடிக்கை எடுக்க முடியும். ஆனால் களைகள் மட்டும் ஆங்காங்கு முளைத்திருந்தன. அவைகளும் அகற்றப்பட்டிருக்கின்றன. அதற்காக ஏறத்தாழ 6,000 ரூபாய் வரையில் செலவு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட அபாயம் இருந்தால் அவற்றைக் களைவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

(முற்பகல் 11.10)

திரு. டி. மணி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகரில் இருக்கிற ஆல்பர்ட் விக்டர் பாலம் என்பது அபாயகரமான நிலையில் இருப்பது சம்பந்தமாக ஏற்கனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல்வேறு விளக்கங்களைத் தெரிவித்து இருக்கிறார்கள். ஆனால் விரிசல் ஏற்படும்போது, அதை எந்த அளவு சீர்படுத்த முடியும் என்பது ஒரு பிரச்னை. அதனுடைய பக்க சுவர்களில் ஏதாவது ஏற்பட்டால் அதைச் சீர் செய்ய முடியுமே தவிர, பாலத்தினுடைய முக்கியமான பகுதியில் விரிசல் ஏற்பட்டால் அதைச்சீர்செய்வது மிகவும் சிரமம்; சித்தாந்த அடிப்படையில் சரியாக இருக்குமென்று தெரியவில்லை. அது 100 வருடங்களுக்கு முன்பாக கட்டப்பட்ட பாலம், பழைய பாலம் என்ற முறையிலே, முக்கியமான பாலம் என்ற காரணத்தாலும் மத்திய அரசினுடைய ஒப்புதலைப் பெற்று புதிய பாலம் கட்ட அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, விரிவுகள் இல்லை என்று நான் சொன்னேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர்கள் விரிவுகள் இருப்பதாக வலியுறுத்திச் சொல்கிறார்கள். விரிவுகள் இருப்பதாக தெரிந்திருந்தால் தயவுசெய்து எந்த கண்ணிலே, எந்த இடத்திலே விரிவு இருக்கிறது என்பதைத் தெரிவிக்க வேண்டும். இல்லாமல் நாம் பொதுவாக அபாயத்தை மக்களுக்கு அறிவிப்பதைப் போல, ஒரு எச்சரிக்கையை மக்களுக்குக் கொடுப்பதைப் போல தவறான செய்திகள் வெளியே வந்து விடக் கூடாது என்பதற்காகத்தான் இதை மீண்டும் வலியுறுத்திச் சொல்கிறேன். ஆகவே இருக்கிற பாலம் நல்ல நிலையில் இருக்கிறது. இது ஒரு பழைய பாலம் என்பதை நானும் ஏற்றுக்கொள்கிறேன். பழைய பாலமாக இருந்தாலும் அதனுடைய தரம் நன்றாக இருக்கிறது. குவாலிட்டி கண்ட்ரோல் நல்ல முறையிலே இருப்பதால்தான் உடனடியாக வேறு பாலம் தேவையில்லை என்று தெரிவித்து இருக்கிறார்கள். மோசமான நிலையில் இருக்குமானால் கண்டிப்பாக மத்திய அரசினுடைய ஒப்புதலோடு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, மதுரையிலே உள்ள ஆல்பர்ட் விக்டர் பாலம் நல்ல நிலையிலே இருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். நல்ல நிலையில் இருந்தாலும் கூட அந்தப் பாலத்திற்கு அதிகமாக வயது ஆகிவிட்டது. 100 வயதிற்கு மேலாகி விட்டது. பொதுவாக வயதானவர்களுக்குச் சுமையைக் குறைப்பது இளைஞர்களுடைய கடமை. அந்த வகையிலே இந்தப் பாலத்தினுடைய சுமையைக் குறைப்பதற்கு, மதுரையிலே புட்டுத்தோப்பு. தத்தநேரி பகுதியை இணைக்கும் ஒரு பாலம், பேச்சியம்மன் படித்துறையையும், செல்லூரையும் இணைப்பதற்கு மற்றொரு பாலத்தையும் கட்டுவதன் மூலம் அந்தப் பாலத்தின் சுமை குறையும். நான் சொல்லிய இந்த இணைப்புப் பாலங்கள்

[திரு. ப. நெடுமாறன்] [1982 ஏப்ரல் 7

இரண்டும் என்னுடைய தொகுதியையும் மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் தொகுதியையும் இணைக்கிற பாலங்கள். ஆகவே இந்த இரண்டு பாலங்களைக் கட்டவேண்டுமென்ற கோரிக்கைகள் நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆராய்ந்து பார்த்து ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வயதானவர்களுடைய சுமையை இளைஞர்கள் குறைக்கவேண்டுமென்று சொன்னார்கள். எனக்கிருக்கிற பயமெல்லாம், வயதானவர்கள் எங்கே இளைஞர்களுடைய இடத்தைப் பிடித்து விடுவார்களோ என்ற சந்தேகம்தான் இருந்து கொண்டிருக்கிறது. எனக்கு பக்கத்திலே இருக்கிற அருமை அண்ணன் இராகவானந்தம் அவர்கள் என்னைவிட துடிப்பாக காரியம் ஆற்றிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவேதான் என்னுடைய இடத்தைக் கூட அவர்கள் பிடித்து விடுவாரோ என்பதுதான் எனக்கு இருக்கிற சந்தேகம். அந்தப் பாலத்தைப் பற்றி வயதாகிவிட்டது என்று சொன்னீர்கள். வயதாகி இருந்தால் வாலிபப் பருவத்தை ஏற்படுத்த எந்த வகையிலே வலிவூட்ட வேண்டுமோ அவற்றைக் கொண்டு வருவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் மேலும் இது ஒரு முக்கியமான பாலம். அந்தப் பாலத்தை பொறுத்தவரையில் மிக எச்சரிக்கையாக நெடுஞ் சாலைத் துறையால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ஆ) பி. பார்மசி பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு,
பதவி உயர்வு.

திரு. வி. வி. சுவாமிநாதன் : சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாட்டில் அரசு தனி பார்மசி பட்டப்படிப்புக் கல்லூரி ஏற்படுத்தாமல் எம். பார்மசி போன்ற பட்டப் படிப்பும் துவக்காமல் இருப்பதால் தமிழ்நாட்டில் பி. பார்மசி பட்டம் பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லாததோடு பதவி உயர்வுபெறவும் வழி இல்லாதிருக்கும் நிலைமை குறித்த'' அவசரப்பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது சென்னை மருத்துவக் கல்லூரியில் 25 இடங்களும் மதுரை மருத்துவக் கல்லூரியில் 31 இடங்களும் கொண்ட பி. பார்மசி பட்டப்படிப்பு நடத்தப்பட்டு வருகிறது. மேலும் மதுரை மருத்துவக் கல்லூரியில் 3 இடங்கள் கொண்ட எம். பார்மசி (முதுநிலை பட்டப்படிப்பு) இருந்து வருகிறது. தமிழ்நாட்டில் பார்மசி பட்டப் படிப்பிற்கென அரசு தனிக்கல்லூரி ஒன்றை ஏற்படுத்தாததினால், பி. பார்மசி பட்டம் பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லையென்றோ பதவி உயர்வு பெறவும் வழி இல்லையென்றோ கூறுவதற்கு இடம் இல்லை.

1982 ஏப்ரல் 7]

திரு வி வி. சுவாமிநாதன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர்அவர்களே, மராட்டிய மாநிலம் குஜராத்மாநிலம் ஆகியவற்றை ஒப்பிடுகிறபொழுது மருந்து உற்பத்தி செய்கிற தொழிற்சாலைகள் தமிழ்நாட்டில மிகமிகக் குறைவாகும். 10, 15 ஆண்டுகளுக்கு முன்பு பி. பார்மசி வகுப்பு துவக்கப்பட்ட பல்வேறு மாநிலங்களில், குறிப்பாக, பஞ்சாபில் உள்ள சண்டிகாரிலும், ஆந்திராவிலுள்ள வால்டேரிலும், கர்நாடகத்தில் உள்ள பெங்களூரிலும். இராஜஸ்தானிலுள்ள பிளனியிலும், உத்தரப் பிரதேசத்தில் உள்ள பெனாரசிலும், மத்திய பிரதேசத்திலுள்ள சாகரிலும், மராட்டியத்தில் நாக்பூரிலும்கூட, தனி பி. பார்மசி கல்லூரி ஆரம்பித்து எம். பார்மசி வகுப்புகள் துவக்கப்பட்டிருக்கின்றன. அது மாத்திரமல்லாமல், 6 வருடங்களுக்கு முன்பு துவக்கப்பட்ட கோவாவிலும், பம்பாயிலே கலினாவிலும் எம். பார்மசி பட்டப் படிப்புக்காகக் கல்லூரி துவக்கப்பட்டிருக்கிறது. கால் நூற்றாண்டுக்கு மேலாகிறது இங்கு பி. பார்மசி வகுப்புகள் துவக்கப்பட்டு. குறிப்பாக, தமிழ்நாட்டின் தலைநகரில்தான் மருந்து உற்பத்தி செய்கிற தொழிற்சாலைகள் இருக்கின்றன. அந்தச் சூழ்நிலையை உத்தேசித்து, எம். பார்மசி பாடத்திட்டங்களையும் வகுப்புகளையும் மெட்ராஸ் மெடிக்கல் காலேஜில் நடத்த சென்னைப் பல்கலைக் கழகம் அனுமதித்திருக்கிறதா? அப்படி அனுமதி அளித்தும் நடத்த முடியாமைக்கு என்ன காரணம் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மேல்பட்டப் படிப்புக் கல்லூரி ஒன்று இல்லையென்றுதான் சொன்னேன். எம். எம். சி. யிலே இப்பொழுது பி. பார்மசி வகுப்பு நடந்து வருகிறது. அந்த பி. பார்மசியை எம். பார்மசியாக உயர்த்தும் உத்தேசம் அரசாங்கத்திற்கு இருக்கிறது. அதற்காக நான் சில முறைகளை எல்லாம் வகுத்து, ஆணையிடுவதற்கு முன்பாக, இன்ஃப்ராஸ்டிரக்ச்சர் என்று சொல்லக்கூடிய பேசிக்காக என்ன என்ன தேவைப்படுகிறதோ, அவைகளை எல்லாம் ஏற்படுத்தி அந்தக் குறிப்புகளை சென்னை பல்கலைக் கழகத்திற்கு அனுப்ப இருக்கிறோம். அதை அனுப்பிய பிறகு அவர்களுடைய ஒப்புதல் வாங்கி, நிச்சயமாகத் துவக்கக்கூடிய ஒரு உத்தேசம் இருக்கிறது. அதை மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் அவர்கள் ஏற்கனவே ஒரு கூட்டத்தில் சொன்னார்கள். அப்பொழுது நாம் வாக்குறுதி கொடுத்தோம், உடனடியாகத் துவங்க ஏற்பாடு செய்கிறோம் என்று. அந்த வாக்குறுதி நிச்சயமாகக் காப்பாற்றப்படும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எம் பார்மசி பட்டப் படிப்பில்லாததால் தமிழ்நாட்டில் மதுரையில் மட்டும் 3 இடங்கள் இருப்பதாகச் சொன்னார்கள். அது தனியாரால் துவங்கப்பட்ட கல்லூரி.

அங்கு வைத்திருக்கிற 3 இடங்கள் கூட அந்தக் கல்லூரியில் வேலை செய்பவர்களுக்கு மாத்திரம் என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, தனிப்பட்ட மாணவர்கள் அங்கு படிக்க முடியாது. குறிப்பாக, ஏழைகள் எம். பார்மசி படிக்க முடியாது. இதனால் செல்வம் உள்ளவர்கள் பிற மாநிலங்களுக்குச் சென்று எம். பார்மசி படிக்கிறார்கள். மருந்து தொழிற்சாலைகளில் எம். பார்மசி பட்டம் தேவை என்று வைத்திருப்பதால், பிற மாநிலங்களில் எம். பார்மசி படித்த பட்டதாரிகள் இங்கு வருகிறார்கள்.

அமைச்சர் அவர்கள் வேலையில்லாத் திண்டாட்டமோ அல்லது பதவி உயர்வு இல்லையென்ற பிரச்சினையோ இல்லையென்று சொன்னார்கள். தமிழ் நாட்டில் டிரக் இன்ஸ்பெக்டர்களாக இருப்பவர்கள் அசிஸ்டெண்ட் டிரக் கன்ட்ரோலர்கள் பதவி பெறுவதற்கு எம். பார்மசி குறைந்தபட்சத் தகுதியாகும். ஆகவே, எம். பார்மசி பாடத்தை, புகழ்பெற்ற தமிழ்நாட்டில் துவக்குவதற்கு விரைவில் அரசு முன்வருமா என்று தங்கள் மூலம் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்ன மாதிரியாக அதைச் செய்ய இருக்கிறோம். இந்தக் குறைகூட என்னிடத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. நீண்டகாலமாக எம். பார்மசி தேவைப்படுகிறது என்பதை நானும் உணர்ந்திருக்கிறேன். ஆகவே, வெகு விரைவில் துவக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) சம்பளம் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு : தமிழ்நாடு 1982-ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 33/1982 ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

அச்சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டுமென்று மாண்புமிகு பேரவை முன்னவர் கோருவார்.

8. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

அ சம்பளம் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1982.

திரு. அ. ரகுமான்கான் : பாயின்ட் ஆஃப் ஆர்டர், மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, கலெக்டிவ் ரெஸ்பான்சிபிலிட்டி உண்டு என்பதை நான் அறிவேன். முதலமைச்சர் அவர்கள்தான் இதை பிரேரேபிக்க வேண்டுமென்று அல்ல. கலெக்டிவ் ரெஸ்பான்சிபிலிட்டி உண்டு, முன்னவர் அவர்களும் பிரேரேபிக்கலாம். ஆனால், இதிலே நடைபெறுகின்ற விவாதங்கள், கருத்துக்கள்—ஏற்கனவே முதலமைச்சர் அவர்கள் ஐ. ஜி. மாணிக்கம் விவகாரத்தில் மறுத்திருக்கிறார்கள். நான் இல்லாதபொழுது அமைச்சர்கள் தவறான கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள் என்று செய்தி நீக்கப்பட்டு பிரச்னையாகியிருக்கிறது இப்பொழுது முதல்வர் அவர்களை நீங்கள் சொல்கின்ற கருத்துக்களும் மற்றவைகளும் கட்டுப்படுத்துமா? ஏனென்றால், அவர் கையெழுத்திட்டுதான் இந்த மசோதா வருகிறது. எனவே விளக்கம் தேவை.

(முற்பகல் 11-20)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலமைச்சருக்குப் பதிலாக இன்னொரு அமைச்சர்—கூட்டுப்பொறுப்பு என்ற வகையிலே விவாதிக்கலாம். ஆகவே அந்த அடிப்படையிலே இந்த மசோதா மாண்புமிகு முதல் அமைச்சர் பெயராலே இடம் பெற்றும், நான் அவை முன்னவர் என்ற முறையில் கொண்டு வருகிறேன், ஆகவே எந்த நிலைமையும் ஏற்படாது. ஆகவே நான் எதைச் சொன்னாலும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ஒத்துக் கொள்வார்கள் என்ற தைரியத்திலேயும் உறுதிப்பாட்டின் பேரிலேயும் நான் விளக்கம் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனவே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"தமிழ்நாடு 1982-ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு * சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத் அவர்களே, தமிழ்நாடு 1982-ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் 2-வது திருத்த சட்டம், இங்கே அவை முன்னவர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டு சட்ட மன்றத்தினுடைய உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள், அமைச்சர்கள் அதைப்போலவே எதிர்க் கட்சித் தலைவர், மேலவைத் தலைவர், சட்டப் பேரவைத் தலைவர், இவர்களுக்கு எல்லாம் சம்பளம் வழங்குகின்ற விதத்திலே, பேரவை உறுப்பினர்களுக்கு தொலைபேசிக் கட்டணத்தை உயர்த்துகின்ற முறையிலே ரயில்வே கூப்பன்களுடைய எண்ணிக்கையை அதிகப்படுத்துகின்ற விதத்திலே, பஸ்களிலே உதவியாளர்

* 1982 ஏப்ரல் 5-ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

களை அழைத்துக் கொண்டு பயணம் செய்கின்ற விதத்திலே இந்தச் சட்டத்திருத்தம் ஏற்கனவே நாவலர் அவர்களால் அறிவிக்கப்பட்டு இந்த அறிவிப்புகள் சட்ட வடிவம் பெறுகின்ற முறையிலே இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதிலே திராவிட முன்னேற்றக்கழகத்தின் சார்பாக நான் சொல்ல விரும்புகின்ற கருத்துக்கள் என்னவென்றால், குறிப்பாக, சட்டப் பேரவையினுடைய உறுப்பினர்கள் அத்தனைபேரும் வசதி படைத்தவர்கள் என்ற முடிவிற்கு வந்துவிட முடியாது. இதிலே வசதி இல்லாதவர்களும் இருக்கலாம். ஆனால் ஜனநாயகத்திலே பேரறிஞர் அண்ணா அவர்கள் அரசியல் வாழ்விற்கு வந்ததற்குப் பின்னாலே, இந்த அரசியல் வாழ்விற்கு ஏழை எளியவர்கள், வசதியற்றவர்கள் கூட வருகின்ற வாய்ப்பை உருவாக்கினார்கள். அந்த அடிப்படையிலே சாதாரண வசதியைப் படைத்தவர்கள் கூட பேரவையின் உறுப்பினர்களாக இங்கே வர வாய்ப்பு இருக்கிறது. இன்றைக்கு நாட்டிலே ஏற்பட்டிருக்கின்ற விலைவாசி போன்ற பல்வேறு பிரச்சனைகளால் இன்றைக்கு நாளும் பாதித்துக்கொண்டிருக்கின்ற காரணத்தாலே, சட்டப் பேரவையில் உறுப்பினர்களாக உள்ளவர்கள், சராசரி மனிதர்கள் செய்யும் செலவினைக் காட்டிலும் அதிகமாக சந்திக்கவேண்டிய வாய்ப்பு இருக்கின்ற காரணத்தால், இந்தச் சலுகைகளை அவர்களுக்கு இன்னும் அதிகமாகத் தரவேண்டுமென்று நான் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். ஏன் என்றால் நாடாளுமன்ற உறுப்பினர்களை ஒப்பிடுகின்றபோது, இந்தச் சலுகைகள் பெரிய சலுகைகள் அல்ல. மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான் போன்ற மாநிலங்களை ஒப்பிடுகின்றபோது இங்கே தரப்பட்டிருக்கின்ற சலுகைகள் பெரிய சலுகைகள் அல்ல. ஆகவே இன்னும் பல்வேறு சலுகைகள் தரவேண்டும். காரணம், ஏற்கனவே நான் சொல்லியதைப் போல, ஏழை எளிய நடுத்தர வர்கத்தினுடைய பிரதிநிதிகள் இங்கே ஏராளமாக இருக்கிறார்கள், ஆனால் அதே நேரத்தில் நான் இன்னொன்றையும் நினைவுபடுத்த விரும்புகிறேன். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்கள் நிலைமையை இங்கே கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இங்கே இருப்பவர்கள் எல்லாருமே ஒரு நாள் மாஜியாக வேண்டியவர்கள். என்னதான் தொடர்ந்து இருந்தாலும் ஒரு நாள் மாஜிதான், ஒரு முன்னாள்தான். ஆகையினால் இன்றைக்கு இருக்கக்கூடிய முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் பஸ்ஸிலே பயணம் செய்ய முடியாத நிலைமை இருக்கிறது. எனவே அவர்களுக்கும் வாய்ப்புத் தருகின்ற முறையிலே முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் பஸ்ஸிலே செல்ல அனுமதி அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல் நான் இன்னொன்றையும் இந்த மன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். பதவிகளைப் பொறுத்த வரையில் இந்தப் பதவி போனபிறகு, காலம் முடிந்த பிறகு, வெளியே இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் வழக்கறிஞராக வரலாம் அல்லது வேறு ஏதாவது ஒரு பதவியில் வரலாம். அவர் அரசாங்கத்தின் மற்றத் துறைகளில் ஏதாவது ஒன்றில் பணியாற்றி, மாதம் 500 ரூபாய்

சம்பளம் பெற்றால் அவருக்குப் பென்ஷன் கிடையாது என்று சொல்வது எந்தவகையிலும் சரியல்ல. அவர் அப்படிப் பணியாற்றி மாதம் 450 ரூபாய் சம்பளம் பெறுகிறார் என்றால் அவருக்கு 500 ரூபாய் பென்ஷனில் அதைக் கழித்துவிட்டு, 50 ரூபாய்தான் பென்ஷன் என்று சொல்வது நியாயம் இல்லை.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை ஒழித்து இந்தியாவுக்கு விடுதலை வாங்கித்தந்த போராட்ட வீரர்களுக்கு அந்தத் தியாகிகளுக்குப் பொலிட்டிக்கல் பென்ஷன் என்ற முறையிலே வழங்குகிறோம். அவர்கள் எந்தப் பதவியில் இருந்தாலும், எவ்வளவு சம்பளம் வாங்கினாலும், எங்கே பணியாற்றினாலும், எந்த நிறுவனத்தில் பணியாற்றினாலும் அதை எல்லாம் பார்க்காமல் எப்படி அவர்களுக்கு மானியம் அல்லது பென்ஷன் வழங்கப்படுகிறதோ அதைப்போல முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களும் எங்கே பணியாற்றினாலும், எவ்வளவு சம்பளம் வாங்கினாலும், எந்தப் பணியில் அல்லது பதவியில் இருந்தாலும் அதைப் பார்க்காமல் அவர்களுக்கு முழு பென்ஷனும் கொடுக்கப்பட வேண்டும். அவர்கள் வேறு பதவியில் இருக்கிறார்களா இல்லையா என்று பார்க்காமல் எல்லோருக்கும் முழு பென்ஷன் அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு பிரச்சனை. இங்கே நாம் உள்ளே உட்கார்ந்து பேசுகிறோம். ஆனால் வெளியிலே இலட்சோப லட்சம் மக்கள், வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிற மக்கள், குடிசைவாழ் மக்கள், என். ஜி. ஓக்கள், தொழிலாளர்கள், ஓட்டல் தொழிலாளர்கள், பீடித் தொழிலாளர்கள், இன்றைக்கு அரசாங்கத்தின் பல்வேறு நிறுவனங்களில் தற்காலிகமாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிற ஊழியர்கள், கட்டடத் தொழிலாளர்கள் ஆகியோர்களுடைய உள்ளங்களிலே இன்றைக்கு பெரிய குமுறல்கள் இருந்து கொண்டிருக்கின்றன. இந்தப் பேரவையிலே இருக்கிற அமைச்சர்கள் சம்பளத்தை உயர்த்திக் கொள்கிறார்கள், உறுப்பினர்கள் சம்பளத்தை உயர்த்திக் கொள்கிறார்கள், பேரவைத் தலைவர் சம்பளத்தை உயர்த்திக் கொள்கிறார். ஆனால் நம்முடைய வாழ்க்கைத்தரம் உயர வழியில்லையே, நமக்கு சம்பளம் உயரவில்லையே, போனஸ் கிடைக்கவில்லையே என்ற கேள்விகள் அவர்கள் உள்ளத்திலே பிறக்காமல் இல்லை. அந்தப்பிரச்சனைகள் இன்றைக்குத் தீர்க்கப்பட வேண்டும்.

மாபெரும் புரட்சித் தலைவர் லெனின் சொன்னார். நான் கிரம்லின் மாளிகையில் இருந்தாலும் சைபீரியா பாலைவனத்தைப் பார்க்கிறேன் என்று சொன்னார். அதைப்போல நாம் ஏழை எளிய மக்களுடைய பிரச்சனைகளைக் கவனிக்க வேண்டும்.

இன்றைக்கு நம்முடைய மாநிலத்தில் அரசாங்க ஊழியர்களுக்கு போனஸ் இல்லை. மாநில சுயாட்சி பற்றி இன்றைக்குப் பேசுகிறோம். இதே அதிகாரம்தான் ஆந்திராவுக்கும் இருக்கிறது,

கர்நாடகத்திற்கும் இருக்கிறது. இன்றைக்கு அங்கே எல்லாம் என். ஜி. ஓக்களுக்கு போனஸ் கொடுக்கிறார்கள். அதேமாதிரி ஏன் நம்முடைய என். ஜி. ஒக்களுக்கும் கொடுக்கக் கூடாது?

தேர்தல் காலத்திலே நீங்கள் பல வாக்குறுதிகளைக் கொடுத்தீர்கள். என். ஜி. ஓ-க்களுக்கு குடும்ப நல ஊதியம் 10,000 ரூபாய் கொடுப்போம் என்று சொன்னீர்கள். ஆனால் இதுவரையில் தரப்படவில்லை. மத்திய அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படியை செப்டம்பரிலிருந்து கொடுத்தார்கள். நீங்கள் நவம்பர் மாதத்திலிருந்துதான் கொடுத்திருக்கிறீர்கள். அதனால் அரசாங்க ஊழியர்கள் எவ்வளவு இழப்புக்கு ஆளாகிறார்கள் என்பதை நீங்கள் நினைத்துப் பார்க்க வேண்டும்.

அதைப்போல ஓட்டல் தொழிலாளர்களுக்கு இன்றைக்கு கர்நாடக மாநிலத்தில் இருப்பதைவிடக் குறைந்த சம்பளம்தான் இங்கே இருக்கிறது. அதனால் அவர்கள் கோட்டையை நோக்கி ஊர்வலம் வருகிறார்கள். அந்தத் தொழிலாளர்களுடைய சம்பளம் உயர்த்தப்படவில்லை.

அதைப்போல கொத்தனார்கள் பலர் இன்றைக்கு சிறையிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் என்ன கேட்கிறார்கள்? பனை மரம் ஏறும் தொழிலாளி இறந்து போனால் அவனுடைய குடும்பம் அழிந்து போய்விடக்கூடாது என்று சொல்லி, அவனுடைய குடும்பத்திற்கு 10,000 ரூபாய் கொடுக்கப்படுகிறது. அரசாங்க ஊழியர் ஒருவர் இறந்து போனால் அவருடைய குடும்பம் நடுத்தெருவில் நிற்கக்கூடாது என்பதற்காக அவருடைய குடும்பத்திற்கு 10,000 ரூபாய் கொடுக்கப்படுகிறது. அதே நேரத்தில் ஆயிரக்கணக்கான கட்டிடங்களில் வேலை செய்கிற கொத்தனார்களுக்கு இந்த உதவித் தொகை வழங்கப்படவில்லை. கட்டிட வேலை செய்யும் கொத்தனார் இறந்து போனால் இன்றைக்கு அவருடைய குடும்பம் நடுத்தெருவிலேதான் நிற்க வேண்டும். ஆகவே, பனைமரத் தொழிலாளிக்கு, அரசாங்க ஊழியருக்கு, அவர்களுடைய குடும்பத்திற்கு 10,000 ரூபாய் நிதி உதவி அளிப்பதைப்போல கொத்தனார் குடும்பத்திற்கும் 10,000 ரூபாய் அளிக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : துணைத் தலைவரவர்களே, இப்போதே கட்டிடத் தொழிலாளர் குடும்பங்களுக்கு மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் குறிப்பிடுவதைப் போல நஷ்டயீடு கொடுக்கலாம். அதற்குச் சட்டம் இருக்கிறது. ஓர்க்மென் காம்பன்சேஷன் ஆக்ட் இருக்கிறது. அது மட்டுமல்ல. மத்திய அரசு கட்டிடத் தொழிலாளர்களுக்கு என்று ஒரு சட்டம் கொண்டுவர இருக்கிறது. அவர்களுக்கு இழப்பீட்டுத் தொகை கொடுக்க ஒரு நல்ல சட்டத்தைக் கொண்டுவர இருக்கிறார்கள். அதுவரை நாம் காத்திருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம்.

—

திரு. அ. ரகுமான்கான் : அவர்களுக்கு என்று கொண்டு வந்திருக்கிற சட்டங்களிலே எல்லாம் எவ்வளவு சக்தி இருக்கிறது என்பது பற்றி லேபர் மானியத்திலே நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். நடைமுறைப்படுத்த முடியாத சட்டம் இருந்தால் என்ன? செத்தால் என்ன! அவர்களுக்கு இருக்கிற பல்வேறு பிரச்சனைகள்பற்றி இன்றைக்குத் தொழிலாளர்கள் கேட்கிறார்கள். இங்கே நம்முடைய தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கூடச் சொன்னார்கள். சுண்டல் விற்கக்கூடிய சிறுவனுக்குக்கூட கூலி நிர்ணயம் செய்ய ஒரு சட்டம் கொண்டுவரப்படும் என்று சொன்னார்கள். நான் கிண்டலாக சொல்லவில்லை. அந்தச் சட்டம் இன்னும் வரவில்லை.

முற்பகல் 11.30

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, " Tamil Nadu Manual Workers Bill " கொண்டு வந்து, அது நிறைவேற்றப்பெற்று, இன்று மாலை மேலவையில் அது விவாதிக்கப்பட இருக்கிறது. அன்றையதினம் நீங்கள் துரதிருஷ்டவசமாக வெளியேறிவிட்டீர்கள், அதுதான் துர்பாக்கியம்.

திரு. அ. ரகுமான்கான் : அப்படிச் சட்டம் கொண்டு வரப்பட்டு இருக்குமானால், உள்ளபடியே அது சுண்டல் விற்பவர்களுக்கு நடைமுறைப்படுத்தப்படுமானால், தாங்கள் தொழிலாளர்கள் மீது அக்கறை உள்ளவர்களாக இருக்கிறீர்கள் என்பதை நான் ஏற்றுக்கொள்வதற்குப் போதுமான காரணமாக இருக்கலாம்.

பல்வேறு தொழிலாளர்கள், என். ஜி. ஓ.க்கள் பல்வேறு கோரிக்கைகளைச் சொல்கிறபோது, பட்ஜெட்டில் நம்முடைய நாவலர் அவர்கள் கூறுகிறார்கள். தொழிலாளர்கள் கோரிக்கைகள் வைக்கிறார்கள், என். ஜி. ஓ.க்கள் கோரிக்கைகள் வைக்கிறார்கள், ஆனால் நிதிநிலைமை சரியில்லை, நல்ல முறையில் நிதிநிலைமை வரட்டும் அப்போது தருகிறோம் என்று அதற்குச் சொல்லியிருக்கிறார்கள்.

ஆனால், — பப்ளிக் எக்ஸ்சக்கர்-மக்கள் செலுத்துகின்ற வரிப்பணம் எவ்வளவு தவறாகப் பயன்படுத்தப்படுகிறது என்று பொறுப்பு வாய்ந்த எதிர்க்கட்சியைச் சேர்ந்தவன் என்ற முறையில் நான் இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவது பொருத்தமுடையதாகும் என்று கருதுகிறேன். ஹெலிகாப்டர் வாங்குவதற்காக 75 லட்ச ரூபாய் செலவிட்டு இருக்கிறார்கள். கிராமப்புற மக்களைச் சந்திப்பதற்காக முதலமைச்சர் அவர்கள் பாதயாத்திரை போகப்போகிறேன் என்று சொன்னதற்குப் பிறகு எதற்காக ஹெலிகாப்டர்? இப்போது ஹெலிகாப்டரில் போகப் போகிறாரா, அல்லது பாத யாத்திரைப் போக போகிறாரா? நான் கான்ட்ராவர்சி பிரச்னைக்குள் போகவிரும்பவில்லை. இன்றைக்கு 75 லட்ச ரூபாய் செலவழித்து ஹெலிகாப்டர்

(திரு. அ. ரகுமான்கான்) [1982 ஏப்ரல் 7

வாங்கி இருக்கிறீர்கள். இந்த ஹெலிகாப்டரில் ஏறி முதலமைச்சர் அவர்கள் எட்டயபுரம் பாரதிவிழாவிற்குச் செல்வதாக இருந்தது என்பதற்காக எட்டயபுரத்தில் 'ஹெலிபேட்' அமைப்பதற்காக 1 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் செலவழிக்கப்பட்டது. முதலமைச்சர் அங்கே ஹெலிகாப்டரில் போனாரா என்றால், போகவில்லை. ஆனால், நான் கேட்கிறேன், ஹெலிகாப்டர் 75 லட்ச ரூபாய் செலவழித்து வாங்கினீர்கள், எட்டயபுரத்தில் தளம் அமைப்பதற்கு 1 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் செலவழித்து இருக்கிறீர்கள், இப்படி மக்கள் பணம் வீணடிப்பது சரிதானா? தொழிலாளர்கள் வாடுகிறார்கள், ஏழை எளிய மக்கள் வாடுகிறார்கள் என்கிற நேரத்தில் இத்தகைய செலவுகள் தேவைதானா?

அதுமட்டுமல்ல, நான் ஒன்றை நினைவூட்ட விரும்புகிறேன். நம்முடைய மரியாதைக்குரிய நாவலர் அவர்களின் கவனத்திற்கும், துணைச் சபாநாயகர் அவர்களே, உங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். கிராம அதிகாரிகள் 24,000 பேரை ஒரே நாளில் வீட்டுக்குப் போகச் சொன்னீர்கள். அவர்களுக்கு இப்போது சுப்ரீம் கோர்ட் தீர்ப்புப்படி சம்பளம் கொடுக்கப்படுகிறது, அவர்கள் எந்தவிதமான வேலையும் செய்யாமல் சம்பளம் பெற்றுக் கொண்டு இருக்கிறார்கள். அந்த வேலைகளை ஆர்.டி.ஓ அவர்கள் தான் செய்து கொண்டு இருக்கிறார்கள். அவர்களால் சரியான அந்தப் பணியைச் செய்ய முடியவில்லை என்றால், செக்‌ஷன் கிளார்க் வைத்து அந்தப் பணி செய்யப்படுகிறது. அதற்குப் பல லட்சம் செலவாகிறது. இப்படி மக்களின் வரிப்பணம் வீணடிக்கப் படுகிறது.

அதைப்போலவே, மின்சார வாரியத்தில் கார்ட் சிஸ்டம் கொண்டுவந்ததன் காரணமாக 5,000 கேஷியர்கள் வேலை செய்யாமலே சம்பளம் வாங்கிக்கொண்டு இருக்கிறார்கள். கார்ட் சிஸ்டம் கொண்டு வந்ததால் அவர்களுக்கு வேலை இல்லை. சம்பளம் மட்டும் கொடுக்கப்படுகிறது. இப்படி பல லட்சக் கணக்கான ரூபாய் வீணடிக்கப்படுகிறது. ஒரு புறத்திலே, கள்ளுக்கடைகள், சாராயக்கடைகள் திறக்கப்பட்டு இருக்கின்றன. அப்படி திறந்து விட்டபிறகும், மதுவிலக்குச் சட்டத்தை அமல் படுத்துவோம் என்று சொல்லி, குடிகுடியைக்கெடுக்கும் என்று அறிவித்து, மது விலக்குப் பிரச்சாரத்திற்காக அரசு 1981–82 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கியிருக்கும் தொகை எவ்வளவு தெரியுமா? 10 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். யாருடைய பணம்? ஏழை எளிய மக்களின் பணம். இந்தப் பத்து கோடி ரூபாயை எப்படிச் செலவழித்து இருக்கிறீர்கள், எங்கே செலவழித்தீர்கள், கள்ளுக்கடை, சாராயக்கடை எல்லாம் திறந்து விட்ட பின்னாலே, மது விலக்குப் பிரச்சாரத்திற்கு 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்ய வேண்டுமா?

1982 ஏப்ரல் 7] (திரு. அ. ரகுமான்கான்)

அதேபோல், பல்வேறு கமிஷன்கள் போட்டு இருக்கிறீர்கள். நாயுடு கமிஷன் போட்டு இருக்கிறீர்கள், இராமமூர்த்தி கமிஷன் போட்டு இருக்கிறீர்கள், சதாசிவம் கமிஷன் வள்ளியூர் விவசாயிகள் சம்பவம் சம்பந்தமாக, நடராஜன் தலைமையில் திருத்தணியில் இருக்கும் கோவில் தங்கவேல் காணாமல் போனது கண்டுபிடிப்பதற்காக கமிஷன் போட்டீர்கள். காஞ்சி காமகோடி பீடாதிபதி கொடுத்த தங்க வேலைத் திருடியது யார்? இதுவரைக்கும் தெரியவில்லை. நடவடிக்கை உண்டா? அறிக்கை வைக்கப்பட்டதா? சட்டமன்றம் முடியப் போகிறது. இப்படி, மக்கள் வரிப்பணம் லட்சக்கணக்கில் கமிஷன்களுக்காக செலவழிக்கப்பட்டு இருக்கிறது. இது வரைக்கும் அவற்றின்மீது அறிக்கையும் வைக்கப்படவில்லை. சபைக்கும் அது குறித்து அறிவிக்கப்படவில்லை. இந்த வகையில் வரிப்பணம் வீணடிக்கப்படுகிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஒரு ஐ. ஜி.யாக இருந்தது இன்றைக்கு 3 ஐ. ஜி.யாக ஆக்கப்பட்டு, அதற்கு ஒரு டைரக்டர் ஜெனரல் போடப்பட்டு, இப்படி பல லட்சக்கணக்கான ரூபாய் வீணடிக்கப்படுகிறது. பல்வேறு சிப் இன்ஜீனியர்கள் போடப்பட்டு இருக்கிறார்கள். இந்த வகையில் பணம் வீணடிக்கப்படுகிறது. இப்படி பல்வேறு வகைகளில் மக்கள் பணம் வீணடிக்கப்படுகிறது. ஆகவே, நான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிதிப் பற்றாக்குறை என்று சொல்வது, தவறு, முறையல்ல. பட்ஜெட்டின் மூலம் 38 கோடி ரூபாய் வரிபோட்டு இருக்கிறீர்கள், அதேபோல், மல்டி பாயின்ட் சேல்ஸ்டாக்ஸ் மூலம் எவ்வளவு வருமானம் அரசுக்கு வந்து இருக்கிறது? மின்சாரக் கட்டணம் உயர்த்தியதன் மூலம் எவ்வளவு வருமானம் வந்து இருக்கிறது. மதுவிலக்கு ரத்து செய்ததன் மூலமாக—உங்கள் பாஷையில் சொல்லவேண்டுமானால், மதுவிலக்கைத் தளர்த்தியதன் காரணமாக-எவ்வளவு கோடி ரூபாய் வந்திருக்கிறது? இப்படி பல கோடி ரூபாய் பணத்தைப் பெற்றுக்கொண்டுவிட்டு, என். ஜி. ஓ.க்களுக்கு, ஏழை எளிய மக்களுக்கு, சாதாரண மக்களுக்கு, ஏதேனும் செய்யவேண்டும் என்று சொல்கிறபோது நிதிப்பற்றாக்குறை என்று சொல்வது சரியாக இல்லை என்று இங்கே நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

வீட்டுக்கு ஒருவருக்கு வேலை கொடுக்கப்படும் என்கிற திட்டத்தை அமல்படுத்துங்கள்.

பட்டினிச் சாவைத் தடுக்கும் முறையில் 100 ரூ. தருவதாக சொன்னீர்கள். அதை அமல்படுத்துங்கள்.

வேலையில்லாப் பட்டதாரிகளுக்குக் கொடுக்க வேண்டிய நிதியைக் கொடுங்கள்.

கிராமப்புறங்களில் ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான வேலை இல்லாதவர்கள், ஏழை எளியவர்கள் இருக்கிறார்கள். ஒன்றைச் சொல்லி முடிக்கிறேன். சாலை ஓரத்தில் வேலையற்றவர்கள், வேலையற்றவர்களின் உள்ளங்களில் விபரீத எண்ணங்கள், 'வேந்தே, இது காலத்தின் குறி' என்று அண்ணா சொன்னார்களே அதை உங்களுக்குக் காணிக்கையாக்கி, என் உரையை முடிக்கிறேன்.

திரு. கு. ரமணி : மதிப்பிற்குரிய துணைத் தலைவரவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள், பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மேலவைத் தலைவர், துணைத் தலைவர், அமைச்சர்கள் ஆகியவர்களுடைய சம்பளப் பிரச்னையாக இந்தச் சட்டம் வருகிறது.

இதற்கு நேரடியாகச் சம்பந்தப்படாத விஷயமாக இருப்பினும் அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு ஒரு விஷயத்தை நான் கொண்டு வர விரும்புகிறேன். நம்முடைய இந்தச் சட்டமன்றத்தினுடைய வேலைகளைத் திறம்பட நடத்துவதற்காக அன்றாடம் இங்கே போடப்பட்டுக்கொண்டிருக்கும் ஊழியர்களைத் தினக் கூலிகளாகப் பலபேர்கள் இங்கே வைக்கப்பட்டிருப்பது அரசாங்கத்திற்குத் தெரியும். இதைப் பல சந்தர்ப்பங்களில் நாமும் எடுத்துக்காட்டி உள்ளோம். இந்த மாமன்றத்திலேயும் எடுத்துச்சொல்லி உள்ளோம். அவர்களுக்கு நீங்கள் கொடுக்கும் சம்பளங்களை தினக் கூலி என்ற அடிப்படையில் இருப்பதை மாற்றி அவர்களை மாதச் சம்பளக்காரர்களாக ஆக்கி, ஏனென்றால் அவர்கள் நாலாம்தர சிப்பந்திகளாக இருப்பவர்கள் — அவர்களுக்கு கொடுக்கும் தினப்படியைக் கொஞ்சம் உயர்த்திக் கொடுப்பது மிகமிக அவசியமானது. விலைவாசி உயர்வு எல்லோரையும் பாதிக்கிறது என்பதை நாம் அறிந்திருக்கிறோம். நாம் நமக்குத் தேவையானதை இங்கே உட்கார்ந்து சட்டம் போட்டு எடுத்துக் கொள்ளவும் முடிகிறது. அது அவர்களால் முடியாது. ஆகவே, இதையொரு முக்கியமான விஷயமாக அரசாங்கம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

ரொம்பவும் குறைந்த அளவில் — இரண்டு ரூபாய், நான்கு ரூபாய் என்று பேட்டா வாங்கிக்கொண்டு இருக்கின்ற வாச் அண்ட் வார்ட், ஊழியர்கள், அட்டெண்டர்கள், பியூன் போன்ற வேலைகளில் ஈடுபடுகின்றவர்கள், ஸ்வீப்பர் என்று இப்படிப் பலவாறான எடுபிடி வேலைகளிலிருந்து எல்லாவிதமான வேலைகளுக்கும் பயன்படுத்தக்கூடிய அந்த ஊழியர்களை தினக் கூலிகள் என்ற நிலைமையிலிருந்து மாற்றி, மாதச் சம்பளக்காரர்கள் என்று ஆக்கி, இவர்களுக்குக் குறைந்தபட்சம் நான்காம்

தரச் சிப்பந்திகளுக்குக் கிடைக்கும்படியான சம்பளத்தைக் கொடுத்து, நியாயமான பேட்டாவைக் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நமக்கு நாமே ஏற்படுத்திக் கொள்ளக் கூடிய சம்பள உயர்வைப் பொறுத்தவரையில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சம்பந்தப்பட்டவரையிலும் எங்களுடைய அடிப்படைச் சம்பளத்தை நீங்கள் உயர்த்துங்கள் என்று நாங்கள் கேட்கவில்லை. ஆனால் இந்தச் சம்பள உயர்வைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 50 ரூபாயை உயர்த்தியிருக்கிறோம் என்றால் பெரிய சம்பள உயர்வு என்று நாம் சொல்லவில்லை. வேறு சில விஷயங்களைப்பற்றி எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

டெலிபோன் கட்டணம் 350 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இப்பொழுது டெலிபோன் வாடகையையும் நாம்தான்கட்ட வேண்டி இருக்கிறது. மற்றது அரசாங்கம் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை மூன்று மாதங்களுக்கு ஒரு முறை 175 ரூபாய் வாடகைக்கட்டணத்தை அரசு ஏற்றுக்கொண்டு தர ஆரம்பித்துச் சில மாதங்கள் ஆகியிருக்கின்றன. இப்பொழுது இந்த நிலை வந்த பிறகு அது இனிமேல் இருக்காது. டெலிபோன் வாடகை மாதம் 100 ரூபாயாக மத்திய அரசு உயர்த்தியிருக்கிறது. டெலிபோன் காலினுடைய கட்டணமும் அதிகமாக உயர்ந்திருக்கிறது. டிரங்க் கால் 50 கிலோ மீட்டர் என்று கிலோமீட்டர் வைத்துக்கொண்டு டிரங்க் கால் முழுவதும் பயங்கரமான அளவிற்குக் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. அதனுடைய பளு என்பது பில் பே செய்யும்பொழுதுதான் தெரிகிறது. ஆகவே, இந்தப் பணம் போதும், போதாது என்பது அல்ல. இந்த டெலிபோன் கட்டணம் என்ன ஏற்படுமோ அதைச் செலுத்துவதற்கு அரசாங்கமே பொறுப்பெடுத்துக் கொள்ளட்டும். அதிலே டெலிபோனை ஃப்ரீயாக வைத்துக்கொடுக்க வேண்டியது; அதற்கு ஆகக்கூடிய கட்டணம் முழுவதையும் செலுத்த வேண்டியது. டிரங்க் கால் கணக்கு வழக்கு இல்லாமல் போடப்பட்டால் என்ன செய்வது என்ற பிரச்னை வரும். அதற்குப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது போன்று குறிப்பிட்ட கால் என்று அவர்களுக்கு நிர்ணயித்து விடலாம். ஏற்கனவே 3 மாதங்களுக்கு 5,400 கால் என்று நாங்களெல்லாம் பார்லிமென்டிலே இருந்த காலத்தில் இருந்தது. இப்பொழுது 12,000 கால் வருஷத்திற்கு என்று நிர்ணயித்திருக்கிறார்கள். இப்படிக் கால் நிர்ணயித்து விட்டு அப்படிப்பட்ட கட்டுப்பாட்டை உருவாக்கினால் தவறுகள் வராமல் தடுக்க முடியும். டெலிபோனுக்குச் சார்ஜ் கம்மியாக இருந்தாலும் அல்லது அதிகமாக இருந்தாலும் அதை அரசு பொறுப்பேற்றுக் கட்ட வேண்டும் என்ற ஆலோசனையைக் கூற விரும்புகிறேன். டெலிபோன் அலவன்ஸ் என்ற ஒன்றை வாங்கி அதற்குக்கணக்கு காரியம் என்று ஏற்பட வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த பில்லை சர்க்கார் கொடுதது, பாராளுமன்ற

(திரு. கு. ரமணி) [1982 ஏப்ரல் 7

உறுப்பினர்களுக்கு இருப்பதைப்போல டெலிபோனை ஃரியாக வைத்துக் கொடுத்துப் பராமரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11.40)

இரயில் கூப்பன்களைப் பொறுத்தவரையில் 500 ரூபாய் அதிகப்படுத்தி 3,000-க்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஒரு நாள் இரவு படுத்துத் தூங்குவதற்கு இப்பொழுது எட்டு ரூபாய் கேட்கிறார்கள். இனி, சாதாரண மக்கள் இரயில் வண்டியில் ஏறுவதுகூட சாத்தியமில்லை என்ற நிலைமை வந்திருக்கிறது. அதுபோலவே இப்போது கட்டணத்தையும் உயர்த்தி அறிவிக்கப் பட்டிருக்கிறது. ஆகவே இப்போது எங்களுக்குத் தரக்கூடிய இந்த கூப்பன்களை உபயோகித்து நாங்கள் ஏதாவது நிகழ்ச்சிகளின் காரணமாக போக முடியாமல் போய்விடுமானால் அந்தக் கூப்பன்களை திரும்ப சப்மிட் பண்ணி டிபார்ட்மெண்ட்டுக்கு கொண்டு போய் கொடுத்து, ஸ்தலத்திலேயே நாங்கள் போக வில்லை என்பதற்கான சர்டிபிகேட் வாங்கி கொடுத்து, திரும்ப அதன் பயனை பெறச் செய்வதற்கு அதிகமான அளவில் வீணாக அலைய வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அதனால் யாரும் இப்படிப்பட்ட அல்லல்களைப்பட்டு அதை திரும்பப் பெற முன் வரமாட்டார்கள். நான் செய்து பார்த்துவிட்டு இதிலே நிறைய அனுபவங்களைப் பெற்றுதான் சொல்கிறேன். ஆகவே ரெயில் கூப்பன்களுக்குப் பதிலாக, பார்லியமெண்ட் உறுப்பினர்களுக்கு கொடுப்பதைப் போல பாஸாக கொடுத்துவிட்டால் நலமாக இருக்கும். நாங்கள் எந்த இடத்திலிருந்தும், எந்த நேரத்திற்கும் எந்த ரயிலிலும் ஏறிச் செல்வதற்கு இந்த மாகாணத்திற்குள்ளே செல்வதற்கு அது வசதியாக இருக்கும். வெளி மாகாணங்கள் என்றால், நீங்கள் விதிக்கிற கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு பயணம் செய்வதற்கு அதை உதவி செய்யும் வகையில் மாற்றி அமைக்க வேண்டும். அப்படி செய்தால்தான் இதனால் முழு அளவு பயன் பெற முடியும். கூப்பனாக கொடுத்து இப்படிப்பட்ட கஷ்டங் களுக்கு உறுப்பினர்களை ஆளாக்காமல் இருக்க முடியும்.

அதோடு பார்லிமெண்ட் உறுப்பினர்களுக்கு அவர்களுடைய துணைவியாருக்கும் அவர்களுடைய போட்டோ ஒட்டி பாஸ் தந்துவிடுகிறார்கள். அதை அவர்கள் பயன்படுத்திக்கொள்ள வசதியாக இருக்கிறது. இப்போது சட்டமன்ற உறுப்பினர்களும் துணையாக ஒருவரை அழைத்துக்கொண்டு போகலாம் என்று கொண்டு வந்திருக்கிறீர்கள். அதற்கு நன்றி என்றாலும் கூட, அதை பாஸாக வழங்குவதற்கு ஏற்பாடு செய்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல ரெயில் டிக்கெட் புக் செய்வதும் மிகப் பெரிய கஷ்டமான வேலையாக எங்களைப்போன்ற உறுப்பினர்களுக்கு இருக்கிறது. மிக அவசியமான நேரத்தில் டிக்கெட் கிடைக்காது. ஆகவே பார்லியமெண்டில் இருப்பது போல் அதற்கென்று

1982 ஏப்ரல் 7] [திரு. கு. ரமணி]

தனியாக ஒரு பிரிவை வைத்து ரெயில் டிக்கெட்டை புக் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். குறைந்த பட்சம் இந்த சட்டமன்றக் கூட்டம் நடைபெறும் நேரத்திலாவது அப்படிப்பட்ட ஏற்பாடுகளைச் செய்துதரவேண்டும். பாராளுமன்ற உறுப்பினர் களுக்கு பிளேன் டிக்கெட்டைக்கூட புக் செய்து தருகிறார்கள். அப்படிப்பட்ட வசதிகளை ஓரளவுக்காவது எங்களுக்குச் செய்து தந்தால், டிக்கட் புக் பண்ணுவதற்காக ஓடி ஓடி அலைய வேண்டிய அவசியம் எங்களுக்கு ஏற்படாமல் இருக்கும். இப்படிப்பட்ட வசதிகள் எல்லாம் தான் நாங்கள் எங்களுடைய வேலையை திறமை யாகவும் உறுதியாகவும், காலத்தை வீணாக்காத வகையிலேயும் திறம்பட செய்வதற்கு வழி வகுக்கும். அப்படிப்பட்ட முறையில் எங்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று கேட்டு விடை பெறுகிறேன்.

திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் சட்டத்தை திருத்துவதற்கான சட்ட முன்வடிவின் சம்பந்தமாக சில கருத்துக்களை கூறுவதற்கு நான் விரும்புகிறேன்.

முதலாவதாக இந்தச் சட்டத்தில் அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோருடைய ஊதியத்தை உயர்த்தக் கூடிய சில ஏற்பாடுகள் செய்யப்பெற்றிருக்கின்றன. அந்த ஏற்பாடுகளை ஒட்டி, அங்கத்தினர்கள் பேருந்துகளில் பயணம் செய்யக்கூடிய நேரத்தில் துணையாக ஒருவரை கூட அழைத்து செல்லலாம் என்றும், ரெயில் கட்டணத்திற்காக ஏற்கெனவே இருந்த 2,500 ரூபாயை 3,000 ரூபாயாக உயர்த்தியும், அதற்கான முறையிலே மாற்றங்கள் செய்தும் இந்த சட்டமுன்வடிவில் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

அதே மாதிரி ஏற்கெனவே சட்டமன்ற உறுப்பினராக இருந்து அவர்களுக்குக் கிடைத்து வந்த ஓய்வு ஊதியம்—பென்ஷனிலும் சில திருத்தங்கள் இதிலே இணைக்கப்பட்டிருக்கின்றன. சென்ற பிப்ரவரி மாதம் நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத்தில், அரசியல்வாதிகள் — அதாவது தியாகிகளாக இருந்து தியாகிகள் பென்ஷன் பெறக்கூடியவர்களுக்கு, அந்த ஓய்வு ஊதியம் நிறுத்தப்படக்கூடிய வகையிலே ஒரு சட்டத் திருத்தம் இங்கே கொண்டு வரப்பட்டது. அதை மாற்றக்கூடிய முறையிலே இந்தச் சட்ட முன்வடிவில் சில மாற்றங்கள் கொண்டு வரப்பட்டிருந்தாலும்கூட, அது முழுமையான ஒரு மாற்றமாக இல்லை என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

பொதுவாக இதிலே ஒரு குறைபாடு இருக்கின்றது. நாடாளு மன்ற உறுப்பினராக அல்லது வேறு யாதொரு மாநிலச் சட்ட மன்ற உறுப்பினராக இருந்ததற்காக ஓய்வூதியம் வாங்கிவந்த அல்லது வாங்கி வருகிற அல்லது யாதொரு மாநில அரசிட மிருந்து அல்லது மத்திய அரசிடமிருந்து அல்லது மத்திய அரசுக்கு

அல்லது மாநில அரசுக்குச் சொந்தமான அல்லது அதன் கட்டுப்பாட்டிலுள்ள ஒரு நிறுவனத்திடமிருந்து அல்லது சட்டப்படிக்கான அமைப்பிடமிருந்து மதிப்பூதியம் பெற்றுவந்த அல்லது பெற்று வருகிற நபரைப் பொறுத்தவரையில் அந்த ஓய்வூதியத் தொகை அல்லது மதிப்பூதியத் தொகை (1) உட்பிரிவின்படி அவர் பெறத் தகுதியுடைய ஓய்வுதியத்திற்கு நிகராக அல்லது அதற்கு அதிகமாக இருக்குமானால், அவ்வாறு அவர் மேற்படி ஓய்வுதியம் அல்லது மதிப்பூதியம் பெற்றுவரும் கால அளவிற்கு, அத்தகைய ஓய்வுதியம் வழங்கப்படமாட்டாது.

அத்தகைய ஓய்வூதியம் அல்லது மதிப்பூதியத் தொகை (1) உட்பிரிவின்படி அவர் பெறத் தகுதியுடைய ஓய்வூதியத் தொகைக்குக் குறைவாக இருக்குமானால், எவ்வளவு தொகை குறைகிறதோ அதை மட்டும் ஓய்வூதியமாக அந்த உட்பிரிவின்படி அவர் பெறத் தகுதியுடையவராவார் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இதிலே இருக்கின்ற பிரதான குறைபாடு என்ன என்றால் சாதாரணமாக இன்றைக்கு இன்கம்டாக்ஸ் செலுத்தக் கூடியவர்கள் இருக்கிறார்கள். பெரும் முதலாளிகள் இருக்கிறார்கள், பேருந்துகளுக்குச் சொந்தக்காரர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய வருமானம் எந்த அளவுக்கு இருந்தாலும் அவர்களுக்கெல்லாம் இந்த சட்டமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையிலே தரப்படுகின்ற ஓய்வூதியத்திலே எந்த விதமான குறைபாடும் ஏற்படாது. ஆனால் அதேநேரத்திலே மத்திய அரசின் நிறுவனம் அல்லது மாநில அரசின் நிறுவனத்திலே இருந்து ஓய்வூதியம் அல்லது மதிப்பூதியம் பெறக்கூடியவர்களுக்கு இந்த தொகை அதிகமாக இருந்தாலும் அது நிறுத்தப்படும், அல்லது குறைவாக இருந்தால் வித்தியாசமாகக்கூடிய தொகையை கொடுக்கவேண்டும் என்ற வகையிலே ஒரு திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கின்றது. இது சரியான நியாயத்தை வழங்கக்கூடிய முறையிலே அமையவில்லை. உயர்ந்த வருமானம் பெறக்கூடியவர்கள் எல்லாம் இந்தத் திருத்தத்தின்படி இந்த ஓய்வூதியத்தைப் பெறுவதற்குரிய வாய்ப்பு இருக்கும்போது சாதாரணமாக மத்திய அரசின் ஊழியர்களாக இருந்தவர்கள் அல்லது ஏதாவது ஒரு தொழிற் சாலையில் பணிபுரிந்து சிறப்பு ஓய்வூதியம் பெற்றுக்கொண்டிருப்பவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக வந்து அந்த காலத்தை முடித்ததற்குப் பிறகு அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கான இந்தச் சலுகையைப் பெறக்கூடிய நேரத்திலே நீங்கள் ஏற்கெனவே ஒரு ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொண்டிருக்கிறீர்கள், எனவே உங்களுக்கு சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றியதற்கான ஓய்வூதியம் கிடைக்காது என்ற முறையிலே, அவ்வாறு பாகுபடுத்தக்கூடிய முறையிலே ஒரு திருத்தம் கொண்டுவரப்பட்டிருப்பது சரியல்ல. ஆனால் வருமான வரம்பின் அடிப்படையிலே இல்லாமல் அரசு ஊழியர்களாக அல்லது பொதுத் துறை நிறுவனத்திலே ஊழியம் செய்தவர்களாக இருந்தவர்களுக்கு மட்டும் இந்தமாதிரியான

நிபந்தனைகளை விதிப்பதும் அவர்களுக்கு இந்த ஓய்வூதியத்தை நிறுத்துவது என்பதும் நியாயம் வழங்குவதாக இருக்காது. எனவே அதை நீக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இரயில்வே ரிசர்வேஷன் சம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். 3,000 ரூபாய் உயர்த்திக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் அது இன்றையதினம் எந்த அளவுக்கு ஈடு செய்யக்கூடிய முறையிலே இருக்கின்றது என்பது கேள்விக்குரிய விஷயமாக இருந்தாலும் சில நடைமுறைகளைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் சாதாரணமாக சட்டமன்றக் கூட்டத்திலே கலந்து கொள்கிறோம். அப்போது இரயிலிலே பிரயாணம் செய்ய வேண்டி இருக்கின்றது. ஆனால் பொதுவாக 3 மாதத்திற்கு முன்பே ரிசர்வேஷன் செய்து வைத்துவிடுகிறார்கள். ஆகவே திடீரென்று சட்டமன்ற உறுப்பினர்கள் போய் ஊருக்குச் செல்ல வேண்டும் என்று சொன்னால் ரிசர்வேஷன் பெறுவதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கின்றது. எனவே பாராளுமன்றத்திலே வைத்திருப்பது போன்று இங்கேயும் சட்டமன்ற உறுப்பினர்களுக்காக சட்டமன்றம் கூடும் காலங்களில் மற்றும் அலுவல்கள் சம்பந்தமாக அவர்கள் இங்கே வரக்கூடிய நேரங்களிலும் அவர்களுக்கு உதவுவதற்கென்று, அவர்களுக்கு ரிசர்வேஷன் பெற்றுத் தருவதற்காக ஒரு ஏற்பாட்டை இங்கே செய்யவேண்டும். சட்டமன்ற உறுப்பினர்களுக்காகத் தனியாக ஒரு கவுண்டர் கூட திறப்பது பொருத்தமாக இருக்கும். இங்கே பல்லாயிரக்கணக்கான அரசு அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் தினசரி பயணம் செய்கிறார்கள். எனவே சட்டமன்ற உறுப்பினர்கள், மற்றவர்களுக்குத் தேவையான அந்த ரிசர்வேஷன் வசதியைப் பெறுவதற்கான முறையிலே இங்கேயே ஒரு கவுண்டர் ஏற்படுத்துவது என்பது பொருத்தமாக இருக்கும். அதிலே சிரமங்கள் இருந்தால் இந்த ரிசர்வேஷன்களைப் பெற்றுத் தருவதற்கு வேறு ஏதாவது வழிவகை செய்து தரவேண்டும்.

(முற்பகல் 11.50)

இப்போது சட்டமன்ற உறுப்பினர்கள் சாதாரண ஆட்களைப் போல் பிளாட்பாரத்தில் க்யூவில் நிற்க வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே அந்தச் சிரமத்தைப் போக்கும் வகையில் ஒரு ஏற்பாடு செய்யப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பஸ்களில் பயணம் செய்ய அனுமதி சம்பந்தப்பட்ட மட்டில், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்து மீண்டும் அதேமாதிரி பொதுப்பணியில் தொடர்ந்து ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சென்னைக்கு அல்லது மற்ற இடங்களுக்குச் சென்று அமைச்சர்களை, அதிகாரிகளைச்

சந்திக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஆகவே அவர்களுக்கும் இலவசமாக பஸ்களில் பயணம் செய்ய வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது தொடர்ச்சியாக இந்த மன்றத்தில் வற்புறுத்தப்பட்டு வருகிறது. அந்த வசதியை செய்து தரவேண்டும்.

அடுத்து, அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் இவர்களின் ஊதியத்தை உயர்த்திக் கொடுத்து அதற்காக இந்தச் திட்டமன்றத்தில் சட்டம் நிறைவேற்றக்கூடிய அதேநேரத்தில் இங்கே சட்டமன்றத்தில் பணி புரியக்கூடிய அலுவலர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தினக்கூலிகளாக, நூற்றுக்கணக்கானவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பு கிடையாது என்ற நிலையிருக்கிறது. அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வரும் தினப்படி மிகவும் குறைவாக இருக்கிறது. ஆகவே அவர்களையெல்லாம் நிரந்தரமாக்குவதோடுகூட அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வரும் தினப்படியையும் உயர்த்திக் கொடுக்கவேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேமாதிரி சட்டமன்றக் கூட்டம் நடைபெறுகிற காலத்தில் ஒரு பகுதி ஊழியர்கள் மட்டும் பஸ்களில் பயணம் செய்ய சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இங்கே பணிபுரியும் அனைத்து ஊழியர்களுக்கும் அந்தச் சலுகை கிடைக்கக்கூடிய முறையில் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து முக்கியமாக, குறிப்பாக ஓய்வு பெற்ற சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய ஓய்வூதியம் சம்பந்தமாக அவர்கள் அரசு அலுவலகங்களில் அல்லது பொதுத் துறை நிறுவனங்களில் பணிபுரிகிறார்கள் என்ற காரணத்தினால் அதில் கிடைக்கக் கூடியதிலிருந்து ஓய்வூதியத்தை கழித்துக்கொடுப்பது என்ற நிலையில் மாற்றம் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சட்ட முன்வடிவின்மீது இந்திரா காங்கிரஸ் கட்சி சார்பில் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு முதலில் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாம் ஒரு லட்சம் பேர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அந்தப் பகுதி மக்களை அடிக்கடி நேரில் சந்தித்து அவர்கள் குறைகளை அறிந்து அதைத் தீர்க்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். சட்டமன்ற உறுப்பினர்கள் பதவி வகிக்கும் காலத்தில் அவர்களுக்கு சில சலுகைகள் கொடுக்க வேண்டும் என்று இந்தச் சட்ட முன்வடிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சென்ற காங்கிரஸ் ஆட்சி இருந்தபோதும் சரி, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தபோதிலும் சரி, சென்னை மாநகரில் அவர்களுக்கு வீட்டு

மனை கொடுக்கப்பட்டது. வீடுகள் கட்டிக் கொள்ள லோன் கொடுக்கப்பட்டது. அந்த ஒரு நிலைமையை இந்த அரசும் கொண்டுவரவேண்டுமென்று இந்தச் சமயத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். மேலும் சட்டமன்ற உறுப்பினர்கள் நிறைய பேர்கள் சென்னையிலேயே தங்கள் குழந்தைகளை படிக்க வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆந்திராவிலே உள்ள சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்கூட சென்ற ஆண்டு 20 வீடுகள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கட்டிக் கொடுக்கப்படும் என்று வாக்குறுதி அளித்தார்கள். ஆனால் வீடு கட்டிக் கொடுக்கும் ஆயத்தம் செய்யப்படவில்லை.

மேலும், பஞ்சாப், ஹரியானா, மத்திய பிரதேசம் போன்ற மாநிலங்களில் அங்குள்ள சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கார் வாங்க ரூ. 60,000 முதல் ரூ. 75,000 வரை வட்டியில்லாக் கடன் அளிக்கப்படுகிறது. நம் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அப்படிப்பட்ட வட்டியில்லாக் கடன் வசதியை செய்து கொடுத்தால் அதை வைத்துக்கொண்டு யூனியன்களில் பணி செய்யலாம். இப்போது 50 லிட்டர் பெட்ரோல் கொடுக்கப்படுகிறது. அப்படி கொடுக்கப்படுகின்ற காரிலே தொகுதி முழுவதும் சென்று, தங்கள் பணிகளைச் செய்ய உகந்ததாக இருக்கும். கார் இல்லாமல், பெட்ரோல் இல்லாமல் சட்டமன்ற உறுப்பினர்கள் பிறருடைய உதவியை நாடாமல், அவர்களுக்கு கெட்ட பெயர் வராமல் இருக்கக்கூடிய அளவுக்கு இந்த அரசு செய்துகொடுக்க முன்வர வேண்டுமென்று இந்தச் சமயத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மேலும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு மாதத்திற்கு 50 லிட்டர் பெட்ரோல் கொடுக்கப்படுவதை உபயோகித்துக் கொள்ளக்கூடிய அளவிலே இருக்க வேண்டும். உதாரணத்திற்குச் சொல்கிறேன், கடந்த ஒரு மாதமாக நாங்கள் இங்கே இருக்கிறோம். இந்த மாதத்திற்காக பெட்ரோலை அடுத்த மாததிலும் வாங்கிக் கொள்ளலாம் என்பதற்கான வழிவகை செய்தால், இந்தப் பெட்ரோலைச் கொண்டு, தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் செய்யப்படுகின்ற வேலைகளை அடிக்கடிச் சென்று பார்த்து வருவதற்கு சூழ்நிலை ஏற்படும். இந்த மாதத்திற்கு கொடுக்கப்படுகின்ற பெட்ரோலை, உபயோகப்படுத்தாமல் இருந்தால், அதை அடுத்த மாதத்தில் உபயோகப்படுத்துவதற்குரிய முறையில் சலுகைகள் அதிலே கொடுக்க அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு யூனியன் ஜீப் கொடுக்க வேண்டுமென்ற ஒரு நியதி இருக்கிறது. அது கொடுக்கப்படுவதில்லை. ஒருசிலர் கொடுக்கின்றார்கள்; ஒருசிலர் அது ரிப்பேரிலிருக்கிறது, அங்கே இருக்கிறது, இங்கே இருக்கிறது என்று சொல்லி, தட்டிக் கழித்து விடுகிறார்கள். உதாரணத்திற்காக நான் ஒன்றைச் சொல்கிறேன். சென்ற மாதம் 21 ஆம் தேதி என்னுடைய தொகுதியில் மாண்புமிகு அமைச்சர் குழந்தைவேலு அவர்கள், ஒரு ஆஸ்பத்திரியைத் திறந்து வைத்தார்கள். அதற்கு

நான் தலைமை வகித்தேன், இரவு சுமார் 11 மணிக்கு அந்த விழா முடிந்தது. பிறகு கரூருக்குச் செல்ல அந்தக் கமிஷனரிடம் சென்று ஜீப் வேண்டுமென்று கேட்டேன். காரணம் சுமார் 7, 8 கிலோ மீட்டர் செல்லவேண்டும். முதலிலே ஜீப்பை உடனடியாகத் தருகிறேன் என்று சொன்னார். பிறகு, கரூர் ஜீப் செல்வதற்கு இன்னும் ஒரு மணி நேரம் ஆகும்; தாந்தோணி ஜீப் உடனடியாக புறப்பட இருக்கிறது என்று சொன்னார். ஆனால், தாந்தோணி கமிஷனரைக் கேட்டால் இன்னும் அரை மணி நேரமாகும், பொறுத்திருங்கள் என்று சொன்னார். உடனடியாகச் செல்ல ஜீப் கிடைக்கவில்லை. இந்த நிலையில் இரவு சுமார் 11 மணிக்கு அந்தப் பகுதியில் எதிர்பாராத விதத்தில் டவுன் பஸ் வந்தது. அந்த டவுன் பஸ்ஸில் ஏறி கரூருக்குச் சென்று, பின்னர் குளித்தலைக்குச் செல்லக்கூடிய ஒரு துர்ப்பாக்கியமான நிலைமை ஏற்பட்டது. ஆகவே, ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் வட்டியில்லாக் கடனாகக் கொடுத்தாலும் அல்லது அந்தப் பெட்ரோலை தன்னுடைய காரிலே போட்டுக் கொள்வதற்கு அனுமதி கொடுத்தாலும் அவர்கள் சிரமமின்றி அதோடு அவர்கள் தங்களுடைய மரியாதையும் இழக்காமல், மக்களுக்கு சேவை செய்வதற்கு வசதியாக இருக்கும். இந்த நிலைமையை உருவாக்கித் தர வேண்டும்.

பஞ்சாப், அரியானா சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வீடு கட்டுவதற்கு ஒரு இலட்சம் ரூபாய் வரையில் வட்டியில்லாக் கடனாகக் கொடுக்கிறார்கள். கார் வாங்குவதற்காக ரூ. 75,000 வட்டியில்லாக் கடனாகக் கொடுக்கிறார்கள். அதையும் நம் அரசு கொடுக்க வேண்டும் என்பதற்கு, அரசின் முன்வைக்க ஆசைப்படுகிறேன்.

மேலும், நமது ஆஸ்டலிலே துப்புரவுப் பணியாளர்கள் 10, 15 ஆண்டுகளாக பணியாற்றினாலும், அவர்கள் இன்னும் நிரந்தரமாக்கப் படாமல் ஒரு நாளைக்கு ரூ. 4–40 வீதம் கொடுக்கப்பட்டு வேலை செய்து வருகிறார்கள். இந்த ரூ. 4-40 அவர்கள் வந்துபோவதற்கு நாள் ஒன்றுக்கு ரூ.1 செலவு செய்கிறார்கள். ஆகவே, அவர்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டும் என்று இந்தச் சமயத்தில் கேட்டுக் கொள்கிறேன்,

அது மட்டுமல்ல. நமது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஏற்கனவே ஒரு வாக்குறுதியை அளித்திருக்கிறார்கள். ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு கிளார்க்கை ஒதுக்கி, அவர்கள் பணி செய்வதற்கு நாங்கள் ஆவன செய்வோம் என்று கூறியிருக்கிறார்கள். ஆகவே நான் நிதியமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புவது, இந்த ஆண்டு முதல் அந்த பஞ்சாயத்து யூனியன்களிலே கிளார்க்கை ஒதுக்கி, உறுப்பினர்களுக்கு வசதி செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் அமைச்சர்களுக்கு ஏராளமான உதவியாளர்கள் இருக்கிறார்கள். மாண்புமிகு

அமைச்சர்களுக்கு வருகின்ற மனுக்களில், பத்தில் ஒரு பங்கு மனுக்களாவது எங்களுக்கும் வருகிறது. குறைந்தது 200, 300 மனுக்கள் வருகின்றன. அந்த மனுக்களைப் பரிசீலித்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்புவதற்கு, அவைகளை டைப் செய்வதற்கு ஒரு கிளார்க் வேண்டியிருக்கிறது. எனவே, எங்களுக்கு ஒரு உதவியாளர் தேவைப்படுகிறது. அரசாங்கம் ரூ. 150 அல்லது ரூ. 200 கொடுத்து ஒரு கிளார்க் வைத்துக் கொள்ளலாம் என்று சொல்லிவிட்டால், மேற்கொண்டு தொகையை நாங்கள் போட்டு, ஒரு டைப்பிஸ்டையோ அல்லது கிளார்க்கையோ அமர்த்திக் கொண்டு, எங்கள் பணியைச் செய்வதற்கு வசதியாக இருக்கும். அதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கு ஒன்றை இந்தச் சமயத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். கிராமத்தில் மக்கள் பெரும்பாலும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கொடுக்கப் படும் மனுக்களுக்கு, பதில் வேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய பணியை நல்முறையிலே ஆற்றுவதற்கு வசதிகளை செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(நண்பகல் 12-00)

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பஸ் பாஸ் வேண்டுமென்று உறுப்பினர்கள் அனைவரும் கேட்டிருக்கிறார்கள். நானும் அதை வலியுறுத்திப் பேச ஆசைப்படுகிறேன். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்பதை நாம் அனைவரும் கண்கூடாகப் பார்த்து வருகிறோம். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் அவர்களையும் மக்கள் அணுகிறார்கள். அந்தந்த பகுதி மக்களுக்கு உதவி செய்யவேண்டியவர்களாக இருக்கிறார்கள். சென்னைக்கும் அல்லது ஜில்லா நகரங்களுக்கும் சென்று பணியாற்ற வேண்டியிருக்கிறதால் அவர்களுக்கு பஸ் பாஸ் அளிப்பதாலே, தமிழக அரசின் நிதிநிலைமைக்கு அதிக கஷ்டம் வராது என்று கூறி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் பஸ் பாஸ் வழங்க வேண்டுமென்று கேட்டு முடிக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்; மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதி வழங்கல் திருத்த சட்ட முன்வடிவை இந்த பேரவையினுடைய ஏற்புக்காக வைத்து மாண்புமிகு உறுப்பினர்கள் சில பல கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். சட்டமன்ற பேரவை மானியக்கோரிக்கை விவாதத்திற்கு வந்தபோது நான் சம்பளத்தைப் பற்றியும், படியைப் பற்றியும் வேறு பல சலுகைகளைப் பற்றியும் அறிவித்தேன். அறிவித்த அந்த அறிவிப்புகளுக்கு சட்ட வடிவு கொடுப்பதற்காகக் கொண்டுவரப்பட்டது இந்த சட்டம். அதுதான் இந்த சட்டத்தினுடைய முழு நோக்கமாகும். அதனை ஒட்டி

மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அன்று நான் அறிவித்தவைகளுக்கு சட்ட வடிவு கொடுக்காவிட்டால் சம்பளமும் வராது, படியும் வராது என்ற காரணத்தால்தான், இந்த தொடரிலேயே அதற்கு சட்ட வடிவம் கொடுத்து நிறைவேற்றப்பட்டால் தான் ஏப்ரல் 1—ஆம் தேதியிலிருந்து தொடர்ந்து சம்பளம் வழங்க முடியும் என்ற முறையிலே சட்டம் ஏற்பு வழங்குகிறது. அதுதான் இந்த சட்டத்தினுடைய முக்கியமான நோக்கம். அதன்மீது சட்டமன்ற உறுப்பினர்கள் பலரும் பல கருத்துக்களை எடுத்துச்சொல்லி இருக்கிறார்கள். 'ஈயென இரத்தல் இழிந்தன்று' என்று சங்க காலத்திலே சொல்லியிருக்கிறார்கள். கொடுங்கள் என்று கேட்பது இழிந்தது என்று தான் சொல்லியிருக்கிறார்கள், அதைவிட கொடுக்கும்போது கொள்ளேன் என்று சொல்வது உயர்ந்தது என்றும் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, கொள் என்று கொடுப்பது மிக உயர்ந்தது என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. அ. ரகுமான்கான்: துணைத்தலைவர் அவர்களே, 'ஈயேன் எனல் அதினினும் இழிந்தது' என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத்தலைவர் அவர்களே, 'ஈயென இரத்தல் இழிந்தன்று' ஈயேன் எனல் அதினினும் இழிந்தது, அதாவது தேவை அல்லாமல் ஈயேன் என்று சொல்பவர்கள், அதனினினும் இழிதன்று என்று பொருள் கொள்ளலாம். கொள் என்று கொடுத்தால் உயர்ந்தது. ஆகவே, தான் கொள் என்று சட்டமன்ற மானியக்கோரிக்கை வந்தபோது இந்த இந்த வகைகளில் கொளளுங்கள் எனறு சொன்னேன். கொள்ளோம் என்றால் அதனினும் இனிது எள்று சொன்னார்கள், என்றாலும் கூட அந்த அளவிற்கு போகாவிட்டாலும், அந்த தன்மைகளை கொண்டு வந்ததற்கான காரணமே இருக்கிற சூழ்நிலைகளை அன்றைக்கே எடுத்துத்தெரிவித்தேன். மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்து தெரிவித்தற்கிணங்க அவர்களுடைய வாழ்க்கை வசதிகளை சீர்படுத்த, செம்மைப்படுத்திக் கொள்வதற்கு போதுமானது என்று சொல்லவில்லை. அதிகமாக பெறுவதற்கு தகுதிபடைத்தவர்கள்தானா என்று கேட்டால் தகுதியுள்ளவர்களதான். அவர்கள் அதிகம் பெற தகுமா என்றால் தகும் தான். இந்த அரசாங்கம் தாங்குமா என்றால் தாங்காது என்ற காரணத்தால் தான் ஓரளவிற்கு இருக்கிற நிலைமைகளை எல்லாம் கணக்கிட்டு சொல்லவேண்டிய அவசியம் இருக்கிறது. அதுமட்டுமல்லாது ஆண்டுக்காண்டு ஏதேனும் கேட்பீர்கள் என்ற நிலையும், நாமும் கொஞ்சம் கொஞ்சம் கொடுக்கிற நிலைமையும் வருகிற காரணமாக, மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துச் சொன்ன கருத்துக்களை மனதிலே வைத்து எந்த அளவிற்கு நாம் அளிக்க முடியும் என்பதை கவனிக்க வேண்டும்.

டெலிபோன் வசதிகளைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். கூடுதல் கட்டணம், வாடகை போன்றவற்றை எல்லாம் கணக்கிலே கொண்டு, 92 ரூபாய் அதிகம் ஆகிறது என்று சொல்லி 100 ரூபாய் கொடுத்தோம். மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்துக்களை அடிப்படையாக வைத்து எந்த அளவிற்கு விரிவாக்கலாம் என்ற வகையில், மற்ற மாநிலங்களிலே எல்லாம் இருக்கிற தன்மைகளை ஆராய்ந்து அறிந்து ஓரளவிற்கு இதை அதிகப்படுத்த இயலுமா? என்பதை பற்றி பின்னர் இந்த அரசு ஆராயும் என்பதை கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, ஒய்வூதியத்தைப் பற்றி சொன்னார்கள். ஏற்கனவே இருந்ததற்கு இப்போது ஒரு திருத்தம் செய்ய இருக்கிறோம். அதாவது சட்டமன்ற, மேலவை, பேரவை உறுப்பினராக இருந்து ஒய்வூதியம் பெற்று வருபவர்கள், வேறு ஒய்வூதியம் பெறுகிறவர்களாக இருப்பார்களானால் அதிலே கழித்துக் கொள்ளப்படும் என்று முதலிலே சொன்னேன. அன்றைக்கே நான்சொன்னேன் தியாகிகள் ஓய்வூதியம் அல்லது உடல் ஊனமுற்றோர்கள் ஒய்வூதியம் அல்லது அரசியல் ஓய்வூதியம் பெறுகின்றவர்கள் இந்தக் கணக்கிலே சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள். அதே மாதிரி அரசு அலுவலங்கள், மத்திய அரசாங்க அலுவலங்களாக இருந்தாலும், மாநில அரசாங்க அலுவலங்களாக இருந்தாலும் அல்லது எந்தத்தனிப்பட்ட நிறுவனங்களாக இருந்தாலும், அவற்றில் வேலை பார்த்து ஓய்வூதியம் பெறுவார்களானால், அந்த ஒய்வூதியமும் இந்தக் கணக்கிலே எடுத்துக்கொள்ளப் படாது என்றுதான் கொண்டு வந்திருக்கிறோம்.

திரு. சோ. அழகர்சாமி: இப்பொழுது நிதி அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, சட்டமன்ற உறுப்பினர்கள் பெறக்கூடிய அந்த ஒய்வூதியத்திலிருந்து அவர்கள் முன்னால் மத்திய அரசிலோ அல்லது மாநில அரசிலோ பணியாற்றியிருந்து அவர்கள் ரூ. 100 ஓ, ரூ.50 ஓ ஓய்வூதியம் பெற்றால், அந்தத் தொகையைக் கழித்துக் கொண்டுதான் கொடுப்போம் என்று இப்பொழுதிருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்; சில பேர் பாராளு மன்ற உறுப்பினர்களாக இருந்து, இங்கு சட்டமன்ற உறுப்பினராக இரண்டு முறை இருந்து, அங்கு ரூ.500 ஒய்வூதியம் வாங்கினால் இங்கே இல்லை என்றும், இங்கே ரூ. 500 வாங்கினால் அங்கே இல்லையென்றும் சொல்லியிருக்கிறேன். அல்லது ஒரு வாரியத்தினுடைய தலைவராக நியமிக்கப்பட்டு சம்பளம் என்ற முறையிலே ரூ. 1,000 500 என்று பெறுகிறபொழுது, இந்த ஒய்வூதியம் பெற முடியாது. இவை தவிர, மற்றது எந்த வகையிலே ஒய்வூதியம் பெற்றாலும், அது இந்தக் கணக்கிலே எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது, உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் டிஸ்டிரிக்ட் ஜட்ஜாக இருந்த திரு. இ. எஸ். வெங்கடேசன்

மேலவை உறுப்பினராக இருக்கிறார். அவர் ஐட்ஜாக இருந்து ஓய்வு பெற்றதால் பென்ஷன் வாங்கிக் கொண்டிருக்கிறார். அவர் அரசாங்க பென்ஷன் வாங்குவதோடு; இந்த பென்ஷனும் வாங்கலாம் என்று தானிருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி: ரெயில்வேயிலே பணியாற்றிய ஒருவர் மாதம் ரூ. 100 வாங்கிக் கொண்டிருக்கிறார். அவருக்கு இப்பொழுது சட்டமன்ற உறுப்பினர்களுடைய பென்ஷன் கொடுக்கும்போது, ரூ. 100-ஐக் கழித்துக் கொண்டு, ரூ. 150 தான் கொடுக்சப்படும் என்று இப்பொழுதுள்ள விதிகள் கூறுகின்றன. அது சேருமா என்றுதான் நான் கேட்கிறேன். அப்படி சேருமானால் அதை சேர்க்கக்கூடாது எனறுதான் நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இதுவரையில் எப்படி இருந்தது என்பது அல்ல. இப்பொழுது, இந்தச் சட்டத்திருத்தத்தில் நாம் செய்திருக்கிற ஏற்பாட்டின்படி மத்திய அரசாங்க ஊழியராக இருந்து ஓய்வு பெற்று ஓய்வூதியம் வாங்கினாலும், மாநில அரசாங்க ஊழியராக இருந்து ஓய்வு பெற்று ஓய்வூதியம் வாங்கினாலும்,ரயில்வே ஊழியர்களாக இருந்து ஓய்வு பெற்று, ஓய்வூதியம் வாங்கினாலும், அது கணக்கிலே எடுத்துக் கொள்ளப்படாது. இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்தவரை, நாம் வைத்திருக்கிற விதிமுறைப்படி அந்த ஓய்வூதியமும் பெறலாம். இந்த ஓய்வூதியமும் பெறலாம் என்பதுதான். ஓய்வூதியம் பெறுகின்ற உறுப்பினர்சள் மீண்டும் சட்டமன்ற உறுப்பினர்களாக அல்லது பாராளுமன்ற உறுப்பினர்களாக வந்தால் அவர்களுக்கு ஓய்வூதியம் இல்லை. ஆனால், சட்டமன்றத்திலே அல்லது பாராளுமன்றத்திலே ஓய்வூதியம் பெற்றால் ரூ. 500 அளவுக்கு தரப்படும். அதே போல் வாரியத்திலே வாங்கினாலும். அந்தப் பொறுப்பில் இருக்கும் காலம் வரையில் என்றுதான் வைத்திருக்கிறோம். மற்ற வகையிலே எதை வாங்கினாலும், இந்த ஓய்வூதியம் வாங்கலாம் என்றுதான் வைத்திருக்கிறோம்.

திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதிலே பிரிவு 12—ல் உட்பிரிவு பி—யில்— கடைசியாக—குறிப்பிடப்பட்டிருப்பது, ‘அத்தகைய ஓய்வூதியத் தொகை அல்லது மதிப்பூதியத் தொகை 1 உட்பிரிவின்படி அவர் பெறத் தகுதியுடைய ஓய்வூதியத் தொகைக்குக் குறைவாக இருக்குமானால் எவ்வளவு தொகை குறைகிறதோ அவ்வளவு தொகை மட்டுமே ஓய்வூதியமாக அந்த உட்பிரிவின்படி அவர் பெறத் தகுதியுடையவர் ஆவார் என்று தெளிவாக இருக்கிறது. அம்மாதிரி ஓய்வூதியம் பெறுகிறவர்கள் அதிகமாக ஓய்வூதியம் பெற்றால், இந்த ஓய்வூதியத்தையே அவர்கள முழுமையாக இழக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அதைத்தான் நான் குறிப்பிடுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதிலே இருப்பது இது தான்:

Sec. 12-B: The State Government may make rules providing for the conditions and restrictions subject to which such pension may be granted.

Provided further that - -

(a) no such pension shall be paid to any person for the period during which such person was or is in receipt of, pension for having been a Member of the Parliament or any other State Legislature, or honorarium either from any State or the Central Government or from any company or statutory body owned or controlled by any State or the Central Government and if the amount of such pension, or honorarium is equal to, or in excess of, the pension . . . .

(முற்பகல் 12-10)

‘or honorarium either from any State or the Central Government or from any company or statutory body owned or controlled by any State or the Central Government.’

ஆகவே, ஓய்வூதியத்தைப் பொறுத்து அல்ல; பென்ஷனைப் பொறுத்து வராது. வேலை பார்த்துக்கொண்டு வாங்கிக்கொண்டிருந்தால்தான் இல்லை என்று இருக்கிறதே தவிர, பென்ஷன் வாங்குவார்களேயானால் இந்தப் பென்ஷனும் வாங்கலாம் என்பதுதான். ஆக, இந்தத் தமிழில் இருப்பதைப் பொறுத்தவரையிலும் ஓய்வூதியம் பெறுகின்ற வகையிலே வேறு எந்த ஓய்வூதியமும் இந்தக் கணக்கிலே எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. இரா. கருப்பையா: பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஷரத்திலே “(1) உட்பிரிவின்படி அவர் பெறத் தகுதியுடைய ஓய்வூதியத்திற்கு நிகராக அல்லது அதற்கு அதிகமாக இருக்குமானால், அவ்வாறு அவர் மேற்படி ஓய்வூதியம் அல்லது மதிப்பூதியம் பெற்றுவரும் கால அளவிற்கு, அத்தகை ஓய்வூதியம் வழங்கப்பட மாட்டாது” என்று இருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஆங்கிலத்திலே தெளிவாக இருக்கிறது. தமிழிலே மதிப்பூதியம் என்று மட்டும் இருந்திருக்க வேண்டும், ஆனால் ஓய்வூதியம் என்று போட்டது தவறு. ஓய்வூதியம் என்பது தமிழிலே எடுக்கப்பட்டுவிட்டால் மதிப்பூதியம் என்பது வேறு, பென்ஷன் என்பது வேறு. ஆக, ஓய்வூதியத்தைப் பொறுத்துதான் பிரச்சினை. மதிப்பூதியத்தைப் பொறுத்து வராது. ஆங்கிலத்திலே சரியாக இருக்கிறது. ஆகவே, அந்த வகையிலே இந்தச் சலுகைகள் தரப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துச் சொன்ன அத்தகைய கருத்துகளுக்குள்ளே அவர்களுடைய நிலைமை மேலும் தெளிவாக்கப்பட வேண்டுமென்று சொன்னார்கள்.

பஸ்ஸைப் பொறுத்தவரையில் நாம் ஓரளவு செய்து வைத்திருக்கிறோம் என்றாலும் இரயில்வே பாஸையும் முழுவதுமாகத் தர வேண்டுமென்ற கருத்தைக் கூடச் சொன்னார்கள். அது எந்த மாநிலத்திலும் இல்லை. மற்ற மாநிலங்களைச் பார்த்தால் ஓரளவுக்கு 3,000 என்ற அளவிற்கு நாம் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறோம். அதனுடைய தன்மைகள், மற்றவைகளையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய கருத்துக்களின் அடிப்படையில் ஆராய்ந்து பின்னர்தான் முடிவெடுக்க வேண்டும். ஆகவே, இப்பொழுது இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பல்வேறு கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் எடுத்துத் தெரிவித்தாலும்கூட, ஹெலிகாப்டர் பற்றிச் சொன்னார்கள். ஹெலிகாப்டர் ஒரு அவசியம் என்ற முறையிலே நாம் வாங்கினோமே தவிர ஆடம்பரம் அல்ல; குறிப்பாக மீனவர்கள் கடலிலே போய் அவதிப்படுகின்ற சூழ்நிலைகள் தமிழகத்திலே அடிக்கடி ஏற்படுகின்றன. அதற்கு உடனே தேட வேண்டுமென்றால் கொச்சிக்கோ அல்லது பெங்களூருக்கோ அனுப்பி மிலிட்டரியிடத்தில் கேட்கவேண்டி வருகிறது. வந்து சேர 2 நாட்கள், 3 நாட்கள் ஆக தாமதம் ஏற்பட்டு விடுகின்றன. அந்நிய நாட்டினுடைய மீன்பிடிப் படகுகளெல்லாம் நம்முடைய கடற்கரைக்கு வந்து விடுகின்றன. அதைக் கண்டு பிடிக்க வேண்டுமென்கின்றபொழுது கேட்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அல்லது புயல் அல்லது வெள்ள நிவாரணங்கள் வரும்பொழுதும் போய் பார்வையிட நாம் வாடகைக்கு வாங்க வேண்டி இருப்பதால் வாங்கினோம். வேறு பல மாநிலங்களை எடுத்துக்கொண்டால் விமானம் வாங்கி வைத்திருக்கிறார்கள், இரண்டு ஹெலிகாப்டர் வாங்கி வைத்திருக்கின்ற மாநிலம் உண்டு; விமானம் வைத்திருக்கின்ற மாநிலமே உண்டு. ஆனால் எட்டையபுரத்திலே இருக்கின்ற ஹெலிபேட் சம்பந்தமாக எவ்வளவு செலவாயிற்று என்பதுப் பற்றிப் பின்னால் வேண்டுமானால் கணக்கைச் சொல்லுகிறேன் அது நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்கள் போய் இறங்குவதற்காக அல்ல; கர்நாடக மாநில முதல்வரவர்கள் ஹெலிகாப்டரில் வந்ததன் காரணமாக அவர் இறங்குவதற்காக அந்த ஹெலிபேட் ஏற்பாடு செய்யப்பட்டது. அதனுடைய தன்மைகள் பற்றியெல்லாம் பின்னால் வேண்டுமானால் விளக்கமாகக் கொடுக்கிறேன் என்று சொல்லி இந்தச் சட்டமுன்வடிவை ஏற்றுக் கொண்டு, நிறைவேற்றித் தரும்படியாக மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேர்களையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"தமிழ்நாடு 1982-ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 33/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 6 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 7

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:—"பிரிவு 7 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்."

திரு. அ. ரகுமான்கான்: துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

"பிரிவு-7ல் உட்பிரிவு — 'சி' ல் வரும் "மாதம் முந்நூற்று ஐம்பது ரூபாய்" என்பதற்குப் பதிலாக 'மாதம் நானூறு ரூபாய்' என்று மாற்றியமைக்க வேண்டும்."

திரு. துரைமுருகன்: திரு. அ. ரகுமான்கான் அவர்கள் மொழிந்ததை நான் வழிமொழிகிறேன்,

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பெருந்தன்மையோடு ஏற்கனவே அறிவித்த வகையிலே ஏற்றுக் கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன். நீங்களும் ஆண்டுக்காண்டு ஏதோ கேட்க வேண்டுமென்ற நிலையிலே இருக்கிறீர்கள். நானும் ஏதோ கொடுக்கவேண்டுமென்ற நிலையில் இருக்கிறேன். அதன் காரணமாக மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச்சொன்னக் கருத்துக்கள் எல்லாம் நினைவில் வைத்துக்கொள்ளப்படும் என்றுசொல்லி, இப்போது 300 ரூபாயாக இருக்கிறது. அதை 400 ரூபாயாக ஆக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள். ஆக 350 ரூபாய் இல்லை. ஆகவே உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் சொன்ன கருத்துக்களையெல்லாம் மீண்டும் வலியுறுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருத்தத்தை நான் வல்யுறுத்தாவிட்டாலும் நான் கேட்பது இந்த முன்னாள் எம். எல். ஏக்கள் எல்லாம் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு இந்தப் பஸ்ஸிலே மட்டும் போவதற்கு எப்படியாவது பாஸ் கொடுக்க வேண்டும், எங்களிடமிருந்து வேண்டுமானால் 50 ரூபாய் குறைத்துக்கொள்ளுங்கள்.

திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 7 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவுகள் 8, 9, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண், 33/1982) நிறைவேற்றப்பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஆ) கேளிக்கை வரி திருத்த சட்டமுன்வடிவு, 1982

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு *(சட்டமன்றப்பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1982) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறவேண்டும்.

திரு. பாபு ஜனார்த்தனன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1982 ஆம் ஆண்டு கேளிக்கை வரி திருத்த சட்ட முன்வடிவின் மீது பேசுகின்ற வாய்ப்பை பெற்றமைக்கு நன்றி கூறுகிறேன். இன்றைய தினம் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்தத் திட்டத்தில் இலவச அனுமதிக்கு வரி போடுகின்ற நிலைமை உள்ளது. அதை பரிசீலனை செய்யவேண்டிய ஒரு விஷயம் ஆகும். 10 இலவச அனுமதி சீட்டுக்கு மிகையாக அல்லது மொத்த இருக்கையில் 2 சதவீதத்திற்கு மிகையாக இல்லாமல், இவ்விரண்டில் எது குறைவோ அந்த அளவிற்கு வழங்கப்பட வேண்டும், இலவச சீட்டு என்று பொருள்பட வந்திருக்கிறது. ஒரு கொட்டகையில் ஒரு சினிமா கொட்டகை நடத்துகின்றவர்களிடத்திலே இலவச அனுமதி பெற வருகின்றவர்கள் எந்தெந்த வகையிலே வருகிறார்கள் என்றால், எல்லா அலுவலக ஊழியர்களையும், சினிமாவிற்கு இலவசமாக அனுமதிக்கவேண்டிய நிலைமை இருக்கிறது. எந்த அளவிற்கு வசதி படைத்தவர்களாக இருந்தாலும் கூட சினிமாக் கொட்டகைக்கு கலெக்டர் சம்பந்தப்பட்டவர்களும். ஆர்.டி.ஓ. அலுவலகத்தைச் சேர்ந்தவர்களும், ரெவின்யூ இலாகா சம்பந்தப்பட்டவர்களும், தாசில்தார் அலுவலகத்தைச் சேர்ந்தவர்களும், பொதுப்பணித் துறையில் இருப்பவர்களும், எலக்ட்ரிசிடி டிபார்ட்மென்டிலே இருப்பவர்களும் இப்படி பல்வேறு தரப்பட்ட அதிகாரிகள் இன்றைய தினம் இலவசமாக சினிமாபார்க்க வருகின்றார்கள், ஆனால் நீங்கள் கொடுத்த அந்தத் திருத்தச் சட்டத்தில் 10 பேருக்குதான் இலவசமாக கொடுக்கலாம் என்பது நடைமுறை சாத்தியம் இல்லை. இதை அரசு தகுந்தமுறையிலே கலந்து ஆலோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

---

* 1982 ஏப்ரல் 5-ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் **வெளியிடப்பெற்றுள்ளது.**

அடுத்து 2 பர்சென்ட் என்று சொல்லுகிறார்கள். இந்த 2 பர்சென்ட் என்பது ஒரு ஆயிரம் பேர் என்று சொன்னால்கூட 20 பேர்கள் வருகிறார்கள். ஆனால் ஒரு தியேட்டர் நடத்துகின்றவர்கள் ஒரு நாளைக்கு 40, 50 பேர்கள் என்று இலவசமாக அனுமதிக்கவேண்டி இருக்கிறது. அவர்கள் எல்லாம் இலவசமாகவோ, அல்லது அதிகாரிகளுக்கு மறைத்தோ, அல்லது அதிகாரிகள் சம்பந்தப்பட்டவர்கள் கொட்டகையிலோ இலவசமாக அனுப்பப்படவில்லையென்றால், அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என்ற அளவிலே இவைகளை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே 10 பேருக்கு மட்டும் தான் என்று நீங்கள் ஒரு உச்சவரம்பு போடுவது தியேட்டர்காரர்களுக்கு இன்னல்களை ஏற்படுத்தும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அல்லது அந்த 20 என்ற அளவிலே நீங்கள் வைக்க வேண்டும். ஒரு தியேட்டரில் 1000 பேர்களுக்கு அக்காமடேஷன் இருக்கிறது என்றால் அதிலே 2 சதவீதம் என்றால் 20 என்று வரும். நீங்கள் 10 பேர்கள் அல்லது 2 சதவீதம் இதில் எது குறைவோ அது என்று வைத்திருப்பது நியாயம் அல்ல, அது சாத்தியம் அல்ல. தியேட்டர் உரிமையாளர் எவ்வளவு நேர்மையாக நடந்துக்கொண்டாலும், எவ்வளவு வசதி படைத்தவராக இருந்தாலும், தியேட்டர் எந்த அளவுக்கு நல்லமுறையிலே இருக்கவேண்டுமோ அந்த அளவுக்கு இருந்தாலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வரும்போது மரியாதை என்ற பெயரால் அவர்களுக்கு இலவச பாஸ் தரவேண்டியிருக்கிறது, அதற்குக்கூட தியேட்டர்காரர்கள் வரி செலுத்த வேண்டுமென்பது மனிதாபிமான அடிப்படையில் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை. ஆகவே, அந்த உச்சவரம்பை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அல்லது இலவச டிக்கட்டுகளுக்கு வரி போடுவது என்பதை மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[பிற்பகல் 12-20]

இதிலே கூறப்பட்டிருக்கிற இன்னொரு கருத்தை நான் வரவேற்கிறேன். இந்த திருத்தச் சட்டத்தில் ஒரு வாரம் கொட்டகை நடக்கவில்லை என்றால், காட்சிகள் நடைபெறவில்லை என்றால் வரி ரத்து செய்யப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். அதை நான் வரவேற்கிறேன்.

அடுத்து, பினல்டி என்ற வகையில் அல்லது வேறு வகையில் 50 சதவீதத்திற்குக் குறையாமல் 150 சதவீதம் வரையில் இருக்கவேண்டுமென்று இருக்கிறது. இது மிகவும் அதிகமானது. 50 சதவீதம் என்பதே அதிகம். அதற்குமேல் போடுவது ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை. இதை நடைமுறைப்படுத்துகிற டிபார்ட்மென்டிலிருந்து வருகிற ஏ.சி.டி.ஓ., டி. சி. டி. ஓ., ஜே. சி. டி. ஓ சி.டி.ஓ. எல்லாம் இராஜாக்கள் போல் இருக்கிறார்கள். அவர்களுடைய வருமானம் என்ன என்று யாருக்கும் தெரியாது. நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுடைய வருமானம் என்ன, சொத்து என்ன என்பதை அறிவதற்காக ஸ்டேட்மென்ட் வைக்கச் சொல்கிறோம். அதைப்போல இந்த கமர்ஷியல் டாக்ஸ் டிபார்ட்

மென்டிலே இருக்கிறவர்களுடைய சொத்துக் கணக்கையும் அறிவதற்கு ஒரு ஏற்பாடு செய்தால் நன்றாக இருக்கும். அவர்கள் இன்றைக்கு பல இலட்சக்கணக்கான ரூபாய் சொத்துக்களை சேர்த்து வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதற்காக அந்தத் துறையினர் இந்த கொட்டகைக்காரர்களை பல்வேறு இன்னல்களுக்கு ஆளாக்குகிறார்கள்,

பல கொட்டகைகாரர்கள் இன்றைக்கு வாங்கியப் பணத்தைக் கட்ட முடியாமல் கடனாளிகளாக இருக்கிறார்கள். சேட்டிடம் கடன் வாங்கி தியேட்டர் கட்டியிருக்கிறார்கள். அந்தப் பணத்தைத் திரும்பக் கட்ட முடியாமல் நிரந்தர கொட்டகையானாலும் சரி, நடமாடும் திரை அரங்காக இருந்தாலும் சரி, அவற்றின் சொந்தக்காரர்கள் இன்றைக்கு கடனாளியாக இருக்கிறார்கள். தியேட்டர் கார்ப்பரேஷனிடம் பெற்ற கடனை கட்டமுடியாமல், அதன் காரணமாகக் கொட்டகைக் கட்டுகிறவர்களுக்கு கடன் கொடுப்பது இன்றைக்கு நிறுத்தப்பட்டிருக்கிறது, என்றால் அப்படி கடன் பட்டவர்கள் கட்டமுடியாமல் இருக்கிறார்கள். ஆகவே. மேலும், மேலும் அவர்களை வருந்தக்கூடிய முறையில் 150 சதவீதம் வரை போடவேண்டுமென்று சொல்வது நியாயமில்லை. அது 50 சதவீதத்திற்கும் குறைவாக இருக்க வேண்டும்.

அதைப்போல வரி ஏய்ப்பு செய்வதற்காக அதிகமாக பாஸ் கொடுக்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். அது சரியல்ல. ஒரு டீ கடை இருக்கிறது என்றால் அதிலே 10 பேர் வேலை செய்வார்கள். அதைப் போல ஒரு பங்க் கடை இருக்கிறது என்றால் அதிலே ஒரு 10 பேர் வேலை செய்வார்கள். வரி ஏய்ப்பு செய்து அவர்கள் எல்லாம் பாஸ் என்ற பெயரால் உள்ளே வந்து விட்டார்கள் என்று சொல்லி, பினல்டி போடுவது சரியல்ல. அதிகாரிகள் பார்க்கும்போது, அவர்கள் எல்லாம் தங்களுடைய வேலையை செய்துகொண்டிருக்கும்போது, அவர்களை வீண் சிரமத்திற்கு உள்ளாக்குவார்கள். அதற்கு இடமளிக்காமல் இருக்க இந்த டீ கடைக்காரர்கள், பங்க் கடைக்காரர்கள் போன்றவர்களுக்கு ஒவ்வொருவருக்கும் 10 இலவச பாஸ் கொடுத்தால்தான் அவர்கள் நல்ல முறையில் பணி செய்ய முடியும். இல்லை என்றால் அவர்களால் எப்படி டீ வியாபாரம் செய்யமுடியும்? பல தியேட்டர்காரர்களுக்கு டீ கடை, சைக்கிள் ஸ்டான்ட் மூலம் கிடைக்கின்ற பணம்தான் மிஞ்சும் என்று கருதுகிறேன். அதை கருத்தில் கொண்டு நீங்கள் பரிசீலனை செய்ய வேண்டும். இலவச அனுமதிச் சீட்டுக்கு வரி விதிப்பதை நீங்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

''ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி'' என்பதைப்போல அந்த ஊருக்கு யார் வந்தாலும் இந்த டூரிங் தியேட்டர்காரர்கள்தான் சென்று வரவேற்க வேண்டும். கலெக்டர் வந்தாலும் சரி, தாசில்தார் வந்தாலும் சரி, எலெக்ட்ரிசிட்டி டிபார்ட்மென்ட் அலுவலர்கள் வந்தாலும் சரி, பி.டபிள்யூ.டி.

எக்சிகியூட்டிங் எஞ்சினீயர் வந்தாலும் சரி, அவர்களை எல்லாம் ஓடோடிசென்று வரவேற்று உட்கார வைக்க வேண்டும். அப்படிப் பட்டவர்களுக்கு இலவச டிக்கெட் கொடுக்கும் போது அதற்கும் அபராதம் என்று சொல்வது சரியல்ல. அதை மனிதாபிமான அடிப்படையில் அமைச்சரவர்கள் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு வாரத்திற்கு கொட்டகை நடக்கவில்லை என்றால் வரி விலக்கு என்று நீங்கள் அறிவித்திருப்பதை நான் வரவேற்கிறேன். இலவச பாஸ் 10 பேர்களுக்கு என்று வைத்திருக்கிறீர்கள். 2 சதவீதம் என்றால், ஆயிரம் பேர்கள் அக்காமடேஷன் கொண்ட ஒரு தியேட்டருக்கு 20 இலவச பாஸ் என்று வரும். ஆகவே, இந்த 10-ஐ 20 ஆக ஆக்கவேண்டுமென்று கேட்டு, முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்கப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கேளிக்கை வரி திருத்தச் சட்ட முன்வடிவு மீது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே என்னுடைய ஒருசில கருத்துக்களை இந்த மாமன்றத்தின் முன்னால் வைக்க விரும்புகிறேன். எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் பாபு ஜனார்த்தனம் பேசியதைப்போல, நம்முடைய சர்க்கார் எது எதற்கெல்லாமோ வரி விலக்கு கொடுத்து விட்டு, இங்கே கேளிக்கை வரியை இலவச பாஸ்க்கும் செலுத்துகின்ற முறையில் சட்டத் திருத்தம் கொண்டு வந்து இருக்கிறது. நான் கேள்விப்படுகிறேன். தமிழகம் பிரிக்கப்படாது இருந்த நிலையில் காங்கிரஸ் ஆட்சியில் இருந்தபோது, மாண்புமிகு ஆர். வெங்கட்ராமன் அவர்கள் இங்கே அமைச்சராக இருந்த நேரத்தில் இதேமாதிரி ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து, பிறகு அது தேவையில்லை என்று தள்ளி விட்டார்கள். ஆகவே, ஏதோ பூசனிக்காய் போவது தெரியவில்லை, கடுகு போவது தெரிகிறது என்று சொல்வது போல், இந்த இலவச பாஸ்ஸுக்கு வரி விதிக்கும் யோசனையை அரசாங்கம் மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்படி வரி விதிக்கும் காரணத்தால் அந்த தியேட்டர் சொந்தக்காரர்கள் பாஸ் கொடுக்காமலேயே ஆட்களை அனுமதிக்கும் நிலைமை ஏற்பட்டு, அதன் மூலமாக தவறு செய்வதற்கு இது துணை போகாதா என்பதை உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இந்த அரசாங்கம் வந்த பின்னாலே, சுமார் 1,500 கிராமங்களிலே, இரண்டாம் நிலை, மூன்றாம் நிலையிலே இருக்கும் முனிசிபல் நகரங்களிலே உள்ள தியேட்டர்காரர்கள் கம்பவுன்டிங் முறையில் வரி செலுத்துவதற்காக ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தது. அரசாங்கம் அதைக் கொண்டு வந்த நேரத்தில், எதிர்ப்புக் குரல் கொடுத்த நேரத்தில், சினிமாக்காரர்களுக்கு இந்த அரசாங்கம் சலுகை காட்டுகிறது என்று சொன்ன நேரத்தில்

வரியேய்ப்பைத் தடுப்பதற்காகவும், இருக்கின்ற சிரமங்களைக் குறைப்பதற்காகவும் இந்த கம்பவுன்டிங் முறை கொண்டு வரப் பட்டதாக அரசு தரப்பில் சொல்லப்பட்டது.

அரசுக்குச் சேர வேண்டிய கேளிக்கை வரியாக இருந்தாலும் சரி, தொழில் வரியாக இருந்தாலும் சரி, அது குறையாமல் வர வேண்டும் என்பதிலே கருத்து வேறுபாடு இருக்க முடியாது. ஆனால், அதே நேரத்திலே இந்த அரசாங்கம் இந்த கம்பவுண்டிங் முறை கொண்டு வந்த பின்னாலே, தமிழ்நாடு அரசாங்கத்திற்கு வருகின்ற கேளிக்கை வரி தொகை உயர்ந்து இருக்கிறதா, குறைந்து இருக்கிறதா என்பதை உங்கள் மூலமாக நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். உயர்ந்து இருக்கிறது என்று சொன்னால் 2-ம் நிலை, 3-ம் நிலை முனிசிபல் நகரங்களுக்கு மட்டும் என்று இல்லாமல், எல்லா நகரங்களுக்கும்—பெரிய நகரங்கள்—மதுரை, சென்னை—உள்பட ஏன் கொண்டுவரப்படவில்லை? அல்லது இந்த கம்பவுன்டிங் முறை கொண்டு வந்ததால், அரசாங்கத்திற்கு வரி இழப்பு ஏற்படுகிறது என்று சொன்னால், அரசாங்கம் கொண்டு வந்த அந்த முறையால் வரி இழப்பு ஏற்படுகிறது என்ற காரணத் தால், அரசு மறு பரிசீலனை செய்ய விரும்புகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

அரசாங்கம் ஒரு கொள்கையை எடுத்துக் கொண்டு ஒரு சட்டத்தைக் கொண்டு வருகிறபோது, தமிழகத்திலே இருக்கும் எல்லாப் பகுதி மக்களுக்கும் ஒரே நிலையாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் தான் கொண்டு வரவேண்டுமே தவிர, அதிலே பாகுபாடு இருக்கக் கூடாது என்பதைச் சொல்லிக்கொள் கிறேன். இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை முனிசிபாலிட்டி களுக்கு மட்டும் கம்பவுன்டிங் முறை, பெரிய நகரங்களுக்குக் கிடையாது என்று சொல்வது, இரண்டும் கெட்டான் நிலை என்று சொன்னால் அது கடுமையாக இருக்கும் என்பதால், திரிசங்கு சொர்க்கமாக (குறுக்கீடு) இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள் கிறேன். இதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார் என்று கருதுகிறேன்.

அடுத்தபடியாக, வரியேய்ப்பு என்று ஏற்படுகிற நேரத்தில் திரைப்பட அரங்குகளில் வரியேய்ப்பு செய்பவர்களைப் பற்றி தகவல் கொடுப்பவர்களுக்கு 10,000 ரூபாய் கொடுக்கப்படும் என்று அறிவிப்பு வந்ததாகச் சொல்லப்படுகிறது. இது ஏதோ கொள்ளைக் காரர்கள், கொலைகாரர்களைப் பற்றி துப்பு கொடுப்பதற்கு சன்மானம் கொடுப்பது போலவும், திரையரங்குகளை நடத்து பவர்களைப் பார்த்து உஷார், உஷார் என்று சொல்வது போலவும், அவர்களை அவமானப்படுத்துவது போலவும் ஆகாதா என்பதை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இந்த அரசாங்கம் இந்த நிலையைப் பொறுத்த வரையில், ஒரு தெளிவான நிலையை எடுத்துக் கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வேன். இங்கே அவர்கள் தெளிவாகச் சொல்லவேண்டும். கம்பவுண்டிங் முறையை தொடரப்போகிறோம் அல்லது அதை விட்டுவிட்டு பழைய முறையினையே கையாளப் போகிறோம் என்ற உறுதி

மொழியை சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, அடுத்தபடியாக இந்த திருத்தச் சட்டமுன்வடிவிலே 4—வது பக்கத்திலே 8—வது உட்பிரிவிலே, ''இப்பிரிவில் என்ன சொல்லி யிருப்பினும், மொத்த வசூல் திறனைப் பொறுத்தமட்டில், ஒரு நிதியாண்டில் பத்து அல்லது அதற்கு மேற்பட்ட தடவைகள் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளை மீறினால், இப்பிரிவின்கீழ் அனுமதிக்கப்பட்ட பிறப்புரிமை, குறிப்பிட்ட அதிகாரியால் வரையறுக்கப்படக்கூடிய அத்தகைய கால அளவிற்கு, குறிப்பிட்ட அதிகாரியால் நிறுத்தி வைக்கப்படலாம்'' என்று போடப்பட்டிருக் கிறது. அரசாங்கத்தினுடைய நோக்கம் வரி ஏய்ப்பு இருக்கக் கூடாது என்று சொன்னால் இந்த உட்பிரிவின் மூலமாக 10 தடவைகள் தவணை கொடுக்கிறீர்களே, அது ஏன் என்றுதான் கேட்கவிரும்புகிறேன்?

[பிற்பகல் 12—30]

எனக்குத் தெரிந்த வரையிலே மல்யுத்தப் போட்டியிலேதான் சொல்வார்கள். அதிலே வெற்றிதோல்வி நிர்ணயிக்கிற நேரத்திலே நடுவராக இருப்பவர் கடைசியில் எண்ணுவார் 1, 2, 3 என்று சொல்லி பத்து வரையில் எண்ணிவிட்டு, பத்து எண்ணுவதற்குள் எழுந்து வராவிட்டால் அவர் ஆட தகுதியற்றவர் என்று சொல்லி போட்டி முடிவை நிர்ணயிப்பார்கள். அதைப்போல அரசாங்கம் 1, 2, 3 என்று 10 தடவைகள் எண்ணிக்கொண்டு ஏன் காத்திருக்க வேண்டும்? எனக்குத் தெரிந்த வரையிலே வேறு எந்த சட்டமுன் வடிவின் கீழும், 1, 2 என்று இப்படி விரல்விட்டு எண்ணி தவணை கொடுக்கிற முறை இல்லை என்று சொல்லி, இதற்கு மட்டும் ஏன் இப்படி தவணை கொடுக்க வேண்டும் என்று கேட்டு, இதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கொடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறேன். இந்த மன்றமும் எதிர் பார்க்கிறது. நிதி அரசாங்கத்திற்கு சேர வேண்டும், வருவாய் குறையக் கூடாது என்று சொன்னால், தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும் தண்டிக்கப் பெற்றாக வேண்டும். அமைச்சர் அவர்களுக்கு வேண்டுமானால் குறிப்பாக சொல்ல விரும்புகிறேன், வேறு எந்த வகையிலும் இது மாதிரி தவணை முறைகள் கிடை யாது. ஆகவே இந்த ''பத்து தடவைகள்'' என்ற வாசகம் இதிலே வரக்கூடாது என்று சொல்லி, நான் திருத்தத்தை கொடுத்திருக் கிறேன். தவறு செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பது அரசாங்கத்தின் கொள்கை என்று சொன்னால் இந்த பத்து தடவை தவணை தரும் வாசகம் அந்த உட்பிரிவு தேவைதானா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்தபடியாக இதேபோல 4-வது பக்கத்திலேயே 8-வது பிரிவிலே மூலச் சட்டத்தின் 7-ம் பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவிலே ''அவ்வாறு விதிக்கப்பட்ட அல்லது திருத்தி விதிக்கப்பட்ட வரியைப் போல் 1½ மடங்குக்கு மேற்படாத அபராதம்'' என்கிற தொடருக்கு பதிலாக ''அவ்வாறு விதிக்கப்பட்ட அல்லது திருத்தி விதிக்கப்பட்ட வரியைப்போல 50 சதவீதத்திற்கும் குறையாத, ஆனால் 150 சதவீதத்

திற்கும் மேற்படாத அபராதம்'' என்கிற தொடரைக் கொள்ள வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. 1½ மடங்கு என்று சொன்னால் என்ன 150 சதவீதம் என்று சொன்னால் என்ன என்று எனக்கு விளங்கவில்லை. இரண்டும் ஒன்றுதான் என்று நான் கருதுகிறேன். கிராமப்புறங்களில் இருக்கிற மக்கள் சொல்வார்கள். 'அவனா, ரூபாய்க்கு ரூபாய் வட்டி வாங்குவான்' என்று சொன்னால் அதற்கு 'அப்படியெல்லாம் இல்லை நான் பைசாவுக்கு பைசா தான்' வட்டி வாங்குகிறேன் என்று சொல்வதைப் போல இருக்கிறது. ஆகவே இதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை என்பதைக் கூற விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது, நாங்கள்தான் இந்த முறைகளைக் கொண்டு வந்திருக்கிறோம். 10 தடவை தவணை கொடுத்திருக்கிறோம், இது யாரும் இதுவரையில் செய்யாத சலுகை என்ற அளவுக்குப் பேசலாம், அதை போல 50 சதவீதத்திற்குக் குறையாத 150 சதவீதத்திற்கும் மேற்படாத என்றுதான் போட்டிருக்கிறோம் என்றெல்லாம் விளக்கம் சொல்லலாம். ஏனெனில் நான் அமைச்சரை நன்கு புரிந்தவன். ஆகவே இப்படி எல்லாம் பதில் தராமல் எனக்கு மேற்கண்ட இரு பொருள்கள் குறித்து தெளிவான விளக்கம் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல 5-வது பக்கத்திலே கடைசியில் என்ன சொல்லியிருக்கிறது என்றால், ''மேலும் உரிமையாளர் ஒருவர் அல்லது வேறு யாதொரு நபர் இச்சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்பட்ட யாதொரு வரிவிதிப்பு ஆணையை எதிர்த்து மேல் முறையீடு அல்லது மறுவிசாரணை மனு செய்துகொண்டால் அந்த மேல்முறையீடு அல்லது மறுவிசாரணை மனுவின்மீது முடிவெடுக்கப்படும் வரையில் அந்த மேல்முறையீட்டில் அல்லது மறு விசாரணை மனுவில் உள்ள தகராறுகளுக்குட்பட்ட தொகையைப் பொறுத்த வரையில், இப்பிரிவின் கீழ் செலுத்தத் தக்க அபராதம், தள்ளிப் போடப்பட வேண்டும் என்பதோடு; அத்தொகை அம்மேல் முறையீட்டின் அல்லது மறுவிசாரணை..'' என்று குறிப்பிடப்பெற்றிருக்கிறது என்றால் வணிகவரி செலுத்துபவர்களுக்கும் அரசு இந்தச் சலுகையை நீட்டிக்க தயாராக இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்? எனக்கு தெரிந்த வரையில் எல்லா நேர்வுகளிலும், மேல்முறையீடு என்றால் செலுத்த வேண்டிய தொகையை செலுத்தி விட்டு பிறகுதான் மேல்முறையீடு செய்து, அதன் விளைவின்படி திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டால் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று விதி இருப்பதாக அறிகிறேன். ஆகவே இது குறித்தும் அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, நான் மேலே குறிப்பிட்டவைகளை பரிசீலனை செய்து, 10 தடவை என்ற வாசகம் தேவையா இல்லையா என்பதை ஆராய்ந்து, அது ஏதோ காங்கிரஸ் கட்சியின் சார்பிலே கொடுக்கப்பட்ட திருத்தம் தானே என்று கருதி மறுக்கப்படாமல் மறு பரிசீலனை செய்து, பெருமனத்தோடு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டு, அமர்கிறேன்.

திரு. கே. ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த கேளிக்கை வரி மசோதா மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இதிலே இலவசமாக பாஸ் வழங்குவது சம்பந்தமாக ''பத்து இலவச அனுமதிச் சீட்டுகளுக்கு மிகையாக அல்லது கேளிக்கை நடைபெறும் இடத்திலுள்ள மொத்த இருக்கையில், இரண்டு சதவீதத்திற்கும் மிகையாக, இவ்விரண்டில் எது குறைவோ அந்த அளவிற்கு வழங்கப்பட்ட ......'' என்று இருக்கிறது. இதிலே மற்ற உறுப்பினர்கள் எடுத்துக் காட்டியதைப் போல 2 சதவீதம் அல்லது இரண்டில் எது குறைவோ அது என்று சொல்வதற்குப் பதிலாக 2 சதவீதம் என்று குறிப்பிட்டுச் சொல்லிவிட்டால் இதிலே குழப்பம் வராத அளவுக்கு உதவியாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஏற்கெனவே உறுப்பினர் சொல்லியது போன்று பல காரியங்களுக்கு உட்பட்டு இலவச பாஸ் வழங்கவேண்டி இருப்பதால் சிறிய தொகையிலே தொழில் நடத்துகிறவர்களுக்கு வரிவிதிப்பிலிருந்து விதி விலக்கு அளிக்கப்பட வேண்டியது அவசியம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 50-லே இருந்து 150 சதவீதம் என்று இல்லாமல் குறைந்தபட்சம் 50 சதவீதம் என்று விதிப்பதுதான் சரியாக இருக்கும் என்று கருதுகிறேன்.

அடுத்து நகர்ப்புறத்திலே ஏ. சி. தியேட்டர் என்று சொல்லி அதற்குத் தனியாக கட்டணம் வசூலிக்கிறார்கள். ஆனால் உள்ளே சென்றபின் மின்சார இணைப்பு பழுதடைந்திருக்கின்ற காரணத்தால் ஏ.சி. இல்லை என்று சொல்கிறார்கள். அப்படி ஏ.சி. இல்லாமல் இருந்தாலும் கூட ஏ.சி. க்கான கட்டணத்தை சேர்த்து வசூலித்துவிடுகிறார்கள். இந்த நிலைமையைப் போக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நகரங்களிலும், கிராமங்களிலும் உள்ள பல திரையரங்குகளிலும் பொது மக்களுக்குத் தேவையான கழிப்பிடங்கள் இல்லாமல் இருக்கின்றன. குடி தண்ணீர் வசதி இல்லாமல் இருக்கின்றது. இவை எல்லாம் சரியாக இருக்கின்றனவா என்பதை சோதிப்பதற்கு ஆவன செய்யவேண்டும். வரி வசூலிக்கின்றவர்கள் அங்கே செல்கின்ற நேரங்களில், இந்த வசதி இல்லாமல் இருக்கின்ற நிலைமையைப் போக்குவதற்காக, அந்த வசதிகள் எல்லாம் இருக்கின்றதா இல்லையா என்பதைச் சோதனையிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. என். ஏ. பூங்காவனம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கேளிக்கை வரி சம்பந்தமாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக தமிழகத்தைப் பொறுத்த வரையிலே குக்கிராமங்களிலே மற்றும் பல இடங்களிலே உள்ள ஏழை எளிய மக்கள் ஒரு கேளிக்கை என்ற வகையிலே சினிமா

காட்சிகளைப் பார்க்கச் செல்கிறார்கள். ஆனால் அப்படிச் செல்கின்ற மக்களுக்கு, பெரும்பாலான தியேட்டர்களில் எந்தவிதமான வசதியும் கிடையாது. குடிதண்ணீர் வசதி கிடையாது. சிறுநீர் கழிக்க எந்தவிதமான சௌகரியமும் கிடையாது. அதைப்பற்றி எல்லாம் மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த சட்டமுன்வடிவிலே ஒன்றும் கொண்டுவரவில்லை.

அடுத்து பாஸ் கொடுக்கின்ற விஷயத்திலே 10 என்று ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற அம்சம் ஒரு நல்ல அம்சமாகத்தான் இருக்கின்றது. அதை 20 என்று ஆக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இன்னொன்று. ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு தியேட்டர் ஒழுங்காக இயங்கவில்லை என்றால் அவ்வாறு இயங்காமல் இருப்பதை யார் நிச்சயிப்பது?

(பிற்பகல் 12–40)

பத்து முறை தவறினால் நடவடிக்கைகள் எடுக்கலாம் என்பது அவ்வளவு உகந்ததாக எனக்குப் படவில்லை. ஒன்று அல்லது இரண்டு முறை தவறினால் கூட அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டும் என்று கேட்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. அ. ரகுமான்கான் : 1982 ஆம் ஆண்டு கேளிக்கை வரி திருத்தச் சட்டத்தை வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் சமர்ப்பித்திருக்கிறார்கள். இது கேளிக்கை வரி திருத்தச் சட்டமாக இருந்தாலும் கேளிக்கையாகப் பேசாமல் சீரியஸாக அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு சில பிரச்னைகளைக் கொண்டுவர விரும்புகிறேன். இலவசப் பாஸ், காம்ப்ளிமென்டரி பாஸ்–க்கு கேளிக்கை வரி மேல், மேல் வரி, கூடுதல் வரி போட்டு இந்தக் கேளிக்கை வரியை அரசு அதிகப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்திற்காக இது கொண்டு வரப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதில் நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவது என்னவென்றால், இந்த இலவசப் பாஸ்களுக்கு, அதாவது காம்ப்ளிமென்டரி பாஸ்களுக்கு நீங்கள் கூடுதல் வரி கேளிக்கை வரிக்கு போடுவது என்பது நடைமுறையில் சாத்தியமில்லாத ஒரு விஷயம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அது ஒரு சிரமமான விஷமம். காரணம், இந்த காம்ப்ளிமென்டரி பாஸ் யார் வாங்குகிறார்கள்; பெரும்பாலும் உங்கள் அதிகாரிகள்தான் வாங்குகிறார்கள். வி. ஐ. பி. க்கள்தான் அந்த பாஸ்களை வாங்குகிறார்கள். பொறுப்பில் இருப்பவர்கள்தான் அதை வாங்குகிறார்கள். அப்படி பாஸ் வாங்குபவர்கள் படம் பார்ப்பதற்கு சினிமா தியேட்டர் ஓனர்கள் வரி கட்ட வேண்டும் என்று சொல்வது எந்த வகையில் நியாயம்? அமைச்சர் அவர்களுக்கு ஒரு தியேட்டர் இருந்து அப்படி கட்டவேண்டிய ஒரு நிலை இருந்தால், இதை நிச்சயமாக ஏற்கமாட்டார்கள். ஓசியில் படம் பார்த்துவிட்டு செல்கிறவர்களுக்கு தியேட்டர் முதலாளி வரி கட்டவேண்டும் என்று நீங்கள் எதிர்பார்ப்பது சரியாக இருக்காது.

இப்போது இந்த வரிகளையெல்லாம் பார்த்து, அல்லது சினிமாத் தியேட்டருக்குள் நுழைந்து கணக்குகளைப் பார்த்து, விதிமுறைகள் எல்லாம் பின்பற்றப்படுகிறதா என்றெல்லாம் பார்க்க ஏ. ஸி. டி. ஓ., டி. சி. டி. ஓ. வருகிறார்கள். அவர்கள் வருகிறார்கள், ஒரு படம் பார்க்கிறார்கள். அதில் ஒரு காதல் காட்சி வருகிறது. ஏ. ஸி. டி. ஓ. அந்தக் காதல் காட்சியைப் பார்த்து, அதில் வருகிற நடனத்தைப் பார்த்து விட்டு உட்கார்ந்து விடுகிறார்கள். அப்படி அவர் சினிமா பார்க்க உட்காரும்போது தியேட்டர் ஓனர் என்ன செய்யமுடியும்? அந்த ஓனர் அந்த அதிகாரிக்கும் சேர்ந்து வரி கட்டுவதைத் தவிர வேறு வழியில்லை. அதிகாரிகளைப் பகைத்துக் கொள்ளமுடியாது. பகைத்துக் கொண்டால் தியேட்டரை ஓட்டமுடியாது. இதெல்லாம் நடைமுறையில் உள்ள சிக்கல்கள். இதன் மூலம் நீங்கள் எதிர்பார்க்கிற வருமானம் வந்துவிடப் போவதில்லை. ஆனால் இந்த கேளிக்கை வரி இருக்கிறதே, இது ஏமாற்றப்படுகிறது. தமிழ்நாடு முழுவதும் பல தியேட்டர் ஓனர்கள் இந்த வரியை ஏமாற்றிக்கொண்டிருக்கிறார்கள். அதிகாரிகள் துணையோடு ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு என்ன செய்யப் போகிறீர்கள்? கேட்டால் இந்த வரியை யார் ஏமாற்றுகிறார்களோ அந்த சினிமா தியேட்டர் அதிபர்கள்பற்றி, அவர்கள் வரி ஏய்ப்பது பற்றி அரசுக்கு தகவல் கொடுத்தால் ரூ. 10,000 பரிசு வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறீர்கள். இதிலிருந்து என்ன தெரிகிறது? வரி ஏய்ப்பு என்பது ஒரு கலையாக, அற்புதமாக, சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதை உங்கள் அரசாங்கத்தால் கட்டுப்படுத்தமுடியவில்லை. ஆகவேதான் இன்று செயலற்றுப்போய் ரூ. 10,000 பரிசு கொடுக்கிறோம் என்று வைத்திருக்கிறீர்கள். இந்த வரி ஏய்ப்பைத் தடுக்கும் முயற்சியில் நீங்கள் ஈடுபட்டால் போதுமானது.

பல உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள், கம்பௌண்டிங் டாக்ஸ் பற்றி. இது எங்கே இருக்கிறது. ஏற்கனவே உள்ள பஞ்சாயத்துக்களில் இருக்கிறது. முனிசிப்பாலிட்டியில் இருக்கிறதா என்றால் இல்லை. ஆனால் இந்த கம்பௌண்டிங் டாக்ஸ் பற்றி நமது அமைச்சர் அவர்கள், திரு எஸ். டி. எஸ். அவர்கள் இங்கே பேசியிருக்கிறார்கள். 20 கோடியில் இருந்து முப்பது கோடி ரூபாய்வரை வருமானம் வந்திருக்கிறது என்று. ஆனால் கிராமப்புறங்களில் உள்ள சினிமாக் கொட்டகைகளில் டிக்கட் விகிதாசாரம் குறைந்தது, சர்சார்ஜ் குறைந்தது. சிலயிடங்களில் குறைந்திருக்கிறதே தவிர ஒட்டுமொத்தமாக கம்பௌண்டிங் டாக்ஸ் மூலம் வருமானம் அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது என்ற கருத்தை சொல்லியிருக்கிறார்கள். முதல் அமைச்சர் அவர்களும் இந்தச் சபையில் சொல்லியிருக்கிறார்கள், கம்பௌண்டிங் டாக்ஸ், முனிசிப்பாலிட்டிகளில் வரும், டவுன்ஷிப்களில் வரும் என்று. இங்கே ஒரு இனிப்பான செய்தியை அறிவிக்கப் போகிறேன் என்று உறுப்பினர்கள் எல்லோரும் பேசிய பின் சொன்னதாக, போன தொடர்கூட்டத்தில் சொன்னதாக எனக்குச் சரியாக நினைவில்லை.

ஆனால், சபைக்குறிப்பிலே இருக்கிறது. 79-லே என்று கருது கிறேன். இததகைய கருத்து அறிவிக்கப்பட்டது. மேலும், இந்த காம்பவுண்டிங் டாக்ஸ் லாபகரமாக இருக்கிறது என்பது தெரிந்ததற்குப் பிறகும், ஏற்கனவே 1,400 தியேட்டர்களிலே இது அமுலாக்கப்பட்டப் பிறகும், நல்லமுறையிலே வருமானம் வரக்கூடியது என்று தெரிந்ததற்குப் பிறகும், முதலமைச்சர் அவர்கள் அஷ்ஷூரன்ஸ் கொடுத்தற்குப் பிறகும், சம்பந்தப்பட்ட அமைச்சர் சட்டப்பேரவையிலே பேசியதற்குப் பிறகும், இதை நாம் எக்ஸ்டென்ட் பண்ணாமல் இருப்பது சரியாக இருக்காது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன். சென்னை போன்ற நகரத்திலே பெரிய தியேட்டர் களிலே, தமிழ்ப்படங்கள் துரதிருஷ்டவசமாகப் போடப்படுவ தில்லை. ஆனால், இந்திப் படங்களைப் போடுகிறார்கள். இதை இந்தச் சர்க்காரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். பெரிய தியேட்டர்களில் தமிழ்ப்படங்கள் போடுவதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதற்கு இந்த அரசு ஒரு உத்தரவு கொண்டு வந்ததாகக் கேள்விப்பட்டேன். வருடத்திற்கு 12 வாரங்கள் அப்படித் தமிழ்ப் படங்கள் போடவேண்டும் என்று உத்தரவை கொண்டு வந்தபோது, சென்னை ஹை கோர்ட்டுக்குச் சென்று, அந்த உத்தரவு செல்லாது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், உங்கள் கவனத்திற்கு துணை சபாநாயகர் அவர்கள் மூலமாக ஒன்றைக் கொண்டு வருகிறேன். அப்பேர்ப்பட்ட உத்தரவை ஆந்திராவிலே போடுகிறார்கள்; வருடத்திற்கு 12 வாரங்கள் தெலுங்குப் படங்கள் போட வேண்டுமென்று சொல்லுகிறார்கள். கர்நாடகத்திலேயும் இப்படிப்பட்ட உத்தரவு போடப்பட்டிருக் கிறது. அங்கே யாரும் இப்படி தடை போடவேண்டுமென்று கோர்ட்டுக்குப் போகவில்லை. ஆனால், இங்கே தமிழகத்திலேதான் தமிழ்ப் படங்கள் போடவேண்டுமென்று ஒரு நிலைமை ஏற்பட்ட தற்கும் பிறகும்கூட, கோர்ட்டுக்குப் போயிருக்கிறார்கள்; ஆனால், இதை நீங்கள் தடுக்க முடியும். அது எப்படியென்றால். இந்த சட்ட மன்றத்திலே ஒரு தீர்மானம் கொண்டு வாருங்கள். அல்லது ஒரு சட்ட முன்வடிவைக் கொண்டு வாருங்கள். அதைப் தப்பு என்று யாரும் சொல்ல முடியாது. தமிழ்ப் படங்கள் போடவேண்டும் என்று சொல்வதற்குக் காரணம், நாம் இப்போது கோர்ட்டிலே ஆங்கிலம் இருக்கக்கூடாது என்றும், ஹை கோர்டிலே தமிழ்த் தெரிந்தவ தான் நீதிபதியாக இருக்கவேண்டும் என்றும் சொல்லுகிறபோது, தமிழ்ப் படங்களை குறைந்தது வருடத்திற்கு 12 வாரங்கள் காட்ட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன்: கலெக்டர்களுக்கு அதிகாரம் இருக்கிறது. அது என்னவென்றால், சினிமா தியேட்டர்களில் அதன் காபாசிடி 1000 என்றால், 3-வது செக்ஷனிலே அதற்கான அதாரிடி அவர்தான் என்று

சொல்லுகிறபோது, 1000 காபாசிட்டியை அனுமதிப்பதற்குப் பதிலாக 1100 பேர்களை. அதாவது கூடுதலாக 100 பேர்களை அனுமதித்தால், அதற்கு அபராதம அல்லது நடவடிக்...க எப்படி எடுக்கப்படுகிறது? 9 தடவைகள் தப்பு செய்துவிட்டு, தப்பு செய்ய அனுமதித்துவிட்டு, 10-வது தடவை செய்யும்போது நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னால், அது சரியா? ஆரம்பத்திலே நடவடிக்கை எடுக் வேண்டும்; அதைக் கண்டிக்க வேண்டும் இல்லாவிட்டால், அது எப்படி நியாயமாகும்? முறையாகும்? அந்தப் பிரிவை அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும்.

சென்னை நகரிலே போஸ்டர்கள் ஒட்டப்படுகின்றன. அந்தப் போஸ்டர்கள் மிகவும் ஆபாசமாக இருக் கின்றன. அவைகளை கவனிக்க வேண்டும். காரணம், ஆபாசம் இருக்கக்கூடாது என்று நாம் மசோதாவை நிறைவேற்றிவிட்டு, சரியான நடவடிக்கை எடுக்காமல் இருப்பது சரியல்ல. ஆகவே, நாம் அவைகளையெல்லாம் பார்த்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இதிலே முக்கியமான பிரச்சினை, கம்பவுண்டிங் சிஸ்டத்தை கொண்டு வரவேண்டும். எதற்காக என்றால் வரி ஏய்ப்பு இருக்கிறது என்று சொல்லி, என் உரையை நிறைவு செய்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சட்டமுன்வடிவைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள், அப்படித் தங்களுடைய கருத்தைத் தெரிவிக்கின்றபோது, பல இடங்களில் ஒட்டியும், சில இடங்களில் வெட்டியும் பேசியிருக் கிறார்கள் என்றால், இந்த அரசு கொண்டு வந்த இந்தச் சட்டத்தை எல்லோருமே ஆதரிக்க முடியாமலும் எல்லோருமே எதிர்க்க முடியாமலும் வெட்டியும், ஒட்டியும் பேசியிருக்கிறார்கள்.

இந்த அரசு எவ்வளவோ ஆழ்ந்து சிந்தித்து, ஒரு நடு நிலைமைக்கு வந்து, அதற்குப் பிறகு எந்த அளவுக்கு நன்மை செய்யவேண்டுமோ. அந்த அளவுக்கு நன்மை செய்து தந்திருக் கிறது. எந்த அளவுக்கு அரசின் வருமானத்தை அதிகப்படுத்த வேண்டுமோ, அந்த அளவுக்கு செய்து கொண்டிருக்கிறது. உதாரணத்திற்கு ஒன்றை சொல்கிறேன். இங்கே திரிசங்கு சொர்க்கம் என்று சொன்னார்கள். அதைவிட விளக்கமாகச் சொல்ல வேண்டுமானால், குதிரை சவாரி செய்வதாக வைத்துக் கொள்வோம். அதற்கு கொள்ளு போடுகிறோம். கொள்ளு போடுகிறபோது, அந்தக் குதிரை வாயை 'ஆ' என்று பிளக்கும். அதேபோல், கடிவாளத்தைக் கொண்டு போகிறபோதும் அது தன் வாயை 'ஈ' என்று பிளக்கும். அது அதற்குப் பயன்படாது. அதேபோல், இங்கே பல நன்மைகளைச் செய்திருக்கிறோம். தியேட்டர்கள் நல்லமுறையிலே நடக்கவேண்டும் என்பதற்காக, குதிரையை சவாரிக்குப் பயன்படுத்துவதைப் போல, அந்தக் குதிரைக்கு கொள்ளு போடுவதைப்போல அவர்களும் நல்ல

(திரு. எஸ். டி. சோமசுந்தரம்) [1982 ஏப்ரல் 7

(பிற்பகல் 12.50)

முறையிலே லாபம் பெறவேண்டும் என்ற எண்ணத்தோடு சில சலுகைகளை அவர்களுக்குக் கொடுத்திருக்கிறோம். குதிரை சவாரி செய்வதைப் போல, அரசுக்கும் வருமானம் வரவேண்டும், அவர்களிடமிருந்து வரி வாங்குவது தேவை என்பதால், நாம் இதை இங்கே கொண்டு வந்திருக்கிறோம். அதைத் தான் பேசுகிறபோது எல்லோரும் சொன்னார்கள். பலர் சிலவற்றை ஆதரித்தும், சிலவற்றை மறுத்தும் சொன்னார்கள். மறுக்கிற போது கண்டும் காணாமல் மறுத்திருக்கிறார்கள் என்பது இதிலே இருந்து உங்களுக்கு நன்றாகத் தெரியும். முதலிலே சொல்கிற போது திரை அரங்குகளுக்கு இலவச அமைதி சீட்டு என்கிற போது, அனுமதிச்சீட்டு இல்லாமல் தடுத்து விடவில்லை. அனுமதிச்சீட்டு இன்றைக்கு கொடுக்கப்படுகிறது. கொடுக்கப் படுகிற அனுமதிச்சீட்டுக்கு, இன்றைக்கு அனுமதிசீட்டே தேவையில்லை என்று பேசியிருக்கிறார்கள். அனுமதிச்சீட்டு அதிகமாகத் தேவையென்றும் பேசியிருக்கிறார்கள். இன்றைக்கு அனுமதிச் சீட்டை கட்டுப்படுத்தியிருக்கிறோம். 10 அனுமதிச்சீட்டுகள் வரை கொடுக்கலாம் என்று வைத்திருக்கிறோம். 10 அனுமதிச் சீட்டுகள் என்றால் ஒரு வாரத்திற்கு இல்லை, ஒரு நாளைக்கு இல்லை, ஒரு ஷோவிற்கு 10 கொடுக்கலாம் என்று வைத்திருக் கிறோம், இதிலே யாருக்கும் எந்தவிதமான சங்கடமும் இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொளகிறேன். அதை கொண்டு வருகிற அதே நேரத்தில் நன்மை செய்திருக்கிறோம் என்றால், இருக்கிற கம்பவுண்டிங் சிஸ்டத்தில் 5—பி, 5—ஏ என்று இருக்கிறது. அதிலே 5—பி என்பதிலே அவர்களுக்கு வாரா வாரம் இவ்வளவு கட்டவேண்டுமென்று இதிலே இருக்கிறது. ஒரு வாரம் பூராவும் தியேட்டரை ஓட்டாமல் இருந்தால் அவர்களுக்கு வரி இல்லை என்று சொல்லியிருப்பதிலே அவர்களுக்கு நன்மை செய்திருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் இங்கே சொல்கிறபோது பத்து முறை தவறு செய்தால் என்ன செய்வது என்பதைப் பற்றி சொல்லி இருக்கிறார்கள். மாண்புமிகு பாபு ஜனார்த்தனன் அவர்கள் பேசுகிறபோது இது பற்றி அவருடைய கருத்தைத் தெரிவிக்கவில்லை. பதினைந்து என்று இருக்கவேண்டுமென்று நினைக்கிறார்களா? அதுபற்றி ரகுமான்கான் அவர்களும் ஒன்றும் சொல்லவில்லை. முக்கியமான பிரிவு என்பதாலே ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் 10 என்று சொல்வது, தவறு செய்தால் அவர்களுக்கு இருக்கிற உரிமைகளை இன்றைக்கு எடுத்துவிடுகிறோம். 5—பி என்ற பிரிவின் மூலமாக கம்பவுண்டிங் பண்ணுகிற உரிமையைத் தான் எடுத்து விடுகிறோமே தவிர தியேட்டர் நடத்துகிற எல்லா உரிமைகளும் இருக்கின்றன. அவர்கள் சொல்கிறபோது 10 என்ன 9 முறை தவறு செய்தால் இன்றைக்கு அனுமதிக்கிறோமா என்று கேட்டிருக்கிறார்கள். அதற்காகவே உரிய சட்டம் இருக்கிறது. உங்களுக்கு தவறு செய்தால் மற்ற சட்டங்களிலே அதை நிறுத்துவதற்கும் வழிவகை இருக்கிறது, அதுமட்டுமல்லாமல் சட்டத்திலே அவர்களுக்கு அபராதம் விதிப்பதற்கும், ஜெயிலுக்கு அனுப்புவதற்கும் வேறு வழி இருக்கிறது. குறிப்பிட்ட ஒரு

1982 ஏப்ரல் 7] திரு. எஸ். டி. சோமசுந்தரம்

பிரிவுக்கு தான் கம்பவுண்டிங் பெசிலிட்டிசை அவர்கள் பயன் படுத்திக் கொள்ள முடியாது என்பதை தவிர தவறு செய்தால் அவர்களுக்கு அபராதம் போடுவதற்கு, ஜெயிலுக்கு அனுப்புவதற்கும் சட்டத்திலே இடம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் சொன்னார்கள். $1\frac{1}{2}$ மடங்கு, 150 சதவீதம் என்பதைச் சொன்னார்கள். $1\frac{1}{2}$ மடங்கு என்பதும் 150 சதவீதம் என்பதும் ஒன்று தான். என்ன சொல்லியிருக்கிறது என்றால் முதலில் அவர்களுக்கு $1\frac{1}{2}$ மடங்கு அல்லது 150 சதவீதத்திற்கு அதிகமாக வரி போடக்கூடாது என்று முதலிலே இருக்கிறது. அதில் மாற்ற வேண்டியது, அந்த 150 சதவீதம் அல்லது $1\frac{1}{2}$ மடங்கு என்பதை மாற்றவில்லை. 150 சதவீதம் அப்படியே இருக்கிறது; $1\frac{1}{2}$ மடங்கு அப்படியே இருக்கிறது. ஆகவே மாற்றம் இருப்பது முதலிலே எவ்வளவு வேண்டுமானாலும் குறைத்து போடலாம். குறைத்து வரி விதிப்பது 50 சதவீதத்திற்கு குறைக்கக்கூடாது என்பது லோயர் லிமிட். முதலிலே அப்பர் லிமிட் என்று 150 சதவீதம். லோயர் லிமிட் என்னவென்று சொல்லவில்லை. இன்றைக்கு 50 சதவீதம் என்பதை லோயர் லிமிட் என்று சொல்லியிருக்கிறோம். அதில் வேறு ஒரு மாற்றமும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் உங்கள் மூலமாக அவரைக் கேட்டுக் கொள்ள விரும்புவதெல்லாம் $1\frac{1}{2}$ மடங்கு அல்லது 150 சதவீதம் என்று ஏன் வரவேண்டும்? குறைந்தபட்சம் 50 சதவீதம் என்பதற்காகக் கொண்டு வந்தார்கள் என்று சொன்னார்கள். நான் அதைக் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் $1\frac{1}{2}$ மடங்கு, 150 சதவீதம் இரண்டுமே ஒன்றாக இருக்கும்போது, இரண்டும் ஏன் இருக்கவேண்டும்? ஏதாவது ஒன்றை வைத்துக் கொள்ளலாமே, அதனுடைய விளக்கம் என்ன என்றுதான் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : ஒன்றைத்தான் வைத்திருக்கிறோம். முதலிலே அதிகமாக $1\frac{1}{2}$ மடங்கு வரைக்கும் என்று இருந்தது. அதை பர்சன்டேஜில் சொல்ல வேண்டுமென்பதற்காக அதிகமாக 150 சதவீதம் என்றும், குறைந்தது 50 சதவீதம் என்றும் சொல்லியிருக்கிறார்களே ஒழிய, 150 சதவீதம் என்பது $1\frac{1}{2}$ மடங்காகி விடுகிறது. ஆனால், 50 சதவீதம் என்பதை, அந்த $1\frac{1}{2}$-ல் 50 சதவீதம் என்று வந்தால், ஃப்ராக்ஷனில் வந்து விடும் என்பதற்காகத்தான் இவ்வாறு வைக்கப்பட்டிருக்கிறதே தவிர வேறல்ல.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு இன்னமும் விளங்கவில்லை. 150 சதவீதம், 50 சதவீதம் என்று சொன்னால், 15, 1/2 என்று வைத்திருக்கலாமே. அதை ஏன், $1\frac{1}{2}$ அல்லது $10\frac{1}{2}$ சதவீதம் என்று வைக்க வேண்டும்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : 1½ என்பதை திருப்பி எழுதியிருக்கிறார்கள். 1½ என்பதை 150 சதவீதம் என்றும். 1/2 என்பதற்குப் பதிலாக 50 சதவீதம் என்றும் எழுதியிருக்கிறார்கள். அது தவிர வேறு மாற்றம் ஒன்றும் இல்லையென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப் போல், மேல் முறையீடு செய்கிறபொழுது என்ன செய்வது என்றெல்லாம் சொன்னார்கள். மேல் முறையீடு என்றால், அவர்கள் கட்டவேண்டிய வரி ரூ. 10,000 என்று வைத்துக் கொள்ளுங்கள். மேல் முறையீடு என்று சொல்லும் போது ரூ. 10,000 என்பது ரூ. 5,000 என்று வந்து விட்டால் அவர்களுக்குப் போடுகிற பெனால்ட்டி, மற்றும் அதற்கு இன்டரஸ்ட் போடப்படுகிறதே, அந்த இன்ட்டரஸ்ட் போடுவதை மேல் முறையீடு அதிகாரிகள் முடிவு செய்கிற வரையிலும் அதை நிறுத்தி வைத்திருக்கிறோம்.

It is a postponement. அதற்குப் பிறகு மேல் முறையீடு ரூ. 10,000 கட்ட வேண்டியது ரூ. 8,000 என்றால், ரூ. 8,000-க்கு மட்டுமே இன்றைக்கு போடப்படுகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். வேறு ஒன்றும் மாற்றம் இல்லையென்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதலிலே கேட்டார்கள் எப்படி அந்த 10 தடவைகள் என்று எதிர்பார்க்கிறோம் என்று. 10 தடவைகள் அல்ல. அப்படி இல்லாமல் இருந்தால் ரூ. 1000 என்று வரும். இந்த சட்டத்தில் 5 (பி), 5 (ஏ), பிரிவுகளை மீறுபவர்களுக்கு டிக்கட் அதிகமாகக் கொடுப்பவர்களுக்கு ரூ. 1,000 அபராதம் போடுவதற்கு எப்போதுமே அதிகாரம் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

எல்லோருக்கும் நான் பதில் சொல்லியிருக்கிறேன். யாருக்காவது சொல்லவில்லையென்றால், கேட்டால், உடனே சொல்லத் தயாராக இருக்கிறேன் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்றைக் கேட்டார்கள், இந்த கம்பவுண்டிங் மூலமாக நன்மையா, கெடுதலா என்று கேட்டார்கள். கம்பவுண்டிங் மூலமாகச் சில இடங்களிலே நன்மையும் வருகிறது. சில இடங்களிலே அரசுக்கு வருவாயும் குறைந்து விடுகிறது. இருந்தாலும், இன்றைக்கு கம்பவுண்டிங் சிஸ்டத்தையே மறுபரிசீலனை செய்து அதை நீக்க வேண்டுமென்ற எண்ணம் அரசுக்கு இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கம்பவுண்டிங் சிஸ்டத்தை எல்லா இடங்களுக்கும் கொண்டு வர வேண்டுமென்று அருமைச் சகோதரர் துரைமுருகன் அவர்கள் சொன்னார்கள். இன்றைக்குக் கம்பவுண்டிங் சிஸ்டம் நகரங்களில் இருக்கிறது, பஞ்சாயத்து யூனியன்களில் இருக்கிறது.

டவுன் பஞ்சாயத்துக்களில் இருக்கிறது. மூன்றாவது கிரேட் முனிசிபாலிட்டிகளிலும், இரண்டாவது கிரேட் முனிசிபாலிட்டிகளிலும் இருக்கிறது.

திரு. பாபு. ஜனார்த்தனன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டவுன் ஷிப்புகளில் இந்த கம்பவுண்டிங் முறை கிடையாது. அதுபோல் கார்ப்பரேஷன்களிலும் கிடையாது. இது நல்ல முறையிலே இருக்கிறது. அரசாங்கத்திற்கு வருமானம் வருகிறது என்பதால், எல்லா இடங்களிலும் கம்பவுண்டிங் சிஸ்டத்தை வைத்துவிட்டால் நல்லமுறையில் அரசுக்கு வருமானம் வரும் என்ற கருத்தைத்தான் இங்கே கூறியிருக்கிறோம்.

[பிற்பகல் 1.00]

திரு. என். எஸ். வி. சித்தன் ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காம்பவுண்டிங் முறையைப் பற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லுகின்ற நேரத்தில் சிலயிடங்களில் இலாபமாக இருக்கிறது, சிலயிடங்களில் நஷ்டமாக இருக்கிறது என்று சொன்னார்கள். இது ஏதோ தெனாலிராமன் கதை சொல்வதைப் போன்று, முன்னாலே பார்த்தால் அப்படியிருக்கிறது; பின்னாலே பார்த்தால் இப்படியிருக்கிறது என்று பழமொழி சொல்வார்களே அதைப்போல இருக்கிறது என்று நான் கருதுகிறேன். நான் உங்கள் மூலமாகத் திட்டவட்டமாக அவரிடம் கேட்க விரும்புகிறேன் கம்பவுண்டிங் சிஸ்டத்தினால் அரசுக்கு வருவாய் அதிகமா அல்லது இழப்பா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :- பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் சொல்லி வருவதை மாண்புமிகு உறுப்பினர் பாபு ஜனார்த்தனம் அவர்கள் தவறாகப் புரிந்து கொண்டார்கள். இன்றைக்கு எங்கெங்கே இருக்கிறது என்று தெரிவிக்கின்றபொழுது ஊராட்சிகளிலே இருக்கிறது; பஞ்சாயத்து யூனியன்களிலே இருக்கிறது என்று சொன்னேன். டவுன் பஞ்சாயத்து என்று சொன்னேன் நான் டவுன் ஷிப் அல்ல. டவுன் பஞ்சாயத்தில் இருக்கிறது என்று சொன்னேன். மூன்றாம்தரம், இரண்டாம் தரம் நகரங்களில் இருக்கிறது. ஃபர்ஸ்ட் க்ரேடு முனிசிபாலிட்டிகளுக்குக் கொண்டு வருவதைப் பற்றி அரசு யோசித்துக்கொண்டிருக்கிறது என்பதைச் சொன்னேனே தவிர டவுன்ஷிப்புக்கு இருப்பதாக நான் சொல்லவில்லை. முதல் கிரேடுக்குக் கொண்டு வரும்பொழுது டவுன்ஷிப்பையும் அதைப்பற்றிச் சேர்த்து ஆராயும், அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பேசும்பொழுது மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரம் அவர்கள் சிலவற்றைச் சொன்னார்கள். சினிமாக் கொட்டகைகள் சரியாக இல்லை, கழிப்பிடங்கள் இல்லை; குடிநீர் இல்லை பெஞ்சு நாற்காலிகள் சரியாக இல்லை என்றெல்லாம்

சொன்னார்கள். அவைகளுக்கு அனுமதி கொடுக்கும்பொழுது பார்த்து அனுமதி கொடுக்கிறார்கள். எனவே, எங்கேயாவது ஏதாவது குறிப்பிட்ட இடங்களில் தவறு இருந்தால் சம்பந்தப் பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பேசும்பொழுது இன்ஸ்பெக்ஷனைப் பற்றிச் சொன்னார்கள். இன்ஸ்பெக்ஷனுக்காகப் போகும்பொழுது அவர்களுடைய பாஸ் காம்ப்ளிமெண்ட்ரி பாஸில் சேராது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்திப் படங்களைப் பற்றிச் சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு எந்தெந்தப் படங்களை நீங்கள் காட்டுங்கள் என்று அரசு சட்டம் போடமுடியாது. தொழில் செய்யும்பொழுது எந்தெந்தத் தொழில் செய்ய வேண்டுமென்று போடுவது முடியாது என்று கருதுகிறேன். அதுமட்டுமல்ல, தொழில் செய்பவர்கள் எந்தெந்தப் படங்களைப் போட்டால் அவர்களுக்கு இலாபம் வருமோ அதைத்தான் அவர்கள் போடுகிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டுமல்ல, அந்தப் படத்தைப் போடும்பொழுது அதிலே மக்களுக்குக் காட்டக் கூடாத நிகழ்ச்சிகள் வந்தால் அதை சென்சார் போர்டிலே கட் செய்து விடுகிறார்கள். சென்சார் போர்டு அதைப் போடக் கூடாது என்று தெரிவித்து விடுகிறது. சென்சார் போர்டில் அனுமதிக்கப்படுபவைகளை நீங்கள் போட வேண்டாமென்று நாம் சொல்ல முடியாது. நான் முதலிலே இங்கேதான் சொல்லியிருக்கிறேன் என்று நினைக்கிறேன். முன்பெல்லாம் தமிழ்ப் படம் பார்க்க வேண்டும் மற்றவைகளையெல்லாம் பார்க்கக் கூடாது மற்றப் படத்தைப் போடுகின்றபொழுது அங்கேயிருக்கின்ற—பெரும்பாலும் தமிழ்நாட்டில் இருக்கின்ற பட அதிபர்கள்—படக் கொட்டகைகளில் சொந்தக்காரர்கள் இந்திப் படத்தைப் போடுவதற்குப் பயந்து கொண்டிருந்தார்கள். இன்றைக்குப் பயப்படவில்லை என்பதாலே அதிகமாக போடுகிறார்கள். ஆகவே, இதையெல்லாம் பிரச்சாரத்தின் மூலம் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு நீங்கள் கேட்ட கேள்விகளுக்கெல்லாம், எல்லாவற்றிற்கும் பதில் சொல்லியிருக்கிறேன் என்று கூறி இதை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாமன்றத்தினுடைய துணைத் தலைவரவர்களே, இந்த காம்பவுண்டிங் சிஸ்டம் சம்பந்தமாக நம்முடைய அமைச்சரவர்கள் இங்கே விளக்கம் கொடுத்திருக்கிறார்கள், அனால், அதே நேரத்தில் நான் அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வந்தது இதுதான். ஏற்கனவே இந்த அவையில் முதல்வரவர்களே காம்பவுண்டிங் சிஸ்டம் முனிசிபாலிட்டிக்கும், டவுன்ஷிப்புக்கும் கொண்டு வரப்படும்

என்று சொன்னதற்குப் பிறகு அதிலிருந்து நம்முடைய அமைச்சரவர்கள் மாறுவது ஏன் என்று கேட்டு, இதை ஒரு செலக்ட் கமிட்டிக்கு விடலாம், குறிப்பாக காம்ப்ளிமெண்ட்ரி பாஸ்க்கு என்டெர்டெயின்மெண்ட் டாக்ஸ் மாதிரி கூடுதல் வரி போடுகின்ற இந்தப் பிரச்னையில் நீங்கள் உட்பட காம்ப்ளிமென்ட்ரி பாசில் பாதிக்கப்படுவீர்கள், ஆகவே நான் சொல்வது செலக்ட் கமிட்டிக்கு அனுப்பலாம் என்பது. திரு. வெங்கட்ராமன் அவர்கள் காலத்திலே அப்படிதான் செய்யப்பட்டது என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த அரசு காம்பவுண்டிங் சிஸ்டத்தை மறுபரிசீலனை செய்து, இல்லாமல் ஆக்குகின்ற எண்ணத்தில் இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதை முதலிலே சரியாகச் சொல்லிவிட்டேன்.

இன்றைக்குக் காம்பவுண்டிங் சிஸ்டம் பஞ்சாயத்து யூனியன், பஞ்சாயத்து, டவுன் பஞ்சாயத்து, தேர்ட் கிரேட் அன்ட் செகன்ட் கிரேடு முனிசிபாலிடிக்கு இருக்கிறது. பர்ஸ்ட் கிரேட் அன்ட் டவுன்ஷிப்புக்குக் கொண்டு வருவதற்கு அரசு ஆய்ந்து கொண்டிருக்கிறது விரைவிலே வரும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :— பேரவை முன்னுள்ள கேள்வி :

''தமிழ்நாடு 1982—ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 34/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 மற்றும் 3 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :—

பிரிவு 4

''பிரிவு 4 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்.''

திரு. என். எஸ். வி. சித்தன்: துணைத்தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1982 ஏப்ரல் 7

"மூலச்சட்டத்தின் 5—பி பிரிவில் 8 உட்பிரிவை நீக்கவும்" திருத்தம் முறைப்படி வழிமொழியப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்களுடைய திருத்தத்திற்கு நான் முதலிலேயே பதில் சொல்லியிருக்கிறேன். அவர்கள் என்ன சொல்லுகிறார்கள். 10 பேர் முதல் தடவை என்று சொல்லுகிறார்கள். அவர்கள் 10 தடவை தொடர்ந்து தவறு செய்தால் அந்த உரிமையை ரத்து செய்கிறோம். ஆனால் மற்றபடி அவர்கள் தொடர்ந்து நடத்தலாம். ஆனால் அதேநேரத்தில் அவர்கள் தவறு செய்தால் இப்போது இருக்கக்கூடிய சட்டத்திலே அவர்களுக்கு 1000 ரூபாய் அபராதம் போடலாம், ஜெயிலுக்கு அனுப்பலாம், அதற்கு மேலே எல்லாவிதமான நடவடிக்கையும் எடுக்கலாம். அது ஒரு குறிப்பிட்ட ஒரு செக்ஷனுக்கு மட்டும்தான் இன்றைக்கு 10 பேர் என்று இருக்கிறது. மற்றபடி பொதுப்படையாக அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க எல்லா வழிவகைகளும் இருக்கிறது.

திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றது.

பிரிவு 4 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவுகள் 5 முதல் 9 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 10

MR. DEPUTY SPEAKER;— The question is ; " That Clause 10 do stand part of the Bill.

HON. THIRU S. D. SOMASUNDARAM ;- Sir, I move: "In Clause 10, for the word "penalty" wherever it occurs substitute the word "interest.

திருத்தம் பேரவையின் முடிவுற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 10 திருத்தப் பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 11 முதல் 15 முடிய பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நீடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

1982 ஏப்ரல் 7] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

"தமிழ்நாடு 1982ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண். 34/1982) திருத்தப் பெற்றபடி நிறைவேற்றப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு திருத்தப் பெற்றப்படி நிறைவேற்றப்பெற்றது.

(9) அரசினர் தீர்மானம்

(அ) விதி 30 (3)-ன் கீழ் அலுவல் வரிசையில் மாற்றம்

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் —

"இன்றைய நிகழ்ச்சி நிரலில் இனம் 3 (V)-ல் இருக்கும் தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு பத்திரிகைப் பணியாளர்கள் நிவாரண நிதிச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 31/1982) வரிசையை மாற்றி, 3 (iii)-ஆக எடுத்துக் கொள்ள வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

(6) அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) பத்திரிகைப் பணியாளர்கள் நிவாரண நிதிச் சட்டமுன்வடிவு, 1982

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு :

"தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு பத்திரிகைப் பணியாளர்கள் நிவாரண நிதி சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முனவடிவு எண். 31/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

(8) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி

(இ) பத்திரிகைப் பணியாளர்கள் நிவாரண நிதிச் சட்ட முன்வடிவு, 1982

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய நிகழ்ச்சி நிரலின்படி தமிழ்நாடு 1982 ஆம் பத்திரிகைப் பணியாளர்கள் நிவாரண நிதிச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண். 31/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறவேண்டுமென்று தீர்மானத்திற்குப் பதிலாக மேற்படி சட்டமுன்வடிவை ஆய்வு செய்வதற்கு 24 உறுப்பினர்கள், (16 சட்டமன்ற பேரவை,

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1982 ஏப்ரல் 7

உறுப்பினர்களும், 8 மேலவை உறுப்பினர்களும்) அடங்கிய கூட்டாய்வுக் குழு ஒன்றை அமைக்க, சட்டமன்ற மேலவையின் இசைவைப் பெறுவதுடன், கூட்டாய்வுக்குழுவில் கீழ்க்கண்ட பேரவை உறுப்பினர்கள் பணியாற்ற தேர்ந்தெடுக்கப்பெற வேண்டும் என்று மொழிகிறேன்.

1. திரு. கா. கோபாலகிருஷ்ணன்
2. திரு. ஜே. சி. டி. பிரபாகரன்
3. திரு. க. பாலசுப்பிரமணியன்
4. திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்
5. திரு. மா. சின்னராசு
6. திரு. கோ. விஸ்வநாதன்
7. டாக்டர் கே. சமரசம்
8. திரு. ஆர். ரங்கசாமி
9. திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன்
10. திரு. மு. அம்பிகாபதி
11. திரு. கு. ரமணி
12. திரு. கே.எம். தங்கமணி
13. திரு. இல. பலராமன்
14. திரு. துரைமுருகன்
15. திரு. என். வி. என். சோமு
16. திரு. ப. நெடுமாறன்

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

(பிற்பகல் 1-10)

(6) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஈ) தொழிலாளர் நல நிதி (திருத்த) சட்டமுன்வடிவு, 1982.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன் வடிவு எண் 32/1982) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

(8) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஈ) தொழிலாளர் நல நிதி (திருத்த) சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்:

1982 ஏப்ரல் 7] [மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்]

"தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதி (திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன் வடிவு எண் 32/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்".

திரு. என். வி. என். சோமு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1982 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதி (திருத்த) சட்ட முன்வடிவில் பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மூலச் சட்டத்தின் பிரிவு 15—ல் ஏற்கெனவே தொழிலாளி ஒரு ரூபாய் கொடுக்க வேண்டும்; முதலாளி 2 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று இருந்தது. ஆனால் அரசாங்கத்திற்கு அதில் எந்தவிதமான பங்கும் இல்லாமல் இருந்தது. இந்தச் சட்டத் திருத்தத்தின்படி தொழிலாளிக்கு ஒரு ரூபாய் என்று இருந்தது 2 ரூபாயாகவும், முதலாளிக்கு 2 ரூபாய் என்று இருந்தது 4 ரூபாயாகவும் உயர்த்தப்பட்டு, அரசாங்கம் மேச்சிங் கிரான்டாக 2 ரூபாய் கொடுப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கம் இந்த தொழிலாளர் நல நிதியில் அதிகமாகப் பணத்தைப் போட வேண்டுமென்ற கருத்தை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதற்குக் காரணம் இந்த நல நிதி அதிகமாக இருந்தால் அதை நல்லமுறையில் பயன்படுத்தலாம். முக்கியமாக சில முதலாளிகள் பிடிவாதமாக தொழிற்சாலைகளை மூடும்போது அவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் அரசாங்கம் தன்னுடைய நிதிப் பங்கை அதிகமாகச் செலுத்த வேண்டும்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர்—தலைமை)

உதாரணமாகச் சொல்லவேண்டுமென்றால், பி அன்ட் சி ஆலை மூடப்பட்டபோது அங்கே உள்ள தொழிலாளர்கள் நிவாரணம் கேட்டு பலமுறை முதலமைச்சருக்கும், தொழிலாளர் நல அமைச்சருக்கும் கோரிக்கை விடுத்தார்கள். நாங்கள் கூட அது பற்றி வலியுறுத்தியிருக்கிறோம். அந்த நேரத்தில் நம்முடைய தொழிலாளர் நல அமைச்சர் முதலமைச்சர் நிதியிலிருந்துதான் பெற்றுக்கொடுக்க வேண்டிவந்தது. இதைப்போன்ற நல நிதியில் பணம் தாராளமாக இருந்தால் இதிலிருந்து அவர்களுக்கு கொடுக்க வாய்ப்பு இருக்கும்.

இன்றைக்கு கூட இந்த பி. அன்ட் சி. தொழிலாளர்களுக்கு போனஸ் கொடுக்கப்படவில்லை. அவர்கள் குறைந்த பட்ச போனஸ்தான் கேட்கிறார்கள். அதைக்கூட கொடுக்காமல், செக்ஷன் 36-ன்படி தங்களுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று அந்த நிர்வாகத்தினர் அரசுத் துறை செயலாளரைக் கேட்டு,

* 1982 ஏப்ரல் 3-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

7–1–82 அன்றே செயலாளர் அதை மறுத்தும்கூட. இன்னும் போனஸ் கொடுக்கப்படவில்லை. இன்றைக்கு தேதி 7-4-82 சரியாக 3 மாதம் ஆகிவிட்டது. இன்னும் அவர்கள் போனஸ் பெற முடியவில்லை. தொழிலாளர்களின் நல நிதிக்காக இந்தச் சட்டத்தைக் கொண்டு வரும்போது அமைச்சரவர்கள் இதையும் கருத்திலே கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று செக்ஷன் 17-ல் Employment opportunities to disabled employees or the widows of the deceased employees என்று இப்போது இதிலே போட்டிருக்கிறார்கள். இது வரவேற்கப்படக் கூடிய ஒன்று. அதேநேரத்தில், or the widows of the deceased employees என்று இருக்கிறபோது அதோடு கூட son and daughter of the deceased employees என்று சேர்த்துக்கொண்டால், விதவைகள் மட்டுமல்லாமல் தந்தை-தாயை இழந்திருக்கிற ஏழைத் தொழிலாளியின் மக்களுக்கும் உரிய முறையில உதவி செய்வதாக இருக்கும்.

அதோடு செக்ஷன் 19-ல் தமிழ்நாடு லேபர் வெல்பேர் போர்டு இருக்கிறது. இதில் எல்லோருக்கும் பிரதிநிதித்துவம் இல்லை. INTUC, AITUC, TNTUC, CITU எல்லாம் இடம் பெற்றிருக்கின்றன. அண்ணா தி.மு.க.வைச் சேர்ந்த ஏ.டி.சி. கூட இருக்கிறது. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த லேபர் ப்ராகிரசிங் பெடரேஷனுக்கு இடமில்லை. தொழிலாளி என்ற முறையில் எல்லோரையும் ஒன்றாகப் பார்க்க வேண்டுமே தவிர பகையாளி என்ற முறையில் பார்க்கக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

செக்ஷன் 20-ல் power of Government to give directions to the Board என்று இருப்பதால், யாரிடம் பொறுப்பு இருந்தாலும் அரசாங்கம் இந்தப் பிரிவின்படி இதைத்தான் செய்ய வேண்டும்; இதைச் செய்யக்கூடாது என்று டைரக்ஷன் செய்து கட்டுப்படுத்த இடம் வைத்திருப்பதால், கட்டுப்படுத்த அதிகாரம் இருப்பதால், அரசாங்கம் ஏன் இதில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு பிரதிநிதித்துவம் கொடுக்க அச்சப்படுகிறது என்று தெரியவில்லை. செக்ஷன் 36-ல் சூப்பர்செஷன் முன்வர பெற்றிருக்கிறது. வாரியம் சரியாக செயல்படவில்லை என்றால் அதைக் கலைப்பதற்கு அரசாங்கம் அதிகாரம் வைத்திருக்கிறது, அதையெல்லாம் வைத்து இருக்கும் மாபெரும் அரசாங்கம் லேபர் ப்ரொக்கிரசிவ் பெடரேஷன் என்பதற்கு—திராவிட முன்னேற்றக் கழக தொழிற்சங்கத்திற்கு—அந்த லேபர் வெல்பேர் போர்டில் ஏன் பிரதிநிதித்துவம் அளிக்கவில்லை? அது பிரதான எதிர்க்கட்சி மட்டுமல்ல, பல்வேறு தொழிற்சங்கங்கள் வைத்து, தொழிலாளர்கள் வெல்பேருக்காகப் பணியாற்றி வருகிறது என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஆகவே, அத்தகைய தொழிலாளர்களுக்காக கருத்துக்களைக் கூறுகின்ற அந்த லேபர் வெல்பேர் போர்ட்டில் ஒரு பிரதான எதிர்க்கட்சியின் தொழிற்சங்கப் பேரவைக்கு இடம் தரவேண்டும் என்று என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்து அமர்கிறேன்.

திரு. கு. மணி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தொழிலாளர் சேம நல நிதி சட்டத்தில் சில மாற்றங்களைக் கொண்டு வந்து, அந்த நிதியின் மொத்த வருமானத்தை உயர்த்துவதற்காக இந்த அரசாங்கம் எடுத்துள்ள ஒரு நல்ல நடவடிக்கையாக இந்த சட்ட முன்வடிவு அமைந்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிதியைப் பொறுத்தவரையில் அரசாங்கம் ஒரு கொள்கை வைத்து இருந்தார்கள். தொழிலாளர்களிடமிருந்து 1 வருஷத்திற்கு ஒரு ரூபாய் வசூலிப்பது என்றும், முதலாளிகளிடமிருந்து 2 ரூபாய் வசூலிப்பது என்றும், அந்த வகையில் இந்த நிதியை அமைப்பது என்றும் இதை அமைத்து இருந்தார்கள். இப்போது அரசாங்கம் இதிலே தன்னுடைய பங்கைச் செலுத்துவதாக முன்வந்து இருப்பது வரவேற்கத்தக்கது, நல்லது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். இதிலே முதலாளிகளிடமிருந்து வசூலிக்கும். ஆலைச் சொந்தக்காரர்களிடமிருந்து வசூலிக்கும் தொகையை இன்னும் இரட்டிப்பாக்கி இருப்பது ஒரு நல்ல அம்சம்தான். இப்படி தொழிலாளர்கள் சேம நிதிக்காக பணம் வசூலிக்கும் போது அதிலே தொழிலாளர்களும் கண்டிப்பாக பணம் போட வேண்டும் என்று அரசு ஒரு கொள்கையைக் கடைபிடித்து வருவது சரியல்ல என்று கருதுகிறேன். நாம் தொழிலாளர்களின் சேமத்திற்காக இந்த நிதியை உருவாக்கிக்கொண்டு வருகிறோம். எதற்காக என்று சொன்னால், அவர்களுக்கு வரும் வருமானம் போதாது. அவர்கள் உயிரை வைத்துக் கொண்டு குடும்பத்தைக் காப்பாற்றுவதற்கே தன்னுடைய வருமானத்தைச் சரிக்கட்ட முடியாமல் இருக்கிறார்கள். அவர்கள் செலுத்தும் தொகையையும் மேலும் அதிகரித்தால் அவர்கள் மிகவும் கஷ்டப்படுவார்கள். அவர்களுக்கு ஏற்கனவே தேவைக்கு ஏற்ற அளவிற்கு சம்பளம் கிடைக்கவில்லை. நாளுக்கு நாள் அவனுடைய தேவைகள் அதிகரிக்கின்றன. ஆகவே, அவன் உழைப்பால் அதிக லாபம் சம்பாதிக்கும் அந்த ஆலைச் சொந்தக்காரர்களிடமிருந்து ஒரு பகுதி தொகையை அவர்களுடைய சேமத்திற்காக வசூலிப்பது பொருத்தமுடையதாக இருக்கும், அது சரியான கொள்கையாக இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

ஆகவே, தொழிலாளர்களிடமிருந்து ஒரு ரூபாய் வசூலிப்பது என்பது பயரள்விற்கு இருக்கிறது. இதை மறுபடியும் அதிகரிக்கிறீர்கள், இது ஒரு பெரிய தொகையா என்று கேட்கலாம். இப்படி ஒரு கொள்கை இருப்பது சரியானதல்ல என்பதால் சொல்கிறேன். அந்த ஒரு ரூபாய் என்பது இருக்கட்டும் அந்த அளவிற்கு தொழிலாளர்களிடத்தில் வசூலித்துக் கொள்ளுங்கள். அதைப்போலவே அந்த சேம நல நிதியில் அரசாங்கம் பங்கு செலுத்த வந்து இருப்பது நல்லது. தொழிலாளர்களுக்கு 1 ரூ. எனபதை இரண்டு ரூபாய் என்று ஆக்காமல். அரசாங்கம் போடுகிற அந்த இரண்டு ரூபாயைப்போட்டு விட்டு முதலாளிகளிடத்தில் வாங்குகின்ற இந்த இரண்டு ரூபாய்

என்பதற்கு பதிலாக 4 ரூ. என்று ஆக்கினாலும் பரவாயில்லை அவர்கள் சொந்தச் சம்பாத்தியத்தில் இருந்து கொடுக்கப்போவது இல்லை. லாபத்தில இருந்துதான் கொடுக்கிறார்கள். ஆகவே, அப்படி மாற்றி வசூலிப்பது நல்லது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

தொழிலாளர்களுக்குச் செய்யும் சேமநலன்கள் பற்றி 10 ஐயிட்டங்கள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. அவற்றில் சில ஐயிட்டங்கள் நடைமுறைக்கு வரவில்லை. அவைப்பற்றி இங்கே கேட்கின்ற நேரத்தில் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், உங்கள் சங்கத்தின் சார்பில் அந்தக் கமிட்டியில் இருப்பவர்களை அங்கே கேட்கச் சொல்லுங்கள் அவர்கள் அதை அங்கே எடுத்து வைப்பதன் மூலம், நான் அந்த மன்றத்திலே அதைப்பற்றி பேசி, முடிவு செய்கிறேன் என்று சொன்னார்கள். ஆனால் அது தமக்கு ஒரு நல்ல மறுமொழியாக இருக்காது என்பது மட்டும் அல்லாமல் இதிலே கொடுக்கப்பட்டிருக்கிற எத்தனை விஷயங் களும் இன்றைக்கு நடைமுறையில் இல்லை என்பதையும் நான் முதலிலே எடுத்துக்கூற ஆசைப்படுகிறேன். உதாரணமாக சமுதாய நடவடிக்கைகள் என்று சொல்லி இதற்கென்று தனியாக இந்த நிதியில் பங்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதிலே திருமண கூடங்கள் பொதுவில் கட்டுவது போன்ற சில பணிகளையும் மேற்கொள்ளலாம். அதேபோல இறந்துபோன தொழிலாளர் களுக்கு, உடனடி ஈமச் சடங்கிற்காக 200 ரூபாய் கொடுக்கப் படுகிறது. இந்த 200 ரூபாயில் இறந்தவனை எடுத்துக் கொண்டு செல்வது என்பது கட்டுப்படியாகாத ஒன்று. இதற்கென்று தொகையை தனியாக அதிகமாக ஒதுக்கலாம். ஆனால் இச் போன்று அல்லாமல் சமுதாய பணிகளின்கீழ் கல்வி நிலையங்கள் அமைத்தல், தொழிற் பயிற்சி என்று எல்லாம் ஒதுக்கீடு செய்யப் பெற்றிருக்கிறது. அதையெல்லாம் அரசாங்கம் கல்வி பணிகளை மேற்கொள்ளும் வகையிலேயே செய்து கொள்ள வேண்டுமே தவிர, தொழிலாளர்களிடமிருந்து பங்கு வசூல் செய்து நடத்தும் இந்த நிதியிலிருந்து செய்யக்கூடாது. இதற்கு ஒதுக்குகின்ற பணத்தை வேறு பல நல்ல காரியங்களுக்குச் செலவழிக்கிற முறையை ஏற்படுத்த வேண்டும்.

(பிற்பகல் 1.20)

அதேபோல அவர்களுக்கு ஓய்வு இல்லங்கள் அமைத்தல். அவர்கள் ஆண்டு முழுவதும் வேலை செய்து இழந்த சக்தியை திரும்பப் பெறுகின்ற முறையில் 20 நாளைக்கு ஒரு நாள் விடுமுறையை எடுத்துக் கொண்டு, இந்த மாதிரி உஷ்ணமான காலத்தில், சம்மர் சீசனில் அவர்கள் மலை வாசஸ்தலங்கள் போன்ற இடங்களுக்குச் சென்று—அங்கேயெல்லாம் அவர்கள் போகக் கூட முடியாத நிலை—ஓய்வு எடுத்துக் கொள்ளும் வகையில் இலவசமாக அந்தப் பயண கட்டணங்களை கொடுத்து அந்த ஓய்வு இல்லங்களுக்குச் சென்று இளைப்பாறலாம். அங்கே உள்ள உணவு வசதி போன்றவைகளை அவர்களே கவனித்துக் கொள்ளலாம். என்று விட்டு விட்டாலும், ஓய்வு இல்லங்களை

அமைத்துத் தரும் வசதியையும், பயண கட்டணங்களையும் தொழிலாளர்களுக்காக அரசு மேற்கொண்டால் அதுதான் அவர்களுக்கு நாம் நன்மையைச் செய்வதாக அமையும். ஏனெனில் அது போன்ற ஓய்வுகளை ஒரு ஏழைத் தொழிலாளி யினால் நினைத்துக்கூட பார்க்க முடியாது.

அதேபோல இன்றைக்கு பல தொழிலாளர்களுக்கு பென்ஷன் வசதி கிடையாது. அப்படி இருந்தால் வயது முதிர்ந்த காலத்தில் அந்தத் தொழிலாளி தன் பென்ஷனை வைத்தே வாழ்ந்து கொள்ள முடியும். ஆனால் தற்காலத்தில் வயது முதிர்ந்தோர்கள் தங்கள் குடும்பத்தில் சேர்ந்து வாழ இயலாது, அவர்களால் புறக்கணிக்கப்படுகிற சூழ்நிலை வளர்ந்து வருகிறது. அவர்களுக்கு பென்ஷன் வசதியும் இல்லாத நிலை இருந்தால் என்னதான் ஆவது? ஆகவே வயது முதிர்ந்தோர்களுக்கு என்று தனியாக இல்லம் அமைத்துக் கொடுத்தால் மிகவும் நல்லது. இது போன்ற பணிகளுக்கு இந்தத் தொழிலாளர் நல நிதியிலிருந்து பல ஒதுக்கீடு செய்ய வழிமுறை வகுக்க வேண்டும். இப்படிப்பட்ட வழிகளில் எல்லாம் அந்தப் பணத்தை செலவழிக்க இந்த நிதியின் கீழ் அதிக அளவில் பணத்தை சேகரிப்பது நல்லதுதான். ஆனால் அதற்காக தொழிலாளர்களிடமிருந்து அதிகமாக வசூல் செய்யாமல், பழையபடியே இருக்க விட்டு, முதலாளிகளிடத்தி லிருந்து அதிக அளவில் வசூல் செய்யும் முறையை கையாள வேண்டும். அரசாங்கம் இதிலே பங்கு செலுத்துவது நல்லதுதான், அந்த வகையிலே இதை வரவேற்றாலும், முதலாளிகளிடம் அதிகப் பங்குத் தொகையை வசூல் செய்யும் வகையில் இந்தச் சட்டத்தை திருத்தி அமைத்துக் கொண்டு வருவது நல்லது என்று நான் கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் பதிலுரை கூறலாம். (குறுக்கீடு) தொழிலாளர் பிரச்னையில் மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள்தான் அத்தாரிட்டி. அவர் தெரிவித்த கருத்துகளுக்கு மேலேயும் என்ன இருக்கிறது.

திரு எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தை திருத்துவதற்காக சட்ட முன்வடிவினை வரவேற்று, இந்தச் சட்ட முன்வடிவிலே, இந்த நிதிக்காக ஆண்டு ஒன்றுக்கு ஒவ்வொரு தொழிலாளியிடமிருந்தும் 2 ரூபாயும், அந்த ஒவ்வொரு தொழிலாளிக்காகவும், சம்பந்தப்பட்ட தொழிலதிபர்களிடமிருந்து நான்கு ரூபாயும், அரசாங்கம் தன்னுடைய பங்காக ஆண்டு ஒன்றுக்கு 2 ரூபாயும் செலுத்த வேண்டும் என்று இருப்பதிலே, என்னுடைய கட்சியின் சார் பாக சில திருத்தங்களைச் சொல்ல முன் வருகிறேன். ஏற்கனவே சட்டத்திலே இருக்கக் கூடிய நடை

[திரு. எம். ஆறுமுகம்] [1982 ஏப்ரல் 7

முறைப்படி தொழிலாளர்களிடமிருந்துஒரு ரூபாய்தான் வசூலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆனால் அதே நேரத்தில் அந்த பழைய சட்டத்தில் இல்லாத அடிப்படையில் அரசாங்கம் இதிலே பங்குத் தொகை செலுத்துவதை வரவேற்கின்ற நேரத்தில், இந்த நிதியை அதிகப்படுத்த தொழிலாளர்களிடமிருந்து அதிகமாக வசூலிக்காமல், இதை முதலாளிகளிடமிருந்து அதிகமாக வசூலிப்பதற்கு முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தச் சேமநல நிதியைப் பயன்படுத்துகின்ற விஷயம் சம்பந்தமாக பல்வேறு விஷயங்களைப்பற்றிச் சொல்லி இருக்கிறார்கள். இதிலே ஒரு சில விஷயங்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். அந்த பணத்தை வேறு வகைகளுக்குச் செலவழிக்கக்கூடாது. தொழிற்சாலைகளிலே பணிபுரியக்கூடிய தொழிலாளர்கள் இதிலே பங்கு போட்டாலும் கூட அவர்கள் வாழ்க்கையிலே மிகவும் கீழான நிலைமை இருக்கக் கூடியவர்கள் இவர்களுக்குப் போதிய வசதிகளைச் செய்து கொடுக்கக்கூடிய முறையில் இது பயன்படுத்தப்படவேண்டும்.

அவர்கள் மரணம் அடைந்தால் அவர்களுக்குக் கொடுக்கக் கூடிய தொகை 200 ரூபாய். அதாவது 200 ரூபாயை ஈ.எஸ்.ஐ.—யிலே இருந்து மட்டும் கொடுக்கிறார்கள். இந்தத் தொகையை இதிலே இருந்து கொடுக்கவேண்டும், தொழிலாளர்களுக்குத் திருமண மண்டபம் மற்றும் வீடுகள் கட்டிக் கொடுப்பது, குழந்தைகளுக்கு இலவசமாக நோட்டு புத்தகங்கள் வாங்கிக் கொடுப்பது போன்ற முறைகளையும் இதிலே சேர்க்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதன் மூலம் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசானது தனனுடைய சாதனைகளை பொன் எழுத்திலே எழுதுவதற்கு வேண்டிய வாய்ப்பினை உருவாக்கியிருக்கின்றது என்று நான் மெத்த மகிழ்ச்சியோடு சொல்லிக் கொள்கிறேன். இந்தச் சட்டம் உருவானது 1972–ல். தொழிலாளர்கள் ஆண்டுக்கு ஒரு ரூபாயும், முதலாளிகள் ஒரு தொழிலாளிக்கு ஆண்டுக்கு 2 ரூபாயும் தரவேண்டும் என்று சட்டம் நிறைவேற்றப்பட்டது. அரசினுடைய பங்கு ஏதாவது உண்டா என்றால் இதுவரையில் அரசினுடைய பங்கு எதுவுமே இல்லை. ஆனால் இப்போதுதான் எடுத்த எடுப்பிலேயே ஒவ்வொரு தொழிலாளிக்கும் ஆண்டுக்கு இரண்டு ரூபாய் தருவது என்று புரட்சித் தலைவரின் ஆட்சி முடிவெடுத்து அதைக் கொண்டு வருகிறோம். இதனால் ஒவ்வொரு ஆண்டும் 15 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால் தொழிலாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு

1982 ஏப்ரல் 7] [திரு. எஸ். இராகவானந்தம்]

அதிகமாக ஆனாலும், அதனால் தொகை எவ்வளவு அதிகமானாலும் அதைப்பற்றியெல்லாம் கவலைப்படாமல் இந்த அரசு மெத்த மகிழ்ச்சியோடு தன்னுடைய கான்ட்ரிபுஷனைக் கொடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அருமை மாண்புமிகு உறுப்பினர் திரு. சோமு அவர்கள் பேசும் போது இந்தத் தொகையை அதிகமாக ஆக்க வேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் எவைஎவைகளுக்கு கொடுக்க வேண்டும் என்று சட்டப்புத்தகம் 11-வது பக்கத்திலே இருக்கின்றது. அப்படி அவையெல்லாம் வரையறுக்கப் பட்டிருக்கின்றது. ஆகவே இனிமேல் வேறு எதற்காவது கொடுக்க வேண்டும் என்றால் லேபர் வெல்பேர் போர்டிலே அது முடிவு எடுத்த பிறகுதான் அதனைச் சட்டமாகக் கொண்டுவரவேண்டும்.

அடுத்து திரு. சோமு அவர்கள் மிகவும் வருத்தப்பட்டார்கள். அகில இந்தியஅண்ணாதிராவிட முன்னேற்றக் கழகம், சி. ஐ. டி. யு., ஏ. ஐ. டி. யு. சி. போன்றவைகளுக்கெல்லாம் அந்தக் குழுவிலே இடம் கொடுக்கப்பட்டிருக்கின்றபோது திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மட்டும் இடம் இல்லையே என்று கேட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் என்ற முறையிலேயும் தொழிற்சங்கங்களை நடத்திச் செல்கின்றவர்கள் என்ற முறையிலேயும், தொழிற்சங்க அமைப்பிலே உள்ளவர்கள் என்ற முறையிலேயும் அவர்கள் அதைக் கேட்பதற்குக் கடமைப்பட்டவர்கள். ஆனால் அவர்களுக்கு நான் மிகப் பணிவோடு தெரிவித்துக் கொள்வது முன்னால் இருந்த ஆட்சி செய்தது எல்லாம் தவறு என்று பின்னால் வருகின்ற ஆட்சி சொல்லக்கூடாது, அவர்கள் சில நல்லதும் செய்திருப்பார்கள், அதைப் பின்பற்ற வேண்டும். எனவே சென்ற ஆட்சியினர் யார் யாரை எப்படி எப்படி குழுக்களில் நியமித்தார்களோ அதே பாதையில் தான் நாங்களும் சென்று கொண்டிருக்கிறோம் என்று சொல்லி அவர்கள் வருத்தப்பட வேண்டாம் என்றும் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1.30)

அதற்கு என் பதிலில் நான் ஏற்கனவே சொல்லிவிட்டேன். ஸ்டேட் லேபர் அட்வைஸரி போர்டில் இருக்கிறார்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியுடன் அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. எஸ் இராகவானந்தம்: திரு. ரமணி அவர்கள் பேசும்போது தொழிலாளர்கள் இந்த நிதி தரவேண்டியதில்லை அரசாங்கம் தரவேண்டும் என்று சொன்னார்கள். அவர்கள் தகவலுக்காக நான் ஒன்றை படிக்க விரும்புகிறேன். இந்த்

திட்டம் எந்த எந்த மாநிலங்களில் இருக்கிறது, யார் யார் எவ்வளவு தருகிறார்கள் என்று சொன்னால் திரு. ரமணி அவர்கள் திருப்தியடைவார்கள் என்று கருதுகிறேன். குஜராத்தில் 50 பைசா தொழிலாளர்கள் தருகிறார்கள். ஒரு ரூபாய் முதலாளி தருகிறார்கள். அரசு ஒரு ரூபாய் தருகிறது. கேரளாவில் தொழிலாளர்கள் 1 ரூபாய், முதலாளிகள் இரண்டு ரூபாய் தருகிறார்கள். அரசாங்கம் எதுவும் தருவதில்லை. மகாராஷ்டிராவில் தொழிலாளர்கள் ஒரு ரூபாய், முதலாளிகள் 3 ரூபாய் அரசு ரூ. 2 தருகிறார்கள். கர்நாடகாவில் தொழிலாளர்கள் ரூ 1, முதலாளிகள் ரூ. 2 அரசாங்கம் ரூ.1 தருகிறார்கள். டெல்லியில் தொழிலாளிகள் 50 பைசா முதலாளிகள் ரூ. 1 அரசு ரூ. 1 தருகிறது. தமிழ்நாட்டில் ரூ. 1 ரூ. 2 என்றிருந்தது. இப்போது ரூ. 2, ரூ. 4, அரசாங்கம் ரூ2 என்று முதல் முறையாக தருகிற இந்த நேரத்தில் அரசைப் பாராட்டுவீர்கள் என்று கருதுகிறேன். அதுதான் புரட்சித்தலைவர் ஆட்சியின் விசேஷம். ஒரு ரூபாய் கொடுத்தால் போதும் என்று முதல்வர், அரசு கருதியிருக்கலாம். ஆனால் தொழிலாளர்கள் கொடுக்கக்கூடிய இரண்டு ரூபாய் அரசும் கொடுக்க வேண்டும் என்று இரண்டு ரூபாய் கொடுத்ததை நீங்கள் பாராட்டுவீர்கள் என்று நம்புகிறேன். உளப்பூர்வமாக பாராட்டுவீர்கள்.

இறந்துவிட்டால் ஈமச் சடங்கிற்குரூ. 200 போதாது என்று சொல்கிறார்கள். அது ஒன்றும் பிரமாதம் இல்லை. அடுத்த கூட்டத்தில் உங்கள் உறுப்பினர்களைக் கொண்டு ரூ. 200 என்பதை ரூ. 400 அல்லது ரூ. 500 என்று ஆக்க வேண்டும் என்று கேட்டால் அந்தக் குழுவின் தலைவர் நான் என்ற முறையில் அதை உயர்த்திக் கொடுக்க தயாராயிருக்கிறேன். எனவே ரூ. 500 ஆக்க வேண்டும் என்று தீர்மானம் கொண்டுவந்துவிட்டால் அடுத்தக் கூட்டத்திலேயே நிறைவேற்றிவிடலாம். முதுமையானவர்களுக்கு கொடுக்க வேண்டும் என்றார்கள். அதைப்பற்றி அந்தக் குழு கூட முடிவு எடுக்கலாம். அதற்கு உங்கள் சார்பில் குழு உறுப்பினர்களே ஏற்பாடு செய்யலாம்.

சி. பி. ஐ. உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் வேறு சில ஐட்டங்களை சேர்க்க வேண்டும் என்று சொன்னார்கள். ஓய்வறை ஏற்பாட்டில் இருக்கிறது. 15 பேர்கள் தங்கக்கூடிய அளவிற்கு இருக்கிறது. குற்றாலத்தில் 55 பேர்கள் தங்கக்கூடிய அளவிற்கு அருமையான ரெஸ்ட் ஹவுஸ் கட்டப்பட்டு வருகிறது அதை உறுப்பினர்கள் குற்றாலம் போகும்போது அவசியம் போய்ப் பார்த்து உங்கள் காமன்ட்ஸை கொடுக்க வேண்டும். இன்னொரு மாடி கட்டவேண்டுமென்றாலும் கட்டுகிறோம். கூடுதல் அறைகள் வேண்டுமென்றாலும் கட்டுகிறோம். ஏ. ஸீ செய்ய வேண்டுமென்றாலும் செய்யலாம். சினிமாப் படங்கள்

வேண்டுமானால் காட்டலாம். தொழிலாளர்கள் கேட்பதையெல்லாம் செய்து கொடுக்கத் தயாராயிருக்கிறோம். என்று கூறி இந்த சட்ட முன்வடிவைநிறைவேற்றித் தரவெண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி ''தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு தொழிலாளர் நலநிதி (திருத்த) சட்டமுன்வடிவு) சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 32/1982)'' ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 7 வரை பேரவையின் முடிவிற்கு, விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1 முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்; தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். ''தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு தொழிலாளர் நலநிதி (திருத்த) சட்டமுன்வடிவு சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 32/1982 நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

(1) இ பத்திரிகைப் பணியாளர்கள் நிவாரண நிதிச் சட்டமுன்வடிவு 1982 —தொடர்ச்சி

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு பத்திரிகைப் பணியாளர்கள் நிவாரணநிதி சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 31:1982) கூட்டாய்வுக் குழுப் பட்டியலில் திரு. மு. அம்பிகாபதிக்குப் பதிலாக, அவினாசி தொகுதி மாண்புமிகு உறுப்பினர் திரு எம். ஆறுமுகம் பெயரை இணைத்துக் கொள்ளவேண்டுமென்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பசுக்கள் வெட்டுவதைத் தடுத்தல் கால்நடை பாதுசாப்பு சட்ட முன்வடிவு 1982.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு பசுக்கள் வெட்டப்படுவதைத் தடுத்தல்-கால்நடைப் பாதுகாப்புச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சடட முன்வடிவு எண். 21/1982'' ஆய்வு செய்வதற்காக 24 உறுப்பினர்கள் (16 சட்டமன்றப் பேரவை

[திருமதி கோமதி சீனிவாசன்] [1982 ஏப்ரல் 7

உறுப்பினர்களும், 8 சட்டமன்ற மேலவை உறுப்பினர்களும்) அடங்கிய கூட்டாய்வுக் குழு ஒன்றை அமைக்க, சட்டமன்ற மேலவையின் இசைவைப் பெறுவதுடன், கூட்டாய்வுக் குழுவில் கீழ்க்கண்ட பேரவை உறுப்பினர்கள் பணியாற்றத் தேர்ந்தெடுக்கப் பெறவேண்டும்''.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்,
திரு. சு. பழனிச்சாமி,
திரு. எம். பிச்சை,
திரு. ஏ. பாலுச்சாமி,
திரு. செ. குப்புசாமி,
திரு. த. மாரிமுத்து,
திரு. பெ. கலியமூர்த்தி,
திரு. இரா. ச. முனிரத்தினம்,
திரு. சு. பாலன்,
திரு. ஜே. எஸ். இராசு,
திரு. இல. பலராமன்,
திருமதி டி. யசோதா,
திரு. மு. அம்பிகாபதி,
திரு. என். சங்கரய்யா,
திரு. ஜி. மூர்த்தி,
டாக்டர் கே. சௌரிராஜன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

(10) அரசினர் தனித் தீர்மானங்கள்

(அ) திருத்தணி பேரூராட்சியை நகரியமாக அறிவிப்பது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, நான் கீழ்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 4-வது பிரிவைச் சேர்ந்த (1) உட் பிரிவினையொட்டி செங்கற்பட்டு மாவட்டம் திருத்தணி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள திருத்தணி பேரூராட்சியின் தற்போதைய பகுதிகள் நிறுவனக் குடியிருப்பாக இருப்பதால், அதனை ஒ[illegible] நகரியமாக அறிவிப்பதென அவை தீர்மானிக்கிறது''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதா[illegible] நிறைவேற்றப்பெற்றது.

(ஆ) எஸ்டேட்டு தீர்வைச் சட்டம் (மத்தியச் சட்ட[illegible] 34/1953) திருத்தப்படுவதற்கு ஒப்புதல்

1982 ஏப்ரல் 7]

(2) மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''அரசியலமைப்புச் சட்டத்தின் 252 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) பகுதியின்படி, தமிழ்நாடு சட்டமன்ற இரு அவைகளிலும் நிறைவேற்றிய ஒரு தீர்மானத்தை ஒட்டி, வேளாண்மை நிலம் குறித்த எஸ்டேட்த் தீர்வை நாடாளுமன்றம் நிறைவேற்றிய 1953-ம் ஆண்டு எஸ்டேட்டுத் தீர்வைச் சட்டத்தின்படி (மத்திய சட்டம் 34/1953) தமிழ்நாடு மாநிலத்தில் இப்போது முறைப் படுத்தப்படுகிறது என்பதாலும்;

கீழே சொல்லியுள்ளவை வேளாண்மை நிலம் குறித்த எஸ்டேட்டுத் தீர்வைக்குத் தொடர்புள்ள வரையில் அவை நாடாளுமன்றத்தில் சட்டமொன்று இயற்றுவதால் தமிழ்நாடு மாநிலத்தில் முறைபடுத்தப்பட வேண்டும் என்பதும், அதற்காக மேற்சொன்ன சட்டம் திருத்தப்பட வேண்டும் என்பதும் விரும்பத்தக்கது என இப்பேரவைக்கும் மேலவைக்கும் தோன்றுகிற படியாலும்;

(1) எஸ்டேட்டுத் தீர்வைக்குரிய விலக்கு வரையறையை ரூ. 50,000/-லிருந்து ரூ. 1,50,000/-க்கு உயர்த்துதல்; சொத்து மதிப்பு ரூ. 1,50,001-இல் இருந்து ரூ. 2,00,000/-வரையிலமைந்த முதல்படி நிலையில் 10 சதவீத எஸ்டேட்டு தீர்வைக்கு வகை செய்தல்;

(2) கூட்டுறவு வீட்டு வசதிச் சங்க வீடுகட்டும் திட்டத்தின் கீழ் அச்சங்க உறுப்பினர் ஒருவருக்குக் கட்டிடம் அல்லது அதன் ஒரு பகுதி ஒதுக்கப்பட்டால் அல்லது குத்தகைக்கு விடப்பட்டால், அவ்வுறுப்பினர் அக்கட்டிடத்தின் அல்லது அதன் ஒரு பகுதியின் உரிமையாளர் என்று கருதப்பட வேண்டும் என்பதற்கு வகை செய்தல்;

(3) இறந்தவருக்குச் சொந்தமாயிருந்த குடியிருப்பு வீடு அல்லது அதன் ஒரு பகுதி, 1957 ஆம் ஆண்டு செல்வ வரிச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 27/1957) அடிப்படையில் மதிப்பிடப் பட்டவாறே இது குறித்தும் மதிப்பிடப்படும்.

ஆகவே, இப்போது, அரசியலமைப்புச் சட்டத்தின் 252 ஆம் பிரிவுக்கிணங்க, இப்பேரவை, 1953 ஆம் ஆண்டு எஸ்டேட்டுத் தீர்வைச் சட்டம் (மத்தியச் சட்டம் 34/1953) மேலே சொல்லியவற்றிற்கு 1981 மார்ச்சு 1 ஆம் தேதியிலிருந்து வகை செய்ய நாடாளுமன்றத்தால் திருத்தப்படலாம் என்று இதனால் தீர்மானிக்கிறது''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

(பிற்பகல் 1.40)

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(உ) பேரவை நிறைவேற்றிய அலுவல்கள் பற்றிய விவரங்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையை ஒத்திவைக்கும் முன் சில விவரங்களை பேரவைக்கு அறிவிக்க விரும்புகிறேன்.

ஏழாவது சட்டமன்றப் பேரவையின் நான்காவது கூட்டத் தொடரில் 1982–83 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டம் 26-2.1982 அன்று பேரவையில் அளிக்கப் பெற்றது. அன்று முதல் இன்றோடு சட்டமன்றப் பேரவை கூடிய

மொத்த நாட்கள் 32.

மொத்த நேரம் 178 மணி 36 நிமிடம்

நிதி அலுவல்கள் 1982-83—

வரவு செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம் நடைபெற்றது .. 7 நாட்கள்.

மானியக் கோரிக்கைகளின் மீது விவாதமும் வாக்கெடுப்பும் நடைபெற்றது .. .. .. 18 நாட்கள்.

நிதி ஒதுக்க மசோதா மீது விவாதம் .. 1 நாள்.

மானியக் கோரிக்கைகள்—

கொடுக்கப் பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் .. 3,319

அனுமதிக்கப் பெற்றவை 3,100

விவாதிக்கப் பெற்று நிறைவேறிய மானியக் கோரிக்கைகள் 51

விவாதிக்கப் பெறாமல் 'இல்லெட்டின்' ஆனது 5

உறுப்பினர்கள் ஆற்றிய உரைகள் 297

எடுத்துக் கொண்ட மொத்த நேரம் 80 மணி 29 நிமிடம்

இறுதி துணை நிதி அறிக்கை—

பேரவையில் அளிக்கப் பெற்றது 22-3-198

விவாதிக்கப் பெற்று நிறைவேறியது.. .. 1 நாள்

வினாக்கள்—

விடையளிக்கப் பெற்றவை:- .. .. ..

குறுகிய கால வினாக்கள் .. .. ..

உடுக்குறியிடாத வினாக்கள் 90

உடுக்குறியிட்ட வினாக்கள் 50

மொத்த துணை வினாக்கள் 1,56

அரை மணி நேரம் விவாதம் நடைபெற்றது .. 1 நாள்

ஒரு மணி நேரம் விவாதம் நடைபெற்றது .. 1 நாள்

கவன ஈர்ப்புத் தீர்மானங்கள்—

வரப்பெற்றவை 330

அனுமதி மறுக்கப்பெற்றவை 248

அனுமதிக்கப் பெற்றவை 90

(55 பொருள் குறித்து)

பேரவையில் எடுத்துக்கொள்ளப் பெற்றவை 66

(43 பொருள் குறித்து)

ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—

வரப்பெற்றவை மொத்தம் 474

தள்ளப்பெற்றவை 274

கவன ஈர்ப்பாக மாற்றப் பெற்றவை 40

பேரவையில் எடுத்துக்கொள்ளப் பெற்றவை 148

(24 பொருள் குறித்து)

சட்ட முன்வடிவுகள்—

வரப்பெற்றவை 21

நிறைவேற்றப் பெற்றவை 27

குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப் பெற்றவை .. 2

அரசினர் தீர்மானம்—

வரப்பெற்றவை 2

நிறைவேற்றப்பெற்றவை 2

தனியார் அலுவல்கள்—

வரப்பெற்ற தனியார் தீர்மானங்கள் 3

அனுமதிக்கப் பெற்றவை 2

தனியார் அலுவல் எடுத்துக்கொள்ளப் பெற்றது.. 1 நாள்

பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்—

அ. சட்டப்படியான விதிகளும் ஆணைகளும் .. 69

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள் 153

பார்வையாளர்—

மாடத்தில் அனுமதிக்கப்பெற்ற—

ஆண்கள் 36,964

பெண்கள் 5,048

பேரவைத் தலைவர் மாடத்தில் அனுமதிக்கப் பெற்றவர்கள்	12,609
வருகை தந்துள்ள பார்வையாளர்கள் (மொத்தம்)	54,621
சட்டமன்ற நூலகத்திற்கு வருகை தந்திருப்பவர்கள்	820

''லெஜிஸ்-அலர்ட்'' என்பதாக கட்டுரைத் தொகுப்பு இதுவரை 10 இதழ்களாக சுமார் 750 கட்டுரைகள் பல்வேறு இதழ்களிலிருந்து பொருள் வாரியாக தொகுக்கப் பெற்று உறுப்பினர்களுக்கு அனுப்ப பெற்றுள்ளன.

பேரவை நடவடிக்கைகள்

தட்டச்சு செய்யப் பெற்றுள்ள பக்கங்கள்	6,902
பேரவைக் கூட்டம் நடைபெற்ற எல்லா நாட்களிலும் வருகை தந்துள்ள உறுப்பினர்கள்	7 பேர்

பேரவை நிகழ்ச்சிகளை நல்லமுறையில் நடத்திச் செல்ல எங்களுக்கு ஒத்துழைப்புத் தந்த அவை உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். செய்தியாளர்களுக்கும் நம்முடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் அவை நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற நமக்கு மிகவும் ஒத்துழைப்புத் தந்த சட்டமன்றப் பேரவைச் செயலாளர் திரு. அழகர்சாமி அவர்களுக்கும், சட்டமன்ற அலுவலாளர்கள் அனைவருக்கும் நம்முடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாள் குறிப்பிடப்பெறாமல் பேரவையை ஒத்தி வைப்பதற்கு அமைச்சர் அவர்கள் இப்போது தீர்மானத்தை மொழிவார்கள்.

9 அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(ஆ) பேரவை ஒத்திவைக்கப் பெறுதல்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். ''பேரவையின் 25 (1) விதியின் படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடாமல் ஒத்தி வைக்கப்பெற வேண்டும்.''

திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, எங்களுக்கு தெரிவிக்கப்பட்டிருக்கிற அந்த அறிவிப்பில் ஜூலை மாதம் சட்டமன்றம் கூடும் என்று இங்கேயும் அறிவித்து, அது செய்தியில் வந்திருக்கிறது. ஆனால் இன்றைக்கு நாள் குறிப்பிடாமல் ஒத்தி வைப்போம் என்று சொல்வது ஏற்கனவே அங்கத்தினர்களுக்கு தெரிவித்ததற்கு முரணாக இருக்கிறதே, அதனுடைய விவரம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, தெளிவாக விதி என்ன சொல்கிறதோ அதைச் சொன்னேன். மற்றவற்றை பேரவைத் தலைவர் அவர்கள் தான் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதிகளின்படி நாள் குறிப்பிடாமல் ஒத்தி வைப்பது தான் மரபு. அந்த முறைப்படி தான் நடக்கும். அந்த வகையிலே தான் அவை முன்னவர் அவர்கள் பிரேரேபித்திருக்கிறார்கள். அவை ஏற்றுக் கொண்டால், நீங்கள் எல்லாம் ஏற்றுக் கொண்டால் ஒத்தி வைக்கலாம். அவை வேண்டாம் என்றால், இங்கேயே இருக்கலாம், நாளைக்கும் அவையை வைத்துக் கொள்ளலாம்.

திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, சட்டத்திற்கு உட்பட்டுதான் தேதி குறிப்பிடாமலே மன்றத்தை ஒத்தி வைக்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால் சட்டத்திற்கு உட்படாமல், சட்டத்திற்கு முரணாகத்தான் ஜூலை மாதம் என்று நீங்கள் அறிவித்தீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படி ஜூலை மாதம் எந்தத் தேதி கூடும் என்று நான் ஸ்பெசிபிக்காக அறிவிக்கவில்லை. தேதி பின்னர் அறிவிக்கப்படும் என்று தான் சொல்லியிருக்கிறேன்.

திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி இருக்கும் போது நீங்கள் தேதி குறிப்பிடாமல் இப்பொழுது எப்படி ஒத்தி வைக்கலாம்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: சாதாரணமாக, இந்தக் கூட்டத் தொடருக்குப் பின், செப்டம்பர், அக்டோபரிலே பேரவை மீண்டும் கூடுவது வழக்கம். அவ்வளவு நாள் தள்ளி வைக்க வேண்டாம் என்றும், விரைவிலே கூட வேண்டுமென்றும், ஜூலையிலே கூட வேண்டுமென்று அலுவல் ஆய்வுக் குழுவிலே தெரிவித்தார்கள். அந்த அடிப்படையிலே தான் ஜூலை மாதம் என்று வைத்திருக்கிறோமே தவிர, வேறல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அலுவல் ஆய்வுக் குழுவிலே, நீண்ட நாள் தள்ளி வைக்க வேண்டாம். ஜூலையிலே கூட வேண்டுமென்ற கருத்து தெரிவிக்கப்பட்டதற்கிணங்க அதற்கு மதிப்பளிக்க வேண்டுமென்று தான் ஜூலை என்று தெரிவிக்கப்பட்டது. அலுவல் ஆய்வுக் குழுவிலே தலைவர்கள் சொன்ன கருத்து ஜூலையிலே வைத்துக் கொண்டால் நல்லது என்பது. அதைத்தான் நான் சபைக்கு அறிவித்தேன்.

பேரவை முன்னுள்ள கேள்வி பேரவையின் 25 (1) விதியின் படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடாமல் ஒத்திவைக்கப் பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இக்கூட்ட அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் பேரவை ஒத்தி வைக்கப் பெறுகிறது.

பின்னர் பிற்பகல் 1.47 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் பேரவை ஒத்தி வைக்கப்பெற்றது.

11 பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

169. தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் 1980–81 ஆம் ஆண்டிற்கான ஒன்பதாம் ஆண்டறிக்கை (தமிழ், ஆங்கிலம்) (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–அ. பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.

170. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு குடிசைமாற்றுவாரியம் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் நன்னடத்தை குறித்து விதிகளை இயற்றுவது 10–4–1981 ஆம் தேதியிடப் பெற்ற வீட்டுவசதி—நகர்ப்புற வளர்ச்சித்துறையின் 253 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு, (தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு, அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 72 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

171 திருச்சிராப்பள்ளியிலுள்ள பர்மா அகதிகள் விற்பனை செய்யும் பொருட்களுக்கு செலுத்த வேண்டிய விற்பனை வரியிலிருந்து 6 மாத காலத்திற்கு விலக்களிப்பது குறித்து 6-2-1982 ஆம் தேதியிடப்பெற்ற வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 151 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.

172 தமிழ்நாடு குடிநீர் வழங்கு—வடிகால் வாரியத்தின் 1972–73, 1973–74, 1974–75, 1975-76, 1977-78 ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கை (ஆங்கிலம்) (தமிழ்நாடு 1970ஆம் ஆண்டு குடிநீர் வழங்கு—வடிகால் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் எண் 4/1971) 47-வது பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

ஆ அறிக்கைகள் அறிவிப்புகள் ஏனைய தாள்கள்

184 கீழ்க்காணப்பெறும சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் அளித்துள்ள எழுத்து மூலமான சொத்து விவரங்கள் (தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 27-8–1969 ஆம் தேதியன்று ஏற்பளித்த தீர்மானத்தின்படி பேரவையில் வைக்கப்பெறுகிறது)

31-3-1980 ஆம் தேதியன்று உள்ளவாறு அளித்துள்ளவர்:

1. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்
2. டாக்டர் கே. சௌரிராஜன்

–3-1981 ஆம் தேதியன்று உள்ளவாறு அளித்துள்ளவர்:

1. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு
2. திரு. ஆர். கிருஷ்ணன்
3. திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம்
4. டாக்டர் கே. சௌரிராஜன்
5. திரு. எஸ். இராமலிங்கம்
6. திரு. மு. ப. முனுசாமி.
7. திரு. எம். ஆர். கோவேந்தன்
8. திரு. சி. சிவபிரகாசம்
9. திரு. நா. பழனிவேல்
10. திரு. ஜே. ஹேமச்சந்திரன்
11. திரு. வி. பாலகிருஷ்ணன்
12. திரு. ந. குப்புசாமி
13. திரு. பி. என். பரமசிவ கவுண்டர்
14. திரு. பி. கந்தசாமி
15. திரு. ஜி. மூர்த்தி
16. திரு. ஜே. எஸ். இராசு
17. திரு. ஆர். சுந்தரமூர்த்தி
18. திரு. டி, கே. நல்லப்பன்
19. திரு. டி. மணி
20. திரு. பெ. கலியமூர்த்தி
21. திரு. பி. மொக்கையன்
22. திரு. தா. சாமிக்கண்ணு
23. திரு. ஜி. கே. சுப்பிரமணியன்
24. திரு. செ. சிவசாமி
25. திருமதி த. இராசாம்பாள்
26. திரு. கே. தனக்கோடித் தேவர்
27. திரு. மா. சுப்பிரமணியன்
28. திரு. எம். அண்ணாதாசன்
29. திரு. பெ. திருமாறன்
30. திரு. எம். சின்னசாமி
31. திரு. ஏ. கலையரசன்
32. திரு. எஸ். என். இராமசாமி
33. திரு. த. வீராசாமி
34. திரு. ஏ. டி. கருப்பையா

35. திரு. எ. ஆறுமுகம்

36. திரு. பெ. உத்திராபதி

37. திரு. வி. பி. பாலசுப்பிரமணியன்

38. திரு. ஏ. எம். சேதுராமன்

185. கீழ்க்காணப்பெறும் சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் அளித்துள்ள எழுத்து மூலமான சொத்து விவரங்கள் (தமிழ்நாடு சட்டமன்ற மேலவை 28-8-1978 ஆம் தேதியன்று ஏற்பளித்த தீர்மானத்தின்படி பேரவையில் வைக்கப் பெற்றது)

31-3-1980 ஆம் தேதியன்று உள்ளவாறு அளித்துள்ளவர் :

1. ஜி. சுவாமிநாதன்

31-3-1981 ஆம் தேதியன்று உள்ளவாறு அளித்துள்ளவர் :

1. திரு. பி. ஆர். தாமஸ்

2. திரு. ஜி. வசந்தாபாய்

3. திரு. பி. முனுசாமி

4. திரு. வி. வி. வி. ஆனந்தம்

186. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும் விடைகளும் (எண்கள். 801 முதல் 900 வரை).

122248